# கொங்குநாட்டு
# கவுண்டர்கள்

102

வீயாரெம்



# கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்

நூலாசிரியன்

வித்துவான் வி. இராமமூர்த்தி, பி. லிட்.,

('வியாரெம்')

வெளியீடு :

லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி (பி) லிமிடெட்

32, பொன்னகர், திருச்சிராப்பள்ளி-620 001.

முதற் பதிப்பு — 1977

உரிமை பதிப்பகத்தாருக்கே.

உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது

**விலை ரூபாய் 7/-**

# உள்ளுறை


| | | பக்க எண் |
|---|---|---|
| | சமர்ப்பணம் | |
| | அணிந்துரைகள் | i |
| | நூலாசிரியர் முன்னுரை | xiii |
| | பதிப்புரை | xxiii |
| 1 | கொங்குநாடு | 1 |
| 2 | பழந்தமிழ் நாட்டு மக்களினம் | 8 |
| 3 | அரசியல் நிலை | 33 |
| 4 | கொங்கணி வம்சம் | 65 |
| 5 | கவுண்டர்கள் | 81 |
| 6 | கி. பி 680 - 880 ல் கொங்கு | 97 |
| 7 | கங்க அரசர்கள் காலத்தில் கவுண்டர்கள் | 129 |
| 8 | இடைக்காலக் கொங்கு | 158 |
| 9 | கவுண்டர் சமுதாயம் | 204 |
| 10 | சில பழக்க வழக்கங்கள் | 329 |
| 11 | முடிவுரை | 346 |
| | மேற்கோள் நூல்கள் | 348 |
| | பிழையும் திருத்தமும் | 350 |
| | பொருளகராதி | 353 |
| | பின்சேர்க்கை | 368 |

## சமர்ப்பணம்

ஆனை முகத்தோனின் அடிபணிந்து
தென்னம் பொருப்பிலே பிறந்து தென்னன்
மடியிலே தவழ்ந்த கன்னித் தமிழணங்காகிய
எந்தாய் தமிழன்னையின்
செம்மலரடிகளிலே
என் முதல் நூலை
சமர்ப்பிக்கிறேன்.

டி. எம். நாராயணஸ்வாமிப்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# அணிந்துரை

"கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்" என்றதலைப்பில் வெளிவரும் இந்நூல் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இரு தமிழ்ச் சமுதாயத்தினரைப் பற்றிய ஒரு சமுதாய வரலாற்று நூல் இந்நூலை எழுதி வெளியிடுவதற்கு மேற்கொண்ட முயற்சி போற்றத்தக்கது. இம் முயற்சிக்குக் காரணமானவர்கள் இருவர். ஒருவர் எனது நண்பரும் இந்நூலின் ஆசிரியருமான திரு. வி. இராமமூர்த்தி (வீவசெரம்). மற்றவர் இவ்வரிய நூலினை புத்தக வடிவில் வெளியிடும் தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி. இவ்விருவருக்கும் நம்முடைய நன்றி உரியது

நூலாசிரியர் திரு இராமமூர்த்தி தமிழக வரலாற்றிலும் கல்வெட்டுகளைப் படித்து ஆராய்வதிலும் வல்லவர், தன் சொந்த முயற்சியினாலேயே இத்துறையில் போதுமான அறிவு பெற்றுத் தேர்ச்சி அடைந்திருக்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயிலைப் பற்றிய வரலாற்றுச் சிறப்பைத் தெரிந்து கொள்வதற்கு இவருடைய உதவியை நாடினேன். அப்பொழுது தமிழக வரலாறறிலும், கல்வெட்டாய்விலும் இவருக்கு இருந்த சிறந்த புலமை எனக்குத் தெரியவந்தது.

அவ்வமயம் நான்அவரிடம் உங்களுக்குள்ள வரலாற்றுப் புலமையை நன்முறையில் வளர்த்துக் கொண்டு நீங்கள் புதிய கல்வெட்டுகளை ஆராய்ந்து வரலாற்றுத் துறையில் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்கேற்ப இப்பொழுது இந்நூலை எழுதித் தமிழில் ஒரு சமுதாய வரலாற்று நூலை அளித்துள்ளார்,

இச்செயல் மிகவும் போற்றுதற்குரிய அரிய செயலாகும். இந்தநூலில் புதிய பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளித்திருக்கிறார் திரு இராமமூர்த்தி வேளாள–வேட்டுவக் கவுண்டர்கள் சமுதாயத்தைப் பற்றிய சிறப்பு மிக்க வரலாற்றுச் செய்திகளையும் தெளிவாக விளக்கியுள்ளார். நூலாசிரியருடைய புலமையையும் முயற்சியையும் நன்கு தெரிந்து கொண்டு, தன்னுடைய ஆராய்ச்சிகளின் முடிவைத் தானே வெளிப்படுத்த பொருளாதார வசதியற்ற அன்னாரிடம் கொங்கு நாட்டுக் கவுண்டர் சமுதாயத்தைப் பற்றி ஆராய ஒரு வாய்ப்புக் கொடுத்து அதனைத் தனது பத்திரிக்கையில் தொடராக வெளியிட்டதோடு, இப்பொழுது அதனை தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார் தினமலர் ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி. இது கவுண்டர் சமுதாயத்திற்கும், தமிழக மக்களுக்கும் செய்த ஒரு பேருதவியாகும். அநேக பெரியோர்கள் இந்த நூலில் கண்ட செய்திகளைப் பாராட்டியுள்ளார்கள். இவ்வரிய நூலை அனைவரும் படித்துப் பயனடைய வேண்டுமென்பது என் அவா. இறைவன் இவர்களுக்குத் திருவருள் புரிவாராக.

திருச்சி–18.
31—8—77.

டி. எம். நாராயணஸ்வாமிப் பிள்ளை,
முன்னாள் துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

★

நா. மகாலிங்கம், B.Sc., M.I.E.
சக்தி நிலையம்
சென்னை 600 018

## அணிந்துரை

தினமலர் பத்திரிக்கையில் கொங்கு நாட்டு கவுண்டர்கள் வரலாறு பற்றிய சில கட்டுரைகளை மட்டும்தான் படிக்க வாய்ப்பு அமைந்தது. அது விவரமாகவும், சான்றுகளுடனும் அமைந்திருந்தது பற்றி சந்தோஷப்பட்டேன். கொங்கு நாட்டைப்பற்றியும் அங்கு வாழ்ந்த மக்கள் பற்றியும் விரிவான நூல் வெளியிடுவது பற்றி 'தினமலர்' நாளிதழுக்கு கொங்கு மக்கள் கடமைப்பட்டுள்ளனர். ஆசிரியர் வி இராமமூர்த்தி அவர்கள் கி. மு. 2-ம் நூற்றாண்டில் ஆரம்பித்து அநேகமாக 17ம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தில் கொங்கு நாட்டிற்கு வேளாளரும், வேட்டுவரும் எந்தெந்த காலத்தில் குடியேறினார்கள் என்று கல்வெட்டு, செப்பேடு சான்றுகளுடன் எழுதியிருப்பது நூலாசிரியரின் ஆழ்ந்த புலமையையும் கடுமையான உழைப்பையும் காட்டுகின்றது.

இந்த நூல் தமிழகத்தினுடைய எதிர்கால சரித்திரம் சரியாக எழுத அடிப்படையாக அமையுமென்று நம்புகின்றேன். நூலாசிரியரே அந்த பெரும் முயற்சியையும் எடுத்துக் கொண்டால் நல்லது என்று கருதுகின்றேன். அமெரிக்க நாட்டிலிருந்து உயர் பட்டப் படிப்பு மாணவர்கள் இந்தியா வந்து இந்த நாட்டில் உள்ள பல வகையான சாதிகள், அவர்கள் பழக்க வழக்கங்கள் பற்றி ஆய்ந்து நூல்கள் எழுதியுள்ளனர்.

தமிழ் நாட்டு நாடார்கள் பற்றியும், கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் பற்றியும் வெளியான புத்தகங்களை பார்த்திருக்கிறேன். நமது பல்கலைக் கழகத்தவர்கள், எப்போது உள்நாட்டு சரித்திரம் பற்றி உண்மையான ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஐரோப்பிய, சரித்திரத்தை மட்டும் படிக்கும் கல்லூரிகளில் இந்திய

நாட்டின் பல்வகையான மக்கள் தொகையின் பழக்க வழக்கங்கள், சரித்திரம், கல்வெட்டு, செப்பேடுகள், கர்ண பரம்பரை செய்திகள் இவற்றையெல்லாம் தொகுத்து எழுதுவது தங்கள் கடமையென்று எப்போது செய்யப் போகிறார்களோ தெரியவில்லை.

சமீப காலத்தில் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து அடிமைகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட நீக்ரோ மக்களின் வழி வந்த ஒரு இளைஞர் அமெரிக்க நாட்டில் தன் குடும்பத்தின் பூர்வ வரலாறு என்ன என்று ஆராய ஆரம்பித்து 12 ஆண்டுகள் முயற்சி செய்து இறுதியாக ஆப்பிரிக்க நாட்டு மூதாதைகளின் வம்சத்தாரோடு தொடர்பு கொண்டார் என்ற கதை 'Roots' என்ற தலைப்பில் பெரிய புத்தகமாக வெளி வந்துள்ளது.

சங்க காலத்திலிருந்து கொங்கு நாடு பற்றிய பாடல்கள் உள்ளன. அண்ணன்மார் சாமி கதை மத்திய காலத்தின் ஒரு எல்லையைக் காட்டியது. சமீப காலத்தில் கொங்கு நாட்டின் பழைமையை அறிய, கல்வெட்டுகள், செப்பேடுகள் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிடும், 'கொங்கு' இதழும் புலவர் இராசு அவர்களிடம் பெரும்பணி செய்து வருகின்றனர். ஆனால் இன்றும் தமிழக மக்கள் வரலாறு அதிகம் இருண்ட காலத்தில் உள்ளது. கங்கைக் கரையிலிருந்து கொங்கு நாட்டிற்கு வந்தவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். அது மட்டுமின்றி 'மொஹெஞ்சோதாரு' ஆராய்ச்சிகள் இந்திய நாடு முழுவதும் ஒரு காலத்தில் தமிழ் நாடாக இருந்ததைக் காட்டுகிறது

முதல் சங்கமாகிய வடமதுரை பஞ்சாப் மாநிலத்தில் இருந்து மறைந்திருந்தால் இடைச்சங்கமாகிய 'கபாடபுரம்' மேற்கு சமுத்திரக் கரையிலிருந்த 'துவாரகை'யாக இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. சிந்து நதிக்கு வேதத்தில் பஃறுளியென்று பெயர் உண்டு. ஆகவே பஃறுளி ஆறு என்பது குமரி எல்லைக்கு தெற்கே கடல்

கொண்டது என்று தவருகக் கருதாமல் மனதை திடப்படுத்திக்கொண்டு தமிழ் பழமையைப் பற்றி சிந்திக்கும் மக்கள் 'நாவலத்தீவு' என்று பாரத நாடு முழுவதும் தமிழகமாக இருந்தகாலம் பற்றி சிந்திக்க வேண்டும்.

அந்த முயற்சிக்கு தமிழ் நாட்டு கல்வெட்டு மட்டுமின்றி இந்திய நாடு முழுவதிலுமுள்ள தடயங்களை ஆராயவேண்டும்.

பஞ்சாபிலிருந்து தெற்கே மக்கள் கூட்டம் பிரயாணம் செய்த பாதையையும் நிர்ணயிக்க வேண்டும். இதற்கு நமது புராண இதிகாச நூல்கள் மிகவும் பயன் கொடுக்கும். வடமொழி நூல்கள் பலவற்றை தமிழ் மக்கள் எழுதியுள்ளனர். சங்கர பகவத்பாதர், இராமனுஜர் தவிர, அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியர் காஞ்சியிலிருந்து வடக்கே சென்றவர் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

இவ்வாருக தமிழ் மொழி மக்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு எல்லையில்லாமல் இடமுள்ளது. இந்த பெரும் துறையில் ஆசிரியர் வி. இராமமூர்த்தி ஈடுபட்டு மறைந்திருந்த கொங்கு நாடு பற்றிப் பெரும் முயற்சி எடுத்து வெளிக்கொணர்ந்த செய்திகள் பாராட்டுதலுக்கு உரியன. ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் தமிழ் கல்வெட்டுக்கள் மகாராஷ்டிரத்தில் பூனு நகரில்கூட பல கோவில்களில் கண்டிருப்பதாக கூறினர். அவர்போன்ற வயதான பெரியவர்களையும் நூலாசிரியர் சந்தித்தால் அடுத்த வெளியீட்டிற்கு மேலும் செய்திகள் கிட்டும்.

இந்த நல்ல முயற்சியை ஊக்கிய 'தினமலர்' நிறுவனத்தினருக்கும் எனது பாராட்டுதல்கள் உரித்தாகுக. இந்த நூல் நல்ல முறையில் ஆங்கிலத்திலும் வரவேண்டுமென்று விரும்புகின்றேன்.

நா. மகாலிங்கம்.

*M. P. Periasami Thooran,*
**Chief Editor**
**Tamil Academy**
**MADRAS. 5.**

## அணிந்துரை

கொங்குநாடு பண்டைக்கால முதற்கொண்டு தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது இது இன்றுள்ள எல்லைகளைவிட மிக விரிவான ஒரு பகுதியாக அன்று இருந்தது. அப்படி இருந்தும் இதன் வரலாறு முறைப்படி எழுதப்படவில்லை கொங்குநாட்டுக் கவுண்டர்கள் என்ற இந்த நூல் ஒரு இனத்தைப்பற்றி மற்றும் கூறுமல் அக்காலத்தில் இவர்களுடைய வரலாறு எவ்வாறு உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை விரிவாக எடுத்துக்காட்ட முயல்கிறது.

சங்க இலக்கியங்களில் இம்மரபினரின் முன்னோர்கள் புகழ்ந்து பேசப்படுகின்றனர். இந்நூலின் ஆசிரியரான திரு வி. இராமமூர்த்தி அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு இம்மரபினரின் வரலாற்றை ஆராய்ந்திருக்கின்றார். சென்ற தலைமுறையில் கொங்கு நாட்டு வரலாற்றை எழுதிய அறிஞர்களும் இதனை மிக விரிவாக ஆராயாது விட்டு விட்டனர். ஆனால் அவர்கள் எழுதிய வரலாற்றையும் புதிதாகக் கிடைத்த கல்வெட்டுச் சான்றுகளையும் செப்பேட்டு சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலாசிரியர் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் ஓர் இனத்தாரைப்பற்றிய பண்டைய வரலாற்றில் அறுதியிட்டு கூறுவதில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கும் என்று சொல்லாமலே விளங்கும். கருத்து வேறுபாடுகளும் தோன்றக்கூடும்.

ஆனால் இதுவரை யாரும் செய்யாத ஒரு பெரிய முயற்சியை இந்நூலாசிரியர் மிகுந்த பொறுமையுடனும் ஆர்வத்துடனும் செய்து முந்நூறுக்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட ஒரு நூலை உருவாக்கி இருக்கிறார் என்பதை காணும்போது அவரைப் பெரிதும் பாராட்ட கடமைப் பட்டவர்களாய் இருக்கிறோம் என்பதைச் சொல்லவேண்டும்.

கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் துணிந்து யாராவது ஒருவர் முயற்சி செய்து நமக்கு ஒரு நூலை வழங்கினால்தான் மற்றவர்கள் அதனை மேலும் ஆராய்ந்து உண்மைகளைக் காணமுடியும். அதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரிகின்றது. நூலாசிரியருடைய முயற்சியை எல்லோ ரும் போற்றவேண்டும். குறிப்பாகக் கொங்குநாட்டில் வாழும் மக்கள் இந்நூலாசிரியருக்கு மிகுந்த உற்சாகம் தரவேண்டும். அப்பொழுதுதான் இதுபோன்ற நூல்கள் வெளிவரவும் பல நூற்றாண்டுகளாக மறைக்கப்பட்டுள்ள உண்மைகள் வெளிப்படவும் இயலும்.

திரு. வி. இராமமூர்த்தி அவர்களை நான் அவருடைய பெருமுயற்சிக்காகப் பாராட்டுகிறேன். அவருடைய முயற்சி மேலும் மேலும் ஓங்கிப் புதிய உண்மைகளையும் வெளிப் படுத்தவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ம. ப. பெரியசாமித்தூரன்.

★

கே. ஆர். சீனிவாசன்,
ஓய்வுபெற்ற இயக்குநர்
இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை
புதுடில்லி

## அணிந்துரை

வரலாற்று நூல்கள் ஒரு நாட்டையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ குறித்து இயற்றப்படுபவை. அவை பெரும்பாலும் அப்பிரதேசங்களை வெவ்வேறு காலங்களில் ஆட்சி புரிந்த பல அரச வழிமுறைகளை அடுத்து எழுதப் பட்டனவாகும். அதன் பயனாக ஏற்பட்ட ஆட்சிமுறைகள் அரசர்கள் செய்த போர்கள், வெற்றி தோல்விகள் அவர்கள் செய்த அறப்பணிகள், கட்டிடங்கள் மற்றும் அவர்களுடைய ஆட்சி காலங்களின் வரையறை போன்ற செய்திகளே அவற்றில் மிகுதியாக இடம் பெறுகின்றன. ஆயினும் ஒரு பகுதியில் பண்டைக் காலந்தொட்டு வாழ்ந்து வரும் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களைப்பற்றி வரலாற்று அடிப்படையில் வரலாற்று நூல்கள் எழுதப்படும்போது பயன்படுத்தப் படும் கல்வெட்டு, செப்பேடு போன்ற துணைக் கருவிகளைக் கொண்டு எழுதப்பட்டநூல் அரிதாகவே உள்ளது. அதுவும் நம் தமிழ் மொழியில் அவ்வகையான நூல்கள் விரிவாக எழுதப்பட்டனவாக எதுவுமே இல்லை என்று கூறுதல் மிகையாகாது.

இக்குறைபாட்டை உணர்ந்து இத்துறையில் மிகத் துணிவுடன் இறங்கி தன் கன்னி முயற்சியாக கொங்கு நாட்டில் வாழும் கவுண்டர் இனமக்களைப்பற்றி ஆராய்ந்து எழுதிவெளியிட்டுள்ளார். "கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்" என்ற இந்நூலின் ஆசிரியர் திரு வியாசெரம் எனப்படும் வி. இராமமூர்த்தி அவர்கள். இதன் பயனாக இவரது கன்னி

முயற்சி தமிழன்னைக்கு செய்யப்பட்ட ஒரு சிறந்த பணியாகவும், தமிழ்மக்களுக்கு தம்மைப்பற்றி அறிந்து கொள்வதற்குச் செய்யப்பட்ட பேருதவியுமாகும் அடிப்படையான தன் தமிழ் புலமையுடன் இதன் ஆசிரியர் கல்வெட்டு செப்பேடுகள் போன்ற துணைக்கருவிகளையும், மற்றும் நாட்டுப்பாடல்கள், வெளிவந்த, வெளிவராத பல ஓலைச்சுவடிக் குறிப்புகள் ஆகியவற்றையும் அரிதின் முயன்று தொகுத்துத் தனக்குள்ள ஆங்கில அறிவின் துணைகொண்டு ஆங்கிலத்திலுள்ள பலவேறு நூல்களையும், சஞ்சிகைகளையும் படித்து அவற்றுள் கூறப்பட்டுள்ள கருத்துகளையும் ஒப்புநோக்கி வரலாற்று நெறி பிறழாது சீரிய முறையில் எழுதியுள்ளமை பெரிதும் போற்றற்குரியது எல்லாவற்றிற்கும் மேலாக பல கல்வெட்டுகளை (வட்டெழுத்து, தமிழ், கிரந்தம் ஆகியவற்றில் உள்ளவை) தானே நேரிடையாகப் படித்து அறியும் ஆற்றலை இவ்வாசிரியர் பெற்றிருப்பது இந்நூலின் சிறப்புத் தன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. அவற்றின் துணை கொண்டு இந்நூலின்கண் பல அரச பரம்பரையினரின் கால வரையறையை வரலாற்றியல் (Histrography) காலவரையறை (Chronology) ஆகிய நெறிகளைப் பின்பற்றிச் சிறந்த முறையில் நிறுவியுள்ளார். சங்ககாலச் சேரமரபு பற்றி ஆசிரியர் சங்கநூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து பல வரலாற்றுச் செய்திகளைக் கண்டறிந்து அவற்றைச் சீரிய முறையில் ஒப்பிட்டு அவர்களுடைய ஆட்சி காலங்களைக் கணித்திருப்பது நோக்கத்தக்கது அன்றியும் இடைக் காலத்தில் கொங்கு நாட்டின் வரலாற்றோடு சம்பந்தப் பட்டிருந்த காடவ-கங்க அரசர்களின் மரபு பற்றிய செய்தி குறிப்பிடத் தக்கது. இப்புதிய அரச மரபுகள் இதுவரை வரலாற்று ஆசிரியர்களால் அறிந்து கூறப்படாததாகும், தமிழகத்தின் முறையான வரலாற்றைச் சீர்மைப்படுத்தப் பயன்படக்கூடிய இவ்வரச மரபினர்களைப் பற்றித் தக்கச் சான்றுகளுடன் விளக்கி எழுதியுள்ள ஆசிரியர் இவர்களது வம்சா வழியையும் ஆட்சிக் காலங்களையும் கூட வரையறுத்து எழுதியுள்ளார்.

இதன் தொடர்புடையதாக ஆசிரியர் தமது முன்னுரையில் விளக்கியுள்ள பகுதியில் அபராஜிதவர்மனைப் பல்லவன் என்றே கருதி வரலாற்று ஆசிரியர்கள் தெளிவு காண முடியாத நிலையில் உள்ளனர். அவன் கம்பவர்மனின் மகனாக இருத்தல்கூடும். கம்பவர்மன் பல்லவன் அன்று. காடவனே என்று கூறியுள்ள கருத்து எனக்குத் திகைப்பினை ஊட்டியது. ஆனால் அண்மையில் தமிழ் நாடு தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அபராஜித வர்மனின் செப்பேடு ஒன்று[1] இதனை உறுதிப்படுத்தியுள்ளது ஆசிரியரின் தெளிவான வரலாற்று அறிவை எடுத்துக் காட்டப் போதிய சான்றாகும். இதேபோல கி. பி. 10 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் தஞ்சை சோழர்களுக்குரிய பெயர்களுடன் கொங்கு நாட்டையாண்ட கொங்கு மன்னர்களைப்பற்றிய செய்திகளையும் ஒழுங்கு படுத்தி அவர்களது வமிச மூலத்தையும், தொடர்ந்து ஆண்ட அரசர்களையும் பற்றித் தெளிவுபடுத்தி அவர்களது மரபு வழியையும் முறைப்படுத்திக் கூறியிருப்பதும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியதாகும். அன்றியும் ஒருகூட்டத்தின் பெயரோ அல்லது ஒரு கூட்டத்தின் மூல புருஷன் அக்கூட்டத்தினர் மேற்கொண்ட தொழில் அல்லது அடைந்த சிறப்பு வரலாற்று நெறியில் எப்படி வளர்ச்சியும் மாறுதலுமடைந்துபின்னால் சாதிபெயராகமாறியதுஎன்பதை இக்கவுண்டர் வரலாற்றில் ஆசிரியர் வெகு தெளிவாகக் காட்டியுள்ளார். இம்முறையே தம் பாரத நாடு முழுவதிலும் பரவலாகக் காணப்படுவதற்குப் பலசான்றுகளைக் கூறலாம் தமிழ்நாட்டிலும் முதலியார், பிள்ளைபோன்றசாதிப்பெயர்கள் இவ்வாறே மூலபுருஷனுடைய அல்லது அவ்வினத்தாரின் முன்னோருடைய தொழில் அடிப்படையிலே எழுந்தவையாகும் இந்த ஒப்பீட்டில் (Context) ஆசிரியரின் கவுண்டர்கள் வரலாற்றை படித்தறிவது இந்நூலின் முக்கியநோக்கமாகும்.

---

1. Vide Sunday Standard 16-10-77 Page—7.

மக்கள் வரலாற்றினும், அதன் கிரமமான காலவரை யறைக்கும் அதன்மூலம், அம்மக்களின் வளர்ச்சி, எழுச்சி, வீழ்ச்சி, போன்ற செய்திகளைத் தொடர்பாகக் கண்டறிய, ஓரளவு அரச வரலாறும் அவர்கள் வமிசா வழியும் கால அளவும் இன்றிமையாததாகும். அவ்வப்பகுதிகளில், ஆண்ட சிற்றரசர்களும், பேரரசர்களும், தம் ஆட்சிக் காலங்களைத் தெளிவாகக் குறித்தோ கண்டோ, அல்லது வேறுவகைகளில் காணக்கூடிய முறையிலோ, விட்டுப்போயுள்ள பொறிப்புகள் இதற்குத் துணைபுரிவதுடன் தன்னகத்தே அடக்கியுள்ள மக்கள் பற்றிய செய்திகளையும் குறிப்பனவாகும். ஆக ஒரு நெடுஞ்சாலைப்பயணத்தில், மைல்கள் காட்டும் கற்கள் போலவும், கடல்வழிப்பயணத்தில் இடம் காட்டும் கலங் கரை விளக்கங்கள் போலவும், இவை அமையும். இம் முறையிலும், தன் காலக்கணக்குகளை அறுதியிட, ஆசிரியர், இச்சான்றுகளைத் தானே நேரில் ஆராய்ந்து முன்னவர் கூற்றுகளையும் மனதில் கொண்டு, ஏனைய சான்றுகளையும் ஒப்புநோக்கி, ஒரு நல்ல முறையில் அறுதியிட்டுள்ளார். இவ்வகையில் கொங்கு அரசர்களின் வழிமுறையும், கால நிர்ணயமும், அதுபோன்று இப்பகுதியில் ஆண்டதாகக் கல்வெட்டுகள், ஏனைய ஆதாரங்களின் மூலம் அறியக் கூடும், சோழர், பாண்டியர், போன்ற அரசவழியினரைப் பற்றிய வழிமுறை, காலக் கணக்கீடு ஆகியவை இந்நூலின் சிறப்பு அம்சங்களாகும். தமிழாராய்ச்சியாளர்களுக்கும், சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படும் முறையில் எழுதப்பட்டுள்ள இந்நூல்போன்று இன்னும் பல இவ்வாசி ரியரிடமிருந்து எதிர்பார்ப்போமாக அவருக்கு என் மனங் கனிந்த வாழ்த்துக்கள்.

இத்தகு சிறப்புவாய்ந்த இந்நூலினைத் தமது நாளித ழில் தொடர்ச்சியாக வெளியிட்டதோடன்றி இப்பொழுது புத்தகவடிவிலும் வெளியிட்டுள்ள தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி M. A. அவர்களின் முயற்சி

பாராட்டுதற்குரியது. இந்நூலினை அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவதே இதன் ஆசிரியருக்கும், வெளியிட்டாளருக்கும் கொடுக்கப்படும் சிறந்த ஊக்கமாகும். இவ்வூக்கமே இது போன்ற பல அரிய நூல்கள் தமிழில் வெளிவருவதற்கு வழிவகுக்கக் கூடியது.

திருச்சி-8.   கே. ஆர். சீனிவாசன்,

18-10-77.   ஓய்வு பெற்ற இயக்குநர்,

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,

புதுடில்லி.

★

# முன்னுரை

ஒரு நாட்டு வரலாற்றை அந்நாட்டையாண்ட அரசர்களின் சொந்த வாழ்க்கையையும், அவர்கள் நடத்திய போர்களையும், அப்போர்களில் அவர்கள் அடைந்த வெற்றி தோல்விகளையும், அவர்களைப் பற்றிய பிறசெய்திகளையும் மையமாகக் கொண்ட வரலாற்று நூலாக எழுதுவதால் மட்டும் நாட்டு வரலாறு முழுமை பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. இப்பொழுது வெளிவரும் வரலாற்று நூல்களிலும் சமுதாய நிலை என்ற தலைப்பில் அக்கால மக்கள் சமுதாய வாழ்க்கையைப்பற்றி ஓரளவு சுருக்கமாக எழுதப்படும் முறை மேற்கொள்ளப்படுகிறது என்றாலும் இந்த ஒரு சிறு பகுதியால் மன்னர்களின் வரலாற்றிற்கும் மக்கள் வரலாற்றிற்கும் இடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை இட்டு நிரப்பி விட முடியாது. உலகநாடுகள் பலவற்றுள்ளும் மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தே ஒரு நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பதற்காகவே ஏற்பட்ட அக்கால அரசர்களையும் அவர்களது ஆட்சி கால வரம்பையும், நாட்டு மக்களைக் காப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட செயல்முறைகளையும் ஓரளவு பின்னணியாகக் கொண்டு நாட்டில் வாழ்ந்த மக்கள் சமுதாயத்தைப்பற்றியும், அவர்களுடைய பண்பாடு, நாகரிகம் மற்றும் குடியேற்றம், வாழ்க்கை நடைமுறைகள், அவர்கள் நாட்டு அரசியலில் பெற்றிருந்த பங்கு, நாட்டு வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து மக்கள் வரலாறு எழுதப்படுதல் வேண்டும். அவ்வாறு எழுதப்படுவதால் மட்டுமே ஒரு நாட்டு வரலாறு முழுமை பெறமுடியும்.

தம்மைப் போன்ற சாதாரண மக்களின் வாழ்க்கை வரலாற்றைத் தாமே அறிவது என்பது பொதுவாக எல்லா மக்களுக்குமே மகிழ்ச்சியூட்டுவதாக அமைவதோடு மனித சமுதாயம் மறுமலர்ச்சிபெற, அச்சமுதாயம் சிறந்த பண்

பட்டதொரு சமுதாயமாக அமையத் தடையாக இருக்கும் சாதிவேற்றுமை, குறுகிய நோக்கம்போன்ற சில குறைபாடுகள் நமது புலனறிவிற்குப் புலப்படும். தாழும் அவற்றின் பாலிபட்டுச் சீரழியாவண்ணம் நமக்கு ஒரு படிப்பினையாகவும் அமையும். எனவே மக்கள் வரலாறு என்றதொரு புதியபகுதி நாட்டு வரலாற்றோடு இணைந்ததாக வெளிவரவேண்டியது அவசியமாகிறது. இந்த நோக்கத்திலே எழுதப்பட்டதுதான் "கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்" என்னும் இந்த நூல். மக்கள் வரலாறு எழுதுக் மாபெரும் பணியில் இது ஒரு கன்னி முயற்சி

கடந்த பத்தாண்டு காலமாகத் தமிழக வரலாற்றிலும், கல்வெட்டுத் துறையிலும் ஈடுபட்டுத் தமிழக வரலாற்றின் ஒவ்வொரு காலக் கட்டத்தையும் முறைப்படி ஆராய்ந்து வரும் நான், அவ்வாறு ஆய்ந்து வருங்கால் அதில் கொங்கு நாட்டு மக்கள் எந்த வகையில் பங்குபெற்று இருந்தார்கள் என்பதை அறிந்து மனம் நெகிழ்ந்து போயிருக்கிறேன் இதன்பயனாக சமுதாயத்தின் ஒவ்வொரு வகுப்பினரைப் பற்றியும் விரிவான வரலாறு எழுதவேண்டும் என்று பல முறை எண்ணியதுண்டு. ஆனால் நாம் எண்ணுவதெல்லாம் நடைபெற்று விட்டால் அப்புறம் இறைவன் எதற்கு என்று அறிவிப்பதுபோல் எனது எண்ணங்கள் இத்தனை காலமாக நிறைவேறாத ஒன்றாகவே இருந்துவந்தன. ஆயினும் இப்பொழுது இறையருள் கூட்டுவித்ததலோ என்னவோ இவ்வெண்ணங்களின் ஒரு சிறுபகுதியாகக் "கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்" என்னும் தலைப்பில் வரலாற்றில் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்த சமுதாயத்தின் ஒரு பெரும்பிரிவினர் பற்றி எழுதுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அவ்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது தினமலர் பத்திரிக்கையே என்று எண்ணும்போது தினமலரின் மீது ஒரு தனிப்பற்றுதலும், நன்றியுணர்வுமே என் உள்ளத்தில் மேலோங்கி எழுகிறது. தினமலர் பத்திரிக்கை என் பல நாளைய ஆசைக்கு மட்டும் வடிவம் கொடுக்க முன்வரவில்லை, தமிழ்ச் சமுதாயத்திற்கே

மகத்தான நற்பணியைச் செய்யமுனைவந்த பெருமை பெற்றுவிட்டது.

ஆம். இவ்வரலாற்றைத் தொடர் கட்டுரையாக எறக்குறைய ஆறுமாத காலமாக வெளியிட்டு வேளாளக் கவுண்டர்கள், வேட்டுவக் கவுண்டர்கள் மற்றும் வரலாற்றில் விருப்பமுடையோர் ஆகியோரின் ஏகோபித்த ஆதரவையும் எனக்குக் கிடைக்கச்செய்து, ஒரு நாட்டையாண்ட அரசர்களின் சரிதத்தையும், அவர்களுக்கு ஏற்பட்ட வெற்றி தோல்விகளையும், எழுதுவதே வரலாறு என்று நிலையிருந்ததை ஒரு மாற்றம் எற்படுத்தி முதன்முறையாக மக்கள் வரலாறு எழுதுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வந்த தினமலர் நாளிதழுக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் முதற்கண் நன்றி செலுத்துகிறேன். இவ்வரலாறு சம்பந்தமாகத் கொங்கு நாட்டின் பல பகுதிகளுக்கும், நேரிடையாகச் சென்று தேவையான குறிப்புகளைக் கண்ணால் கண்ட அநுபவத்தின் வாயிலாக நான் பெறுவதற்கும் எனக்கு வேண்டிய உதவிகள் செய்த தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி M.A., அவர்களின் வரலாற்று ஆர்வம் எண்ணி எண்ணிப் போற்றுதற்குரியது.

கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் என்ற இந்நூலின் தலைப்பைக் கண்டு இது ஒரு சாதிச்சார்புடைய நூல் என்றோ அல்லது சாதி வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி உயர்வு தாழ்வு ஏற்படுத்தக்கூடியது என்றோ யாரும் ஐயம் கொள்ளுதல் ஆகாது. இது ஒரு மக்கள் வரலாறு நம் தமிழகத்தின் ஒரு பகுதியில் வாழும் மக்களைப் பற்றியும் அவர்களது மரபு வழியைப் பற்றியும், அப்பகுதியில் வாழ்ந்து அவர்கள் காலங்காலமாக பெற்றுவந்த சிறப்பையும் ஆராய்ந்து தெளிவிப்பதே ஆகும். இதன் நோக்கம் தமிழ் நாட்டுப் பகுதிகளில் வாழும் பல திறப்பட்ட மக்களைப்பற்றி தமிழர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பதேயாகும். இன்று கொங்கு நாடான கோவை, சேலம், மாவட்டங்களில் பெரும்பான்மையினராக வாழும் ஒரு பிரிவினர்

கவுண்டர்கள். இவ்வினத்தார் வேளாளர், வேட்டுவர் என்ற இரண்டு பெரும் பிரிவினராக வாழ்கின்றனர். இவ்வினத்தாரின் சிறப்பும் மரபு வழியும் மிகப் பழமையானது. அறிந்து பெருமை கொள்ளுதற்குரியது.

சங்க இலக்கியங்களிலும் இம்மரபினரின் முன்னோர்கள் புகழ்ந்து பேசப்படுகின்றனர். இதேபோல தமிழ்நாட்டில் வாழும் மற்றைய பல சமுதாயத்தினருக்கும், காலத்தால் பழமையான வரலாற்று மூலம் இருக்கிறது. ஆயினும் தமிழ்நாட்டின் மற்றைய பிரிவுகளைப்போல அதன் ஒரு பிரிவான கொங்கு மண்டலமும் தெளிவான அரசியல் வரலாற்றைப் பெறாததால் அதனோடு பின்னிப் பிணைந்துள்ள கவுண்டர் வரலாற்றை எழுதுவதன் பயனாக கொங்கு நாட்டு வரலாற்றை ஒரு முறைப்படுத்தும் நோக்கத்தோடு மக்கள்வரலாறு எழுதும் முதல் முயற்சிக்கு இக்கவுண்டர் வரலாறு எடுத்துக் கொள்ளப்பட்டது

கொங்கு நாட்டின் அரசியல் வரலாறு இப்பொழுது ஒரு தெளிவற்ற நிலையிலே உள்ளது. டாக்டர். மா. ஆரோக்கியசாமி அவர்கள் எழுதியுள்ள கொங்கு நாட்டின் வரலாறு என்ற ஆங்கில நூலையும் கோவைகிழார் எழுதியுள்ள கொங்கு நாட்டுவரலாறு என்ற தமிழ்நூலையும் தவிரவேறு கொங்கின் வரலாறு இப்பொழுது இல்லை. இதற்குக் காரணம் கொங்கு நாட்டின் வரலாறு சிக்கலான பல சம்பவங்களும், துணிந்து ஒரு முடிவிற்கு வர முடியாத அரசியல் நிகழ்ச்சிகளும் கொண்டதாக இருப்பதேயாகும். கவுண்டர்களின் பூர்வோத்திரம் பற்றி நான் ஆராய்ந்து வந்தபொழுது இயல்பாகவே கொங்கு நாட்டின் அரசியல் வரலாற்றிலும் சில புதிய கொள்கைகள் தோன்றின. சென்ற தலைமுறையில் வரலாற்று அறிஞர்கள் எழுதிவைத்து விட்டுப்போன வரலாற்று முடிவுகளையும், புதிதாகக் கிடைத்த கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகளையும், மைசூர் நாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றுகளையும் அடிப்படையாகக்

கொண்டு அப்புதிய கொள்கைகளுக்கு ஓரளவு உருவம் கொடுத்து இந்நூலில் ஆங்காங்கே முறையாக எடுத்துக் காட்டியுள்ளேன்.

அவற்றுள் குறிப்பிடத்தக்கன மூன்று. முதலாவது கொங்கு நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் உள்ள சம்பந்தம். இதனைத் தெளிவுபடுத்த சங்கஇலக்கியங்களின் துணையையே பெரிதும் நாடவேண்டியிருந்தது. வரலாற்று அடிப்படையில் அவற்றில் காணக்கூடிய சில குறிப்புகளை ஆராய்ந்தபோது சேரமன்னர்களின் ஆட்சி எல்லையும், அதனோடு கொங்கிற்கு உள்ள தொடர்பும் பழைய கொள்கைகளுக்கு மாறுபட்டுக் காணப்பட்டதோடு மன்னர்களின் மரபு வழிப்பட்டியலிலும் மாற்றம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அவற்றைத் தக்கச்சான்றுகள் காட்டிச் செய்துள்ளேன். இரண்டாவதாக இடைக்காலக் கொங்கின் வரலாறு. இவ்விடைக்கால வரலாற்றில் பழைய கொள்கைகள் பெரும்பாலும் மாறுதலுக்குட்பட்டதோடு பழந்தமிழகத்தின் வடமுனைப் பகுதியாகவும் கொங்கின் வடக்குப்பாதியாகவும் விளங்கிய கங்கு நாட்டை ஆண்ட அரச பரம்பரையினராகக் கங்க–காடவ அரசர்களின் புதிய அரச மரபுகள் முதன் முறையாக வெளிப்பட்டன. இவ்விரு அரசமரபுகளும் முறையே தற்காலத்தில் வரலாற்று அறிஞர்களால் மேலைக்கங்கர்கள் என்று குறிக்கப்படும் கொங்கணி அரச மரபினின்றும், பல்லவ அரச மரபினின்றும் வேறானவை இவ்விரு அரசமரபுகளோடு சங்கநாளில் தகடூரை ஆண்ட அதியமான் அரசமரபும் இணைந்து இவ்விடைக்காலத்தில் கொங்குநாட்டின் பெரும்பகுதிகளையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்ட பேரரசையே நிறுவியிருந்தன. ஆனால் தெற்கில் இருந்து பாண்டியர்களாலும், மேற்கிலிருந்து சேரர்களாலும் கிழக்கிலிருந்து பல்லவர்களாலும் வடக்கிலிருந்து கொங்கணியர்கள், சளுக்ய ராஷ்டிர கூடர்களாலும் அடிக்கடித் தாக்குதல்கள் நடந்தமையால் இந்தநிலை நெடுங்காலம் நீடித்திருக்க இயலாமற்போனது. ஆயினும் கங்க–காடவ அரசமரபுகள் இப்பகுதிகளில் இடையிட்ட பல காலங்கள் தொடர்ந்து தனியாட்சி நடத்தியே வந்தன என்ற செய்தி

ஐயத்திற்கிடமின்றித் தெளிவு பெற்றது. கங்க அரச மரபில் சிங்கவிண்ணன், மகேந்திரன், விசயநரசிம்மன் போன்ற அரசர்களும், காடவ மரபில் ஸ்கந்தவர்மன், நந்திக்காடவன் போன்ற அரசர்களும் சிறப்புற்று விளங்கினர். இவர்களு டைய வரலாறும், முறைபடுத்தப்பட்ட வமிசவழியும் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது. குறிப்பாக காடவ அரசமரபில் தோன்றியவர்களே திருச்சானூர் கல்வெட்டு குறிப்பிடும் விசய தந்தி விக்கிரமன். தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், அவன் மகன் கம்பவர்மன், கம்பவர்மனின் மகன் அபராஜிதவர்மன் ஆகியோர் என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டன. இம்முடிவுகள் கி. பி 9ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஒரே சிக்கலாக இருக்கும் பிற்காலப் பல்லவர் வரலாற்றில் தெளிவு காணப் பயன்படக் கூடியவை என நம்புகிறேன். மூன்றாவதாகக் குறிப்பிடத் தக்கது தஞ்சைச்சோழர்களின் மகோன்னத ஆட்சிக் காலத் தில் கொங்கு நாட்டைச் அர்சோழ வேந்தர்களின் பெயர் களோடு ஆண்டு வந்த கொங்கு மன்னர்களின் சிறப்பு வரலாறு, முதன்முறையாகப் பல சான்றுகளின் அடிப்படை யில் இவர்களது பூர்வோத்ரமும் முறையான ஆட்சிகாலங் களோடு கூடிய வமிசா வழியும் தெளிவாக்கிக் காட்டப்பட் டுள்ளன. அறிஞருலகம் இவற்றுள் குற்றங் குறைகள் இருப்பின் பொறுத்துக்கொண்டு இம்முடிவுகளைச் சீர் தூக்கிப் பார்த்து ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்,

இக்கட்டுரைத் தொடரை நான் துவக்கியபோது ஒரு மாபெரும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து அதைச் சிறப்புற செய்து முடிக்க வேண்டுமே, சாதி பற்றிய கட்டுரை ஆயிற்றே, எந்த சாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்ற நோக்கத்தோடு நாடே செயல்படுகிறதோ அந்த வேற்றுமை ஒழிவதற்குப் பதில் வளர்வதற்கு இக்கட்டுரை வித்திட்டதுபோல ஆகிவிட்டால் என்ன செய்வது என்று பெரிதும் அச்சம் கொண்டிருந்தேன். ஆனால் இக்கட்டுரைத் தொடர் வெளிவரத் தொடங்கியது

முதல் எனக்குக் கிடைத்த வாசகர்களின் ஆதரவும், உதவிகளும் அந்த அச்சத்தை அடியோடு போக்கியதோடு இது போன்ற கட்டுரை சாதி வேறுபாட்டினால் ஏற்படும் உயர்நிலை, இழிநிலை என்ற பாகுபாட்டைப்போக்கி சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் நாடு நாடாக விளங்கியதில் பெரும் பங்கு பெற்றிருந்து வந்தனர். எனவே சாதி வேறுபாட்டிற்கு இடமே இல்லை என்ற நல்லெண்ணத்தை நாட்டு மக்களிடையே வளர்ப்பதற்கும் ஒரு கருவியாக அமைகிறது என்ற கருத்தையும் என்னுள்ளே உருவாக்கியது.

இதற்கேற்ற வரலாற்றுச் செய்திகளையும், மரபு வழிக் கதைகளையும், வாய்மொழிச் செய்திகளையும் எனக்கு அவ்வப்போது கொடுத்து உதவியும், இவற்றை அறியத் தேவைப்படும் நூல்களைக் கொடுத்து உதவியும் ஆக இவ்வகையில் பல அன்பர்கள் எனக்கு உதவி செய்தனர். அவர்கள் செய்த உதவிகளையெல்லாம் காலத்தில் செய்த பேருதவிகளாக எண்ணி அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனுவேன் என்பதை இதன்மூலம் அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். குறிப்பாக வேளாளக்கவுண்ட நண்பர்களில் ஈரோடு புலவர் திரு. செ. இராசு, சின்னியம்பாளையம், திரு. சின்னசாமிக் கவுண்டர், ஆகியோரும் வேட்டுவக் கவுண்டர் நண்பர்களில் கரூர், திரு. கிருஷ்ணசாமி கவுண்டர், கரூர் அரசினர் கலைக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு. சண்முகவேலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். வரலாற்று நிகழ்ச்சிகள், காலமுறைகளில் உள்ள வேறுபாடுகள் போன்ற வரலாற்று நுணுக்கத் துறைகளில் எனக்கு அவ்வப்போது தக்க ஆலோசனைகள் கூறியும் பல வரலாற்று நூல்களை (எளிதில் கிடைக்காதவை) கொடுத்து உதவியும் வந்த மத்தியத் தொல் பொருள் ஆய்வுத்துறையின் ஓய்வு பெற்ற இயக்குநர் திரு. கே. ஆர். சீனிவாசன் எம். ஏ. அவர்களுக்கு நான் என் இதயங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைக்காலக் கவுண்டர் வரலாற்றை அறிவதற்குப் பெருந்துணை புரிந்த நூல்களில் செங்கம் நடுகற்கள் என்னும் நூலின் பங்கு பெரியதாகும். இதனை வெளியிட்ட தமிழ்நாடு தொல்பொருள் துறை இயக்குநர் திரு. நாகசாமி அவர்களுக்கும், அத்துறையின் ஏனையோருக்கும் என் நன்றி உரியதாகிறது.

இன்னும் இவ்வரலாற்றைச் சிறப்புடன் எழுதி முடிக்கத் தேவையான வரலாற்றுச் சான்றுகளை ஆராய்ந்தறிய பழைமையான பலவரலாற்று நூல்களை நான்தேடி அலைந்தபோது அவற்றில் பலவற்றைத் தமது நூலகத்தில் சேமித்துவைத்திருக்கும் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி நூலகத்தார் அந்நூல்களைப்படித்துக் குறிப்பு எடுத்துக்கொள்ள எனக்கு அனுமதி வழங்கியமைக்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக அந்நூலகத்தின் காப்பாளர் Rev. Fr சுந்தரம் அவர்களுக்கு என் இதயங்கலந்த நன்றி உரித்தாகிறது. இதேபோல 1970 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரையிலான கல்வெட்டுத் துறையினரின் வெளிவராத ஆண்டறிக்கைப் படிகளையும், சில கல்வெட்டுகளின் மூல மசிப் படங்களையும் மற்றும் பல நூல்களையும் படித்துக் குறிப்பெடுத்துக் கொள்ள அனுமதி வழங்கிய மைசூரில் உள்ள இந்தியத் தொல்லியல் துறையின் தலைமைக் கல்வெட்டாய்வாளர் திரு. பி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கும் மற்றும் அவ்வலுவலக அதிகாரிகள் பலருக்கும் என் நன்றி உரித்தாகிறது. எப்படியோ ஒருவாராகப் பல்லோரின் அரும்பெரும் உதவிகளைப்பெற்று கவுண்டர் வரலாற்றை தொடர்ந்து ஒருவாராக எழுதி முடித்துவிட்டேன். இப்போது தினமலர் ஆசிரியர் விருப்பத்தின் பேரில் லோட்டஸ் பதிப்பகத்தார் அத்தொடர் கட்டுரையைத் தமது முதல் வெளியீடாக நூல் உருவில் வெளியிட்டு விட்டனர். அதற்காக அப்பதிப்பகத்தாருக்கு என் நன்றியை எவ்விதம் தெரிவிப்பது என்று தெரியாமல் பெரிதும் கடப்பாடு உடையவனாக இருக்கிறேன் இந்நூலைத்

தமது பலஅலுவல்களுக்குமிடையே பொறுமையாகப்படித்து தம்முடைய மேலான பாராட்டுரைகளை வழங்கிய திருவாளர்கள் டி. எம். நாராயணசாமிப்பிள்ளை எம். ஏ., பி. எல்., நா. மகாலிங்கம், கே. ஆர். சீனிவாசன் எம்.ஏ., பெரியசாமித்தூரன், எம் ஏ., ஆகியோருக்கு என்னுடைய நன்றியும் வணக்கமும் உரியன. இறுதியாக இந்தநூலை நல்லமுறையில் அச்சிட்டுக் கொடுத்த திருச்சி பிரஸ் டிலக்ஸ் அச்சகத்தின் உரிமையாளருக்கும், அச்சிட்ட தொழிலளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் ஏதேனும் குற்றங்குறைகள் காணப்படினும் பொறுத்துக் கொண்டு அன்பர்கள் இதனை வாங்கி எனக்கு ஆதரவு கொடுத்தால் அந்த பெருமகிழ்ச்சியில் எனது நீண்ட நாளைய ஆராய்ச்சியின் பயனைப் பெற்றவனாவேன்.

வணக்கம்

திருச்சி-2.
28-8-77.

வி. இராமமூர்த்தி

★




கொங்குநாடு - இயற்கை அமைப்பு

# பதிப்புரை

நமது தமிழ்மொழியில் சிறப்பான பல நூல்கள் பலவாகத் தோன்றவேண்டும் என்னும் ஆர்வம் தமிழ் மக்களிடையே பரவலாக எழுந்திருக்கும் இக்காலத்தே தமிழக வரலாற்றோடு இணைந்த தமிழ்ச் சமுதாயத்துள் ஒரு பிரிவு மக்களின் வரலாறாக உள்ள "கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்" என்ற இம்மக்கள் வரலாற்று நூலை லோட்டஸ் பதிப்பகத்தின் முதல் வெளியீடாக மலரச்செய்து தமிழன்னையின் பாதகமலங்களில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்நூலின் ஆசிரியர் திரு. வீயாரெம் தமது நீண்ட நாளைய வரலாற்று ஆராய்ச்சியின் பயனாக இந்த நூலை சிறந்த முறையில் உருவாக்கியுள்ளார். இது தொடர் கட்டுரையாக தினமலரில் வெளி வந்தபோது ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் மூலமாகவும் நேரிடையாகவும் பல வேளாள-வேட்டுவக் கவுண்டர் நண்பர்கள் தங்கள் மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து வந்துள்ளனர் அவர்களில் பலரும் இத்தொடர் கட்டுரை நூல்வடிவில் வெளிவருதல் வேண்டும் என்று விரும்பியதின் பயனாக இதனை புதிதாகக் கிடைத்த வேறுபல வரலாற்றுக் குறிப்புகளையும், கல்வெட்டுச் சான்றுகளையும் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்துப் பல புதிய முடிவுகளுடனும் கொங்கு நாட்டின் வரலாற்றை முறைப்படுத்தியும் இதன் ஆசிரியரைக் கொண்டே திருத்தி எழுதுவித்துப் புத்தக உருவில் அன்பர்களின் கரங்களிலே கிடைக்கச் செய்து விட்டோம். அன்பர்கள் பரவலாக இதனை வாங்கிப்படித்துப் பயன் பெறுவதோடு இதுபோன்ற தேவையான வேறுபல நூல்களையும் வெளியிட எங்களுக்கு ஊக்கம்தருதல்வேண்டும். இவ்வூக்கமே இதன் ஆசிரியருடைய உழைப்பிற்கும், ஆராய்ச்சி அறிவிற்கும் கிடைக்கக்கூடிய சிறந்த வெகுமதி என்பது எங்கள் எண்ணம்.

திருச்சி<br>
29-8-77

பதிப்பகத்தார்.

★

## அத்தியாயம்-1

# கொங்கு நாடு.

கொங்கு நாடு மிகப் பழங்கால முதலே தமிழகத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறபோதிலும் அதன் வரலாறு ஏனோ தமிழ்நாட்டின் வரலாற்றோடு இணைத்து எழுதப்படாமல் தனிப்பட்ட வரலாறாகவே இருந்து வருகிறது. எப்படித் தமிழ்நாட்டின் வரலாறு ஆதிகாலம் முதல் இன்றுவரை முறையாக எழுதப்படாமல் இருந்து வருகிறதோ அதைப்போலவே கொங்கு நாட்டின் வரலாறு ஓரளவு கூட முறையாக எழுதப்படாமல் இருந்து வருகிறது. இது ஒரு பெருங் குறையேயாகும். கொங்கு நாட்டின் வரலாறு இல்லாமல் தமிழகத்தின் வரலாறு ஒருக்காலும் நிறைவு பெற்றதாகாது. எனவே அந்நாட்டில் இன்று வாழும் கவுண்டர்களைப் பற்றி மக்கள் வரலாறாக எழுதப் படும் இந்நூலில் அந்நாட்டின் வரலாற்றையும் சுருக்கமாக இணைத்து எழுதவிருக்கிறேன்.

**நில இயல்.**

தமிழ்நாட்டின் நிலப்பிரிவு முறையிலே கொங்குநாடு இயற்கையிலே மலைவளம் நிரம்பப் பெற்றுள்ள ஒரு அழகிய குறிஞ்சிநிலமாகும். சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகியவை தமக்கென ஒரு தனிச்சிறப்பைப் பெற்று இருப்பது போலவே கொங்கு நாடும் ஒரு தனிப்பட்டச் சிறப்பைப் பெற்றுள்ளது. இந்நாடு இப்பொழுது சேலம், கோவை, தர்மபுரிமாவட்டங்கள் அடங்கிய ஒரு பகுதியாக இருக் கிறது இப்பொழுதைய இதன் இயற்கை எல்லையாக கிழக்கே சேர்வராயன்மலை, கொல்லிமலை, பச்சைமலைத் தொடர்களையும், மேற்கே நீலகிரி, வெள்ளிமலை, ஆனை மலைத் தொடர்களையும், வடக்கே தலைமலை, பர்க்கர் குன்றுகள், தோப்பூர் மலை ஆகியவற்றையும் தெற்கே ஆனை

மலை தொடர்களின் மற்றொருபகுதி, பழனிமலைத்தொடர் ஆகிய மலைத்தொடர்களையும் கொண்டு திகழ்கிறது. மலைகள் சூழ்ந்த இந்நாட்டின் இயற்கை நுழைவாக மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பாலைக்காட்டுக் கணவாய் சேர நாட்டையும் கொங்கு நாட்டையும் இணைத்துப் போக்கு வரத்துக்கு உதவியாக விளங்குகிறது. மற்ற இடங்களில் மேற்குத்தொடர்ச்சி மலைகள் உயரமாக அமைந்து போக்கு வரத்து எளிதில் இயலாதபடி தடுத்து நிற்கிறது. இப்பகுதியிலுள்ள ஆனைமுடிச்சிகரம் தென்னாட்டின் எவரெஸ்ட் என்று புகழப்படும் சிறப்பினைப் பெற்றது. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகளில் முக்கியமான பெரிய ஆறு காவிரியாகும். மற்றைய உப நதிகள் அமராவதி, பவானி, நொய்யல் ஆகிய மூன்றுமாகும். இவை தவிர காவிரியின் கிளை நதிகளான இம்மூன்று ஆறுகளுக்கும் கிளை ஆறுகளாக விளங்கும் நல்லாறு, சிறுவாணி, பைகாரை, கல்லாறு, குதிரையாறு, ஷண்முகநதி, குழகனாறு ஆகிய கோவைமாவட்டத்து நதிகளும், சின்னாறு, தோப்பூர் ஆறு, சரபங்கை, திருமணிமுத்தாறு, போன்ற சேலம் மாவட்டத்து ஆறுகளும் கொங்கு நாட்டை வளஞ்செய்யும் ஆறுகளாகத் திகழ்கின்றன.

ஈரோடுக்கு அடுத்த பவானிக்கருகில் பவானியாற்றிலிருந்து பிரியும் காளிங்கராயன் வாய்க்கால் கொங்கு நாட்டில் ஏறக்குறைய 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வளமிக்க நிலங்களாக்கி தான் பாய்ந்து செல்லும் வழிநெடுக இருமருங்கையும் வளம் கொழிக்கச் செய்கிறது. இதன் பாசன நிலங்கள் சிலவற்றில் 2 அல்லது 3 மகசூல்கள் சாகுபடி நடைபெறுகிறது. இவை அனைத்தும் கொங்கு நாட்டின் தற்கால நிலவியலாகும்.

**சங்க இலக்கியத்தில்**

ஆனால் சங்ககாலத்தில் கொங்கு நாடு இன்றுள்ளவாறு சேலம், கோவை மாவட்ட அளவில் சுருங்கி இருக்கவில்லை. பழங்கொங்கு நாடு குடகு மலை நாட்டை வடக்கு எல்லை

யாகவும், மேற்குத் தொடர்ச்சி மலைகளை மேற்கு எல்லையாகவும், பழனி மலைத்தொடரை தெற்கு எல்லையாகவும் கிழக்கு எல்லையாக, வடபாதியில் பெங்களூர் உள்ளிட்ட அம்மாவட்டத்தின் மேல் பாதியையும் தெற்கே வடக்கிலிருந்து தெற்காக ஓடும் காவிரியாற்றையும் கொண்டிருந்ததாகத்தெரிகிறது. இம்முடிவிற்குத் திட்டவட்டமான ஆதாரம் இல்லாத போதிலும் சங்க நூல்களின் குறிப்புகளை மட்டும் கொண்டு இவ்வாறு நிறுவ வாய்ப்பு உள்ளது. இப்பகுதிகள் அக்காலத்தே குடகுமலை நாடான கொண்கான நாட்டையாண்ட நன்னன் மரபினரின் ஆட்சியின் கீழ் இருந்தன. இதன் விரிவை அடுத்த அத்தியாயத்தில் காணலாம். பழங் கொங்கு நாட்டின் வடபாதியில் கி. பி. 4ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கோலாரையும், அதற்கு மேற்கே உள்ள விஜயஸ்கந்தபுரம் என்னும் விஜயபுரத்தையும் தலைநகரமாகக் கொண்டு கொங்கணி அரசமரபு (வரலாற்று அறிஞர்களால் மேலைக்கங்கர்கள் என்று குறிக்கப்படுபவர்) நிறுவப்பட்ட பிறகு கொங்கு நாட்டின் வடஎல்லை மைசூர் மாநிலத்தில் பாயும் காவிரியாற்றின் தென்கரை அளவில் சுருங்கிப் போயிற்று. கி. பி. 9-ம் நூற்றாண்டில் இரட்டிரகூட அரசனான நிருபதுங்கவர்மனால் இயற்றப்பட்ட கவிராஜ மார்க்கம் என்னும் கன்னட நூலில் கன்னட நாட்டின் தென்எல்லை காவிரி என்று குறிக்கப்பட்டுள்ளதால்[1] அந்த நூற்றாண்டிலும் கொங்கு நாட்டின் வடஎல்லை காவிரி வரை பரவியிருந்தது என்பது புலப்படும். ஆயினும் காவிரியின் தென்கரையில் அமைந்திருந்த தமிழகத்தின் முனைப்பகுதியும், தொண்டை நாட்டிற்கு மேற்கே அதன் மேற்கு முனை நாடுகளாக விளங்கிய பகுதிகளும் முனைநாடு, ஓநாடு என்ற பொருளில் கங்கநாடு என்று குறிக்கப்பட்டதால்[2] (2) பிற்காலத்தில் அதன் தென் பகுதியான சேலம் மாவட்டம் அளவிலே கொங்கு நாடு சுருங்கியது போலும்.

---

1 கவிராஜ மார்க்கம், 1-36.

இச்சுருங்கிய கொங்கு நாட்டையே கொங்கு மண்டல சதகம்போன்ற பிற்காலப் பிரபந்தங்கள் எல்லை வகுத்துக் குறிப்பிடுகின்றன. இவைகள் வடக்கே தலைமலையையும், தெற்கே பழனி மலைகளையும், கிழக்கே குளித்தலையையும், மேற்கே வெள்ளிமலை எனப்படும் வெள்ளியங்கிரியையும் கொங்கு நாட்டின் எல்லைகளாகக் குறிப்பிடுகின்றன இவற்றுள் தலைமலை என்பது மைசூரையும், கொங்கு நாட்டையும் பிரித்து சத்தியமங்கலம், கோபிச்செட்டிப்பாளையம் அருகே அமைந்துள்ள மலைத்தொடர் ஆகும் பெரும்பாலை என்பது ஒரு சிற்றூராக சேலம் மாவட்டம் தோப்பூர் குன்றுகளை ஒட்டியுள்ளது.

இவ்வாறு அக்காலத்தே விரிந்திருந்த கொங்கு நாடு மலைகள் நிறைந்த உள்நாடாகும் காடும், காடுசார்ந்த முல்லைநிலங்களும் அக்காலக் கொங்கு நாட்டில் இப்பொழுதுள்ளதைவிட அதிகமிருந்தது. இம்முல்லை நிலத்தின் பெரும் பகுதி சத்யமங்கலத்திற்கு அப்பால் இன்றைய மைசூர் மாவட்டப் பகுதிகளிலே இருந்தன என்பதற்கு இன்றும் அப்பகுதிகளில் கால்நடைகள் ஏராளமாக வளர்க்கப்படுவதிலிருந்து அறியலாகும். நெல் பயிராகும் மருத நிலங்கள் அதிகமாக இல்லாவிட்டாலும் ஆற்றங்கரைகளின் இரு பக்கங்களிலும் ஓரளவு நிறைந்திருந்தன. ஆயினும் மேலும் பல பகுதிகள் வளப்படுத்தப்பட்டு பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாக கொங்கு நாட்டில் இருந்ததால் அதிலும் குறிப்பாக வட கொங்கு நாட்டில் மிகுதியாக இருந்ததால் மக்கள் குடியேற்றம் அங்கெல்லாம் அதிகமாக நிகழ்வதற்கேற்ற சூழ்நிலை இருந்தது. காவிரிநதி பிறக்கும் குடகுமலை நாடு அக்காலத்தே கொங்கர் நாட்டினுள்ளே அடங்கியிருந்தது. எனவே காவிரியாறு பிறக்கும் இடத்தில் இருந்து சோழ நாட்டினுள் நுழையும் வரையிலான பெரும்பகுதி கொங்கு நாட்டிலே அடங்கியிருந்தது. காவிரி தவிர பவானி,

2 கங்கு-முகை, ஓரம் கங்கு என்பது கங்கம் ஆயிற்று.

அமராவதி நொய்யல் முதலான காவிரியின் சிறு கிளை நதிகளும், கபினி, ஹேமவதி முதலிய பெரிய ஆறுகளும் கொங்கு நாட்டினுள்ளே அடங்கி இருந்தன. இன்னும் பாலாற்றின் ஒரு பகுதி, பெண்ணையாற்றின் ஒரு பகுதி ஆகியவையும் பழங் கொங்கு நாட்டைச் சேர்ந்ததேயாகும். இவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தென்பகுதியில் பிறக்கும் பெரும்பாலான ஆறுகள் கொங்குநாட்டினுள் வந்தே ஏனைய பகுதிகளுக்குச் சென்றதால் அங்கெல்லாம் மக்கள் குடியேறி காடு கெடுத்து மருதநிலமாக்கிக் கொண்டு வேளாண்மைத் தொழில் செய்து வாழ்வதற்கு அதிகமான வாய்ப்பு கொங்கு நாட்டில் இருந்தது. இந்தக்காரணத்தினலேயே கொங்கான நாட்டுக் கொங்கர்களைத் தவிர்த்து தொண்டை நாட்டு வேளாள மக்களும், சோழ நாட்டு வேளாள மக்களும் கொங்கில் குடியேறினர்.

## கொங்குநாடு-பெயர்க்காரணம்.

தமிழ்நாட்டின் முப்பெரும் பிரிவான சேர, சோழப், பாண்டிய நாடுகள் அந்தந்த குலமன்னர்கள் ஆண்ட நாடாதலால் அப்பெயர் பெற்றன. தொண்டை நாடும் தொண்டையர் என்ற அரச மரபினர் ஆண்டு வந்த நாடாதலால் அப்பெயர் பெற்றன. ஆனல் கொங்குநாட்டிற்கு அப்பெயர் வழங்கக் காரணம் என்ன? கொங்கர் என்ற பெயருடைய அரச மரபினர் ஒருவர் அந்நாட்டை ஆண்டனரா? கொங்கு நாடு மலைவளம் நிரம்பப் பெற்ற குறிஞ்சிநாடு என்பதை முன்னர் பார்த்தோம். இம்மலை நாட்டில் தேன் நிரம்பக் கிடைத்ததாம். தேனிற்குக் கொங்கு என்ற ஒரு தமிழ்ச் சொல்லுண்டு "கொங்கு தேர்வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்ற குறுந்தொகைப் பாடலின் வரிக்குத் தேனை நாடிச் செல்லும் வாழ்க்கையை உடைய அழகிய சிறகுகள் அமையப் பெற்ற தேனீ என்றே உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளமை இதனைவிளக்குவனவாகும். எனவே தேன்நிறைந்த நாடு என்ற பொருளில் கொங்கு நாடு எனப்பட்ட தாகக் கூறுவர் ஒருசாரர். இக்கருத்து

தான் சரியானது என்பர் தமிழ் அறிஞர்கள், மலர்களின் மணத்துகள் அதாவது கொங்கு எனப்படும் பூக்களின் மகரந்தந்துகள் இப்பெயரை கொடுத்தது என்பது சிலர் கொள்கை. இக்கருத்துக்கள் நம்பக்கூடியனவாக இல்லை. சில அறிஞர்கள் கொண்கானம் என்ற பெயரே கொண்கான மாகிக் கொங்கம் என மாறிற்று என்பர். கொண் என்ற தமிழ்ச்சொல் வீறைன, பயனற்ற என்ற பொருளில் சங்க நூல்களில் வழங்கப்படுகின்றன. கொங்கு நாட்டின் பெரும் பகுதி மலைகளாகவும், காடுகளாகவும் பயிர்த்தொழிலுக்குப் பயன்படாத நிலங்களாக உள்ளன. எனவே பயனற்ற காடுகள் நிறைந்த நாடு என்ற பொருளில் கொண்கானம் என குறிக்கப்பட்டு இப்பெயரே கொங்கு என்று மாறியது என்ற கருத்து ஓரளவு பொருத்தமாகவே தோன்றுகிறது.

ஆயினும் நாம் இக்கருத்தையும் உறுதியாகக் கொள் வதற்கில்லை. இதற்கிடையே புறநானூற்றில் 154, 155, 156 ஆம் பாடல்களாக வரும் மூன்று பாடல்கள் நம் கவனத் தைக் கவருகின்றன. இம் மூன்று பாடல்களும் கொண் கானங்கிழான் என்ற ஒரு குறுநில மன்னனின்மீது பாடப் பட்டவை என்று இவற்றின் நூல்குறிப்பு கூறுகிறது. இப் பாடல்களைப் பாடிய புலவர் மோசிகீரனார் என்பவராவர், இம் மோசி கீரனார் பதிற்றுப் பத்தில் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனை சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறையைப் பாடியிருப்பதால் (புறம்–50) இவர் அம்மன்னனின் காலத்திலும் வாழ்ந்தவர் என்று தெரிகிறது. இவர் கொண்கானங்கிழான் என்பவன் மீது பாடியுள்ள மூன்று புறப்பாட்டுகளிலும் இம்மன்னனின் நாடாகக் கொண் பெருங்கானம் என்னும் ஒரு நாட்டைக் குறிப்பிட்டுள்ளார். இக்கொண்பெருங் கானம், இப்பெயரை உடைய ஒரு மலையை நன்னகத்தே கொண்டிருந்தது எனவும் இம்மலை அழகிய பல அருவிகளை உடையதாக விளங்கிற்று, எனவும் குறிப்பிடும் இவர் மற்றையோர் நாட்டு மலைகள் எல்லாம் ஒன்று குறைவிலா வளந்தரும் மலைகளாக விளங்கும், அல்லது வென்று கொள்ள முடியாத வலிமைமிக்க அரண்

களாக விளங்கும். ஆனால் கொண்கான மலையோ இவ்விரண்டு சிறப்புக்களையுமே பெற்றிருந்தது என்று போற்றிப் புகழ்கிறார்.

இவ்வாறு வளமும் வலிமையும் பொருந்திய இக்கொண்கான நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருத்தல் கூடும் என்று தோன்றுகிறது. இதோடு இன்னொரு கருத்தையும் நாம் இணைத்துப் பார்க்க நேரிடுகிறது. மைசூர் மாவட்டத்திலுள்ள தலைக்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட மேலைக் கங்க வம்சத்து முதல் மன்னனான கொங்குணிவர்மனின் பெயரால் கொங்கு நாட்டிற்கு அப்பெயர் வந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர் நான் முதலில் கூறியபடி சோழன் ஆண்ட நாடு சோழ நாடு எனவும், பாண்டியன் ஆண்ட நாடு பாண்டிய நாடு எனவும் பெயர் பெற்றது போலக் கொங்குணி அரசர்கள் (மேலைக்கங்கர்கள்) ஆண்ட நாடு கொங்கு நாடு எனப்பெயர் பெற்றிருக்கலாமல்லவா? அப்படியானால் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் கொங்கர்கள் கொங்குணி வம்சத்தவர்களாகிய மேலைக் கங்கர்களின் முன்னோர்கள் தாமா? இதனை ஆராய்வதற்கு முன் நாம் இப்பகுதி நாட்டில் வாழ்ந்த பூர்விக மக்களைப்பற்றிச் சிறிது காண்போம்.

## அத்தியாயம்-2

# பழந்தமிழ்நாட்டு மக்கள் இனம்

பழந்தமிழ்நாட்டு மக்களினம் நாட்டின் நிலஇயலை அடிப்படையாகக் கொண்டே பாகுபடுத்தப்பட்டிருந்தது. நில இயல் அமைப்பின்படி தமிழகம் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை மலைப்பிரதேசங்களாகிய குறிஞ்சி, மேய்ச்சல் நிலங்களும், பசுங்காடுகள் சூழ்ந்த பகுதியுமான முல்லைநிலம், ஆற்றுப்பாசனவசதிமிக்க மருத நிலம், கடற்கரைப்பகுதிகளான நெய்தல்நிலம் என்பவை. இவைதவிர ஐந்தாவதாகிய பாலை நிலம் என்பது முல்லையும் குறிஞ்சியும் வறட்சியுற்ற நிலமாக மாறுவதேயாகும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவ்வகை நிலப் பகுதிகளுள் குறிஞ்சி நிலப்பகுதியிலும், பாலைநிலப்பகுதியிலும் வாழ்ந்த மக்கள் வேட்டையாடுந் தொழிலை மேற்கொண்டவராக இருந்தால் வேட்டுவர், வேடர், வெற்பன், சிலம்பன் எனப்பட்டனர். முல்லை நிலமக்கள் ஆயர், கோவலர் எனப் பட்டனர், மருதநிலமக்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்து வாழ்ந்தமையால் வேளாளர் எனப்பட்டனர். இவை தாம் பழந்தமிழரின் சமுதாய அமைப்பாக விளங்கின, இவற்றுள் கொங்குநாடு அமைந்துள்ளபகுதி பெரும் பாலும் மலைப்பிரதேசங்களாகவும், நீர்வள நிலவளமற்ற வறண்ட பாலை நிலமாகவும் இருந்து வந்ததால் இப்பகுதி மக்களில் பிற இனத்தாரைவிட வேட்டுவர்களே சிறந்து விளங்கினர். எனவே கொங்கில் இன்று வேளாளக் கவுண்டர்களுக்குச் சமமான பழமையும், சிறப்பும் பெற்றுத் திகழும் வேட்டுவக் கவுண்டர்களின் இனமே கொங்கின் பூர்வீக மக்களினத்துள் முதன்மையாகத் திகழ்கிறது. ஆயினும் பழந்தமிழ் நாட்டில் கொங்குநாடு அமைந்துள்ள பகுதிகளின் பூர்வீக மக்களாக நம்மால் சங்க இலக்கியங்களின் மூலம் அறியப்படுபவர் வேட்டுவர், எயினர், மழவர் வேளானர், குறும்பர் ஆகியோராவர். இவர்களைத் தவிர

அன்னியர்களாக வடுகர், கோசர், கொங்கர் ஆகியோரும் குறிக்கப்படுகின்றனர் இவர்களுள் பெரும்பான்மையானவர் வேட்டுவர்களேயாவர்.

**வேட்டுவர்கள்.**

வேட்டுவர்கள் பழங்கொங்கு நாட்டின் தென் பகுதிகளிலும் அக்காலத்தே வாழ்ந்து வந்தபோதிலும் வட பகுதிகளிலே மிகுதியாக வாழ்ந்தனர். இதற்குக் காரணம் வடகொங்கு நாடு வளம் குறைந்த பாலை நிலப் பகுதிகளையே மிகுதியாகக் கொண்டிருந்ததோடு வேட்டுவர்களின் பூர்வீகம் தொண்டைநாடும் அதற்கு வடக்கேயிருந்த பொத்தப்பிநாடு எனப்படும் நெல்லூர், குண்டூர் மாவட்டப் பகுதிகளுமாக இருந்ததேயாம். இவ்வேட்டுவர்கள் மிகப் பழங்காலத்தே இப்பகுதிகளின் குடிமக்களாக வாழ்ந்த நாகர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்நாகர் இனத்தின் மூலத்தைப்பற்றித் திட்டவட்டமாக ஏதும் சொல்ல முடியவில்லையாயினும் ஆயினும் கி. மு. நூற்றாண்டுகளின் இறுதிப்பகுதியில் இந்நாகர்கள் மேற்குறிப்பிட்ட தொண்டைநாட்டையும், பொத்தப்பி நாட்டையுமே தமது தாயகமாகக் கொண்டிருந்தனர். இப்பகுதிகள் பழந்தமிழ் நாட்டின் பிரிவுகளுள் அருவா நாடு, அருவா வடதலை நாடு எனவழங்கப்பட்டது. அருவா நாடு என்பது அரவர் நாடு என்பதின் திரிபு எனத்தோன்றுகிறது. அரவு என்ற தமிழ்ச் சொல், நாகப்பாம்பைக் குறிக்குமாதலால் அந்நாகப்பாம்பைத் தமது குலச்சின்னமாக (Totem) கொண்டிருந்த மக்கள் அரவர் அதாவது நாகர் எனப்பட்டு அரவர் வாழும் நாடு அரவநாடு என்று ஆகியிருக்கலாம். இதனை தாலமி என்ற கிரேக்க நிலஇயல் அறிஞரும் உறுதிப்படுத்துகிறார். அவரது குறிப்பில் "சோழ மண்டலக் கரையிலுள்ள நெல்லூர்ப் பகுதியில் அர்வர்னி." என்ற மக்கள் வாழ்ந்தனர் என்ற செய்தி காணப்படுகிறது. இந்த அர்வனி என்பவர் நாகரைத்தவிர வேறுயாரும் இருக்கமுடியாது. இந்நாகர்கள் அக்காலத்தே இப்பகுதியில் மட்டுமின்றி தமிழகம் நெடுகிலுமே சிறப்பாகக் காணப்படுகின்றனர். சங்கப்

புலவர்களுள் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புகழ் மிக்க புலவர் நாகரினத்தவரே யாவர். முடிநாகரயர் என்ற பெயர்முடி அதாவது தலையிலே நாகப்பாம்பின் சின்னத்தை அணிந்திருந்த அரையர் ( சிற்றரசர் ) என்பதைத் தெரிவிக்கிறது. எனவே நாகர்கள் தமது தலையிலே நாகப்பாம்பின் உருவைச் சூட்டியிருந்தனர்போலும். பிற்காலத்தில் இப்பகுதியை ஆண்ட சிற்றரசர்களுள் சூட்டு நாகர் என்பாரும் ஒருவராகக் குறிக்கப் படுகின்றனர். சூட்டுநாகர் என்ற பெயரும் தலையிலே நாக இலச்சினையைச் சூட்டியிருந்தனர் என்பதையே குறிக்கிறது. நாகம் என்பது சுரபுன்னை என்ற ஒருவகை மலரின் பெயராகும். இம்மலர்மாலையை அணிந்திருந்தமையால் நாகர் எனப்பட்டனர் என்றும் கூறலாம் இன்னும் இவரைப் பால நாகன் என்ற பெயரை உடைய பல புலவர் பெருமக்களை நாம் சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம் இவர்கள் அனைவரும் நாகர்களே. சேக்கிழாரும் பெரிய புராணத்துள் கண்ணப்ப நாயனாரின் தந்தையும், பொத்தப்பி நாட்டின் வேடர் குல மன்னனுமான வேட்டுவனை நாகன் என்றே குறிப்பிடுகிறார். இவன் முதுமை அடைந்து விட்டதால் நாட்டில் காட்டு விலங்குகளின் துன்பம் அதிகரித்து விட்டது என்றும் பகைவரது பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வரும் தொழில் நடைபெறவில்லை,என்றும் கூறும் சேக்கிழார் நாகரினத்தவராகிய வேட்டுவர்களின் பணி நாடு குறைவின்றிச் சிறப்புடன் திகழ எந்த அளவிற்குப் பயன்பட்டது என்பதை அழகாக விளக்கி விடுகிறார். இத்தகு பழைமை படைத்த நாகர் இனத்தைச் சேர்ந்த வேட்டுவர்கள்.[1] தமது பரம்பரைத் தொழிலாகிய வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டு இருந்தமையால் கொடிய காட்டு விலங்குகள் தமது இனத்தை விரைவாகப் பெருக்கிக் கொண்டு அடிக்கடி நாட்டு பகுதிகளில் புகுந்து நாகரீக மக்களை அச்சமின்றி வாழவிடாமல் ஆபத்தை விளைவித்துக் கொண்டிருந்தமை

---

1 ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் கனகசபைப் பிள்ளை பக்கம் 74.

தடுத்து நிறுத்தப்பட்டது. எனவே இவர்கள் தம் தொழிலும் நாடும் நலமுடன் திகழப்பெரிதும் பயன்படுவதாக இருந்தது. இவ்வாறு சிறப்புற்றுத் திகழ்ந்த இந்த நாகர் இனத்துப் பெண்களை அக்கால அரசர்களும் மணந்து கொண்டனர். இந்நாகர் குலப்பெண் ஒருத்தியை மணந்த சோழன் நலங்கிள்ளி என்பானுக்கு நாகர் இளப் பெண்ணின் வயிற்றில் பிறந்த மகனே தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் என்றும் பழந்தமிழ்க் குறிப்புகள் கூறுகின்றன. பல்லவர் குல மன்னர்களுள் ஒருவனான வீரகூர்ச்சவர்மன் என்பானும் நாகர் குலப்பெண் ஒருவளை அரசுரிமையோடு அடைந்தான் என்று பல்லவர் செப்பேடுகள் கூறுகின்றன.[1] இவ்வாறு தொண்ட மண்டலப் பகுதியே அரவர் நாடு என்று வழங்கப்படும் அளவிற்கு அந்நாளிலே சிறப்புப் பெற்றிருந்த நாகர் இனம் தமிழினத்திலே தொன்மைச் சிறப்புப் பெற்ற ஒரு இனமாகும். எனவே இந்த நாகர் இனத்தவர்களான வேட்டுவர்களும் இத்தகு பழைமைச் சிறப்புப் பெற்வராவர்.

**வேட்டுவரில் இனப்பிரிவு**

இவ்வேட்டுவர்கள் மாவலியர், காவலியர், பூவலியர், வேட்டுவர் என்ற நற்பெரும் பிரிவினராகப் பிரிந்து இருந்ததாக இடைக்காலச் சான்றுகளிலிருந்து தெரியவருகிறது. இப்பிரிவினருள் காவலியர் என்போர் பூமியை ஆளும் வலிமை படைத்தவர் எனவும், மாவலியர் என்போர் மிகுந்த வல்லமை படைத்தவர்கள் எனவும் கூறப்படுகின்றனர். முந்தைய இரு பெயர்களின் பொருள் குறித்த படியிருப்பினும், மாவலியர் என்ற பெயர் மாவலி அதாவது மகாபலி அரசனின் வழிவந்தவர் என்ற பொருளில் பொருந்தி வருவதால் மகாபலியின் வம்சத்தில் வந்தோராகக் கூறிக்கொள்ளும் மகாபலி வாணராசர்களும் வேட்டுவர்களே யெனவும் அதனாலே அவர்களது பூர்வீக நாடு

---

1. வேலூர் பாளையம் செப்பேடு.

தொண்டைமண்டலப் பகுதியை ஒட்டியே அமைந்திருந்தது எனவும் தோன்றுகிறது. கி. பி. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டு வாக்கிலே தொண்டை நாட்டைப் பல்லவர் கைப்பற்றிக் கொண்டதும்—நாகர்குலக் கன்னியோடு நாட்டுரிமையும் பெற்ற வீரகூர்ச்சவர்மனே முதல் பல்லவனாக இருக்கலாம்—மேற்குறித்த பிரிவினருள் மாவலியர் நந்தி மலைப் பகுதி, சவ்வாது மலைப்பகுதிகளையடைந்து மாவலியர் அரச மரபை ஏற்படுத்திக்கொண்டிருக்கலாம். இவர்களைப் பாணர்கள் என்று சங்கப் புலவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏனைய பூவலியர், காவலியர், வேட்டுவர் ஆகிய பிரிவினருள் வேட்டுவர் வடகொங்கு நாட்டு வறண்ட நிலப் பகுதிகளைத் தமது தாயகமாகக் கொண்டனர். காவலியர் கரூர், குளித்தலை ஆகிய பகுதிகளை உள்ளிட்ட கீழ் கொங்கு நாட்டில் குடியேறினர். பூவலியர் தென் கொங்கு நாட்டில் குடியேறினர். இவர்கள் சேர அரசர்களது சிற்றரசர்களாக ஆட்சி புரிந்து வந்தனர் என்று கூறும்போது தமிழகத்தில் வாழ்ந்த புராதன மக்களுள் இவர்கள் பெற்று இருந்த சிறப்பிடத்தை ஒருவாறு உணரலாம்.

### இலக்கியம் காட்டும் வேட்டுவர்

தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும், வேட்டுவர் மக்களின் வாழ்க்கையும், சிறப்பியல்புகளும், பழக்க வழக்கங்களும், அணி ஆடைச்சிறப்பும், திருவிழாக்களும் பலவாறு பேசப்படுகின்றன. அவைபற்றி ஓரளவு சுருக்கமாக இனி பார்ப்போம். சிலப்பதிகார காலத்திற்கு முன்னதாகவே வேட்டுவ மக்கள் தமிழகத்தில் அதுவும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலே மறவர்களாக வாழ்ந்த போதிலும், நாகரிகம் பெற்ற மக்களாகச் சிறந்த பண்பாடு உடையவர்களாக வாழ்ந்தமை பற்றி சங்க இலக்கியங்களே பலபடக் கூறுகின்றன.

கோடை மலைக்குத் தலைவனான கடிய நெடு வேட்டுவன் என்பவன் "வெள்ளி வேலிக்கோடைப் பொருந" என்று

புறநானூறு 205-ஆம் பாடலில் போற்றப்படுகிறான். இவனை இவ்வாறு போற்றுபவர் ஒரு கொங்கு வேளாளர். ஆலூர் மூலங்கிழாரின் மகனான பெருந்தலைச் சாத்தனாரே ஆவர். அப்படி வேளாளரும் போற்றும் வீரப் பெருமகனாக விளங்கி வந்துள்ள இவ்வேட்டுவப் பெருமகனான இவன் பாண்டிய மன்னரின் படைத் தலைவனாகவும் விளங்கினான் என்று தெரிகிறது. "திருவீழ் மார்பிற்றென்னவன் மறவன்... வாள்வாயம்பிற் கோடைப் பெருநன்" என்று அகநானூறு 13ஆம் பாடலில் இதே பெருந்தலைச் சாத்தனாரே இச்செய் தியைக் கூறுகிறார்.

இன்னும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் வேட்டுவத் தலைவர்களுள், ஆய் அண்டிரன், ஆய்எயினன், அறுகை, அன்னி, தோட்டிமலைக்குத் தலைவனான கண்டீரக்கோப் பெருநள்ளி, வல்வில்ஓரி, ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் போன்ற அரசர்களும், இளவெயினனார், எயிற்றியனார், எயினந்தையார், எழுஉப்பன்றி நாகன் குமரனார் போன்ற புலவர்களும், பெண்கல்வியிலும் வேட்டுவர் அக்காலத்தே பின்தங்கியவர் அல்லர் என்பதை விளக்குவார் போலப் புகழ்பெற்று விளங்கிய கழாரர்சீரன் எயிற்றி, வெறிபாடிய காமக்கண்ணியார் போன்ற பெண்பாற் புலவர்களும் வேட்டுவ குலத்தவராக விளங்கிப் பெருமை கூட்டினர்.

**கொடுமுடி**

இவர்களுக்கெல்லாம் காலத்தால் சற்றுப் பிற்பட்ட வனாக விளங்கியவன் கொடுமுடி என்ற பெயரை உடைய வேட்டுவ அரசன். இவன் தலைநகரம் கொங்கு நாட்டிலுள்ள ஆமூர். இன்றும் உள்ளது இவ்வூர். இவனு டைய கோட்டை பகைவரால் எளிதில் வெல்லப்பட முடியா வாறு ஐயவி, அகப்பா, என்ற போர்ச்சாதனம் பொருத்தப் பட்டு விளங்கியதாம். மழைபோலத் தொடர்ந்து அம்பு களை வீசும் அந்தப் பொறிகண்டு பகைவர் கதிகலங்கின ராம். இக்கொடுமுடி புலவர்கள் பலரை ஆதரித்தவன்.

இவனைப் புகழ்ந்து கௌதமன் சகாதேவனார் என்ற புலவர் பாடிய சங்கப்பாடல் ஒன்று அகநானூறு 159–ஆம் பாடலாக விளங்குறது. இதில் இவனது தலைநகரம் "கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில் சேண் விளங்கு சிறப்பின் ஆமூர்'' என்று போற்றப்படுகிறது. இந்த மாவீரனைக் கடைசியில் வென்றவன் பல்யானைச் செல்கெழு செங்குட்டுவனேயாவன். கொடுமுடி கொல்லப்பட்டதும் அவன்பால் பற்றுமிகக் கொண்டிருந்த நாட்டு மக்கள் அவனுக்கு நடுகல் நாட்டிப் போற்றினர். தற்போது திருப்பாண்டிக் கொடுமுடி எனப்படும் கொடுமுடிக்கு அக்காலத்தே கறையூர் என்ற பெயர் இருந்தது அவ்வூரில் தான் மக்கள் கொடுமுடிக்கு நடுகல் அமைத்துப் போற்றினர். கறையூருக்கும் அத்தலைவனின் பெயராலே கொடுமுடி என்ற பெயரையும் சூட்டினர். அப்பெயர் இன்றும் நின்று நிலவி வேட்டுவர் குலத் தலைவனும் மாவீரனுமான கொடுமுடியின் புகழை மக்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் வேட்டுவத் தலைவர்கள், புலவர்கள் ஆகியோர் பற்றிச் சங்க இலக்கியங்களிலே சான்றுகள் காணப்படுவதால் காடுகளிலும் மலைச்சரிவுகளிலும் வேட்டையாடி வாழ்ந்தமையால் வேட்டுவர் என்ற பூர்வீகக் குடிப் பெயரைப் பெற்று இருந்தாலும் நாகரீக முதிர்ச்சி பெற்று நகரமக்களாக, பல்லோர் போற்றும் சிறப்புடையவர்களாக கொங்கு வேட்டுவர் உயர்வு பெற்றுத் திகழ்ந்தனர். என்று கூறலாம்

எயினர் :

பழங்கொங்கு நாட்டிலே வாழ்ந்த பூர்வீக மக்களினத்தவருள் எயினர் என்பாரும் ஒருவர் எனக் குறிப்பிட்டிருந்தேன். இவ்வெயினர்களும் நாகரினத்தவர்தாம். இவர்கள் பெரும்பாலும் வடகொங்கு நாட்டுப் பகுதிகளிலே வாழ்ந்தவர் என்பதை இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். புறநானூறு 351ம் பாடல் எயினன் என்ற ஒரு மன்னனின் பெயரைக் குறிக்கிறது. இவனுடைய தலைநகரம்

வாகை என்று அப்பாடல் கூறுகிறது. இவற்றுள் ஒன்று கரிகால் வளவன் போர் செய்த வாகைப் பறந்தலை; மற்றது நன்னன் சேரனுடன் நடத்திய போரில் இறந்துபோன வாகைப் பெருந்துறை. இது கொங்கு நாட்டின் மேற்குத் திசையில் உள்ளது என அகநானூறு குறிப்பிடுகிறது. இவ்வாகையை ஆண்ட ஆய் எயினன் என்பான் நன்னன் புன்னாட்டை வென்றபோது புன்னாட்டு அரசனின் சார்பாக பாழி என்ற இடத்திலே நன்னனது சேனபதியான மிஞிலி என்பானோடு போர்செய்து இறந்தான் என்று இலக்கியக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. இவன் நன்னனின் எதிரியாகவே இருந்து இருக்கிறான். இதற்கிடையில் சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவனான சிறுபாணன் ஓய்மான் நல்லியக் கோடனின் நாடு எயில் நாடு எனப்படுவதாகும். எயில் என்பது பொதுவாக கோட்டை மதிலைக் குறிக்குமாயினும் எயினர் வாழும் நாடு எயினாடு எனவும் பெயர்பெற்றிருத்தல் கூடும். மேலும் இப்பகுதியில் எயினர் அதிகமாகவாழ்ந்தவர் எனவும் இவ்வழியே சென்றால் எயினர் மக்கள் இறைச்சி கலந்த புளிசோற்றினை அளிப்பர் எனவும் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

**மழவர்கள்:**

சங்ககால மக்கள் இனத்தவர்களுள் ஒரு பிரிவினராகக் குறிக்கப்படும் மழவர்கள் என்பார் தகடூராகிய தருமபுரி மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்தவர்களாவர். இம்மழவர் இனத்துச் சிற்றரசர்களே சங்ககால அதியமான் அரசமரபினராவர். இவர்கள் மலைசூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்களினத்தவர் ஆதலின் மலைவர் எனப்பட்டு இச்சொல்லே திரிந்து பின்னர் மழவர் ஆயிற்று எனவும், சிறந்த போர் மறவர்களாக இவ்வினத்தவர்கள் விளங்கினமையால் மறவர் எனப்பட்டு இச்சொல்லே பின்னர் மழவர் என மாறியது எனவும் இவர்கள் பற்றிப் பொதுவான கருத்துக்கள் கூறப்படுகின்றன. மலைப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் மலைவர் மழவர் என்றும் மறவர் என்ற சொல்லே மழவர் என்றும் மாறிற்று என்பது உண்மையானால் தமிழகத்தின் பிறமலைப்பகுதிகளில் வாழ்ந்தவர்களும், மறவர்களாக விளங்கிய பிறபோர்வீரர் மரபினரும் இவ்வாறே மழவர் என்று அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு அவர்கள் குறிக்கப்படவில்லையாதலால் மேற்சொன்ன கருத்து பொருந்தாமை தெளிவு.

புறநானூறு 99 ஆம் பாடலில் ஔவையார் இம்மழவர்களின் முன்னோர் பற்றிக் கூறியுள்ளார். "அமரர் பேணியும்" என்று தொடங்கும் அப்பாடலின் மூன்றாவது வரியில் "நீரக இருக்கை ஆழி சூட்டிய, தொன்னிலை மரபின் நின் முன்னோர் போல" என்று குறிப்பிட்டுள்ளார் அப்பெருமாட்டி. இதன் பொருள் நீரின் நடுவே அமைந்திருந்த நாட்டிலிருந்து ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்திய மிகப்பழமையுடைய மரபில் உதித்த நின் முன்னோர் போல என்பதாகும். அவ்வாறெனில் அதியமான் அரசர்களின் முன்னோர்கள் கடல் நடுவே அமைந்திருந்த தீவுப் பிரதேசங்களில் ஆட்சி செய்தவர்கள் என்று கொள்ளலாமா? அவ்வாறெனில் அத்தீவுகள் யாவை? உதியஞ்சேரலின் மகனான நெடுஞ்சேரலாதன் கடலின் நடுவே அமைந்துள்ள தீவுகளின் அரசன் ஒருவன் மீது படையெடுத்துச் சென்று அவ்வரசனை வென்று அவனுடைய காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தித் தன் வெற்றியின் சின்னமாக அக்கடம்ப மரத்தினாலே போர்முரசம் செய்து கொண்டான் என்று பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தும் வேறு சில சங்கப் பாடல்களும் புகழ்ந்து பேசுகின்றன. அகநானூறு 127 ஆம் பாடல் "சால் பெருந்தானைச் சேரலாதன் மால் கடல் ஓட்டிக் கடம்பறுத்தியற்றிய" என்னும் வரிகளுக்கு உரையாசிரியர் சேர நாட்டிற்கு அப்பால் கடலின் நடுவே அமைந்த பல தீவுகளில் வாழ்ந்தவர் எல்லாம் ஒரு அரசின் கீழ் வாழ்ந்தனர் எனவும், இவர்கள் சமயம் நேரும் போதெல்லாம் சேரர் நாட்டில் புகுந்து கொள்ளையிட்டனர் எனவும், இத்தீவுகளில் வாழ்ந்த மக்களுக்கு அரசன் ஒரு தீவில் வாழ்ந்தான் எனவும், அவனது காவல் மரம் கடம்ப மரம் எனவும், சேரமன்னன் அத்தலைவனை வென்று கடம்ப மரத்தை அழித்த செய்தியையே மேற்சொன்னவரிகள் விளக்குகின்றன என்றும் எழுதியுள்ளார். இம்முடிவு பொருத்தமாக இருக்க பல வரலாற்றாசிரியர்கள் கடம்ப மரத்தை காவல் மரமாகக்கொண்டிருந்ததால் கடம்பர் என குறிக்கப்பட்டோரைக் கதம்பர் என்ற பிற்கால அரச மரபினரோடு இணைத்துத் தாமும் குழம்பி மற்றவரையும்

குழப்பி விட்டனர் இது பெருந்தவறாகும். கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்ட மேற்சொன்ன அரசனுக்குச் சொந்தமான தீவுகள் மேலைக் கடலில் ( அரபிக் கடல் ) உள்ள லட்சத் தீவுகளும், மாலத் தீவுகளுமேயாகும். இடைக் காலத்தில் இந்தீவுகள் முந்நீர் பழந்தீவு பன்னீராயிரம் என்று அழைக்கப்பட்டன. ( இராஜராஜ சோழனின் மெய்க் கீர்த்தி ) இப்பழந் தீவின் பழைய பெயர் மழத்தீவு என்றிருந் திருக்க வேண்டும். இத் தீவுப் பிரதேசங்கள் ஆண்டு முழுவதுமே அதிகமான மழையைப்பெறுந்தீவுகளாகவிளங்குவதால் மக்கள் இதனை மழைத்தீவு என்று குறிப்பிட்டு அதுவே நடைமுறையில் மழத்தீவு ஆகியிருக்கலாம். மழத் தீவு என்பதையே போர்ச்சுக்கீசியர் முதலானோர் மலத்தீவு என்று குறிப்பிட்டு இதனை ஒட்டியிருந்த மேலைக் கடற்கரையை இத்தீவுகளைச் சேர்ந்த கடற்கரை நாடு என்னும் கருத்தில் மலவார் (மலபார்) கடற்கரை என்று கூறியிருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமேற் படுகிறது. இந்த மழத்தீவினரை சேர மன்னன் நெடுஞ் சேரலாதன் வென்று அடக்குவதற்கு முன்பே இவர்களுள் ஒருபிரிவினர் பாலக்காட்டுக் கணவாய் வழியாக ஊடுருவி வந்து கொங்கு நாட்டுக் கருருக்கு வடக்கே நாமக்கல், சேலம் பகுதிகளில் குடியேறியிருக்கலாம் இவர்களே மழவர் எனப்பட்டனர். (மழைத்தீவுகளிலிருந்து வந்த மக்கள் மழவர்) இதனைக் கருத்தில் கொண்டே ஔவையாரும் "நீரக இருக்கை (தீவுகள்) ஆழி சூட்டிய தின் முன்னோர்" என்று அதியமானின் முன்னோரைக் குறித்துள்ளார்போலும். இம்மழவர்கள் சிறந்த குதிரைப் படைகளை வைத்திருந்த குதிரை மறவர்கள் என்பதை அகநானூற்றின் முதல் பாட்டில் புலவர் மாமூலனாரும் "உருவக் குதிரை மழவர் ஓட்டிய" என்றுகூறி உறுதிப் படுத்துகிறார். தமிழ் மன்னர்கள் அரேபியாவில் இருந்தே குதிரைகளைத் தருவித்தனர் என்ற கருத்து நிலவுவதால் அரேபியாவிலிருந்து

வரும் குதிரைகளைத் தமது தீவுகளுக்குத் தருவித்து அவைகளைப் பழக்குவதில் வல்லவராக இம்மழவர்கள் விளங்கி இருக்கக் கூடுமல்லவா? உலகப்படத்தில் பார்த்தால் தெரியும். தென் மேற்குப் பருவக்காற்று வீசும் காலத்தில் அரேபியாவிலிருந்து புறப்பட்டால் நேராக இம்மழவத் தீவுகளை அடைந்து பின்னர் கேரளக் கடற்கரையை அடையலாம் என்பது நன்கு விளங்கும். இன்னும் இம் மழவர்களே தமது நாட்டிலிருந்து கரும்பைக் கொணர்ந்து தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தினராம். இதனை

> அமரர் பேணியும், ஆவுதியருத்தியும்
> அரும்பெறல் மரபின் கரும்பு இவண்தந்தும்
> நீரக இருக்கை ஆழி சூட்டிய
> தொன்னிலை மரபின் முன்னோர்போல
>
> (புறம், 99)

என்கிறார் ஒளவையார். இம்மழவர் குலத்தில் சிறந்து விளங்கிய சிற்றரசனே அதியமான் நெடுமிடல் அஞ்சியென்பான். இவன் பெருஞ்சேரலாதன் தம்மின மக்களைக் குடியேற்றிய பகுதிகளுக்குச் சுதந்திர அரசனாக, அச்சேரலாதன் இறந்ததும், தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டான் பின்னர் இன்றைய தருமபுரி மாவட்டமான தகடூர் நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். தகடூர் இவன் தலைநகரமாயிற்று. இதனைப் பொறுத சேரலாதனின் மகன் இவன் மீது போர் தொடுத்து இவனை வென்றான். (பதிற்றுப்பத்து 4–ஆம் பத்து 2–ஆம் பாடல்) இவ்வாறு மேலைக்கடல் தீவுகளில் இருந்து குடியேறிய இம்மக்களே, மழவர் என்று சிறப்புப் பெற்று பின்னால் தாம் வாழ்ந்த பகுதி மழகொங்கம் என்று பெயர் பெறும் அளவிற்குச் சிறப்புற்றனர்.

**கொங்கர் :**

மேலே சொன்ன மழவர், எயினர், வேட்டுவர், ஆகியோரைத்தவிர கொங்கர் என்ற ஒரு இனத்தவரையும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இக்கொங்கர்களோடு தொடர்புடைய பெயரே கொங்கு நாடு என்பதாகும். இக்

தொங்கர்கள் யார்? அவர்களுக்கும் கொங்கண்யாதி ராஜர்கள் கொங்கணிவர்மன் என்ற மரபுப் பெயரை உடைய மேலைக்கங்க அரசர்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடுமா? என்ற வினுக்களை முன்னர் எழுப்பியிருந்தேன். அவற்றிற்கு விடைகாண்பது இப்பொழுது அவசியமாகிறது.

இக்கொங்கர்களைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் பல வாறு குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் கால் நடைச் செல்வங்களை மிகுதியாக உடையவர்கள் என்ப தையே பெரும்பாலான இலக்கியக் குறிப்புகள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன. இக் கொங்கர்கள் கூட்டங் கூட்டமாக இப்பொழுதைய கொங்குநாட்டுப் பகுதிகளில் குடியேறினர். "கொங்கர் ஆபரந்தன்ன" எனவும், "தொங்கர் படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்" எனவும் குறிப்பிடும் அகநானூற்று வரிகளும்...சிலவூறிய நீர்வாய் பத்தர் கயிறு குறு முகவை மூயின மொய்க்கும் ஆகெழு கொங்கர் (சிறிது தண்ணீரையே உடைய கிணறு களில் நீண்ட கயிறு கட்டிச் சேந்தப்படும் குறுகிய முக வைகளை நெருங்கி நிற்கும் பசுக் கூட்டங்களையுடைய கொங்கர்) என்ற பதிற்றுப் பத்தின் மூன்றும் பத்து வரி களும் இங்கு நோக்கத்தக்கன. இக்கொங்கர்கள் இக் காலக் குடகு மலைநாட்டில் வாழ்ந்த மக்கள் இனத்தவர் என்று அறிஞர் வால் அவுஸ் என்பார் கூறியுள்ளார். தன் கருத்தை உறுதிப்படுத்த அறிஞர் வால் அவுஸ் கொங்கு நாட்டுப் பகுதிகளில் இருந்தும், குடகு மலை நாட்டுப் பகுதிகளிலிருந்தும் அகழ் வாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழி போன்ற பொருட்களில் காணப்படும் ஒற்றுமைகளைக் காட்டுகிருர். இன்னும் கன்னட அறிஞரான கிட்டல் என்பாரும் கொங்கர், கொடகர் என்ற இரண்டு சொற்களும் ஒரே வேர்ச்சொல்லிருந்து தோன்றியவை என்றும் தற்கால குடகு வாழ் பழங்குடி மக்கள் இடையே யும் தொங்கர் குடும்பம் என்ற ஒரு பிரிவு இருப்பதாகவும் குறிப்பிடுகிருர், கொங்குணி அரசர்களுள் ஒருவனை பிருதிவி கொங்கணி வர்மன் என்பவனின் நாகமங்கலம்

செப்பேட்டில் அவ்வம்சத்தின் முதல் அரசனான கொங்கணி வர்மனுக்குக் கொடகணி வர்மன் என்ற பெயரும் இருந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்று கூறும் அவர், கொங் கர்கள் முதலில் குடகு மலைநாட்டில் குடியேறி அதனைக் கைப்பற்றிக் கொண்டனர் எனவும், பிறகு அவ்விடம் விட்டு நகர்ந்து இப்பொழுதைய கொங்கு நாட்டைக் கைப்பற்றிய வுடன் குடகு மலைநாட்டில் வாழ்ந்த எஞ்சிய மக்கள் கொடகர் என்ற புதுப்பெயரை வைத்துக்கொண்டனர் எனவும், இன்றும் அங்கு சிலர் கொங்கர் என்று அழைக் கப்படுவதாகவும் கூறிவிட்டு கொங்குணி அரசர்களாகிய மேலைக்கங்கர்கள் இக்கொங்கர் குடியினரே என்று முடிவு கூறியுள்ளார்.

அறிஞர் கிட்டலின் இம் முடிவில் சிறு மாற்றம் செய்தே அதனை நாம் ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கொண்கான நாட்டவரே கொங்கர் என்பதைக் கொண்டாலும் கொங்குணி அரசர்கள் இக்கொங்கர்களின் குலத்தவரல்லர். அவர்கள் கொங்கர் களைத் துரத்தி விட்டோ அல்லது கொங்கர்களில் பெரும் பாலோர் இன்றைய கொங்கு நாட்டில் குடியேறியதும் எஞ்சியவர்களை அடக்கியோ கொண்கான மலைநாட்டைக் கைப்பற்றிக் கொண்ட வேறு இனத்தவர்களின் வழிவந்த வரோ கொங்குணி அரசமரபினராவர். ஆகவேதான் அக் குலத்து முதல் அரசனாகிய கொங்கணிவர்மன் குடகுமலை நாடுகளின் தலைவன் என்ற தன்னுடைய உரிமையை நிலை நாட்டிக் கொள்ளத் தன்னைக் குடகு நாட்டிற்கு ஆபரணம் போன்றவன் என்ற பொருளில் கொடகணி வர்மன் என்று குறிப்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே கொங் கரோடு கொங்கணி அரச மரபினரை இணைப்பது எவ் விதத்திலும் பொருந்தாது.

கொங்கர்களின் பூர்வீக நாடு கொண்கான நாடு என்ப தாகும். இது அந்நாளில் சேரநாட்டிற்கு வடக்கே மேலைக் கடற்கரைப் பகுதியை ஒட்டி அமைந்திருந்த துளுநாட்டை ஒட்டி கிழக்கே அமைந்திருந்த நாடாகும்.

இந்நாட்டிற்குப் பாழி நாடு என்றும் ஒரு பெயர் இருந்தது. இக் கொண்கான நாட்டின் ஒரு பகுதியாக கொண்கான அரச மரபினரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்ததே துளு நாடாகும். துளு நாட்டிற்குத் தெற்காக அதனை யொட்டி அமைந்து இருந்த நாடே பூழிநாடாகும் காவிரி நதி பிறக்கும் குடகுமலை நாடும் இக் கொண்கான நாட்டினுள்ளே இருந்தது. கொண்கான நாட்டிற்கு அப்பெயர் வரக் காரணமாக அமைந்தது கொண்கான மலை என்னும் ஒரு மலையாகும். இக் கொண்கான மலை குடகு மலையேயாகும். புறநானூறு 154, 155, 156 பாடல்கள் கூறும் கொண்கான மலை பற்றிய வருணனை காவிரி பிறக்கும் குடகு மலைக்கே பெரிதும் பொருந்தியுள்ளது.

பூவிரிக் கடுப்பத்துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவி நின்
கொண்பெருங்கானம்.........( புறம். 154 )

என்ற புறப்பாட்டுவரிகள் கொண்கானம் குளிர்ந்த தண்ணீர் பெருகிவரும் பல அருவிகளை உடைய மலையைத் தன்னகத்தே கொண்டது என்று பொருள் தருதல் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நாட்டை ஆண்ட மன்னனுகப் புறப் பாடல்களில் புலவர் மோசிகீரனாரால் குறிக்கப்படுபவன் கொண்கானங்கிழான் என்பவனாகும். இவன் நன்னன் என்னும் அரசனின் வழிவந்தவன் என்று தோன்றுகிறது. ஏனெனில் நற்றிணைப்பாடல் ஒன்று இந் நன்னனைக் கொண்கான நன்னன் என்ற பெயரிலே குறிப்பிடுகிறது. இக் கொண்கான நன்னன் பத்துப்பாட்டினுள் ஒன்றான மலைபடுகடாமின் பாட்டுடைத் தலைவனாகிய நன்னன் அன்று. அவன் பல்குன்றக் கோட்டத்து செங்கண்மாத்துவேள் நன்னன் என்று குறிக்கப்படுகின்றான். இப்பல்குன்றக்கோட்டம் என்பது வடஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். இதில் இருந்த செங்கண்மா என்னும் ஊர் இன்று செங்கம் என்று வழங்கப்படுகிறது. எனவே இவன் வேறு. கொண்கான நன்னன் வேறு. காலத்தால் இவன் கொண்கான நன்னனுக்கும், கொண்கானங் கிழானுக்கும்

பிற்பட்டவன். ஆயினும் இவனைக் கொண்கான நன்னனின் வழிவந்தவனே எனலாம். இவனும் வேள் என்று குறிக்கப்படுகிறன். கொண்கான நன்னனுக்கும் வேண்மான் என்ற பெயர் உள்ளது. வேண் என்பது வேளாளன் என்பதன் சுருக்கமாகும். மான் என்ருல் மகன். வேண்மான் வேளாளர் மகன் எனவே இருவரும் வேளாளர்களே யாவர். கொண்கான நன்னனைப்பற்றி புறநானூறு, அகநானூறு நற்றிணை பதிற்றுப்பத்து, குறுந்தொகை ஆகிய சங்க நூல்களில் குறிப்புகள் காணப்பட்டாலும் அகநானூற்றிலே இவன் பல பாடல்களில் பேசப்படுகிறன், அப்பாடல்கள் இவன் வரலாற்றையே தெளிவுபடுத்துகின்றன இக்காலத்தே எழில்மலை என்று கேரளாவில் உள்ள ஒருமலையும் எழிற்குன்றம் என்ற பெயரில் இவன் நாட்டினுள் அடங்கியிருந்தது. இவன் நாடான பாழி நாட்டில் மிகப்பழம் வேளாள மூதாதையர் பொன் சேர்த்து வைத்திருந்தனர் என்பதை " நன்னன் அருங்கடிப் பாழி தொல்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்திருப்பான் " என்ற அகம் 258-ஆம் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இக்கொண்கான நாட்டு மக்களே கொங்கர்கள் என்பார். கொங்கர்களும் வேளாளரேயாவர். இதனை அகநானூறு 372-ஆம் பாடல்

பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பின் பாழி ஆங்கண்
வேள் முது மக்கள்......

என்று குறிப்பிடுவதிலிருந்து உணரலாம்.

இன்னொரு அகப்பாடல் பசும்பூண் பாண்டியன் என்பவன் கொண்கான நன்னனது பாழி நாட்டின் மீது படையெடுத்துச் சென்ருன் என்றும், அப்படையெடுப்பிற்கு அதியமான் அரசனை நெடுமிடல் அஞ்சி தலைமை ஏற்றுச் சென்று போரில் கொல்லப்பட்டதைக் கேட்டுக் கொங்கர் விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்றும் கூறுகிறது. ( குறுந். 393, வரிகள். 3-6 ) இதனுலும் கொங்கர் என்பார் கொண்கான நாட்டவரே என்ற கருத்து உறுதிப்படுகிறது.

இக் கொங்கர்கள் மிக்க வலிமை பொருந்தியவர்கள் என்பதை "ஒளிறுவாள் கொங்கர்" (குறுந். 393) ஒண் படைக் கொங்கர் (பதிற். 73) என்று புலவர்கள் புகழ்ந் துள்ளதால் இவர்கள் சேரர்களுக்கு முன்னரும், சேரர்கள் வலிமை குறைந்திருந்த காலத்திலும் சேரர்களுக்குரிய நாடாக விளங்கிய இப்பொழுதைய கோவை, சேலம் மாவட்டப் பகுதிகளையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு ஆண்டு வந்தனர்போலும் இப்பகுதிகளின் தென் எல்லை பாண்டிய நாட்டின் எல்லையாக விளங்கிய தால் பாண்டிய அரசர்களும் கொங்கர்களுடன் எதிர்த்துப் போர் புரிந்து இருக்கின்றனர் எனலாம். இவ்வாறு கொங்கர்கள் இப்பகுதிகளை ஆண்டுவந்த காலங் களில்தான் இங்கு கொங்கர் குடியேறி அந்நாடு களும் கொங்கர் நாடு என்று குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். இதனைப் பிற்காலச் சான்று ஒன்றும் உறுதி செய்கிறது இப்போது கொங்கு நாட்டின் பொள்ளாச்சி தாலூக்காவில் உள்ள ஆனைமலை என்னும் ஊர் நன்னனூர் என்று வழங்கப்பட்டதென ஆனைமலைக்கல்வெட்டு வீரகேரள வளநாட்டு நன்னனூர் என்று குறிப்பதின்மூலம் தெளி வாகிறது (ARE. 214 of 27-28) எனவே கொங்கர்களின் ஆதிக்கம் இதுவரை பரவியிருந்தது என்பது உறுதிப்படு கிறது அல்லவா? இவ்வாறு சங்க நாளில் கொங்கர் நாடு என்று வழங்கப்பட்டதே பிறகு காலப்போக்கில் கொங்கு நாடு எனத்திரிந்தது எனலாமல்லவா? இக்கொங்கர்களைப் பற்றி வேறு பல சங்கப் பாடல்களிலும் குறிப்புகள் காணப் படுகின்றன. "வாடாப் பூவின் கொங்கர் (அகம். 253) என்று ஒருபாடல் உணர்த்துகிறது. இவர்களிடம் மேலைக் கடற்கரையை ஒட்டிய நாடுகள் இருந்தன என்பதை "கொங்கர் குடகடல் ஓட்டிய ஞான்றை என்று புறப்பாட்டு ஒன்று குறிக்கிறது. (புறம். 130) கொங்கர் குடியேறி யிருந்த நாட்டிற்குக் கிழக்கே இருந்த சோழநாட்டு மன்னர் களும் கொங்கரை எதிர்த்துப் போர் புரிந்தனர் என்பதை" கொங்குபுறம் தந்த கொற்றவேந்தே, என்று குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிய புறப்பாடல் ஒன்றும்

குறிக்கிறது. (புறம். 373) கோன்கான நாட்டு மக்களாகிய இக்கோங்கர்களே இன்றைய கொங்கு நாட்டுப் பகுதிகளில் முதன் முதலாகக் குடியேறிய கொங்கு வேளாளர்களின் பூர்வீக முன்னோர்களாவர். கோன்கான நாடு, துளு நாட்டுப் பகுதிகளில் மிகப் பழங்காலத்தில் வாழ்ந்து வந்து பின்னர் இன்றைய கொங்கு நாட்டுப் பகுதிகளில் குடியேறிய இக்கோங்கர்களாகிய வேளாள மக்கள் ஆரம்ப காலத் திராவிடக் குடியேறிகளே என்பதை அறிஞர்கள் பலரும் விளக்கி எழுதியுள்ளார்.[1]

**கோசர்கள் :**

கொங்கர்களைப்போலவே வேற்று மரபினராக சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் இன்னொருசாரர் கோசர்கள் ஆவர். இவர்கள் போர் செய்வதையே தங்களுடைய தொழிலாகக் கொண்டிருந்தவர்போல் தோன்றுகிறது. இக் கோசர்கள் வேற்று நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பார்கள் சில வரலாற்று ஆசிரியர்கள். ஆனால் இவர்கள் வேற்று நாட்டவர்கள் அல்லர். அக்காலக் கொங்கு நாட்டில் அடங்கியிருந்த துளுநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று அறிஞர் மயிலை-சீனி. வெங்கிடசாமி கூறுகிறார் ஆனல் வரலாற்றறிஞர்கள் திரு கே. ஏ நீலகண்ட சாஸ்திரியார் இவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்தவரே என்றும் பின்னல் துளுநாட்டை வென்று அங்கு தமது ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர் என்றும் கூறுகிறார். அசோகரது தர்மசாசனம் ஒன்றில் தமிழ்நாட்டு அரச மரபினரைக் குறிப்பிடும் இடத்தில் சத்ய புத்திரர் என்ற ஒரு சாரார் குறிக்கப்படுவதையும், கோசர்களை சங்க இலக்கியங்களில் சில "வாய் மொழிக் கோசர்" அதாவது உண்மை பேசுவதைத் தமது பண்பாகக் கொண்டவர் என்று குறிப்பிடுவதால் சத்திய புத்திரர் என்பது உண்மை பேசுவதைத் தமது பண்பாகக் கொண்டிருந்த இக்கோசர்களையே குறிப்பிடுகிறது என்று அறிஞர்கள் கருதுகின்றனர் ஆனல்

1. P. R. Srinivasan T. A S. S. I 1955 PP-83-93 and J. D. Cornelius M. A. P L. D. ibid. 1956-57. PP. 13-20

அசோகர் சாசனம் குறிப்பிடும் சத்யபுத்திரர்கள் அதியமான் அரச மரபினரையே என்பதும் சில வரலாற்று அறிஞர் களின் முடிவாக உள்ளது[1] "மேலைக்கங்கர் எனப்படும் கொங்கணி அரச மரபினருள் பிற்காலத்தில் வந்த அரசர் களில் பலர் தம் பெயரோடு சத்யவாக்யர் என்று பெயர் சூடியிருந்ததைக் கருதும் போது இவ்வரசமரபினரின் பூர்வோத்திரம் கோசரிடமே துவங்குவதாக முடிவு செய்து சத்திய புத்திரர் என்பது வாய்மொழிக் கோசர், மெய்ம் மலிக் கோசர் என்பதற்கேற்ப கோசர்களைக் குறிப்பதாகவே கருதலாம். இது எவ்வாறாயினும் கோசர்கள் துளுநாட்டவர் என்று சீனி வெங்கிடசாமி குறிப்பது தவறாகும். அதேபோல கோசர்கள் கொங்கு நாட்டவர் என்று முடிவு செய்வதும் தவறு. அப்படியானல் இக்கோசர்கள் யார்?

நமது முடிவின்படி இக்கோசர்கள் கங்கைச் சமவெளி யில் அலகாபாத்திற்கு அருகே உள்ள கௌசாம்பி நாட்டு வேளாள மக்களேயாகும். கௌசாம்பி நகரத்தை கொச்சை சொல்லில் கோசம்பி என்று குறிப்பிடுவதை பிராகிருதம் கலந்த வடமொழி நடையில் அமைந்த நூல்களில் நாம் காண்கிறோம்.

மேலும் இக்கௌசம்பி நகரம் இன்று கோசம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. எனவே கௌசாம்பி நாட்டவ ரான கௌசாம்பியரே கோசம்பியர் என்று குறிக்கப்பட்டு பேச்சு வழக்கில் கோசராகி இருக்கவேண்டும். அல்லது வட இந்திய கோசல நாடு மௌரியர் காலத்தில் தன் உரிமையும் சிறப்பும் இழந்து சிதறுண்டு போனபிறகு இக்கோசல நாட்டு மக்களுள் ஒரு பிரிவினர் மௌரியர்களின் ஏவுதலின் பேரில் அவர்களது முன்னணி வீரர்களாக தென் பகுதியில் குடியேறி யிருத்தல் கூடும்.

1 Bulletin of the School of Oriental ond African Studies (London) XII-1948 PP 136-137 and 145-147.

அகநானூறு 251–ஆம் பாடல் நமது இந்த முடிவிற்கு வலுவான சான்று தருகிறது. இப்பாடலைப் பாடியவர் மாமூலனார் என்ற புலவர் ஆவர். இவரது வேறு பல பாடல்களிலும் இவர் பல வரலாற்றுக் குறிப்புகளைத் தருவதாலும் நந்தர் முதலிய வடநாட்டு அரசர்களைப் பற்றியும் கூறுவதாலும் அக்காலத்தே நாட்டு வரலாற்றை நன்கு அறிந்திருந்த புலவர் பெருமகனார் இவர் என்ற கருத்துடன் இவர் கூறும் செய்திகளை நாம் சிறந்த வரலாற்றுக் குறிப்பாகக் கொள்ளலாம். மோகூர் என்னும் ஊரின் தலைவனாக இருந்தவன் பழையன் என்பவன். மோகூர் அரசன் பணிய மறுத்தால் தமக்கு ஆதரவாக விளங்கிய மௌரியப்படை வீரர்களை உதவிக்கு அழைத்து வந்தனர். அப்போது மௌரியர்களுடைய தேர்ப்படை வருவதற்காக மலைப்பகுதியை சிதைத்துப் பாதை அமைத்தனர் என்று மாமூலனார் குறிப்பிடுகிறார்.

> துனைக்காலன்ன புனைதேர்க் கோசர்
> தொன்மூதாலத் தரும் பணைப் பொதியில்
> இன்னிசை முரசங்கடிப்பிகுத்திரங்கத்
> தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
> பணியாமையிற் பகைத்தலை வந்த
> மாகெழுதானை வம்ப மோரியர்
> புனைதேர் நேமி உருளியக்குறைத்த
> இலங்கு வெள்ளருவிய அறைவாயும்பர்
>
> (அகம், 251 : 7—14)

இதிலிருந்து கோசர்கள் மௌரியர்களைச் சார்ந்திருந்தவர் என்ற செய்தி புலப்படுகிறது இதே மாமூலனார் அகநானூறு 281 ஆம் பாடலிலும் மௌரியர் தென்திசை மலைப்பகுதிக்கு படையுடன் வருவதற்கு வடுகர் முன்னின்று உதவினர் என்றும் படைகள் வருவதற்கு இடையிலுள்ள மலைப் பகுதிகளைச் சிதைத்துப் பாதை அமைக்கப்பட்டது என்றும் குறிப்பிடுகிறார்.

முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு

என்று கூறிச்செல்கிறது இப்பாடல்.[1] எனவே கோசர்களின் சார்பில் மௌரியப்படை தமிழகம் வந்தது என்ற செய்தி உறுதியாகிறது. இந்த மௌரியர் படையெடுப்பு எப்பொழுது நிகழ்ந்தது? மௌரியர் என்பவர் சந்திர குப்தர், அசோகர் முதலியோரா? அல்லது பிற்கால மௌரியரா? என்ற கேள்விகளுக்கு விடை காணல் வேண்டும். மௌரிய அரசர்களில் சந்திரகுப்தரின் மகனுன பிந்துசாரன் என்பவன் காலத்தில் தமிழகத்தைத்தவிர ஏனைய பாரதநாட்டுப்பகுதிகள் அனைத்தும் மௌரியர் ஆதிக்கத்தின் கீழ் வரவில்லை. இதற்குக்காரணம் மௌரியர் படையெடுப்பை முறியடிக்க தமிழ்நாட்டு அரசர்கள் தமக்குள்ள ஒரு கூட்டணியை அமைத்துக் கொண்டிருந்தனராம். இச்செய்தியை கி. மு. 165 ல் கலிங்க அரசனுகப் பொறுப்பேற்ற காரவேலன் என்பானின் கல்வெட்டு உணர்த்துகிறது இக்கூட்டணி 113 வருடகாலமாக இருந்துவந்ததாகவும், தானே அதனை உடைத்து வெற்றி பெற்றதாகவும் கூறிக் கொள்கிருன். இவ்வாறு கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு மௌரிய ஆதிக்கத்தை எதிர்த்து நின்றதினுல்தான் போலும். மௌரியர் ஆதிக்கம் தமிழகத்தில் வேரூன்றவில்லை. ஆயினும் கோசர்களுக்கு உதவுவதன் மூலம் மௌரியர் இந்தக் குறையைப் போக்கிக்கொண்டு இருத்தல் வேண்டும். போரில் வெற்றிகொள்ளமுடியாத தமிழகத்தைத் தந்திரத்தால் வெல்லக்கருதித் தமிழரசர்களின் கூட்டணியை உடைத்து முறியடிக்க கோசர்களைத் தமிழகத்தில் குடியேறும்படி மௌரிய அரசன் ஏவி இருத்தல் வேண்டும். இந்த நோக்கத்துடனே கோசர்கள் தமிழகத்திற்கு வந்து இருக்கின்றனர். அவர்கள் வந்து குடியேறுவதற்கு ஏற்ற இடமாக கொண்கான நாட்டின்

---

1 இதே செய்தியை வேறு சில சங்கப்பாடல்களும் குறிக்கின்றன, அகம். 69. 10-12 வரிகள். புறம். 175. 5-12 வரிகள்.

வடப்பகுதியே இருந்தமையால் முதலில் அங்கு வந்து குடியேறினர் எனலாம்.

போர் மறவர்களாகத் தமிழகம் வந்த இவர்கள் முதலில் தமிழ் மன்னர்களின் போர்களிலெல்லாம் பங்கு கொண்டு தம்மைச் சேர்த்துக் கொண்டவர்களுக்கு வெற்றி வாங்கித் தந்து அவர்கள் ஆதரவைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாறு தமிழரசர்களின் ஆதரவைப் பெற்று கொங்குப் பகுதியில் வலுவாகக் காலூன்றிக் கொண்ட கோசர்கள் பின்னல் தமக்கென அரசு ஏற்படுத்திக் கொள்ளவும் முயன்றனர். அதற்கு மௌரியர்கள் அவ்வப்போது உதவி செய்து வந்தனர் என்று சொல்லலாம். இ த னை யே மாமூலனர் தமது பாடலில் தெளிவாகக் குறிப்பிடுகிருர். இம் முயற்சிக்குப் பிற்காலத்தில் ஆந்திரநாட்டில் பேரரசை ஏற்படுத்திக் கொண்ட வடுகர்களாகிய ஆந்திரர்களும் உதவியாக இருந்தனர். ஆந்திரநாடு அக்காலத்தே மௌரியர் ஆட்சியின் கீழ் இருந்தமையால் அந்நாட்டைச் சேர்ந்த வடுக வீரர்கள் மௌரியப் படையின் முன்னணிப் படையில் இருந்தார்கள் என்று மாமூலனர் கூறுவது சரியானதாகவே உள்ளது. எனவே இந்திய அரசியல் ஒருமைப் பாடு எண்ணம் மௌரிய அரசர்கள் காலத்திலே ஏற்பட்ட ஒன்று என்பதும் பாடலிபுத்திர அரசு தமிழ் நாட்டில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சிகளில் அக்கறை உடையதாக இருந்தது என்பதும் நமக்கு விளங்குகின்றன.

இவ்வரலாற்று முடிவு ஒருபுறமிருக்க அரசியற் காரணங்களுக்காகத் தென்னுட்டில் குடியேறிய இக் கோசர்கள் தாம் வந்த அரசியல் காரணங்களில் ஓரளவு வெற்றியே பெற்றுலும் அதிக மக்கள் தொகை இல்லாத பகுதிகளில் முதலில் வசதியாகக் குடியமர்ந்து கொண்டனர். சேரநாட்டு அரசமரபினரிடையேயும், மற்றும் அதியமான், கொண்கான அரசர்கள், புன்னுட்டு அரசர்கள் போன்ற சிற்றரசர்களிடையே அடிக்கடி எழுந்த பூசல்களும் கோசர்கள் அப்பகுதியில் நிலை பெற்றுத் தங்கிவிட வாய்ப்பாக


அமைந்தது. இந்தக்கால எல்லைக்குள் வடநாட்டில் மௌரியர் ஆதிக்கம் வலுவிழந்து வேறு பல அரசுகளும் தோன்றி விட்டதால் நாளடைவில் கோசர்கள் தாம் குடியேறிய பகுதிகளில் நிலையாகத் தங்கி விட்டனர்.

**கொங்கு வேளாளர்கள் :**

சென்னையிலிருந்து வெளிவரும் '' கொங்கு '' என்னும் மாதப் பத்திரிக்கையின் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாத இதழில் புலவர் அமரர் குழந்தை தமது வேளாளர்கள் என்ற கட்டுரையில் கொங்கு வேளாளர்கள் வெளி மாநிலங் களிலிருந்து குடியேறியவர்கள் அல்ல. கொங்கு நாட்டு மக்களே என்று பல சான்றுகளை எடுத்துக்காட்டி எழுதியுள் ளார். அதே இதழில் புலவர் குழந்தையின் கருத்தை மறுத்து கொங்கின் ஆசிரியரும் எனது நண்பருமான புலவர் செ. இராசு கொங்கு நாட்டின் பழங்குடி மக்கள் வேட்டுவர் முதலாயினரேயென்றும், வேளாளர்கள் தொண்டை நாட்டி லிருந்தும், சோழ நாட்டிலிருந்தும் வந்து காவிரி, அமராவதி நொய்யல், பவானி ஆற்றங்கரைப் பகுதிகளில் குடியேறிய வர்கள் என்றும் இவ்வாறு குடியேறிய வேளாளர்களே கொங்கு வேளாளர்கள் என்றும் கூறியுள்ளார். புலவர் இராசு தனது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டும் சான்றுகள் அனைத்தும் சமீப காலத்தவையே மேலும் சோழ நாட்டி லிருந்து குடியேறியவர்கள் என்று கருதப்படும் கொங்கு நாட்டில் வாழும் வேளாள மக்கள் தாங்கள் சோழிய வேளாளர்களே என்றே கூறிக் கொள்வதாக எனக்கு பல அன்பர்கள் கடிதம் எழுதினர். இன்னும் புலவர் இராசு கூறியுள்ள கருத்துப்படி பார்த்தால் கொங்கு நாட்டுப் பகுதியில் ஆதியில் வேளாளர்களே இல்லையென்று என்று ஆகிவிடும். எனவே பிற்காலச் சான்றுகளை மட்டும் ஆதார மாகக் கொண்டு நாம் கொங்கு வேளாளர்கள் அனைவரும் பிற்காலத்தில் குடியேறியவர்களே என்று முடிவு செய்ய கூடாது. அதே சமயத்தில் குடியேற்றமே நிகழவில்லை என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் தமிழகத்தில் மிகப்

பழங்காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதிகள் ஜனநெருக்கம் மிகமிகக் குறைவாக இருந்த பெருங்காட்டுப் பிரதேச மாகவே இருந்தன எனவே இத்தகைய பகுதிகள் இயற் கையிலே காடு திருத்தி நாடாக்கி, மக்கள் குடியேறி வாழ்வதற்கு இடங்கொடுப்பதாகவே இருக்கும். இது காலங் காலமாக வரலாறு கண்ட உண்மை. ஆகவே குடியேற்றம் மிகப் பழங்காலத்தில் நிகழ்ந்துள்ளது என்று கூறலாம். கொங்கு நாட்டுப் பகுதிகளில் முதன் முதலில் குடியேறிய வேளாள மக்கள் கொண்கான நாட்டுக் கொங்கர்களே என்று கூறப்பட்டது இக்குடியேற்றம் எப்பொழுது துவங்கி யிருக்கும் என்று முடிவாகக் கூற முடியாது. ஆயினும் பெரும்பாலும் குடியேற்றங்கள் கொங்கு நாட்டின் வடபகுதி வழியாகவே நிகழ்ந்திருத்தல் கூடும் ஆனல் அவற்றுள் சில நேராக வடபகுதியிலிருந்து தெற்காகச் சேர நாட்டிற் குள் (கொங்கு நாடு) நிகழாமல் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மேல்புறமாகத் தெற்கு நோக்கி நிகழ்ந்து பின்னர் பாலக்காட்டு கணவாய் வழியாக இப்பொழுதைய கொங்கு நாட்டின் மத்தியப் பகுதியிலும் நிகழ்ந்திருக்கிறது. முதலில் சிலவாகச் சாதாரணமாக ஆரம்பித்தக் குடியேற்றம் பிறகு கோசர்கள் துளு நாட்டையும் பிறகு சிறிது சிறிதாக கொண்கான நாடு முழுவதையும் தம் வசப்படுத்திக் கொண்டு அங்கு நிலையாகக் குடியேறியதும் அக்கொண் கான நாட்டிற்குரியவராக விளங்கிய கொங்கர்கள் பெரு மளவில் இன்றைய கொங்கு நாட்டுப் பகுதியில் குடி யேறினர். சேர அரசர்களில் சேர நாட்டின் வடக்குப் பகுதியை ஆண்ட அந்துவஞ்சேரல் மரபினர் (இரும்பொறை மரபு) கொண்கான நாட்டு வேளாளமக்களுடன் நட்புடன் விளங்கி வந்ததால் கொங்கர்கள் அப்பகுதிகளில் குடி யேறுவது எளிதாக இருந்தது. இவ்வாறு குடியேறியவர்கள் கூட்டங் கூட்டமாகவே குடியேறினர் இவர்களுள் சிலர் ஏராளமான கால்நடைச் செல்வங்களையும் உடையவராக இருந்தனர். பெருஞ் செல்வந்தர்களாக விளங்கினர்.

இவர்கள் கொங்கு நாட்டுப் பகுதிகளில் குடியேறத் துவங்கியபோது அங்கு சிறுபான்மையினராக வாழ்ந்து வந்த பூர்வீக மக்களிடமிருந்து எதிர்ப்புகள் நிறைய இருந்தமையால் அவ்வெதிர்ப்புக்களைச் சமாளிக்க அவர்கள் ஆரம்ப கட்டத்தில் தமது உழவுத் தொழிலைக் கைவிட்டு போர்த் தொழிலை மேற்கொண்டு அதிலே அதிகம் கவனம் செலுத்தினர். ஆயினும் காலப்போக்கில் இந்நிலை மாறிவிட்டது காரணம் முன்னர் குறிப்பிட்டபடி முரண்படும் அரசர்களுக்கு படை உதவி செய்து வெற்றி வாங்கித் தந்ததும், சமாதானமுறையில் பூர்வீக மக்களின் பழக்கவழக்கங்களைத் தாமும் மேற்கொண்டும், அவர்களோடு மணவினை உறவு பூண்டும் தமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டதுமேயாகும். கொங்கு நாட்டுப் பகுதியின் பூர்வீக மக்களோடு இவர்கள் இவ்வாறு ஒத்துப் போய்விட்டதால் காலப்போக்கில் இவர்கள் அந் நாட்டு மக்களாகவே மாறிவிட்டனர். வேறுபாடு தெரிவதற்காக மற்றைய பகுதி வேளாள மக்களுக்கு இல்லாத கூட்டமுறை கொங்கு வேளாளருக்கு மட்டும் ஏற்பட்டது. இக்கூட்டமுறை மக்கள் கூட்டங் கூட்டமாகக் குடியேறிய போது ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவனாக இருந்தவனின் பெயரை அடியொற்றியோ அல்லது அவர்கள் குடி பெயர்ந்து வந்த நாட்டின் பெயராலோ, அக்கூட்டத்தினருள் சிறப்புப் பெற்றிருந்த ஒரு அரசனின் பெயராலோ, புகழ் சுமந்த பெரியோனின் பெயராலே ஏற்பட்டவைகளே. இதனை நுணுகி ஆராயாது பிற்காலத்தவர்கள் கொங்கு வேளாளரின் கூட்ட முறையை பிராமணர்களின் கோத்திர முறையோடு ஒப்பிட்டுக் காட்டினர் (உ-ம்) சாத்தந்தை கோத்திரம், கண்ணந்தை கோத்திரம்)




தமிழகம் – கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகளில்.

## அத்தியாயம்-3

# அரசியல் நிலை.

சென்ற அத்தியாயத்தில் நாம் கண்ட மக்கள் குடியேற்றமும், பூர்வீக மக்களுடனுன கலப்பும் நிகழ்ந்தபோது கொங்கு நாட்டுப் பகுதியில் நிலவிய அரசியல் சூழ்நிலையை இந்தக் கட்டத்தில் சுருக்கமாகக் காணுதல் அவசியம்.

**கொங்கர் நாடு :**

தமிழகத்தின் நடுப்பகுதியாக விளங்கிய பழங் கொங்கு நாட்டின் வரலாற்றில் அந்நாட்டிற்கு அப்பெயர் வருவதற்குக் காரணமாக இருந்த கொங்கான நாட்டவர்களான கொங்கர்களே முதன் முதலில் இடம்பெற்றிருந்தனர். இதைக் கவனிக்கும்போது வடக்கே குடகுமலை நாட்டிலிருந்து தெற்கே பாண்டிய நாட்டின் வட எல்லையாக விளங்கிய பழனி மலைநாடு வரை தமிழகத்தின் நடுப்பகுதி கொங்கர்கள் நாடாகவே இருந்து இருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. ஆயினும் இத்தனை பெரிய நிலப்பரப்பிலும் தொடர்ச்சியாக அந்நாளிலே மக்கள் குடியேற்றம் அமைந்திருக்கவில்லையாதலால் பெரும் பகுதி பயனற்ற கானகமாக இருந்தது என்றே சொல்லலாம். இக்கானகப் பகுதிகளில் எல்லாம் வேட்டையாடுந் தொழிலை மேற் கொண்டிருந்த வேட்டுவ இனத்தவரே வாழ்ந்து வந்தனர். கொங்கர்களாகிய வேளாளர்களும், ஆயர்களும் உழுது பயிர் செய்யக் கூடிய நிலப்பகுதிகளிலும், புல்வெளிகள் நிறைந்த பகுதிகளிலும் குடியேறியிருந்தனர். இக்குடியிருப்புகள் அனைத்தும் சிற்றரசுகளாக இருந்தன. ஒவ்வொரு சிற்றரசும் ஒரு சிறு கிராம அளவினதே. இவ்வனைத்துச் சிற்றரசுகளும் சுயேச்சையாக இயங்கினவா அல்லது கொண்கான நாட்டின் தலைமை அமைந்திருந்த பாழி நாட்டை ஆண்டகொண்கான நன்னன் மரபினரது ஆட்சிக்குட்பட்டு விளங்கினவா என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. ஆயினும் சங்க

இலக்கியங்களில் ஆங்காங்கே குறிப்பாகச் சொல்லப்படும் செய்திகளிலிருந்து இச் சிற்றரசுகள் தனித்தே இயங்கின என்றும் அதே சமயத்தில் தமது மரபின் நலேமை பூண்டிருந்த கொண்கான அரச மரபினரோடு பகை கொள்ளாது நட்புடனே விளங்கின என்றும் கொள்ள இடமிருக்கிறது. இந்த நாட்டுப் பகுதிகளும் கொங்கர் நாடு என்றே பெயர் பெற்று இருந்தன. கொண்கான நாட்டிற்குள் அடங்கி மேலேக் கடற்கரையை ஒட்டியதாக துளுநாடு விளங்கிற்று. துளுநாட்டிற்கும் கொண்கான நாட்டிற்கும் வடக்கேயிருந்த நாடுகள், (இதில் துவார சமுத்திரமும் அடங்கும்.) அசோகரது காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ கோசர்களின் வசமிருந்தன. கொங்கர் நாட்டிற்குக்கிழக்கே சோழர்களும்,தெற்கே பாண்டியர்களும் மேற்கே மேலேக்கடற்கரையை ஒட்டிச் சேரர்களும் ஆண்டு வந்தனர். இம் மூவேந்தருமே சமயம் வாய்த்த போதெல்லாம் கொங்கர் சிற்றரசுகளே உடைத்து அச்சிறு சிறு நாட்டுப் பகுதிகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயற்சித்தனர். ஆனல் இம்முயற்சிக்குப் பெருந் தடையாக் கொண்கான அரசின் மேலாதிக்கம் விளங்கியிருந்திருக்க வேண்டும். மேலும் கானகப் பகுதிகளில் வாழ்ந்து வந்த வேட்டுவர்களும் கொங்கர்களுக்கு ஆதரவாளர்களாகவே விளங்கி மூவேந்தர்களின் முயற்சிகளைத் தேக்கி வந்தனர். ஆயினும் இந்த நிலே தொடர்ந்து நீடிக்கவில்லே. கி பி. முதல் நூற்றுண்டின் இறுதிப் பாதியிலே சேர வேந்தர்களால் கொங்கர் நாட்டின் பெரும் பகுதிகள் கைப்பற்றப் பட்டன.

**சேரர்கள் :**

கொங்கர் நாட்டிற்கு மேற்கே அரபிக்கடற்கரையை ஒட்டி அமைந்திருக்கும் இன்றைய கேரள நாட்டுப்பகுதியையே பழங்காலத்தில் தமிழ் மூவேந்தர்களுள் ஒருவரான சேர மரபினர் ஆண்டு வந்தனர். இவர்கள் அசோகர் காலத்திற்கும் முன்பிருந்தே அப்பகுதிகளே ஆண்டு

வந்திருக்க வேண்டும், எனவேதான் அசோகரது தர்ம சாசனங்களிலும் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். ஆயினும் சேரர் என்றும், கேரளபுத்த என்றும் தனித்தனியாகக் குறிப்பிடப்படுவதுதான் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. எவ்வாறாயினும் சேரர்கள் அப்பழங்காலத்திலிருந்தே சிறப்புற்றிருந்தனர். ஆனால் சேரர்கள் என்ற பெயர்குறிப்பைக் கொண்டு இவர்கள் வேறு ஏதோ ஒரு கடல் கடந்த பிரதேசத்திலிருந்து தமிழகத்தின் மேலைக் கடற்கரை நாடுகளை வந்து அடைந்தவர், (சேர்ந்தவர்) என்று ஊகிக்கமுடிகிறதுகடல் கடந்து வந்து சேர்ந்தவர் சேரர் எனப்பட்டிருக்கலாம் அல்லவா? பதிற்றுப்பத்தின் பாடல்கள் தரும் குறிப்பிலிருந்து இவர்கள் அதிகம் ஆரியச் சார்புடையவர்களாகத் தோன்றுவதால் ஆரியர்களின் பூர்வீக நாட்டிலிருந்தே மேலைக்கடல் வழி வந்து சேர்ந்தவர் என்று கொள்ளவும் இடமிருக்கிறது.

சேரர்களின் துவக்க காலவரலாற்றில் நமக்குத்தெரிந்த வரையில் உதியஞ் சேரலாதன் என்பவனே சேர அரசர்களுள் முதலாமவனாகக் காணப்படுகிறான். இவன் தந்தை ஆதன் சேரல் என்று வைத்துக்கொள்ளலாம் இந்த உதியர் சேரலுக்கு அந்துவஞ் சேரல் என்ற ஒரு தம்பியும் இருந்தான். இவன் காலத்தே சேரநாடு, குடநாடு, குட்டநாடு என்ற இரண்டு பிரிவாக இருந்தது. குடநாடு என்பது தென்பாதி. குட்டநாடு என்பது வடபாதி இவை இரண்டிற்கும் உதியஞ் சேரலாதனே அரசனாக விளங்கினான். இவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இவர்களுள் மூத்தவனான நெடுஞ் சேரலாதனே உதியஞ் சேரலுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தான். இவனே புகழ்பெற்ற இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் ஆவான். இவன் காலத்திலே சேரநாடு பேரளவிற்கு விரிவுபடுத்தப்பட்டது சென்ற அத்யாயத்தில் மழவர்களைப்பற்றிக் கூறப்பட்ட இடத்தில் குறிப்பிட்ட மழைத்தீவாகிய லட்சத்தீவு, மாலத்தீவுகளின் அரசனும் அவனைச் சார்ந்தோரும் இவனுடைய ஆட்சி காலத்திலே கடல் கொள்ளை முதலிய கொடுஞ்செயல்களில் ஈடுபட்டு

சேரர்களின் புகழ்பெற்ற கடல் வாணிபத்திற்கு பெருந் தொல்லையளித்து வந்தனர். இவர்களையே நெடுஞ்சேரலாதன் பெரும்கடற்படையுடன் அவர்கள் தீவிற்கே சென்று அவர்களை அடக்கி நெறிப்படுத்தியதோடு அத்தீவுகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்தான். தொடு வானத்தின் பகுதிபோல் விளங்கிய அத்தீவுகளை தன் கீழ்க் கொண்டுவந்தாலேயே வான வரம்பன் என்று தன்னைக் குறித்துக் கொண்டான். இவனுடைய தலை நகராக விளங்கிய ஆதி கருவூர் இன்றைய கேரளப் பகுதியில் உள்ள திருவஞ்சைக்களமாகிய வஞ்சியே ஆகும். துறைமுகப்பட்டினம் முசிறியாகும் இவ்விரண்டு ஊர்களும் குடநாடாகிய தென்பாதிச் சேர நாட்டிலேயே அடங்கியிருந்தன. வடபாதி நாடான குட்ட நாட்டிற்குத் தன் தம்பியை சிற்றரசனாக நியமித்திருந்தான். நெடுஞ் சேரலாதன் இவன் இயற்பெயர் யாதாக இருந்திருக்கு மெனத்தெரியவில்லை. ஆயினும் குட்ட நாட்டிற்கு அரசனாக் ஆனமையால் குட்டுவன் என்ற குறிக்கப்பட்டான் போலும். இவன் வழிவந்தவரன்றி இக்குட்ட நாட்டிற்குப் பின்னால் அரசனாக ஆள அனைவரும் குட்டுவன் என்றே குறிக்கப் பட்டனர் நெடுஞ்சேரலாதனின் தம்பியான முதல் குட்டுவன் குட்டநாட்டின் அரசுப்பொறுப்பை ஏற்றுசில ஆண்டுகள் கழிந்த பிறகு தன் சிற்றப்பனும், உதியஞ் சேரலின் தம்பியுமான அந்துவஞ் சோலையும் துணை சேர்த்துக்கொண்டு சேரநாட்டிற்குக்கிழக்காக அதாவது மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்கே கொங்கர் வசமிருந்த பகுதிகளை அதாவது கொங்கு நாட்டில் சேலம் கோவை மாவட்டங்கள் அடங்கிய பகுதிகளை அவ்விடங்களில் ஆண்ட கொங்கர் சிற்றரசர்களை வென்று கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு கைப்பற்றிய பகுதிகளில் இன்றைய திருச்சி மாவட்டத்தில் அடங்கியுள்ள கருவூர் உட்பட்டு இருக்கவில்லை. அது சோழர் வசமிருந்தது. பின்னர் சோழர்களை வென்றே கருவூர் சேர நாட்டோடு இணைக் கப்பட்டது. அத்துடன் நன்னனின் துளுநாட்டிற்குத் தெற்காக குட்டநாட்டை அடுத்திருந்த பூழி நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். இன்னும் அகப்பா என்னும்

மலையரண் ஒன்றையும் கைப் பற்றினன் என்று இவன்மீது பாடப் பட்ட பதிற்றுப்பத்து மூன்ரும் பத்தின் பதிகம் கூறுகிறது. இந்த அகப்பா மைசூர் மாநிலத்தில் மைசூருக்குத் தெற்காக அமைந்திருந்த ஒரு மலையரண் என்று தெரிகிறது. இவன் இவ்வாறு கைப்பற்றிய பகுதிகளில் யானைகள் நிறைந்த ஆனைமலைப் பகுதியும் அடங்கியிருந்த தால் இவன் தன்னைப் பல்யானை செல்கெழுகுட்டுவன் என்று கூறிக் கொண்டான் பூழி நாட்டைக் கைப்பற்றியதால் பூழியர் கோ எனப்பட்டான். இவ்வாறு இவன் கைப்பற்றிய நாடுகளில் ஒரு பகுதியை அதாவது இன்றைய சேலம் மாவட்டப் பகுதியை மட்டும் தனக்கு உதவிய அந்துவஞ் சேரலுக்குக் கொடுத்து விட்டான். இதனை மூன்ரும் பத்தின் பதிகம்.

மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பிற் மண் வகுத்தீத்து —

அதாவது' தன் மரபில் வந்த முதியவனை (அந்துவஞ் சேரலை) ஆதரித்து அவனுக்குத்தான் கைப்பற்றிய நிலப்பகுதிகளில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்து'' என்கிறது. அந்துவஞ் சேரலுக்குக் கொடுத்த இப்பகுதி சிறு சிறு மலைகளைக் கொண்ட நாடாக இருந்தமையால் அது பொறைநாடு (பொறை = சிறு மலைகள்) எனப்பட்டது. இப்பொறை நாட்டையாண்ட அந்துவஞ்சேரலின் மரபினர் பொறையர் எனப்பட்டனர். ஆக பொறைநாடு என்பது கொங்கர் நாட்டின் ஒரு பகுதியேயாகும். குட்டுவனல் கைப்பற்றப் பட்ட கொங்கர் நாட்டின் பகுதி கிழக்கே ஏறக்குறைய கொல்லிமலைவரை பரவியிருந்தது இப்பகுதிகளிலும் தமக்கு ஒரு தலைநகரம் இருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்த இமய வரம்பன் தனது தலைநகரமான கருவூரின் பெயரிலே அதே போல வஞ்சி என்ற மறு பெயருடன் ஒரு தலைநகரை நிறுவினுன் இதுவே இன்றைய திருச்சி மாவட்டக் கருவூராகும்.[1] இப்பெரும்பகுதி மூத்த வழிச் சேர மரபினரிடமே அதாவது நெடுஞ்சேரலாதனின் மேலதிக்கத்திலே இருந்து வந்தது.

---

1 மழைத்தீவினர் என்பதன் சுருக்கம் மழவர் ஆகி மழவர் ஆயிற்று.

கொங்கர்களிடமிருந்து இன்றைய கொங்கு நாட்டை முதன் முதலாக குட்டுவனே கைப்பற்றினன் என்பதை இவன் மீது பாடப்பட்ட பதிற்றுப் பத்து மூன்றும்பத்தின் வரிகள் தெளிவாக உணர்த்துகின்றன. கொங்கர்கள் பசுக்கூட்டங்களை நிறைய உடையவர்கள் என்பதையும் இதே வரிகள் தெளிவு படுத்துகின்றன.

ஆகெழு கொங்கர் நாடகப்படுத்த
வேல்கெழுதானை வெருவரு தோன்றல்

(பதிற்-3, பாடல் 3, வரிகள் 16-17)

என்பதே அவ்வரிகள். இவ்வாறு கைப்பற்றி அந்துவனுக்கு ஒரு பகுதியைக் கொடுத்து தான் கைப்பற்றிய எஞ்சிய பகுதிகளுக்கும் குட்ட நாட்டிற்கும் அரசனாக விளங்கிய இக்குட்டுவன் 25 ஆண்டுகளே ஆண்டான் எனவும், பிறகு துறவியாகிக் காடு சென்றான் என்றும் 3ஆம் பத்து பதிகம் கூறுகிறது எவ்வாறாயினும் இவனது ஆட்சி நெடுஞ் சேரலாதன் காலமாவதற்குப் பல ஆண்டுகள் முன்னதாகவே முடிந்து விட்டது.

குட்டுவனின் ஆட்சிகாலம் முடிவுற்ற சில ஆண்டுகளுக்கு பிறகு அந்துவஞ்சேரல் இறந்ததும் பொறை நாட்டிற்கு மட்டும் சிற்றரசனகப் பொறுப்பேற்ற இவன் மகன் செல்வக் கடுங்கோ வாழியாதன் குட்டுவன் ஆண்ட நாடுகளிலிருந்து பூழி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். இதற்குக் காரணம் இரும்பொறை அரசர்களுக்கு எனத் தனியாக துறைமுகம் இல்லாதிருந்ததும் ஒன்றாகும். எனவே பூழி நாட்டைக் கைப்பற்றி அதிலிருந்த தொண்டிப் பட்டினத்தை செல்வக் கடுங்கோ தன் துறைமுகமாக்கிக் கொண்டான். இத்துறைமுகத்தின் வழியே யவனர், உரோமர் முதலியோர் இரும்பொறை அரசர்களுடனும் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டனர் செல்வக் கடுங்கோ 25 ஆண்டு ஆண்டதாக பதிற்றுப் பத்து கூறுவது இவ்வாறு இவன் பூழி நாட்டையும் கைப்பற்றி சுயேச்சை எய்திய ஆண்டிலிருந்தே கணக்கிடத் தக்கது. பிறகு சிறிது

சிறிதாகக் குட்ட நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு இவன் சிறிது சிறிதாக வலுப்பெற்று வந்ததைச் சங்க நூற்பாடல்களும் குறிக்கிறது.[1] பிறகு கி. பி. 113 வாக்கில் நெடுஞ்சேரலாதன் மீது சோழன் வேல் பஃறடக்கை பெருவிறற்கிள்ளி படையெடுத்து வந்து கருவூருக்கண்மையில் எதிர்த்தான் இப்போரில் சோழனுடன், நெடுஞ்சேரலாதனும் இறந்து பட்டான். இந்த நிகழ்ச்சியைக் கண்டு பரணரும், கழாஅத்தலையாரும் இருவரும் இறந்து பட்டதால் இனி நாடு என்னுகுமோ என்று வருந்திப் பாடியிருப்பதிலிருந்து இப்போருக்குப் பிறகு வரலாற்றில் ஒரு பெருந் திருப்பம் இருக்கக் கூடும் என இப்புலவர்கள் எதிர்பார்த்தனர் என்பது நன்கு விளங்கிறது.[2] இம்மாற்றத்திற்கு காரணமாக இருந்தவன் செல்வக் கடுங்கோவேயாவன் நெடுஞ்சேரலாதன் சோழனுடன் இறந்து போன கையோடு இவன் கொங்குப் பகுதிச் சேர நாட்டின் மீது பாய்ந்து கருவூர் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு விட்டான். கருவூரையே தனது முதல் தலைநகரமாகவும், பூழி நாட்டிலுள்ள மாந்தையை இரண்டாவது தலைநகரமாகவும் ஆக்கிக் கொண்டான். ஆக இவன் காலமுதல் கொங்கு கருவூர் இவர்களது தலைநகரமாகியது. எனவேதான் இவனையும், இவன் வழிவந்தோரையும் புகழ்ந்து பாடும் சங்கப்பாடல்களில் மட்டும் சேரர்களது தலைநகரமாகிய கருவூர் ஆன்பொருநை (அமராவதி) கரையில் உள்ளதாகக் குறிக்கப் படுகிறது. இவன் முதன் முதலாகக் கருவூரைக் கைப்பற்றிக் கொண்டதால் இவன் கருவூரேறிய ஒள் வாட் கோப்பெருஞ் சேரலிரும் பொறை என்று புலவர்களால் புகழப்பட்டான். இச்செய்திகள் அனைத்தையும் இவன் மீது பாடப்பட்ட பதிற்றுப்பத்து வரிகள் பின் வருமாறு தெளிவுபடுத்திக் கூறுகின்றன

---

1 புறம். 8. வரிகள் 2-5

2 புறம். 62-63.

குன்று நிலை தளர்க்கு முருமிற் சீறி
ஒரு முற்றிருவர் ஓட்டிய ஒள்வாட்
செரு மிகு தானை வெல் போரோயே

(பதிற். 7. மூன்றும் பாடல் வரி 10-13)

இதில் குறிக்கப்படும் ஒரு முற்று இருவர் சோழன் கிள்ளியும் நெடுஞ்சேரலாதனுமேயாவர். ஒள் வாட் (ஒளி பொருந்திய வாள்) என்ற அடைமொழி வருதலையும் கவனிக்க.

நெடுஞ்சேரலாதனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவர்களுள் மூத்தவன் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் இரண்டாமவன் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் மூன்றுமவன் செங்குட்டுவன். நெடுஞ்சேரலாதன் இறந்தவுடன் மேலே சொன்னபடி செல்வக் கடுங்கோ இன்றைய கொங்கு நாட்டுப் பகுதி முழுவதும் கைப்பற்றிக் கொண்டு விட்டதால் மேலைக்கடற்கரைப் பகுதியில் இருந்த குட்ட நாட்டிற்கு களங்காய்கண்ணி நார்முடிச் சேரலும் குடநாட்டிற்கு ஆடுகோட் பாட்டுச் சேரலாதனுமாக முடி சூடிக் கொண்டனர். இவற்றுள் குட்டநாடு மிகச் சிறிய பகுதியாதலால் அதனை ஒரு சிற்றரசன் நிலையில் ஆண்ட களங்காய்க் கண்ணி தங்கள் மரபிற்குரிய பனம் பூ மாலையையும், மணிமுடியையும் செல்வக் கடுங்கோ சூடிக் கொண்டு சேர அரசனாக ஆண்டு வந்ததால் இழந்த தனது சேர நாட்டுப் பகுதியான கரூர் உள்ளிட்ட தென் கொங்கு நாட்டை அடையும் வரை பனம் பூ மாலையைச் சூடுவதில்லை என சபதம் செய்து களாப்பூ மாலையையும், நாரினால் ஆன மகுடத்தையும் சூடிக்கொண்டான் போலும். செல்வக் கடுங்கோவுடன் கொங்கர் தலைவன் நன்னனும் நட்புடன் விளங்கி வந்திருக்க வேண்டும். எனவே செல்வக் கடுங்கோ உயிருடன் இருந்தவரையில் இவனால் எதுவும் செய்ய முடியவில்லை. பிறகு கி. பி. 120ல் செல்வக் கடுங்கோ இறந்து விட்டான். இவன் இறப்பும் சிக்கற்பள்ளி என்ற இடத்தில் ஒரு போர்க்களத்திலே என்று புறப்பாடல் ஒன்று உணர்த்துவதால் ஒரு வேளைக் களங்காய்க் கண்ணிச்

சேரலின் படையெடுப்பு ஒன்றிலே இவன் இறந்தானே என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு இவன் இறந்தவுடன் இவனுடைய இருபிள்ளைகளுக்கிடையே ஆட்சியுரிமை பெறுவது குறித்துத் தகராறு எழுந்தது போலும். இதனைப் பயன்படுத்திக் கொண்டு நன்னன் தன் தந்தையின் காலத்தில் பலியானைச் செல்கெழு குட்டுவனிடம் இழந்த பூழி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். எஞ்சிய பகுதி பொறை நாட்டை சகோதரர்கள் இருவரும் பங்கு போட்டுக் கொண்டனரோ அன்றி மூத்தவன் களங்காய்க் கண்ணியின் உதவிபெற்று பெரும்பகுதி பொறை நாட்டைத் தானே ஆண்டானோ தெரியவில்லை. தகடூர் யாத்திரை என்ற அழிந்து போன சங்க நூல் ஒன்றின் பாடல்களாகக் கிடைக்கும் சில தனிப்பாடல்களில் இந்த அண்ணன் தம்பி சண்டை குறிக்கப்படுவது கொண்டு நம்மால் இந்த முடிவிற்கு வரமுடிகிறது. இந்தச் சண்டையை பயன்படுத்திக் கொண்டு களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் பெரும் படையுடன் நன்னனையும் செல்வக் கடுங்கோவின் மக்களையும் வாகைப் பறந்தலை என்ற இடத்தில் எதிர்த்தான். இவ்வாகைப் பறந்தலை கன்னட நாட்டில் மைசூருக்கு வடக்கே இருந்த ஓர் இடம் என்று தெரிகிறது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராட்டிர கூட அரசன் மூன்றாம் கிருஷ்ணனின் பொறிப்பு ஒன்று அவன் தன் மைத்துனன் பூதுகனுக்குக் கொடுத்த நாடுகளுள் ஒன்றாக இவ்வாகை நாடு எனப்படும் வாகைப் பறந்தலை பாகனாட் 70 என்று குறிக்கப்படுவது இதனை உறுதிப்படுத்துகிறது. வாகைப் பறந்தலையில் நடைபெற்ற இப்போரில் களங்காய்க் கண்ணி நன்னனைக் கொன்று பூழி நாட்டைக் கைப்பற்றியதோடு பொறை நாட்டோடு இணைந்திருந்த கரூர் உள்ளிட்ட தென் கொங்கு நாட்டையும் தானே கைப்பற்றிக் கொண்டான். இப்போரிலே செல்வக்கடுங்கோவின் மூத்த மகனும் இறந்து இருக்க வேண்டும். எனவே இளைய மகன் பெருஞ்சேரல் இரும்பொறை பொறை நாட்டின் சிறு பகுதி ஒன்றிற்குப் பெயரளவில் களங்காய்கண்ணிக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்து வந்தான். இவ்வெற்றியின் பயனாக களங்காய்கண்ணி தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டு பனம் பூ மாலை அணிந்து சேர அரசனாக ஆனதோடு தான் முதலில் ஆண்ட குட்டநாட்டிற்குத் தன் கடைசி தம்பியை அரசனாக்கி அவனுக்கு செங்குட்டுவன் என்று அபிஷேகப் பெயரளித்துத் தான் கருரில் இருந்து கொண்டு பொறை நாட்டின் தென்பகுதி, பூழிநாடு ஆகியவற்றை ஆண்டு வந்தான்.

இவ்வாறு இவன் கி. பி. 138 வரை அரசாண்டான். இவன் நன்னனைக் கொன்று பூழிநாடு முதலானவற்றைக் கைப்பற்றி தன் தம்பிக்கு குட்ட நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அளித்தது உத்தேசமாக கி. பி. 125 ஆகலாம். செங்குட்டுவன் 55 ஆண்டுகள் அரசாண்டான் என்று பதிற்றுப்பத்து 5 ஆம் பத்தின் பதிகம் கூறுவதால் இவன் கி. பி. 180 வரை அரசாண்டிருத்தல் கூடும். இத்தக்காலம் இவன் கண்ணகிக்கு கோயில் எடுத்தபோது அவ்விழாவிற்கு வந்த இலங்கை அரசன் கஜபாகு II-ன் காலக்கணிப்போடு ஒத்து வருகிறது. எனவே இக்கால எல்லையே சேரர்களின் ஆட்சியாண்டுகளை உத்தேசமாக நிர்ணயிக்க அடிப்படையாகிறது.

கி. பி 138 ல் களங்காய்க் கண்ணி இறந்ததும் இது வரை பொறைநாட்டின் சிறுபகுதி ஒன்றிற்கு சிற்றரசனாக இருந்த பெருஞ்சேரல் இரும்பொறை மீண்டும் படை திரட்டி சேர அரசன் செங்குட்டுவனோடு மோதி கரூர் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டதோடு, கொல்லி மலைநாட்டையும் வென்று தன் ஆதிக்கத்தில் இணைத்துக்கொண்டான், தகடூரை ஆண்ட அதியமானை வென்று அவனைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்து தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்று தன்னை அழைத்துக் கொண்டான், இச்செய்திகளை இவன் மீது பாடப்பட்ட எட்டாம்பத்து தெளிவு படுத்துகிறது இவன் 17 ஆண்டுகள் அரசாண்டான். (அதாவது கி. பி. 138–155 வரை) குடநாட்டை 113 முதல் 38 ஆண்டுகள் ஆண்ட ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் கி பி. 151 ல் இறந்தான் எனவே கி பி. 151 க்கும் 155 க்கும் பிறகு மீண்டும் பொறை நாடு அனைத்தும் செங்குட்டுவன் ஆட்சியின் கீழ் வந்தது. தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறைக்கு மாந்தரஞ்சேரல் என்ற ஒரு மகன் இருந்தான். இவன் கி. பி 155 முதல் செங்குட்டுவன் காலமான கி. பி. 180 வரை சிற்றரசனாகப் பொறைநாட்டின் சிறுபகுதியை ஆண்டு வந்து கி பி. 180 ல் செங்குட்டுவன் இறந்ததும் குட்ட நாட்டையும் கைப்பற்றித் தன்னை குட்டுவன் இரும்பொறை என்று அழைத்துக் கொண்டான் இக்குட்டுவன் இரும்பொறையின் மகனே 9ஆம் பத்தின் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறை. இதனை 9ஆம் பத்தின் 10வது பாடல் வரிகள் " மாந்தரன் விறல் மருக (வரி 13) எனவும் கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனுக்குப் பிறகு அரசைப் பெற்றவன் (வரி 20-24) எனவும், குட்ட நாட்டை ஆண்ட

குட்டுவர் தலைவன் (வரி. 26) கொங்கர் கோ (வரி. 25) பூழி நாட்டின் தலைவன் (வரி. 27) மாந்தை நகரமக்களின் தலைவன் (வரி. 28) என்றெல்லாம் தெளிவாக உணர்த்துகிறது. இவ்வாறு இவன்மீது பாடப்பட்ட பாட்டிலே வரும் தெளிவான சான்றுகளை கவனிக்காது பிற்காலத்தில் இயற்றப்பட்ட பதிற்றுப்பத்தின் பதிகம், சிலப்பதிகாரம் ஆகியவை கூறும் சான்றுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முன்னுல் பல வரலாற்று ஆசிரியர்களும், செய்த முடிவைக் அறியாமற் செய்த பிழை என்று சாடி மயிலை, சீனி வெங்கடசாமி அவர்கள் இளஞ்சேரல் செங்குட்டுவனுக்கு முன்பே இறந்து போனவன் எனவும், அவன் இவராகக் கற்பனையில் அமைத்துக் கொண்ட செல்வக் கடுங்கோவின் இளையமகன் குட்டுவன் இரும்பொறையின் மகன் எனவும் முடிவு கூறிவிட்டார் இம் முடிவு தவருன முடிவேயாகும். பதிற்றுப்பத்திற்கு உரை எழுதிய ஒளவை, துரைசாமிப் பிள்ளைவர்களும் மேலே குறிப்பிட்ட பாடலுக்கு எழுதிய விளக்க உரையில் மேற்கண்ட முடிவையே சுருக்கமாகக் காட்டியுள்ளார். (பதிற். மூலமும் உரையும்' பக் 433)

இளஞ்சேரல் இரும்பொறை 16 ஆண்டுகள் அரசாண்டதாகப் பதிற்றுப்பத்து கூறுவதால் இவன் கி. பி. 185 முதல் 201 வரை அரசாண்டதாகக் கூறலாம் இவன்மகனே யானைகட் சேய் மாந்தரஞ்சேரல். இம்மன்னனே எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருன ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தவன் இந்த ஐங்குறு நூற்றில் இவன் ஆதனவினி என்று புகழப்பட்டிருப்பதால் இவனது இயற்பெயர் ஆதன் சேரல் என்றே கூறலாம், இவ்வாதன் சேரலே புகளூர் பிராமிக் கல்வெட்டில் கோ ஆதன் சேரல் இரும்பொறை என்று குறிக்கப்படுகிருன். எனவே இவன் தந்தையான இளஞ்சேரல் கால்முதல் கொங்கு நாடு முழுவதும் சேரர்கள் வசமே வந்து இறுதியில் சேர அரசின் இறுதிக் காலம் வரை இவர்களிடமே இருந்தது எனலாம் புகளூர் பிராமிக் கல்வெட்டின் படி இவன் மகன் பெருங் கடுங்கோ. பெருங் கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ. இளங்கடுங்கோவின்

மகனே கணைக்கால் இரும்பொறை. மேலே குறிப்பிட்ட கணிப்பு முறையில் சங்க காலச் சேர அரசர்களின் மரபு வழிப்பட்டியலை புதிய முறையில் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

- ஆதன் சேரல்
  - உதியஞ்சேரலாதன் (கி. பி 55 வரை)
    - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 55-113
      - களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் 113-138
      - ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் 113-151
      - செங்குட்டுவன் 125-180
    - பல்யானை செல் கெழு குட்டுவன் 75-100
  - அந்துவஞ்சேரல் 75-95
    - செல்வக்கடுங்கோ வாழியாதன் 95-120
      - மூத்த இளவரசன் 120-130
      - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் 138-155
        - குட்டுவன் இரும்பொறை (மாந்தரன்) 155-185
          - இளஞ்சேரலிரும்பொறை 185-201
            - யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் (ஆதன் அவினி) 201-245
              - பெருங்கடுங்கோ 245-280
                - இளங்கடுங்கோ 280-315
                  - கணைக்கால் இரும்பொறை 315-350

உத்தேச ஆட்சி ஆண்டுகள்.

மேற்கண்ட அமைப்பினால் மட்டுமே பதிற்றுப்பத்து பதிகங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஆட்சி ஆண்டுகளின் படி தடையின்றி, அதே சமயத்தில் ஒவ்வொருவருக்கும் சராசரி வாழ்நாட்களை அமைத்து ஒருவரே 110 ஆண்டுகள் வரையிலும் அல்லது அதற்கு மேலும் உயிர் வாழ்ந்திருக்க முடியுமா என்று ஐயம் எழா வகையில் மரபுவழிப்படி பட்டியல் அமைகிறது.

**கொங்கர்களின் நிலை**

கொங்கர் தலைவனாகிய நன்னன் சேரமான் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலால் கொல்லப்பட்ட பிறகு கொங்கர் குடியேறியிருந்தமையால் கொங்கர் நாடாகி விட்டிருந்த பகுதிகளில் பெரும்பான்மையானவை இரும்பொறைச்சேர அரசமரபினரின் ஆட்சியின்கீழ் நிலையாக வந்து விட்டது. எனவே கொங்கர்குல அரசர்கள் துளுநாடு உள்ளிட்ட தங்களுடைய பூர்வீக நாடான கொண்கான நாட்டை மட்டும் சில காலம் ஆண்டு வந்தனர். அப்பொழுது வாழ்ந்தவனே மோசிகீரனாரால் பாடப்பட்ட கொண்கானங் கிழான் என்னும் வேளானத் தலைவன் போலும். இந் நாட்களிலே கொண்கான நாட்டிற்கு வடபகுதியை ஆண்ட கோசர்கள் தமது நாட்டளவிலே நிற்கவில்லை. போர்வீரர்களாகவும், வேறு பல வகையிலும் கொண்கான நாட்டவரோடும், சேரர்களுடனும், ஏனைய கொங்கச் சிற்றரசர்களுடன் நட்புறவு கொண்டவர்களாக இன்றைய கொங்கு நாட்டுப் பகுதிகளில் குடியேறிவந்தனர். முன்னால் மௌரியர்கள், வடுக வீரர்கள் ஆகியோரது உதவியுடன் போர் முறையில் குடியேற முயன்றதைவிட இப்போது அவர்கள் முயற்சி அனுகூலமான பலனைக் கொடுத்தது. இப்படியே அமைதியாகக் குடியேறி பல இடங்களில் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களான அவர்கள் சில ஆண்டுகளில் கொண்கான நாட்டின் ஒரு பகுதியான துளுநாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் சிறிது சிறிதாகக் கொண்கான நாடு முழுவதையுமே

கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு தமது குடியேற்றத்தை வலுவுடையதாக ஆக்கிக் கொண்டு கொங்கு நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த கோசர்களையே சிலப்பதிகாரம் கொங்கிளம் கோசர் என்று குறிப்பிடுகிறது. இவ்விளைவுகளால் கொண்கான நாட்டரசு சிதறுண்டு போனது. அந்நாட்டு அரசமரபினர்கள் தமிழகத்தின் வேறுபகுதிகளை நாடிச் சென்றனர். கொண்கான நாட்டை நன்னன் மரபினர்ஆண்டபோது அவர்களின் கீழ் இன்றைய கொங்கு நாட்டுப்பகுதிகள் சிலவற்றிற்குச் சிற்றரசர்களாக விளங்கிய சில கொங்கர் தலைவர்கள் கொங்குச் சேரர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆயினர். இவர்கள் அனைவரும் கொங்கர்களாகிய வேளாளத் தலைவர்களேயாவர். இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் கங்கன், கட்டி, புன்றுறை, கழுவுள், ஆகியோர் ஆவர். இவர்களுள் கங்கர் என்பாரை கொங்குணி அரசமரபினராகிய மேலைக் கங்கர்கள் என்பார் சிலர். அன்று கங்கர்கள் என்பார் தகடூர் நாடாகிய தருமபுரி மாவட்டத்திற்கும், காவிரி ஆற்றங்கரையில் கட்டூரை (தற்காலக் கிட்டூர்) தலைநகராகக் கொண்ட புன்னாட்டிற்கும் இடையில் உள்ள நிலப்பரப்பை ஆண்ட சிற்றரசர்கள் ஆவர். இந்நிலப்பரப்பு தமிழ்நாட்டின் கங்கிலே அதாவது முனையில் அமைந்திருந்தாலின் இதனை ஆண்ட சிற்றரசமரபினர் தம்மைக் கங்கர் எனக் கூறிக் கொண்டனர். புன்றுறையென்பான் கட்டூரைத் தலைநகராகக்கொண்ட புன்னாட்டுச் சிற்றரசனே போலும்.

புன்னாட்டிற்குக் கிழக்காக, அதற்கும் கங்க நாட்டிற்கும் இடையில் அமைந்திருந்த நிலப்பரப்பை கட்டி அரசர்கள் ஆண்டனர் என்று தெரிகிறது. இவர்களது நாட்டிற்கு வடக்கே வடுகர் நாடாகிய கன்னட நாடு இருந்தது என்பதை 'குல்லைக் கண்ணி வடுகர் முனையது, பல்வேற் கட்டி நன்னாடு' என்ற குறுந்தொகை 11 ஆம் பாடலின் வரிகள் கூறுகின்றன. கழுவுள் என்பான் காமூரில் வாழ்ந்த

ஆயர்கள் தலைவனுவன் கொங்கர்களிலும் கால் நடைச் செல்வங்களை மிகுதியாக உடைய ஆயர்கள் இருந்தமையால் இவனையும் கொங்கர் சிற்றரசனே எனலாம். இவன் பலம் பொருந்திய சிற்றரசனாக விளங்கியவன். இவனை இறுதியில் சேரமன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறையையே வென்றான். மேற் குறித்த சிற்றரச மரபினர் அனைவரும் கொங்கர்கள் ஆகிய வேளாளத் தலைவர்களே ஆவர். வேட்டுவர் குல சிற்றரசர்களைப் பற்றி சென்ற அத்தியாயத்தில் குறிக்கப் பட்டது. இன்னும் முதிரமலையை ஆண்ட குமணன், விச்சி மலையை ஆண்ட விச்சிக்கோ என்பான் ஆகியோரும் கொங்கர் நாட்டுப் பகுதிகளை ஆண்ட சிற்றரசர்களே என்று தெரிந்தபோதிலும் இவர்களது மரபு பற்றியும், இவர்களது நாடு இன்னதென்பதும் சரிவரத் தெரியவில்லை. விச்சிக் கோவை மட்டும் புறநானூறு 151 ஆம் பாடலில் புலவர் பெருந்தலைச் சாத்தனார் நன்னன் மருகன் என்று குறிப்பிடுவதால் இவன் கொங்கர் குல வேளாளத் தலைவனே என்று தெரிகிறது. குமணன் வேளாளர் தலைவனு அன்றிவேட்டுவர் தலைவனு ? என்று அறியக் கூடவில்லை.

நன்னன் மரபினர் கொண்கான நாட்டை ஆண்ட காலத்தில் அம்மரபினரின் கீழ்ச் சிற்றரசர்களாக விளங்கியவர்களின் நிலை இவ்வாருக கொண்கான நாட்டையும், துளு நாட்டையும் கோசர்களிடம் இழந்து நிலைகுலைந்து போன நன்னன் மரபினர் தமது நாட்டை விட்டுத் தென் கிழக்குத் திசையாக நகர்ந்து இக்கால வடஆர்காடு மாவட்டத்திலுள் அடங்கும் பல்குன்றக் கோட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதிலுள்ள செங்கண்மா ( செங்கம் ) என்ற ஊரைத் தமது தலைநகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினார். இவர்களுள் ஒருவனே பத்துப் பாட்டினுள் ஒன்ருன மலைபடுகடாம் பாட்டுடைத் தலைவனுன செங்கண்மா அத்துவேள் நன்னனுவன். மேற்சொன்ன முடிவின்படி இவனும் வேளாளர் தலைவனே என்பதை இப்பாட்டின் ஆசிரியர் நன்னன் வேண்மான், வேள் என்று குறிப்பிடுவதிலிருந்து

புலனும். தமது நாட்டு அரச மரபினரான நன்னன் வழி வந்தோரைத் தொடர்ந்து கொண்கான நாட்டிலும், துளு நாட்டிலும் வாழ்ந்த ஏராளமான வேளாள மக்களும் இப் பகுதியிலும் இதனை அடுத்த தொண்டை நாட்டிலும் குடி யேறினர் போலும். தொண்டை நாட்டில் வாழும் தொண்டை மண்டல வேளாளர்களுடன் இன்றும் துளுவ வேளாளர்களும் குறிப்பாகத் தொண்டை நாட்டின் மேற்குப் பகுதியில் வாழ்ந்து வருவது இதனை வலியுறுத்தும்.

இவ்வாறு பல்குன்றக் கோட்டத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தமது அரச மரபினரோடு கொண்கான நாட்டுக் கொங்கர்களாகிய வேளாள மக்கள் குடியேறிய நாடுகள் வேளுநாடு (வேளாளர் நாடு) எனவும், ஆந்தைப்பாடி நாடு எனவும், ஈஞசப்பாடி நாடு எனவும், கூறைநாடு எனவும் பெயரமைந்த நாடுகளாகும். இவை அனைத்தும் தொண்டை நாட்டின் மேற்குப் பகுதியிலே உள்ளன. இந்நாட்டின் பெயர்கள் அனைத்தும் கொங்கு வேளாளர்களின் கூட்டப் பெயர்களுள் காணப்படுகின்றன. எனவே இந்த நாடுகளிலிருந்து பின்னுல் கொங்கு நாட்டில் குடியேறிய வேளாள மக்களே அந்தந்த நாட்டுப்பெயரையே தமது கூட்டப்பெயராகக் கொண்டனர் எனலாம். ஆயினும் ஆந்தைப்பாடி நாடு மட்டும் இம்முடிவிற்கு மாறுபட்டதாக உள்ளது. காரணம் ஆந்தை கூட்டத்தவர்களும், இந்தப் பெயரோடு சம்பந்தப்பட்ட சாத்தாந்தை கூட்டத்தவர்களும் சங்ககாலப் பிராமி கல்வெட்டுகளிலும், சங்க இலக்கியப் பாடல்களைப் பாடிய ஆந்தை என்ற பெயரையுடைய பல புலவர்களின் பெயரிலும் குறிக்கப்பட்டுள்ளதால் இவர்கள் ஆந்தைப்பறவையைத் தமது குல மரபுச் சின்னமாக (Totem) கொண்டிருந்த மிகப்பழமையான வேளாள மக்களாக இருக்க வேண்டும் என்றும் இவர்களது பூர்வீகம் கொண்கான நாட்டிலே துவங்கி இவர்கள் இன்றைய கொங்கு நாட்டுப் பகுதிகளிலும் குடியேறியிருத்தல் வேண்டும் என்றும் தோன்றுகிறது. எனவே தமது குலப்பறவையின் பெயரையே

தமது கூட்டப்பெயராகக் கொண்டிருந்த வேளாளர்க்கள் மிகுதியாக வாழ்ந்ததினுல் அக்கூட்டத்தினர் பெயரின் அடிப் படையில் அவர்கள் வாழ்ந்த நாடு ஆந்தைப்பாடி என வழங்கப்பட்டது எனலாம்.

**பொன்குன்ற நாடும், இருங்கோவேளும்**

கொங்கர்களின் நாடான கொண்கான நாட்டின் தலைமை அமைந்திருந்த பிரதான நாட்டிற்கு, அதாவது தலைநகரம் அமைந்திருந்த பாழிநாட்டிற்குக் கிழக்கே பக்கத்தில் பொன்குன்றநாடு இருந்தது. இந்நாடு இன்றைய கோவார் மாவட்டப் பகுதிகளாகும் இதனையாண்டவன் இருங்கோ வேள் என்பவன் இவன்மீது பாடப்பட்ட புறநானூறு பாடல் ஒன்றில் கபிலர் பெருமான் இவனைப் ''பொன்படு மால் வரைக் கிழவ'' (புறம் 201 வரிகள் 16-17) என்று குறிப்பிடுகிருர். பொன்படு மால் வரை என்பது பொன் குன்று என்ற பெயரையே உணர்த்துவதாகத் தோன்று வதால் இவன் பொன்குன்ற நாட்டையாண்டவன் என்பது உறுதிப்படுகிறது. இம்மன்னனும், இவன் நாட்டு மக்களும் கூட ஆதியில் கொண்கான நாட்டிற்கு வடபகுதியில் வாழ்ந்த வேளாள இனத்தவரேயாவர். ஆனல் இருங்கோ வேளின் மரபினரை வரலாற்று அறிஞர்கள் யாதவர் என்று குறிப்பிடுவர். பிற்காலச் சோழர்காலத்தில் கோனாட்டை யாண்ட கொடும்பளூர் வேளிர்கள் தம்மை யாதவர் என்றும், இருங்கோ வேளின் வழிவந்தவர் என்றும் கூறிக் கொள் வதாலும், யாதவர்களாகிய ஹொய் சாளர்கள் இருங்கோ வேளாகிய புலிகடிமாலின் வழிவந்தவர் என்று சொல்லப் படுவதாலும் இவ்வாறுமுடிவு செய்தார்கள் போலும், ஆனல் கொடும்பளூர் வேளிர்கள் தம்மை யாதவர் என்று குறித்துக் கொள்ளக் காரணம், அவர்களது முன்னோர் களாகிய இருங்கோ வேளின் மரபில் வந்த வேளாளர்கள் வறண்ட நிலப்பகுதிகளில் வாழ்ந்து வந்ததால் ஏராளமான கால்நடைகளை வைத்து வளர்ப்பதைத் தமது தொழிலாகக் கொண்டு ஆயர்களாக இருந்தமையாலும், இவர்களின் பூர்வநாடு துவரைப் பதி

ஆதலால் வட நாட்டுத் துவாரகையை ஆண்ட கண்ணன் கதையை ஒட்டி ஆயர்கள் யாதவர்களே என்ற முறையில் ஏற்பட்டதாக இருக்கலாமேயன்றி இவர்களை வேளாளர்கள் அன்று எனக் கூறி விட முடியாது. இருங்கோ வேள் ஒரு வேளானத் தலைவனாக இருந்தமையாலே நன்னனைப் போல இவனுக்கும் இருங்கோ வேண்மான் (வேண்மான் = வேளாளர் மகன்) என்ற பெயர் நிலவியது. இவன் முன்னோர்களில் நாற்பத்தொன்பது தலைமுறையினர் துவரை பதி என்ற நாட்டை ஆண்டனர் எனவும், அந்நாட்டில் இருந்த சிற்றரையம், பேரரையம் என்ற இரண்டு தலைநகர்களும் அழிந்து போனமையால் இவர்கள் துவரைப் பதியை விட்டு வந்தனர் எனவும் புலவர் கபிலர் குறிப்பிடுகிறார் (புறம். 201-வரிகள்-10-13) அகஸ்தியர் தென்னாட்டிற்கு வந்த வரலாற்றை தொல்காப்பிய பாயிர உரையில் நச்சினார்கினியர் கூறுமிடத்தில்

"அகஸ்தியர் தென்திசைக்கண் போதுகின்றவர் துவாராபதி போந்து
நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்
மரையும், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும்
கொண்டு போந்து காடு கொடுத்து நாடாக்கினார்

என்று குறிப்பிடுகிறார். இக்கதையில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதை நம்மால் கூற முடியாது என்றாலும் வேறு சில பழைமையான நூல்களிலும் அகஸ்தியர் வடநாட்டுத் துவரைப்பதியிலிருந்து பதினெட்டு குடிவேளிரையும் அழைத்து வந்து தமிழகத்தில் குடியேற்றினார் என்ற குறிப்பு காணப்படுகிறது. இது எவ்வாறாயினும் வடநாட்டுத் துவரைப் பதியிலிருந்து குடிபோந்த வேளிருள் ஒரு பிரிவினரே கர்நாடக மாநிலத்தில் உள்ள துவாரசமுத்திரத்தில் குடியேறித் தாம் குடியேறி வாழ்ந்த பகுதி நாட்டிற்கு தமது பூர்வீக நாடான துவராபதி என்ற பெயரையே சூட்டிக் கொண்டனர் என்ற அளவில் நாம்

மேற்குறித்த செய்திகளுக்கு விளக்கம் கூறலாம். எஞ்சிய வேளாள மக்கள் துவாரசமுத்திரத்திற்குத் தெற்கே இருந்த கொண்கான நாட்டிலும் குடியேறியிருந்திருக்கலாம். இதன் அடிப்படையிலே கொங்கு வேளாளர்கள் தாம் கங்கைச் சமவெளிப் பகுதிகளிலிருந்து குடியேறியவர்கள் என்ற பொருளில் தம்மைக் கங்கை குலத்தவர் என்று குறித்துக் கொண்டு இருக்கலாம். இதனையே வேளாளர் புராணமும் வேறு வகையாகக் கூறுகிறது. ஆனால் கொங்கணி அரசர்கள் தம்மை ஜானவ்ய கோத்திரத்தினர் என்று கூறிக் கொள்வதால் ஜானவி என்ற பெயர் கங்கைக்கு உண்டு என்பதால் கங்கை குலத்தவரே அவர்கள். எனவே கங்கர்கள் எனப்பட்டனர் என்றும் சமாதானம் கூறுவர் வரலாற்று ஆசிரியர்கள்,

ஆனால் கங்கைக்கு ஜானவி என்ற பெயர் வரக்காரணம் அவள் ஜானவ்ய மகரிஷியின் காதுகளின் வழியே வெளி வந்தாள் என்ற புராணச் செய்தியின்படியேயாகும், ஆனால் ஜானவ்ய மகரிஷியின் வழிவந்ததால் ஜானவ்ய கோத்திரத்தினர் என்று ஆயிற்றே தவிர அவர் காதுகளின் வழியே வந்த கங்கைக்கும், கங்கர்களுக்கும் சம்பந்தம் இல்லை, ஆகவே கொங்கு வேளாளர்கள் கொங்கணி அரசர்களின் மரபைச் சேர்ந்தவர்கள். அதனால் தம்மைக் கங்கை குலத்தவர் என்று கூறிக் கொள்கிறார்கள் என்பதற்கு அடிப்படையே இல்லை,

இது ஒரு புறமிருக்க துவரைப்பதியில் நாற்பத் தொன்பது தலைமுறை அரசாண்ட பிறகு அம்மரபின் வழி வந்த இருங்கோ வேள் பொன் குன்ற நாட்டில் அரசு அமைத்துக் கொள்ள காரணம் துவரைப் பதியை உள்ளிட்ட கொண்கான நாட்டின் வடபகுதிகளைக் கோசர்கள் முதன் முதலில் கைப்பற்றிக் கொண்ட போது துவரைப் பதியை அழித்து விட்டமையாலேயாகும்,

எனவே துவரைப்பதியை ஆண்ட வேளாளத் தலைவனோடு அங்கு வாழ்ந்துவந்த வேளாள மக்களும் கோசர்களின் ஆதிக்கததின் கீழ் வாழ விரும்பாததாலோ

அன்றி வேறு எக்காரணத்தாலோ தங்கள் கால்நடைச் செல்வங்களோடு துவரைப் பதியை விட்டு வெளியேறி பொன்குன்ற நாட்டிலும் மற்றும் கொங்கர் நாட்டினுள்ளும் குடியேறத் துவங்கினர். இவ்வாறு குடியேறிய வேளாளக் கூட்டத்தவரே தம்மைத் துவரன் கூட்டத்தவர் என்று கூறிக்கொண்டனர். இத்துவரன் கூட்டம் என்ற பெயரே பிற்காலத்தில் தூரன் கூட்டமாயிற்று. துவரைப்பதியிலிருந்து வெளியேறிய வேளாளக் கூட்டத்தார்கள் தாம் குடியேறிய பகுதிகளுக்குத் தமது நாட்டின் பெயரையே சூட்டிக்கொண்டனர். இன்றும் கொங்கு நாட்டிலும், அதையொட்டிய சேறட்டிலும் (புதுக்கோட்டைப்பகுதி) துவரன்பாடி, துவரன்குறிச்சி என்ற பெயர்களில் பல ஊர்கள் இருப்பது இம்முடிவிற்குச் சான்று கூறுகிறது.

**கி. பி. 1—350 ல் கொங்க மக்கள்**

அரசியல் நிலை இவ்வாறு இருக்க இனி இக்காலத்தில் கொங்கில் வாழ்ந்த மக்களைப்பற்றிக் காண்போம். தமிழகத்தின் ஏனைய பகுதி நாடுகளைப் போலன்றி கொங்கு நாட்டில் மக்கள் பெருக்கம் குடியேற்றங்களாலே ஏற்பட்டது. அதே சமயத்தில் அங்கு பூர்வீக மக்களும் இல்லாமல் இல்லை. என்பது சென்ற அத்யாயத்தில் காட்டப்பட்டது இப்பூர்வீக மக்களுள் பிற இனத்தார்களைவிட மலைப்பிரதேசங்களிலும், அடர்ந்த கானகங்களிலும் வேட்டையாடுவதையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்த வேட்டுவ மக்களே அதிகம் எனலாம். வேளாள மக்கள் மிகக் குறைந்த அளவிலே வாழ்ந்தனர். இவர்களைத் தனியாகப் பிரித்து அறிதல் இப்பொழுது மிகவும் கடினமானது. ஆனாலும் காடு கெடுத்து நாடாக்கிக் கொண்டு வாழ்வதற்கேற்ற வசதியும் வாய்ப்பும் கொங்கு நாட்டில் அதிகம் இருந்ததால் கொண்கான அரசமரபினரின் ஆட்சியின்கீழ் இப்பகுதிகள் வந்தது முதல் கொண்கான மக்களாகிய கொங்கர்கள் குடியேற ஆரம்பித்தனர். இக்கொண்கான நாட்டோடு துளுநாடும் இணைந்து இருந்ததால் இவ்விரு நாட்டு மக்களையும் சேர்த்தே சங்க இலக்கியங்கள் கொங்கர் எனக்குறிப்பிடுவதாகக் கொள்ள

லாம். இவ்வாறு குடியேறிய கொங்கர்களில் பெரும் பாலோர் கால்நடைச் செல்வங்களை மிகுதியாகப் பெற்றிருந்த ஆயர்களேயாவர். இவர்கள் தங்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு தலைமலை (சத்யமங்கலப் பகுதியில் உள்ளது) கணவாய் வழியாக கோபி, சத்யமங்கலம், ஆனூர், காங்கயம் பகுதிகளிலும் இன்னும் தெற்காக பொள்ளாச்சி, கிணற்றுக்கடவு பகுதிகளிலும் கூட்டங்கூட்டமாக வந்து குடியேறினர். இவர்கள் அனைவரும் வேளாளர் இனத்தவரே ஆவர். இக்குடியேற்றம் ஆரம்பித்த காலத்தை முடிவாகக் கூற முடியாது கிறிஸ்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளிலேயே நிகழத்துவங்கியிருக்க வேண்டும் என்று சுருக்கமாகக் கூறலாம். எனவேதான் காலப் போக்கில் இப்பகுதிகள் கொங்கர்களின் நாடாகவே மாறிவிட்டன. இவ்வாறு கூட்டங் கூட்டமாக வேளாள மக்களையன்றி பிற்காலத்தில் வேட்டுவர்களும்கூட பொத்தப்பி நாட்டிலிருந்தும் அதற்கு வடபகுதிகளிலிருந்தும் கூட கொங்கு நாட்டில் குடியேறியதால் இவ்விரு இனத்தாரிடையேயும் தமிழகத்தின் ஏனைய பகுதி மக்களிடையே காணப்படாத கூட்டமுறை வழக்கத்தில் உள்ளது. அதுவும் வேளாள மக்களிடையே 90க்கும் அதிகமான கூட்டப் பெயர்கள் காணப்படுகின்றன.

இப்பெயர்கள் ஒவ்வொன்றும் குடியேறிய ஒவ்வொரு கூட்டத்தின் தலைவன் பெயரையோ அல்லது குடியேறுவதற்கு முன்னால் வாழ்ந்த நாட்டின் பெயரையோ அன்றி தத்தம் குலத்திற்குரிய அடையாளப் பறவை அல்லது விலங்கின் பெயரையோ (Totem) குறிப்பிடுவதாக உள்ளது. இதே முறையை வேட்டுவர் கூட்டப் பெயருக்கும் சொல்லலாம். இவ்வாறு குடியேறிய மக்கள் தமக்கெனத் தனித்தனிக் கூட்டப் பெயர்களை ஏற்படுத்திக் கொண்டதால் குடியேற்றத்திற்கு முன்னால் இப்பகுதியில் வாழ்ந்த வேளாள மக்களும் வேட்டுவ மக்களும் கூடத் தம்மைக் குடியேறியவர்களினின்றும் வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளத் தம் குல முதல்வர்கள் பெயரையும், தாங்கள்

வாழ்ந்த நாட்டையாண்ட அரச குலத்துப் பெயர் அல்லது நாட்டின் பெயரையும் வைத்துக் கூட்ட முறையை ஏற்படுத்திக் கொண்டனர் போலும். பதுமன் கூட்டம், சேரலன் கூட்டம், ஆதன் கூட்டம், பனையன் கூட்டம் போன்ற சில வேளாளர் கூட்டப் பெயர்களும், பனைய வேட்டுவர், கொல்லி வேட்டுவர், மாத்தைப் படை வேட்டுவர், வேள் வேட்டுவன் போன்ற வேட்டுவர் கூட்டப் பெயர்களும் இவ்வாறு பூர்வீக வேளாள, வேட்டுவ மக்களை குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது.

**வேளாளர் கூட்டங்கள் :**

கி. பி. 17 ஆம் நூற்றாண்டிற்கு மேல் இயற்றப்பட்டதாகத் தோன்றும். பூதாளர் குறவஞ்சி என்னும் அலகு மலைக் குறவஞ்சி என்னும் சிறு பிரபந்த நூல் கீழ்க் கொடுத்துள்ள வேளாளர் கூட்டப் பெயர்களைத் தெரிவிக்கிறது :—

ஓதாளர், பூசர், செம்பூதர், ஆவன் (ஆதன்) சாத்தந்தை கோவர், குழையர், கோவேந்தர், செம்பர், பன்னர், மாடை, காடை, ஆந்தை, பொருளாந்தை, கண்ணந்தை, மணியன், தூரன், செங்குன்றியர், செவ்வாயர், செங்கண்ணர், வண்ணக்கர், சேரன், புத்தன் பொடியன், வேந்தன், மூத்தன், காரிமூல குலம், நீலன், கனவாளன், வில்லி, செல்லன், ஆதி, அந்துவன், சேடன், பதரி, சேரலன், பெரிய குலம், கடுத்துளி, பவழன், பனையன், பூந்தன், பாண்டியன், கணக்கன், குன்றெலி, கூறை, கீரன், நிலன், மேதி, எண்ணை, வெண்டுவன், ஈஞ்சன், குயிலர், குங்கிலியர், பயிரன், மழவடிகர், தோடை, துந்துமன், சேமன், தழிஞ்சி, காடன், கவுரியன், நாரை, நீருண்ணியர் நந்தர், உழவர், பனங்காடை, புன்னை, மொய்ம்பன், கவளன், பெருங்குடியன் ;—

இவைதவிர தனஞ்செயன் கூட்டம், தேவேந்திரன் கூட்டம், பொன்ன கூட்டம், ஆதிரையன் கூட்டம், கிளியர்,

கம்பகுலம் சாத்துராயன்[1] சிலம்ப கூட்டம்[2] போன்ற கூட்டப் பெயர்களும் தெரிய வருகின்றன. இவை தவிர இக்காலத்திலும் உள்ளதா என்று தெரியாத சில கூட்டப் பெயர்களும் ஒதாளர் குறவஞ்சியில் கூறப்பட்டுள்ளன. அவ்வாறு இருப்பது தெரித்தால் மறுபதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்றெண்ணி அவற்றைக் குறிக்காமல் விட்டேன்.

மேற்குறிப்பிட்டுள்ள கூட்டப்பெயர்களுள் கொங்குப் பகுதியில் வாழ்ந்த பூர்வீக மக்களதாகக் கருதத்தக்க சில வற்றையும், கொங்கர்களோடு சம்பந்தப்பட்டதாகவும் பி முதலிரண்டு நூற்றுண்டுகள் அளவிலே வழக்கிலிருந்ததாக வும் கருதத்தக்க சில கூட்டப்பெயர்களையும்பற்றி இந்தக் கட்டத்தில் சிறிதளவு காண்போம். கொங்கர் குடியேற்றத் திற்கு முன்னதாக கொங்குப்பகுதிகளில் வாழ்ந்து வந்த வேளாள மக்களுக்குரியதாகக் கருதப்படும் சேரலன் கூட்டம், பனையன் கூட்டம் ஆதள் கூட்டம், அந்துவன் கூட்டம் போன்ற பெயர்கள் கொங்கர்களை வென்று அப் பகுதியைக் கைப்பற்றி ஆண்ட சேர அரச மரபினரோடு சம்பந்தப்பட்டவையாகத் தோன்றுகின்றன. எனவே இக்கூட்டத்தவர்களின் முன்னோர் ஆதன், அந்துவன் போன்ற சேரமன்னர்களின் ஆட்சியின்கீழ் கொங்குநாடு வந்த போது அங்கு வாழ்ந்த பூர்வீக மக்களான வேளாளர் கள் அவ்வரசமரபின் பெயரையே தமது கூட்டப் பெயராகக் கொண்டு இருக்கலாம். இதே போன்று பனைய வேட்டுவர்,

1 சாத்துவாயர் என்று ஈங்கூர் கோயில் கல்வெட்டு குறிப்பிடு கிறது A. R. E. 194-of-67-68.

2 ஆரியூர் கோயில் கல்வெட்டு. A. R. E. 155-of 68-68

குறிப்பு: 67-68 ஆண்டறிக்கைகள் தொல்பொருள் துறையினரால் பிரசுரிக்கப்படவில்லை. ஆயினும் இவ்வறிக்கைகளின் படி செய் யப்பட்ட பிரதிகளைப் படித்து ஆராய அனுமதி கொடுத்த மைசூரிலுள்ள இந்திய முதன்மை கல்வெட்டாய்வர் அலுவலகத் தாருக்கு ஆசிரியரின் நன்றி உரித்தாகிறது.

மாந்தைப் படை வேட்டுவர் போன்ற வேட்டுவர் கூட்டப் பெயர்களும் சேரர்களோடு சம்மந்தப் பட்டிருப்பதால் பூர்வீக வேளாளரைப் பின்பற்றி வேட்டுவர்களும் சேரமரபிற்குரிய பெயரைத் தமது கூட்டப் பெயராகக் கொண்டு இருக்கலாம். பதுமன் கூட்டம் என்ற பெயர் ஆவி நாடு எனப்பட்ட பழநி மலை நாட்டை ஆண்ட வேளாளர் சிற்றரசன் வேளாவிக் கோமான் பதுமன் என்பவனை நினைவு படுத்துகிறது. இப்பதுமன் என்ற பெயர் குறிப்பிட்ட ஒரு வேளாளச் சிற்றரசனின் இயற்பெயராகத் தோன்றவில்லை. இது ஒரு குலப்பெயரே என்றும் இக்குலத்தில் வந்த வேறு பல அரசர்களும் பதுமன் என்ற பெயரைத் தமது பெயரோடு கொண்டு இருந்தனர் என்றும் தெரிகிறது. எனவே இவ்வேளாளர் தலைவனின் மரபே பதுமன் கூட்ட மரபாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இப்பதுமன் பற்றிய குறிப்பு பதிற்றுப்பத்து பதிகங்களிலே காணப்படுகிறது. "குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன் (பதிற். பதி. 4-6) செல்வக் கடுங்கோவிற்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன் (பதிற். 8) இவ்வரிகளிலிருந்து இப்பதுமன் குலத்து வந்த வேளாள சிற்றரசனின் மகள் இருவரை முறையே இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனும், செல்வக் கடுங்கோ வாழியாதனும் மணந்திருந்து இவர்கள் வயிற்றில் பிறந்தவர்களே புகழ் பெற்ற சேர அரசர்களான 'களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறை ஆகியோராவர். எனவே இக் கூட்டத்தவரைச் சேரர்களுடன் சம்பந்தம் செய்து கொள்ளும் அளவிற்குச் சிறப்புப் பெற்றிருந்த பூர்வீக வேளாள மக்கள் ஆக இருக்கலாம் என்று கூற முடிகிறது. இன்னும் பதுமனார் (குறுங். 6) பெரும்பதுமனார் (நற். 2. குறுந். 7 புறநா-199) ஆகிய புலவர்களும் இக் கூட்டத்தைச் சேர்ந்தவரே என்று தெரிகிறது. இதே போல வேட்டுவரிலும் மாந்தைப் படை வேட்டுவர் என்பாரை மாந்தரஞ்சேரல் என்று தம்மை அழைத்துக் கொண்டு மாந்தையைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட இரும்பொறைச் சேர மரபினரின் படை

வீரர்களாக விளங்கியவர் வழியினர் என்று கொண்டு பூர்வீக மக்களுடன் இணைக்கலாம். கொல்லி வேட்டுவர் என்பார் அக்கால முதலே கொல்லி மலைப் பகுதிகளில் வாழ்ந்தவராக இருக்கலாம்.

இனி கொங்கர்களோடு சம்பந்த முடைய பழமையான கூட்டங்கள் சிலவற்றின் பூர்வீகம் பற்றிய குறிப்புகளைப் பார்க்கலாம். ஆந்தைக் கூட்டம் பற்றி முன்னரே குறிக்கப் பட்டது. சங்கப் புலவர்களில் ஆந்தை என்ற பெயருடைய பல புலர்வகளைக் காண்கிறோம். ஆந்தைப் பறவையை தங்களது மரபுச் சின்னமாகக் கொண்ட இக்கூட்டம் மிகவும் பழமையான வேளாளர் கூட்டம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சங்க இலக்கியங்களைத் தவிர கி. மு. நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பழைய பிராமி கல்வெட்டுகளில் கூட இந்த ஆந்தை என்ற பின்னிணைப்புப் பெயரைக் கொண்ட பலர் குறிக்கப்படுகின்றனர்.

இவ்வேளாளர்கள் துளு நாட்டிலிருந்தும், கொண்கான நாட்டில் இருந்தும் குடிபெயர்ந்து வந்தவர்களே என்பதும் முன்னர் சான்றுடன் குறிக்கப்பட்டது. ஆந்தை என்ற பெயருக்கு ஆதன்+தந்தை என்னும் இரு சொல்லின் புணர்ச்சியை புணர்ச்சி விதியுடன் காட்டி ஆதன்+தந்தை என்பவே ஆந்தையாயிற்று என்பர் இலக்கண நூல் வல்லார் இது கொள்கை அளவிலே வேண்டுமானால் உண்மையாக இருக்கலாமேயன்றி பெரும் இடர்பாட்டுடன் இதற்கு பொருளமைதி காட்டி அதுவே உண்மை என்று கொள் வதற்கில்லை. ஆந்தைப் பறவையை மரபுச் சின்னமாகக் கொண்ட பூர்வீக திராவிட இன வேளாளர்களே ஆந்தை என்ற இணைப்புப் பெயர்களை உடையவர் என்பதே பொருந்த மானதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமான உண்மையாகும். இந்த ஆந்தைக் கூட்டத்தவர்களுள் ஒரு பிரிவினரே சாத் தாந்தை கூட்டத்தவர் என்று தோன்றுகிறது. சாத்தாந்தை என்ற பெயர் சாத்தன் + ஆந்தை என்ற இரு சொல்லின் புணர்ப்பெயராகும். சாத்தன் என்ற பெயரை அக்காலத்தே புத்த மதத்தைத் தழுவியவர்களே சூடிக் கொண்டதாகத் தெரிவதால் ஆந்தைக் கூட்டத்தைச் சார்ந்த வேளாளர்களுள்

புத்த மதத்தைத் தழுவியவர்களே சாத்தாந்தை என்று தமது மதத்தைச் சேர்ந்த இயற்பெயரையும், தமது மரபுப்பெயரையும் இணைத்து கூறிக் கொண்டனர் எனலாம்.[1] இதற்கு வலுவூட்டுவதாகப் பிராமிக் கல்வெட்டுகளில் புத்த மதச் சார்புடையது என்று அறிஞர்களால் கருதப்படும் கல் எழுத்துகளிலே சாத்தாந்தை என்ற பெயர் காணப்படுகிறது. ஆனால் பிற்காலத்தே வந்த சாத்தாந்தை கூட்டத்தவர்கள் புத்தமதத்தைத் தழுவியவர்கள் அல்ல அத்துடன் சங்க காலச் சாத்தாந்தை கூட்டத்திற்கும், பிற்காலச் சாத்தாந்தை கூட்டத்திற்கும் தொடர்பு இருந்திருக்க முடியாதோ என்று ஐயப்படும் அளவிற்கு ஒரு கல்வெட்டுச் சான்று காணப்படுகிறது. இதனைக் கால வரிசைப்படி பின்னால் விளக்கிக் கொள்வோம்.

அடுத்து தூரன் கூட்டம். இக்கூட்டத்தின் பெயர்க் காரணத்தைப் பொன்குன்ற நாட்டு இருங்கோ வேளைப் பற்றிச் சொன்ன பகுதியில் கூறப்பட்டது எனவே தூரன் கூட்டம் கொண்கான நாட்டிற்கு அப்பால் அல்லது ஒரு காலத்தே கொண்கான நாட்டோடு இணைந்திருந்திருக்கக் கூடிய துவரைப் பதியிலிருந்து வந்து குடியேறிய கூட்டமேயாகும். ஆயினும் இக் கூட்டத்தவரின் குடியேற்றம் கொங்கு நாட்டில் பிற்காலத்திலே நிகழ்ந்திருக்கக்கூடியதே. அதற்கு முன்னர் இக் கூட்டத்தவர் பொன் குன்ற நாட்டிலும் பிறகு அதற்கு மேற்கே இருந்ததாகப் பிற்காலக் கொங்குணி அரசர்களின் பொறிப்புகளிலே குறிக்கப்படும் தோர நாடு என்னும் நாட்டுப்பகுதியிலும் வாழ்ந்து வந்திருக்க வேண்டும். அடுத்து குறிக்கத்தக்க மற்றொரு கூட்டம் பண்ண கூட்டம் ஆகும். இக்கூட்டத்தினரின் முதல்வனோ அல்லது இந்தக் கூட்டத்தினருள் ஒருவனோ, சிறு குடி கிழான் பண்ணன் என்னும் வேளாளர் தலைவன் ஒருவனைச் சங்கப் பாடல்கள் குறிப்பிடுவதால் இக்கூட்டத்தவரின் பழமை சங்க காலத்திற்கொண்டே விளங்கி வருவது என்று தோன்றுகிறது.

---

1 சாத்தான் என்ற பெயர் ஐயனார் கடவுளுக்கும் உரியது. ஆனால் இது பிற்கால வழக்கேயாகும்.

ஆயினும் இக்கூட்டத்தவர் பற்றி பிற்காலத்து கல்வெட்டுகள் சிலவற்றிலே குறிப்புகள் காணப்படுவதால் இதனை பின்னால் விளக்கமாக அறியலாம். கொங்கு வேளாளர் கூட்டங்களிலே சங்க காலக் கொங்கர்களுடன் இணைத்துக் காணத்தக்க மற்றொரு கூட்டம் செங்கண்ணார் கூட்டமாகும். இக்கூட்டம் ஆதியில் கொண்கான-துளு நாடுகளுக்குத் தலைமை பூண்டு இருந்த நன்னன் மரபினரோடு சம்பந்தப்பட்ட மிகப் பழைமைச் சிறப்புடைய கூட்டமாகும். இக்கூட்டத்தின் மூலம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளிலே துவங்குகிறது.

கோசர்கள் கொண்கான நாடு முழுவதையும் கைப் பற்றிக் கொண்ட பின்னர் அந்நாட்டை ஆண்ட நன்னன் மரபினர் வட ஆற்காடு மாவட்டம் பல்குன்றக் கோட்டத் தைக் கைப்பற்றி அரசமைத்துக் கொண்டு செங்கண்மா என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டனர் என்று கூறப்பட்டது. இவ்வழியில் வந்தவனும், மலைபடுகடாம் பாட்டுடைத் தலைவனுமான நன்னனை அப்பாட்டின் அடிக் குறிப்பு செங்கண்மா அத்து வேள் நன்னன் என்று குறிப்பிடு கிறது. எனவே அம்மரபு வழி வந்த வேளாளர் கூட்டத்த வரே கடைசியாகத் தாம் ஆண்ட செங்கண்மா நகரத்தின் பெயராலே செங்கண்ணார் கூட்டத்தவர் என்று தம்மைக் குறித்துக் கொண்டனர் என்று தோன்றுகிறது. இவ்வாறு கொண்டால் செங்கண்ணார் கூட்டம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளிலே புகழுடன் வாழ்ந்து வந்த வேளாளர் கூட்டம் என்று உறுதியாகக் கூறலாம். இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணார் என்னும் புலவர் ஒருவர் அகநானூறு 279 ஆம் பாடலைப் பாடியவராகக் காணப்படு கிறார். இவரும் இக்கூட்டத்தைச் சேர்ந்த வேளாளப் புலவரே என்று தோன்றுகிறது. ஆயன் என்ற இணைப்புப் பெயரும் இவருக்கு உள்ளதால் இக் கூட்டத்தவரும் கால்நடைச் செல்வங்களை நிறையப் பெற்ற ஆயர்களே என்று தெரிகிறது. செங்கம் பகுதிகளில் ஆயர்கள் நிறைய இருந்தமையாலே பிற்கால நடுகற்களிலும் ஆநிரைகளைக் கவர்ந்தும், மீட்டும் உயிர் விட்ட வீரர்களைப் பற்றிய குறிப்பே மிகுதியாகக்

காணப்படுதலும் இங்கு நோக்கத் தக்கது. இனி கீரன் கூட்டம் அடுத்த கூட்டமாகும் கீரன் என்ற பெயரை உடைய பல சங்கப்புலவர்களை நாம் இலக்கியங்களில் காண்கிறோம். பொதுவாகக் கீரன் என்ற இணைப்புப் பெயர் சங்கு அறுக்கும் தொழிலைச் செய்தவர்கள் பூண்டிருந்த பெயர் என்று தமிழ் அறிஞர்கள் கூறுவார்கள்.

இதற்கு அவர்கள் காட்டும் உதாரணம் வலியக் காட்டும் உதாரணமாகத் தோன்றுகிறது. ஆயினும் கீரன் என்ற பெயருக்கு வேறு வகை விளக்கம் கூறுதல் இப்பொழுது இயலாத நிலையில் உள்ளது. அகநானூறு 166 ஆம் பாடலைப் பாடிய புலவராக இடையன் நெடுங்கீரனார் என்ற ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். இப்பெயரைக் கவனிக்கும் பொழுது இடையர்களாகிய ஆயர் இனத்திலும் கீரன் என்ற பெயர் சூடிக்கொள்ளும் வழக்கம இருந்ததாகத் தோன்றுகிறது. "ஆகெழு கொங்கர்" என்று பொதுவாகக் கொங்கர்கள் ஆயர்களாகக் குறிக்கப்படுவதிலிருந்து கீரன் என்ற பெயரை உடையவர்கள் கொங்கர்களாகவே இருக்கக் கூடும் எனலாம் அதே சமயத்தில் வேட்டுவ இனத்தைச் சேர்ந்த எயினர் களிலும் கீரன் என்ற பெயர் வைத்துக் கொள்ளும் மரபு காணப்படுவதால்[1] வேட்டுவர்களிலும் கீரன் மரபு இருந்த தாகத் தெரிகிறது. வேட்டுவர் கூட்டப் பெயர்களிலும் கீர வேட்டுவர் என்ற ஒரு பிரிவு உள்ளது. எனவே கீரன் என்ற இணைப்புப்பெயர் ஏற்கும் ஒரு குலம் அக்காலத்தே வேளாளர் வேட்டுவர் ஆகிய இரு இனத்திலும் இருந்தது. அக்குலம் பழைமையான குலம் என்ற அளவிலே நிறுத்திக் கொள்ளலாம், கீரன் என்ற இணைப்புப் பெயர் சூடிய பலர் சமண. பௌத்த சமயத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுகளிலும் நிறைய காணப்படுகின்றனர். வண்ணக்கன் என்ற இணைப்புப் பெயரை உடைய பல சங்க புலவர்கள் சங்க இலக்கியக் குறிப்புகளில் காணப்படுகின்றனர். கொங்கு

---

1 எயினந்தை (எயினர் + நந்தை) இளங்கீரனார்

அகம். 3, 225, நற். 269 போன்ற பாடல்கள்.

அரச்சலூர் பிராமிக் நாட்டு கல்வெட்டிலும் எழுத்துப் புணரு வித்தான் மணிய வண்ணக்கன் என்று ஒருவர் குறிக்கப்படுகிறார். இவ்வண்ணாக்கன் என்பார் மணிகளைச் சோதித்துத் திறம் காணும்தொழிலாளர் என்று சொல்லப்படுகின்றனர். அரச்சலூர் கல்வெட்டில் கூறப்படும் மணியவண்ணக்கன் மணியக்காரர் என இக்காலத்தும் வழங்கும் கிராமத் தலைவனாக இருந்து இருத்தல் கூடும் மணியமாக் விளங்கிய வண்ணக்க கூட்டத்தைச் சேர்ந்த தேவன் சாத்தன் என்று இவனைக் குறிக்கலாம்.

எனவே வண்ணக்கன் கூட்டமும் இக்காலத்தே வழக்கிலிருந்து கூட்டமாகச் சொல்ல முடியும். இனி மூல கூட்டமும் சங்க நாள் முதல் வழக்கில் இருந்த கூட்டமே என்பதற்கு ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மாமூலனார் போன்ற பெயர்கள் சான்று பகர்கின்றன. கொங்கு நாட்டைச் சேர்ந்த வேளாளப் புலவராகக் கருதப்படும் பெருந்தலைச் சாத்தனார் ஆவூர் மூலங்கிழாரின் மகனே யாவர். இந்த ஆவூர் என்பது கொங்கு நாட்டில் இந்நாளில் ஆனூர் என்று வழங்கப்படும் ஊரே என்று தோன்றுகிறது இது எவ்வாறாயினும் ஆவூர் கொங்கு நாட்டிலுள்ள ஓர் ஊரே என்றும் அவ்வூரைச் சேர்ந்த மூலங்கிழார் மூல கூட்டத்தைச் சேர்ந்த வேளாளப் பெருமகனே எனவும் கூறலாம். ஆகவே மூல கூட்டமும் இந்நாளிலே வாழ்ந்து வந்த வேளாளர் கூட்டம் என்று கூறலாம். ஆனால் இவர்கள் கொண்கான நாட்டிலிருந்து குடியேறிய கொங்கர் இனத்தவரா அல்லது கொங்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வீக வேளாள மக்களா என்று தெரியவில்லை.

**சமய நிலை :**

சங்க காலத்துச் சமய நிலையைப் பற்றித் தெளிவாக எதுவும் கூற இயலாத நிலையே உள்ளது. ஆனாலும் சங்க இலக்கியங்களில் சிவன், திருமால் ஆகியோர் வழிபாடு

பற்றிய செய்திகள் காணக்கிடைப்பதால் அவர்கள் பொதுவாக இக்கடவுளர்களை வழிபட்டு வந்தனர் என்று மட்டும் கூறலாம். தொல்காப்பியம் பொருளிலக்கணத்தில் குறிக்கப்படும் ஐவகை நிலப்பிரிவிற்கும் கடவுளர்கள் கூறப்பட்டுள்ளது. மலையும், மலைசார்ந்த இடமுமான குறிஞ்சிக்கு முருகனும், காடும் காடு சார்ந்த இடமுமான முல்லைக்குத் திருமாலும், வளவயல்கள் மிக்க நிலத்திற்கு இந்திரனும் கடலும் கடல் சார்ந்த இடமுமானநெய்தலுக்கு வருணனும் பாலை நிலமாகிய வறண்ட பகுதிக்கு துர்க்கையையும் அக்கடவுளர்கள் ஆவர். எனவே சமயப்பாகுபாடு அக்காலச் சமுகத்தில் இப்பொழுது உள்ளது போல் இல்லையென்றே தோன்றுகிறது. ஆயினும் மேற்குறித்த கடவுளர்களை வழிபடும் புராதன மரபினூடே வடநாட்டில் தோன்றிய வைதிக சமயமும், அதற்கு எதிராக எழுந்த சமண, பௌத்த சமயங்களும் சங்க காலத் தமிழகத்திலும் கி. மு. நூற்றாண்டுகளிலே பரவத் துவங்கியிருந்தன. இவற்றுள் மிக வலுவாக ஊன்றிக் கொண்டது வைதிக சமயமேயாகும். பௌத்த சமயம் அசோகர் காலத்தில் தமிழகத்தின் தென் பகுதிகளிலும் கூட பரப்பப்பட்டது. சமண சமயமும் அதேபோல் தமிழகத்தில் வேரூன்றியது. ஆயினும் சமண சமயம் தமிழ் நாட்டில் பரவியது கொங்கின் வழியாகவே எனலாம்.

சமணத்துறவிகள் பெரும்பாலும் மலையிடங்களையே தமது இருப்பிடமாகக் கொண்டனர். மைசூர் சரவணபெலகோலா உள்ளிட்ட கர்நாடகப் பகுதிகளில் இச்சமயம் மிகவும் வலுப்பெற்றுத் திகழ்ந்தது. அங்கிருந்து தமிழ் நாட்டிற்குள் ஊடுருவ கொங்கு நாடே அண்மையில் இருந்ததும், மலைகள் நிறைந்த நாடும் ஆனதினாலே சமணத் துறவிகள் கொங்கர் நாட்டையே தமது இருப்பிடமாகக் கொண்டு தமது சமயத்தைப் பரப்பினர். இன்றும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளை விட கொங்கு நாட்டிலே சமண சமயம் தழைத்து இருந்ததற்கான புறச்சான்றுகள் நிறையக் காணப்படுவதும் இதனை வலியுறுத்தும். இதே போல பௌத்த சமயமும் அசோகர் காலத்தில் ஓரளவு இப்பகுதிகளில் வேரூன்றியது.

இதன் சான்றே சாத்தன் என்ற பெயரைத் தரித்திருந்த பல மக்கள் பெயர்களும். ஆனால் சமண சமயம் பெற்ற அளவிற்கு பௌத்த சமயம் கொங்கில் ஆதிக்கம் பெறவில்லை என்றே பொதுவாகக் கூறலாம். கொங்கு நாட்டின் மலைப் பகுதிகளில் ஆங்காங்கே தமது இருப்பிடத்தை அமைத்துக் கொண்ட சமண சமயத் துறவிகள் தமது சமயக் கருத்துகளைக் கொங்கர்களிடையேயும், பிற மக்களிடையேயும் பரப்பினர்.

அவர்களுடைய அகிம்சா முறையும் உயிர்களைக் கொல்லாத நோன்பும் அன்பை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு அவர்கள் செய்துவந்த அறப்பணிகளும் இயற்கையாகவே அந்நாட்டில் வாழ்ந்த மக்களைப் பெரிதும் கவர்ந்தன. மக்களிடையே காலப்போக்கில் இச் சமயம் வலுவாகப் பரவியதாய் மெள்ள மெள்ள அரசர்களும் சமண சமயத்தைத் தழுவலாயினர். சேர அரசர்களுள் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலுக்குப் பிறகு அரசுரிமை ஏற்ற சேர மன்னர்கள் அனைவரும் சமண சமயத்தைத் தழுவினர் எனலாம். இதன் பிரதிபலிப்பே கொங்கர் கூட்டத்தினருள் பல கூட்டத்தவர்களின் பெயரைக் குறிப்பிடும் சமணச் சார்புடைய பிராமிக் கல்வெட்டுகளும் யானைக் கட் சேயின் மகனான பெருங்கடுங்கோ அவன் மகன் இளங் கடுங்கோ ஆகியோரது பெயரைக் குறிப்பிடும் புகளூர் பிராமிக் கல்வெட்டுகளுமாகும். சேர மன்னன் கணைக்கால் இரும்பொறைக்கும், சிவபத்தனான சோழன் செங்கணனுக் கும் போர் மூளக் காரணமே இச்சமய வேறுபாடே என்றுங் கூடத் தோன்றுகிறது. இவ்வாறு சங்க காலத்தில் கொங்கு நாட்டில் வேரூன்றத் தொடங்கிய சமண சமயம் காலப் போக்கில் வலுவடைந்தது.

★

## அத்தியாயம்-4

# கொங்கணி வம்சம்

கொங்கணி அரசு இப்பகுதியில் ஏற்படுவதற்கு உறுதுணையாக இருந்தது சமண சமயமேயாகும். இச்செய்தியைக் கொங்கணி அரசர்களின் செப்பேடுகள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றன.

"இஷ்வாகு மகாராசனுக்குத் தனஞ்செயன் என்னும் ஒரு மகன் பிறந்தான். அவனுடைய மகன் அரிச்சந்திரன். அரிச்சந்திரனின் மனைவி ரோகிணி என்பவள் இவ்விருவருக்கும் பத்மநாபன் என்னும் ஒரு மகன் பிறந்தான். இப்பத்மநாமனுக்கு மாதவன், தடிகன் என்ற இரண்டு அரச குமாரர்கள் பிறந்தார்கள். இந்த இரண்டு அரச குமாரர்களையும் சிம்மநந்தி என்னும் சமணப் பெரியோர் பேரூர் என்னுமிடத்திலே சந்தித்தார். இவ்விளவரசர்களுக்கு சிம்மநந்தி சமண சமயத்தின் பெருமைகளைக் கூறி பிறகு இவ்விரு அரச குமாரர்களுள் மாதவன் என்பவனுக்கு கொங்கணி வர்மன் என்று பட்டப் பெயர் சூட்டி அவன் தலைமையில் ஒரு அரசை நிறுவிக் கொடுத்து அவன் நாட்டில் சமண சமயத்தை நன்கு வளரச் செய்யும்படி கட்டளை இட்டார்".

ஆக கொங்கணி அரசு நிறுவப்பட்டதே கொங்கணி அரசுக்கும் சமண சமயத்திற்குமிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தம் போலாயிற்று. (இடைக்காலச் சமண சமயம்-விசய நகர அரசு பற்றிய விசேஷக் குறிப்புகளுடன்-எழுதியவர் பி. எ. சாலிடீபோர்) இவ்வாறு மாதவக் கொங்கணிவர்மனைக் கொண்டு கொங்கணி அரச நிறுவப் பட்ட சரியான காலத்தை இதுவரை எந்த வரலாற்று ஆசிரியரும் உறுதியாகக் கூறவில்லை. ஆயினும் கி. பி. 450க்கு பக்கமாக கொங்கணி அரசு நிறுவப்பட்டிருக்கலாம்

என்று காலஞ்சென்ற திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூறியுள்ள கருத்தையே பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் 1960-61ல் வெளியிடப்பட்ட தென்னிந்திய கல்வெட்டுகளின் ஆண்டு அறிக்கையில் கி. பி. 250க்குப் பக்கமான சக ஆண்டு குறித்துள்ள மாதவக் கொங்கணி வர்மன் என்பவனுடைய செப்பேடு பற்றிய குறிப்பு ஒன்று வெளியாகியுள்ளது. இந்தச் செப்பேடு போலியானது என்று அதிலே ஒரு குறிப்பு காணப்படினும்; அதனைப் போலியாகக் கொள்வதற்கு உரிய சான்று ஏதும் இல்லை. ஆயினும் அந்த ஆண்டின் அடிப்படையில் வைத்து நாம் பார்த்தால் பின்னால் பல கொங்கணி அரசர்களின் காலக் குறிப்புகளில் பெரும் மாறுதல் எற்படுகிறது. எனவேதான் அதைப் போலியானது என்று தள்ளிவிட்டனர் போலும். ஆயினும் ஹொஸக் கோட்டை செப்பேடுகள், ஹல்லகரோ செப்பேடுகள், ஸ்ரீ புருஷனின் சேலம் செப்பேடுகள், ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள வமிசா அரசர்களின் வழி அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்ச ஆண்டுகளை ஆட்சியாண்டாகக் கணக்கிட்டு அதே சமயத்தில் பதிற்றுப் பத்து, புகளூர் பிராமிக் கல்வெட்டுகள் ஆகியவை கொண்டு முன்னால் முடிவு செய்யப்பட்ட சேர அரசர்களின் காலக் குறிப்பைக் கொண்டும் கொங்கணி அரசு நிறுவப்பட்ட காலத்தை கி. பி. 350க்கு முன்னால் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே இந்தக் காலக் கணக்கீட்டை இறுதியாகக் கொண்டே இந்நூலில் கொங்கண்யாதிராஜர்களின் வமிசா வழியும் ஆட்சியாண்டுகளும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளன.

இனி இக்கொங்கண்யாதி ராஜர்களின் பூர்வோத்திரத்தைப்பற்றிப் பார்க்க வேண்டும். முன் அத்யாயத்தில் கொங்கர்கள் கொங்கண்யாதிராஜர்களின் முன்னோராக இருக்க முடியாது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. கொண்கான நாட்டைக் கொங்கர் தலைவனான நன்னனுக்குப்பிறகு கைப்பற்றிக்கொண்ட கோசர் தலைவன் ஒருவனின் வழி

வந்தவனே கொங்கணி அரசவம்சத்தை நிறுவிய கொங்கணி வர்மனுவன். எனவே கொங்கண்யாதி ராஜர்கள் கோசர் குடியினரேயாவர். இம்முடிவிற்குச் சில அடிப்படைப் பின்னணிகளைக் காட்டலாம். அவை :-

1. கோசர்கள் வாய்மை நெறியினின்றும் தவருதவர் என்னும் பொருளில் வாய்ம்மொழிக் கோசர், மெய்ம் மொழிக் கோசர் என்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதற்கேற்ப உண்மைக்கு ஒரு உதாரணமாக விளங்கும் அரிச்சந்திர மன்னனை கொங்கணி அரசர்கள் தம் முன்னேர்களில் ஒருவனுகக் குறித்துக் கொள்கின்றனர்.

2. பிற்காலக் கொங்குணி அரசர்களும், சத்யவாக்யர், நீதி வாக்யர் என்ற பட்டங்களைத் தரித்துக கொண்டனர்.

3. அரிச்சந்திரன் அயோத்தியை ஆண்ட இக்ஷ்வாகுல மன்னன். இவன் வழியினரே பின்னுல் அயோத்தி நாட்டிலிருந்து வந்து கௌசாம்பியில் குடியேறி அரசு அமைத்துக் கொண்ட கௌசாம்பியர், இக்கௌசாம்பியரே கோசராவர்.

அன்றியும் கொங்கர்களே கொங்கண்யாதி அரசர்கள் என்றும் அவர்கள் ஆண்டதாலேயே கொங்குநாடு அப்பெயரைப் பெற்றது என்றும் கொண்டால் கொங்கண அரசர்கள் தமது தாயக நாட்டை தம் மரபுப் பெயரால் கொங்குநாடு என்று குறிக்காமல் சிறிதுகாலமே தம் வசத்தில் கொண்டிருந்த இக்காலக் கொங்கு நாட்டுப் பகுதியை மட்டும் கொங்குநாடு என்று குறித்துக்கொண்டது பொருத்தமானதாகத்தோன்றவில்லை. எனவே கொங்கர் வேறு. கொங்கண்யாதிராஜர்களின் மரபு வேறு என்று கொள்வது பொருத்தமானதாகும். கொங்குநாடு என்று அந்நாடு பெயர் பெறக்காரணம் அப்பகுதிகளில் கொங்கர்கள் பெருப்பான்மையினராகக் குடியேறி நிலைபெற்று அரசும் அமைத்துக்கொண்டதாலேயாகும்.

கொங்கணி வம்சத்தை நிறுவிய கொங்கணிவர்மனுக்குப் பிறகு அவன் மகன் மாதவன். அவன் மகன் ஹரிவர்

மன் என்ற முறையில் அவ்வமிசத்து அரசராயினர். இவர்களுள் அரிவர்மனின் காலத்திலேயே தலைக்காடு கொங்கணி அரசர்களின் தலை நகரமாயிற்று. இவனுக்குப் பல்லவ அரசனை முதலாம் சிம்மவர்மன் முடி சூட்டி வைத்தான் என்று தெரிகிறது. இந்த சிம்மவர்மனின் காலம் 436-460 என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.[1] எனவே இந்த இடைக்காலத்திலே அரிவர்மன் பட்டத்திற்கு வந்தவன் எனலாம். இக்காலம் நமது முடிவின்படி கி. பி. 350க்குப் பக்கமாக கொங்கணி அரசு நிறுவப்பட்ட காலத்திற்குப் பொருத்தமாக வருகிறது. பிற்காலக் கொங்கணி அரசர்களின் செப்பேடுகள் இவனுக்குப் பிறகு விஷ்ணுகோபன், பிறகு இவன் மகன் மாதவம காராசன், இவன் மகன் அவிநீதன் (துர்விநீதனின் தந்தை) என்ற முறையில் குறிப்பிடுகின்றன. ஆனால் கொங்குதேச ராசாக்கள் சரிதம் என்ற மிகவும் பிற்பட்ட காலத்தில் அதாவது சுமார் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டதாகத் தெரியும் நாடோடிக் கதை போன்ற உரைநடை நூலில் இவ்வரச பரம்பரை வேறுவிதமாகக் குறிக்கப் பட்டுள்ளது கி. பி. 210 ஆண்டளவில் ஹரிவர்மன் ஆண்டனன் எனவும் அவன் மகன் விஷ்ணுகோபன் எனவும் இவனுக்குப் பிள்ளையில்லாமல் போனதால் மாதவன் என்பானைத்தத்து எடுத்துக்கொண்டான் எனவும் இம்மாதவனின் மகன் கிருஷ்ணவர்மன் எனவும் இவனுக்கும் மகனில்லாது இவன் தத்து எடுத்துக்கொண்ட திண்டிகராயன் என்பான், கொங்கணி அரசன் ஆனான் எனவும் இவனை மக்களும் அதிகாரிகளும் விரும்பாதபடியினால் கிருஷ்ண வர்மனின் தங்கை மகனை கொங்குணிவர்மன் என்னும் அவிநீதன் பட்டம் பெற்றான் எனவும் கூறுகிறது ஆனால் இக்கால வரலாற்றாசிரியர்கள் முடிவுப்படி இக்கிருஷ்ணவர்மன் கதம்பகுல அரசனாவன். இம்முடிவிற்குச் செப்பேட்டுச் சான்றும் உள்ளது சிவமாரவர்மனுடைய ஹல்லகரே

---

1 தென்னிந்திய வரலாறு K. A. N. சாஸ்திரி, பக்கம் 166.

செப்பேடுகளின் சுலோகம் மாதவனின் மகன் திரு நிறைந்த கதம்பகுலமாகிய ஆகாயத்திற்குச் சூர்யன் போன்ற ஸ்ரீமான் கிருஷ்ணவர்ம மகாராசனுடைய அன்பிற்குரிய சகோதரி ''மகன் என்றே கூறுகிறது. எனவே கொங்கதேச ராசாக்கள் கதை கூறுவதை உண்மையென்று கொள்ள முடியாது. அதேபோல இக்கொங்கணி அரசர்கள் அனைவரும் கொங்கு நாட்டையும் ஆண்டனர் எனவும் முதலாம் கொங்கணி அரசன் கொங்கு நாட்டு விசயஸ் கந்தபுரத்திலே (தற்கால தாராபுரம்) அரசுநிறுவினன். என்று கூறுவதும் நம்பத் தகுந்தாயில்லை. கொங்குணி அரசர்கள் என்ற வம்சப்பெயர் கொங்குநாடு என்ற நாட்டுப் பெயரோடு ஒத்து வருவதை வைத்துக் கூறப்பட்ட புனைந்துரைச் செய்தியே இக்கட்டுக்கதை என்று தான் நாம் இதைக் கொள்ள வேண்டும் இப்பிரச்சனைக்கு முடிவு காண்பது என்பது கவுண்டர் வரலாற்றிற்கு அப்பாற்பட்ட செயல் ஆதலால் அதனை விடுத்து கி. பி 600ல் பட்ட மேற்ற துர்விநீதன் காலத்திற்கே சென்றுவிடவேண்டும், ஆயினும் இந்த இடைக்காலத்தில் கொங்கு நாட்டிலும் அதன் சுற்றுப்புற நாடுகளிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அரசியல் மாறுதல்களை இனி சுருக்கமாகக் காணுதல் அவசியம்.

**களப்பிரர்கள் :**

களப்பிரர்கள் என்ற ஒரு அரச மரபினரைப் பற்றித் தமிழக வரலாறு எழுதும். எழுதிய வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் பாண்டிய மன்னர்களது செப்பேடுகளில் ஒன்று களப்பிரனென்னும் கலியாசன் என்று குறிப்பிடுவதையும், வேறு சில தெளிவற்ற சான்றுகளையும் கொண்டு களப்பிரர் கள் கொடுங்கோலாட்சி செலுத்திய முரட்டு மரபினர் என்றும் இவர்களால் தமிழர் நாகரீகம், பண்பாடு அனைத்தும் கெட்டது என்றும் எனவே இவர்கள் தமிழகத் தை ஆண்ட காலம் இருண்ட காலம் எனவும் முடிவு கட்டு கின்றனர். கலியென்பதற்கு தீமை என்று வட

மொழி மரபுப்படி பொருள் கொள்வதால் ஏற்படும் தவறே யாகும் இது. கலியரசன் என்ற பெயரில் உள்ள கலி என்பது ஒரு வம்சத்தையே குறிப்பதாகும். இதனைத் தெளிவு படுத்த பல சான்றுகள் உள்ளன.[1] களப்பிரர் என்ற பெயர் களவர் என்னும் தமிழ்ச் சொல் பழங் கன்னடத்தில் படி களபரு என்று வழங்கிபின்னர் களப்பிரர் என்றானதாகும். இக்களவர் என்பார் தொண்டை நாட்டின் வடக்கே இருந்த திருவேங்கட மலை நாட்டை மையமாகக் கொண்டு கர்நாடக மாநிலத்தின் நந்திமலைப் பகுதிகள் வரை உள்ள நிலப்பகுதிகளை ஆண்ட ஒரு மரபினராவர்.[2] இந்நாட்டிற்கு களபரு நாடு, களபப்பு நாடு என்று பிற்காலத்திலும் பெயர் வழங்கியதாக கன்னட பொறிப்புகள் பலவற்றிலிருந்தும் தெரிகிறது. இவர்களின் புகழ் சங்க இலக்கியங்களிலும் பலவாறாகப் பேசப்படுகின்றன. அகநானூறும், வேறு தொகை நூல்களும் இக்களவர் குலத்து வந்த புல்லி என்னும் சிற்றரசனைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றன. களவர் குலத் தோன்றல், களவர் பெருமகன் என்றெல்லாம் இவன் பல படியாகப் புகழப்பட்டுள்ளான். இக்குறிப்பு களிலிருந்து இக்களவர்களும் இத்தமிழினச் சிற்றரசர்களே என்று உறுதியாகத் தெரிகிறது. இவர்களே பின்னால் கலியரசர்கள், கலிகுலத்தவர்கள் என்று வழிசமுறை ஏற்படுத்திக் கொண்டனர். நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச் செப்பேடுகள் களப்பிரான் என்னும் கலி அரசன் என்று களப்பிரர்களைக் குறிப்பிடுவதும் இதனை வலியுறுத்தும், கலிகுலம் என்ற பெயருக்குக் காரணமான கலி என்ற சொல் கலி தேவன் என்னும் சமண சமயக் கடவுள் ஒருவனைக் குறிப்பதாகும்.[3] சமணசமயம் கர்நாடக

---

1. J. I. H. Vol. XXXIV. Part. II.

2. புல்லி வியன் தலை நன்னாட்டு வேங்கடம் (அகம். 83)
கள்வர் கோமான் மாவண் புல்லி விழவுடை விழுச்சீர் வேங்கடம் (அகம். 61)

3. Ep. Ind. Vol. XV P. 343.

மாநிலத்தில் வலுவாக ஊன்றிக் கொண்ட காலத்தில் இக் களவர் குலச் சிற்றரசர்கள் சமண சமயத்தை தழுவினர் போலும். இவர்களுள் ஒரிரு அரசர்கள் புத்தமதச் சார்பு உடையவர்களாகவும் விளங்கினர். எனவே களவர்கள் பயங்கரமானவர்கள் அல்ல. ஒரு காலத்தில் தமிழ் இலக்கியங்களிலும் போற்றப்பட்ட தமிழரச மரபினரே எனலாம். இவர்கள் கொங்கணி அரச வம்சம் கோசர் தலைவனால் நிறுவப்பட்டபோது நந்திமலை, திருவேங்கட மலைப்பகுதிகளில் சிறப்புடன் ஆண்டு வந்தனர் எனலாம்.

**பாணர்கள் :**

களவர்களைப் போலவே மற்றொரு சிறப்பான அரச குலத்தினர் பாணர்கள் ஆவர். பின்னால் இவர்கள் ஏனைய அரச மரபினரைப் போலத் தமக்கும் வடநாட்டுப் புராண நாயகர்களின் வழியிலே வம்சமுறை ஏற்படுத்திக் கொண்டு தம்மை மகாபலி அரசனின் வழிவந்தவர்கள் என்று கூறிக் கொண்ட போதிலும் இவர்களைப் பற்றியும் எட்டுத் தொகை நூல்களில் பல செய்திகள் காணப்படுகின்றன. அதுவும் குறிப்பாக அகநானூற்றல் இவர்கள் பல பாடல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் விவரித்துக் கூற ஆரம்பித்தால் பெருகும் என்று கூறாமல் விடப்பட்டது. இப்பாணர்கள் களவர் நாட்டிற்குத் தென் மேற்கில் இக்காலத்து வட ஆற்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதி, சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதி கோலார் மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதி ஆகியவை அடங்கிய நிலப்பரப்பினை ஆண்டவர்கள் என்று இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது. அகநானூற்றுப் குறிப்புகளிலிருந்து இவர்கள் வலிமை பெற்ற அரசர்களாக விளங்கினர் எனவும் சிறந்த மல்யுத்த வீரர்களாக விளங்கி மல்லன் என்று பெயர் பூண்டு இருந்தனர் எனவும் தெரிய வருகிறது. பிற்கால பாண அரசர்களும் தம் குலப்பழமைப் படி மல்லன், மல்லதேவன் என்ற பெயர் சூடியிருந்தமையும் இதனை வலியுறுத்தும். இவர்களது தலைநகரமான

வாணகப்பாடி என்னும் பெரும் பாணப்பாடி இன்று வாணியம்பாடி என்று வழங்குகிறது. இவர்கள் பெரும் பாணர் என்று குறிக்கப்பட்டனர்.

**திரையர்கள் :**

அடுத்துக் குறிப்பிடத் தக்கவர்கள் திரையர்கள். இவர்கள் தொண்டை நாட்டை ஆண்ட அரசமரபினர் ஆவர். இம்மரபினரது பெயரமைதி கொண்டு இவர்கள் கடல்கடந்த ஏதோ ஒரு பிரதேசத்தில் இருந்து தொண்டை நாட்டில் குடியேறியவர்கள் என்று தெரிகிறது. இதனை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற நூலில் காலஞ் சென்ற கனகசபைப்பிள்ளை அவர்களும் கூறியுள்ளார்கள்.

இத்திரையர்களின் வழிவந்த தொண்டைமான் இளந்திரையன் என்பவனைப் பற்றி நாம் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். இவனே பெரும்பாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் ஆவான். இவன் மரபினர் பின்னால் பல்லவர்கள் தலையெடுத்துத் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டவுடன் தெற்கே நகர்ந்து தற்காலப் புதுச்சேரி உள்ளிட்ட நடுநாட்டுப் பகுதிகளில் அரசமைத்துக் கொண்டு நிலைபெற்றனர் எனலாம். இவ்வாறு இவர்கள் கி. பி. 4 ஆம் நூற்றாண்டு வாக்கில் இப்பகுதிகளில் நிலை பெற்று விட்டபிறகு அங்கு தமது ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் ஆட்சிப் பகுதிக்கு மேற்கே உள்ள தகடூர் நாட்டை அப்போது அதியமான் மரபினர் ஆண்டு வந்தனர். இவர்கள் தங்களைக் குருவம்சத்தினர் என்றும் கூறிக்கொண்டனர் போலும். தமிழ்நாட்டு அரசுகள் பலவும் இம்மாதிரிப் புராண குலங்களைத் தம்குல மூலமாகக் கொள்ளத் துவங்கிய காலத்தில் திரையர் மரபினரும் இவ்வாறு குலமுறை ஏற்படுத்திக் கொண்டனர் போலும். இந்த குருவம்சத்திலே தோன்றியவனும் வேசாலிப்

பேரரையன் மார்த்தாண்டன் என்ற பெயருடையவனுமான ஒருவனைப் பிற்காலப் பல்லவ அரசன் நிருபதுங்க வர்மனின் பாகூர் செப்பேடுகள் குறிக்கின்றன. இவன் ஆண்ட நாடு வேசாலிப் பாடி நாடு என்று பெயர் பெற்றிருந்தது. இந்த வேசாலிப் பாடி நாடு என்பது முன்னாளில் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தென்பாதியாக விளங்கியது. பர்மாவில் அரக்கான் கடற்கரைப் பிரதேசத்தில் முன்னாளில் வேசாலி என்ற பெயர் கொண்ட நாடு ஒன்று இருந்தது என்பதைத் தாலமி என்னும் யவன பூகோள ஆசிரியனின் குறிப்பு ஒன்று கூறுகிறது.

ஒருவேளை இந்த வேசாலி நாட்டிலிருந்து கடல் வழியே தமிழகத்தில் வந்து குடியேறியவர்களே திரையால் அதாவது கடல் அலைகளால் தரப்பட்டவர்கள் என்ற முறையில் திரையர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.[1] இவர்கள் தமது பூர்வீக நாட்டுப்பெயரை ஒட்டி பிற்காலத்தில் தாம் நிலைபெற்று அரசு அமைத்துக்கொண்ட நாட்டை வேசாலிப்பாடி நாடு எனவும் தம்மை வேசாலிப் பேரரையர்கள் எனவும் கூறிக்கொண்டனரோ என்று கூடத் தோன்றுகிறது. இத்திரையர்கள் குருகுலத்தினர் என்று முடிவு செய்வதற்கு அகநானூற்றுப் பாடல்கள் இரண்டும் சான்று தருகின்றன. அகநானூறு 342 ஆம் பாடல் வரிகள் திருவேங்கட மலைநாட்டை ஆண்ட களவர்குல அரசன் ஒருவனை (அவன் புல்லியா அல்லவா என்பது விளங்கவில்லை) தன் நாட்டிற்குத் தெற்கே உள்ள பகுதிகளை ஆண்ட கவுரியர் என்பவர்களின் கால்நடைகளைக் கவரும் பழமையான ஊரின் தலைவன் என்று குறிக்கிறது.[2] இதில் வரும் கவுரியர் நல்நாடு என்பது திரையர்கள் ஆண்ட தொண்டை நாட்டையே குறிப்பதாகத் தோன்றுகிறது திருவேங்கடமலை நாட்டிற்குத் தெற்கே உள்ளது தானே தொண்டைநாடு! எனவே கவுரியர் என்பது திரையரையே குறிக்கும் என்று கொள்வதில் தவறில்லை. மகாபாரதக் கதையில் வரும் கௌரவர்களும் தமிழிலக்கி

ஙங்களில் கவுரியர் என்றே குறிக்கப்படுகின்றனர். கௌரவர்கள் குருவம்சத்தவர்களே என்பது அனைவரும் அறிந்த உண்மை. பிற்காலத்தில் வேட்டுவர்களில் ஒரு சாரருக்கும் குரு குல ராயர்கள் என்ற பட்டம் வழங்கப் பட்டது. எனவும் குருகுல ராயர் வரலாறு என்னும் ஒரு பழைய ஓலைச்சுவடி நூல் குறிப்புத் தருகிறது. இந்த குருகுலராயர்களுக்கும், திரையர்களுக்கும் என்ன தொடர்பு என்பது ஆய்விற்குரியது மேற் சொன்ன செய்திகளின் அடிப்படையிலே திரையர்களை நாம் குரு குலத்தவர்கள் என்றே கருதலாம். இதே கவுரியர்களது பழமையான ஊர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோடிக்கரை என்று இன்னொரு அகப்பாடல் குறிக்கிறது.[3] எனவே இவர்கள் வேசாலி நாட்டிலிருந்து கடல் கடந்து வந்து முதன் முதலாகக் கோடிக்கரைப்பகுதி களிலே குடியேறி வாழ்ந்திருக்க வேண்டும். பின்னர் சோழர்கள் தமது ஆட்சியை விரித்துக் கொண்டபோது இவர்கள் வடக்கே நகர்த்து தொண்டை நாட்டைக் கைப் பற்றி அதனைத் தமது ஆட்சியிடமாகக் கொண்டிருக்கலாம் பிறகே களவர்களிடமிருந்து திருவேங்கட மலைநாட்டையும் கைப்பற்றிக்கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில் அக நானூற்றுப் பாடல்களில் சில திருவேங்கட மலைநாட்டை களவர் கோமகனை புல்லியினுடையது எனத் திட்ட வட்டமாகக் குறிப்பிட அகநானூறு 85, 213, 393 ஆகிய பாடல்கள் வேங்கடமலையை திரையர்களுக்குரியது என்று குறிப்பிடுகின்றன. தொண்டைமான் இளந்திரையன்மீது பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையின் இறுதி வரிகளும் "நளிறு இலங்கு அருவிய மலை கிழவோனே (மலைநாட்டின்

---

1. திரையால் தரப்பட்டவன் இந்த மரபினருள் ஒருவனை தொண்டைமான் இளந்திரையன் என்பது விளக்கக் கற்பனைக் கதை ஒன்று வழங்கப்பட்டது அந்நாளில்-பார்க்க மணிமேகலை,
2. அகம் 342 வரிகள், 3, 6.
3. அகம் 70. வரிகள், 13.

தலைவனே) என்று குறிப்பிடுகின்றன. எனவே புல்லிக்குப் பிறகு களவர் நாட்டின் ஒரு பகுதி அதாவது வேங்கடமலை நாட்டைத் திரையர்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்று முடிவு செய்யலாம். அங்ஙனமெனில் தொண்டைமான் இளந்திரையன் காலத்திலே குருவம்சத்தவர்களான திரையர்களது ஆட்சி திருவேங்கடமலை உள்ளிட்ட தொண்டைநாடு முழுவதும் பரவியிருந்தது என்பது உறுதி.

மேற்குறித்த முறையில் தமிழ் நாட்டின் வடபகுதிகளை ஆண்டு வந்த இம்மூன்று அரச மரபினரும் கி. பி. 350 வாக்கில் கோலாருக்கு அண்மையில் உள்ள கங்கப் பேருரில் கொங்கணி அரசு கொங்கணி வர்மனால் நிறுவப்படும்வரை அரசாண்டனர். பாணர்களது ராஜ்ய எல்லை தென்னாற்காடு மாவட்டம் திருப்பாதிரிப்புலியூர் வரை பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. [1] பிறகு கொங்கணி அரசு எழுந்து அவர்கள் குவலாள புரத்தைத் (கோலாரை) தலைநகரமாகக் கொண்டு ஆளத்தலைப்பட்ட பிறகும் அதற்குச்சிலகாலம் தள்ளி காஞ்சியில் முதலாம் குமாரவிஷ்ணு என்னும் பல்லவ மன்னனால் பல்லவப் பேரரசு வலுவாக நிறுவப்பட்டபிறகும்இம்மூவரின் ஆட்சியும் ஆட்டம் கண்டது. இவற்றுள் அடியோடு வீழ்ந்து போனது பாணர் அரசே என்று தோன்றுகிறது. கொங்கணி வமிசத்தை நிறுவிய கொங்கணிவர்மனும் அவனுக்குப் பின்னால் வந்தவர்களும் தம்மை பாணர் குலத்தை அழிக்க வந்தவர் எனவும், பாணர்களாகிய பகைவர்களுக்கு காட்டுத் தீயைப் போன்றவன் என்றும் கூறிக்கொள்வதிலிருந்து இச்செய்தி உறுதிப்படுகிறது. [2] தொண்டை மண்டலத்தை ஆண்ட திரையர்கள் அங்கு குமாரவிஷ்ணுவால் பல்லவர் அரசு நிறுவப்பட்டதும், அந்நாட்டை விட்டுத் தெற்கே

---

1 T. V. Mahalingam, Banas in South Indian History, J. I. H Vol. X X I X. Part II Page. 158.

2 Kudalur grant. Mys. Arch. rebort. 1930 ant Ep. Car. Vol. IX Db-67.

நகர்ந்து தென்ஆற்காடு மாவட்டப் பகுதிகளில் அரசு அமைத்துக்கொண்டு விட்டனர் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இதே போல பாணர்கள் நாட்டிற்கு வடக்கே ஆண்ட களவர்களாகிற களபரு அரச குலத்தவர்கள் கொங்கணி வர்மனிடமோ அல்லது அவனுக்குப் பின்னால் அரசாண்ட மாதவன், ஹரிவர்மன் ஆகியோர் காலத்திலோ (பெரும்பாலும் ஹரிவர்மன் காலத்திலே இருக்கலாம்) தமது நாட்டுப்பகுதிகளில் ஆட்சியுரிமை இழந்தனர். ஆனால் களவர்கள் பாணர்களைப் போல வலுகுன்றிப் போய்விடவில்லை. அவர்கள் அப்படியே தெற்கே நகர்ந்து தகடூரைக் கைப்பற்றிக் கொண்டு மேலும் நகர்ந்து சிறிது சிறிதாக கொங்கு நாடு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டனர் எனலாம்.

**கொங்கு நாட்டில் களப்பிரர் ஆட்சி.**

கொங்கு நாட்டில் இவர்கள் வலிமை பெருகியது. அதற்குக் காரணம் கொங்கில் நன்கு வேரூன்றியிருந்த சமண சமயத்தை இவர்கள் பின்பற்றியவர்களாக இருந்ததே எனலாம் அல்லது தமது ஆதிக்கத்தை வலிமையாக நிறுவிக் கொள்வதற்காகச் சமணசமயத்தைத் தழுவினர் எனவும் கூறலாம் இவ்வாறு இவர்கள் சமண சமயச்சார்புடையவர்களாக ஆனமையால் கொங்கணி அரசர்களது நட்பும், உதவியும் கூட இவர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடும் எனலாம். இவர்களும் கொங்கணி அரசர்களைப் போல் யானையையே தமது அரச சின்னமாகக் கொண்டனர். இதனால் இவர்கள் கொங்கணி அரசர்களின் ஒரு பிரிவினரே என்பது சிலர் கொள்கை. அன்று. யானை சமணர்களால் போற்றப்பட்ட ஒரு சின்னம் ஆதலால் இவர்களும் இதையே தமது அரச சின்னமாகக் கொண்டனர், இவ்வாறு கொங்கு நாட்டில் சுமாராகக் கி. பி. 400க்கு மேல் 450க்கு உள்ளாக களப்பிரர் ஆட்சி ஏற்பட்டு வலுப்பட்டது. கொங்குநாடே முதன்முதலில் களப்பிரர் ஆட்சி வேரூன்றியநாடு என்பது இதுவரை வரலாற்று ஆசிரியர்கள் யாரும் மேற்கொள்ளாத புதிய முடிவாகும்.

இவ்வாறு கொங்கு நாட்டுப் பகுதியில் வலுவான அரசு அமைத்துக்கொண்ட பிறகு இக்களவர்கள் மெல்ல மெல்ல கிழக்கிலும் தெற்கிலும் தமது ராஜ்ய எல்லையை விஸ்தரித்துக்கொண்டு முறையே சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் தமது ஆதிக்கத்தை நிறுவிக் கொண்டனர்.

கொங்கில் களப்பிரர்கள் வலுவாக ஊன்றிக் கொண்ட பிறகு களப்பிர அரசர்களாக விளங்கியவர்களைப் பற்றி வரிசையாக ஏதும் அறியமுடியவில்லை. ஆயினும் பெரிய புராணத்துள் அறுபத்து மூன்று சிவனடியார்களுள் ஒருவராக விளங்கிய கூற்றுவ நயனார் கொங்கில் இருந்த அரசாண்ட ஒரு அரசரே என்று தெரிகிறது. இக் கூற்றுவ நயனாரின் தலைநகரமாகிய களந்தை என்ற ஊரும் கொங்கு நாட்டிலநெகமம் என்னும் ஊருக்கு அருகே இருப்பதும் இதற்கு ஒரு சான்றாகும். களப்பிர அரசர்கள் அனைவரும் சமண சமயத்தைத் தழுவியவர் களாக இருந்திருக்க இவர் மட்டும் சைவராக இருந்த தாலும், சோழர் குல அரசர்களுக்கு முடிசூட்டும் உரிமை பூண்டிருந்த தில்லை வாழ் அந்தணர்கள் சோழநாட்டு அரசனாக இவரை அங்கீகரித்து முடி சூட்டமறுத்ததாலும் இவர் சமண சமயத்தை விட்டு சைவத்தைத் தழுவியவர் என்றும் களப்பிர அரசர்களுள் ஒருவேளை கடைசி அரசராக இருந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது. இவ்வாறு இவர் சைவராக மாறியதையே கொங்கு தேசராசாக்கள் கதை கொங்கு நாட்டை கொங்கணி அரசர்களுக்கு முன்னதாக ஆண்டதாகக் குறிப்பிடும் இரட்டர் மரபினரின் கடைசி அரசனாக விளங்கிய திருவிக்ரம தேவ சக்கரவர்த்தி என்பான் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்தைத் தழுவினான் என்று மாறாகக் குறிப்பிடுவதாகக் கொள்ள லாம். அங்ஙனமெனில் கூற்றுவ நாயனாருக்குப் பிறகு கொங்கு நாட்டைக் கைப்பற்றிய கொங்கணி அரசன் துர்விநீதனாகவே இருக்கவேண்டும். ஏறக்குறைய துர்விநீதன் பட்டமேற்ற கி. பி. 600-க்கு 20 அல்லது 25

ஆண்டுகளுக்கு முன்பே பாண்டிய நாட்டில் கடுங்கோனும், பல்லவர்களுள் சிம்ம விஷ்ணுவும் களப்பிரர்களை வென்று முறையே பாண்டிய நாட்டையும், சோழ நாட்டையும் விடுவித்து இருக்கின்றனர். இக் கூற்றுவ நயனாரைத் தவிர அச்சுத விக்கிராந்தன் என்னும் களப்பிர அரசன் ஒருவனைப்பற்றியும் நமக்குத் தெரியவருகிறது. இவன் பௌத்த சமயத்தைத் தழுவியிருந்தவன் என்பதை இவன் காலத்தில் வாழ்ந்த புத்ததத்தர் என்பவர் இயற்றிய அபிதம்மாவதாரம் விநயவிநிச்சியம் என்னும் நூல்களிலிருந்து தெரிகிறது.

கொங்கு நாட்டைக் களப்பிரர்கள் கைப்பற்றி ஆண்ட அதே காலத்தில் வெஞ்சமன் என்ற அரசன் ஒருவனும் கொங்கு நாட்டை ஆண்டதாகத் தெரிகிறது. இவனது தலைநகரம்கொங்கு நாட்டில் இப்பொழுது வெஞ்சமாகக்கூடலூர் எனப்படும் ஊராகும். கூடலூர் என்ற பெயரையுடைய இவ்வூர் இந்த வெஞ்சமன் பெயராலே வெஞ்சமாக் கூடலூர் என வழங்கப்படுகிறது. இவன் வேட்டுவர் மரபுகளான மாவலியர் பூவாலியர், காவலியர், வேட்டுவர் என்ற நான்கு மரபினுள் பூவாலிய மரபைச் சேர்ந்த வேட்டுவ அரசனவன். வெஞ்சமாக் கூடலூர் விகிர்தேசுவரர் ஆலயத்தின் மதிலுக்கு வெளியில் வடமேற்கு திசையில் ஆற்றோரத்தில் ஒரு அரசனின் சிலை கைகூப்பிய நிலையில் காணப்படுகிறது. அவன் அருகே சிவனுருவச் சிற்பம் ஒன்றும் புதையுண்ட நிலையில் காணப்படுகிறது. இவ்வரசனின் சிலை வெஞ்சமனுடையதே எனவும் அவன் சிறந்த சிவபக்தனாக விளங்கினன் எனவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவ்வெஞ்சமன் சிவபெருமான் அருளால் தன்மீது போர் தொடுத்த வலிமைமிக்க சமணப் படைகளைப் புறங்காட்டி ஓடச் செய்து புகழ் பெற்றானும். இந்தச் சமணப்படையினர் யாராக இருத்தல் கூடும்? இதற்கு இரண்டு வகையில் விடை கூறலாம். கொங்கணிவமிச அரசர்கள் சமணசமயத்தைப் பரப்பும் ஒப்பந்தத்துடன் அரசு ஏற்படுத்திக் கொண்டு சமண சமயத்தவர்

களாகவே விளங்கியதால் இக்கொங்கணி அரசன் ஒருவனுடைய படையையே இவன் எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக்கூடும். அல்லது சமண சமயச் சார்புடைய களப்பிர அரசர்களுள் ஒருவனது படையை எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக்கூடும். களப்பிரர்கள் சமண சமயத்தவர்களே என்பதைக் கல்லாடம் என்னும் தமிழ் நூலும்

படைநான்குடன்று பஞ்சவன் துரத்தி
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர் சார்ந்து நின்று அரன்பணியடைப்ப
(கல். 56)

என்று தெளிவாகக் கூறுகிறது. எனவே சமண சமயிகளாகிய களப்பிர அரசர்கள் படையையே வெஞ்சமன் தாக்கி வெற்றிப் பெற்றிருத்தல் கூடும் என்பதே பொருத்தமானது. இவ்வெஞ்சமன் கூற்றுவ நயனாருக்கு முன் காலத்தவனாகவோ அல்லது சம காலத்தவனாகவோ இருந்து இருக்கலாம். இவனோடு ஒருவேளை நட்புச் செய்து கொண்டதன் பயனாகவே கூற்றுவ நயனார் சைவராக , மாறியிருத்தலும் கூடும்.

களப்பிரர்களின் ஆதிக்கம் இவ்வாறு கொங்கு நாட்டிலும் தமிழகத்தின் ஏனைய பகுதியிலும் பரவியிருந்தது ஏறக்குறைய 200 வருட காலத்திற்கும் குறைவான கால அளவிலே யாகும். பிறகு கி. பி. 575-80 வாக்கில் பாண்டிய நாட்டில் கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னனும் ஏறக்குறைய அதே காலத்தில் தொண்டை மண்டலத்தில் புகழ் பெற்ற முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் தந்தையான சிம்மவிஷ்ணுவும் களப்பிரர்களை வென்று முறையே பாண்டிய நாட்டையும், சோழ நாட்டையும் விடுவித்துக் கொண்டனர். பிறகு கி. பி. 600-ல் பட்டம் ஏற்ற கொங்கணி அரசர்களுள் புகழ்பெற்ற துர்விநீதன் என்பவனும் கொங்கு மண்டலமும் களப்பிரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு அவர்களின் வலிமை பெரும்பாலும் ஒடுக்கப்பட்டது. ஆயினும் களப்பிரர்கள் வரலாற்று அரங்கிலிருந்து முற்றிலும்

மறைந்து விடவில்லை. கொங்கணி அரசர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக மாறிய இம்மரபினர் தமது பூர்வீக நாட்டுப்பகுதிகளான பெங்களூர், கோலார், சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதி ஆகியவை அடங்கிய சிறு நிலப்பரப்பை ஆண்டு வந்தனர். இவ்வாறு ஆளப் பட்ட பகுதியே கொங்கணி அரசர்களின் பொறிப்புகளில் களபப்பு நாடு [1] களவர் நாடு [2] கலிநாடு [3] என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்தில் கொங்கு மண்டலததின் வடக்குப் பகுதியில் சிற்றரசர்களாக விளங்கி வந்த கொங்கராகிய வேளாளர் தலைவர்களும், தெற்குப் பகுதியில் சேரர், அதியர் குலத் தவர்களும் சிற்றரசர் நிலையிலும் களப்பிரர்களுக்கு அடங்கிய வர்களாக வாழ்ந்து வந்திருக்க வேண்டும். இவர்களுள் சேரர்களும், அதியமான்களும் பின்னுல் அவ்வப் பொழுது தனியுரிமை பெற்று ஆண்ட போதிலும் கொங்கர்களும் வேட்டுவர்களும் சிற்றரசர்கள், கிராமத் தலைவர்கள் அளவிலே நின்று விட்டனர். ஆனுல் பிற்காலத்தில் கொங்கணி அரசன் துர்விநீதன் முதலானவர்களும், வேறு சில அரச மரபினரும் இவர்களுக்கு முழு ஆதரவு கொடுத்து வந்ததால் இவர்கள் ஆங்காங்கே கிராமங்கள் தோறும் ஆட்சிப் பொறுப்பேற்று காமிண்டர்களாக (கிராமத் தலைவர்கள்) ஆக்கப்பட்டனர். இதனை அடுத்த அத்தியாயங் களில் காணலாம்.

---

1 My. Arch. rebort. 1927, No. 118.

2 Eb. Car. Vol. X Chintamani 9,

3. Ibid. Vol. IH 97.

★

# அத்தியாயம்-5

## கவுண்டர்கள்

"கொங்கு தேச ராசாக்கள்" என்னும் பழம் நூல் கொங்கு நாட்டைக் கொங்குணி அரசவம்சத்தை நிறுவிய கொங்கணி வர்மன் முதல் அனைத்துக் கொங்குணி அரசர்களும் ஆண்டதாகக் குறிப்பிடுகிறது. இக் கதை கூறும் முடிவு எந்த அளவிற்கு உண்மை என்று அளவிட்டுச் சொல்வதற்கில்லை. ஆயினும் கொங்கு நாட்டு வரலாற்றை முதன் முறையாக எழுதிய திரு. மா ஆரோக்யசாமி அவர்கள் இந்நூல் கூறும் முடிவையே பெரும்பாலும் உண்மையெனக் கொண்டு அரச வரலாற்றைத் தொகுத்துள்ளார். இதனை நாம் முழுவதும் ஏற்பதற்கில்லை. அதே சமயத்தில் அடியோடு தள்ளி விடுவதற்கும் இல்லை முழுவதும் ஏற்க முடியாததற்கு காரணம், இந்நூலில் காட்டப்பட்டுள்ள முடிவிற்கு இந்நூலைத் தவிர வேறு உறுதியான சான்று எதுவும் இல்லை மேலும் துவக்ககாலக் கொங்குணி அரசர்கள் காலத்தின் இடையே பல தயாதிச் சண்டைகள் எழுந்து அவ்வரச மரபு பிளவு பட்டு ஒரு பிரிவினர் காஞ்சி பல்லவர்களையும், ஒரு பிரிவினர் சாளுக்கியர்களையும் ஆதரித்து ஏதோ ஒருவாறு தமது அரசாட்சியை நடத்தி வந்திருக்கின்றனரே அன்றி கொங்கு நாட்டின் தென் எல்லை வரை பெரிய சாம்ராஜ்யத்தை ஆளும் அளவிற்குச் சிறப்பு பெற்றிருக்கவில்லை.

இன்னும் கொங்கு அதையொட்டிய பகுதிகளின் இடைக்கால அரசியல் வரலாறு சென்ற அத்தியாயத்தில் கண்டது போல களப்பிரர், திரையர் போன்றவர்களின் ஆதிக்கத்தின் கீழ் மாற்றி மாற்றி இருந்திருக்கிறது. ஆகவே பல்லவ சிம்ம விஷ்ணு, பாண்டியன் கடுங்கோன் ஆகியோர் எழுச்சி பெற்று கொங்கின் இருபுறங்களிலும் பேரரசுகள் இரண்டு உருவான சம காலத்தில் கொங்குணி அரசர்களாக விளங்கிய அவிநீதன், (545-600) துர்விநீதன் (600-655)

ஆகியோர் காலத்திலேயே கொங்கு நாடு கொங்கர்கள் வசமிருந்து இக் கொங்குணி அரசர்களின் நேரிடையான ஆதிக்கத்தின் கீழ் வந்தது என்று கொள்வதே பொருத்தமானதாகும். இக்காலத்திற்கு முன்பு வரை கொங்கு நாடு கொங்கர் நாடாகவே விளங்கி வந்தது எனலாம். கங்கு நாடாகிய நகடுர் உள்ளிட்ட அக்காலத்தமிழகத்தின் வடமூலைப்பகுதிகள் களப்பிரர், பாணர் ஆகியோர் வசம் சென்று விட்டதால் இக்காலத்தே கொங்கர் கொங்கு நாட்டிலே நிலையாகத் தங்கி அவ்வப்போது வலிமையுடன் விளங்கிய களப்பிரர் முதலானோரின் கீழடங்கிச் சிற்றரசர்களாகவும், சில சமயங்களில் சுயேச்சை பெற்ற அரசர்களாகவும் விளங்கினர். இவர்களின் கொடிச் சின்னமும், அரசமுத்திரையும் சிங்கமாகவோ அல்லது அன்னமாகவோ இருந்து இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இதனைப் பின்னால் உறுதி செய்வோம்.

**துர்விநீதனும் கொங்கர்களும் :**

மேலே குறித்தபடி கொங்கு மண்டலம் முழுவதையும் தமக்குக் கீழ்க் கொண்டு வந்து ஆண்ட கொங்குணி அரசர்களுள் அவிநீதனின் மகனான துர்விநீதனே (கி. பி. 600-655) முதலிடம் வகிக்கிறான்.

இவன் தன்னுடைய மகளை சாளுக்கிய புலிகேசிக்கு மணம் செய்து கொடுத்து இருந்தான். இவனுக்குப் பிறந்தவனே பின்னால் தன் தந்தை புலிகேசியைக் கொன்று பல்லவநரசிம்மன் வாதாபியைத் தீக்கிரையாக்கி நாசம் செய்ததனைக்காக பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வந்து சிறிதுகாலம் பல்லவ நாட்டையும் ஆண்டுபழிக்குப்பழி வாங்கிய சாளுக்கியன் முதலாம் விக்ரமாதித்தன் ஆவன். இந்த விக்ரமாதித்தன் பட்டமேற்ற ஆண்டான கி. பி. 655 வரை துர்விநீதன் ஏறத்தாழ 55 ஆண்டு காலம் கங்க ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இருந்து ஆட்சி செலுத்தி வந்துள்ளான். இவனுடைய ஆட்சியே கொங்குமண்டலத்தின் அரசியல் முறையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. சேரசோழ, பாண்டியர் ஆட்சி முறையைப்போல இவனது

ஆட்சியில் கொங்குநாடு பல வளநாடுகளாகவும், அவ்வள நாடுகளின் கீழ்பல கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தலைவன் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. இவனது ஆட்சிமுறை முழுவதும் தக்ஷிணபிடபூமி ராஜ்யங்களின் ஆட்சிமுறையைப் பின்பற்றியதாகவே இருந்துள்ளது. இவனுடைய ஆட்சியமைப்பில் மூன்றே மூன்று பிரிவுகள்தான் முக்கியமானவை. முதல்பிரிவு மத்திய அரசு இரண்டாவது அவ்வரசுக்கு அடங்கிய நாடுகளின் இயற்கை அமைப்பிற்கும், குடியேறியுள்ள மக்களின் பண்பாட்டு முறைக்கும் ஏற்றவகையில் பிரிக்கப்பட்ட சிறுசிறு நாடுகள். மூன்றாவது அந்நாடுகளில் உள்ள கிராமங்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு தலைவன், அத்தலைவனிடமே அக்கிராமத்தை நல்ல நிலையில் ஆட்சி செய்வதற்கேற்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிறு நாடுகளும் ஆயிரக்கணக்கான கிராமங்களைத் தன்னுள் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக கங்கர்களது ராஜ்யமான கங்கபாடியை எடுத்துக்கொண்டால் கங்கபாடி 96,000 என்று கங்கர்களின் செப்பேடுகளில் குறிக்கப்படுகின்றன. இவ்வெண்ணிக்கை அந்நாட்டில் உள்ள மொத்த குடியிருப்புப் பகுதிகள் அதாவது அக்ரகாரம் அல்லது கிராமத்தைக் குறிக்கும். இதே முறைதான் தக்கிணத்து மன்னர் பரம்பரையினரான, சாளுக்கியர், ராஷ்ட்ரகூடர், கதம்பர், முதலானவர்களது செப்பேடுகளிலும் காட்டப்பட்டுள்ளன. இதேமுறை மத்திய பாரதத்தில் ஆட்சி புரிந்த குப்தர்கள், காளச்சூரி அரசர்கள், முதலானவர்களது நாடுகளிலும் பின்பற்றப் பட்டதாகத் தெரிகிறது. இரட்டப்பாடி ஏழரை லட்சம், பானவாசி 12000 என்று குறிப்பிடப்படுவதும் இதே நோக்கத்தில் தான் இதே முறையைத்தான் கங்கர்களும் பின்பற்றினர்.

இவனுடைய ஆட்சிகாலத்தில் கொங்கு மண்டலம் முழுவதும் இவனது ஆளுகைக்கு வந்து விட்டதால் இவன் தன் நாட்டு ஆட்சி முறைப்படி கொங்கு மண்டலத்தைக் கொங்கு 2000 எனப்பிரித்து விட்டான்

இந்த 2000 என்ற எண்ணிக்கை கொங்கு மண்டலத்தினுள் அடங்கியிருந்த 2000 குடியிருப்புக்களைக் குறிக்க வந்தது இவ்வாறு பல்வேறு எண்ணிக்கையில் குடியிருப்புக்களைக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை ஒன்ருகச் சேர்த்து அவற்றிற்கு ராஜப் பிரதிநிதியாக மத்திய அரசின் உரிமையாளரான மன்னரின் பிள்ளைகளும், மற்றும் நெருங்கிய உறவினர்களும் விளங்கினர். சுருக்கமாகச் சொல்லப் போனல் கொங்குணி இளவரசர்கள் அரசியல் அறிவு பெற்றதே இவ்வாறு ராஜப்பிரதிநிதிகளாய் இருந்ததின் மூலமேதான். துர்விநீதன் காலத்தில் கொங்கு 2000த்துக்கும், இவன் மகனே அரசப் பிரதிநிதியாக இருந்தான். இவ்வாறு ஒரு நாட்டை பல ஆயிரம் கிராமங்களாகப் பிரித்து ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமத் தலைவன் (காமிண்டன்) ஒருவனை நியமித்து ஆளும்முறை கொங்கு மண்டலத்தில் முதன்முறையாக இவன் காலத்திலே அமுல் படுத்தப்பட்டது போலும்

ஒரு ராஜப்பிரதிநிதியின்கீழ் அடங்கியிருக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய ஆயிரக்கணக்கான குடியிருப்புப் பகுதிகளுக்கும் ஒவ்வொரு தனித்தலைவர்கள் இருந்தனர். இத்தனித் தலைவனைத் தேர்ந்தெடுக்கும்முறை குறிப்பிடத் தக்கது: ஒவ்வொரு குடியிருப்பிலும் குடியேறியிருக்கும் குடும்பங்களுள் சமுதாயத்தின் எந்தப்பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் அதிகமாக இருக்கிறதோ அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுள் மக்களைத் தம் வசப்படுத்தி நிர்வகித்துச் செல்லும் ஆற்றலும், நிறைய நில புலன்களும், முன்னேர் தேடி வைத்த சொத்துக்களும் உடையவனாக இருந்து நல்ல பண்பும், குற்றம் செய்து தண்டனை பெற்ருே அல்லது பிறர் சொத்துக்களை ஏமாற்றி அபகரித்தல் போன்ற தீய செயல்களை செய்திராத பண்பாளர் ஒருவரை அக்குடியிருப்புப் பகுதிக்குத் தலைவனாக நியமித்தனர். இந்தத் தகுதிகளுடன் அவன் வீரமும், போரில் பின் வாங்காத ஆற்றலும், போர்த் திறமையும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் நாட்டின் மீதும், மத்திய அரசின் மீதும் பற்று மிகக் கொண்டவனாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு ஒரு குடியிருப்பிற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் படுபவரே காமிண்டர் அல்லது கவுண்டர் எனப்பட்டனர்.

கவுண்டர்கள் என்ற இணைப்புப் பெயரைக் கொண்ட ஒரு பிரிவினர் தமிழகத்தில் கொங்கு நாட்டிலே பெரும்பான்மையோர் வாழ்கின்றனர். ஆனாலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் போன்ற மலை நாட்டு ஊர்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இவ்வாறு கவுண்டர் என்ற பின்னிணைப்புப் பெயரைக் கொண்ட இனத்தார் சிறு பான்மையினர் உள்ளனர். இக்கவுண்டர்கள் தமிழ் நாட்டில் மட்டுந்தானா உள்ளனர்? என்று வினா எழுப்பினால் இல்லை என்று தான் கூற வேண்டும் கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்தின் தெற்கு, மேற்கு புற நாடுகளிலும் கவுட, கவுடர் என்ற இணைப்புப் பெயரைக் கொண்ட இனத்தார் வாழ்கின்றனர். அதுவும் குறிப்பாக கர்நாடக மாநிலத்தில் இக்கவுடர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். அப்படியானால் இக்கவுடர்களும், தமிழ் மக்களாகிய கவுண்டர்களும் ஒரே இனத்தவர் தாமா? இல்லை. தமிழ் நாட்டுக் கவுண்டர்கள் வேறு. கவுடர்கள் வேறு தமிழ் நாட்டுக் கவுண்டர்களில் வேளாளர்களும் இருக்கின்றனர். வேட்டுவர்களும் இருக்கின்றனர். இதேபோன்ற கவுடர்களிலும் பல உட்பிரிவினர் அதாவது வேறுபட்ட இனத்தினர் உள்ளனர். இதற்குக் காரணம் என்ன? கவுண்டர் என்ற பொதுப் பெயர் பூண்டிருப்பதால் இவர்கள் அனைவரும் ஒரே சாதியினர் இல்லையா?

**கவுண்டர் என்பது சாதிப்பெயரல்ல:**

கவுண்டர் என்று, முதலியார், செட்டியார், பிள்ளைமார்கள் என்பன போல, இயற்பெயரோடு பின்னிணைப்புப் பெயரை இவர்கள் வைத்துக் கொண்டிருந்தாலும், கவுண்டர் என்பது ஒரு தனிச்சாதியைக் குறிப்பதாகாது கவுண்டர் என்று ஒரு தனி சாதியும் இல்லை. கவுண்டர்

என்ற சொல் ஒரு தனிச் சாதியைக் குறிப்பதுமில்லை. எனவே கவுண்டர் வரலாறு என்னும் இந்த நூல் ஒரு சாதி சார்புடைய நூலல்ல என்பதை வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்நூல் சாதி வேற்றுமைகளை வளர்ப்பதாகவோ, அல்லது சாதி வேற்றுமைகளை எடுத்துக்காட்டி உயர்வு தாழ்வுகளைச் சுட்டிக்காட்டுவதாகவோ அமையாது.

**கவுண்டர் என்ற சொல்லின் பொருள் :**

கவுண்டர் என்ற சொல்லுக்குப் பொருளைத் தமிழ் லெக்சிகனில் தேடிப் பார்த்த போது அதில் கொங்க வேளாளர், அனுப்பன், காப்பிலியன், பள்ளி, செம்படவன் ஊராளி வேட்டுவன், தமிழர், கன்னடர் சிலருக்கு வழங்கப்படும் பட்டப் பெயர், சண்டாளர், என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல பிற்காலத்தே சாதி வேற்றுமை தலை தூக்கி வளர்ந்த பிறகு ஏற்பட்டவைகளே எனலாம் இதில் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களுள் ஊராளி என்ற சொல்லே பொருத்தமானது. ஏனெனில் கவுண்டர் என்ற சொல் ஒரு பட்டப் பெயராகக் கிராமத் தலைவர்களுக்கே வழங்கப்பட்டதாகும். ஊராளி என்ற தமிழ்ச் சொல் கவுண்டர் என்ற சொல்லுக்குரிய பொருளேயாகும் கவுண்டர் என்ற இப்பட்டப் பெயரின் ஆதிவடிவம் காமிண்டர் என்பதாகும். மிண்டர் என்பதற்கு வலிமையுடையவன் என்பது பொருளாகும். எனவே காமிண்டன் என்ற சொல்லை கா+மிண்டன் எனப் பிரித்துக் கா=காவல் தொழிலைச் செய்யும் மிண்டன்=வலிமை உடையவன் அதாவது ஊரைக் காத்தல் தொழிலைச் செய்யும் வலிமையுடையவன் என்பது பொருளாகும். இதனையே வடமொழியில் கா=கிராமத்தின் மிண்டன்=வலிமை மிக்க தலைவன் எனவும் பொருள் காட்டி கிராமத்தின் வலிமை மிக்க தலைவன் என்று கூறலாம் முன்னதை விடப் பின்னதே காமிண்டன் என்ற சொல் வருவதற்குப் பொருத்தமானதாகத் தோன்றுகிறது. காரணம் காமிண்டன் என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக்

கொள்ளாமல் வடமொழிச் சொல்லாகக் கொண்டதால் தான் பிற்காலத்தில் கொங்கு நாட்டில் சோழராட்சி மலர்ந்த போது இக்காமிண்டர்கள் ஊராளி என்னும் தமிழ்ச் சொல்லால் அதாவது ஊரை ஆள்பவன் என்ற பொருளில் குறிக்கப்பட்டனர்.

எனவே கவுண்டர் என்பவர் அக்கால அரசர்களுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்கவர்கள், பரம்பரையால் உயர்ந்தவர்கள், கங்க அரசர்கள் காலத்தில் அரசப் பிரதிநிதிக்குரிய அந்தஸ்து பெற்று புகழுடன் விளங்கியவர்கள், என்று சொல்வதே பெரிதும் பொருத்தமுடையதாகும். அரசன் பலதாரமணமுடையவன் என்பது அவனது பட்டத்து ராணியில் துவங்கிக் கவுண்டர்களோடு முடிகிறது என்று வேடிக்கையாகக் குறிப்பிடுகிருர் ஒரு ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர். இக் கூற்று பொய்யல்ல உண்மையே கொங்கணி அரசர்கள் காலத்தில் கவுண்டர்கள் அத்துணை அளவிற்குப் சிறப்புப் பெற்று இருந்தனர். அரசனின் நிலங்களை பொறுப்புடன் காத்து அவனை வளப்படுத்தி உழைத்துப் பயிர் செய்து அரசனை வாழ்வித்து வந்த ஒரு அடிப்படையாளராக கவுண்டர்கள் விளங்கி வந்துள்ளனர்.

எனவே இவர்களை அரசனுடைய நிலக்குத்தகைக்காரர்களாகக் கூறலாம். அத்துடன் தம் வீரத்தாலும் நாட்டுப்பற்றாலும், ராஜ விசுவாசத்தாலும் இக்கவுண்டர்கள் அரசனுக்குரியதான தமது தலைமையிலுள்ள கிராமங்களைப் பகைவர்களின் தாக்குதல்கள் நேரும்போது வீரமுடன் தம் உயிரையும் கொடுத்துக் காத்தும் வந்துள்ளனர். எனவே கொங்கணி அரசர்களின் முறைப்படி கவுண்டர்களே அரசனின் உயிர்நாடியாக விளங்கி வந்தார்கள். இதனால் தான் அரசனும் தமது இளவரசர்களோடு சமநிலையில் கவுண்டர்களை வைத்து அவர்களுக்கு எல்லையற்ற மரியாதையும், கௌரவமும் கொடுத்துப் போற்றி வந்துள்ளான். இவ்வாறு ஏற்பட்டவர்கள் தான் இன்று கோவை மாவட்

டத்திலும், சேலம், தர்மபுரி மாவட்டத்திலும் மிகப் பெரும் பான்மையினராக வாழும் வேட்டுவ, வேளாள கவுண்டர்களின் முன்னோர்களாவர்.

கவுண்டர்களுக்கு இருந்த இத்துணைச்சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக ஹரிபுரச் செப்பேட்டினைக் காட்டலாம். இதனை மிஸ்டர் ரைஸ் என்னும் ஆங்கிலேயர் பதிப்பித்துள்ளார். இதில் குறிப்பிடப்படும் செய்தி கவுண்டர்களுக்கு அக்காலத்தே எத்துணை அளவிற்கு அந்தஸ்து இருந்தது என்பதை உள்ளங்கை நெல்லிககனி போல எடுத்துரைக்கிறது.

இச்செப்பேடு ராமதேவ கவுண்டர் என்பவர் பகை அரசன் போர்மேல் கொண்டுவந்து நாட்டை அழிக்க முயன்றபோது இளவரசன் ஒருவனையும், மற்றும் அரசனுக்கு வேண்டப்பட்டவர்களையும், தான் ஒருவனே நின்று வீரமுடன் காத்துவந்து அபாயம் அதிகரித்தபோது அவர்களை ரகசியமாக வேறு மறைவிடத்திற்கு அழைத்துச் சென்றே காப்பாற்றிப் பிறகு போர் ஓய்ந்து அமைதி ஏற்பட்ட பிறகு பத்திரமாக அரசனிடம் ஒப்புவித்தமைக்காக அரசன் அவருக்கு ஏராளமான நிலபுலன்களை மான்யமாக விட்ட செய்தி குறிக்கப்படுகிறது. இக்கவுண்டருக்கு அளிக்கப்பட்டகிராமத்தின் பெயர் தேவனூர் என்பதாகும். இவ்வூர் இன்றும் தலைக்காட்டிலிருந்து பதினைந்து மைல் தென் கிழக்கே விஜயகந்தபுரம் என்ற ஊரின் அருகே உள்ளது.

கவுண்டர்களின் பழமை

இந்தமுறை கொங்குமண்டலத்தில் கி. பி. 600-655ல் அறிமுகப்படுத்தப்பட்டதெனினும் கங்கநாட்டின் ஏனைய பகுதிகளில் இதற்கு முன்னரே இருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. இதுவும் ஒரு ஊகமேதவிர, இதற்குமுன்னும் (அதாவது கி. பி 600-655க்கு முன்னும்) கொங்கு மண்டலத்தில் புகுத்தப்பட்டு இருந்திருக்கவும் கூடும். ஆயினும் நமக்குத் தெரிந்தவரையில் துர்விநீதனே கொங்கு

மண்டலம் முழுவதையும் ஆண்டதாகத் தெரியவருவதால் இவன் காலத்திலே கொங்குமண்டலத்தில் கவுண்டர்கள் தோன்றினர் என்று கூறலாம். மைசூர் மாநிலம் ஏலந்தூர் தாலுகாவில் உள்ள சாமலாபுரம் கிராமத்தில் கிடைத்த செப்பேடு ஒன்றின் மாசிப்படக் குறிப்பு தொல்பொருள் ஆய்வுத்துறையின் மேற்பார்வையாளரிடம் உள்ளதாக 1960-61-ம் வருடத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் ஆண்டறிக்கையில் செப்பேடு எண் 34 என்ற தலைப்பில் காணப்படுகிறது. இச்செப்பேடு கொங்குணி மன்னன் முதலாம் மாதவனுடையது எனக் குறிக்கப் பட்டுள்ளது. ஆனல் இதில் கொடுத்துள்ள சக ஆண்டு 172என்று காணப்படுவதால் 172 + 78 கி. பி 250 ஆண்டாகிறது. நமது கணிப்பின்படி இதுசரியானதாக இராவிட்டாலும் இதுவே கவுண்டர்களைப் பற்றிக் கூறும் முதல் பழமைக் குறிப்பாகும்.

இந்தச் செப்பேட்டிலிருந்து நால் கவுண்டர் என்பார் பல கிராமங்கள் சேர்ந்த தொகுதித் தலைவர்களாக விளங்கியவர்கள் என்று தெரிகிறது இதேபோல் மசங்கி மாநிலத்தில் (கர்நாடகா) கிடைத்த மற்றொரு கல்வெட்டும் நாள் கவுண்டரின் பெயரைக் குறிப்பிட்டு இவன் பசலூர் 140 அதாவது 140 கிராமங்களைத் தன்னுள் அடக்கிய பசலூரை ஆண்டவன் என்று குறிப்பிடப்படுகிறது. எனவே நாள்கவுண்டர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைத் தமது நிருவாகத்தின் கீழ் கொண்டு இருந்தனர் தனி கிராமத்துத் தலைவர்களை நாட்டுக்கவுண்டர் என குறிப்பிட்டனர். மணியக்காரர் என்பார் நாட்டுக் கவுண்டர்களின் கீழ் அதிகாரிகளாக விளங்கியவர் என்பதும், இவர்கள் நாட்டுக் கவுண்டர்களுக்கு மக்களிடமிருந்து வரி வசூல் செய்து கொடுப்பதில் உதவியாக இருந்தனர். என்று கொங்கணி அரசர்களின் கல்வெட்டுச் செப்பேடுகளிலிருந்து தெரியவருகிறது.

துர்விநீதன் காலத்தில் முழு கொங்கு மண்டலமும் அவனது ஆளுகையின் கீழ் வந்தபிறகு கொங்கின் நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட்ட காமிண்டர் நிர்வாகமுறை அங்கு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவந்த போதிலும் கொங்குணி அரசர்களிடமே கொங்கு தொடர்ந்து இருந்துவர முடியாதபடி பாண்டியர்கள், பல்லவர்கள், காடவர்கள் சேரர்கள், மகாபலிவாண அரசர்கள், அதியமான்கள் ஆகியோரின் குறுக்கீடு 9 ஆம் நூற்ருண்டின் இறுதி வரையிலும், பிறகு பிற்காலச் சோழர்கள், கோனட்டு அரசர்கள் ஆகியோர் குறுக்கீடும் அதன் வரலாற்றில் இடம்பெற்றன. துர்விநீதன் கி. பி. 655 ல் இறந்ததும் அவன் மகன் ஸ்ரீவிக்ரமன், முஷ்கரன் முதலியோர் காலத்தில் கொங்கு அவர்கள் வசம் இருந்ததா? என்பதற்குச் சரியான சான்றுகள் கிடைக்கவில்லையாயினும் கிடைத்துள்ள பிற்காலச் சான்றுகள் சிலவற்றைக் கொண்டு கொங்கு இவ்விடைக் காலத்தில் கொங்குணி அரசர்களிடம் இருந்து இருக்க முடியாது என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை அடுத்த அத்யாயத்தில் விரிவாகக் காணலாம். பிறகு கி. பி. 678–79 ல் கொங்குணி அரசனுகப் பட்டம் ஏற்றவன் பூவிக்ரமனின் தம்பியான முதலாம் சிவமாரவர்மன் ஆவன். இச்சிவமாரன் கி. பி. 725 வரை அரசு ஆண்டவன். இவனுடைய ஆட்சிகாலத்தின் இடையில் மீண்டும் கொங்கு கொங்குணி அரசர்களிடமிருந்து பிரிந்து போய் பிறகு கி. பி. 750 அல்லது அதற்கு மேலே சிவமாரனின் மகனுன ஸ்ரீபுருஷ கொங்குணி வர்மராஜனின் வசம் உட்பட்டு பிறகு 775 க்குமேல் மீண்டும் கைவிட்டுப் போனது.

**கி. பி. 600-725ல் கவுண்டர்கள்.**

சென்ற அத்யாயங்களில் விவரித்தப்படி கொங்கு நாட்டுப்பகுதிகளில் கொண்கான நாட்டில் இருந்து குடியேறி நிலையாக வாழத் துவங்கி கொங்கு வேளாளர்கள் ஆளும் கொங்குணி அரசர்களின் ஆட்சி

முறைப்படி கிராமத்தலைவராகிக் காமுண்டர் அல்லது காமிண்டர் பட்டம் ஏற்றனர். இவ்வாறு காமிண்டர் பட்டம் ஏற்றதில் வேட்டுவர்களுக்கும் பங்குண்டு. காரணம் வேட்டுவர் செல்வாக்கு அதிகம் இருந்தபகுதிகளில் வேட்டுவர்களே காமிண்டர்களாயினர். நம் நாடு கொங்கணி அரசர்கள் வசம் சென்று அவர்களது ஆட்சி முறைக்கேற்ப இவ்வாறு வேட்டுவர்களும், வேளாளர்களும் காமிண்டர் பட்டம் ஏற்றதே இக்காலத்து அனைத்து கொங்கு வேளாள, வேட்டுவ மக்களும் கவுண்டர் என்று பொதுப்படையாகத் தம்மை அழைத்துக்கொள்ள அடிகோலியது. இவ்வாறு காமிண்டர் ஆனபிறகு கி.பி 600 க்கும் 718 க்கும் இடைப்பட்ட காலத்தில்வாழ்ந்த சில காமிண்டர்களைப் பற்றிப் பார்ப்போம்.

முதலாம் சிவமார கொங்குணி அரசனின் காலத்தில் (கி. பி. 678-725) வாழ்ந்த இரண்டு புகழ்பெற்ற வேளாளக் காமிண்டர்களைப் பற்றி நமக்குத் தெரிய வருகிறது. இவர்களுள் ஒருவர் கோசம்பி நாட்டு அரசனுன உதயணன் வரலாற்றை விவரித்துக்கூறும் பெருங்கதை என்னும் பெருங்காவியத்தை இயற்றிய கொங்கு வேளிர் ஆவர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஆயினும் கொங்கு வேளிர் என்பதிலிருந்து இவர் ஒரு வேளாளர் என்று தெரிகிறது. இவர் கோசம்பி நாட்டு அரசனை உதயணன் பற்றிய கதையைக் காவியமாகப்பாட எடுத்துக் கொண்டது நமக்கு இன்னொன்றையும் உறுதிப்படுத்துகிறது. கௌசாம்பி நாட்டிலிருந்து வந்து குடியேறிய கோசர் வழியினரே கொங்குணி அரசர்கள் என்றமையால் தம் நாட்டை ஆளும் பேரரசர்களின் முன்னோன் ஒருவனது வரலாற்றை (உதயணன்) அதுவும் தமது அரசர்களில் ஒருவரான துர்விநீதனுல் போற்றப்பட்டகதையை கொங்கு வேளிர்தமது மொழி யான தெய்வத் தமிழில் பாடித் தமக்குள்ள அரச மதிப்பைப் புலப்படுத்திக் கொண்டு பெருமை பெற்றனர் என்று கூறலாம் அல்லவா?

**மாபெருந்தமிழ்பணி**

இவ்வுதயணன் கதையாகிய பெருங்கதை பிராகிருத மொழியில் குணாட்டியார் என்பவரால் இயற்றப்பட்டதும்

பிறகு வட மொழியிலும் கன்னடத்திலும் கொங்கணி அரசன் துர்விநீதனால் மொழி பெயர்க்கப்பட்டதுமான 'ப்ருகத்கதா' என்ற சிறப்பு பெற்ற காவியமாகும். இதனைத் தமிழில் பெருங்கதை என்று பெயர் கொடுத்து மாபெரும் தமிழ்காப்பியமாக இயற்றிக் கொடுத்தது கொங்கு வேளிர் செய்த மாபெரும் தமிழ்ப் பணியாகும். இம் மாபெரும் பணிக்கு தமிழகமும் தமிழக மக்களும் சிலம்பு தந்த இளங்கோவடிகளாருக்கும் திருக்குறள் தந்த திருவள்ளுவனுருக்கும், கம்பராமாயணம் தந்த கம்பருக்கும் எவ்வாறு கடன்பட்டிருக்கிறதோ அவ்வாறே இப்புலவர் பெருமகனுருக்கும் கடமை பெற்று இருக்கிறது. இந்த வகையில் கொங்கு மண்டலத்தின் தமிழ்ப்பணியை நாம் மறப்பதற்கில்லை. மற்றைய பெரும் புலவர்களின் நினைவாக விழா எடுத்து சிறப்பிப்பது போல இப்புலவர் பெருந்தகையாருக்கும் விழா எடுத்து சிறப்பிக்க வேண்டும் இப் பெரும்கதையில் காணப்படும் காவிய நயத்தையும் இலக்கியச் சுவையையும் பற்றி பேசவேண்டும், இதன் சிறப்பை எண்ணித்தான்போலும் சிலப்பதிகார உரையாசிரியரும் விஜயமங்கலத்திற்கு அண்மையிலுள்ள நிரம்பை என்னும் வரினரான அடியார்க்கு நல்லாரும் "இரண்டாம் ஊழியராகிய கபாட புரத்தின் உதயணன் கதை என்று பாராட்டியிருக்கிருர். கொங்கு மண்டல சதகம் கொங்கு வேளிர் பிறந்த ஊர் மங்கை என்ற பெயரை உடையது. என்றும் இவர் இந்நூலை இயற்றுவதற்கு மூன்று சன்மமெடுத்தார், எனவும் சங்கத்தார் கேட்ட கேள்விகளுக்கு தம்முடைய மாணவி ஒருத்தியைக் கொண்டே விடை கூறவைத்தார் எனவும் தெரிவித்து இப்படிக் கூறுகிறது.

நீதப்புகழுத யேத்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற
கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத்தார் வெங்கவே கொங்கு
வேளடிமை
மாதை கெடுத்தாற் சொன்வது வுங்கொங்கு

இப்பெருங்கதை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களைப் போல அகற்வபாவில பாடப் பட்டதாகும் காரணம் மற்ற பாவினங்களைவிட அகற்பாவில் காவியங்களை ஆக்குவது பொருளணிகளையும், காவியத்தையும் கதாபாத்திரங்களின் குணாதிசயங்களையும், நல்ல பல கருத்துக்களையும், சிறப்பாக ஆணித்தரமாக கற்போர் நெஞ்சில் பதியும் வண்ணம் அறிவிக்க முடியும். எனவே பண்டைய புலவர்கள் மேற்கொண்ட சிறந்த முறையையே தாமும் பின்பற்றிப் பாடினர் கொங்கு வேளிர். இம்முறை மிகவும் போற்றுதற்குரியது. கம்பராமாயணம் போன்ற பிற்கால நூல்கள் வடமொழிச் செய்யுள் நடையைப் பின்பற்றி தாம் அம்மொழியிலிருந்து கடன் வாங்கி எழுதிக் கொண்ட நூல்களை வடமொழியாப்புக்கிணங்க விருத்தப் பாவிலே எழுதப்பட்டவை. ஆங்கிலப்பெரும் புலவர்களும் இதுபோல அகவற்பா போன்ற செய்யுள் நடையையே தங்களது காவியங்களை எழுதுவதற்கு பயன்படுத்தியுள்ளனர் காரணம் மற்றைய பாவினங்களைப்போல வேண்டுவது இல்லாத எதுகைமோனைகளை மேற்கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ளும் அவசியம் அகவற்பாவிற்குத் தேவைப்படாது. எனவேதான் காவியங்களுக்கு ஏற்ப அகவற்பாக்களையே கொங்கு வேளிர் இளங்கோவடிகள், சாத்தனார் போன்றோர் தேர்ந்தெடுத்துக்கொண்டு நமது காப்பியங்களை அமைத்து இருக்கின்றனர்.

கொங்கு வேளிர் ஆண்டிருக்கும் கவிப்போக்கு சிறந்த ஆங்கிலக் கவியான டென்னிசனின் காவியங்களோடு ஒருங்கு வைத்துப் போற்றக்கூடிய உயர்தரமானது. படிக்கப் படிக்க கதையின் கருத்துக்கள் படிப்பவர் நெஞ்சத்தில் ஆணித்தரமாகப் பதியும்படியும், சொல்லோவியங்களும், கருத்துச் செறிவும் நிரம்பி வழியும் இப்பெருங்கதையின் நயம்பற்றி எடுத்துரைப்பது என்றால் அதற்கே தனியாக ஒரு இதழ் வேண்டும். எனவே விரிவு அஞ்சி அதனை இங்கே எழுதாது விட்டேன். இத்தகு சிறப்புமிகு கவிஞர் பெருமகனைச் சிவமாறவர்மன் தனது நாட்டின்

ஒருபகுதிக்குக் காமிண்டராக பெற்றிருந்தது மட்டுமின்றி தனது மதிப்பிற்குரிய ஆசானாகவும், ஆஸ்தானப் புலவராக வும் ஏற்றுக்கொண்டு அவர்பால் எல்லையற்ற அன்பும், பக்தியும் கொண்டு இருந்தான் என்று சொல்வதில் தவறென்றும் இல்லை. இதனால் அன்றே இப்பெருந்தகையின் மாறாத நினைவாக இம்மன்னன் இவருக்கும் இவரது மாணவி விசயமங்கைக்கும், மற்றும் இவரது அரும்பெரும் மாணவர்களுக்குக்கூட சிலை செய்து வைத்துப் போற்றி யிருக்கிறான். கொங்கு வேளிர், அவரது மாணவர்கள் நால்வர் மாணவி விசயமங்கை ஆகிய ஆறுபேருக்கும் இன்று விசயமங்கலம் கோயிலில் காணப்படும் திருமேனி களை இன்றுள்ள மக்கள் பஞ்சபாண்டவர்சிலை திரௌபதி யுடன் உள்ளது எனவும், இதனை அடிப்படையாகக் கொண்டே இக்கோயிலின் வடபுரத்தில் காணப்படும் கிணறு ஒன்றிற்கு பீம தீர்த்தம் என்றும்பெயர் கொடுத்துப் பாரதக் கதையோடும், இதனை இணைத்து விட்டனர் இதுபோல ஐந்தாக கண்டவற்றையெல்லாம் பாரதக் கதையோடும், பஞ்சபாண்டவர்களோடும் ஒப்பிடுவது தமிழ்நாட்டின் எல்லா பகுதிகளிலும் காணப்படும் ஒரு தவறான வழக்கமாக உள்ளது. இவ் வழக்கத்தினால் மறைக்கப்பட்டுபோன உண்மை வரலாறு இன்னும் எவ்வளவு உள்ளதோ? யார் கண்டார்கள்?.

**தமிழ்ச்சங்கம்**

கொங்கு மண்டலச் சதகச் செய்யுள் ஒன்றில் இக் கொங்கு வேளிர் தமது பெருங்கதையைத் தமிழில் பாடி அதனை அரங்கேற்றியபோது சங்கத்தார் கேட்ட கேள்வி களுக்கெல்லாம் தமது மாணவியைக் கொண்டே விடை கூறச் செய்தார் என்று பார்த்தோம். சமணர்கள் தமது சமயத்தை பரப்புவதற்கு அந்தந்த நாட்டுமொழிகளில் சிறப்பாகப் பயிற்சி பெற்று இருந்தும் அவ்வப்பகுதி மொழிகளை ஆதரித்தும் அந்நாட்டு மக்களின் மனங்கவர்ந்த புலவர்களாக விளங்கி அந்தப் பெருமையினாலே அவ்வப் பகுதி மக்கள் தமது சமயத்தை ஆதரிக்கும் மனப் போக்

கினை இயற்கையாகவே செய்து வந்தனர் சமயத்தைப் பரப்பும் சமய பிரசாரகர்களுக்கு இருக்கவேண்டிய நல்ல தொரு குணம்இது கருத்து வேற்றுமையின்றி அவ்வப்பகுதி மொழிகளை ஆதரித்து மக்களின் நன்மதிப்பைபபெற்றால் மட்டுமே ஒரு நாட்டில் பிற சமயங்கள் தழைத்தோங்கும் இவ்வழியை எல்லா மதத்தினருமே பொதுவாக மேற் கொண்டிருந்தனர் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. எனவே விசயமங்கலத்தில் அக்காலத்தே சிறப்பு மிகப் பெற்ற தமிழ்ச்சங்கம் ஒன்று விளங்கி வந்துள்ளதாகத் தெரிகிறது. இச்சங்கம் பின்னும் நெடுங்காலம் வரை நிலைத்திருந்ததெனத் தெரிகிறது. வில்லிப்புத்தூராரின் மகாபாரதம் பாயிரப்பாடலில் இச்செய்தி குறிப்பிடப் படுகிறது.

எங்குமிவன் இசை பரப்பி வரும் நாளில் யாமுரைத்த
விந்ததாட்டில்
கொங்கர்குலவரபதியாட்கொண்டானென்றெரு
வள்ளைக்குருசில் தோன்றி
வெங்கலியின் மூழ்காமல் கருநடப்பேர் தென்னாத்து
விழாமனுள்காம்
சங்கமென முச்சங்கத்தண்டமிழ்நூல்
கலங்காமல் தலை கண்டானே

கொங்கர் குலத்து அரசன் ஒருவன் ஆதரித்ததால் வள்ளன்மை மிக்க சிறந்தோன் ஒருவன் தோன்றி பண்டைய மூன்று சங்கங்களிலும் இயற்றப்பட்ட சிறந்த பல தமிழ் நூல்கள் கலி அரசர்களாகிய களப்பிரர்களால் அழிந்து போய் விடாமல் காப்பாற்றும் பொருட்டு இந்த கொங்கு நாட்டில் நான்காவது தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவி தமிழ் வளர்த்து வந்தான் என்பது இச்செய்யுளின் பொருள் இக் கொங்கர் குலபதி கொங்கு நாட்டுப்பகுதிகளை ஆண்டுவந்த கொங்கு வேளாளச் சிற்றரசனாகவே இருத்தல் கூடும். கலி அரசர்களாகிய களப்பிர அரசர்களால் அழிந்து போய் விடாமல் என்ற வரியிலிருந்து இவன் களப்பிரர்கள் கொங்குநாட்டை ஆண்ட காலத்தில் வாழ்ந்தவன் எனலாம்.

இம் மாபெருந்தமிழ்ப்பணியால் கொங்குவேளிர் பெற்ற பெரும்புகழை விசயமங்கலம் சமணக் கோயிலின் நடைபாதை

யில் பாவப்பட்டுள்ள கருங்கல் தளங்களுள் ஒன்றில் காணப்படும் வடமொழிக்கல்வெட்டொன்று அழகாகக் கூறுகிறது.

ப்ருகத்கதா லாவண்யரத் ப்ரதாபக: என்பதே அக்கல்வெட்டு வரிகள் இதனை வடமொழிப் பேராசிரியர் ஒருவரிடம் கூறி இதன் பொருள் விளக்கம் கேட்டபோது அவர் இதனைச் சற்றே திருத்திவாசித்துப் பார்த்து இது ஒரு அருமையான குறிப்பு ப்ருகத் கதையைத் தமிழில் மொழிபெயர்த்த ஒரு பெரியாரின் சிறப்புப் பற்றி இவ் வரிகள் குறிப்பிடுகின்றன என்று கூறினர். திருத்தமான வாசிப்பு இதோ ப்ருகத்கதாவண்ய ரப்தப் ப்ரதாபக.

அதாவது அழகு மிக்க ப்ருகத் கதையை தமிழ்ல் மொழி பெயர்த்துக் கொடுத்ததால் அளவிடற்கரிய புகழ் பெற்றவர் என்பதேயாகும்.

இன்ஞெரு காமிண்டர் பெரிய புராணத்துள் சேக்கிழாரால் சிறப்பாகக் குறிப்பிடப்படும் விறன்மிண்ட நாயனர் என்னும் பெயருடன் 63 சைவ நாயன்மார்களுள் ஒருவராகும் புகழ் பெற்றவர் இவ்விறன் மிண்டரும் கொங்கு வேளாளர் குடியினரே இவர் திருச்செங்கோட்டை ஆண்ட காமிண்டராவர். இதனைச் சேக்கிழார்

"சேரர் திருநாட்டூர்களில் முன்சிறந்த
மூதூர் செங்குன்றூர்"

என்றும் இவ்வூரில் வாழ்ந்த வேளாளர் குலத்தில் விறன்மிண்டர் பிறந்தார் என்பதனை "அப்பொற்பதியினிடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார் என்றும் குறிப்பிடுகிருர். இவர் சுந்தரமூர்த்திஸ்வாமிகளின் காலத்திற்கு முன்பே வாழ்ந்தவர். சுந்தரர்காலம் 9 ஆம் நூற்றுண்டின் இடைக்காலமாகும். எனவே அதற்குமுன் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு என்று கொண்டாலும் அது சிவமாறவர்மனின் இறுதிக்காலமாக அமையும் சுந்தரர் இவரை "விரிபொழில் சூழ் குன்றையார் விறன் மிண்டர்க்கடியேன்" என்று குறிப்பிடுகிருர். இவ்வரியில் குன்றையார் என்பதில் உள்ள குன்று திருச்செங்கோடாகும் குன்றையார் என்பது குன்று நாட்டின் தலைவர் என்பதைக் குறிக்குமாதலால் இவரைத் திருச்செங்கோட்டுக் காமிண்டர் (கவுண்டர்) என்று கொள்ளலாம். வேட்டுவர்களில் இக்காலத்தில் சிறப்புற்றிருந்த காமிண்டர் களைப்பற்றி மக்கு ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

## அத்தியாயம்-6.

# கி. பி. 680–880-ல் கொங்கு.

கொங்கணி அரசன் முதலாம் சிவமாரவர்மனின் இறுதிக் காலத்தில் கொங்கின் வரலாற்றில் பல புதிய மாறுதல்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் கொங்கின் வரலாற்றில் சேர அரசர்களும், அதியமான் அரசர்களும், பாணர்களும் கங்கர்களும் எல்லாவற்றிற்கும் மேலாக பல்லவர் குலத்துடன் தொடர்புகொண்ட காடவ அரசமரபினரும் எழுச்சிபெற்றுத் திகழ்ந்தனர். இடையிடையே கொங்கணி அரசமரபினரும், இராஷ்டிர கூடர்களும் கொங்கில் மேலாதிக்கம் செலுத்தி வந்தனர். இக்காலத்தில் கொங்கர்களும், வேட்டுவர்களும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தனர், வடகொங்கிலும், தொண்டை மண்டலத்தின் மேற்குப் பகுதியிலும் குடியேறியிருந்த கொங்கர்களாகிய வேளாளர்களில் பலர் சிற்றரசர்களாகவும் கிராமத் தலைவர்களாகிய காமிண்டர்களாகவும் புகழ் பெற்று விளங்கினர் இதே போலபொத்தப்பி நாட்டிலிருந்து வேட்டு வர்களும் கொங்குநாட்டில் குடியேறிச் சிறப்புப் பெற்றனர். எனவே இந்த கட்டத்தில் நாம் இப்புதிய அரசியல் மாறுதல் களைப்பற்றி ஓரளவிற்கு அறிந்துகொள்ள வேண்டும். இம் மாறுதல்களைப்பற்றி முதன் முறையாக அறிவதற்கு கருவி யாக அமைந்தது செங்கம் நடுகற்களேயாகும். இந் நடுகல் கல்வெட்டுகள் கொங்கின் இடைக்கால வரலாற்றில் ஒரு புதிய அரசியல் சூழ்நிலை உருவானதைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன. அது மட்டுமின்றி கொங்கு வேளாளக் கவுண்டர் கூட்டங்கள் சிலவற்றின் பூர்வோத்திரங்களையும், அவர்கள் வாழ்ந்த நாடுகளையும், அதே போல சில வேட்டுவக் கவுண்டர் தலைவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவியாக அமைகின்றன. இதற்காக நாம், இக்கல்வெட்டுகளைச் சில ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்து வெளியிட்ட தமிழ்நாடு தொல்பொருள் துறை இயக்குநருக் கும், கல்வெட்டு ஆய்வாளர்களுக்கும் நன்றி செலுத்துதல்

வேண்டும். இந்நடுகற்கள் குறிப்பாகத் தெரிவிப்பனவற்றை மட்டும் சான்றாகக் கொண்டு இப் புதிய வரலாற்றுச் சூழ் நிலையை முற்றிலுமாக அறியக் கூடவில்லை. ஆயினும் இவற்றை ஒட்டியனவாகச் சுற்றுப்புற நாடுகளில் கிடைக்கும் வேறு சில சான்றுகளையும் கொண்டு ஓரளவு உறுதிப்படுத்த முடிந்தது. அதனை இங்கு சுருக்கமாகக் காண்பது கவுண்டர் களின் வரலாற்றைத் தெளிவாக அறிவதற்கும், கொங்கு நாட்டின் தொடர்பற்ற வரலாற்றில் ஒரு தொடர்பு காண்ப தற்கும் அவசியமானதாகும்.

**செங்கம் நடுகற்கள் :**

செங்கம் நடுகற்களில் கீழ்க்கண்ட அரசர்களின் பெயர் கள் காணப்படுகின்றன.

1) கோவிசைய சிங்கவிண்ணவர்மன்
2) ,, மகேந்திரவர்மன்
3) ,, நரசிம்மவர்மன்
4) ,, ஈஸ்வரவர்மன்
5) ,, நந்தீச்சுரவர்மன்
6) ,, பரமேஸ்வரவர்மன்
7) ,, கம்பவர்மன்

இம்மன்னர்களின் பெயர்கள் பல்லவர் குலத்தில் தான் காணப்படுகின்றன எனவும் இவர்கள் இப்பகுதியில் ஆண்ட சிற்றரசர்களாக இருக்கலாம் என்று ஐயம் எழுந்தாலும், இப்பகுதியில் கங்கர், பாணர் முதலியோரே சிற்றரசர்களாக வலிமை பொருந்தி ஆண்டனர் என்பதே வரலாற்று ஆசிரியர் களின் கொள்கையாதலால் இவர்கள் பல்லவ மன்னர்கள் தாம் என்பதில் ஐயமில்லை எனவும் செங்கம் நடு கற்கள் என்ற நூலின் பதிப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது. இக் குறிப்பில் கங்கர் என்று சொல்லப்பட்டவர் மேலைக் கங்கர்கள் என்று கூறப்படும் கொங்கண்யாதிராஜர்களேயாகும். ஆனல் கொங்கண்யாதி ராஜர்கள் கங்கர்கள் என்பாரினும்

வேறானவர் என்பதைச் செங்கம் நடுகற்களில் சில தெளிவாக உணர்த்துகின்றன.

இந்த நிலையில் முன் அத்யாயங்களில் கங்கர் என்பாரைப் பற்றிக்குறிப்பிட்டு அவர்கள் தமிழ்நாட்டின் முனைப்பகுதிகளை இங்கு ஆண்ட தமிழ் மன்னர்களே என்று காட்டப்பட்டதை நினைவில் கொள்ள வேண்டும் முனையதிரையர் முனையரையர் எனப்படும் பிற்காலத் தமிழ்க் குறுநில மன்னர்களும் தமது குலப்பெயரை கங்கு என்பது முனை என்ற பொருள் தருவதைக் கொண்டு தம்மை முனையதிரையர் என்று கூறிக்கொண்ட கங்கர் குடித்தவரே என்று தோன்றுகிறது. செங்கம் நடுகற்களில் கங்கர்களைச் கொங்கணி அரசிலும் வேறானவராகக் குறிப்பிடுவதைக் கொண்டு கங்கர்கள் என்பார் தமிழரசர்களே என்பதை செங்கம் நடுகற்களை ஆராய்ந்து பதிப்பித்த அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். அவ்வாறெனில் கொங்கணி அரசர்களின் நாடும் கங்கபாடி என்று குறிக்கப்படுவானேன் என்றால் அந்நாடு தக்காணத்தின் தென்முனைப்பகுதியாக விளங்கியமையாலே எனலாம்.[1] தமிழ்நாட்டின் முனைப்பகுதியை ஆண்டவர்களும் கன்னட அரச மரபினரோடு பெருமளவில் தொடர்பு கொண்டிருந்ததால் கங்கு என்ற சொல்லை இவர்களும் கையாண்டிருக்கலாம். இந்த முடிவோடு செங்கம் நடுகற்கள் குறிப்பிடும் அரசர்களைக் கவனித்தால் அவர்கள் தமிழ் நாட்டின் வடமுனை நாட்டையாண்ட கங்கதியரையர்களே என்று தோன்றுகிறது. இதனை சில நடுகற்களின் போக்கும் தெளிவாக உணர்த்துகின்றன. அவ்வாறெனில் பல்லவ அரசர்களின் பெயர்கள் இவர்களுக்கு வழங்கப்படுவானேன் என்று ஒரு ஐயமும் எழுகிறது. ஆனால் தமிழகத்தில் பிற்காலச்சோழ அரசர்களின் ஆதிக்கம் சிறப்பாக நடந்து கொண்டிருந்த காலத்தில் கொங்கு நாட்டையாண்ட கோனாட்டு அரசர்கள் சோழமன்னர்களின் பெயர்களையே'

---

1 கங்கு என்ற சொல் எல்லை என்பதை உணர்த்துவதாகப் புறநானூறு 396 ஆம் பாடலில் கையாளப்பட்டுள்ளது.

அவர்கள் சூடிக்கொண்டிருந்த இராசகேசரி பரகேசரி என்ற பட்டங்களுடனும் கூடத்தரித்திருந்தனர். அதற்கு என்ன காரணம் இருந்திருக்கக் கூடுமோ அதே காரணம் கங்கதி யரைசர்களும் பல்லவமன்னர்களின் பெயர்களை வைத்து கொள்வதற்கும் இருந்திருக்கலாமல்லவா? மேலும் இவர்கள் பல்லவர்குலத்தோடு உறவும் கொண்டிருந்திருக்கவும் கூடும். இதனை பின்னால் காண்போம்.

சென்ற அத்யாயத்தில் திரையர்களாகிய குரு குலத்து அரசர்கள் தொண்டை நாட்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆட்சி அமைத்துக்கொண்டபிறகு தொண்டை நாட்டிற்குத் தென்பகுதியான இக்காலத் தென்னார்காடு மாவட்டப் பிரதேசங்களில் குடியமர்ந்து அரசு அமைத்துக் கொண்டனர் என்று கூறப்பட்டது காலப்போக்கில் அவர்கள் அப்பகுதிகளில் வலுவான அரசு அமைத்துக்கொண்டனர். திருக்கோயிலூரைத்தலை நகரமாகக் கொண்டு சங்க காலமுதல் சிற்றரசர்களாக விளங்கிய மலையமான்கள் முதலானோர் கூட திரையர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாயினர் கி. பி. 550க்குப் பக்கமாக காஞ்சி பல்லவ அரசனான சிம்மவர்மனின் மகன் சிம்மவிஷ்ணு தன் தந்தையின் காலத்திலே தெற்கே படையெடுப்பு நிகழ்ந்தது பல்லவர் ஆதிக்கத்தை விரிவு படுத்தத் துவங்கினான். இவனுடைய பள்ளான்கோயில் செப்பேடுகள் இவன் மற்றொரு சிம்மவிஷ்ணுவை வெற்றி கொண்டான் என்று கூறுகிறது. அந்த சிம்மவிஷ்ணு திரையர் குல அரசனுவே இருத்தல் கூடும். இவனை வென்ற பிறகு பல்லவ சிம்மவிஷ்ணு சோழ நாட்டையும் கைப்பற்றினான் தெற்கே பாண்டியன் கடுங்கோனால் தோற்கடிக்கப்பட்டு வலியிழந்த களப்பிரர்களை வென்று கொங்கு நாட்டினின்றும் அவர்களைத் தமது தாயக நாட்டிற்குத் துரத்தினான் திரைய அரசன் சிம்ம விஷ்ணு பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசன் ஆனான். இதுமுதல் திரைய மரபினர் ஏறத்தாழ நரசிம்மவர்மன் காலம் வரையில் அந்நிலையிலே இருந்தார்கள் போதும் இந்தகாலத்திலே அவர்கள் மேற்கே சிறிது

சிறிதாக தமது ஆதிக்கத்தை விரிவு படுத்திக்கொண்டே இருந்தார்கள் எனலாம். இதற்கு பல்லவர்களின் உதவியும் இவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும். களப்பிரர்களை மீண்டும் வலிவடையச் செய்யாமல் இருக்க இவ்வாறு திரையர்களுக்கு ஆதரவு தருவது பல்லவர்களுக்கு அவசியமாகியது. நடுநாடான தென்ஆற்காடு மாவட்டப்பகுதிகளுக்கு மேற்காக அமைந்திருந்த தகடூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் வடமுனை நாடுகள் ஆற்றுவளம் பெற்றதாக இருந்த போதிலும் பெரும்பகுதி நிலங்கள் பயிர் செய்யப் படாத காடுகளாக இருந்தமையால் அப்பகுதிகளில் ஏராளமாகக் குடியமர்ந்திருந்த கொங்கர்கள் முதலான வேளாண்குடி மக்களின் ஆதரவுடன் திரையர்கள் காடுகளை அழித்து வளநாடுகளாக்கி வந்ததாலும், காடுகள் நிறைந்த நாடுகளின் அதி அரையர்களாக விளங்கினமையாலும் தம்மைக் காடவர்கள் என்று அழைத்துக்கொண்டனர். காடவர்கள் பல்லவர்களையே குறிப்பிடும் என்றும் இதுவரை வரலாற்று ஆசிரியர்கள் நம்பி வந்தனர் அன்று. காடவர்கள் திரையர்களே. பல்லவர்கள் தம்மை பிரம்ம க்ஷத்திரியர்கள் என்று கூறிக் கொண்டனர். காடுகள் அதிகம் இல்லாது வளம் மிக்க நாடான தொண்டை நாட்டில் தமது அரசை நிறுவிக்கொண்டிருந்தனர். எனவே பல்லவர்களை காடுசூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்து காடு கெடுத்து நாடாக்கி வந்த காடவர்களாக கூறுவது இயலாது. எனவே திரையர் மரபினரே காடவர்கள் என்பதே பொருந்தும். பல்லவர்களுக்கு அடங்கியவர்களாகவும், சில சமயங்களில் சுயேச்சை பெற்று இத்திரையர்கள் ஆட்சி செலுத்தி வந்த இவ்விடைக்காலத்திலே இக்குலத்து அரசர்களாக விளங்கியவர்களைப்பற்றி முறையான சான்று ஏதும் கிடைக்கவில்லை.

இனி எதிர்கால ஆய்வில் ஏதாவது கிடைக்கக் கூடும். ஆயினும் பெரிய புராணத்துள் 63 நாயன்மார்களில் ஒருவராக விளங்கிய ஐயடிகள் காடவர் கோன், இக்காலத்தே காடவ அரசர்களாக விளங்கியவர்களுள் ஒருவரே என்று

நம்புவதற்கு இடமுள்ளது இவர் ஒரு வேளை காடவ அரசன் சிம்மவிஷ்ணுவாகவும் இருத்தல் கூடும். செங்கம் நடுகற்களுள் ஒன்று சோமாசி கோத் திருமாறன் என்னும் அரசன் ஒருவனைக் குறிப்பிடுகிறது இவனும் காடவ அரசனே போலும். இச் சோமாசி மாறனைப் பற்றி ஒரு சில குறிப்புகள் கிடைத்து உள்ளன. சோமாசி மாறன் என்ற இவர் பெயரில் மாறன் என்பது பாண்டிய அரசர்களோடு தொடர்புடையதாகத் தெரிகிறது. சிற்றம்பாக்கம் என்னும் ஊரில் உள்ள சிவன்கோயிலில் காணப்படும் பல்லவ பரமேஸ்வரவர்மன் 1ன் கல்வெட்டு ஒன்று அக்கோவிலைக் கட்டிய அரசன் சோமாசியான் என்பவன் என்று கூறுகின்றன. இச்சோமாசியான் சோமாசி மாறனாகவும் இருத்தல் கூடும். அவ்வாறு இருப்பதாயின் சோமாசி மாறனின் காலம் முதலாம் பரமேஸ்வரவர்மனது காலமாகவோ அல்லது அதற்குச் சற்று முன்னரோ இருக்கக்கூடும் அவ்வாறெனில் இக்காலத்தில் இவர்கள் மேற்காக கொங்கு நாட்டின் வட பகுதிகளிலும் தமது அரசை விவரித்து இருந்தகாலத்தில் பாண்டிய அரசன் ஒருவனோடு மணவினைத் தொடர்பு ஏற்பட்டு அதன் பயனாகப் பிறந்தவனாக இருத்தல் கூடும்

மேற்குறிப்பிட்ட திரைய அரசர்களுக்குப் பிறகு இந்த மரபினரின் ஆட்சியில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இம் சோமாசி மாறனுக்கோ அல்லது இவன் மகனுக்கோ இரண்டு புதல்வர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களுள் மூத்தவன் ஸ்கந்தவர்மன் என்பவன். இளையவன் சிங்க விஷ்ணு என்னும் சிங்க விண்ணவர்மன். திரைய அரசர்களுள் முன்னோன் ஒருவனான சிம்ம விஷ்ணுவைப் போல இவன் அப்பெயரைப் பெருமல் தமிழ் முறையிலே சிங்க விண்ணன் என்று பெயர் பெற்றிருக்கக் காரணம் இவன் தாய் தகடூர் அதியமான் மரபில் உதித்தவளாக இருத்தல் வேண்டும். அதியமான் அரசர்கள் தம் பெயரோடு விண்ணன் என்ற பெயரைத் தலை முறையாகத் தரித்து வந்தனர் என்று தெரிகிறது. சங்க இலக்கியங்களுள் அகநானூறு 301 ஆம் பாடலைப் பாடிய புலவராக அதியன் விண்ணத்தனார்

என்ற ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் தருமபுரி மாவட்டத்திலுள்ள இருளப்பட்டி என்னும் ஊரில் இருந்து கண்டுபிடித்து வெளியிட்டுள்ள நடுகல் ஒன்றில் விசைய மங்கலமாண்ட விண்ணப்பெருமானடி என்னும் குறுநில மன்னன் ஒருவன் குறிக்கப்பட்டுள்ளான்.[1] இந்த விசைய மங்கலம் கொங்கு 24 நாடுகளுள் ஒன்றான குறுப்பு நாட்டில் உள்ளது. (கோவை மாவட்டம் திருப்பூருக்கு அண்மையில் உள்ளது) இக் குறுப்பு நாட்டை இடைக்காலத்தில் அதியமான் மரபினர் ஆண்டுவந்ததாக பெரிய புராணம் புகழ்ச் சோழ நாயனார் புராணத்திலிருந்து தெரியவருகிறது.[2]

இவற்றிலிருந்தெல்லாம் விண்ணன் என்ற பெயர் அதியமான் மரபினருடையது என்று தெரிகிறது. ஆகவே தனது தாய்க்குலம் விளங்க இவ்விளவரசன் தன் பெயரைச் சிங்க விண்ணன் என்று வைத்துக்கொண்டு இருக்கலாம். இவனுடைய மூத்த சகோதரனை ஸ்கந்த வர்மன் திறைய அரசனாக விளங்கிய காலத்தே அந்நாள் வரை கொங்குணி அரச மரபினரிடமும், இடைக்காலத்தில் சில காலம் வலிமை பெற்று தருமபுரி, அதற்குத் தென் பகுதிநாடு ஆகியவை வரையிலும் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்திக் கொண்டிருந்த பாண அரசர்களிடமும் இருந்து வந்த கங்க நாட்டை (தமிழ் நாட்டின் வடமுனைப் பகுதி) கைப்பற்றி தனது ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டு ஓரளவிற்கு வலிமைபெற்றவனாக ஆனான் எனலாம். இதற்குச் சாதகமாக கி.பி-675 முதல் 700 வரையிலான காலச்சூழலும் அமைந்திருந்தது. ஆனால் இந்நாளில் பாண்டிய அரசர்களுள் புகழ்பெற்றவனான அரிகேசரி பராங்குச மாறவர்மன் வலுப்பெற்று தனது ராஜ்யத்தை வடக்கே வடகொங்கு நாடுவரை விஸ்கரித்துக் கொண்டான். இவன் கிழக்குக்

---

1 Damilika-1970. by Tamil nadu Archocological Dept. page. 92.

2. அளவில் அரணைக்குறுப்பில் அதியர்கோன், பெரிய. 4. புகழ்சோ பக். 620'

களைமூமாக தனது ராஜ்யத்தைவிரிவு படுத்திக்கொள்ளஇத் திரைய அரசன் ஒரு தடையாக இருந்தான்போலும். எனவே இவனைத் தாக்கி இவனுக்கு அடுத்து பட்டம் எற்க இருந்த இவனது மகனையும் கொன்று விட்டான் பாண்டியன். இதனை வேள்விக்குடிச்செப்பேடுகள் அரிகேசரி மாறவர்மனதுவெற்றி களைக் கூறுமிடத்தில் "குறுநாட்டவர் குலங்கெடுத்தும்" என்றுத்தெளிவாக கூறுகிறது குலம்கெடுத்து என்பது பட்டத்திற்குரிய ஒரே மகனைக் கொன்று என்றே பொருள் கொள்ளத்தக்கது. எனவே இந்த ஸ்கந்தவர்ம னுக்குப் பிறகு பட்டம் ஏற்கத்தக்க உரிமை படைத்த மகன் இவனுக்கு இல்லாமல் போயிற்று. எனவே இவனுக்குப்பிறகு இவன் தம்பியான சிங்க வின்னனே அரசப்பொறுப்பை எற்றுக்கொண்டான். ஸ்கந்தவர் மனுக்கு ஒரு மகள் இருந்தாள். இவளை காஞ்சி பல்லவ மரபினருள் ஒருவனும், கொங்கணி அரசன் பூவிக்கிரமன் என்பவனால் சிறைபிடிக்கப்பட்டவனுமான மகேந்திரவர்மன் என்பவனுக்கு மணம் செய்து வைத்து இருந்தான். இவர் களுக்கு ஜெயபல்லவாதி ராஜன், வருத்த பல்லவாதி ராஜன் என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தனர்.[1] இவ் விருவரும் ஆளுவதற்கு ராஜ்யம் இன்றி இருந்ததால் பூவிக்கிரமனின் தம்பியான முதலாம் சிவமாரவர்மக் கொங்கணி ராஜனது ஆதரவைப் பெற்று ஸ்கந்தவர்ம னின் உரிமையில் இருந்த கங்க நாட்டின் ஒருபகுதிக்கு உரிமை கொண்டாடினர். சிவமாரவர்மன் அப்போது சாளுக்கியர்களின் ஆதரவு பெற்று இருந்ததோடு வலிமை மிக்க அரசனாக விளங்கியதால் அவனைப் பகைத்துக்கொள்ள விரும்பாத சிங்க வின்னன் கங்க நாட்டின் மேற்குப் பாதியை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தான். இப் பகுதிக்கு இப்பொழுது மைசூர் மாவட்டம் டி. நரசிப்பூர் தாலுக்காவில் ஹெம்மிகே என்ற பெயருடன் விளங்கும் பெருமுகையூர் தலைநகரமாக இருந்தது. இப்பெருமுகையூர் நாட்டிற்கு இவ்விரு இளவரசர்களும் அரசுரிமை பூண்டனர்.

---

1 ஹல்லகேரே செப்பேடுகள். Ep. Can. Vol Mand. 113.

ஆயினும் இவர்கள் சிவமாரவர்மனுக்கு அடங்கிய சிற்றரசர்களாகவே விளங்கினர். இப்பெருமுகையூரை ஆண்ட அரச குமாரர்களில் ஒருவனே கங்க அரசனாக இருளப்பட்டி நடுகல்லில் குறிக்கப்படுபன் ஆவன். இந்தச் செய்திகளை யெல்லாம் விரிவுபடுத்த ஆரம்பித்தால் மக்கள் வரலாறு என்னும் இந்நூலின் நோக்கம் நிறைவேறுமல் போகும். எனவே இவற்றை விரிக்காது விடுகிறேன். ஆயினும் விரித்து தெளிவு படுத்த ஏராளச்சான்றுகள் உள்ளன.

இந்த சமயத்தில் சிங்க விண்ணனின் அதிருஷ்டம் பலமாக இருந்தது. இக்காலத்தே பாண அரசர்கள் சாளுக்யரின் ஆதரவு பெற்று இருந்ததால் ஓரளவு வலிமையுடன் திகழ்ந்தனர். அதியமான் அரசர்கள் இப்பாணர்களுக்கு அடங்கியவர்களாகவே விளங்கி வந்தனர். இவர்களுள் ஒரு அதியமான் மரபினன் வாணவர்ம அரசரிடம் படைத் தலைவனாக விளங்கி வந்தான். இவன் மகன் விண்ணப் பெருமான் அடி என்பவன். இவன் குறுப்பு நாட்டு விசய மங்கலத்தை ஆண்டுவந்தவனாக முன்னர் குறிப்பிட்ட சிற்றரசனேயாவன். இவனுக்கு ஒரு தம்பி இருந்தான். இவன் பின்னால் சிங்க விண்ணனின் மகளை மணந்து கொண்டவன். இதற்கிடையே காஞ்சி பல்லவ அரசனோ அல்லது வேறுயாரோ-பெரும்பாலும் காஞ்சி பல்லவ அரசனாகவே இருத்தல் கூடும், ஒரு அரசன் பெருமுகையூரை ஆண்ட கங்க அரசன்மீது போருக்கு வந்தான். இப்படையெடுப்பைத்தடுக்க பாண அரசனும், விண்ணப்பெருமானடியும் முயன்று இருளப்பட்டிக்கருகே அப்படைகளை தடுத்துப் போர் செய்து வெற்றி பெறுமல் இறந்து விட்டனர். இவர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களே இருளப்பட்டி நடுகற்களாகும். இப்பாணஅரசன் சாளுக்கிய விஜயாதித்தனின் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்படும் விக்கிரமாதித்த பலீந்திர பாண அரசனேயாவன்[1] எனவே இவன் இறந்ததை அக்கல் வெட்டின் துணைகொண்டு கி. பி. 720-21

1. A.R.E. 1920. No 359 and Report 1921 Para 2 and 3.

என்று முடிவு செய்யலாம். இருளப்பட்டி நடுகல் குறிக்கும் சோவிசைய விண்ணவர்மன் சிங்க விண்ண வர்மனே ஆதலால் இவனுடைய மூன்றுவது ஆட்சியாண்டு நடுகல்லில் குறிக்கப்பட்டிருப்பது கொண்டு சிங்கவிண்ணன் பட்ட மேற்றது கி. பி. 717 அல்லது 718 எனலாம். அதியமான் அரசனுகிய விண்ணப்பெருமானடியும் பாண அரசனும் ஒரே சமயத்தில் இறந்து விட்டதால் இக்குழப்பநிலையைப் பயன் படுத்திக்கொண்டு இவன் தகடூர் நாட்டின் வட பகுதிகளை பாணர்களிடமிருந்து விடுவித்து தன் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான். விண்ணப்பெருமானடியாகிய அதியமான் அரசன் இளம்வயதிலே இறந்தவனுகத் தெரிவ தால் அவனுக்கு அடுத்து அதியமான் அரசனுகப் பொறுப் பேற்கத்தக்க மகன் இல்லாமல் போய்விட்டான் போலும் அல்லது சிறுவனுக இருந்தான் எனலாம். எனவே தனது தாய் வழி உரிமையுடன் சிங்கவிண்ணனே தகடூர்நாடு முதல் குறுப்பு நாட்டு விஜயமங்கலம் உள்ளிட்ட கொங்கு நாடு முழுமைக்கும் அரசனுனன்.

சிங்க விண்ணனுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி இது. இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாட்டின் கிழக்கெல்லை கொள்ளிடம் பிரியும் மேலணைவரை பரவி யிருந்தது. திருச்செங்கோட்டுத் திருப்பணிமலை என்னும் ஒரு பழைய நூலில் அக்கோயிலுக்குத் திருப்பணி செய்த அரசர்களுள் முதலாமவனுக சிங்கவர்மன் என்ற ஒரு அரசன் குறிக்கப்படுகிருன். இச்சிங்கவர்மன் எந்தமரபைச் சேர்ந் தவன் என்று அந் நூல் கூறவில்லை. ஆயினும் திருச்செங் கோட்டுக் கோயிலுக்கு கருவறை, விமானம், கோபுரம் முதலியவை அமைத்தும், அழகிய திருவீதிகளை உண்டாக்கி நகரமைத்தும் பல திருவிழாக்களுக்கு நிலந்தங்கள் விட்டும் திருச்செங்கோட்டு இறைவனுக்குப் பணிசெய்தான் எனவும் இவ்வாறு செய்தமைக்குக் காரணம் செங்கோட்டு இறை யனின் திருவருளினுலே இவன் அரசுரிமை பெற்று தன்

மனோரதம் ஈடேறப் பெற்றமையாலே என்றும் கூறுகிறது.[1] இதிலிருந்து சிங்கவர்மன் என்பான் முதலில் சாதாரண அரசன் நிலையிலிருந்து பின் தன் வலிமையாலும் இறைவனின் திருவருளினாலும் பேரரசு நிலையை அடையத்தக்க ராஜ்யத்தை அடைந்தான் என்று தெரிகிறது. இச் செய்தி மேற்குறித்த சம்பவங்களுக்குப் பொருந்தி வருவதால் இச்சிங்க வர்மன் கோவிசையசிங்க விண்ணவர்மனாகவே இருத்தல் வேண்டும் எனலாம். இன்னும் தமிழ் செய்யுள் இலக்கண நூலான யாப்பருங்கலம் என்னும் நூலில் மேற்கோள் பாடலாகக் காட்டப்பட்டுள்ள தனிப்பாடல் ஒன்று "பேரரசர்கள் ஆண்ட நாடுகளையெல்லாம் வென்று தன் புகழை அங்கெல்லாம் நிலை நாட்டிய கூரிய வேலை உடைய விண்ணன் என்பான் பழசை என்னும் நகரில் ஒரு சமணர் கோயிலைக் கட்டினான் என்று கூறுகிறது.[2] இப்பழசை என்பது கோவை மாவட்டத்தில் இன்று பழயகோட்டை என வழங்கப்படும் ஊரின் பழைய பெயரேயாகும். எனவே இப்பகுதிகள் விண்ணன் என்ற பேரசன் ஒருவரின் ஆட்சியின் கீழ் இருந்தது என்று தெரிகிறது. இவ்விண்ணன் என்னும் பேரரசனும் சிங்க விண்ணவர்மனாகவே இருக்க வேண்டும். இதிலிருந்து சிங்க விண்ணவர்மனை விண்ணன் என்றும் அக்காலத்தே குறிப்பிட்டதுண்டு எனக்கொண்டு இருளப்பட்டி நடுகல் குறிப்பிடும் கோவிசைய விண்ணவர்மனும் சிங்கவிண்ணவர்மனே என்பதை உறுதிப்படுத்தலாம்.

இச்சிங்கவிண்ணவர்மன் அதியமான் அரச மரபினருக்குரிய நாடுகளையும் தாயஉரிமை முறையில் தானே அடைந்து கி பி. 721 அல்லது 722 முதல் ஒரு பேரரசனாக ஆளத் தொடங்கிய சில ஆண்டுகளில் பல்லவ அரசில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பேரரசனாக விளங்கிய ராஜசிம்மன் இறந்ததும் அவன்மகன் இரண்டாம் பரமேஸ்

1 திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை பக்,6. பாடல் 2.

2 யாப்பருங்கலம், பக்கம் 203.

வரவர்மன் மூன்று ஆண்டுகளே ஆண்டு பிறகு பகைவர்களால் கொல்லப்பட்டோ அன்றி இயற்கையாகவோ இறந்து போனதும், பின்னர் பல்லவ மரபின் இளையபரம்பரையில் வந்த நந்திவர்ம பல்லவமல்லன் பல்லவ அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஆக இவை ஒரு தனி வரலாறு. இந்த மாறுதல்கள் சிங்க விண்ணனுக்குச் சாதகமாக அமைந்தன ஸ்கந்தவர்மனின் மகன் வயிற்றுப்பேரர்களுள் (பல்லவயுவாராஜன் மக்கள்) மூத்தவன் நந்திவர்மப்பல்லவ மல்லன் ஆட்சியுரிமை பெறுவதைத் தடுத்து இறந்து போனான்[1] இரண்டாவது மகனுக்கு சாளுக்கிய விக்ரமாதித்தன், காடவன் சிங்க விண்ணனன், பாண அரசன் ஆகிய அனைவருமே ஆதரவு கொடுத்து அவனை நந்திவர்மப்பல்லவ மல்லனுக்குப் பதிலாக பல்லவ சிங்காதனத்தில் அமர்த்த முயன்று அதில் வெற்றியும் பெற்றனர். இவ்வாறு பல்லவ சிங்காதன உரிமை பெற்ற காடவ அரசன் ஸ்கந்தவர்மனின் இரண்டாவது பெயரனே ராயக் கோட்டை செப்பேடுகளை வழங்கிய ஸ்கந்தசிஷ்யனுவன். இந்த முயற்சியில் கொங்கணி அரசன் ஸ்ரீ புருஷனின் நிலை என்னவென்று தெரியவில்லை. ஆயினும் ஸ்ரீ புருஷனின் மேலாதிக்கத்தில் இருந்த கங்க நாட்டின் மேற்குப் பாதியான பெருமுகையூர் நாடு அதனை ஆண்ட ஸ்கந்த சிஷ்யன் காஞ்சி அரசன் ஆனதும் சிங்க விண்ணவர்மன் வசம் வந்துவிட்டது.

அன்றியும் வடக்கிலும் சிங்கவிண்ணன் தனது ராஜ்ய எல்லையை ஏறக்குறைய தற்கால திண்டிவனம், செஞ்சி வரையிலும் விரித்துக் கொண்டான். இப்பகுதிகள் சிங்க விண்ணனின் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்பட்ட நகரமே சிங்கவரம் ஆகும். இங்குள்ள குடைவரைக் கோவிலும் இவனால் கட்டப்பட்டதே. இதிலுள்ள கல்வெட்டு குறிப்பிடும் சந்திராதித்தன் இச்சிங்கவிண்ணவர்மனே. இவன் தந்தை வழியில் சந்திரகுலத்தவனாகவும், தாய் வழியில் ஆதித்ய

1 காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவில் சிற்பங்கள் உணர்த்தும் வரலாறு.

குலமான சூர்ய குலத்தவனாகவும் இருந்தமையால்[1] தன்னைச் சந்திராதித்தன் என்று குறித்துக் கொண்டான். இவ்வாறு இவன் தமிழக வரலாற்றிலே மிகப்பெரிய பேரரசன் நிலைக்கு வந்துவிட்டது ஸ்கந்த சிஷ்யனுக்குப் பெரும் பாதுகாப்பாகியது. ஸ்கந்த சிஷ்யனும் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட நந்திவர்மப் பல்லவமல்லனும் அவன் தந்தை இரண்யவர்மனும் இழந்த பல்லவப் பேரரசைப் பெறமுயன்று சூழ்ச்சி செய்தபோது சிங்கவிண்ணான் தன்னுடைய வலிமையினாலே இரண்யவர்மனின் முயற்சிகளை முறியடித்து அவனைக் கொன்றும் விட்டான். ஆயினும் கி. பி. 748 அல்லது 49ல் பல்லவமல்லன் உதயசந்திரன் என்பவன் உதவியுடன் ஸ்கந்தசிஷ்யனையும் மற்றும் அவனைச் சார்ந்திருந்த சிங்கவிண்ணான் முதலியோரையும் வென்று காஞ்சி அரசுரிமையை திரும்பவும் அடைந்தான். பல்லவமல்லன் பல்லவ அரசன் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருந்த சிங்க விண்ணனையும் பல்லவமல்லனை அங்கீகரிக்கச் செய்ததைத் தான் உதயேந்திரம் செப்பேடுகள் விஷ்ணுராஜனின் நாட்டிலிருந்து பல்லவ மல்லனை கௌரவிக்கச் செய்தான் உதயசந்திரன்[2] என்று கூறுகிறது இந்த விஷ்ணுராஜன் சிங்கவிண்ணனேயாவன். இவ்வாறு இந்த இடைக்காலத்தில் புகழுடன் விளங்கிய சிங்கவிண்ணான் ஏறக்குறைய 33 ஆண்டுகள் ஆட்சி செய்தான்[3]

---

1 சேர அரசர்கள் பின்காலத்தில் தாமே சூரிய வம்சத்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். அவர்களில் ஒரு கிளையினரே அதியமான் அரசர்கள் ஆதலால் அதியமான்களும் சூரிய வம்சத்தவர்களே.

2 உதயேந்திரம் செப்பேடுகள், வரி 57.

3 சிங்கவிண்ணான் கி. பி. 718-751 யே சிறந்த அரசனாக விளங்கினான் என்பதை சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏறத்தாழ ஆறு கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. (EP. Carn. Gu. E8) இவை அனைத்தும் இக்காலத்தில் ஆட்சி செலுத்திய கொங்கணி அரசன் ஸ்ரீ புருஷனுடையவை. இவற்றில் சிங்கவர்மராஜா என்பவன் ஸ்ரீ புருஷனுடன் பல போர்கள் நிகழ்த்தினான் என்று கூறுகின்றன. இச்சிங்கவர்மராசா சிங்கவிண்ணனே யாவன் என்பது ஒருதலை. இதேபோல இன்னொரு

**கவுண்டர்களின் ஏற்றம் :**

திரையர் குல அரசர்கள் காட்டுப் பகுதிகளை அழித்து நாடாக்கி வந்ததால்தான் காடவர்கள், காடு வெட்டிகள் எனப்பட்டனர் என்று பார்த்தோம். இதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்கியவர்கள் இப்பகுதிகளில் வாழ்ந்த வேளாளர் மக்களே என்பதில் ஐயமில்லை. எனவே சிங்க விண்ணவர்மனிடம் கங்க நாடும் கொங்கு மண்டலத்தின் பெரும்பகுதியும் வந்துவிட்ட காலத்தில் அந்நாட்டுக் கிராமங்களில் காமிண்டர்களாக விளங்கிய வேளாளர்தலைவர்களும், அவர்களைச் சார்ந்திருந்த வேளாள மக்களும் பெரிதும் போற்றி மதிக்கப்பட்டனர். அதே போல போர்களில் பெரும் பங்கு ஏற்று சிங்கவிண்ணன் வெற்றிமேல் வெற்றி பெறுவதற்கு காரணமாகித் தமது வீரத்தைக் காட்டிய வேட்டுவக் காமிண்டர்களும், வேட்டுவ வீரர்களும் கூட ஏனாதி முதலிய பட்டங்கள் அளிக்கப்பட்டு போற்றப்பட்டனர். சிங்க விண்ணவர்மனின் முப்பத்து மூன்றாவது ஆட்சியாண்டைக் குறிப்பிடும் நடுகல் ஒன்று ஸ்கந்தவர்ம ஏனாதியார் என்ற ஒரு படைத்தலைவனின் மகன் இறந்த சய்தியைத் தெரிவிக்கிறது. இவன் ஒரு வேட்டுவப் படைத்தலைவனேயாவன். ஸ்கந்தவர்ம ஏனாதியார் என்ற பெயரிலிருந்து இவன் சிங்கவிஷ்ணுவர்மனின் தமையனான ஸ்கந்தவர்மனின் ஆட்சி காலத்திலே ஏனாதிப் பட்டம் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தவன் என்று தெரிகிறது.

---

கல்வெட்டு கெறுகோடு நாட்டை அதியனதிராசன் ஆண்டதாகக் கூறுகிறது. (Ep Crn NJ. 147) இவனும் சிங்கவிண்ணனே

தருமபுரி மாவட்டம் மெய்யாண்டிப்பட்டி என்னும் ஊரில் கிடைத்துள்ளன. கட்டிணைப்பருமர் என்பானின் 26 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று சிங்கவர்ம அரசனது ஆட்சிக்கு உட்பட்ட சிற்றரசன் ஒருவன் கோறுவா ஆண்டதாகக் குறிக்கிறது. (A R E. 291 of 72-73) இக்கட்டிணைப்பருமர் என்பவன் ஸ்ரீ புருஷனே. ஸ்ரீ புருஷனுக்கு கட்டிணை பருமன் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை கர்நாடக மாநிலக் கல்வெட்டுகள் பல தெரிவிக்கின்றன. இச்சிங்கவர்மனும் சிங்கவிண்ணனேயாவன்.

நந்திவர்மப் பல்லவ மல்லனின் உதயேந்திரம் செப்பேடுகளின் ஸ்லோகம் ஒன்று "தண்டாயுதம் போன்று கைகளை உடையவனும் சத்துருவானவனும் ஆன உதயணன் என்ற வேட அரசனை வென்று அவனுடைய மயில் தோகைகளால் செய்யப்பட்ட கண்ணாடித்வஜத்தைக் கைப்பற்றினன்." என்று கூறுகிறது.[1] இந்த வேட அரசன் சிங்க விண்ணன் ஆண்ட நாட்டிலுள்ள ஒரு பகுதிக்குச் சிற்றரசனாக விளங்கிய வேட்டுவர் தலைவனேயாவன். இன்றும் பொன்குன்ற நாட்டில் குடியேறியிருந்த கொங்க வேளாளர்களும் இவன் காலத்தில் சிறப்புற்றிருந்தனர் என்பதை சிங்கவிண்ணவர்மனின் மற்றொரு நடுகல்லும் உணர்த்துகிறது.[2] இவ் வேளாளர் தலைவனான பொன்னக்கன் என்பான் சிங்க விண்ணனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கங்க நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய பொன்குன்ற நாட்டின் சிற்றரசனாக விளங்கி வந்திருந்தான் என்று தெரிகிறது. இதனாலே இவனும் கங்கரு என்றே குறிக்கப்பட்டுள்ளான். இதிலிருந்து கங்க நாட்டில் சிற்றரசர்களாக விளங்கி வந்த கொங்கர்களும் பழங்காலம் முதல் கங்கர் என்றே குறிக்கப்பட்டனர் என்பது வெளிப்படை. இன்னும் தென் ஆற்காடு மாவட்டம் தென் பெண்ணையாற்றங் கரைப் பகுதிகளிலும், வேளாள மக்கள் மிகுதியாக வாழ்ந்து வந்ததால் அப்பகுதி வேளாளர் நாடு என்னும் பொருளில் வேணாடு என்று அழைக்கப்பட்டது. இவ்வேணாட்டில் புகழுடன் வாழ்ந்து வந்த வேளாள மக்கள் வழியினரும் இன்று கொங்கு வேளாளக் கவுண்டர் கூட்டத்தவர்களுள் புகழ் பெற்ற கூட்டத்தவர்களாக விளங்கி வருகின்றனர்.

**விசைய மகேந்திரன் :**

விசைய சிங்கவிண்ணவர்மனுக்குத் துரதிருஷ்டவசமாக அடுத்து பட்ட மேற்கும் வாரிசாக பிள்ளை இல்லாமல் போய்

---

1 உதயேந்திரம் செப்பேடுகள், ஸ்லோகம் 53.

2 Seminar on Hero Stones-Ed-R. Nagaswamy, Page. 90.

விட்டது. எனவே இவன் மகன் வயிற்றுப் பேரனும் அதிய மான் விண்ணப் பெருமானடியின் தம்பி மகனுமான மகேந்திரன் என்பான் சிங்கவிண்ணனுக்குப் பிறகு கி. பி. 751 ல் அவன் ஆண்ட பெரும்பகுதிகளுக்கு பேரரசன் ஆனான்.

இந்த மகேந்திரனே செங்கம் நடுகற்களில் குறிக் கப்படும் ஒரு அரசனான விசைய மகேந்திரவர்மனாக இருத் தல் வேண்டும். இவனே நாமக்கல் நரசிம்மர் கோயிலைக் கட்டிய குணசீலனாகவும் இருத்தல் கூடும் காஞ்சி பல்லவர் களுக்கு இணையாக இவன் பாட்டனான சிங்க விண்ணவர்மன் ஒரு பேரரசை நிறுவி அதற்கு அதிராஜனாக ஆளமையால் பல்லவப் பேரரசை வலுவுடையதாக நிறுவிய சிம்ம விஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திர வர்மனைப் போல இவனும் தன்னைப் பல பட்டப்பெயர்களால் குறித்துக் கொண்டிருக்கிறான். இப்பட்டப் பெயர்கள் நாமக்கல் குடைவரைக் கோயிலில் கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை மகேந்திர வர்மனின் பட்டப்பெயர்களோடு ஒத்திருப்பதும் இக் கருத்தை வலிமைப்படுத்துகிறது. நாமக்கல் குடைவரைக் கோயிலையன்றி தாந்தோனி குடைவரைக் கோயிலையும் இவன் குடைவித்தான் என்றும் கூறலாம்.

இம்மகேந்திரவர்மன் விசைய சிங்க விண்ணவர்மனின் பெண்வயிற்றுப்பேரனே என்று முடிவு செய்வதற்கு நாமக்கல் நரசிம்மர் குடைவரைக் கோயிலில் காணப்படும் அழகிய புடைப்புச் சிற்பங்களும், இரண்டு வடமொழிக் கல்வெட்டுகளும் துணைசெய்கின்றன. இவற்றுள் வடமொழிக் கல்வெட்டுகளைக் கீழ்க்கண்டவாறு படித்துள்ளனர்.

1............த்ரேஷு வஸ்யாத்யேஷு யஸஸ்விஷு
ஸோம பூர்வோதிவேந்திராணும் தௌஹித்ரோ வன் வயஸ்தித

2 அதியான்வவாய குருணு நரபதினு...... (தி)
அதியேந்திர விஷ்ணுகிருகம் இதி...மமு (ஞ) காரி (தம்)

இவற்றிலிருந்து நாம் அறியும் பொருள் சோமனை

(சந்திரனை) பூர்வமாகக் கொண்ட அதிராஜனின் பெண் வயிற்றுப் பேரனும், அதியர் குலத்திற்கும், குருகுலத்திற்கும் தலைவனுக் விளங்குபவனுமான அரசனுல் கட்டப்பட்ட அதியேந்திர விஷ்ணுக்கிருகம் என்னும் திருமால் கோயில் என்பதாகும், இதில் வரும் சோமன் என்றசொல் சந்திரனைக் குறிக்கும் என்றே கூறலாம், அவ்வாறெனில் சந்திர குலத்து வந்த அதிராஜனுகிய சிங்கவிண்ணவர்மனின் பெண் வயிற்று பேரன் என்று பொருள் கொண்டு சிங்க விண்ணனை சந்திர குலமாகிய குருவம்ச அரசன் என்றே கூறலாம் அல்லது சந்திர குலத்து அதிராஜன் என்பது அதியமான் அரசன் ஒருவனையே குறிப்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்றுல் அதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன, எனவே ஸோமகுல அதிராஜன் என்பவனை திரையர் மரபினருன குருவம்சத்து சிங்கவிண்ணனைக் குறிக்கிறது என்பதே பொருத்தமாக உள்ளது. இந்த முடிவிற்கு எற்றபடியே புடைச் சிற்பங்களும் அமைந்துள்ளன, தெள்ளாறெறிந்த நந்திவர்மப் பல்லவன் மீது பாடப்பட்ட நந்திக்கலம்பகத்தின் ஒரு பாடல் அவனை சந்திர குலப் பிரகாசன் அதாவது சந்திரவம்சத்தை ஒளி பெறச் செய்பவன் என்று குறிப்பிடுவதும் இங்கு நம் கவனத்தைக் கவருகிறது.[1]

இனி தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்ருனதற்காலக் கம்போடியா என்னும் காம்போஜ நாட்டில் பலவடமொழிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் பவவர்மன் என்பவனது கல்வெட்டு ஒன்றில் அவ்வரசனின் குலம் ஸோம கௌண்டின்ய வம்சம் என்று குறிக்கப்பட்டிருப்ப தோடு அவனுடைய முன்னேர்களுள் ஒருவன் கொங்கவர்

---

முன்பக்கப்படி

1 A. R E. 1960-61 No. 203 and Ep. Ind. Vol. XXXVI-P 139.
2 A. R. E. 1960-No. 7
3 அதியேந்திரன் என்பதற்கு அதிராஜன் அதாவது ஆதிபத்ய உரிமை பூண்ட பேரரசன் என்றும் பொருள் கொள்ளலாம்.

1. நந்திக் கலம்பகம்-பாடல்

மன் என்பான் எனவும் இக்கொங்கவர்மன் என்பவன் கௌண்டின்ய ஸோமா குலத்தில் பிறந்தவன் என்றும கூறப்படுகிறது[1] இந்தியாவிலிருந்து அங்கு சென்று குடியேறிய ஒருவரே இக் கௌண்டின்யர் என்று தெரிகிறது. இக்கௌண்டியர் காம்போஜம் சென்று ஸோமா என்ற பெயரையுடைய நாக அரசனின் மகளை மணந்து கொண்டார். இவ்விருவர் வழிவந்த வம்சமே ஸோம கௌண்டன்ய வம்சம் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இம்மரபு வழியில் வந்த இன்னொருவனே கிறிஸ்துவ சகாப்தத் துவக்கத்தில் தொண்டை நாட்டில் குடியேறிய திரையனாகவும் இருத்தல் கூடும் அவ்வாறெனில் திரையர் குலம் ஸோம குலமே என்றுகூறமுடியும் ஸோமா என்றபெயர் அரசியைக் குறிப்பதோடு சந்திரனையும் குறிப்பதாக அக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

அடுத்து இக் குடைவரை கோயிலில் காணப்படும் சிற்ப வடிவங்கள். இச்சிற்பங்களை நுணுக்கமாக ஆராய்ந்தபோது இவற்றின் பின்னால் சில வரலாற்றுச் சம்பவங்கள் மறைந்திருப்பதாகத் தோன்றியது.

1. மகாபலியிடமிருந்து திருமால் மூன்றடி மண் தானமாகப் பெற்றுப் பிறகு உலகம் முழுவதையும் ஓரடியில்அளந்து கொண்ட வாமனவதாரச் சிற்பம், இக்கோயிலைக் கட்டியவனின் முன்னோன் (தந்தை அல்லது பாட்டன்) திருமால் பக்தனாக விளங்கி திருமாலின் அருளினால் மகாபலியின் வம்சத்தவர்களான பாண அரசர்களுள் ஒருவனிடமிருந்து நாட்டைக் கைப்பற்றியவன் என்பதை உணர்த்தலாம்.

2. பூமித்தாயை காத்துத் தன் கொம்பில் ஏந்திவரும் திருமாலின் வராக அவதாரச் சிற்பம் பன்றிக் கொடியைத்

1. G. Coeds-Inscriptions of Combodge Vol. I Page 251 and R. C. Majumdar, Inscriptions of Kambuja No. 26-A.

நமது இயச்சியாகக் கொண்ட சாளுக்கியர்களின் உதவி இவ்வரசனுக்குக் கிடைத்தது என்பதை விளக்கக் கூடும்.

3. வைகுண்ட நாராயணன் சிற்பத்தில் திருமாலுக்கு அடியில் சிங்க விஷ்ணு இளம் வயதினராக (பாலநரசிம்மர்) வீற்றிருக்கத் திருமால் பால நரசிம்மரின் தலையை அன்புடன் வருடி ஆசி கூறுவது போல அமைந்திருப்பது வேறு எங்கும் காணப்படாத ஒரு அரிய காட்சியாகும். இவ்வமைப்பு சிங்கவிஷ்ணு (சிங்கவிண்ணன்) என்ற பெயரை உடைய அவ்வரசன் திருமால் பக்தனாக விளங்கினமையால் அவர் ஆசியும், திருவருளும் பெற்று பேரரசன் ஆனவன் என்பதை உணர்த்தக்கூடும்.

4. இரண்யனைத் தன் மடியில் கிடத்திக் கடுங்கோபத்துடன் இவன் நெஞ்சைப் பிளந்து உதிரம் குடிக்கும் கோரக் காட்சி இரண்யன் என்ற பெயரை உடைய அரசன் ஒருவனைக் கொன்று சிங்க விஷ்ணு (நாசிம்மன்) என்ற பெயரைக் கொண்ட அவ்வரசன் தன் பேரரசத் தகுதியை நிலைநிறுத்திக் கொண்டதை உணர்த்தலாம். இந்த இரண்யன் என்ற பெயரை உடைய அரசன் நந்திவர்மப் பல்லவ மல்லனின் தந்தையான இரண்ய வர்ம மகாராசனாக இருக்கலாம்.

இவ்வாறு இச்சிற்ப வடிவங்களின் அமைப்பிலிருந்து நாம் உய்த்துணரத்தக்க செய்திகள் முன்னால் சிங்கவிண்ண வர்மனைப் பற்றிக் கூறிய செய்திகளோடு ஒத்திருப்பதால் அதியர்குலத் தாய்க்குக் காடவர்களாகிய திரையர் மரபில் உதித்த சிங்கவிண்ணவர்மன், அதியர்குல அரசுக்கும் உரிமை பூண்டவனாகி இவ்விரு அரச மரபையும் விளங்கச் செய்து பேரரசனாகத் திகழ்ந்தமையால் அவன் நிறுவிய அப் பேரரசின் ஆட்சியுரிமையை அவனுக்குப் பின்னால் அடைந்தவன் தன் முன்னோனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவை போன்ற சிற்பவடிவங்களை அமைத்துக் குடவரைக் கோயிலை உருவாக்கி இருக்கிறான் என்று ஐயத்திற்கு இட

மின்றி முடிவு செய்யலாம். அவ்வரசன் சோமபூர்வ அதிராஜனின் மகள் வயிற்றுப் பேரன் என்று கல்வெட்டில் கூறிக்கொண்டிருப்பதால் அவன் சிங்கவிண்ணவர்மனின் பெண் வயிற்றுப் பேரனே என்றும் அதியர் குலத் தந்தை வழியில் தோன்றியவனுதலால் அதியமான் அரசனுகவே தன்னைக் கூறிக்கொண்டான் என்றும் நிச்சயமாகக் கூறலாம்.

இந்த மகேந்திர வர்மனது ஆட்சி காலத்திலும் முற்பகுதியில் சில காலம் வரையிலே இவனது ராஜ்யம் சிங்க விண்ணன் காலத்தில் இருந்த அளவிலே பெரியதாக இருந்தது. அக்காலத்திலே இவன் ஒரு பேரரசனுக்கு உரிய தகுதியுடன் பல பட்டப்பெயர்களைத் தரித்திருந்து அரசு ஆண்டான். நாமக்கல் குடைவரைக் கோயிலைக் குடைவித்தான். கருருக்கு அண்மையில் உள்ள தாந்தோணி என்னுமிடத்தில் உள்ள குடைவரைக் கோயிலும் இக்காலத்திலே குடைவிக்கப் பட்டிருத்தல் கூடும். இன்னும் திருச்சி மாவட்டத்திலுள்ள குணசீலம் என்னும் ஊர் குணசீல சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டதும்,[1] முசிறிக்கு மேற்கே உள்ள ஸ்ரீனிவாச நல்லூருக்கு அண்மையில் மகேந்திர மங்கலம் என்னும் பெயரில் ஒரூர் இருப்பதும் இதனை உறுதிப்படுத்தக் கூடியன. இவ்விரண்டு ஊர்களும் குணசீலனுன விசைய மகேந்திரனுல் தானம் கொடுக்கப் பட்ட சதுர்வேதி மங்கலக் கிராமமாகவே இருத்தல் கூடும். ஆனுல் சிங்க விண்ணன் ஆண்ட நிலப்பரப்பில் கங்க நாட்டின் மேற்குப் பகுதியாக விளங்கிய பெருமுகையூர் நாடு[2] மட்டும் சிங்க விண்ணன் இறப்பதற்கு முன்பே சிங்க விண்ணனின் தமையன் ஸ்கந்தவர்மனின் மகள் வயிற்றுப் பேரனுன ஸ்கந்தசிஷ்யனின் மகன் நந்திவர்மனுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. இதற்குக் காரணம் சிங்க விண்ணனுலும், சாளுக்ய விக்ரமாதித்யனின் உதவியாலும் காஞ்சி சிங்காதனத்தில் அமர்த்தப்பட்ட ஸ்கந்தசிஷ்யனை

1 A. R. E. 1958-59 No. 307.

2 வடக்கே கபினி ஆற்றையும், தெற்கே நீலகிரி மாவட்டத்து கூடலூர் பகுதியையும் எல்லையாகக் கொண்டது.

நந்திவர்மப் பல்லவ மல்லன் கொன்று விட்டு காஞ்சி சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொண்டதால் ஸ்கந்தசிஷ்யனின் வாரிசாக விளங்கிய நந்திவர்மனுக்கு ராஜ்யம் இன்றிப் போனதேயாகும். எனவே முன்னால் ஸ்கந்தசிஷ்யன் வசம் இருந்த பெருமுனைகையூர் நாட்டை நந்திவர்மனிடம் கொடுத்து விட்டான்.

மகேந்திரனுடைய ஆட்சி காலத்தின் பிற்பகுதியில் ஏறக்குறைய கி. பி 770 வாக்கில் மீண்டும் இவனுடைய ஆட்சியில் இருந்த நிலப்பரப்பு பிரிக்கப்பட்டது இம்மகேந்திரவர்மனுக்குத் தம்பி முறையினனோ அல்லது அதியமான் மரபில் உதித்திருந்த இன்னொரு இளவரசனோ தம் முன்னோர்கள் ஆண்ட நாட்டின் உரிமையைக் கோரினான். இதற்கு நந்திவர்மப் பல்லவ மல்லனும் கொங்கு நாட்டின் மேற்குப் பகுதி நாடுகளில் சிற்றரசர் நிலையில் விளங்கி வந்த சேர அரசன் ஒருவனும் கூட உதவியிருக்கக் கூடும். இதனால் மகேந்திரனே விரும்பியோ அல்லது அவ்விளவரசன் போர் செய்தோ முன்னால் அதியர் மரபினர் அரசாண்டு வந்த குறுப்பு நாடு உள்ளிட்ட மழ கொங்கு நாட்டின் ஆட்சியுரிமை பெற்றான். கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் இந்த அதியமான் அரசன் கந்தவிண்ணன் என்ற பெயருடையவன் என்று தெரிகிறது. இந்தக் கந்தவிண்ணன் செங்கம் நடுகற்களுள் ஒன்றான மகேந்திரவர்மனது 33ஆம் ஆண்டு நடுகல் கல்வெட்டில் விண்ண பந்மரின் மகனார் என்று குறிக்கப்பட்டுள்ளான்.[1] இவ்விண்ணவர்மன் பெரும்பாலும் இருளப்பட்டி நடுகல்லில் குறிக்கப்பட்ட மகேந்திரனது பெரியப்பனான விண்ணப் பெருமானடியாகவே இருந்தல் கூடும் எவ்வாறாயினும் இவ்விண்ணவர்மனின் மகனான கந்த விண்ணனே அதியமான் அரசனாக குறுப்பு நாடு, நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளுக்கு அரசனானான்

இவனையே, பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையனின் ஸ்ரீவரமங்கலச் செப்பேடுகள் குறிப்பிடும் திகழ்வேல்

1 செங்கம் நடுகற்கள்-197169.

அதியன் என்று கூறலாம். இப்போரில் இவனுக்கு உதவியாக பல்லவ நந்திவர்மனும் சேர அரசனும் இருந்தும் பாண்டியன் இவர்கள் மூவரையும் வென்று கங்க நாட்டின் எல்லை வரை வட கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதோடு குட கொங்கத்து அடல் மன்னனை சேரனைச் சிறைப் பிடித்துச் சென்று மதுரைக் கோட்டையில் அடைத்தான். அப்போது மகேந்திரன் தகடூர் உள்ளிட்ட கங்க நாட்டிற்கு மட்டுமே அரசனாக விளங்கியதால் தன்னைக் கங்கராஜன் கங்கதியரையன் என்றே குறித்துக் கொண்டான் இவனுக்கு இப்பகுதியிலும் இன்னும் வட ஆற்காடு மாவட்டம் செங்கம் பகுதிகள் வரையிலும் இதற்குத் தெற்கே திருக்கோயிலூர், திருவெண்ணெய் நல்லூர் ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்து வந்த வேளாள மக்கள் பேராதரவு கொடுத்து வந்தனர். கங்க ராஜனை இம்மகேந்திரனது மகளையே பராந்தகன் நெடுஞ்சடையன் மணந்து கொண்டான்.[1] இதனை வேள்விக் குடிசெப்பேடுகள் "கங்கராஜனது கன்யாரத்தினம் கொங்கர் கோக்கு உணர்ந்து கொடுப்ப" என்று குறிப்பிடுகிறது.

இக் கங்க நாட்டில் இவனது ஆளுகையின் கீழ் இருந்த நிலப்பகுதியின் கிராமங்களின் தலைவராக அதாவது காமிண்டர்களாக விளங்கியவர்களில் வேட்டுவர் தலைவர்களும் இருந்தனர். வேளாளத் தலைவர்கள் கங்க நாட்டு அய்யன் அதாவது கிராமத்தலைவன் என்ற பொருளில் காங்கேயன் என்று குறிக்கப்பட்டனர். இக்காலத்துக் கோவை மாவட்டத்துக் காங்கேயம் கூட இந்த கங்க நாட்டு அய்யனை ஒருவனின் வழிவந்தோர் இப்பகுதியில் குடியேறி ஏற்படுத்திக் கொண்ட ஊரே என்றும் கூறலாம். இவ்வாறு குடியேறிய தலைவர் பயிரன் கூட்டத்தவரேயாவர். இதன் விளக்கத்தைப் பின்னால் காண்போம். இவ்வாறு கொங்கு நாட்டின் அனைத்துப் பகுதியும் சேரர்கள் வசமிருந்த மேற்கு கொங்கு நாடுங்கூட பாண்டியர் வசம் சென்றதும் பாண்டியனிடம் தோற்ற அதியமான் அரசன் கந்தவின்னான் மகேந்

1 ஸ்ரீவரமங்கலச் செப்பேடுகள், வரி-10-24 Ind. Antiq Vol. XXII P. 69-57

திரனின் ஆதரவு பெற்று அவனுக்கு அடங்கிய சிற்றரசனாக தகடூர் நாட்டின் கிழக்குப் பகுதியான புறமலை நாட்டை ஆண்டு வந்தான். இம்மகேந்திரன் 39 ஆண்டுகள் அரசாண்டான் என்று செங்கம் நடுகற்களைப் பதிப்பித்த ஆசிரியர் கூறுகிறார் .ஆனால் மத்தியத் தொல்லியல் துறையினர் 39 என்பதை 59 என்று படித்துள்ளனர்.

**நந்தீஸ்வரவர்மன் : ( கி. பி. 747-799 )**

செங்கம் நடுகற்களுள் ஒன்றில் குறிக்கப்படும் நந்தீஸ்வரவர்மன் என்பவனது இன்னொரு நடுகல் வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுக்காவில் உள்ள குலிடிக்கி என்னும் ஊரில் கிடைத்துள்ளது[1] இக்குலிடிக்கியும் நரசிம்மன் நடுகல் ஒன்று காணப்படும் கீழ்மூத்து கூர் உள்ள தாலுக்காவிலே இருப்பது கவனிக்கத்தக்கது. இந்நடுகல் கல்வெட்டில் நந்தீஸ்வரவர்மனுக்குப் பெருமானடிகள் என்ற பட்டம் இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. பெருமானடிகள் என்ற பட்டத்தையுடைய ஒரு அரசன் இக்காலத்தே ஹெம்மிகே எனப்படும் பெருமுளையூரை ஆண்டதாக மைசூர் மாவட்டம் திருமுக்கூடல் நரசப்பூர் தாலுக்காவில் உள்ள ஹெம்மிகே என்ற ஊரிலிருந்து கிடைத்துள்ள கொங்குணி அரசன் ஸ்ரீ புருஷனின் கல்வெட்டு ஒன்று "ஸ்ரீ புருஷ கொங்கண்யாதிராஜர் இந்த பூமியை ஆட்சி செய்ய ( ப்ருதிவி ராஜ்யம் செய்ய ) பெருமானடிகள் பெம்மிகேயை ( ஹெம்மிகே ) ஆண்டு வந்தார் என்று கூறுகிறது.[2] இதே ஸ்ரீ புருஷன் காடுவெட்டி அரசன் ஒருவனை வென்று அவனுக்குரிய பெருமானடிகள் பட்டத்தைப் பிடுங்கிக் கொண்டான் என்று மற்றொரு கொங்கணி அரசனின் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.[3] பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் காடுவெட்டி, காடவன் என்ற பெயர் பல்லவர்

1 Ep. Ind. Vol: XXII PP. 110-113 and THSSI. 58-59 PP. 15-24.

2 Ep. Carn. Vol. XIV. Tn. 234.

3 Ibid Vol. VIII Nagar 35.

கனையே குறிப்பதாகக் கொள்வர்.[1] எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் காடுவெட்டி காஞ்சி பல்லவ அரசனை நந்திவர்மப் பல்லவ மல்லனே என்று முடிவு செய்தே அவர்கள் பல்லவர் வரலாற்றை அமைக்க முயன்று அதே சமயத்தில் பல்லவ மல்லனின் தண்டந் தோட்டம் செப்பேடுகளில் பல்லவ மல்லன் ஸ்ரீ புருஷனை வென்றதாகக் கூறப்படும் வரிகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் இடர்பட்டுள்ளனர் இதே மைசூர் மாவட்டத்தில் கிடைத்துள்ள மற்றொரு கல்வெட்டில்[2] கி. பி. 760 வாக்கில் கூடலூர் உள்ளிட்ட பகுதிகளை ஆண்டவனாக கூடலூர் பாடி உடையார் நந்திக் காடவன் என்னும் அரசன் ஒருவன் குறிக்கப்படுகிறான். காடவர்கள் பல்லவர்களே என்றால் இந்த நந்திக் காடவன் என்பான் எந்தப் பல்லவன்?

எனவே காடவர்கள் என்பார் பல்லவரினும் வேறானவர் என்றும் அந்த வம்சத்தில் வந்தவனே நந்திக் காடவன் என்பான் என்று கூறலாம். கூடலூர்பாடி என்பது அந்நாளில் பெருமுனையூர் நாட்டினுள்ளே அடங்கியிருந்த ஊராதலால் பெருமுனையூரை ஆண்ட பெருமானடிகளே இந்த நந்திக் காடவன் என்று கூற இடமிருக்கிறது அல்லவா! இதற்குப் பொருத்தமாக நந்திக் காடவனின் ஆட்சி ஆண்டுகளுள் ஒன்றான கி பி. 760 ஸ்ரீ புருஷனின் 45 ஆவது ஆட்சி ஆண்டுக்குச் சமமாக வருகிறது. எனவே பெருமானடிகள் பட்டம் வைத்திருந்த நந்தீஸ்வரவர்மனே இந்த நந்திக் காடவனும் எனக்கொண்டு விசைய நந்தீஸ்வரவர்மன் என்பான் கி. பி. 760 உள்ளிட்ட ஆண்டுகளில் ஆண்ட காடவ அரசனே எனவும் இவனையே ஸ்ரீ புருஷன் வென்றான் எனவும் கூறலாம். இவனே முன்னால் குறிப்பிடப்

---

1 இவ்வாறு கொள்வதற்கு கி. பி. 800 வரை ஆண்ட பல்லவ மன்னர்களின் பொறிப்புக்களில் சான்று ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

2 Ibid Vol. III Mysore, Kudalore 25.

பட்ட ஸ்கந்தசிஷ்யனின் மகனான நந்திவர்மனுவன் இவன் 52 ஆண்டுகள் அரசாண்டான்.

அடுத்து செங்கம் நடுகற்களுள் குறிப்பிடப்படும் கோவிசையஈஸ்வர வர்மனும், கோவிசைய பரமேஸ்வர வர்மனும் யார் என்பதைக் கவனிக்க வேண்டும். இவ்விருவரையும் ஒருவர் ஆகவே கொள்ளலாம் என்று தோன்றுகிறது. கோவிசைய ஈஸ்வரவர்மன் என்றே குறிப்பிடும் இரண்டு நடுகல் கல்வெட்டுகள், ஒன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரத்திற்கு அருகிலும், மற்றது கோலார் மாவட்டம் தெறப்பிலி என்ற ஊரிலும் காணப்படுகின்றன. இவற்றைக் கவனிக்கும் போது இவன் ஆட்சி இப்பகுதிகளிலெல்லாம் பரவியிருந்தது என்று தெரிகிறது. கங்க அரசன் மகேந்திரவர்மன் இறந்த பிறகு அதாவது கி. பி. 790க்குப் பிறகு ஸ்கந்தசிஷ்யனின் மகனான நந்திக் காடவனின் ஆதிக்கம் பெருமுகைநாட்டில் இல்லாமல் கங்க நாட்டிலும் அதற்கு வடக்கிலும் மட்டுமே இருந்ததாக இவனுடைய நாற்பத்தி நான்காம் ஆட்சி ஆண்டுமுதல் இப்பகுதிகளில் காணப்படும் நடுகற் கல்வெட்டுகளிலிருந்து தெரிவதால் விசைய ஈஸ்வரவர்மனும் காடவ அரசர்களின் வழி வந்தவனாக, நந்திக்காடவனின் மகனாகவோ அல்லது உடன் பிறந்தானாகவோ இருந்திருக்கூடும் என்று கொள்வதே பொருத்தமாக உள்ளது. இக்காலத்தே கொங்கு நாட்டின் மேற்கே மூன்றில் இரண்டு பங்கு சேர அரசர்களிடமும் கிழக்கே ஒரு பகுதி பாண்டிய அரசர்கள் வசமும் சென்று விட்டது. காடவ அரசர்களும் கங்க நாட்டுப் பகுதியில் சுதந்திர அரசர்களாக இருக்கவில்லை. அடிக்கடி அப்பகுதிகளில் மாறிமாறி வந்தகொங்கணி அரசர்கள், ராஷ்டிரகூடர்கள், சிவ சமயங்களில் பாண அரசர்கள் ஆகியோரின் மேலாதிக்கத்திலே இருந்து வந்தனர். கங்க அரசன் மகேந்திரன் வழி வந்தோரின் நிலை என்னவென்று தெரியவில்லை, பெரும்பாலும் இவர்கள் கங்க நாட்டில் தகடூரைச் சுற்றியுள்ள சிறு பகுதிக்கு மட்டும் சிற்றரசர் நிலையில் இருந்து வந்தனர் என்றே தோன்றுகிறது. எனவே மகேந்திரனுக்குப் பிறகு ஏறக்குறைய கி. பி.

815க்கு மேல் கங்க அரசனான விசைய நரசிம்மன் காலம் வரையிலான இடைப்பகுதியில் இருந்த கங்க அரசன் யார் எனக் கூறமுடியவில்லை. இந்த இடைக்காலத்திலே கங்க அரசனுக்கும் பொன்குன்ற நாட்டு வேளாளர் தலைவனுக்கு மிடையே மணவினை உறவுகள் ஏற்பட்டு அம்மணவினை உறவின் பயனாக தோன்றியவனே விசைய நரசிம்மவர் மனாகும். இதனை பொன்குன்ற நாட்டுவேளாளர் மரபின னாகத் தெரியும் பொன் மாந்தனும் என்பவர் விசைய நரசிம்மனின் சிற்றப்பனாகக் குறிக்கப்படுவது[1] உணர்த்துகிறது.

***விசைய நரசிம்மன் கி. பி. 815-845***

விசைய நரசிம்மனை பல்லவ முதலாம் நரசிம்மவர்மனா கவும், இராசசிம்ம பல்லவனாகவும் செங்கம் நடுகற்களைப் பதிப்பித்தவர்கள் கூறியுள்ளனர். இம்முடிவு பொருந்தாமல் போவதற்குரிய சில அடிப்படைக் காரணங்களை ஓரளவு இங்கு காண்போம். எபிகிராபியா இந்திகா நான்காம் தொகுதியில் டாக்டர் ஹுல்ஷ் குடியாத்தம் தாலுக்காவில் (வட ஆற்காடு) உள்ள கீழ்முத்துகூர் என்னும் சிற்றூரில் கிடைத்த ஒரு நடுகல் கல்வெட்டை, ஆராய்ந்து கட்டுரை எழுதியுள்ளார். இந்த நடுகல் செங்கம் நடுகற்களில் குறிக் கப்படும் மன்னர்களுள் ஒருவனான கோவிசைய நரசிம்மவர் மனுடைய பதினெட்டாவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது. கல்லெழுத்தின் கீழே கொங்குணி அரசர்களுக்குரிய யானைச் சின்னமும் அதனைத் துரத்திச் செல்வது போன்ற தோற்ற முடைய, அன்னப் பறவையைப் போன்று காணப்படும் ஒரு பறவையின் வடிவமும் உள்ளன. இந்தப் பறவை யைப் பொருட்படுத்தாத ஹுல்ஷ் யானைச் சின்னத்தை மட்டும் எடுத்துக்கொண்டு யானை கங்கர்களின் கொங்கணி அரசர்கள்) சின்னம் ஆதலால் இந்த நரசிம்மவர்மன் கங்க வம்சத்தின் ஒரு கிளையினன். இவன் முன்னோர்கள் கங்கரா

1. செங்கம் நடுகற்கள்.

கவே விளங்கி வந்து பிறகு நரசிம்மனே நந்திவர்ம பல்லவ மல்லன் இறந்தபிறகு காஞ்சி பல்லவனுனன் எனவும் இவன் வழியினரே கோவிசைய என்று பட்டம் தரித்த நந்திவர்மன் கம்பவர்மன், நிருபதுங்கன் முதலியோர் என்று முடிவு கட்டி இவர்களை கங்க பல்லவர் என்ற புதிய கிளையினராக ஆக்கி விட்டார். அவர் காலத்தில் கிடைத்த ஆதாரங்களை வைத்து அந்த அளவாவது ஆராய்ந்து எழுத முடிந்த அவர் திறமை போற்றுதற்குரியது. ஆயினும் இக்காலத்தே கிடைத்துள்ள அதிகமான சான்றுகளைக் கொண்டு அவர் முடிவை வேறு வகையாக மாற்ற வேண்டியுள்ளது. இரண்டாவது நாம் யானையைத் துரத்திச் செல்லும் பறவை சின்னத்தை விட்டு விட முடியாது. அந்தப் பறவை சாதாரண நிலையில் யானை யைப் பின் தொடராமல் யானையைத் துரத்துவது போயி ருப்பது இங்கு நோக்கத்தக்கது. யானை சின்னம் மேலைக் கங்கர்களாகிய கொங்குணி அரசர்களின் சின்னம் மட்டும் இல்லை. களவர்களாகிய களப்பிரர்களின் அரச சின்னமும் யானையேயாகும். எனவே நரசிம்மவர்மனோ அல்லது அவன் முன்னோர்களுள் ஒருவனோ களப்பிரர்களிடமிருந்தோ அல்லது கொங்கணி அரசர்களிடமிருந்தோ கங்கு நாட்டை மீட்டுத் தனது ஆதிக்கத்தை நிறுவியிருந்து, அந்த வீரச்செயலை விளக்கவே தனது சின்னமாகிய அன்னம் அல்லது வேறு ஏதோ ஒரு பறவை யானையைத் துரத்துவது போல நரசிம்மவர்மன் செதுக்கச் செய்துள்ளான் என்று உறுதியாக நம்பலாம். அப்பறவையை அன்னமாகவே கொண்டால் அப்பறவை இன்றும் கொங்கு வேளாளர்களில் பயிரன் கூட்டத்தினர்களின் (சக்கரை மன்றுடிமார் குலம்) சின்ன மாக விளங்குவது இக் கூட்டத்தவருக்கும், நரசிம்மவர்மனின் குலத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதாகக் கூற முடியும்.

இரண்டாவது கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த பங்க வாடி நடுகற்கள்[1] இந்த நடுகற்கள் இரண்டும்

1. Ep. Ind. Vol, VII, P. P. 23.

விசைய நரசிம்மனுடைய 24வது ஆட்சியாண்டைச் சேர்ந்தவை. இவற்றுள் ஒன்று தமிழ் வட்டெழுத்து. மற்றது பழைய கன்னடம். இவ்விரண்டிலும் ஒரே போரே குறிப்பிடப்பட்டு அதில் இறந்துபோன கந்தவாணதிராசன் என்பவனின் சேவகன் இறந்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இந்தக் கந்தவாணதிராசன் என்பவன் கொங்குணி அரசன் இரண்டாம் சிவமாரவர்மனின் 43 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் அதாவது கி. பி. 816 ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ள புறமலை நாட்டை ஆண்ட குறுநில மன்னனாவன். இவ்விரண்டிலும் முதல் தமிழ்நடுகல்லில் போர்நடத்தியவர்கள் நடியர்கள், வாணராசர் மயீந்திரவிக்கிரமவர்மர் ஆகியோர் என்று குறிக்கப்படுகின்றனர். இரண்டாவதில் இம்மூவருடனும் இராசமல்லன் என்பானும் சேர்க்கப்பட்டுள்ளான். இந்த இராசமல்லன் என்பான் கொங்குணி அரசன் முதலாம் இராசமல்லனேயாவான். இவன் கி. பி. 816 ல் பட்டமேற்று ஏறக்குறைய 850வரை ஆண்டுள்ளான். இதனை உறுதிப்படுத்துகிறது, மயீந்திர விக்கிரமவர்மன் என்ற அரசனின் பெயர்.

இவன் நொளம்பபல்லவ அரசனான மகேந்திரவர்மனேயாவன். இராசமல்லனின் மகளே இவனது தாய். மகேந்திரவர்மனின் தந்தையான போலசோரன் இவளை மணந்திருந்தான். கி. பி. 850க்குமேல் ஏதோ ஒரு ஆண்டில் இவன் நொளம்பபல்லவ அரசனாக முடிசூடிக் கொண்டான். இவ்விருவரும் அதாவது இராசமல்லனும் மயேந்திரவிக்ரமனும் நரசிம்மவர்மனின் சமகால அரசர்களாகக் குறிக்கப்படுவதாலும், இவ்விசைய நரசிம்மனே செங்கம் நடுகற்களுள் குறிப்பிடப்படும் நரசிம்மவர்மனேயாதலாலும் தமிழ்நாடு தொல்பொருள் துறையினரின் முடிவுப்படி விசைய நரசிம்மன் கி. பி. 600க்குமேல் ஆண்ட வாதாபி கொண்ட நரசிம்மப் பல்லவனாகவும், 700-728ல் ஆண்ட இராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மனாகவும் நிச்சயம் இருக்க முடியாது. எனவே இந்தவிசைய நரசிம்மவர்மனை கி. பி. 815க்கு முன்னால் கொண்டுவர இயலாது. ஆதலால் மேலே

காட்டிய முடிவுப்படி இவன் அன்னபட்சியை தமது இலச்சினை யாகக் கொண்டு ஆண்ட இதுவரை நம்மால் அறியப்படாத ஒரு புதிய அரசமரபினனே என்று ஐயத்திற்கு இடமின்றி கூறலாம்.

இவனுடைய ஆட்சி காலத்தில் ஒரு குறுநில மன்னனாக அரசாண்டவனாகத் தோன்றும் இவனது சிற்றப்பனாக இவன் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்படும் பொன் மாந்தனார் என்ற பெயரை உடைய மாந்தவர்மன் என்பவனது நடுகற்கள் இரண்டில் கொங்குவி அரசரோடு ஸ்ரீ கங்க அரசர் சங்க மங்கலத்து எறிந்த ஞான்று என்று குறிப்பிடும் வாசகங்கள் ஒருவேளை இவன் இராசமல்லனோடு போர் செய்ததைக் குறிப்பதாக எடுத்துக் கொண்டால் இந்த நரசிம்மவர்மனைக் கல்வெட்டு குறிப்பிடும் கங்க அரசன் என்றே சொல்லலாம். இக்கங்க அரசர்களே பிற்காலத்தில் தம்மைமுனைய தரைய யர்கள்[1] என்று குறித்துக் கொண்டார்கள் போலும் இதன் அடிப்படையில் கங்க அரசனை இவ்விசைய நரசிம்மனே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இளமைப் பருவத்தில் அவரை வளர்த்தவராகச் சொல்லப்படும் நரசிங்க முனைய தரைய ராக இருத்தல் கூடும். அன்றி விசைய நரசிம்மனின் சிற்றரசனாக திருநாவலூரை ஆண்ட ஒரு குறுநில மன்னனாக இருத்தல் வேண்டும்.

இந்நரசிம்மன் யாருடைய மகன் என்று குறிப்பாகச் சொல்வதற்குச் சான்று எதுமில்லை. ஆயினும் கங்க அரசர் களுடையதாக நிர்ணயிக்கப்பட்ட ஆட்சியாண்டுகளின் அடிப் படையில் இவன் கங்க அரசன் விசைய மகேந்திரவர்மனின் மகனாகவே இருக்கவேண்டும், மகேந்திரன் 39 ஆண்டுகளே அரசாண்டதாகக் கொண்டால் அவன் மகனான நரசிம்ம வர்மன் அரசுரிமை பெற்றதற்கு நடுவில் 20 ஆண்டுகளுக்கு மேல் இடைவெளி விழுகிறது. மத்தியத் தொல்லியல்

---

1. கங்கு என்ற சொல் முனையைக் குறிக்குமாதலால் கங்குதரையர் என்ற சொல்லே முனையதரையர் என்றாகியிருக்கலாம்.

துறையினர் இவனது 39-வது ஆட்சியாண்டு நடுகல்லைப் படித்தபடி 39 என்பது 59 ஆக இருக்குமானல் மகேந்திரன் இறந்தவுடனேயே இவன் அரசுரிமை பெற்றிருத்தல் கூடும். ஆனல் கி. பி. 790க்கும் 820க்கும் இடையே இப்பகுதியின் ஆட்சியில் ராஷ்ட்ரகூடர்களின் தலையீடு ஏற்பட்டு அவர்களிடம் இப்பகுதியும் வடகொங்கு நாடுங்கூட உட்பட்டிருந்ததால் இக்காலத்தே நரசிம்மன் சித்ரரசன் அளவிலே இருந்து வந்து கி. பி. 815க்கும் 820க்கும் இடையிலே தன் வலிமையால் மீண்டும் கங்க நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு அரசனுகி இருந்தல் கூடும் என்று கொள்வதே பொருத்தமாக உள்ளது. இவ்வாறு இவன் கைப்பற்றிக் கொண்டது கொங்குணி அரசனை இரண்டாம் சிவமாரவர்மனிடமிருந்தே என்று தோன்றுகிறது. கொங்கணி அரசர்களின் அரசசின்னம் யானையே ஆதலால் அவர்களை வென்று கங்க நாட்டின் அரசுரிமையை நரசிம்மன் பெற்ற உண்மையையே கீழ்முத்துகூர் நடுகல்லில் காணப்படும் யானையை அன்னப்பறவை துரத்துவது போன்ற சிற்ப வடிவம் குறிப்பதாகச் சொன்னலாம். அவ்வாறெனில் கங்க அரசர்களின் அரசசின்னம் அன்னப்பறவையேயாகும். விஜய சிங்கவிண்ணவர்மன் கங்கநாடு முழுவதையும், கொங்கு நாட்டையும் சேர்த்துப் பேரரசனுக ஆண்டபோது அவன் அரச சின்னம் சிங்கமாக இருந்திருக்க வேண்டும் என்பதைஇன்றும் கொங்குநாட்டில் காணப்படும் யானையை அடக்கி அதன்மீது அமர்ந்து இருக்கும் வடிவில் உள்ள சிங்கச் சிற்பங்கள் உணர்த்துகின்றன.[1] எனவே சிங்கவிண்ணனின் மகள்வயிற்றுப் பேரனுன மகேந்திரவர்மன் காலத்தில் அதியமான் அரசும், காடவ அரசும் தனியாகப் பிரிந்து விட்டதால் சிங்க சின்னம் காடவ அரசர்களுடையதாக, மகேந்திரன் வேளாள மக்களின் ஆதரவைப் பெற்றவனுக கங்க நாட்டை மட்டும் அரசாளத் தொடங்கிய போது மருதநிலப் பறவையான அன்னப் பறவையைத் தனது அரசசின்னமாகக் கொண்டான் போலும்.

---


1. இந்தத் தோற்றம் கொங்கணி அரசர்களை சிங்கவிண்ணவன் வென்று இருந்ததைக் குறிப்பதேயாகும்.

இக்கங்க அரசர்களது தலைநகரம் தகடூரேயாகும். தகடூரை (தருமபுரி) கங்க நாட்டுத் தகடூர் என்று பிற்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஸ்கந்தசிஷ்யனின் வழிவந்த காடவ அரசர்களின் தலைநகரம் நந்திக்காடவன் பெருமுகையூர் நாட்டை கொங்கணி அரசன் ஸ்ரீ புருஷனிடம் இழந்தபிறகு கூடல் என்ற நகரமாக ஆயிற்று. இந்தக் கூடல் என்பது பழங்கால வேசாலிப் பாடி நாடான தென்னாற்காடு மாவட்டத்தில் இன்று உள்ள கூடலூராகவோ அல்லது தருமபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தமலை நாடாகிய கூடலாகவோ இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பெரும்பாலும் பின்னதாகவே இருந்து இருக்கலாம்.

கங்க அரசர்கள் தங்கள் குலத்தின் அடையாள மாலையாக கோங்கம்பூவின் மாலையை அணிந்திருந்தவர்கள் என்று தோன்றுகிறது. இதனைப் பாண்டியன் நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடுகள் கங்க ராஜனாகிய மகேந்திரனைக் குறிப்பிடும் இரண்டு இடங்களிலும் "கொங்கரவ நறுங் கண்ணி கங்க ராஜன்" என்றே குறிப்பிடுவது தெளிவாக உணர்த்துகிறது. மகேந்திரனின் தாய் வழிப்பாட்டனான சிங்கவிண்ணன் காலமுதல் அவனிடம் கொங்கு நாடும் இருந்து வந்ததால் அதற்கு அடையாளமாக கோங்கம் பூவின் மாலை அவனுக்குரிய அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது போலும். இம்மாலையையே மகேந்திரனும், நரசிம்மனுங்கூட தமக்குரிய அடையாள மாலையாக அணிந்திருக்க வேண்டும். விசைய நரசிம்மன் ஏறக்குறைய கி. பி. 815ல் அல்லது 816ல் கங்க அரசனானான் என்று கொண்டோம். இவன் 30 ஆண்டுகள் அரசாண்டதாக இப்பொழுதைக்குத் தெரிய வந்துள்ளது. எனவே இவன் கி. பி. 845–46 வரை அரசாண்டான் எனலாம். இவனுக்கு பிறகு இவன் சந்ததியைப் பற்றி அறிய சான்று ஏதுமில்லை. இவனுக்குப் பிறகு கங்கநாடு கொங்கணி அரசர்களின் ஒரு கிளையினரான முதலாம் ப்ருதிவீ பதியின் ஆட்சியின் கீழ் வந்தது. பாண அரசர்களில் ஒருவனும் இக்கங்க நாட்டைச் சிலகாலம் ஆண்டனன் என்றும் தெரிகிறது.[1]

1. செங்கம் நடுகற்கள் முன்னுரை பக். 13.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளினின்று இடைக் காலக் கொங்கு நாட்டின் அரசியல் வரலாற்றேடு சம்பந்தப்பட்டிருந்த, காடவ கங்க அரசர்களின் வமிசாவழியைப் பின்வருமாறு அமைக்கலாம்.




* பெயர் குறிக்கப்பட தக்க சான்றுகள் இல்லை. எனவே உத்தேசமாக இவ்வாறு குறிக்கப்பட்டது.

இம்மரபு வழிப்பட்டியலில் குறிக்கப்பட்டு இருக்கும் அரசர்களுள் ஸ்கந்தசிஷ்யனின் வழிவந்த காடவ அரசர்கள் கொங்கின் வரலாற்றேடு சம்பந்தப்பட்டிருக்கவில்லை. எனவே நந்திக்காடவனுக்கும், ஈஸ்வர வர்மனுக்கும்பிறகு வந்தவர்கள் குறிக்கப்படவில்லை. ஆயினும் திருப்பதிக்கு அண்மையில் உள்ள திருச்சானூர் கல்வெட்டில் குறிக்கப்படும் நந்திவிக்கிரமவர்மன், தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், கம்பவர்மன், அபராஜிதவிக்கிரமவர்மன் ஆகியோரும் இக்காடவ அரசர்களின் வழி வந்தவர்களே எனலாம்.

அத்தியாயம்-7.

# கங்க அரசர்கள் காலத்தில் கவுண்டர்கள்

கங்க அரசர்களது ஆட்சிகாலத்தில் இன்று கொங்கு வேளாளர்களிடையே காணப்படும் சில கூட்டத்தவர்களும் வேட்டுவர் தலைவர்களும் சிறப்புடன் விளங்கினார்கள் என்று கிடைத்துள்ள பல நடுகல் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றது. நடுகற்கள் சமுதாயத்துள் பெருமனாக வாழ்ந்து போரில் வீரங்காட்டி இறந்தவர்களின் நினைவாக எடுக்கப் பட்டவை ஆதலால் அரசுசார்புடைய கல்வெட்டுகளைவிட சமுதாயத்தின் நிலையைத் தெளிவாக எடுத்து உரைப்பன வாக உள்ளமை சமுதாய வரலாற்றை அறியப் பெரிதும் பயன்படுகின்றன. இந்நடுகற்களில் குறிக்கப்பட்டுள்ள சில வேளாளர் கூட்டங்களும் சில கூட்டங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக விளங்கிய வேளாளர் குடியினரும், அந்நாளில் கொங்கு நாட்டில் குடியேறி இருக்கவில்லை. காரணம் கொங்கின் மேற்கு-தென்மேற்குப் பகுதிகளில் சேரர்களும், குளித்தலை, கரூர் உள்ளிட்ட கிழக்குப் பகுதி பாண்டிய நாட்டை ஒட்டியிருந்த தெற்குப்பகுதி ஆகியவற்றில் பாண்டியர்களும் ஆட்சி நிறுவி இருந்தமையேயாகும். சேரர்கள் தம்பகுதியில் இக்காலத்தே சுயாட்சி பெற்றவர் களாகவே விளங்கி வந்தனர் என்பதற்கு இப்பகுதிகளி லிருந்து கிடைத்துள்ள கல்வெட்டு-செப்பேட்டுச் சான்றுகள் உள்ளன. சேரர் ஆதிக்கப்பகுதிகளில் சேரன் கூட்டம் பனையன் கூட்டம், அந்துவன் கூட்டம் முதலிய சேரர் சம்பந்தப்பட்ட பெயர்களைச் சுமந்த கூட்டத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். பாண்டியர்களுடன் தொண்டை நாட்டிற்கு வடக்கே காளத்தி· முதலிய பகுதிகள் உள்ளிட்ட பெத்தப்பி நாட்டை ஆண்டுவந்த தெலுங்குச்



உக்ரநரசிம்மன் — நாமக்கல் குடைவரைக் கோவில்

பார்க்க — சிற்ப விளக்கம் பக்கம்-115

சோழ அரசன் ஸ்ரீகண்டன் (ஏறக்குறைய கி. பி. 815க்கு மேல் ஆண்டவன்) நட்பும் மணவினை உறவும் கொண்டிருந்தான் என்பதைப் பாண்டியன் பராந்தக வீர நாராயணனின் தளவாய் புரம் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இந்த ஸ்ரீகண்ட சோழன் நந்திவர்மப் பல்லவ மல்லனின் மகன் தந்திவர்மனை வென்று துரத்திவிட்டு தொண்டை நாட்டின் வடபகுதியையும் கடற்கரையை ஒட்டிய தென் பகுதியையும் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி ஆண்டான்.

தொண்டை நாட்டின் மேற்குப்பகுதி காடவ அரசனும் நந்திக்காடவனின் மகனுமான விசைய தந்தி விக்கிரம வர்மனின் ஆட்சியில் இருந்து வந்தது ஸ்ரீ கண்டசோழனின இந்த நட்புறவின் பயனாக இக்காலத்தே பொத்தப்பி நாட்டிலிருந்து வேட்டுவர்கள் பலர் கூட்டங் கூட்டமாக கொங்கு நாட்டின் கிழக்குப் பகுதிகளிலும், தெற்குப் பகுதிகளிலும் குடியேறினர். இவர்கள் தெற்குப் பகுதியில் மிகுதியாகக் குடியேறி நிலைபெற்ற இடமே தென்னிலை (தெற்கே நிலை பெற்றஇடம்) எனப்பட்டது அன்றியும் பழங்கால முதலே இப்பகுதிகளில் வேட்டுவர்கள் அதிகமாக இருந்தனர் என்று கூடத் தோன்றுகிறது. இவ் வேட்டுவர்கள் பாண்டியர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டனர். இதனால் அவர்கள் வேளாளர்களை ஆதரிக்கவில்லை என்பது பொருளாகாது. நாட்டை வளப்படுத்திப் பசிப்பிணி போக்கும் மருத்துவர்களான வேளாளமக்களை ஆதரிக்காமல் விட்டுவிடுவார்களா ? எனவே வேளாளர்களையும் ஆதரித்தனர். தம் நாட்டு வேளாள மக்களை தமது ஆதிக்கத்தின் கீழிருந்த கொங்கு நாட்டில் குடியேற்றி அப்பகுதிகளை வளம்பெறச் செய்தனர்.

இவ்வாறு பாண்டிய நாட்டில் இருந்து குடியேறிய வேளாள மக்களே பாண்டியன் கூட்டத்தவர் என்று கூறப் படுகின்றனர். வேளாண் வேட்டுவ மக்களிடையே அக்காலத்தில் பகைமை உணர்ச்சி எதும் இருக்கவில்லை. வேளாளர் நாட்டை வளப்படுத்த, வேட்டுவர்கள் சிறந்த படை

வீரர்களாகவும் போர்த்தலைவர்களாகவும் விளங்கி வந்தனர். ஆக இருசாரருமே அரசு ஆதரவு பெற்று இருந்தமையால் அங்கு பகைமைக்கு இடம் எற்படவில்லை. இதேபோல வட கொங்குப்பகுதிகளிலும், கங்க நாட்டிலும் வேளாளர்கள், வேட்டுவர்கள் ஆகிய இரு சாரருமே ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். வேட்டுவர்களில் மாவலியர் என்ற ஒரு பிரிவினர் உண்டு. இந்த மாவலியர் என்ற பெயர் மகாபலி வம்சத்தினர் என்பதிலிருந்தே வந்தபெயராகத் தோன்றுகிறது. மாவலி வாணராசன் என்று பாண அரசர்களுக்கு ஒரு பெயர் வழங்கி வந்ததும் இங்கு நினைக்கத்தக்கது. இதிலிருந்தும் வேட்டுவதி வாண கோவரைசர் என்று பிற்காலக் கல்வெட்டுகள் சில குறிப்பிடுவதிலிருந்தும் [1] பாண அரசர்களும் வேட்டுவ இனத்தவரே என்று நினைக்கத்தோன்றுகிறது இந்த வாணாதிராசர்களும் இவரைச் சார்ந்த ஏனைய வேட்டுவச் சிற்றரசர்களும் சிலசமயங்களில் காஞ்சி பல்லவர்களைச் சார்ந்திருந்து அவர்களுக்கு அடங்கி வாழ்ந்தபோதிலும் பல சமயங்களில் கங்க அரசர்களையும் காடவ அரசர்களையுமே ஆதரித்து அவர்களுடன் சேர்வுபட்டு நின்றார்கள். எனவே கங்க அரசர்களும், காடவ அரசர்களும், வேளாளத்தலைவர்களையே மிகுதியாக ஆதரித்து வந்த போதிலும், வேட்டுவர்களையும் ஆதரித்தனர். வீரஞ்செறிந்த வேட்டுவ மறவர்கள் தமது ஆதிக்கத்திற்குத் தீமை நேராவண்ணம் காத்து வந்த சிறப்பை அவர்கள் மறக்கவில்லை. முக்கியமாக எல்லைப்புறநாடுகளில் வேட்டுவர் இனத்தவரையே காமிண்டர்களாக நியமித்து இருந்தனர். இதனையும் இவ்வரசர்களது நடுகல் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

ஆயினும் கங்க அரசர்களுள் குறிப்பாக விசைய நரசிம்மன் வேளாளக் காமிண்டர்களின் ஆதரவை நிறையப் பெற்றவனாக ஒரு பேரரசன் அளவிலே வட கொங்கு நாட்டையும்

---

1. S. I. I. Vol. XII, Nos, 61, 168and செங்கம் நடுகற்கள் 1971/39,

கங்க நாட்டையும் அதற்கு வடக்கேயுள்ள பகுதிகளையும் ஆண்டு வந்ததால் அப்பகுதிகளில் வேளாளர் குலத் தலைவர்களே சிறப்புடன் விளங்கினர். வேளாளர் மரபு தனியான தொரு ஏற்றம் பெற்றுச் சிறப்புடன் விளங்கியது. இவ்வேளாளர் குலத்தவர்களுள் பொன்குன்ற நாட்டில் வாழ்ந்து வந்த கொங்கர்களாகிய கொண்கான நாட்டு வேளாண் மக்கள் கங்க அரசர்களோடு பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்தே நல்லுறவு கொண்டு இருந்தனர். இவர்களோடு பாணர் குல அரசர்களில் சிலரும், கந்தவிண்ணனின் வழிவந்த அதியமான் அரச மரபினரும் கூட அவ்வப்போது மணவினை உறவு பூண்டிருந்ததாகச் செங்கம் நடுகற்களிலிருந்து தெரியவருகிற போதிலும் கங்க அரசர்களுடன் அவர்கள் செய்து கொண்ட நல்லுறவே சிறப்பானது. விசைய நரசிம்மனது 17ஆவது ஆட்சியாண்டு குறிப்பிடும் இரண்டு நடுகற்கள் இந் நரசிம்மனது சிற்றரசனாக பொன்குன்ற நாட்டு வேளாளர் தலைவன் பொன் மாந்தன் என்பவனைக் குறிப்பிடுகிறது. இப்பொன் மாந்தன் தன் ஆட்சியாண்டைக் குறிப்பிட்டு நடுகல் எடுக்கச் செய்யும் அளவிற்கு தனியுரிமையை படைத்த சிற்றரசனாக விளங்கியவன் என்பதை இவனது ஆட்சியாண்டு குறிப்பிடும் இரண்டு நடுகற்கள் உறுதிசெய்கின்றன. இப்பொன் மாந்தன் நரசிம்ம வர்மனின் சிற்றரசனாகத் தெரிவதால் பொன்குன்ற நாட்டு வேளாண் மக்களுடன் நரசிம்மனின் தந்தை மகேந்திரன் காலத்திலேயே தொடர்பு ஏற்பட்டு விட்டது என்று தெரிகிறது. இப்பொன்குன்ற நாட்டு வேளாண் மக்களின் ஒரு பகுதியினரே பின்னால் கொங்கு நாட்டில் குடியேறியதும் தமது பூர்வீக நாடான பொன்குன்ற நாட்டின் பெயர் விளங்க தம்மைப் பொன்ன குலத்தவர், பொன்ன கூட்டத்தவர் என்று குறித்துக் கொண்டனர். சிங்கவிண்ணரான் காலத்திய நடுகற்களிலும் இப்பொன்குன்ற நாட்டு வேளாளத் தலைவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். விசைய மகேந்திரன் காலத்திய நடுகற்கள் பலவற்றுள் குறிக்கப் படும் பொன்னந்தியார், பொன்பாரனர், பொன் சேந்தியார்

பொன் தொர்கையார் போன்ற நாட்டுத் தலைவர்களும் இப் பொன்குன்ற நாட்டு வேளாளத் தலைவர்களேயாவர். இவ்வாறு வேளாளத் தலைவர்களும், வேட்டுவத் தலைவர்களும் கங்க, காடவ அரசர்களின் கீழ் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கி வந்ததால் இம்மக்களிடையே அந்நாளில் இனப்பாகுபாடு பற்றிய பகைமை உணர்வு இல்லாமலிருந்தது என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

சிங்க விண்ணன் காலத்தில் விசையமங்கலத்தை ஆண்ட அதியர்குலச் சிற்றரசன் விண்ணப் பெருமானடியின் கீழ் படைத்தலைவனுகவோ அல்லது காமிண்டனுகவோ விளங்கிய கொற்றந்தைக் காடன் என்பவனைப்பற்றி முன்னரே குறிக்கப்பட்டது. இதேபோல விசைய மகேந்திரன் 32-வது ஆட்சியாண்டு குறிப்பிடும் நடுகல் ஒன்றிலும் அக்கந்தை காடன் என்ற ஒருவன் குறிக்கப்படுகிருன். இவர்களுக்கு வழங்கும் காடன் என்ற பெயரிலிருந்து இவ்விருவரையும் கொங்கு வேளாளர் கூட்டங்களுள் ஒன்ருன காடர் கூட்டத்தவராகக் கூறலாம். இக்காடர் கூட்டத்தைத் தவிர காடைக் கூட்டம் என்ற வேறு ஒரு கூட்டமும் முதாளர் குறவஞ்சியில் கூறப்பட்டுள்ளது. காடர் கூட்டமும், காடைக்கூட்டமும் வேறு வேறு என்று சின்னியம் பாளையம் சின்னுசாமி கவுண்டர் என்பாரும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] எனவே காடர் கூட்டம் என்பது காடை கூட்டத்திலின்றும் வேறுபட்டது என்றே கொள்ளலாம். காடைக்கூட்டம் என்றபெயர் இக்கூட்டத்தின் ஆதிமக்கள் காடைக்குருவியைத் தமது அடையாளச் சின்னமாகக் கொண்டிருந்ததால் ஏற்பட்டிருக்கலாம். இதே போல காடர் கூட்டத்தவர்களின் முன்னேர்கள் கானகமாகக் கிடந்த கங்கு நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து பூமியை வளப்படுத்தி வந்ததால் காடவ அரசர்கள் தம்மைக் காட்டுப் பகுதி நிலப்பரப்பின் தலைவர்கள் என்ற முறையில் காடு+

1. கொங்கு வேளாளர். பக். ௬௬.

அவர் = காடவர் என்று கூறிக்கொண்டது போல இவர்களும் காடு + அன் = காடன் காட்டுப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டிருக்கலாம். சிங்கவிண்ணன் கால நடுகல்லில் குறிக்கப்படும் 'கொற்றந்தை காடன் என்ற பெயரில் காடன் என்பதற்கு மேற்கண்டவாறு விளக்கம் கொடுத்தாலும் கொற்றந்தை என்ற பெயரில் ஒருதனிக் கூட்டமே இருந்திருப்பதாகப் பிற்காலக் கல்வெட்டுகளிலிருந்து தெரிவதால் [2] கொற்றந்தை என்பதைக் கொண்டு இவனை அக்கூட்டத்தவன் என்று கூறக் கூடாதா என்று ஐயம் எழுகிறது. இந்த ஐயம் தீருவதற்கு கீழ்க்கண்டவாறு சமாதானம் கூறலாம்.

கொங்கு வேளாள மக்களிடையே அந்தணர் மரபைப் போல ஒரே கோத்திரத்தில் கூட்டத்தில் பெண் எடுப்பது மரபாக இருக்கவில்லை. வேறு வேறு கூட்டத்திலிருந்தே பெண்ணும், பிள்ளையும் சேர்த்து மணமுடித்தனர். இந்த அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கொற்றந்தை காடனின் தந்தை வழி கொற்றந்தை குலமாகவும், தாய்வழி காடர் குலமாகவும் இருந்து இவ்விரண்டையும் விளக்க கொற்றந்தை காடன் என்றே பெயர் சூட்டப்பட்டிருந்தது இவனுக்கு என்பதே அது. கொற்றந்தை, பொருனந்தை என்று வரும் கூட்டப் பெயரெல்லாம் ஆந்தைக் கூட்டத்தின் கிளைப் பகுதிகளே எனலாம். இக்கிளைப் பிரிவினுள் குமரந்தை என்ற ஒரு பிரிவும் இருந்தது போலும். செஙவிவாய்க் காலில் காணப்படும் தெள்ளாறு எறிந்த நந்திவர்மனின் காலத்திய நடுகல் ஒன்றில் குமரந்தை குறும்பராதித்தன் என்னும் காடுவெட்டிப் பேரரையன் என்று ஒரு சிற்றரசன் குறிக்கப்படுகிறான். [3] இக்குறும்பராதித்தன் குமரந்தை கூட்டத்தைச் சேர்ந்த தந்தைக்குப் பிறந்தவன் போலும். இதிலிருந்து குறுவம்சம், குறும்பர்கள் என்றபெயர் காரணத்

2. ARE. 1922. No. 647
3. SII. Vol. II. P. 37.

திற்கும் ஒரு ஒற்றுமை காட்டமுடிகிறது. குரு என்ற சொல் கன்னட வேர்ச்சொல். இதற்குப் பொருள் ஆடுகள் என்பதாகும். இதிலிருந்து ஆடுமாடுகளைச் தமது செல்வமாகப் பெற்றிருந்த முல்லை நிலமக்களே குரும்பர் எனப்பட்டனர் போலும்.

கவுரியர் என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் திரையர்கள் கால்நடைச் செல்வங்களை மிகுதியாகப் பெற்றிருந்தனர் என்பதை அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பது முன்னரே கட்டிக்காட்டப்பட்டது. எனவே ஆடு மாடுகளைச் செல்வமாகக் கொண்டு வாழ்ந்து வந்த முல்லை நிலமக்களே குரும்பர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இன்றும் கோவை மாவட்டப்பகுதிகளில் பழங்டிமக்களாக வாழும் குரும்பர்கள் இந்த முல்லை நில மக்களில் ஒருசாரர் நாகரிகம் பரவ முடியாத அடர்ந்தகாடு, மலைப்பகுதிகளில் குடியேறி நாகரிகம் அடையாமல் பின் தங்கிவிட்ட பழைய குரும்பர் இனத்தினரேயாவர் போலும். நாகரிகம் பெற்று அரசு அமைத்துக் கொண்டு வாழ்ந்த இவ்வினத்தாரின் ஏனைய மக்கள் பிரும்ம க்ஷத்திரிய அரசர்களைப் பின்பற்றித் தமக்கு குலமுறையும், வமிசமுதல்வனும் ஏற்படுத்திக் கொண்டு குரு குலத்தவர் என்றும், சந்திரவம்சத்தவர் என்றும், கொண்டின்ய கோத்திரத்தவர் என்றும் கூறிக் கொண்டிருக்கலாம். ஆகவே குரும்பஇனத்தில் வந்தவர்களே குருவம்சத்துத் திரைய அரசர்களாக இருத்தலும் கூடும். கொங்கு 24 நாடுகளில் ஒன்றும் புகழ் பெற்றதுமான குறும்பு நாடும் இக்குரும்ப இனத்தின் ஒரு பிரிவினர் அதிகமாகக் குடியேறியிருந்தமையால் மக்களின் அடிப்படையில் குறும்பு நாடு, குறப்புநாடு என்று பெயர் பெற்று இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

அடுத்து சிங்கவிண்ணவர்மனின் 33 ஆவது ஆட்சியாண்டு நடுகல்லில் பசிரப்பண்ணன் என்ற ஒரு தலைவன் பெயர் காணப்படுகிறது. இத்தலைவன் பண்ணகூட்ட

வேளானனே போலும். இவன் தவிர வேறு ஒரு பன்னை கூட்டத்தலைவன் பெயரும் இந்நடுதல் தொகுப்பில் காணப் படுகிறது. இப்பன்னை கூட்டம் சங்ககால முதல்வே சிறப் புற்று விளங்கிய கூட்டம் என்று முன்னரே கூறப்பட்டது.

பன்னைகூட்டம்

இக்கூட்டத்தவரின் பூர்வீகமே கோவலூர் நாடு என்று நடுகற்களில் குறிக்கப்படும் திருக்கோவலூர் திருவெண்ணெய் நல்லூர் உள்ளிட்ட பகுதிகள் எனத்தெரிய வருகிறது. இந்நாட்டைச் சேர்ந்த பண்ணன் என்பவர் ஒருவரைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வேளாள குலத்தவரான இவரது புகழ் நம்மை மெய்சிலிக்க வைக் கின்றன. சங்க நாட்களில் புலவர்கள் தாம் அரசனைப் பாடிப் பரவினர். ஆனால் அவற்றிற்கு மாறாக அக்காலத்தில் புதுமை யாக வேளாளர் தலைவனான இப்பண்ணன் என்பானைச்சோழ அரசன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனே பாடியுள்ளான். இப்பண்ணன் பெரிய வள்ளலாம். பழுமரத்திலே பறவைகள் கூடி ஆரவாரம் செய்வது போல இவனது அரண்மனையில் வறிய மக்களின் ஆரவாரம் கேட்குமாம். இதுபோன்ற பல வருணனைகளை விட சோழன் இவனைப் "பசிப்பிணி மருத்துவன்" என்றுஅழகான தமிழில் குறிக்கப்படுகிறானே... பசியென்னும் நோயைப் போக்கும் மருத்துவனுமே இவன்! இப்படி ஒரு உவமையா? என்னை விட பல்நாட்கள் இப் பண்ணன் வாழட்டும். என் வாழ்நாளையும் சேர்த்து இவன் வாழட்டும் என்கிறான் சோழன். வேளாள குல மக்களின் பண்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாக அல்லவா இவன் விளங்கு கிறான்! இவன் காவிரியின் வடகரைப் பகுதிகளை ஆண்டவன் என்று அகநானூறு 177 ம் பாடல் குறிக்கிறது. "தைஇ்தெல வாழா பிறர்க்குரியாளன் இவன்" என்கிறார், கொற்றன் கொற்றனார். (அகம் 54) இப்பண்ணனின் வழிவந்தவர் தான் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல். இவ் வள்ளலே கவிச்சக்ரவர்த்தி கம்பரை ஆதரித்தவராவர். இப்பன்னையைக் குலமுதல்வனாகக் கொண்டவர் தாம்

பன்னாள் கூட்டத்தவர். இவர்கள் உயர்தரமான நெல்லை விளைவிப்பதில் கெட்டிக்காரர்களாம். குலமுதல்வனை பண்ணையைப் போலவே இக்கூட்டத்தவரும் செல்வச்செழிப்புடன் வாழ்ந்து வந்தனராம். பிற்காலத்தில் பூந்துறை நாட்டு காளிங்கராயக் கவுண்டர் இவர்களிடம் கோபித்துக் கொண்டு போன பிறகுதான் இவர்களைப் போல வளமுள்ள பூமிக்குத் தலைவராக விளங்க வேண்டும் என்று வளம் கொழிக்க வைக்கும் காளிங்கராயன் அணையைக் கட்டி முடித்ததாக ஒரு கதை வழங்குகிறது.

இப்பன்னான் கூட்டத்தில் வந்த இன்னொருவன் பண்ணைய நாத்தன் என்றழைக்கப்படும் கவுண்டர். இவன் நரசிம்மவர்மனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் நடைபெற்ற ஒரு போரில் உயிர் துறந்திருக்கிறான். இதனை "தொறு இடுவித்துப் பட்டான் பண்ணையநாத்தன்" என்று உணர்த்துகிறது நடுகல். இக்கல்வெட்டு செங்கம் வட்டம் போந்தை என்ற ஊரில் உள்ளது.

**வண்ணக்கன் கூட்டம்**

வண்ணக்கன் என்ற சொல்லுக்குப் பொருள் நாணயங்களைச் சோதனை செய்பவர், பொன் சோதனைச் செய்பவர் என்பதாகும். இவ்வண்ணக்கன் என்றபெயரில் சங்கப் புலவர்களில் பலர் இருந்திருக்கின்றனர். வடமவண்ணக்கன் தாமோதரன், வடமவண்ணக்கன் பேரிச் சாத்தன், போன்றோர் இவ்வாறு நாணய சோதகர்களாக இருந்தவர் என்று தெரிகிறது. வண்ணக்கர் காணத்தை நீலமென்றலும் என்று தொல்காப்பியம் உரையில் சேனாவரையர் இவ்வண்ணக்கர்களை பற்றி குறிப்பிடுகிறார் (சொல்லதிகாரம்—16) இவ்வண்ணக்கர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாம் பிற்காலச்செட்டி முதலியார்கள் எனப்பட்ட தாராமங்கலத்து முதலிகள் என்று தோன்றுகிறது.

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆட்சி காலத்தில் இச்செட்டி முதலியார்களே பொன் நாணயங்களின்

சுத்த தன்மையை (மாற்று) அறிந்து சான்று வழங்குபவர்களாக இருந்தனராம். இக்கெட்டி முதலியார்களின் முத்திரை பதிக்கப்பட்ட பிறகு தான் கம்பெனியார் பொற்காசுகள் வாங்குவர் எனும் இதன் அடிப்படையில் தான் இன்று திருமணங்களில் மணமக்களுக்குப் பணம் ஆசியுடன் வழங்கும் போது இன்னார் அளித்த பணம் என்பதோடு கெட்டிவராகன் என்று கூறப்படுகிறது என்றும் கூறுவர். இந்தச் செய்தியும் வண்ணாக்கன் என்பாருக்கு கூறப்படும் விளக்கமும் ஒன்றுபட்டதாக இருப்பது சிந்தனைக்குரியது. எனவே கெட்டி முதலியார்களும் வண்ணாக்கர்கள் என்றே கூற வேண்டும். இவ்வண்ணாக்கர் கூட்டத்தின் பெருமையைக் கொங்கு மண்டல சதகம் பின்வருமாறு கூறுகிறது.

விண்ணுக்கு மாதுக்குத்தேவர்க்கும் ராமர்க்கு மென்முகி
வீற்கும்
பெண்ணுக்குங் கற்புக்குங்காத்தவன்காண் கம்பர் பேர்
விளங்க
எண்ணுக்குங் கீர்த்திக்குந் தோன்றுறு மாறுக்கு
மென்றடிமை
வண்ணாக்க கோத்திரன் நல்லவன் வாழி கொங்கு
மண்டலமே

கம்பர் பேர் விளங்க என்று இங்கு குறிப்பிடுவதின் காரணம் விளங்கவில்லை. ஒருவேளை கம்பர் இக்கூட்டத்தில் வந்தவரோ? அதனுல்தான் கம்பரின் புகழ் விளங்கும் படியாக இலக்கியச் சுவை உணர்ந்து அவற்றைப் போற்றி வாழ்ந்து வந்தனரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இக் கூட்டத்தவரைப் பற்றிக் குறிப்பிடும் இரண்டு நடுகற்களுள் ஒன்று விசைய நரசிம்மனது 12ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும்.

இது போந்தை என்ற ஊரில் உள்ளது வேணாட்டின் மேல் பாசாறு என்னும் ஊரை ஆள்பவர் படையெடுத்து வந்தபோது அவ்வூர்தலைவர் வண்ணாக்க கூட்டத்தைச்

சேர்ந்த சாத்தனுர என்பார் வீரமரணம் அடைந்ததைக் கூறுகிறது. இதே நரசிம்மவர்மனுடைய மற்ருெரு நடுகல் வண்ணாக்கன் கூட்டத்தைச் சேர்ந்த இன்ஞெரு சாத்தனுரையும் குறிப்பிடுகிறது. இந் நடுகல் நரசிம்மவர்மனின் பத்தாவது ஆட்சியாண்டை குறிப்பது. அதாவது போந்தை நடுகல்லில் குறிப்பிடும் சாத்தனுருக்கு இரண்டாண்டு முந்தையதாகும் இது

கோவிசைய நரசிங்க பருமற்கியாண்டு பத்தாவது மீகொன்றை நாட்டு பாலைக்கோட்டு தொறுகொண்ட ஞான்று வாணகோவரசர் சேவகர் பாலைக்கோடுடைய வண்ணக்க சாத்தனுர் தொறு இடுவித்து நாயவனேடு பட்டார்,, என்பது நடுகல் வாசகம்.

இந்தப் பாலைக்கோடு என்பது தருமபுரி வாவட்டத்திலுள்ள ஊராகும். இதில் குறிக்கப்பட்டுள்ள சாத்தனுரும் வண்ணாக்கன் கூட்டத்தைச் சேர்ந்தவரே என்பதைக் கல்வெட்டு வாசகம் உணர்த்துகிறது. இவர் வாணகோ அரசரின் சேவகர் என்று குறிப்பிடப்படுவதால் இக்காலத்திய வாணகோ அரசன் நரசிம்மனேடு நட்புக்கொண்டிருந்தவர் என்பதோடு அவனுடைய ஆட்சியாண்டைக் குறிப்பிட்டே கல்வெட்டு வெட்டப்பட்டிருப்பதால் நரசிம்மனைத் தன் பேரரசனக ஏற்றுக் கொண்டிருந்தவர் என்பதும் புலனுகும்.

இந்தச்சாத்தனுர் தன் நாயோடு இறந்தார் என்று கூறி நாய்க்கும் நினைவுக் கல் எடுத்த செய்தி குறிப்பிடத் தக்கது.

இனி கம்பவர்மனின் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த இரண்டு கொங்கு வேளாளக் கவுண்டர்கள் நம் கவனத்தைப் பெறுகின்றனர். ஒருவர் வட ஆற்காடு மாவட்டம் செங்கம் தாலுகா சின்னயம் பேட்டை நடுகல்லில் குறிப்பிடப்படும் எழு மாத்தூர் சாகாடைச் சிற்றன் என்பவர். மற்றவர்

இதே ஊரின் மற்றொரு நடுகல்லில் குறிப்பிடப்படும் செம்பன் காரிப் பெருமான். இவ்விருவருள் சாகாடை சிற்றன் பகைவர்கள் கவர்ந்து சென்ற எருமைக் கூட்டத்தை பின் தொடர்ந்து சென்று மேல் வேணாட்டைச் சேர்ந்த மணிக்கல வடலூரில் போரிட்டு அந்த எருமைக் கூட்டங்களை மீட்டு வீரமரணம் அடைந்த செய்தி கூறப்பட்டுள்ளது. நடுகல்லில் வீரனது உருவம் நேராகப்பார்த்த நிலையில் காணப்படுகிறது. கையில் வில்லும் குறுவாளும் வைத்து இருக்கும் நிலை[1] (செங்கம் நடுகற்கள் 51) இந்த வீரனது இயற்பெயர் சிற்றன் என்பது இவன் கொங்குவேளாளர் களில் சாகாடை கூட்டத்தைத் சேர்ந்தவர் கொங்கு இருபத்துநான்கு நாடுகளுள் ஒன்றான பூந்துறை நாட்டின் நான்காவது பேரூரான எழுமாத்தூரைச் சேர்ந்த வேளாளர் குலத்தவன் இச்சிற்றன். கம்பவர்மன் ஸ்கந்தசிஷ்யன் வழிவந்த காடவ அசர மரபினன் ஆவன் இதுகாறும் இவனைப்பல்லவ அரசன் என்றே அறிஞர்கள் கருதி வந்தனர். அன்று இவன் விசைய ஈஸ்வரவர்மனின் பெயரனும், தெள்ளாறு எறிந்த நந்திவர்மனின் மகனும் ஆவன். தெள்ளாறு எறிந்த நந்திவர்மனும் காடவகுலத் தவனே. இதனால்தான் பல்லவ அரசர்களில் காடுவெட்டி என்ற பெயர் இவனுக்கே வழங்கப்பட்டுள்ளது. சந்திர குலப் பிரகாசன் என்று நந்திக்கலம்பக பாடல் ஒன்று இவனைக் குறிப்பிடுவதும் சந்திரகுலமான திரையர் வமிசத்தில் வந்தவன் இவன் என்பதையே உறுதிப்படுத்து கிறது.

## சாகாடைக் கூட்டம்

காடைக்கூட்டத்தின் பண்டைய பெயர்களுள் ஒன்று சாகாடைக் கூட்டம் என்பது போலும். இதனை ஈரோடு பெருமாள் கோயிலின் வடபுறச்சுவரில் காணப்படும் 13ம்

1. செங்கம் நடுகற்கள், 51.

நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றும கூறுகிறது சாசனம் வழங்கப்பட்டமைக்குச் சாட்சிகையொப்பம் இட்டவர்களின் பெயர்களைக் குறிப்பிடும்போது அக்கல்வெட்டு இப்படிக்கு பூந்துறையில் மேலைச் சாகாடைகளில் அப்பியான் எழுத்து என்கிறது. எனவே மேல்கரை பூந்துறை நாட்டில் வாழ்ந்த இக் கூட்டத்தவர் மேலைச்சாகாடைகள் எனவும் கீழ்கரை பூந்துறை நாட்டில் வாழ்ந்தவர்கள் கீழைச்சாகாடர் எனவும் அழைக்கப்பட்டனர் என்று கூறலாம். இக் கூட்டத்தவர்கள் முன்னோர்பற்றி காடர் கூட்டம்பற்றி விளக்கும் போது கூறப்பட்டது.

அடுத்து சக்கரவரு என்ற ஒரு மரபினரின் பெயர் விசைய மகேந்திரவர்மனின் 39ஆவது ஆட்சியாண்டு நடுகல்லில் காணப்படுகிறது. இதில் போந்தை என்னும் ஊரின் மீது இச் சக்காவரு படையெடுத்து வந்ததாகக் குறிக்கப்படுகிறது.[1] கொங்கு வேளாளக் கவுண்டரிடையே பழைய கோட்டை பட்டக்காரரின் மரபினர் பயிரன் கூட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வேளாளக் காமிண்டர்கள் ஆவர். இவர்களது கொடிச்சின்னம் அன்னப் பறவையே என்று குறிப்பிட்டு இவர்களுக்கும் கங்க அரசர்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருந்து இருக்கக் கூடும். என்றும் முன்னர் குறிக்கப்பட்டது. இப்பயிரன் கூட்டத்துப் பட்டக்காரர்கள் சக்கரை மன்றாடியார்கள் என்று குறிக்கப்படுகின்றனர். இந்தச் சர்க்கரை மன்றாடியார்களின் முன்னோர்களே மேற்குறிப்பிட்ட நடுகல்லில் காணப்படும் சக்கரவரு என்ற பெயருடையவர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. சக்காவரு என்ற பெயரே பின்னும் சக்கரையர் என்று மருவியிருத்தல்கூடும். இச்சக்கரை மன்றாடியார்களின் தலைமை ஊரான பழைய கோட்டையின் அக்காலப் பெயர் பழசை, பல்சை என்பதாகும். எனவும்

---

[1]. செங்கம் நடுகற்கள், 1968/35.

இல்லூர் சிங்க விண்ணவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனவும் முன்னரே காட்டப்பட்டது. எனவே இச்சங்கரவரு என்பார் பழசையாகிய பழைய கோட்டையை அக்கால முதலே ஆண்டு வந்த சிற்றரசராக இருத்தல் வேண்டும்.

விசைய நரசிம்ம வர்மனின் இரண்டாவது ஆட்சியாண்டு நடுகல் ஒன்று (கி. பி. 818) வாணகோவரசரின் சேவகரும், மீகொன்றை நாட்டு மேல்வேலூரை ஆளும் பனைய மாரியார் என்பவர் பெயரைக் குறிப்பிடுகிறது. இவனுடைய பத்தாவது ஆட்சியாண்டு குறிப்பிடும் மற்றொரு நடுகல் வாண அரசரின் சேவகராக சிற்றுப்பாடி என்ற ஊரை ஆளும் பனையனூர் என்ற ஒருவரைக் குறிப்பிடுகிறது. இவ்விரண்டு பெயர்களும் ஒரே அரசனது 2, 12 ஆண்டுகளில் குறிக்கப்படுவதாலும் முன்னதில் பனைய மாரியார் இறந்து விட்டதாகக் குறிக்கப்பட்டு இருப்பதாலும் முன்னவரின் மகனுக்ச் சிற்றுப்பாடி பனையன் இருத்தல்கூடும் எனலாம். வேட்டுவர்களிடையே பனைய வேட்டுவர் என்ற ஒரு பிரிவு உள்ளது. வாண அரசர்கள் வேட்டுவர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் கூடும் என்று முன்னரே காட்டப்பட்டதால் வாண அரசரின் சேவகனகக் குறிக்கப்படும் இவ்விருவரும் பனைய வேட்டுவர் இனத்தைச் சேர்ந்த வேட்டுவக் காமிண்டர்களாக இருந்திருக்கக் கூடும்.

இதே விசைய நரசிம்மனது முப்பதாம் ஆண்டு குறிப்பிடும் நடுகல் ஒன்று படைகுமர் சேவகர் குமாரமங்கலக் கவுண்டர் என்பாரைக் குறிக்கிறது. திருச்செங்கோட்டை அடுத்த குமாரமங்கலம் ஜமீனைச் சேர்ந்தவரான முன்னாள் மத்திய மந்திரி டாக்டர் சுப்பராயன் குரான் கூட்டத்தவர். இவரது குமாரர்கள் குமாரமங்கலம் என்ற பெயரைத் தமது இயற்பெயரோடு சூடியிருந்தனர். இவ்வாறு குமாரமங்கலம் என்ற தமது ஊர்ப்பெயரை சூடிக் கொள்வது அவர்கள் குலமரபு போலும். அவ்வாறெனில் மேலே குறிப்பிட்ட நடுகல்லில் குறிக்கப்பட்டுள்ள குமாரமங்கலக்கவுண்டரும்

குமாரமங்கலத்தைத் தமது சொந்த ஊராகக் கொண்டவரான தூரன் கூட்டத்து வேளாளக் காமிண்டரே எனலாம். குமாரமங்கலக்கவுண்டர் என்ற பெயரிலிருந்து இவர் குமாரமங்கலம் என்னும் ஊருக்குக் காமிண்டராகச் சொல்ல முடியாது. ஏனெனில் பகைமூர் என்னும் ஊரை ஆண்டவர் இவர் (பகைமூர் சேவகர்) என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே இவரை பகைமூரின் காமிண்டர் என்பதே பொருத்தமானதாகும். குமாரமங்கலக்கவுண்டர் என்பதை இவர் இயற்பெயராகக் கொண்டு, குமாரமங்கலத்தில் குடியேறியிருந்த தூரன் கூட்டத்து வேளாளத் தலைவர் என்று இவரைக் குறிப்பிடலாம். இக்குமாரமங்கலம் திருச்செங்கோட்டிற்கு அருகில் உள்ள குமாரமங்கலமே யாகும். இவ்வூர் கொங்கணி அரசனான ஸ்ரீ புருஷனின் செப்பேடு ஒன்றிலும் அந்தணர் ஒருவருக்கு தானமாகக் கொடுத்த ஊராகக் குறிக்கப்பட்டுள்ளது. துவரைப் பதியிலிருந்து தமது கால் நடைச் செல்வங்களோடு குடி பெயர்ந்து வந்த கொங்கர்களாகிய வேளாளர்கள் முதன் முதலில் திருச்செங்கோட்டைச் சுற்றியுள்ள பகுதிகளிலே குடியேறினர் என்று கூறப்படுகிறது. இதனை திருச்செங்கோடு தாலூக்காவில் உள்ள துவரன்பாடி என்ற ஊரின் பெயரும் உறுதி செய்கிறது. இவ்வாறு இவர்கள் குடியேறியது கி. பி. 8, 9 நூற்றுண்டுகளுக்கும் முன்னரே என்பது குமாரமங்கலக்கவுண்டர் என்ற இக்காமிண்டர் பெயர் கி. பி. 846 ஐச் சேர்ந்த கல்வெட்டில் குறிக்கப் படுவதிலிருந்தே நன்கு உறுதிப்படுகிறது. இவர்கள் குடியேறிய இப்பகுதி ஊர்களுள் குமாரமங்கலமே முதன்மையிடம் பெற்றதாக இருந்திருக்கவேண்டும். இதனாலேயே தமது பூர்வீக ஊர் பெயரைத தமது பெயரோடு இணைத்துக் கூறி சிறப்பித்துக் கொள்வது பழக்கத்திற்கு வந்திருக்கக் கூடும். இப்பழக்கமும் கி. பி. 9-ஆம் நூற்றுண்டிலே சிறப்பாக விளங்கியது என்பதையே மேற்கண்ட குமாரமங்கலக் கவுண்டர் என்ற பெயர் தெளிவு படுத்துகிறது.

**செம்பன் கரிபெருமான்**

மற்றெரு நடுகல் (கம்பவர்மனின் 3-ம் ஆட்சி ஆண்டு) குறிப்பிடும் காரிப்பெருமான் செம்ப கூட்டத்தைச் சேர்ந்த தொண்டான் என்பாரின் மகன். இத்தொண்டானை மலையனூர் உடையான் என்று கல்வெட்டு குறிப்பதால் இவனும் ஒரு காமிண்டர் போலும். இப்பொழுது வாணியம் பாடி என வழங்கும் வாணகப்பாடியை தலைநகரமாகக் கொண்டு சிற்றரசனாக இருந்தவயிரமேக வாணகோவரையர் என்பவனின் சேவகன் என்று இச்செம்பர்குலத் தொண்டன் குறிக்கப்படுவதால் மலையனூர் வாண அரசர்களின் ஆதிக் கத்தில் இருந்ததாக தெரிகிறது.

**செம்ப கூட்டம்**

இந்நடு கல்லில் குறிக்கப்படும் செம்ப கூட்டம் என்பது கொங்கு கவுண்டர்களுக்கு உரித்தான கூட்டங்களுள் பழைமையானதொரு கூட்டமாகும். கவிச் சக்கரவர்த்தி கம்பரை ஆதரித்துப் போற்றியவர்கள் என்று கூறப்படுவதால் இவர்கள் சடையப்பர் என்னும் வேளாள குல வள்ளல் வாழ்ந்த திருவெண்ணெய்நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒருகாலத்தில் நிரம்ப வாழ்ந்து வந்திருக்கவேண்டும். செம்ப கூட்டத்தவர்கள் குளித்தலை கரூர் பகுதிகளில் அதிகமாக வாழ்ந்தவர்கள் என்று சில நூல்களில் குறிப்பு காணப்பட்டாலும் இவர்களது ஆதிநாடு மீகொன்றை நாட்டுப் பகுதிகளே என்று கூறலாம். செம்ப கூட்டத்தினர் கம்பரை ஆதரித்த செய்தியைக் கொங்குமண்டல சதகமும் புகல்கிறது. இக்கூட்டத்தவர்கள் ஆங்காங்கே கொங்கு நாட்டின் பல பகுதிகளிலும் பல காலங்களில் காமிண்டர்களாக விளங்கி பெருஞ் செல்வ சிறப்புடன் கொடைவள்ளல்களாகவும் மாவீரர்களாகவும் திகழ்ந்து வந்தனர், என்பதைப் பல கல் வெட்டுகள் கூறுகின்றன.

சிறப்புமிக்க இச் செம்பகூட்டத்தில் வந்தவனே தொண்டன்மகன் காரிப்பெருமான் எயில் நாட்டாச்

பாசாற்றூரைச் சேர்ந்த எருமை கூட்டங்களை கவர அவர்களை எதிர்த்தும் போர் செய்து வெற்றியும் பெற்றான். இக்காரிப்பெருமான் வெற்றி பெற்றதோடு நில்லாமல் அவர்களைத் துரத்திக்கொண்டு கோவூரில் உள்ள சிற்றிடையாற்றின் மேற்கில் மலையினடிவாரத்தில் உள்ள அயங்கயக்கரை என்னும் ஊரில், தன்னுடைய அம்பருத்தூணியில் உள்ள அம்புகள் அனைத்தும் தீர்ந்து, விட தன் அறையில் இருந்த சிறு குத்துவாளை உருவிப் போர் செய்த போது இறந்து விட்டானும் அவன் போர் செய்த விதத்தைக் கூட கல்வெட்டு வரிகள் விளக்கும் அழகு பெரிதும் வியப்பிற்குரியதாக இருக்கிறது.

அலகுமலைக்குறவஞ்சி குறிப்பிடும் வேளாளர் கூட்டங்களுள் நீலன் கூட்டம் என்பதும் ஒன்று. இந்த நீலன் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு வீரனையும் அரசர் பெயர் தெரியாத ஒரு நடுகல் குறிக்கிறது[1]

**வேறுடர்கள்**

வேறுடு என்பது கங்க அரசர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளில் தென்பெண்ணையாற்றின் கரையில் அமைந்திருந்த ஒரு நாடாகும். இதில் வட ஆற்காடு மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதி, தென் ஆற்காடு மாவட்டத்தின் வடமேற்காக இருந்த பெரும்பகுதி சேலம் மாவட்டத்தின் வடகிழக்குப்பகுதி, தருமபுரி மாவட்டத்தின் கிழக்குப்பகுதி ஆகியவை அடங்கியிருந்தன. இந்த வேறுடு மேல்வேறுடு எனவும், கீழ்வேறுடு எனவும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்று செங்கம் நடுகற்களின் குறிப்பிலிருந்து தெரியவருகிறது. வேறுடு என்பது வேளாளர் நாடு என்பதன் சுருக்கமேயாகும். நடுநாட்டுப் பகுதியின் வேளாள மக்களுள் பெரும்பாலோர் இந்நாட்டுப் பகுதிகளிலேயே வாழ்ந்தமையால் இது வேளாளர்நாடு

---

1. செங்கம் நடுகற்கள் 1971/87.

என்றே குறிக்கப்பட்டதுபோலும். இவ் வேளுட்டைச் சேர்ந்த சிறு உட்பகுதிநாடுகளே ஆந்தைப்பாடி நாடு, ஈசைப்பாடி நாடு,[1] கூறைநாடு ஆகியவை. இவற்றுள் திருக் கோயிலூர், திரு நாவலூர், திருவெண்ணெய் நல்லூர் ஆகிய ஊர்களும் அடங்கியிருந்தன. இவற்றுள் ஆந்தைப் பாடி நாடு என்பது ஆந்தைகுல வேளாளர்கள் மிகுதியாக வாழ்ந்ததால் அப்பெயர் பெற்றதென முன்னரே விளக்கப் பட்டது. ஈசைப்பாடி நாட்டில் வாழ்ந்த வேளாளர்குல தவரே ஈஞ்ச கூட்டத்தவர் எனவும், கூறை நாட்டில் வாழ்ந்த வேளாள மக்கள் கூறை கூட்டத்தவர் எனவும் பிற்காலத்தில் தம்மை அழைத்துக் கொண்டார்கள் என்று கூறலாம். அந்நாளில் வேளுடு முழுமைக்கும் தலைமை ஏற்று விளங்கினர் ஒரு வேளாளத்தலைவர். அவர் யாரென்று நமக்குத் தெரியவில்லை. ஆயினும் அவர் மரபில் வந்தவர்களே இன்றும் கொங்கு நாட்டில் சிறப் புடன் வாழ்ந்து வரும் வேளுவுடையாக் கவுண்டர் மரபினர் ஆவர். இம்மரபினர்பற்றி பிற்றி பின்னல் விரி வாகக் காணலாம்.

அடுத்து கட்டி, கத்தி என்ற பெயரையுடைய சிலரும் சங்க அரசர்கள் காலத்திய சில நடுகற்களில் குறிக்கப் படுகின்றனர். இவ்விரண்டு பெயர்களும் கட்டி என்ற ஒரே பெயரையே குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. இக் கட்டி மரபினர் கொங்கர்களே என்பதை சங்க காலத்தைப் பற்றி விளக்கப்பட்ட பகுதியிலே குறிக்கப்பட்டது. இக் கட்டி மரபில் வந்தவர்களே, பிற்காலத்தில் வடகொங்கு நாட்டின் குறுநில மன்னர்களாக விளங்கிய கட்டி முதலி யார்கள் ஆவர். முதலி என்பது முதன்மையான அதிகாரி என்பதையே குறிக்கும். இவர்கள் குறுநில மன்னர்களாக விளங்கினும் பேரரசர்களுக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று விளங்கியதால் அங்ஙனம் குறிக்கப்பட்டனர். இக் கட்டி மரபினர்களும் சங்க காலத்தில் சிறப்புடன் விளங்

1. ஈசைப்பாடி ஈஞ்சப்பாடி என்றும் வழங்கப்படுகிறது.

கியதைப்போலவே இடைக்காலத்திலும் இப்பகுதிகளில் சிறப்புடன் விளங்கிவந்தனர். இவர்கள் வன்னாக்க கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று முன்னால் கூறப்பட்டது.

## இராஷ்டிரகூடர்கள்

இரட்டபாடி நாட்டை தமக்குரிமையுடையதாகக் கொண்டு கி. பி. 8 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து ஆளத் தொடங்கிய இராஷ்ட்ரகூடர்கள் கொங்கு நாட்டு வரலாற்றோடு அதிகமாகச் சம்மந்தப்பட்டிருக்கவில்லையென்றாலும் கொங்கு நாட்டில் பிற்காலத்தே குடியேறிய வேளாளக் கூட்டத்தவர்கள் பலர் வாழ்ந்து வந்த பூர்வீக நாடான கங்க நாட்டின் வரலாற்றோடு சம்பந்தப்பட்டு இருந்தனர். இடையிடையே பல காலங்களில் அவர்களுடைய மேலாதிக்கத்தின் கீழும், நொளம்பபாடி நாட்டையாண்ட நொளம்ப பல்லவ அரசர்கள் சிலரின் மேலாதிக்கத்திலும் கங்க நாட்டுப்பகுதிகளில் வாழ்ந்து வந்த வேள்ளாள மரபினர் தமக்குரிய காமிண்டர் நிலையிலும், மற்றும் பொது வாழ்விலும் சிறப்புடனே விளங்கி வந்தனர். இந்த நிலையில் இப்பகுதிகளில் வாழ்ந்த ஒரு சில காமிண்டர்களைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

கங்க அரசர்களுள் கடைசிப் பேரரசனாக விளங்கிய விசைய நரசிம்மன் கி. பி. 8ஃ6க்குப்பக்கமாக இறந்து போனான். இவனுக்குப் பிறகு இவனோடு மணவினை உறவு பூண்டிருந்த கொங்கணி அரசர்களில் இளைய தலைமுறையில் வந்த முதலாம் ப்ருதிவீபதி கங்க நாட்டையும் தன் அரசோடு சேர்த்துக் கொண்டு ப்ருதிவீ கங்க அரையன், அதாவது கங்க பூமியின் அரசன் என்ற பெயரோடு தலைக்காட்டைத் தலை நகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினான். இவன் தன் மகளை காடவ அரசனும் நந்தீஸ்வரவர்மனுடைய மகனுமான தந்தி விக்ரவர்மனுக்கு மணம் செய்து கொடுத்து இருந்ததும் அவனுக்குப்பிறந்தவனே அபராஜித

வர்மன் என்பதும் நமது நூலின் கருப்பொருளுக்கு அப்பாற்பட்டது எனவே அதனை இங்கு கூறவில்லை. இப் பிருதிவிபதியின் இறுதிக்காலத்தில் அதாவது கி. பி. 878-க்குப்பக்கமாக கோலாரிலிருந்து ஆளும் தலைக்கிளையினன நீதிமார்க்கன் அப்பொழுதைய இராஷ்ட்ர கூட அரசனாக விளங்கிய முதலாம் அமோகவர்ஷனைப் பகைத்துக் கொண்டு அவன் ஆட்சியை எதிர்த்து கலகம் செய்தான் இந்த கலகத்தில் நொளம்ப அரசன் மாங்கியும் சேர்ந்து கொண்டான் இதனால் ஆத்திரம் அடைந்த அமோகவர்ஷன் தனக்கு அடங்கியிருந்த சாளுக்கியன் குண விஜயாதித்தனின் உதவியுடன் தன் மகன் கிருஷ்ணசுப தொங்க வர்மனையும் படையுடன் அனுப்பினான் பெரும் போர் நடைபெற்றது போரில் நொளம்ப அரசன் மாங்கி கொல்லப்பட்டான் நீதி மார்க்கனும் போரில் சரியான உதைவாங்கிக்கொண்டு இராஷ்ட்ரகூட அமோகவர்ஷனுக் குப் பணிந்தான்

இப்பொழுது பழையபடியே மீண்டும் கங்கராஜ்யம் ராஷ்ட்ரகூடர்களுக்கு அடங்கியதாக மாறிற்று. பிறகு கி. பி. 880-ல் அமோக வர்ஷனின் மகன் இரண்டாம கிருஷ்ண சுபதொங்கவர்மன் ராஷ்ட்ர கூட அரசனாக முடி சூடினான். அதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் நடந்தன. சோழ மண்டலத்தில் முதலாம் ஆதித்த சோழன் சோழப் பேரரசை விரிவுபடுத்துவதற்குக் காரணமான திருப்புறம் பியப்பெரும்போர் அவ்வாண்டிலே (880) நடைபெற்றது. அதில் பங்கு கொண்டிருந்த தலைக்காட்டு ப்ருதிவிபதி இறந்து போனான். வாண அரசனும்சூழ்நிலையை உணர்ந்து தன்னுடைய ஆதரவை பல்லவர்கள் புறம் மாற்றிக் கொண்டான். இந்த மாற்றங்களால் பயனடைந்தவன் நொளம்ப அரசனான மகேந்திரப் போத்தனேயாவன் ஆக கி. பி. 893 வாக்கில் மகேந்திரன் பெரும் படையுடன் வந்து தகடூரைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டான் தென்கொங்கு நாட்டின் தலைவிதி வேறு விதமாக இருந்தது அதனைப்பாண்டியன் பராந்தக வீரநாராயணன் பெரும்

படையுடன் வந்து கைப்பற்றிக்கொண்டான் ஆயினும் நந்தீச்சுரவர்மனின் மகனான விசைய கம்பவர்மன் ஆதித்த சோழனின் ஆதரவைப்பெற்று பல்லவ நாட்டின் தென் பகுதிக்கு மன்னன் ஆனான்.

**சிந்தகப்பாடி காமிண்டன்**

இராஷ்ட்ர கூடர்களின் ஆட்சி கொங்கு மண்டலத்தை யும் தன்னிடம் சேர்த்துக்கொண்டது என்பதை விளக்கும் வகையில் தர்மபுரி மாவட்டம் அரூர்வட்டம் சித்தலப் பாடி என்னும் ஊருக்கு மேற்கிலுள்ள பள்ளிப்பட்டி கிராமத்திற்குத் தென்கிழக்கில் ஒரு புளிய மரத்தடியில் அமைந்திருக்கும் நடுகல் ஒன்று சான்றாக விளங்குகிறது. இந்நடுகல் புடைப்புச் சிற்பமாக ஒரு வீரனின் உருவத் தைப் பெற்றுள்ளது. அவ்வீரனின் இடக்கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் காணப்படுகின்றன இரண்டு அம்புகள் நெஞ்சில் பாய்ந்து முதுகுப்புறமாக வெளி வந்துள்ளது. மேலே இருதேவ மாதர் வடிவம் காணப்படு கிறது இந்நடுகல் இராஷ்ட்ரகூட இரண்டாம் கிருஷ்ண னின் ஆட்சி ஆண்டு 5-ல் உருவாக்கப்பட்டதாகும்.

**கல்வெட்டு வாசகம்**

ஸ்வஸ்திஸ்ரீ சுபதொங்கதேவற்கு செல்லா நின்ற யாண்டைந்தாவது புறமலை நாட்டுச் சிந்தகப்பாடிக்கா முண்டன் நுளப்பமாறன் கன்னையன் சுபாத்தில் ஊரழிவித் பட்டான் இதில் குறிப்பிடப்படும் சுபதொங்கதேவர் இராஷ்ட்ரகூட அரசனான இரண்டாம் கிருஷ்ணனேயாவன் இவனது 5 ஆம் ஆண்டு என்று குறிக்கப்படுவதால் இக்கல் வெட்டில் குறிக்கப்படும் சம்பவம் நிகழ்ந்த ஆண்டு கி. பி. 886 ஆகும் எனவே இந்த ஆண்டிலே தர்மபுரி மாவட்டத் தின் கிழக்குப்பகுதியான புறமலை நாடு நொளம்ப அரசன் மகேந்திரன் கீழ் வந்துவிட்டது எனத்தெரிகிறது. ஆயினும் கல்வெட்டில் கிருஷ்ணனின் ஆட்சியாண்டே குறிக்கப் பட்டிருப்பதால் நுளம்பர்கள் இராஷ்ரகூடர் சளுக்கு

அடங்கியவர்களாகவே இருந்தனர் என்று தெரிகிறது சிந்தகப்பாடியின் காமுண்டனாக (கவுண்டர்) இருந்தவனின் பெயர் நுளப்பமாரன் கன்னையன் என்று இருப்பதால் இக்காமுண்டன் நுளம்ப மகேந்திரனுக்கு அடங்கியவனே என்று தெரிகிறது.

சிந்தகபாடிக்கவுண்டர் வன்னியக் கவுண்டராக இருக்க லாம் என்று தோன்றுகிறது இந்தப்பகுதியில் வேளாளக் கவுண்டர்களும் அதிகமாக இருந்தாலும் இந்நடுகல் அமைந்துள்ள பள்ளிப்பட்டு கிராமத்தில் பெரும்பாலான மக்களாக உள்ளவர்கள் வன்னியக்கவுண்டர்களே என்று பள்ளிப்பட்டு கிராமத்தில் வாழும் ஒரு வன்னியக்கவுண்டப் பெரியவர் என்னிடம் கூறினர். இந்த கிராமத்தில் 24 கவுண்டர்கள் குடும்பங்கள் வாழ்கின்றனர். பெரும் பாலும் எல்லோருமே விவசாயிகள்தான். பலருக்கு சொந்த மாகவே நிலமிருக்கிறது சிலர்குத்தகைக்கு வைத்திருக்கிறார் கள் போலிருக்கிறது. விளைப்பொருள்களில் பெரும்பாலா னவை புஞ்செய்பயிர்கள் தாம். அனேகமாக எல்லா குடும்பத்தவர்களும் வன்னியக்கவுண்டர்கள்தான் என்றும், அவர்கள் அனைவரும் தாயாதிக்காரர்களே என்றும் அந்தப் பெரியவர் கூறினர். இக்குடும்பத்தவர்கள் தெய்வமாகத் தொழும் நடுகல்லாக விளங்கும். இந்தசிந்தகப்பாடி கவுண்ட ரும் இவர்களின் முன்னோராக இருந்துவந்த ஒரு வன்னியக் கவுண்டரே என்று சொல்லலாம்.

**மற்றெருநுளம்பக் கவுண்டர்**

மத்தியக்கல்வெட்டுத்துறை ஆண்டறிக்கை 1912–வது ஆண்டிதழ் 325ம் எண்ணிட்ட கல்வெட்டு ஒன்று மற்றெரு கவுண்டரைப்பற்றிக் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு இவனுடைய 21ஆம் ஆட்சியாண்டினது. அதாவது கி. பி. 899 ஆம் ஆண்டினதாகும் இதில் மகேந்திர நுளம்பன் சோழ நாட்டிலிருந்து திரும்பியபோது கோலாரில் தங்கிய தாகவும் அப்பொழுது கீர்த்திக்கவுண்டர் என்ற பெயரு

டைய வேளாளக் கவுண்டரின் அந்தஸ்தை உயர்த்திய தாகவும் செய்தி கூறப்பட்டுள்ளது. இந்தக் கீர்த்திக் கவுண்டர் சிறு ஊர் ஒன்றுக்கு கவுண்டராக இருந்து வந்தான் போலும். அரசனின் மனம் கவரத்தக்க வகையில் இவன் என்ன அற்புதச் செயல் செய்தான் என்பது விளங்க வில்லை. ஆயினும் ஏதாவது ஒரு படையெடுப்பில் பேருதவி செய்து மகேந்திரனுக்கு வெற்றி ஏற்பட உதவியிருக்கலாம் என்று நாம் கொள்வதில் தவறில்லை. இதனால் மனம் மகிழ்ந்த மகேந்திரன் இவனை நாட்டுக் கவுண்டர் நிலைக்கு உயர்த்தியிருக்கலாம். இக்கீர்த்திக் கவுண்டருக்கு மகேந்திரன் அளித்த பதவி புல்லிநாட்டிற்கு இவரை நாட்டு கவுண்டராக உயர்த்தியது மட்டுமின்றி (புல்லிநாடு என்பது திருப்பதிமலை உள்ளிட்ட பகுதிகளாகும்) அதன்சுற்றுப்புறத் திலுள்ள பல கிராமங்களையும் மானியமாக அளித்ததுமாகும். இதிலிருந்து நுளம்பர்கள் காலத்திலும் கவுண்டர்களில் பலர் பல வீரச் செயல்களைப் புரிந்து அப்பொழுதைய தமது அரசனுக்குப் பல வகையிலும் உதவியாக இருந்தும் பட்டங் களும், உயர்பதவிகளும் பெற்றுசிறப்புடன் விளங்கிவந்திருப் பதாகத் தெரிகிறது.

இந்நுளம்பர்கள் காலத்து மற்றொரு நுளம்பக் கவுண்ட ரைப் பற்றிய செய்தி சுவையானது. இந்தக் கவுண்டர் வீர மகேந்திர நொளம்பனின் மகனான அன்னிக நுளம்பனின் காலத்தில் வாழ்ந்தவராகும் இதனை நமக்குத் தெரிவிக்கும் கல்வெட்டு தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் அரூரி லிருந்து தீர்த்தமலை செல்லும் தடத்தில் தீர்த்தமலைக்கு மூன்றாம் இரண்டு கிலோமீட்டரிலுள்ள மூத்தனூரைச் சேர்ந்த பொன்னேரிக்கரையில் உள்ளது. இக்கல்வெட்டில் கொங்கு வேளாளக் கவுண்டரைப் பற்றிய சிறப்புச் செய்தி காணப்படுவதோடு வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் வகையில் சகவருடமும் கொடுத்து அரசனது ஆட்சியாண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அன்றியும் இந்தக் கவுண்டர் கொங்கு வேளாளருக்குரிய சிறப்புக் கூட்டத்தில் எந்தக் கூட்டத்தை சேர்ந்தவர் என்ற விவரமும் அவர் நிகழ்த்

திய வீரச்செயலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஒரு நடுகல் கல்வெட்டேயாகும். மற்றைய நடுகற்களைப் போல இதிலும் வீரனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ஸ்வஸ்தி ஸ்ரீ சகரையாண்டு எண்ணூற்று நாற்பத்தேழாவது அன்னையன் வீர நுளம்பனுக்கு ஆண்டு இரண்டாவது வல்லவரையர் நாட்டில் தொறுக் கொள்ள பவான்னையூர் காமுண்டர் மணியர்மணியமனுர் தொறு மீட்டுப்பட்டார். தெளிவான கல்வெட்டு இது. அன்னையன் என்ற முதல் பெயர் அன்னிகன் என்பதன் திரிபாகும். இந்த அன்னிகன் மகேந்திர நுளம்பனின் மகனுவன். சக 847 என்பது கி. பி 925ஆகும். இந்த ஆண்டு வீரநுளம்பனின் இரண்டாவது ஆட்சியாண்டு எனில் இவன் தந்தை மகேந்திரன் 923 வரை ஆண்டிருந்தல் வேண்டும். வல்லவரையர் என்பது இராஷ்டிரகூடர்களைக் குறிக்கும். எனவே நுளம்பர்கள் இராஷ்டிர கூடர்களுக்கு கீழ்ப்படிய மறுக்க இராஷ்டிரகூட அரசன் படையெடுத்து வந்திருக்க வேண்டும். அவ்வாறு படையெடுத்து வந்தவன் இரண்டாம் கிருஷ்ணனின் மகன் இந்திரவர்மனுவான்.

பவான்னையூர் என்பது எதுவாக இருக்கும் என்று இப்பொழுது தெரியவில்லை. ஆயினும் கல்வெட்டு கிடைத்துள்ள பகுதியைச் சேர்ந்த ஒரு ஊராகத்தான் இருக்க வேண்டும். இப்பகுதிக்கு அருகேதான் பாலைக்கோடு உள்ளது. பாலைக்கோட்டின் கவுண்டராக வண்ணக்கன் கூட்டத்தைச் சேர்ந்த சாத்தனுர் என்பவரை முன் இதழ்களில் கண்டோம். அதற்கு அருகிலே உள்ள பவான்னையூர் கவுண்டராக மணியன் கூட்டத்தைச் சேர்ந்த மற்றொருவர் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறுர். எனவே கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பலர் இப்பகுதியில் நிறைய வாழ்ந்தனர் என்று தெரிகிறது.

கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் துவக்கத்திலே மணியன் கூட்டத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் காணப்படுவதால் அக்காலத்திற்கு முன்பிருந்தே மணியன் கூட்டத்தார் சிறப்புடன் விளங்கி வந்திருக்கிருர்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்தாம் மேற்குறிப்

பிட்ட கல்வெட்டில் கூறப்பட்ட மணியன் மணியமனார் ஆவர். இவர் தம் நாட்டிலுள்ள பசுக் கூட்டங்களை இராஷ்டிர கூட பகை வீரர்கள் கவர்ந்து செல்ல அவற்றை மீட்க வீரத்துடன் போர் புரிந்து, அப்பசுக்கூட்டங்களை மீட்டு உயிர் துறந்திருக்கிறார்கள். இவர் தம் புகழ் தமிழக வரலாற்றில் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது.

**வேட்டுவர்களில்......**

இக்கால வேட்டுவ மக்களிலே மேலே காட்டப்பட்ட ஓரிருவரைத் தவிர குறிப்பாகச் சுட்டிக் காட்டிடக்கூடிய அளவிற்கு வேறு யாரைப் பற்றியும் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை. ஆயினும் பொத்தப்பி நாட்டுச் சோழ அரசனான ஸ்ரீ கண்டன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஆண்டபொழுது பாண்டிய மன்னர்களுடன் அவன் வைத்துக்கொண்டிருந்த மணவினை உறவின் காரணமாகப் பல வேட்டுவக் குடும்பத்தினர் கொங்கு நாட்டில் குடியேறியிருந்தனர் என்று முன்னர் குறிப்பிட்டிருந்ததை இங்கு நினைவில் கொள்ளுதல் வேண்டும். பாண அரசர்களும் வேட்டுவர் இனத்தவரோ என்று நினைக்கத்தக்க அளவிற்குச் சில சான்றுகள் உள்ளதால் இப்பாண அரசர்களின் கீழ் இப்பகுதிகளில் பல வேட்டுவ நாட்டுத் தலைவர்களும் நிச்சயம் இருந்திருக்கக்கூடும். ஆயினும் இப்பகுதியில் இருந்த வேட்டுவர்களைவிட அதிக அளவில் பாண்டிய நாட்டு எல்லைப் பகுதியை ஒட்டிய கொங்கு நாட்டின் தெற்கு—தென்கிழக்குப் பகுதிகளில் அதிக அளவில் வேட்டுவர்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. ஸ்ரீகண்ட சோழனின் சம காலத்தில் கங்க அரசனாக விளங்கியவன் விசைய நரசிம்மன்.

இதே போல் காடவ அரசர்களில் விசைய நந்தி விக்ரமன் ஸ்ரீ கண்டனின் சமகாலத்தவனாக விளங்கினான். இவ்வரசர்களும் ஸ்ரீ கண்டனோடு நட்புடனே விளங்கினர். இந்தத் தொடர்பின் பயனாகவே சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் மூன்று முறை கொங்கு நாட்டிற்கு விசயம் செய்ததோடு மற்ற நாயன்

மார்கள் சென்று பாடியிராத சில கொங்கு நாட்டுத் தலங்களையும் பாடியுள்ளார். சுந்தரமூர்த்திகள் திருப்பரங்குன்றத்திற்கு வருகை தந்தபோது அவரை வரவேற்றதாகத் தெரிய வரும் பாண்டிய மன்னர், சோழ மன்னர்களில் பாண்டியன் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனும், சோழன் ஸ்ரீ கண்டனுமேயாவன் என்றே தோன்றுகிறது. பாண்டியன் ஸ்ரீ வல்லபன் காலத்தில் கொங்கு நாட்டின் தென்பகுதி இவனிடமே இருந்தது போலும். இவன் கொங்கு நாட்டில் ஆறூர் எனப்படும் இக்கால அன்னூரிலும் போர் நிகழ்த்தியிருக்கிறான் என்பதை தளவாய் புரச் செப்பேடுகள் குறிக்கின்றன.

இந்த ஸ்ரீ வல்லபன் ஸ்ரீ கண்ட சோழனின் மகளான அக்கள நிம்மடியை மணந்திருந்ததால் ஸ்ரீ கண்டனால் ஆதரிக்கப்பட்ட வேட்டுவ இனத்தவர்களுக்கு இவனும் நிச்சயம் பேராதரவு கொடுத்து இருப்பான் என்று கூறலாம். வேட்டுவ தலைவர்கள் இவனுடைய படைத்தலைவர்களாகவும் இருந்திருக்கக் கூடும். எனவே தென் கொங்கு நாட்டில் இன்றும் அதிக அளவில் வாழும் வேட்டுவர்கள் இக்காலத்திலே குடியேறியிருந்து பெருஞ்சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும். இதனைச் சுந்தரர் தேவாரமும் உறுதி செய்கிறது. கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றான திரு முருகன் பூண்டியைப் பாடும் சுந்தரர் அவ்வூரில் வேட்டுவர் மிகுதியாக வாழ்ந்து வந்தமையை "முடுகு நாறிய வடுக வேடுவர் வாழ் முருகன் பூண்டி" எனவும் வெஞ்சமாக் கூடலூரைப் பாடும் பதிகத்தில் "வேடர் விரும்பி வாழ் வெஞ்சமாக் கூடல்" என்றும் குறிப்பிடுவது இக்கருத்தை வலியுறுத்தும்.

இன்னும் கி. பி. 1815-ல் சென்னை மாநிலத்தின் நில அளவைத் துறைத் தலைவராக விளங்கிய கால்னல் மெக்கன்சி என்பாரின் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்பில் வேட்டுவப் பட்டக்காரரான கோபண்ண மன்றாடியாரின் வம்சத்தைப் பற்றிக் குறிப்பிடும் இரண்டு இடங்களில்[1] சேர

---

1. Mekenzies Manuscripts Ed. by Sri T. V. M. Page 108 & 118.

மான் பெருமாள் கொங்கு நாட்டை அரசாண்ட போது கண்ணப்ப நாயனரின் சிவபக்திச் சிறப்பை உணர்ந்து அவர் வழிவந்த வேட்டுவர்களில் 16000 குடும்பங்களைக் கொங்கில் குடியேற்றி அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளும் நில உரிமையும் கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது இச்சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பரே என்பதை அனைவரும் அறிவர்.

எனவே இக்காலத்தில் சேர நாட்டை ஒட்டிய தென் கொங்கிலும் வேட்டுவர் குடியினரைக் குடியேற்றுவதில் சேரமான் பெருமானுக்குப் பங்கு உண்டு என்று தெரிகிறது. இக்காலத்தே கொங்கு நாட்டின் மேற்கே உள்ள பகுதிகள் சேரமான் பெருமானிடமும், கிழக்குப் பகுதிகள் பாண்டியன் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனிடமும் இருந்தன என்று தெரிகிறது. இக்காலத்தில் கொங்கில் வேட்டுவர் குடியேற்றமும் பெருமளவில் நிகழ்ந்தது என்று கூறலாம் இவ்வாறு குடியேறிய வேட்டுவர்கள் கவிலுவர் (காவலியர்) புவிலவர் (பூவலியர்) வேட்டுவர் எனப்பட்டனர் என்றும் பூவலியர் மரபில் வந்த ஒரு கோபண்ணன் என்பார் குடியேறிய 16000 குடும்பங்களுக்கும் தலைமை பூண்டார் என்றும் அக்குறிப்பு கூறுவதிலிருந்து இக்கோபண்ணர் வேட்டுவர் குடியேறிய பகுதிகளுக்கு ஊராட்சித் தலைவராக (காமிண்டர்) பொறுப் பேற்றார் என்றும் கூறலாம். இதே காலத்தில் இங்கு வேளாளர் குடியேற்றம் பெருமளவில் நிகழவில்லை. குடியேறியிருந்த கொங்கு வேளாளர்களில் நாடாளும் உரிமை பெற்று இருந்த பழைய கோட்டை மன்றாடியார் மரபு கங்க அரசர்களுடன் தொடர்புடையது எனவும் சக்கரவரு என்ற மரபுப் பெயருடன் ஆனார். விசையமங்கலம் பகுதிகளை ஆண்டு வந்த சிற்றரசர்களாக விளங்கினர் எனவும் கூறப்பட்டது.[1] இம் மரபினைச் சேர்ந்த காமிண்டரும் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனை எதிர்த்தவனாகவே தோன்றுகிறது. இவனுடைய ஊரான

1. இந்நூல், பக்கம் 142.

ஆனூரில் நடைபெற்ற போர் காடவருடன் நடந்தப்பட்டதாகத் செப்பேட்டிலிருந்து தெரியவருவதால்[2] இக்காலக் காடவ அரசனாக இருந்திருக்கக் கூடிய கம்பவர்மனே இப்போரில்பங்கேற்ற பேரரசன் எனவும் அவனுக்காகவே ஆனூர் காமிண்டர் ஸ்ரீ வல்லபனோடு மோதியிருக்க வேண்டும் எனவும் கருதலாம். இக்கம்பவர்மன் கால நடுகல் ஒன்றே கொங்கு நாட்டு எழுமாத்தூரில் (காங்கேயம் அருகே) வாழும் சாகாடச் சிற்றன் என்பவனைப் பற்றிக் குறிப்பிட்டதும் இம்முடிவிற்கு வலிவு தரக்கூடியது. எனவே கம்பவர்மனின் மேலாதிக்கம் கொங்கு நாட்டிலும் விளங்கியது என்று கொள்வதில் ஐயமில்லை.

---

2. தளவாய்புரம் செப்பேடுகள் வரி 58.

## அத்தியாயம்-8.

# இடைக்காலக் கொங்கு

கி. பி. 880-ல் சோழ நாட்டில் கொள்ளிடக் கரையில் உள்ள திருப்புறம்பியம் என்னும் ஊரில் நடைபெற்ற பெரும் போர் தமிழக வரலாற்றில் ஒருபுதிய திருப்பத்தை ஏற்படுத்தியது தஞ்சையில் சோழராட்சி இப்போரின் பயனாக நிறுவப்பட்டது, இப்போருக்குப் பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் சோழர்களுக்குச் சாதகமாகவே அமைந்தன. ஆதித்த சோழனின் உதவியுடன் பல்லவன் நிருபதுங்கவர்மனை வென்று பல்லவ நாட்டையும் கைப்பற்றி ஆண்ட காடவ அரசன் அபராஜிதனை கி. பி 885க்குப் பக்கமாக ஆதித்த சோழன் கொன்று அவனுடைய தொண்டை நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான் பிறகு சில ஆண்டுகளில் கொங்கு நாட்டையும், ஆதித்த சோழன் கைப்பற்றிக் கொண்டான். இதனைக் கொங்கு நாட்டின் கிழக்குப் பாதியில் கிடைக்கும் ராஜகேசரிவர்மன் என்பவனின் 13, 14, 16 ஆம் ஆட்சியாண்டு இட்ட கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன[1] இந்த ராஜகேசரி வர்மன் ஆதித்த சோழனேயாவன். ஆனால் இக்காலத்தே கொங்கு நாட்டின் மேலைப் பாதியை சேர அரசர்கள் ஆண்டு வந்தனர். இச்சேர அரசர்களுள் தாணு ரவி என்பவன் ஆதித்த சோழனின் நண்பனாகத் தஞ்சைமாவட்டம் திருநெய்த்தானம் கல்வெட்டு உணர்த்துவதால் ஆதித்த சோழன் சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலத்தின் கிழக்குப் பகுதியை மட்டுமே கைப்பற்றிக் கொண்டான் எனலாம். கோவைக்கு அடுத்த வெள்ளலூர் தேனீஸ்வரர் கோயிலில் காணப்படும் இரண்டு கல்வெட்டுகள் சேரமான் கோக்கண்டன் வீரநாராயணன்

1. ARE. 47, 48 of 1888 and 626, 627 of 1905.

என்பவனின் 11ஆம் ஆட்சியாண்டையும் கோக்கண்டன் ரவி என்பவனுடைய 24ஆம் ஆட்சியாண்டையும் குறிப்பனவாகப் பொறிக்கப்பட்டுள்ளன. வீரநாராயணன் என்ற பெயர் ஒற்றுமையைக் கொண்டு வரலாற்றாசிரியர்கள் சிலர் முதலாம் பராந்தக சோழனுக்கு வீரநாராயணன் என்ற ஒரு பெயர் உண்டாதலால் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்று அவன் காலத்தில் வாழ்ந்தவன் இவன் என்பர். ஆனால் வீரநாராயணன் என்ற பெயரை இயற்பெயராகவே தரித்திருந்தவன் பாண்டியன் பராந்தக வீரநாராயணன் (860—905) இப் பாண்டியன் சேர அரசர்களுடன் மணவினைத் தொடர்பு பூண்டிருந்தவன் அன்றியும் மேற்குறிப்பிட்ட சேர அரசர்கள் தம்மைச் சந்திராதித்த குலத்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். சேரர்கள் ஆதித்ய (சூரியன்) குலத்தவர்கள். பாண்டியன் சந்திரகுலத்தவர்கள் எனவே இச் சேர அரசர்களுள் ஒருவன் பாண்டியர் குல இளவரசிக்குப் பிறந்தவனாக நிச்சயம் இருத்தல் வேண்டும்.

அவ்விளவரசி பாண்டியன் வீர நாராயணனின் மகளாக இருந்திருக்க-வேண்டும். அதன் காரணமாகவே தாய்வழிப் பாட்டன் பெயரைச் சேரனும் தரித்திருக்க வேண்டும். இவனே கோக்கண்டன் வீரநாராயணன் ஆவன். இவன் ஆதித்த சோழனுடன் நட்பு பூண்டிருந்த சேரமான் ஸ்தாணு ரவியா அல்லது அவன் மகனா என்று நிச்சயிக்க முடியவில்லை. எவ்வாறாயினும் கொங்கு நாட்டின் மேற்பகுதியிலுள்ள சில இடங்களையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு ஆட்சி செய்து வந்த சேர மன்னர்கள் அவ்வப்போது வலிமை பெற்று ஆண்ட அரச மரபினரோடு சம்பந்தம் செய்து கொண்டு அவர்களுடன் நட்புடனே இருந்து வந்தார்கள் எனலாம். சேரமான் ஸ்தாணுரவியின் மகளை ஆதித்த சோழன் தன் மகன் முதலாம் பராந்தகனுக்கு மனைவியாக்கி வைத்தான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆதித்த சோழனின் இறுதிக் காலத்தில் மீண்டும் கொங்கில் பாண்டியர் ஆதிக்கம் வலுப்பெற்றது. இந்த ஆதிக்க உரிமையை அவன் கொங்கர்களுடன் கடுமையாகப் போரிட்டே பெறவேண்டி

இருந்தது என்பதை பாண்டியன் பராந்தக வீர நாராயனனது செப்பேடு உணர்த்துகிறது. இதற்குக் கொங்கர்கள் சோழர்களுடைய மேலாதிக்கத்தை விரும்பி ஏற்றிருந்ததே காரணமாக இருந்து இருக்கலாம். ஆதித்த சோழனுக்குப் பிறகு கி. பி 907ல் முதலாம் பராந்தக சோழன் பட்டம் ஏற்றான். இவன் பட்டம் ஏற்ற சில ஆண்டுகளுக்குள்ளேயே பாண்டியர்களை வென்று மதுரையைக் கைப்பற்றிக் கொண்டு விட்டதால் விரைவிலேயே கொங்கு பராந்தகன் வசம் வந்தது.

பாண அரசர்களையும் வென்று அவர்களது நாட்டை கங்கபாடி நாட்டையாண்ட இளைய தலைமுறை கொங்கணி அரசனான முதலாம் பிருதிவிபதியின் பெயரன் இரண்டாம் பிருதிவிபதிக்கும் கொடுத்து அவனைத் தனக்கு அடங்கிய வனாக ஆளச் செய்து அவனுக்கு செம்பியன் மாவிலிவாணராயன் என்ற பட்டமும் கொடுத்துச் சிறப்பித்தான். இதற்குச் சேர அரசனும் துணை நின்றதாகத் தெரிவதால் சேர அரசனின் நட்பு பராந்தகனுக்கு இருந்தது என்றே தெரிகிறது. இப்பராந்தகன், இவன் பாட்டனான விசயாலய சோழன் ஆகியோரது ஆட்சி ஆண்டைக் குறிப்பிடும் சில நடுகற்களும் செங்கம் பகுதியில் கிடைக்கின்றன. இவற்றுள் சில வேட்டுவ தலைவர்களின் பெயர் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து அவர்கள் அப்பகுதிகளிலே சிறப்புற்றிருந்தார்கள் என்று தெரிகிறது. காவேட்டுவ அய்யன்[1] (காவ லியர் மரபை கா என்ற அடைமொழி குறிப்பது போலும். அய்யன் = தலைவன்) ஆலை மங்கலம் என்னும் ஊரையாண்ட வேட்டுவதி வாண கோவரையர்[2] மேற்கோவலூர் நாட்டை ஆண்ட மற்றொரு வேட்டுவதியரையர்[3] வேட்டுவன் எழுநூற்றுவன்[4] ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

---

1. செங்கம் நடுகற்கள் 1971/116.
2. Ibid. 1971/39.
3. Ibid. 1971/45.
4. ARE 221 of 71-72 (un published).

இவர்களுள் வேட்டுவன் எழுநூற்றவன் என்ற பெயரில் எழுநூற்றவன் என்பது எதன் அடிப்படையில் வந்தது எனத் தெரியவில்லை.

இவன் வேணாட்டிலுள்ள வாலையூரில் இருந்த வாலையூர் அடிகள் என்பவருக்கு மங்கலப்பாடி என்ற ஊரைத் தானமாகக் கொடுத்ததாகக் கல்வெட்டுச் செய்தி உணர்த்துகிறது. இவற்றிலிருந்து இப்பகுதிகளில் முதலாம் பராந்தக சோழனது காலத்திலும் வேட்டுவர்கள் மிகச் சிறிய நிலையில் வாழ்ந்து வந்தனர் என்று தெரிகிறது. முதலாம் ஆதித்த சோழன் முதலாம் பராந்தக சோழன் ஆகியோரது கல்வெட்டுகள் சேலம் வரையிலான கிழக்கு கொங்கு நாட்டிலும் வடக்குப் பகுதியான கங்க நாட்டிலுமே காணப்படுகின்றன[1] எனவே கொங்கு நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலே சோழராதிக்கம் பரவியிருக்க மேற்கு தெற்குப் பகுதி கொங்கு நாடு சேர அரசர்களின் ஆதிக்கத்திலே இருந்து வந்தது என்று தெரிகிறது. ஆயினும் இக்காலத்துச் சேர அரசர்கள் சோழர்களுடன் நட்புடையவர்களாகவே விளங்கி வந்தமையால் இருவரும் தமக்குரிய கொங்குப் பகுதிகளை ஒற்றுமையுடனே ஆண்டு வந்தனர். நாட்டு வரலாறு இவ்விதம் இருக்க கொங்கின் சமுதாய வரலாற்றில் இக்காலத்திலேயே புதியதொரு திருப்பம் ஏற்பட்டதுபோலத் தெரிகிறது. இதனை உறுதியுடன் சொல்வதற்கில்லையாயினும் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு அக்காலச் சூழ்நிலையை அறியும் அளவிற்கு இவ்விதம் தான் அவை நடந்திருக்க முடியும் என்று கூறலாம்.

**மெக்கன்சி குறிப்பு :**

காலின் மெக்கன்சியின் கையெழுத்துப் பிரதிகள் தொகுப்பில் பல இடங்களில் கொங்கு வேளாளர்களின்

1. இவற்றுள் வெறும் ராஜகேசரி, பரகேசரி என்று மட்டும் குறிப்பிட்டும் வீரராஜேந்திரன், குலோத்துங்கன் என்று பெயர் கொண்டவையுமாக உள்ள கல்வெட்டுகள் கொங்கு மன்னர்களுடையவை என்று நிரூபிக்கத்தக்கவை.

குடியேற்றம் பற்றிய செய்திக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து பொதுவாக நாம் அறிந்து கொள்வது ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே உள்ளது. வேளுவுடையக் கவுண்டர் மரபைப் பற்றிச் சொல்லுமிடத்து ரிஷபகிரிச் சோழன் என்பவன் கொங்கு நாட்டை ஆண்ட சேரமான் பெருமானுக்குத் தன் மகளை மணம் செய்து கொடுத்திருந்தான் எனவும் அவளுடன் சீதனமாக சேரமானின் விருப்பத்தின் பேரில் 8000 வேளாளர் குடும்பங்களை கொங்கு நாட்டில் குடியேற்றினன் எனவும் இவர்களுக்குத் தலைமை வகித்து வந்தவர் வேளுவுடையக் கவுண்டர் எனவும் கூறுகிறது.[1] காங்கேய மன்றாடியாரது மரபு பற்றிக் கூறும்பொழுது தொண்டை நாட்டில் புகழ் பெற்று விளங்கிய 60,000 வேளாளர் குடும்பங்களிலிருந்து சேரமானின் விருப்பத்திற்கு இணங்க 8000 குடும்பங்கள் கொங்கு நாட்டில் குடியமர்த்தப்பட்டதாகவும் அப்பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வீக குடிமக்களினமான மவிலவன், புவிலவன், கவிலவன், வேட்டுவன் ஆகியோர் அனுபவித்து வந்த காணியாட்சி உரிமையில் பாதி வழங்கப்பட்டது எனவும் இவர்களே 24 நாட்டுக் கொங்கு வேளாளர்கள் எனப்பட்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

காங்கேய நாடு பற்றிக் கூறும் குறிப்பில் சக ஆண்டு 807ல் அதாவது கி. பி. 885ல் சோழ நாட்டில் சண்டை மூண்டபோது அக்காலத்தில் சோழ அரசனாக விளங்கிய ஆதொண்ட சக்கரவர்த்தி என்பவனது செயலால் வெறுப்படைந்தவர்களாக 4800 வேளாளர் குடும்பங்கள் கொங்கு நாட்டில் குடியேறினர் எனவும் இவர்களே கொங்கு வேளாளர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.[3] இதில் காணப்படும் ஆதொண்டை சக்கரவர்த்தி பற்றிய செய்தி வேறு

---

1. M. S. S. No. 2. Sec 1 Page. 26.
2. I bid. Page. 26.
3. MMSS. Page. 33 Sec. 10.

சில நூல்களில் வேறு விதமாகக் காணப்படுகிறது. பழைய கோட்டைப் பட்டக்காரரின் பூர்வ பட்டயமும் நாட்டுப் பாடலும் என்ற நூலில்......

"பூர்வத்திலே கலியுக வருஷம் 807 இதுக்கு மேல் சோழ ராசா துரைத்தனத்தில் ஆதொண்டை சக்கரவர்த்தி நாளையிலே தன்னுடைய தேசத்திலே இருந்து வேளாளச் சாதியிலே கல்யாணம் பண்ண வேணும் என்கிறதாக எத்தனம் பண்ணுமிடத்திலே சம்மதிச்சு ராசாவை வரச் சொல்லி சகல சன்னுகத்துடனேயும் ராசா வந்த இடத்தில்...பெண் நாயை அலங்கரிச்சு பந்தக் காலில் கட்டிப் போட்டு 4800 கோத்திரத்து வேளாளர் சோழ ராசாவுக்கு விரோதமாய் புறப்பட்டுச் சேர தேசாதிபதியிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது[1]

இச்செய்தியைச் தொண்டை மண்டல சதகம் என்ற பிற்காலப் பிரபந்த இலக்கிய நூலும் இவ்வாறே கூறுகிறது[2] மெக்கன்ஸியின் கையெழுத்துப் பிரதிகள் தொகுப்பில் அடங்கியுள்ள காலிங்கராயர் கைபீது மூலப் பிரதியில சோழ தேசத்திலே தொண்டை மண்டல வேளாளரென்ற பிரசித்தி பெற்ற குடியினரில் 48000 பேர் பசுங்குடி 12000 ஆக அறுபதாயிரம் கோத்திரர்கள் இருந்தார்கள் என்றும், ஒரு காலத்தில் ரிஷபகிரி என்ற ஊரையாண்ட சோழராஜா தன் மகளை சேர ராஜாவிற்கு திருமணம் செய்து கொடுத்தான். சேர ராஜா தனக்குச் சீதனம் கேட்ட போது சோழ ராஜா 48000 வேளாளர்களைச் சீதனமாக கொடுத்தான் என்றும் அவ்வாறு சீதனமாக வழங்கப்பட்ட 48000 வேளாளர்களுமே சேரனுக்குக் கொங்கள் என்று ஒரு பெயர் உண்டு. ஆதலால் கொங்கு வேளாளர்கள் எனப்பட்டனர்: இவர்கள் குடியேறிய ஊர்களே கொங்கு 24 நாடு என்று பெயர் கொடுத்து அழைக்கப்பட்டன,[3] என்று கூறி செல்கிறது அப்

1. மேற்படி நூல் பக்கம் 7.
2. தொண்டை மண்டல சதகம், பாடல் 92.
3. மெக்கன்சியின் கையெழுத்துப் பிரதி தொகுப்பு எம். 56, பக்கம் 63 டி. 3044.

பிரதி முதல் இ ர ண் டு எடுத்துக் காட்டுகளிலும் காணப் படும் 4800 வேளாளர்கள் எ ன் ப து 48000 வேளாளர்கள் என்றே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

புதுப்பை செல்லப்ப வாத்தியார் என்பவர் வீ ட் டி லி ருந்த எட்டுப் பிரதியிலிருந்து பேராசிரியர் வி த் து வா ன் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களால் காப்பி எடுக்கப்பட்ட கொங்கு புலவர் பட்டயம் என்ற அச்சாகாத ஒரு கையெழுத்துக் காப்பியை என் ந ண் ப ர் பு ல வ ர் செ. இராசு அவர்கள் எனக்கு கொடுத்து உதவினர். அதில் குலோத்துங்க சோழன் என்னும் ஒரு சோழ அரசன் காலத் தில் நடந்த செய்தியாக பின்வரும் வரிகள் கூறிச் செல்லு கின்றன.

...பாடி வைத்துக் கொண்டு கம்பரையும் கூட்டிக் கொண்டு மூவர் ராசாக்களையும் அழைத்துக் கொண்டு கருவூருக்கு வந்து, தில்லை மூவாயிரவரையும் வைத்துக் கொண்டு எங்கள் கங்கை குல வம்சம் 64 கோத்திரத்துக்கு நாற்பத்தெண்ணாயிரங் கோத்திரம என்று வகுத்து பொன்னி நதியிலே.......தொடர்ந்து வேறு பல செய்திகள் காணப்படு கின்றன, அவற்றைப் பின்னால் காண்போம். இதே செய்தி யைச் சோழ மண்டல சதகமும் கூறுவதாக குறிப்பு காணப் படுகிறது (சோ. ம. சதகம் 61) எனவே 4800 என்பது 48000 என்று இருத்தலே பொருத்தமெனத் தோன்றுகிறது

**சகமா? கலியா?**

மேற் குறிப்பிட்ட காங்கேய நாடு, ஊத்துக்குளி காலிங் கராயர் வமிசா வழி ஆகியவற்றை பற்றி கால்னல் மெக்கன் சியின் குறிப்பிலும், காங்கேயத்தில் கிடைத்துள்ள பழைய ஏட்டுப் பிரதி ஒன்றிலும் கூறப்படும் சக வருஷம் 807 என்பது தவறு என்றும் கலியுகம் 807 என்று இருத்தலே பொருத்த முடையது என்றும் டி. கே; சக்திதேவி எ ன் பா ர் தாம் எழுதிய கொங்கு வேளாளர் வரலாற்றில் எழுதியுள்ளார்.

ஆனால் இவ்வாறு கொள்வது பொருத்தமாக இல்லை. கலியுகம் 807 என்று கொண்டால் ஆதொண்ட சக்கரவர்த்தியின் காலம் கிறிஸ்துவுக்கு முன் சுமார் 3293 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். அதாவது இன்றைக்கு சுமார் 4200 வருஷங்களுக்கு முற்பட்டதாகும் இவ்வாறு கொள்வது புரான கதைகளுக்கு பொருந்தலாமேயல்லாது நடைமுறைக்கு ஒவ்வாது எனவே மெக்கன்சி குறிப்பிடும் சக ஆண்டு 807 என்பதே பொருத்தமாக இருக்கும். இவ்வாறு கொண்டால் சக ஆண்டு 807 என்பது கி. பி 885 ஆகும்.

இக்காலத்தில் தான் சோழ நாட்டில் பல சண்டைகள் நிகழ்ந்தன. பரகேசரி விசயாலய சோழன் சோழப் பேரானை நிறுவி அப்போது சுமார் 25 ஆண்டுகளே ஆகியிருந்தன; தமிழக வரலாற்றில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியப் திருபுறம்பியச் சண்டை நடந்து முடிந்து 5 ஆண்டுகளே ஆகியிருந்தன. மேலும் கி. பி. 885க்குப் பக்கமாகவே ஆதித்த சோழன் சோழ நாட்டைச் சுதந்திரமாக ஆளும் உரிமையைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த அபராஜிக் காடவனை[1] கொன்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டான். தொண்டை நாட்டு மேலைப் பகுதிகளிலும், கங்க நாட்டிலும் வாழ்ந்து வந்த கொங்கு வேளாளக் கூட்டத்தவரி பலரின் முன்னோர்களும் காடவ அரசர்களாலும், கங்க அரசர்களாலும் பெரிதும் போற்றப்பட்டவர்கள், இவ்விரு அரச குடும்பத்தவர்களுடனும் சம்பந்தம் செய்து கொள்ளும் அளவிற்குச் சிறப்புடன் விளங்கியவர்கள். எனவே அவர்களின் வழி வந்த பல வேளாளக் குடும்பத்தவர்கள் ஆதித்த சோழனது இந்த அடாத செயலை வெறுத்து சோழராதிக்க நாட்டிலிருந்து கொங்கு நாட்டில் குடியேறியிருப்பது சாத்தியமே. எனவே ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்பது ஆதித்த சோழனையே குறிக்கும்

1. இவன் தன்னைப் பல்லவன் என்று கல்வெட்டுகளில் குறித்துக் கொள்ளக் காரணம் பல்லவ நாடான காஞ்சிப் பகுதிகளுக்கு அரசன் ஆனமையாலேயாகும்.

எனலாம். இவ்வாறு குடியேறிய குடும்பங்களின் எண்ணிக்கை 4800 என்று சில பிரதிகளிலும், 48000 என்று சில பிரதிகளிலும் கூறப்பட்டிருப்பது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் எண்ணிக்கையைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் 48000 என்பது ரிஷபகிரிச் சோழன் வரலாற்றில் குறிக்கப்படும் 8000 என்பதன் சரியான வடிவமாகவும் இருக்கலாம். அதேபோல ஆதொண்டை சக்கரவர்த்தி வரலாற்றில் குறிக்கப்படும் 4800 என்பதன் சரியான வடிவமாகவும் இருக்கலாம். இரண்டு விதமாகவும் குறிக்கப்பட்டிருப்பது இரண்டிறகும் பொருந்தவும் செய்கிறது. எனவே எண்ணிக்கையை இங்கு விட்டு விடுவோம். தொண்டை நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வீக கொங்கர்களின் ஒரு பகுதியினரே, தொண்டை நாட்டில் வாழ்ந்து வந்ததால் இங்கு தொண்டை நாட்டு வேளாளர் என்று கூறப்பட்டு இருக்கலாம். இவர்களே இக் காலத்தில் கொங்கு நாட்டில் குடியேறியிருக்கலாம். ஏனெனில் இன்றும் தொண்டை மண்டல வேளாளர்களும் சோழிய வேளாளர்களும் கொங்கு வேளாளரினின்றும் வேறுபடுத்தியே கூறப்படுகின்றனர்[1] இது எவ்வாறாயினும் சங்க காலத்தில் கொண்கான நாட்டிலிருந்தும், பிறகு கங்க, காடவ அரசர்கள் காலத்தில் கொங்கின் வட பெரும் பகுதி அவர்கள் வசமிருந்த போதும் ஏற்பட்ட கொங்கு வேளாளர்களின் குடியேற்றத்திற்குப் பிறகு நிகழ்ந்த முதல் பெரிய குடியேற்றம் இக்காலத்தில் நடைபெற்றதேயாகும். இதற்கு அடுத்த குடியேற்றமே ரிஷபகிரிச் சோழன் சேரமான் பெருமானுக்குச் சீதனமாக அளித்த வேளாள மக்களின் குடியேற்றம் ஆகும்.

இவ்விரண்டு குடியேற்றங்களிலும் தொண்டை மண்டல வேளாளர் குடும்பங்களும், சோழிய வேளாளக் குடும்பங்களுங்கூட இருந்திருக்க முடியும். இல்லையென்று மறுப்பதற்கில்லை. இக்குடியேற்றங்கள் நிகழ்ந்த காலத்தில் கொங்கு

1. தொண்டை மண்டல வேளாளர்கள் கொண்டை கட்டி வேளாளர்கள் எனப்படுகின்றனர். M. M. S. S. Page 94.

நாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்குமா என்பது ஐயத்திற்கு இடமளிப்பதாகவே உள்ளது. ஏனெனில் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் நாடுகளுக்கும், ஊர்த்தொகை முதலிய பிற்கால நூல்களில் குறிக்கப்படும் 24 நாட்டுப் பிரிவுகளுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அடுத்து ரிஷபகிரிச் சோழன் காலத்திய குடியேற்றம் பற்றி ஆராயவேண்டும். அதற்கு முன்னர் யார் அந்த ரிஷபகிரிச் சோழன் என்பதை அறிய மீண்டும் சிறிது அரசியல் வரலாற்றில் கவனம் செலுத்த வேண்டும். ரிஷபகிரி என்பதற்கு நந்திமலை என்று பொருள். இந்த நந்தி என்ற பெயரைக் கொண்ட இரண்டு ஊர்கள் சோழ நாட்டில் உள்ளன. இவற்றுள் ஒன்று திருச்சிக்கு அடுத்து உய்யக்கொண்டான் திருமலை. இதற்கு நந்திவர்ம மங்கலம் என்று பெயர் வழங்கியது. அக்காலத்தில் இது ஒரு குன்று. அதாவது கிரி. அடுத்தது சோழர்களின் பழைய தலைநகரமான பழையாறை. இதற்கு நந்திபுரம் என்ற ஒரு பெயர் உண்டு. ஆனால் இது மலையல்ல. இவ்விரண்டையும் விட மற்றொரு இடத்திற்கே ரிஷபகிரி என்ற பெயர் பெரிதும் பொருந்துகிறது. அது கர்நாடக மாநிலத்தில் உள்ள நந்திமலையாகும். இதற்கே ரிஷபகிரி என்றும் ஒரு பெயர் இன்றும் வழங்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் உள்ள ரிஷபகிரிக்கும் சோழனுக்கும் எந்த வகையில் தொடர்பு இருந்திருக்க முடியும்? இருந்திருக்கிறது. இதனை இரண்டு வரலாற்றுச் சான்றுகளும் உறுதிப் படுத்துகின்றன. ஒன்று பிற்காலத்தில் தருமபுரிப் பகுதியை ஆண்ட அதியமான் அரசன் ஒருவனையும், புறமலை நாட்டுக் கூடல் அரசனையும் காடவ அரசன் ஒருவன் வென்ற செய்தியைத் தெரிவிக்கும் ஒரு கல்வெட்டு[1] கங்க நாட்டின் எல்லையில் கண்டராதித்தன் வாசல் என்ற ஒரு இடத்தைக் குறிக்கிறது. இரண்டாவது பெங்களுருக்கு அருகேயுள்ள நந்திமலையில் (ரிஷபகிரி) இருக்கும் போக நந்தீஸ்வரர் கோயிலில் உள்ளது சோழ மன்னன் ஒருவனது

1. S. I. I. Vol. XII No. 263.

சிலை இதனை இன்றும் இவ்வாறே குறிக்கின்றனர். ஆனால் யோகநிலையில் அமர்ந்திருப்பதாகக் காணப்படும் இச்சிலையை ராஜேந்திர சோழனது சிலை என்கின்றனர். இம்முடிவு தவறு. இது முதலாம் பராந்தக சோழனது இரண்டாவது மகனான கண்டராதித்தருடைய சிலையேயாகும். இதனை பிற்காலச் சோழர் வரலாறு எழுதிய காலஞ்சென்ற டி. வி. சதாசிவ பண்டாரத்தாரும் சான்று காட்டி ஒப்புக் கொண்டுள்ளார்[1] பங்களூர் ஜில்லாவில் காணப்படும் மற்றொரு கல்வெட்டொன்று சிவஞான கண்டராதித்தர் என்பார் ஒருவரைக் குறிக்கிறது[2] எனவே இப்பகுதி நாட்டிற்கும் கண்டராதித்த சோழருக்குமிடையே ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்திருக்கிறது என்பது உறுதி.

கண்டராதித்த சோழருக்கு "மேற்கெழுந்தருளிய தேவர்" என்று ஒரு பெயர் உண்டு. இப்பெயருக்கான பொருளை இவன் மேற்றிசையில் பகைவரோடு போர் நிகழ்த்தி அதில் இறந்து போனதால் யானைமேல் துஞ்சிய தேவர், ஆற்றூர் துஞ்சிய தேவர் என்பன போல் மங்கல வழக்காகக் கூறப் பட்டதென சில அறிஞர்கள் கூறுவர்.

ஆனால் மேற்கெழுந்தருளிய என்ற இந்த அடைமொழி இம்மன்னன் மேற்றிசை நாடு ஒன்றில் இறந்து போனதை உணர்த்துவதாகத் தோன்றவில்லை. இறப்பதற்கு முன்னதாகவே இவன் சோழ நாட்டை விட்டு மேற்றிசை நாட்டிற் குச் சென்று விட்டான் என்பதையே உணர்த்துகிறது என்று நான் சொல்ல வேண்டும். இவ்வாறு மேற்றிசை நாட்டிற் குப் போவதற்கு ஏதேனும் காரணம் இருந்திருக்க வேண்டும். பராந்தக சோழனின் ஆட்சிக் காலத்திலேயே பட்டத்திற்குரிய இளவரசனாக முடிசூட்டி வைக்கப்பட்ட அவனது முதல் மகன் இராசாதித்தன் தக்கோலப் போர்களத்தில் பூதுகன் என்ற கொங்கணி அரசனால் கொல்லப்பட்டான்.

---

1. பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கங்கள் 63—64.
2. Ep. Carn. Vol. IX Chennapatnam No. 92.

அடுத்து நியாயமாகப் பட்டம் பெறத் தக்கவன் பராந்தகனின் இரண்டாவது மகனான கண்டராதித்தனேயாவன். இவனுக்கு அடுத்துப் பிறந்தவனாகிய அரிஞ்சயன் தன் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே தொண்டை நாட்டிலுள்ள ஆற்றூர் என்ற ஊரில் நடைபெற்ற போர் ஒன்றில் இறந்து விட்டான் என்றே தோன்றுகிறது. ஆக பராந்தகனுக்குப் பிறகு பட்டமேற்கக் கூடியவனாக எஞ்சி நின்றவன் கண்டராதித்தனே இருந்தும் இவன் மேற்றிசை நாட்டிற்குச் சென்று விடுவானேன்? இவ்வினாவிற்கு உறுதியாக விடை கூறத் தக்க சான்றுகள் இல்லையாயினும் இவன் உறவினர்களிடையே காணப்பட்ட சில நடைமுறைகளையும் பிறவற்றையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஊகமாக நடந்த நிகழ்ச்சிகளை பின்வருமாறு கூறலாம்.

பராந்தக சோழன் உயிருடன் இருந்த போது கொங்கு வேளாளத் தலைவர்களில் ஒருவனான வெள்ளான் குமரன் என்பான் பராந்தகனின் படைத்தலைவனாக விளங்கி வேணாட்டைச் சேர்ந்த திருநாவலூரில் வடதிசைக் காவல் படைகளின் தலைவனாக இருந்திருக்கிறான். இவன் ஒருக்கால் ஆதித்தன் காலத்தில் கொங்கு நாட்டில் குடியேறியிருந்த வேளாளர்களுள் ஒருவனாக இருந்திருக்கக் கூடும். ஆயினும் ஆதித்த சோழன் மீது வெறுப்புக் கொண்டு இவ்வேளாள மக்கள் கொங்கு நாட்டில் குடியேறிய போதிலும் சோழர்களின் ஆட்சி கொங்கின் பெரும் பகுதியில் வேரூன்றி விட்ட போது சோழர்களோடு ஒத்துப் போவது இவர்களுக்கு இன்றியமையாததாகியிருக்கும். இந்த அளவிற்கு கொங்கு நாட்டில் சோழராட்சி நிலைபெற்று விட்ட பிறகு அங்கு சோழ மன்னனின் பிரதிநிதியாக அக்குடும்பத்தில் பிறந்த ஒரு இளவரசன் இருந்திருக்க வேண்டும்.

அந்த இளவரசன் கண்டராதித்தனாகவே இருந்திருக்க முடியும். கண்டராதித்தன் என்ற இவனது பெயரில் முன்னால் உள்ள கண்டன் என்ற பெயர் சேர அரசர்களுக்குரிய பெய

னாகும் சேரமான் கோக்கண்டன் (ஆதித்த சோழனின் நண்பன்) இவன் மகன் கண்டன் ரவி அதாவது கண்டன் மகன் ரவி என்ற முறையில் இக்காலத்தே கொங்கின் மேற்குப் பகுதியை ஆண்ட சேர மன்னர்களது பெயர்களே இதனை உறுதி செய்கின்றன. இச்சேர மன்னர்கள் ஆதித்தன் காலமுதல் சோழர்களுடைய நண்பர்களாக விளங்கியிருந்திருக்கின்றனர். எனவே இச்சேர அரசர்களுள் ஒருவனது மகள் பராந்தகனது மனைவியாயிருந்து அவள் வயிற்றில் பிறந்தவனே கண்டராதித்தனாக இருக்க வேண்டும். அதாவது தாய்வழிப் பாட்டனான கண்டன் என்ற சேர அரசனது பெயரையும் தந்தை வழிப்பாட்டனாகிய ஆதித்த சோழனது பெயரையும் இணைத்து கண்டராதித்தன் என்ற பெயரை இவனுக்கு வைத்திருக்க வேண்டும்.

ஆகவே வேறு எவரையும் அரசப் பிரதிநிதியாக்குவதை விட சேரன் மகளுக்குப் பிறந்த இக்கண்டராதித்தனையே அரசப் பிரதிநிதியாக்கி வைத்தால் சேரர்களுடனுள்ள நட்பு நிலைத்திருக்கும் என்று பராந்தகன் கருதியிருக்கக் கூடும். அன்றியும் கண்டராதித்தனின் தாய்வழிப் பாட்டனான அச்சேரமன்னனின் இன்னொரு மகள் பாண்டியன் ராஜசிம்மனின் மனைவியாக விளங்கினாள். ராஜசிம்மனுக்கு இவளிடம் பிறந்தவனே வீரபாண்டியன். இவ்வீரபாண்டியன், பராந்தக சோழனின் கவனமும் அவனது படைபலமும் வடக்கே ராஷ்ட்ரகூடர்களிடமிருந்து நாட்டைக் காப்பதிலேயே ஈடுபட்டிருந்த கி. பி. 947வாக்கில் பாண்டிய நாட்டை சோழர்களின் பிடிப்பிலிருந்து விடுவித்து சுதந்திர பாண்டிய மன்னனாக ஆளத்தலைப்பட்டிருந்தான். தன் மகள் வயிற்றுப் பேரன் என்ற முறையில் சேரன் வீரபாண்டியனுக்கு உதவ முற்பட்டால் தன் கீழ் உள்ள கொங்கு நாட்டிற்கும் ஆபத்து வந்து விடலாம் என்று பராந்தகன் நினைத்திருக்கலாம். ஆகவே கண்டராதித்தனுக்கே கொங்கின் அரசப்பிரதிநிதிப் பொறுப்பை அளித்து விட்டான் பராந்தகன். இதனை உறுதிப் படுத்த சில சான்றுகளும் உள்ளன.

சமீபத்தில் தமிழ்நாடு தொல்லியல் துறையினர் கோவைக்கருகே ராசகேசரிப் பெருவழி என்ற ஒரு சோழர் காலச் சாலையைக் கண்டுபிடித்தனர். இப்பகுதி கொங்கு நாட்டு மன்னர்களின் ஆதிக்கத்திலே இருந்து அவர்களும் சோழர்களைப் போலவே இராசகேசரி, பரகேசரி பட்டங்களையும் மாறி மாறித் தரித்து வந்ததால் அவர்களுள் ஒரு ராசகேசரி காலத்தில் இச்சாலை அமைக்கப்பட்டிருக்கலாம் என்று நான் முதலில் கருதினேன்[1] ஆனால் அச்சாலையின் "இராசகேசரிப் பெருவழி" என்ற பெயர் வட்டெழுத்திலும், தமிழிலும் பொறிக்கப்பட்டுக் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் பாடல் உருவில் சில வாசகங்கள் காணப்படுவதை படித்து அதை வெண்பா உருவில் அமைத்துக் கொடுத்தார் என் நண்பர் புலவர் செ. இராசு. இப்பாடலின் பொருள் அறிந்து கொள்ள முடியாதபடி வெண்பா காணப்பட்டாலும் அதன் இறுதி வரிகள் "வாழியர் கோச் சோழன், வளங் காவிரி நாடன், கோழியர் கோக் கண்டராதித்தன்" என்று அமைந்திருப்பதை நானும் நேரில் படித்தறிந்தேன். எனவே இப்பெருவழியை அமைத்தவன் கண்டராதித்தனே என்பது தெளிவு. அங்ஙனமெனில் சாலை அமைக்கும் அளவிற்குக் கண்டராதித்தன் உரிமையுடன் ஆண்டான் என்று உறுதியாகக் கூறமுடியும்

இச்செய்தியுடன் வடகொங்கு நாட்டைச் சேர்ந்த கங்க நாட்டில் கண்டராதித்தன் வாசல் என்னும் இடம் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருப்பதாக முன்னர் குறிப்பிட்ட செய்தியையும் இணைத்துப்பார்த்தால் கண்டராதித்தன் வெறும் அரசப்பிரதிநிதியளவில் கொங்குநாட்டில் அரசாளவில்லை. தன்னுடைய ஆட்சி எல்லையை கங்கநாடு வரையிலும் அதற்கு அப்பால் உள்ள கோலார் மாவட்டம் நந்திமலை வரையிலும் கூட விரிவு படுத்திக் கொண்டிருந்தான் என்பது தெரிய வரும். இவ்வாறு அவன் சோழ நாட்டிற்கு மேற்கிலிருந்த

1. தொல்லியல் துறையினர் இதனை முதலாம் இராசராசன் காலத்தது என அறிவித்திருந்தனர்.

கொங்கு நாட்டிலே அரசப் பிரதிநிதி நிலையிலிருந்து சுயாட்சி பெற்ற மன்னனாக மாறி நிலையாக தங்கி விட்டதினாலேயே அவன் "மேற்கெழுந்தருளிய தேவன்" என்று குறிக்கப் பட்டான் போலும் இந்த அடைமொழியும் கண்டராதித் தனின் மனைவியான செம்பியன் மாதேவியின் சாசனம் ஒன்றிலேயே காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது. சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று தக்கோலத் தில் சோழர்களையெதிர்த்து பராந்தக சோழனுக்குப் பிறகு பட்டத்திற்கு வரவிருந்த இளவரசன் ராஜாதித்தனைக் கொன்று சோழர்களிடமிருந்த தொண்டை நாட்டையும், நடுநாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். இராஷ்ட்ரகூட அரசன் மூன்றாம்] கிருஷ்ண கன்னரத் தேவன். கி. பி. 959ல் கிருஷ்ணன் தொண்டை நாட்டிலுள்ள மேல்பாடியில் தங்கி இருந்தபோது "சோழர்களை வேரறுத்து அவர்களுடைய நாட்டைத் தன்னை அனுசரித்துச் செல்பவர்களுக்கு வழங் கினான்" என்று அவனுடைய கர்னாட் சாசனம் கூறுகிறது. அவ்வாறு அனுசரித்துச் சென்றவன் கொங்கு நாட்டை ஆண்டு வந்த கண்டராதித்தனாகவே இருந்தல் வேண்டும்; இப்படி அனுசரித்துப் போவதற்குரிய காரணம் எதுவாக இருந்திருக்கும் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆயினும் இச்செய்கையினாலேயே கண்டராதித்தன் கேலார் மாவட்டம் வரையிலுள்ள பகுதியையும் தொண்டை மண்ட லத்தையும் ஆளும் உரிமை பெற்று இருக்கலாம். இப்பகுதி களிலே கண்டராதித்தனுடைய இரண்டாவது ஆட்சியாண்டு முதல் கல்வெட்டுகள் கிடைப்பதும் இக்கருத்தை வலியுறுத்து கிறது.

கண்டராதித்தனுடைய இந்த செய்கைகளால் வெறுப் புற்றுத்தான் போலும் பராந்தகசோழனும் தனக்குப் பிறகு சோழ நாட்டை ஆளும் உரிமையை தனது மூன்றாவது மகனும், தொண்டை நாட்டு ஆற்றூரிலே நடைபெற்ற போரில் இறந்துவிட்டவனுமான அரிஞ்சய சோழனின் மகன் சுந்தரசோழனுக்கு வழங்கிவிட்டான்.

**சிஷபகிரிச் சோழன் கண்டராதித்தனே :**

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து சிஷபகிரிச் சோழன் என்று மெக்கன்சி குறிப்புகள் முதலானவை குறிப்பிடுவது தந்திமலை வரை தனது ஆட்சியின் கீழ் கொண்டு ஆண்ட கண்டராதித்த சோழனையே என்று நாம் முடிவு செய்யலாம். இக்கண்டராதித்தனது ஒரு மகளையே அக்காலத்தில் சேர நாட்டையாண்ட சேரமான் பெருமாள் அரசன் ஒருவன் திருமணம் செய்து கொண்டான் போலும். கண்டராதித்தன் சேர இளவரசி ஒருத்திக்குப் பிறந்தவன் என்பது பெயர் ஒற்றுமையைக் கொண்டு முடிவு செய்யப்பட்டது ஆதலால் அவனுடைய தம்பி அல்லது அண்ணன் மகனுக்கு அதாவது மாமன் மகள், அத்தை மகள் என்ற முறையில் மணம் செய்து கொடுக்கப்பட்டிருப்பது நடைபெற்றிருக்கக் கூடியதே. எனவே கண்டராதித்தன் தனது ஆட்சிக்குள் அடங்கியிருந்த தொண்டை நாடு, நடுநாட்டுப் பகுதிகளிலிருந்து சேர அரசனின் விருப்பப்படி தன் மகளின் சீதனமாக மக்கள் குடியேற்றம் குறைவாக இருந்த பகுதிகளில் குடியேறி காடு கெடுத்து நாடாக்கி வளர்ப்பதற்காக 48000 வேளாளர்களையும், அவர்களுக்கு உதவியாக 12,000 மக்களையும் கொங்கில் குடியேறுவதற்கு அனுப்பி வைத்தான் எனலாம்;

ஆனால் கைபீதில் குறிப்பிட்டுள்ளபடி இவர்கள் சோழ நாட்டிற்கு வந்து பிறகு கொங்கில் குடியேறியிருக்க முடியாது. ஸ்ரீகண்டசோழன் காலத்தில் வேட்டுவர் குடியேற்றம் நிகழ்ந்தது. போல் வடகொங்கு வழியாக வந்தே குடியேறியிருத்தல் வேண்டும். அதற்கு வாய்ப்பாக இவர்கள் வாழ்ந்து வந்த நாடும் கங்க நாட்டை ஒட்டிய தொண்டை நாட்டுப்பகுதிகள், நடு நாடு அதாவது பெண்ணைக் கரை நாடுகள் ஆகியவையாகவே இருந்தன. ஒருகால் பெண்ணைக் கரை நாடுகளும், நடுநாடும் தஞ்சை சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருந்த நாடாதலால் சோழ தேசத்திலிருந்து குடியேறினார்கள் என்று கூறப்பட்

டிருக்கலாம். இந்த உண்மையை வால சுந்தரக்கவியின் கொங்கு மண்டல சதகமும் அதனை இயற்றுவதற்குக் காரணமாக இருந்த வள்ளலைக் குறிப்பிடும் இடத்தில் "பொருட் சாத்தந்தைப் பண்ணைக் கோன் வெண்ணெய் நல்லூரா கொடுத்திடும் மிரணம் வாரி" எனவும் "சாத்தந்தை கோத்திரன் பண்ணை குலேந்திரன் தமிழ்ச்சடையன் நாற்பத்தெண்ணாயிரம் என்னும் குலம் விளங்க எனவும் குறிப்பிட்டு நாற்பத்தெண்ணாயிரம் குலத்தவர்களும் வெண்ணெய் நல்லூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்தவர்களாக கூறுவது உறுதிசெய்கிறது. இந்த நாற்பத்தெட்டாயிரம் குடியினருள் ஒருவர் தாம் பண்ணை குலச் சாத்தந்தை கோத்திரத்தைச் சேர்ந்தவரான சடையப்பவள்ளல் என்று கூறுவதும் இங்கு நோக்கத் தக்கது.

**24 நாடுகள் :**

இனி காலிங்கராயர் கைபீது இவ்வாறு குடியேறிய வேளாளர் குடும்பங்களை "கொங்கு வேளாளரென்றும் கொங்கு 24 நாடு என்றும் ஏற்படுத்திக் கொடுத்து"— என்று குறிப்பிட்டு 24 நாடுகள் இக்காலத்திலே பிரிக்கப் பட்டதாகக் கூறுவது கவனிக்கத்தக்கது. 48000 குடும்பங்களை 24 நாடுகளில் குடியேற்றுவது என்பது நாடு ஒன்றுக்கு 2000 குடும்பங்கள் என்று கணக்கிடுவதற்கும் வாய்ப்பாக உள்ளது. அதேபோல உதவியாளர்களாக வந்த 12000 பசுங்குடி வேளாளர்களையும் நாடு ஒன்றுக்கு 500 குடும்பங்கள் வீதம் அதாவது 2000 நற்குடி வேளாளர் குடும்பங்களுக்கு 500 பசுங்குடி வேளாளர் குடும்பங்கள் என்று தடையின்றி பிரித்துக் குடியேற்றுவதற்கு வாய்ப்பாக உள்ளதும் இக்காலத்திலே கொங்கு 24 நாடுகளாக பிரிக்கப்பட்டிருந்தல் கூடும் என்று நிச்சயம் செய்ய வாய்ப்பளிக்கிறது. எனவே கண்டராதித்தன் கொங்கு நாட்டை ஆண்ட காலமான 10ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே கொங்கு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டது என்று கூறலாம்,

குறும்பு நாடு என்று குறுப்பு நாட்டைச் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளதால் சுந்தரர் காலத்திற்கு முன்பே கொங்கு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டன என்பார் சிலர்; ஆனால் முன்னால் சில நாடுகளுக்கு வழங்கப்பட்ட பெயரையே நாடு பிரிக்கப் பட்ட போதும், இயற்கையமைப்பு காரணமாகவும், பழமைச் சிறப்பைக் கருத்தில் கொண்டும் புதிய நாட்டுப் பிரிவிற்கும் கொடுத்து இருக்கலாம். எடுத்துக்காட்டாக பூந்துறை நாடு என்பது வடக்கில் பவானி ஆற்றையும், கிழக்கில் காவிரியையும், தெற்கில் நொய்யலாற்றையும் மேற்கில் சென்னிமலையையும் எல்லையாகக் கொண்டது இந்நாடு இயற்கையாகவே ஆற்றுப் பாசனம் மிக்க வளமார்ந்த துறை நாடாக விளங்கினமையால் பூந்துறை-பூக்கள் மலிந்த வளமார்ந்த சோலைகளை உடைய துறைநாடு என்று அந்நாட்டின் இயற்கையமைப்புக்குத் தக்கவாறு பெயர் பெற்றிருந்ததால் அதனை மாற்றாமலே அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதே போல கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கும் ஊர்த்தொகைப் பாடல்களில் காணப்படும் 24 நாடுகளுக்குமிடையே வேறுபாடு உள்ளது என்று நானே கூட ஆட்சேபம் எழுப்பி 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டது இன்னும் பிற்காலத்தில் இருக்கலாம் என்றேன். ஆனால் அவ்வேறுபாடு விரிவான ஆட்சி நலனைக் கருத்தில் கொண்டு கொங்கு நாட்டையாண்ட மன்னர்கள் தத்தம் காலத்தில் கூடியும் குறைந்தும் இருந்த நிலப்பரப்பிற்கு ஏற்றபடி நாட்டுப் பிரிவுகளையும் கூட்டியும் குறைத்தும் கொண்டிருந்திருக்கலாம். இதனை இங்கு விரிவாக ஆராய்வதற்கில்லை.

மேற்குறிப்பிட்ட முறையில் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளில் 48000 வேளாளர் குடும்பத்தவர்களும சம எண்ணிக்கையில் குடியமர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் எந்தெந்த கூட்டத்தவர் குடியேற்றப் பட்டனர் என்று இப்பொழுது வரையறுத்துக் கூறுவது கடினம். ஏனெனில் சக 807க்குப் பக்கமாக குடியேறிய 8000 வேளாளக் குடும்பங்களும் நாடு பிரிக்கப்படாத நிலையில்

தத்தமக்கு விருப்பமான இடங்களில் குடியேறியிருக்கலாம். அன்றியும் சங்க நாளில் தொண்டை நாட்டிலிருந்து முதன் முதலாகப் குடியேறியவர்களும், இடைக்காலத்தில் கங்க, காடவ அரசர்கள் காலங்களில் குடியேறிய சில கூட்டத்தவர்களும் இதே மாதிரி தத்தமக்கு வசதியான இடங்களில் குடியேறியிருத்தல் கூடும். ஆகவே இவையெல்லாவற்றையும் வகைப்படுத்தி முறையாகக் கூறுவது இயலாத செயலே. அன்றியும் இக்காலத்திற்குப் பிறகும் சில குடியேற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. வேளாளர்களுக்கு ஏற்பட்ட இதே நிலையே வேட்டுவர்களுக்கும் ஏற்பட்டிருந்தது.

சங்க நாளில் கொங்கு நாட்டில் பூர்வீக குடிமக்களாக வாழ்ந்து வந்த வேட்டுவர்களுடன் கொங்கு நாடு களப்பிரர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது காளத்தி நாட்டுப் பகுதிகளின்றும், பிற வடபகுதிகளிலிருந்தும் வந்து குடியேறிய வேட்டுவர்கள் இணைந்து கொண்டனர். பின்னர் பொத்தப்பி சோழன் ஸ்ரீகண்டன் பாண்டிய அரசன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் நட்புறவு சிறந்திருந்த காலத்தில் காளத்தி நாட்டிலிருந்து 16000 வேட்டுவர் குடும்பங்கள் குடியேறியமை முன்னர்க் குறிப்பிடப்பட்டது.

ஆக இவர்கள் அனைவரும் பல கூட்டப் பிரிவினர்களாக இணைந்து வாழ்ந்து கொங்கு நாட்டில் வேட்டுவ மக்களின் தொகையைப் பெருக்கிக் கொண்டனர். இவ்வேட்டுவர்களும் கொங்கு நாடு முழுவதும் பரவி வாழ்ந்து வந்த போதிலும் தெற்கு-தென் கிழக்கு கொங்கு நாட்டிலேயே மிகுதியாகக் குடியேறியிருந்தனர் என்று தெரிகிறது. கொங்கு நாட்டிலுள்ள தென்னிலை, கரூர், வாங்கல் ஆகிய பகுதிகளில் இவர்கள் இன்றும் மிக்க அளவிலே வாழ்ந்து வருவது அக்காலத்திலே இவர்கள் இப்பகுதிகளிலே மிகுதியாகக் குடியேறியிருந்தனர் என்பதை உணர்த்துகிறது. எனவே வரலாற்றுக் காலத்தில் இப்பகுதிகளிலெல்லாம் வேட்டுவர்களே ஊராளிகளாக (காமிண்டர்கள்) நியமிக்கப்

பட்டிருந்தனர். வேளாளத் தலைவர்கள் காமிண்டர்களாக இருந்த பகுதிகளிலும் ஊர்ச்சபைகளில் உறுப்பினர்களாக வேளாளர்களும், வேட்டுவரும் கலந்தே இருந்தனர். இவற்றைப் பிற்காலப் பட்டயச் செய்திகளும் உறுதிப் படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து கொங்கு நாடு வேளாள மக்கள் குடியேற்றத்தின் அடிப்படையில் 24 நாடு களாகப் பிரிக்கப்பட்டபோது இவ்வனைத்து நாடுகளிலும் வேட்டுவர்களும் மிகுதியாக வாழ்ந்து வந்தனர் என்று கூற முடியும். எனவே இந்த 24 நாடுகளிலும் வேட்டுவர் கூட்டத் தவர்களுக்கும் காணி ஊர்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. இவற்றைக் காணிப்பாடல்களில் விரிவாகக் காணமுடியும்.

இவ்வாறு காணி ஊர்கள் வேளாளர், வேட்டுவர் ஆகிய இரு சமுதாயத்தார்க்கும் பிரித்துக் கொடுப்பதற்குச் சாதக மாகவே கொங்கு 24 நாடுகளில் ஒவ்வொரு நாடும் பல ஊர்களாகப் பிரிக்கப்பட்டன. பெரிய நாடுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட தலைநகரங்களை உடையதாக பிரிக்கப்பட்டு மொத்த உட்பிரிவு ஊர்களை ஒவ்வொரு தலைநகரின் கீழும் சிலவாக இணைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக பூந்துறை நாடு மேல்கரைப் பூந்துறை நாடு, கீழ்க்கரை பூந்துறை நாடு என்று இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு நான்கு தலைமை ஊர் களின் கீழ் இணைக்கப்பட்டன. அவை வெள்ளோடு, பூந்துறை நசையனூர், எழுமாத்தூர் ஆகியவை. ஒவ்வொரு ஊருக்கும் ஊர்ச்சபை இருந்தது. இவை தவிர ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியாக நாட்டுச் சபைகளும் இருந்தன. இந்நாட்டுச் சபைகளில் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதம் எத்தனை ஊர்களாக ஒரு நாடு பிரிக்கப்பட்டுள்ளதோ அத்தனை உறுப்பினர்கள் நாட்டுச் சபையில் இடம்பெற்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு ஊருக்கும் ஆட்சிமுறையில் பிரதி நிதித்துவம் கொடுக்கப்பட்டதால் அந்தந்த ஊர்களில் எச்சமுதாயத்தின அதிகமாக வாழ்ந்து வந்தனரோ அச்

சமுதாய உறுப்பினருக்கு இடம் அளிக்கப்பட்டது. இவ்வூர்ச் சபை, நாட்டுச் சபை தவிர, அந்தணர் சபை, அமண்குடிச் சபை (சமண சமய சமூகத்தினருடையது) வேளாளர் சபை வணிகர் சபை போன்ற சாதி சமூக நடைமுறைகளைக் கவனித்துக் கொள்வதற்காகத் தனித் தனி சபைகள் இருந்தன இச்சபைகள் நாட்டுச் சபைக்குக் கட்டுப்பட்டதே யாகும். மக்கள் குடியேற்றம் பெருமளவிற்கு நிகழாமல் பெரும்பகுதிகள் காடுகளாகவும், பயிர் விளைச்சலற்ற பகுதி களாகவும் விளங்கி வந்த மலைநாடான கொங்கு நாட்டில் மக்களைக் குடியேறச் செய்து நாட்டைச் செழிப்புள்ளதாக, மக்கள் தொகை நிறைந்த நாகரீக நாடாக விளங்கச் செய்வ தற்கு இந்த மாதிரியான அடிப்படை அமைப்பும், அந்தந்த நாட்டு மக்களின் சுயநிர்வாக முறையும் அக்காலத்தே அவசியமானதாகவே இருந்தபடியால் அந்நாட்டில் மேலாதிக்கம் செலுத்திய பேரரசர்களும் தமது நிர்வாக இயந்திரத்தை இவ்வமைப்புகளை அடியொற்றியே இயக்கி வந்தனர். ஆனால் ஒன்றை மட்டும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். சமுதாயப் பிரிவுகளுக்காகவே இந்த முறை கொங்கு நாட்டில் கொண்டு செலுத்தப்படவில்லை. இம் முறைக்கு அடிப்படை கொங்கணி அரசர்களின் ஆதிக்கத் தின் கீழ் கொங்குநாடு உட்பட்டிருந்த போதே இத்தகைய ஊராட்சிமுறை கொங்கில் அமுல்படுத்தப்பட்டு விட்டதே. காமிண்டர் ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டதே இக்கொங்கணி அரசர்களின் ஆட்சிகாலத்தில் தான் என்பதை முந்தைய அத்தியாயங்களிலே பார்த்தோம். ஆனால் ஒரு மாற்றம். கொங்கு 2000 என்று கொங்கணி அரசர்களின் காலத்தில் தனித்தனி ஊர்களுக்கு ஆட்சிமுறை அமைந்திருந்த நிலை மாறி 24 பெருநாடுகளாகப் பிரிக்கப்பட்டு நாட்டுசபை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் அடிப்படையில் காமிண்டர் ஆட்சி முறை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டே வந்தது எனவே இச்சமுதாயப் பிரிவு அரசியலுக்கு ஓரளவே பயன் படுத்தப்பட்டது என்று முடிவு செய்வது பொருந்தாது. அடிப்படையில் அரசியல் பிரிவுகளாகவே இருந்து வந்தது;

பிற்காலத்தில் மக்கள் குடியேற்றம் பெருகியதும் இவை சமுதாயப் பிரிவுகளாக மாற்றப்பட்டன.

இவ்வாறு மக்கள் குடியேற்றம் பெருகி கொங்கு நாடு ஏனைய தமிழ்நாட்டுப் பிரிவுகளைப் போல தனியரசாட்சிக்கு ஏற்றதாக மாறியதும் அந்நாட்டைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு தனிப்பட்ட முறையிலே அரசியல் நடத்த முயற்சிகள் துவங்கின. இந்நாட்டிலே குடியேறிய மக்கள் அனைவரும் தம்மைக் கொங்கு நாட்டுக் கொங்கர்களாகவே கருதிக் கொண்டு ஏனைய சேர, சோழ பாண்டிய நாட்டவர்களைப் போல அவர்களோடு சேர்ந்து கலந்துபோய் அந்தந்த நாட்டு மன்னர்களின் கீழ் வாழ விரும்பாமல் தமக்கென ஒரு தனியரசின் கீழ் அவர்களைப் போல ஒரு தனிப்பட்ட நாட்டவர்களாகவே வாழ விரும்பினர். அவ்விருப்பத்தின் பயனே கொங்கு நாட்டு மன்னர்கள் என்ற ஒரு தனிப்பட்ட மரபினரின் தனியாட்சி அங்குமலருவதற்குக் காரணமாகியது

## கொங்கு மன்னர்கள் 967—1305.

கண்டராதித்தன் தன் தந்தை பராந்தக சோழனின் சார்பாகக் கொங்கு நாட்டின் அரசப் பிரதிநிதி நிலையில் இருந்த போது மழநாட்டையாண்ட மழவச் சிற்றரசன் ஒருவனின் மகளை மணந்திருந்தான் என்பதையும், அவளே சிவநெறிச் செல்வியான செம்பியன் மகாதேவி என்பதையும் நாமறிவோம். இவளுடைய திருவயிறு வாய்த்த குமாரனே மதுராந்தக உத்தம சோழனுவன். ஆனால் கண்டராதித்தனுக்குப் பிறகு இந்த உத்தம சோழன் தன் தந்தை ஆண்ட பகுதிகளின் அதாவது கொங்கு அதைச்சார்ந்த நாடுகளின் அரசுரிமையை அடையவில்லை, காரணம் கண்டராதித்தன் இறந்தபோது உத்தம சோழன் அரசுரிமை பெறத்தக்க வயதுடையவனுக இல்லை.

ஆனால் இவனைவிட வயதில் மூத்தவனுகக் கண்டராதித்தனுக்கு இன்னெரு மகன் இருந்தான். இவன் கண்டராதித்தனின் இன்னெரு மனைவிக்குப் பிறந்தவன் என்று தெரிகிறது[1] இந்தப் பெண் அக்காலத்திய காடவர் குல அரசன்

---

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் by தி. நா. சுப்ரமண்யன் பக். 171.

ஒருவனின் மகனாக இருந்திருக்கவேண்டும் இவள் வயிற்றில் உதித்த அந்த இன்னொரு மகன் "வீரபாண்டியன் தலை கொண்ட பார்த்திபேந்திர வர்மன் என்பவனேயாவன். இவனும் காடவர் குல அரசி ஒருவளையே மணந்திருந்தான் என்று திருப்பதியில் கிடைக்கும் சில சாசனங்களிலிருந்து தெரிய வருகிறது[1] இவனுடைய பதினைந்தாம் ஆட்சியாண்டு வரை குறிக்கப்படும் கல்வெட்டுகள் அனைத்தும் தொண்டை நாட்டிலேயே கிடைக்கின்றன. இதிலிருந்து இவன் அப்பகுதியை மட்டும் ஆண்டவனாகத் தெரிகிறது. எனவே இவனும் கொங்கு நாட்டின் அரசுரிமையைப் பெறவில்லை என்றே கூற வேண்டும். அங்ஙனமெனில் கண்டராதித்தனுக்குப் பிறகு கொங்கு நாட்டையாண்டவர்கள் யார் என்ற வினா எழுகிறது.

ஈரோட்டில் மகிமாலீஸ்வரம் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் கட்டிட அமைப்புப் பாணியிலிருந்து இது ஒரு கொடும்பளூர் பாணிக் கோயிலாகவே தோன்றுகிறது. சிற்ப வடிவமைப்பும் கொடும்பளூர் பாணியிலேயே காணப்படுகிறது. கோனாட்டில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ள கொடும்பளூரை ஆண்ட வேளிர் குலச் சிற்றரசர்கள் இக்காலத்தில் சோழர்களை ஆதரித்து அவர்களுடைய மேலாதிக்கத்தின் கீழே இருந்து வந்தனர். இம்மரபினரின் ஒரு கிளையில் வந்தவன் மகிமாலய இருக்குவேள் என்பவன். இவனுடைய தந்தை இறந்தபோது இவன் சிறுவனாக இருந்தமையால் போலும் கொடும்பளூர் அரசு இன்னொரு கால் வழிக்குச் சென்று விட்டது. எனவே இவன் உரிய வயதை அடைந்த காலத்தில் கண்டராதித்தன் கொங்கு நாட்டை ஆண்டு கொண்டிருந்ததால் அவனை ஆதரிப்பவனாக இவன்மாறி கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் ஒன்றான பூந்துறை நாட்டிற்கு (ஈரோடு உள்ளிட்ட பகுதி) சிற்றரசனானான் போலும்.

---

1. திருப்பதி தேவஸ்தான சாசனங்கள் Vol. I. No. 8-9 and vol. IV. No. 671-2.



மகிமாலீஸ்வரம், ஈரோடு.

கண்டராதித்தன் இறந்த காலம் கி. பி 957 ஆகலாம். எனவே இந்த ஆண்டில் மகிமாலய இருக்குவேள் கொங்கு நாட்டின் தனி உரிமை பெற்ற அரசன் ஆனானோ அல்லது தஞ்சை சோழனாக அப்போது ஆண்டு கொண்டிருந்த சுந்தர சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாக விளங்கினானோ தெரியவில்லை. ஆக, கி. பி. 957 முதல் ஏறக்குறைய பத்தாண்டு காலம் கொங்கு நாட்டின் வடபகுதி மகிமாலய இருக்கு வேளின் ஆட்சியின் கீழ் இருந்தது தென்பகுதி மட்டும்

தொடர்ந்து சேரமான் பெருமாள் மரபினரின் ஆட்சியின் கீழே இருந்து வந்தது. கண்டராதித்தனின் இன்னொரு மகனான பார்த்திபேந்திரவர்மனும் சுந்தர சோழனுக்கு உட்பட்ட அரசனாகவே தொண்டை நாட்டை ஆண்டு வந்திருக்கவேண்டும் இதற்குச்சான்றாகச் சுந்தர சோழனின் 5 ஆம் ஆட்சியாண்டான கி. பி. 958 முதல் அவனது கல்வெட்டுகள் தொண்டை நாட்டிலும் காணப்படுவதைக் கூறலாம்

இது இவ்வாறு இருக்க ரிஷபகிரிச் சோழனை கண்டராதித்தனின் மகளை மணந்திருந்த பெருமாள் மரபுச் சேர அரசன் கண்டன் ரவிக்கு அவள் வயிற்றில் ஒருமகன் பிறந்து இருந்தான் இவனுக்குத் தன் தாய் வாய்வழிப் பாட்டனான பராந்தக சோழனின் மற்றொரு பெயரான வீரசோழன் என்ற பெயர் இடப்பட்டிருந்தது போதும், ஆயினும் சோழ மரபினின்றும் தன்னை வேறுபடுத்தி காட்டிக் கொள்ள தன் தந்தை தரித்திருந்த களிமூர்க்கன் என்ற பெயரை தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொண்டு தன்னை வீரசோழக் களிமூர்க்கன் என்று அழைத்துக் கொண்டான் சேர அரசர்களுக்குக் களிமூர்க்கன் என்ற இணைப்புப் பெயர் இருந்து வந்ததை ஈரோடு தொண்டீசுவரர் கோயிலில் காணப்படும் சேர அரசனான இரவி கோதை என்பவனின் கல்வெட்டு ஒன்று ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராசகேசரி பற்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இரவி கோதையான கோக் களிமூர்க்கருக்கு என்று குறிப்பிட்டுச் செல்வது உறுதிப்படுத்துகிறது.[1] இவனது காலம் எதுவாயினும் இரவி கோதை என்ற பெயர் சேர அரசர்களுக்கே உரியது ஆதலால் சேர அரசர்கள் களிமூர்க்கன் என்ற பட்டம் தரித்திருந்தனர் என்பது நிச்சயமாகிறது அன்றியும் மேலே கண்ட இரவி கோதை என்ற சேர அரசனின் பெயர் கொச்சியில் காணப்படும் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. எனவே களிமூர்க்கன்

1. S. I. I. vol, VI. No. 412 and ARE. 121 of 1891

என்ற பெயருடைய சேர அரசனுக்கும், கண்டராதித்த சோழனின் மகளான சோழ இளவரசிக்கும் பிறந்தவனே மேலே குறிப்பிட்டபடி வீரசோழக் கலி மூர்க்கன் என்ற பெயருடன் தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டைச் சுதந்திர மன்னனாக ஆளத்துவங்கினான் எனலாம்.

இந்த வீர சோழக் கலி மூர்க்கனும், இவன் மகன் கலி மூர்க்க விக்கிரம சோழனும், தம்மைக் கோநாட்டார்கள் என்று கூறிக்கொண்டதையடுத்துக் காலஞ்சென்றவரலாற்று அறிஞர் கே. வி. சுப்ரமண்ய அய்யர் இவர்கள் புதுக்கோட்டை மாவட்டப்பகுதியான கோனாட்டு சிற்றரசர்கள் மரபினர் என்று தமது நூலில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்[1] இதற்கு மேலும் ஒரு அடிப்படையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் காணப்படும் நந்திவர்மப் பல்லவனின் கல்வெட்டு ஒன்றில் கலிமூர்க்க இளவரையன் என்ற சிற்றரசன் ஒருவனைக் குறிப்பிடுவதைக் காட்டியுள்ளார்.[2]

ஆனால் கொங்கு நாட்டுத் தாராபுரத்தை மையமாகக் கொண்ட வடகொங்கு நாட்டின் சிலபகுதிகளுக்கு கோனவன நாடு கோனாடு என்ற பெயர் இருந்து வந்ததென பிற்காலக் கொங்கு நாட்டுச் சித்திலக்கியங்களில் பலகுறிப்புகள் காணப்படுகின்றன. அலகுமலைக் குறவஞ்சி என்னும் ஒதாளர் குறவஞ்சி என்னும் பிரபந்தத்தின் முதல் வாழ்த்துப் பாடல்

பூமேவு கோனவன நாட்டில் வஞ்சி
புரி பொங்கலூர் நாட்டிய

என்று கூறுகிறது. பொங்கலூர் நாடு என்பது கொங்கு 24 நாடுகளுள் ஒன்றாகும். இதனை ஒட்டினாற்போல் தெற்காக உள்ளது தென்கரை நாடு இதுவும் 24 நாடுகளுள் ஒன்றாகும் தென்கரை நாட்டில் அடங்கியுள்ளதே தாராபுரம். தாராபுரத்திற்கு வஞ்சிபுரி என்ற ஒரு பெயர் உண்டாதலால் இத்

1. Historical Sketches of Ancient Dekhan. Page. 67.
2. P. S. I. No 17.

தாராபுரம் உள்ளிட்ட தென்கரை நாடு, பொங்கலூர் நாடு ஆகிய இரண்டிற்குமே கோன வளநாடு என்ற பெயர் வழங்கப்பட்டது என்று தெரிகிறது இக்குறவஞ்சி இயற்றப் பட்ட காலத்தில் வாழ்ந்த பொங்கலூர் நாட்டுத் தலைவன் இந்நூலில் பெருமாள் என்று குறிக்கப்பட்டுள்ளான்.

இவன் மரபின் முன்னோனாகக் கோன வளநாட்டை ஆண்ட அரசனும் பெருமாள் என்று குறிக்கப்படுகிறான். பெருமாள் என்ற பெயர் கொங்கு மன்னர்களான வீர சோழக் கலிமூர்க்கன் முதலானோருக்கும் இருந்து வந்திருக்கிறது. இப்பெருமாள் என்ற பெயரும் சேரமான் பெருமாள் மரபைக் குறிக்கக்கூடும் என்பது பொருத்தமாக உள்ளதாகும் கொங்கு மன்னர்கள் சேர மரபின் ஒரு பிரிவினரே என்றும் கோனவளநாட்டு தாராபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தனியரசு ஆளத் தொடங்கியதால் தம்மைக் கோனாட்டார் என்று குறித்துக் கொண்டார்கள் என்பதுமே மிகப்பொருத்த மாக உள்ளது.

மகிமாலய இருக்குவேள் கி. பி. 967 வரைக் கொங்கு நாட்டை அரசாண்டான் என்று கொண்டால் இவனுக்குப் பிறகு கி. பி. 967 முதல் அல்லது அதற்கு முன்னரும் கூட இருக்கலாம் வீர சோழக் கலி மூர்க்கன் கோனாட்டான் என்ற பெயருடன் கொங்கு நாட்டைச் சுதந்திர மன்னனாக ஆளத் தொடங்கி கொங்கு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி னான். தாய்வழி மரபின்படி இவன் வீர சோழன் என்று பெயர் சூடியிருந்ததால் இவன் வழி வந்தோரும் தஞ்சை சோழர்களின் பெயர்களையும், அவர்கள் தரித்து வந்த ராஜகேசரி, பரகேசரி பட்டங்களையும் தரித்துத் தம்மைச் சோழன் என்ற பெயரிட்டே அழைத்துக் கொண்டனர்.

சமீபத்தில் இவனுடைய 38 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் கிடைத்திருப்பதால், இவனுக்கு அடுத்துப் பட்டத்திற்கு வந்த இவன் மகன் கலிமூர்க்க விக்கிரம சோழன் கி. பி. 1005 ல் பட்டம் பெற்றிருக்கிறான்.

என்பதை விக்கிரமனின் சக ஆண்டு குறிப்பிட்ட கல்வெட்டு ஒன்று தெரிவிப்பது கொண்டு, வீர சோழக்களியூர்க்கன் கி. பி. 967 ல் பட்ட மேற்றிருக்கலாம் என்று கூறமுடியும். ஆயினும் நமது முடிவின்படி இவன் மகிமாலய இருக்கு வேளிற்குப்பிறகு கி. பி 965 ல் பட்டமேற்று இருக்கலாம் என்று ஆவதால் இவன் இன்னும் 2 ஆண்டுகள் கூடவே அதாவது நாற்பது ஆண்டுகள் ஆண்டிருக்கக் கூடும். இவனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்திலேயே கி. பி. 985 ல சோழ நாட்டில் முதலாம் இராசராச சோழன் பட்டம் ஏற்றான். இராசராசனது ஆட்சி காலத்தில் கொங்கு அவனது ஆட்சியின் கீழ் வந்துவிட்டதென வரலாற்று அறிஞர்களிடையே பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனல் கொங்கு மன்னர்கள் அரசாண்ட சூழ்நிலையையும், இவர்களது கல்வெட்டுகள் தரும் செய்திகளையும் புள்ளி விவரங்களின்படி தொகுத்து நவீன முறையில் ஆராய்ந்து பார்த்ததில் அந்த முடிவு பொருத்தமற்றதாகவே தோன்றுகிறது. கொங்கு நாட்டு மன்னர்கள் தஞ்சை சோழர்களுடன் நட்புடன் விளங்கி வந்தார்களேயன்றி அவர்களது மேலாதிக்கத்திற்கு உட்படவில்லை தஞ்சைச் சோழர்களுடைய பெயர்களையும், சோழன் என்ற குலப்பெயரையும் இவர்கள் தரித்துக் கொண்டதற்குக் காரணம் தாய்வழி உறவு முறையிலே எனலாம். தஞ்சைச் சோழர்கள் சோழ மண்டலத்தைச் சிறப்பாக ஆண்டது போலவே இவர்களும் கொங்கு நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்ததின் காரணமாகவும், சோழர் பெயர்களையும், அவர்களைப் போலவே இராசகேசரி, பரகேசரி பட்டங்களையும் இவர்கள் தரித்துக் கொண்டார்கள் எனவும் கூறலாம். இதே நிலை காஞ்சியில பல்லவர்கள் சிறப்பாக ஆண்ட காலத்தில் அவர்கள் கிளை வழியினரோடு தொடர்பு கொண்டு இருந்த கங்க—காடவ அரசர்களிடையேயும் நிலவியதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்

இந்த வீரசோழக் களியூர்க்கன் காலத்திலேயே இவன் ஆட்சியின் கீழ் இருந்த கொங்கு நாடு வீரசோழ மண்டலம்

என்ற பெயரைப் பெற்றது. தஞ்சைச் சோழர்கள் காலத்தில் கொங்கு நாட்டிற்கு அதிராஜராஜ மண்டலம் எனவும் சோழ கேரள மண்டலம் எனவும் பெயர் வழங்கப்பட்டதாகக் கூறுவர். ஆனால் இவ்விரண்டு பெயர்களும் சோழ நாட்டை ஒட்டியுள்ள கரூர் உள்ளிட்ட கிழக்கு கொங்கு நாடு மட்டும் சில்காலங்களில் தஞ்சைச் சோழர்களின் ஆட்சியின்கீழ் வந்த போது அப்பகுதிகளுக்கு மட்டுமே இடப்பட்ட பெயராகும்.

தமது பரம்பரையினரின் தொடர்ந்த அமைதியான ஆட்சிக்கு அடிகோலிய இவ்வீர சோழக்கலிமூர்க்கனுக்குப் பிறகு இவன் மகன் கலிமூர்க்க விக்கிரம சோழன் கி. பி. 1005 கொங்கு நாட்டு மன்னனான். இவ்விரு மன்னர் களுமே தமது பூர்வீக மரபு விளங்க கலிமூர்க்கன் என்ற பட்டப் பெயரை வைத்திருந்தனர். இவர்களுக்குப்பின் வந்த அரசர்கள் அனைவரும் கலிமூர்க்கப்பட்டத்தை விட்டு விட்டனர்.

கலிமூர்க்க விக்கிரம சோழன் 42 ஆண்டுகள் ஆண்டுள்ளதாக முன்னரே குறிப்பிடப்பட்டது. இவன் காலத்தில் தஞ்சைச் சோழர்களில் இராசராசனும், இராசேந்திரனும், இருந்து இருக்கிறார்கள். இவன் காலத்தில் சோழர்களுடன் மணவினை உறவுகூட இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவனுடைய கல்வெட்டுகளில் ஒன்று இவ்வரசனின் நம்பிராட்டியார் அதாவது பட்டத்து அரசி வளவன் மாதேவி என்னும் இத்திமுத்தியார் என்று கூறுகிறது. வளவன் மாதேவி என்ற பெயரிலிருந்து இவள் தஞ்சைச் சோழ அரசனான இராசராசனின் குமாரியாக இருத்தல் கூடும் என்று திரு கே. வி. சுப்ரமணிய அய்யர் தமது நூலில் குறித்துள்ளார்.[1]

மற்றொரு கல்வெட்டு இவ்வரசன் இறந்து போன தன் மகள் ஒருத்தியின் நினைவாக ஒரு நிவந்தம் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது. இவள் சோழ அரசன் விக்கிரம சோழன் என்பவனின் மகள் என்று அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. தஞ்சை சோழன் முதலாம் இராசேந்திர சோழனுக்கு

1. Historical Sketches of Ancient Dekhan. Page. 67.

விக்கிரம சோழன் என்று ஒரு பெயர் இருந்ததாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்துவதால் கலிமூர்க்க விக்கிரமன் தன் மகளை முதலாம் இராசேந்திரனுக்கு மணம் செய்து கொடுத்து தஞ்சை சோழர்களுடன் மணவினைத் தொடர்பு கொண்டிருந்தான் என்று தெரிகிறது. இவனுடைய கல்வெட்டுகள் கொங்கு நாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுவதால் இவன் கொங்கு மன்னர்களுள் முதன் முதலாகப் புகழ்பெற்று விளங்கிய ஒரு பேரரசன் என்று கூறலாம். இக்கல்வெட்டுகளில் பல இவனை நீதியின் காவலன் எனவும், நாட்டை பெருமளவிற்கு வளப்படுத்தி, ஆறில் ஒரு பங்கு வரிகொண்டு தன் குடிமக்களைப் பெற்ற தாய் தன் குழந்தையை பேணிவளர்ப்பது போல காப்பாற்றி வந்தான் எனவும் புகழ்ந்து பேசுகின்றன. எனவே இவன் காலத்தில் கொங்கு மக்கள் முன் எப்போதும் காணு அளவிற்குச் சிறப்புப் பெற்று வாழ்ந்தனர் என்று தெரிகிறது. இவ்விக்கிரமன் கி. பி 1047 வரை 42 ஆண்டுகாலம் கொங்கு நாட்டைச் சிறப்புடன் ஆண்டான்.

இவனுக்கு அடுத்த கொங்கு மன்னனுகப் பலகல்வெட்டுகளிலிருந்து நமக்குத் தெரிய வருபவன் அபிமான சோழ இராசாதிராசன் என்பவன் ஆவன். ஆனால் இவனுடைய சக ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு[1] ஒன்றிலிருந்து இவன் ஏறக்குறைய கி. பி. 1031ல் பட்டமேற்றவன் என்று தெரியவந்துள்ளதால் கலிமூர்க்க விக்ரம சோழனின் இறுதியாண்டான கி. பி. 1047க்கும் இராசாதிராசன் பட்டம் ஏற்ற கி. பி. 1081க்கும் இடையே 34 ஆண்டுகள் இடைவெளி உள்ளது. இவ்விடைவெளியில் ஒரு மன்னன் ஆண்டிருக்க வேண்டும். அவனே கலிமூர்க்க விக்கிரம சோழனின் மகனுகவும் அபிமான சோழ இராசாதிராசனின் தந்தையாகவும் இருந்திருக்க வேண்டும். கொங்கு மன்னர்களின் உறவுமுறையை நிர்ணயிப்பதற்கு, அவர்கள் தம்

1. A. R. E. 592 of 1905.

தந்தையின் பெயரை தன் பெயருக்கு முன்னே வைத்துக் கொண்ட வழக்கம் நமக்குப் பேருதவி செய்கிறது. எடுத்துக் காட்டாக வீரசோழக் கலிமூர்க்கனின் மகனான கலிமூர்க்க விக்கிரமசோழன், விக்கிரமசோழன் என்னும் தன் பெயருக்கு முன்னே தன் தந்தையின் பெயருக்கு இறுதியில் இருந்த கலிமூர்க்கன் என்ற பெயரை வைத்துக் கொண்டிருந்ததைக் காட்டலாம்.

இந்தமுறை பெரும்பாலும் கொங்கு மன்னர்களில் பலரிடமும் காணப்படுவதால் விக்கிரம சோழனுக்கும் அபிமான சோழ இராசாதிராசனுக்குமிடையே உள்ள இடைவெளிக் காலத்தில் ஆண்ட மன்னன் தன் தந்தையின் பெயரான விக்கிரம சோழன் என்பதைத் தன் பெயருக்கு முன்னால் கொண்டிருக்க வேண்டும் அதேபோல இராசாதிராசனின் பெயருக்கு முன்னால் உள்ள அபிமான சோழன் என்பது அவனுடைய இயற்பெயராக இருந்திருக்க வேண்டும். இதனைக் காங்கேய நாட்டு ஆனூரில் கிடைத்த கல்வெட்டு[1] ஒன்று உறுதிப்படுத்துகிறது. வீர பராக்ரம சோழன் என்பவனின் கல்வெட்டு ஒன்றைத் தொடர்ந்து காணப்படும் இச்சிதைந்த கல்வெட்டில் விக்கிரம சோழ அபிமானன் என்னும் அரசன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. எனவே கொங்கு மன்னர்களின் நடைமுறை வழக்கப்படி தன் தந்தையான கலிமூர்க்க விக்கிரம சோழனின் பெயரை அபிமானன் என்ற தன் இயற்பெயருக்கு முன்னால் வைத்திருந்த விக்கிரம சோழனின் மகனே இவன் என்றும் இவன் கி. பி. 1047க்கும் 1081க்கும் இடையே உள்ள 34 ஆண்டுகள் கொங்கு மன்னனாக விளங்கியிருத்தல் வேண்டும் என்றும் திட்டவட்டமாகக் கூறலாம். ஆனால் இவனைப் பற்றிய முழுவிபரத்தையும் அறிவதற்கு நமக்கு இன்னும் போதிய சான்றுகள் கிடைக்க வேண்டும்.

இவனைத் தொடர்ந்து பட்டத்திற்கு வந்த இவன் மகன் அபிமான சோழன் இராசாதிராசன் கி. பி. 1081ல் முடி

1. A. R. E. 674 of 1922.

கூட்டிக்கொண்டான் என்று நிச்சயமாகச் சொல்ல முடிய வில்லை. ஏனென்றால் கி. பி. 1100க்குச் சமமான சக ஆண்டு கொடுக்கப்பட்டுள்ள இவனது கல்வெட்டில் ஆட்சியாண்டு குறிக்கப்படும் பகுதி "யாண்டு ப......என்பதற்கு மேலுள்ள எழுத்துகள் சிதைந்து பிறகு அதன் எதிராமாண்டு என்று காணப்படுகிறது. எனவே பத்துமுதல் பத்தொன்பது வரை யிலுள்ள ஏதோ ஒரு எண்ணாக இப்பகுதியைக் கொண்டு இவன் கி. பி 1081 முதல் 1090 க்குள் ஏதோ ஒரு ஆண்டில் பட்டமேற்றவன் என்றுதான் கூற வேண்டியுள்ளது.[1]

எதிராம் ஆண்டு என்று குறிக்கப்படும் ஆண்டுகளைப் பொதுவாக வரலாற்று அறிஞர்கள் ஆட்சி ஆண்டுகளோடு கூட்டியே ஒவ்வொரு அரசனும் பட்டமேற்ற ஆண்டைக் கணக்கிடுகின்றனர். ஆனால் ஆட்சி ஆண்டோடு எதிராம் ஆண்டு என்று தனியாகக் குறிப்பிடுவதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. எதிராமாண்டு குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளை நுணுக்க மாக ஆராய்ந்தபோது இதில் ஒரு சீர்மையை (Uniformity) அறிய முடிந்தது. இதை வைத்துக்கொண்டு எதிராமாண்டுகள், குறிப்பிட்ட அரசன் ஒருவன் இளவரசப் பட்டம் பெற்று தந்தையுடன் அரசியலில் பங்கு பற்றி யிருந்த காலத்தையே உணர்த்துவதாக நான் முடிவு செய்தேன். இதுவரை வரலாற்று ஆசிரியர்கள் எதிரா மாண்டு குறிக்கப்படுவதின் காரணத்தை அறியக்கூட வில்லையென்று சமாதானம் கூறி அதனையும் ஆட்சியாண்டு களுடனே கூட்டிக்கொண்டு வந்தனர். என்முடிவின்படி நாம் இப்போது விவாதித்துக்கொண்டு இருக்கும் கொங்கு மன்னனது கல்வெட்டுகளில் அனைத்திலும் எதிராமாண்டு

---

1. இலுப்புடைய திரு முருகன் பூண்டிக் கல்வெட்டொன்று இவனது 13 ஆவது ஆட்சியாண்டைக் குறிக்கிறது.

ஒன்றாகவே இருப்பதால்[1] இந்த + 1 ஆண்டு இவன் இளவரசனாக விளங்கிய காலத்தையே குறிக்கிறது என்று கொண்டு இதனைவிட்டு விடுவதே நலம். இவனுடைய கல்வெட்டுகளில் கடைசியாக நமக்குக் கிடைத்திருப்பது சந்தேகத்திற்குரிய இந்த கி. பி. 1100ஐச் சேர்ந்த கல்வெட்டேயாதலால் இவ்வரசன் கி. பி. 1100 வரையிலே ஆண்டவன் என்று கூறலாம். மேலும் இவனது இரண்டாவது மகனான பரகேசரி இராசாதிராச வீர சோழன் பட்டமேற்ற ஆண்டு கி. பி. 1117 என்று இவனுடைய சக ஆண்டு குறிக்கப்படும் கல்வெட்டு ஒன்று உணர்த்துவதாலும் இராசாதிராசனின் மூத்த மகனான உத்தம சோழன் 17 ஆண்டுகளே ஆண்டிருப்பதாக இவனுடைய 17 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இறுதியாகக் கிடைத்து இருப்பதாலும் இராசாதிராசன் கி. பி 1100 வரையிலே அரசாண்டான் எனவும் அடுத்த 17 ஆண்டுகள் அதாவது கி பி 1117 வரை இவனுடைய மூத்த மகன் உத்தம சோழன் ஆண்டான் எனவும் கொள்ளவே வாய்ப்பு இருக்கிறது.

உத்தம சோழனுக்குப்பிறகு கி பி. 1117 ஆண்டில் அபிமான சோழ ராசாதிராசனின் இரண்டாவது மகனான இராசாதிராச வீர சோழன் கொங்கு மன்னனாக அரசுப் பொறுப்பேற்றான். கொங்கு மன்னர்களின் ஒழுகலாற்றின்படி பரகேசரி இராசாதிராசனுக்குப் பிறகு அரசாண்ட தனது அண்ணன் இராசகேசரி பட்டம் வைத்துக்கொண்டிருந்ததால் அவனுக்கு அடுத்துப்பட்டம் பெற்ற வீரசோழன் பரகேசரி பட்டம் வைத்துக்கொண்டான்.

---

1. இடைக்காலப் பாண்டியர்கள் சிலருடைய கல்வெட்டுகளிலும் இந்த எதிராமாண்டுகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் முன்னும் குறிப்பிடும் ஆண்டுகள் ஒரே மாதிரியாகவும் எதிராமாண்டுகளே வேறுபட்டும் காணப்படுவதால் இவற்றில் முன்னும் உள்ளதே அவ்வரசன் இளவரசனாக விளங்கிய ஆண்டென்றும் எதிராமாண்டுகளே அரசன் பட்டமேற்ற பிறகு வரும் ஆட்சியாண்டுகள் எனவும் கொள்ளலாம்.

இவ்வீரசோழனைப்பற்றிப் பல கருத்து வேற்றுமைகள் உள்ளன இவன் கல்வெட்டுகளில் இவன் இரு கொங்கையும் ஆண்டவன் என்று கூறிக்கொள்வதால்[1] இவ்வாறு கூறிக்கொள்ளும் வீர ராஜேந்திர சோழனுக்கு முன்பு ஆண்டவனே இவ்வீர சோழன் என்று கொண்டு கொங்கு மன்னர்களின் ஆட்சியை நிறுவிய வீரசோழக்கலிமூர்க்கனைச் சேர்த்து மொத்தம் மூன்று வீர சோழர்கள் ஆண்டதாக வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர் இவ்வாறு கொள்வதற்கு கொங்கு மன்னன் குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்றில்[2] இளவரசன் வீரசோழன் என்று ஒருவன் குறிக்கப்படுவதைத்தவிர வேறு உறுதியான சான்றுகள் எதுவும் இல்லை. இந்த இளவரசன் வீர சோழன் என்பவன் குலோத்துங்கனின் மகனாகவோ அல்லது சங்கரசோழன் உலாகுறிப்பிடும் குலோத்துங்கனின் மூன்றாவது தம்பியாகவோ இருக்க வேண்டுமாதலால் மூன்றும் வீர சோழன் ஒருவனை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை மேலும் அவர்கள் முடிவின்படி மூன்றும் வீர சோழன் கி. பி. 1133ல் பட்டம் ஏற்றிருந்தான் என்றால் இவனுடைய 21 ஆம் ஆட்சியாண்டில் ஏற்பட்டதாக கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்படும்[3] சூரியகிரகணம் கி. பி. 1204 ல் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாண்டில் சூரியகிரகணமே ஏற்படவில்லை மாறாக கி பி 1137 ல் விருச்சிகமாசம் அதாவது கார்த்திகை மாதம் 20 தேதி (15-11—1137) ஒரு சூரிய கிரகணம் ஏற்பட்டுள்ளது இவ்வாண்டு கி. பி 1117 ல் பட்டம் பெற்ற இராசாதிராச வீரசோழனின் 20 ஆம் ஆண்டாவதால் இதுவே பொருத்துவதாக உள்ளது. எனவே 23 ஆண்டுகள் ஆண்டவனும். இரு கொங்கையும் ஆண்டதாகக் கூறிக்கொள்பவனுமான வீர சோழன் இராசாதிராசனின் இரண்டாவது மகனான இவ்வீர சோழனேயாவன்.

---

1. கொழுமம் கல்வெட்டு ARE. 180 of 1909.
2. ARE. 573, 74 of 1905.
3. ARE. 187 of 1909.

இவனது ஆட்சி காலத்தில் கொங்கு நாட்டின்தென் பகுதி கேரள அரசர்களில் இன்னொரு கிளையினரிடம் இருந்து வந்ததோடு தஞ்சைச் சோழனை முதலாம் குலோத்துங்களின் மேலாதிக்கத்தில் இருந்துவந்தது. அக்கேரள அரசர்களில் அக்காலத்து இருந்தவனை ஒருவனை வீரசோழன் ஏறக்குறைய கி. பி 1135 வாக்கில் வென்று அப்பகுதியைத் தன் ஆதிக்கத்தோடு இணைத்துக் கொண்டு விட்டான். தென் கொங்கான இப்பகுதிக்கு இன்று உடுமலைப்பேட்டைத் தாலுக்காவில் உள்ள கொழுமமே தலைநகரமாக விளங்கியது. இவ்வெற்றியை வீர சோழன் தன்னை இரு கொங்கையும் ஆண்டவன் என்று கூறிக்கொள்வதிலிருந்தும், மதுரை மாவட்டம் மேலூர் தாலுக்காவில் உள்ள கீரனூருக்குக் கொழுமம் கொண்ட சோழநல்லூர் என்று பெயர் கொடுத்திருப்பதிலிருந்தும்[1] அறிய முடிகிறது. எனவே இரு கொங்கையும் ஆண்டவன் என்ற விருதுப்பெயரை இவன் வைத்துக் கொள்ளக் காரணம் இக் கொழுமம் வெற்றியே என்று உறுதியாகக் கூறலாம்.

ஹொய்சளர் படையெடுப்பு :

வீர சோழனின் இறுதியாண்டான கி. பி. 1140 ல் ஹொய்சாள அரசன் பிட்டிக விஷ்ணுவர்த்தனன் பெரும் படையுடன் கொங்கு நாட்டின் மீது போர் தொடுத்து வந்தபோது, வீரசோழன் அவனை எதிர்த்து செய்த போரில் தோற்றுப்போனதோடு இவனுக்கு அடுத்து பட்டத்திற்கு வரவிருந்த தன் மகனையும் அப்போரில் இழந்து தானும் இறந்து போய் விட்டான் என்று தோன்றுகிறது. போரில் இறந்த இப்பட்டத்து இளவரசனை அதாவது வீர சோழனின் மகன் கொங்கு நாட்டிலிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதியான

1. 20 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு S. I. I. Vol. IV. No. 271.

சங்கர சோழனுலா குறிப்பிடும் சங்கம சோழனே போலும்.[1] இவன் பெயராலேயே சங்கராம நல்லூர் அப்பெயரைப் பெற்றிருக்க வேண்டும். இச்சங்கமனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்ததாகச் சங்கரச் சோழனுலா தெரிவிக்கிறது. ஆனால் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருந்ததாகத் தெரிகிறது. இவர்களுள் பெண்ணை மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் மணந்திருந்தான். பிள்ளைகள் இருவரும் வீரசோழனும் சங்கமனும் இறந்த போது உரியவயதுடையவர்களாக இராமல் இளஞ் சிறுவர்களாக இருந்திருக்க வேண்டும். எனவே வடகொங்கு நாடு உள்பட கொங்கின் பெரும்பகுதி ஹொய்சாள விஷ்ணுவர்த்தனனிடம் அகப்பட்டுப் போனது போக எஞ்சியிருந்த தொழுமத்தை யுள்ளிட்ட தென் கொங்கு நாட்டிற்கு மட்டும் வீரசோழன் பட்டமேற்றபோது இளையவனாக இருந்த இராசாதிராச உத்தம சோழனின் மகனான உத்தம சோழ வீரநாராயணன் கி. பி 1140இல் அரசனானான். இவனுடைய பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று[2] இவன் தன் மாமனுடைய நற்கதிக்காக தேவன் பாடி என்ற ஊரை தன் மாமனின் பெயரால் வீர நாராயண நல்லூர் என்று பெயரிட்டு தானம் செய்ததாகக் கூறுகிறது. இங்கு மாமன் என்று குறிக்கப்படுபவன் தாய் மாமனாகவோ அல்லது மாமனாராகவோ இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் தென் கொங்கு நாட்டுப் பகுதிகளை வீரசோழன் வென்று கொள்வதற்கு முன்னால் ஆண்ட கேரள மன்னர்களில் ஒரு கிளை வழியினராக இக்காலத்தே ஆண்ட அதிசய சோழ வீர நாராயணன், அல்லது அவன் மகன் வீரநாராயண அதிசய சோழன் ஆகியோரில் ஒருவனுடன் உத்தம சோழ

---

1. சங்கர சோழனுலாவில் கூறப்பட்டுள்ள சங்கமன் முதலியோர் கொங்கு சோழர்களாக இருக்கலாம் என்று காலஞ்சென்ற சதாசிவ பண்டாரத்தாரும் கருதினர், பிற்கால சோழர் சரித்திரம், பாகம் 2, பக்கம் 395.

2. A. R. E. 157 of 1909

வீரநாராயணன் தொடர்பு உடையவன் என்று தெரிகிறது. வீரநாராயணன் என்ற பெயரின் அடிப்படையில் இவன் மேற்சொன்ன இருவீரநாராயணர்களில் யாராவதுஒருவரின் மகள் வயிற்றுப்பேரனாக இருக்கலாம் என்றேதோன்றுகிறது.

உத்தம சோழ வீர நாராயணன் எத்தனை ஆண்டுகள் அரசாண்டான் என்று உறுதியாகக் கூறச் சான்றில்லை. இவனுடைய 10 ஆவது ஆட்சியாண்டுவரை அதாவது கி. பி 1150 வரை குறிப்பிடும் கல்வெட்டுகளே இதுவரை கிடைத்துள்ளன இவ்வாண்டு சங்கம சோழனின் மூத்த மகனான குலோத்துங்கன் பட்டம் ஏற்ற ஆண்டு என்பதை இக்குலோத்துங்கனின் சக ஆண்டு குறிப்பிட்ட விசயமங்கலம் கல்வெட்டு ஒன்று[1] உணர்த்துவதால் இவன் பத்தாண்டு களே அரசாண்டு இருக்க வேண்டும். ஆனாலும் குலோத் துங்கன் தன்னை இரு கொங்கையும் ஆண்டவன் என்று கூறிக்கொள்ளாததால் தென் கொங்கு நாட்டை வீர நாராயணனே தொடர்ந்து ஆண்டு வர குலோத்துங்கன் உரிய வயது வந்த பிறகு தன்னுடைய வலிமையாலும் தன் சகோதரியின் கணவனான மாறவர்மன் ஸ்ரீவல்லபனின் உதவியுடனும் ஹொய்சள அரசன் நரசிம்மனை வென்று வட கொங்கு உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு அதற்கு அரசனாகியிருக்கவேண்டும். எப்படியாயினும் உத்தம சோழ வீரநாராயணனும் தனக்குப் பிறகு அரசு உரிமை பெற வேண்டியவன் இக்குலோத்துங்களே என்று கருதி இவனுக்கே இளவரசுப் பட்டம்கட்டியிருக்க வேண்டும் இதனை இவனுடைய கல்வெட்டுகளில் குறிக்கப்படும் எதிராமாண்டு ஒன்றாக இருப்பது விளக்கும்.

இக்குலோத்துங்கன் இராசாதிராச வீரசோழனின் பெயரனே என்பதை நெரூர் கல்வெட்டொன்று உறுதி செய்கிறது[2] இவனுக்கு ஒன்று அல்லது இரண்டு தம்பியர்கள் இருந்திருக்க வேண்டும் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது.

---

1. A. R. E. 586 of 1905
2. A. R. E. 936 of 1928.

இவர்களுள் ஒருவன் பெரும்பாலும் குலோத்துங்களுக்கு அடுத்தவனே உத்தம சோழ வீரநாராயணன் இறந்த பிறகு தென் கொங்கு நாட்டிற்கு அரசனாகி இருக்க வேண்டும். இதனை இலங்கை அரச வரலாறான மகா வம்சத்திலிருந்து அறிகிறோம் இதில் இவர்கள் காலத்தே பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்த இலங்கைப் படைகளை வென்று சடாவர்மன் வர்மன் குல சேகரனை பாண்டிய அரசனுக்கு உதவியாக தென் கொங்கு, வடகொங்கு ஆகிய இருநாட்டையும் முறையே ஆண்ட குலசேகரப் பாண்டியனின் இரண்டு மாமன்கள் வந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இவர்களின் சகோதரி குலசேகரப் பாண்டியனின் தாயும் மாறவர்மன் ஸ்ரீவல்லபனின் மனைவியுமாவாள் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. இவ்வாறு மகாவம்சம் குறிப்பிடும் குலசேகரப் பாண்டியனின் இரண்டு மாமன்களில் தென் கொங்கை ஆண்டவன் யாராக இருத்தல்கூடும் என்று வரலாற்று ஆசிரியர்கள் இன்னும் முடிவு செய்யவில்லை.

இதற்கிடையே ''சோழன் பூர்வ பட்டையம்'' என்ற ஒரு ஓலைச்சுவடியின் பதிப்பாக சென்னை கீழ்த்திசை சுவடி நூலகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள நூல் ஒன்று கொங்கு நாட்டு மன்னர்களுள் ஒருவனாகக் கரிகால சோழன் என்பவனைப் பற்றிக் குறிப்பிட்டு இவன் காலத்தில் சில வேளாளக் குடும்பங்களும், கைக்கோளர், செட்டிகள் (வணிகர்கள்) ஆகியோர் குடும்பங்கள் பலவும் கொங்கு நாட்டில் குடியேறினர் என்று குறிப்பிட்டு இவனே பேரூர் பட்டீஸ்வரர் கோயிலைக் கட்டியவன் எனவும், கொங்கு நாட்டில் 36 பெருங் கோயில்களைக் கட்டியவன் எனவும் கூறுகிறது பேரூர் புராணமும் அவ்வூர் இறைவனை கரிகால சோழன் என்பவன் வழிபட்டான் என்று கூறுகிறது இவன் பெயரால் நொய்யலாற்றங்கரையில் இன்றும் கரிகால் சோழன் துறை என்ற ஒரு படிக்கட்டுத் துறை உள்ளது. இவை மட்டும் அன்றி கொங்கு நாட்டில் கரிகால் சோழன் இராசராசக் கரிகாற் சோழன் என்றபெயரில் 10க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

சோழன் பூர்வ பட்டையம் குறிப்பிடும் கரிகால் சோழனை மூன்றும் குலோத்துங்க சோழன் என்று குறித்துள்ளார் பண்டாரகர். மு. ஆரோக்கிய சாமி.[1] மூன்றும் குலோத்துங்கன் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான் என்றாலும் அவன் ஆட்சி வடகொங்கு அளவோடு நின்றுவிட்டது எனவே கரிகால் சோழன் என்று சோழன் பூர்வ பட்டையம் கூறும் அரசன் இந்த இராசராசக் கரிகால் சோழனேயாவான். இவனுடைய 14 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றை சேலம் கோயிலிலிருந்து என் நண்பர் புலவர் செ. இராசு கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார்.[2] எனவே சேலம் மாவட்டம் உள்ளிட்ட வடகொங்கு நாடு முழுமைக்கும் இவன் பேரரசனாக விளங்கியுள்ளான் என்று தெரிகிறது கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையிலும் இவன் காலத்தில் கொங்கில் குடியேற்றப்பட்ட கைக்கோளர்களின் தலைவனாக வந்த கச்சியராயன் என்பான், இக்கரிகாலனை அடுத்துப் பட்டம் பெற்ற புகழ்மிக்க வீரராசேந்திரனின் 45 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் கைக்கோளர் தலைவனாக குறிப்பிடப்படுவதிலிருந்தும் குலோத்துங்கன் காலத்து அதிகாரிகளில் சிலர் கொங்கில் கிடைக்கும் இராசராசக் கரிகால் சோழனது கல்வெட்டுகளில் காணப்படுவதாலும்[1] இக்கரிகால சோழன் குலோத்துங்கனது தம்பியாக இருந்து குலோத்துங்கனுக்குப் பிறகு கொங்கு மன்னன் ஆனவன் என்று உறுதி செய்ய முடிகிறது.

இனி இவனுக்கு முன்பு ஆண்ட குலோத்துங்க சோழன் கி. பி. 1150 இல் பட்டம் பெற்றான் என்று கண்டோம். கொங்கு மன்னர்களில் இவன் மிகவும் புகழ் பெற்று விளங்கியவன் இவன் 34 ஆண்டுகள் அரசாண்டதாக தருமபுரி மாவட்டம் தீர்த்த மலையில் கிடைக்கும் குலோத்துங்கன் என்பானின் 34 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றின் அடிப்படையில் நிச்சயித்துள்ளனர். ஆனால் கொங்கு நாட்டில் இவனது 17 ஆம் ஆட்சியாண்டுக்கு மேற்பட்ட கல்வெட்டு

1. T. A. S. S. I. 1956-57. Page 4.
2. கொங்கு மாத இதழ் 1975-ஐப்பசி பக்கம் 235.

கிடைக்காததாலும் தீர்த்தமலை வெகு தொலைவில் கங்க நாட்டில் இருப்பதாலும் தீர்த்தமலைக் கல்வெட்டின் அடிப்படையில் இவன் 34 ஆண்டுகள் ஆட்சிசெய்திருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும் எவ்வாறயினும் உத்தேசமாக இவன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம் என்று கொண்டு இவனது காலத்தை கி பி 1150 முதல் 1170 வரை கொள்ளலாம். இக்குலோத்துங்கன் மீது பாடப்பட்ட பிரபந்தமே குலோத்துங்கன் கோவை என்றநூலாகும் பிறகு கி; பி. 1170லிருந்து வட கொங்கு நாட்டை இவன் தம்பி இராசராசக் கரிகாலனும் தென் கொங்கை உத்தம சோழ வீர நாராயணனின் மகன் ஒருவனும் ஆண்டு வந்ததாகக் கொள்ளலாம் கி. பி 1170 வரை கரிகாலன் தென் கொங்கை ஆண்டுவந்தான் என்பதை முன்னர் பார்த்தோம். இவனுடைய 33 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றும் கிடைத்திருப்பதால்[1] இக் கரிகாலன் கி பி 1155ல் தென் கொங்கு மன்னனாகப் பட்டமேற்று கி. பி. 1193 வரை ஆண்டிருக்கலாம் என்று கூறலாம். எனவே உத்தம சோழ வீரநாராயணன் 1155 வரை சுமார் 15 ஆண்டு காலம் தென் கொங்கை ஆண்டிருக்கலாம்.

## மூன்றும் குலோத்துங்கன் படையெடுப்பு:

கி. பி. 1193ல் தஞ்சை சோழனான மூன்றும் குலோத்துங்கன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வந்து அதனைக் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு இவன் கைப்பற்றிக் கொண்டது இராசராசக் கரிகாலனை வென்றே என்று கூறலாம் கருவூரில் காணப்படும் மூன்றும் குலோத்துங்கனது 18ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று " கொங்கானசோழ கேரள மண்டலத்துவெங்காலநாட்டுக் கருவூரான முடிவழங்கு சோழபுரம் " என்று அவ்வூரைக் குறிப்பதால்[2] கொங்கை வென்ற பிறகு அந்நாட்டு மன்னன் ஒருவன்

1. A. R. E. 558 of 1893.
2. A. R. E. 397 of 1925.

குலோத்துங்கனிடம் அடைக்கலம் புக குலோத்துங்கன் அவனுக்கு தென் கொங்கு நாட்டின் அரசுரிமையை வழங்கியிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது இதனைத்தான் முடிவழங்கு சோழபுரம் என்ற பெயர் உணர்த்துகிறது.

அவ்வாறு அடைக்கலம் புகுந்தவன் உத்தம சோழ வீர நாராயணனின் பெயரனே ஆவன் இதனை உறுதிப்படுத்துகிறது ஆனூரில் உள்ள குலோத்துங்க சோழன் என்பானின் எழாவது ஆண்டுக் கல்வெட்டு[1] இதில் சக ஆண்டு 1125 என்று குறிக்கப்பட்டுள்ளது சகம் 1125 அரசனது 7 ஆவது ஆண்டு என்றால் இவன் பட்டம் ஏற்றது கி. பி 1196 ஆக இருக்க வேண்டும். இதனடிப்படையில் பண்டாரகர் மு. ஆரோக்ய சாமி குலோத்துங்கன் 1196 முதல் 1230 வரை ஆண்டவன் என்று கூறியுள்ளார்.[2] இம்முடிவு தவறானது; இந்த குலோத்துங்கன் கி. பி. 1196ல் மூன்றாம் குலோத்துங்கனால் தென் கொங்கு மன்னனாக ஆக்கி வைக்கப்பட்ட வீரநாராயணனின் பெயரனேயாவன். இவன் 10 ஆண்டுகள் அதாவது கி பி 1206 வரை அல்லது அதற்கு மேலும் ஆண்டிருக்கலாம். எவ்வாறாயினும் கி. பி 1206ல் புகழ் பெற்ற வீரராஜேந்திரன் கொங்கின் அரசன் ஆனான் இவன் இராசராசக் கரிகாலனது மகனாகவே இருத்தல் வேண்டும்.

**வீரராசேந்திரன் :**

இந்த வீரராஜேந்திரன் கி. பி. 1206ல் பட்டம் பெற்றவன் என்று விசய மங்கலத்தில் காணப்படும் சக ஆண்டு குறிக்கப்பட்ட இவனது கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது[3] இவனே கொங்கு மன்னர்களில் கலிமூர்க்க விக்கிரமனைப் போல மிக்க புகழுடன் 49 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன் ஆவன். இவன் காலத்தில் இடையில் சில காலம் தென் கொங்கு, வட கொங்கு மன்னர்களிடையே பெரும் பூசல் நிகழ்ந்ததாக மாறவர்மன் சுந்தர பாண்டியனின் மெய்க்

1. A. R. E. 618 of 1922.
2. Kongu Country by M. Arokiaswamy.
3. A. R. E. 135 of 1909.

கீர்த்தியிலிருந்து தெரியவந்தாலும் இவன் இரு கொங்கையும் ஆண்டவன் என்ற பெருமையுடனே 49 ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தான்

இவன் ஆட்சி காலத்தில் கொங்கு வேளாளர்களும், வேட்டுவர்களும் மிகச்சிறப்புற்று விளங்கினர். இவனுடைய கல்வெட்டுகள் பலவற்றிலும் இவ்விரு இனத்தையும் சேர்ந்த பல அதிகாரிகள், நாட்டுத்தலைவர்கள், பொது மக்கள் ஆகியோரது பெயர்கள் பல காணப்படுகின்றன. இவனுக்குக் கலிகடிந்த பெருமாள் என்று ஒரு பட்டம் இருந்ததாக இவனுடைய 5-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. கலிகடிந்த என்ற சொற்றொடர் கலிமூர்க்கன் என்று இவன் முன்னோர்கள் சூடியிருந்த பட்டத்தின் தமிழ் வடிவம் என்றே தோன்றுகிறது. இவனுக்குப் பிறகு இரண்டாம் விக்கிரம சோழன் கி. பி 1255 முதல் 1263 வரையிலும் பிறகு ஒரு பெயர் தெரியாத அரசனும் பிறகு 1273 முதல் 1303 வரை மூன்றும் விக்கிரம சோழன் என்பவனும் கொங்கு மன்னர்களாக விளங்கி வந்தார்கள். இவர்கள் காலத்தில் சடாவர்மன் சுந்தர பாண்டியனின் (1254–1271) மேலாதிக்கத்தின் கீழ் வட கொங்கு நாடு முழுவதும் வந்து விட்டது. இச்சுந்தர பாண்டியனின் தம்பியான வீரபாண்டியன் சடாவர்மன் வீர பாண்டியன் என்ற பெயருடன் வடகொங்கு நாட்டை ஆளத் தலைப்பட்டான்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் கி. பி. 10ஆம் நூற்றுண்டின் இடைக்காலம் முதல்13ஆம் நூற்றுண்டின் இடைக்காலம் வரை சுமார் 300 வருடகாலம் கொங்கு நாட்டை ஆண்ட கொங்கு மன்னர்களின் மரபு வழியைப் பின்வருமாறு அமைக்கலாம்.




**கொங்கு பாண்டியர்கள் :**

பிற்காலப் பாண்டியர் பேராசு எழுச்சி பெறக் காரணமாக இருந்த முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலமுதலே பாண்டியர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அதன் உள் விவகாரங்களில் தலையிடத்

தொடங்கினர்[1] ஆனால் கொங்கு மன்னன் வீரராஜேந்திரன் உயிருடன் இருந்தவரை அம்முயற்சி வெற்றி பெறவில்லை. பிறகு அவனைத் தொடர்ந்து ஆண்ட இரண்டாம் விக்கிரம சோழனின் ஆட்சியிலும் வெற்றி பெறவில்லை. விக்கிரமனுக்குப் பிறகு கி. பி. 1265 முதலே கொங்கு நாடு பாண்டியர் வசம் வந்தது அப்பொழுதும் கொங்கு மன்னர்களின் வழிவந்தவர்கள் தென் கொங்கில் அமராவதி நதிக் கரையில் ஒரு சிறுபகுதிக்கு அரசர்களாக இருந்து வந்தனர், ஆயினும் வடகொங்கில் சில பகுதிகள் ஹொய்சாளர் வசமும் பிறபகுதிகள் அனைத்தும் பாண்டியர்கள் வசமும் முழுமையாக வந்துவிட்டது.

***சடாவர்மன் வீரபாண்டியன் :***

இம்மன்னனே கொங்கு நாட்டை ஆண்ட பாண்டிய வேந்தர்களுள் முதன்மையானவன் ஆவன் இவன் பாண்டிய அரசர்களுள் கி பி. 1254ல் அரசப் பொறுப்பேற்ற புகழ் பெற்ற சடாவர்மன் சுந்தர பாண்டியனின் தம்பியாவன். இவ்வீர பாண்டியனின் மெய்க் கீர்த்தி "கொங்கீழம் கொண்டு கொடு வடுகு கோடழித்து" என்று தொடங்குகிறது. எனவே தன் அண்ணனான சுந்தரபாண்டியனின் ஆணையின் பேரில் இவன் கொங்கு நாடு, ஈழ நாடு, வடுகர் நாடாகிய கன்னட நாடு ஆகியவற்றுக்குப் படைகளுடன் சென்று அந்நாடுகளைக் கைப்பற்றினான் என்று தோன்றுகிறது இவ்வாறு இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது கி பி. 1265லே நிகழ்ந்திருக்க வேண்டும். கொங்கு நாட்டில் விசயமங்கலத்துக் கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலில் காணப்படும் சக ஆண்டு குறிப்பிட்ட இவனது 15 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இதனை உறுதிப் படுத்துகிறது. கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதனைப் பாண்டிய சோரசோடு இணைத்துக் கொண்ட பிறகே இவன் வடதிசை சென்று கன்னட நாட்டில் சில

---

1. மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்கீர்த்தி.

பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான் போலும். இவன் காலத்திலே கொங்கு நாட்டின் புகழ் பெற்ற காமிண்டராக விளங்கிய காலிங்கராயக் கவுண்டர் இம்மன்னனது அமைச்சராக இருந்து காலிங்கராயன் கால்வாயை வெட்டினர். இக்காலத்தே இவன் கொங்கு நாட்டில் ஒரு வலிமை மிக்க பேரரசனாக விளங்கி, கொங்கின் வழியே உள் நுழைந்து தமிழகம் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வர முயன்ற ஹொய்சளர்கள், காகதீயர்கள் முதலானோர் படையெடுப்புகளை முறியடித்து தமிழகம் தன் பண்பாட்டுச் சிறப்பை இழந்து விடாமல் காத்த பெருமைக்குரியவனுள். இம்மன்னனும் கொங்கு மக்களின் விருப்பத்திற்கு கட்டுப் பட்டவனாய் அந்நாட்டிற்குரிய தனி அரச மரபினரைப் போலவே ஆண்டு வந்தான்.

இவனுடைய ஆட்சிக் காலத்தில் கொங்கு நாட்டில் தலை முறை தலைமுறையாகக் காமிண்டர்களாகவும் பெரிய அரசியல் அதிகாரிகளாகவும் விளங்கி வந்த வேளாள வேட்டுவத் தலைவர்களும் பிரமக்களும் தமது பண்டைய சிறப்புக் குறைவாமல் வாழ்ந்து வந்தார்கள். கொங்கு நாட்டை அந்நாள் வரை ஆண்டு வந்த கொங்கு மன்னர்களின் வழிவந்த வனையும் எதும் செய்யாமல் கொங்கின் அரசரிமையில் தனக்கு அடங்கிய சிற்றரச நிலையைக் கொடுத்ததோடு சமரசமான முறையில் ஆட்சி புரிவதன் அறிகுறியாக கொங்கு மன்னர்கள் சூடி வந்த இராசகேசரி, பரகேசரி பட்டங்களில் அப்பொழுது பரகேசரி பட்டம் வைத்துக் கொண்டு ஆண்ட 2ஆம் விக்கிரம சோழனுக்குப் பிறகு அவன் மகன் பெற வேண்டிய இராசகேசரிப் பட்டத்தை தானும் சூடிக் கொண்டு இவன் ஆண்ட முறை குறிப்பிடத் தக்க ஒன்றாகும். கொங்கு மன்னர்களின் வழி வந்தவனும் கொங்கு மக்களும் தம் நாட்டுக்கு வெளியார் அபாயம் வரக்கூடிய நிலையை உணர்ந்து இவன் ஆட்சிக்குப் பேராதரவு தந்தனர். இம்மன்னன் ஏறக்குறைய கி. பி. 1285 வரை அரசாண்டான். இவனைத் தொடர்ந்து இவன் மகன் சுந்தர பாண்டியன் ராஜகேசரி என்ற பட்டத்துடன் கி. பி.

1300 வரை ஆண்டான். இவனுக்குப் பிறகு அரசாண்ட அரசர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் இல்லையென்றாலும் திரிபுவன வீரபாண்டியன் என்பவன் மட்டும் நம் கவனத்தைக் கவருகிறான்.

இவனுக்குப் பிறகு கொங்கு நாடு முழுவதும் ஹொய்சாள அரசன் வீர வல்லாள தேவனின் வசம் சென்றது. இவனுக்குப் பிறகு இசுலாமிய படையெடுப்புகளின் விளைவில் சிக்கி சில காலம் கொங்கு நாடும் அல்லலுற்றது. பிறகு விசய நகர அரசர்கள், உம்மாத்தூர் சிற்றரசர்கள், மதுரை நாயக்க அரசர்கள் ஆகியோரின் ஆட்சியின் கீழ் மாறி மாறி இருந்து வந்தது. கடைசியில் மைசூர் அரசர்கள் ஆட்சியில் இக்காலத்திய கோவை மாவட்டம் முழுவதும் இணைத்துக்கொள்ளப்பட்டது.

---

## அத்தியாயம்-9

# கவுண்டர் சமுதாயம்

கொங்கு மன்னர்களின் ஆட்சி காலத்தில் கொங்கு நாட்டில் இக்கால வேளாள வேட்டுவக் கவுண்டர்களின் முன்னோர்கள் மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வந்திருப்பதை கொங்கு மன்னர்களின் கல்வெட்டுகள் ஏராளமாக எடுத்துக் கூறுகின்றன. மக்கள் நாகரீகம் தோன்றிய காலத்தில் தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் ஆறுகள், ஆற்றுச் சமவெளி நிலங்களில் அதிகமாகக் குடியேறி வாழத் துவங்கியதால் தமிழகத்தின் நடுப்பகுதியும், தொண்டை நாட்டின் மேற்கு-உட்பகுதிகளும் கூட அதிகக் குடியேற்றம் இன்றி காடாகக் கிடந்தன. ஆனல் தொண்டை நாட்டில் அந்நாளிலே ஆற்றுவளம் செழித்திருந்ததாலும், மலைகள் அதிகம் இல்லாத பகுதிகள் அவ்வாற்றுப் பாசனத்தால் வளப்படுத்தத் தக்கதாகவும் இருந்ததால் அங்கு வெகு விரைவில் மக்கள் குடியேற்றம் திகழ்ந்து விட்டது.

நடுப்பகுதி மட்டுமே பல நூற்றுண்டுகள் வரை மக்கள் குடியேறி வாழத்தக்க அளவிற்கு ஜனத்தொகையில் குறைந்தும் பெரும்பாலும் காட்டு நிலங்களாகவும் திகழ்ந்தன. இந்த நிலை மாறுவதற்கு ஆரம்ப காலத்தில் கொண்கான நாட்டுக் கொங்கர்கள் பெரிதும் காரணமாக விளங்கியதையும், பிறகு காடவ, கங்க அரசர்களின் காலத்தில் அக்குலத்து அரசர்களும், கொங்குச் சேர மன்னர்களும் கூட கொங்கின் சுற்றுப்புற நாடுகளிலிருந்து மக்கள் குடியேற்றத்தை ஊக்குவித்து வந்ததையும் சென்ற அத்தியாயங்களில் கண்டோம், இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல பாண்டிய–தெலுங்குச்சோழர் உறவும் நட்பும் நிலவிய

காலத்தில் வேட்டுவர்களின் குடியேற்றமும், பிறகு ஆதித்த சோழன் காலத்தில் நடந்த சில குடியேற்றமும், கண்டராதித்த சோழன் காலத்தில் அவனுடைய ஆளுகையின் கீழே இருந்து வந்த நடு நாடு, மேற்குத் தொண்டை நாட்டுப் பகுதிகளிலிருந்து அவனுடைய ஊக்குவிப்பினால் நிகழ்ந்த பெரிய அளவிலான வேளாளர் குடும்பங்களின் குடியேற்றமும் அமைந்தன. இவ்வாறு பல காலங்களிலும் நடைபெற்று வந்த குடியேற்றங்களால் கொங்கு மன்னர்கள் ஆட்சி அமைத்துக் கொண்ட காலத்தில் கொங்கில் பெரும்பாலான வேளாள மக்களும்—வேட்டுவ மக்களும்குடியேறி தமக்கென காணியும் பெற்றுக் கொண்டு சங்க காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் குடியேறியிருந்த கொங்கான நாட்டுக் கொங்கர்கள், பூர்வீக வேட்டுவர்கள் ஆகியோருடன் அந்தந்த இனத்தவர்கள் கலந்து கொண்டு அனைவரும் கொங்கர்களே என்ற ஒற்றுமை உணர்ச்சியை அடைந்தனர்,

இதன் பயனாக அவர்கள் தமிழ் நாட்டின் பிறபகுதிகளை ஆட்சி செய்யும் எந்த ஒரு அரசின் கீழும் வாழ விரும்பாமல் தமக்கென ஒரு தனி அரச மரபினரின் ஆட்சியில் வாழ விரும்பியிருப்பது இயற்கையே. இவ்விருப்பத்திற்கு ஊக்கம் தரும் வகையில் சிங்க விண்ணன், மகேந்திரன் விசைய நரசிம்மன் போன்ற காடவ-கங்க அரசர்களின் ஆட்சிமுறையிற்கு அமைந்திருந்தது ஆயினும் அப்பொழுதும் தெற்கிலிருந்து பாண்டியர்களும், வடக்கில் இருந்து பல்லவ – கொங்கணி அரசர்களும் இன்னும் இராஷ்ட்ரகூடர், நொளம்பர் ஆகியவர்களும் கூட கொங்கின் ஆட்சியில் குறுக்கிட்டு பயவிதத்திலும் தொல்லை கொடுத்து வந்தனர் மேலும் கொங்கு மன்னர்களின் காலத்தில் குடியேறி நிலைபெற்றிருந்த பொன்னூன்றநாட்டு பொன்ன கூட்டத்தவர்கள், வேணாட்டுப் பெரிய குலத்தவர்கள், ஆந்தை பாடி நாடு ஆந்தைக் கூட்டத்தவர்கள் மற்றும் செங்கண்ணர், போன்ற குலத்தவர்களின் முன்னோர்கள் கங்க—காடவ அரசர்களின் ஆட்சியில் ஊர்க் காமிண்டர்களாகவும் நாட்டுக் காமிண்டர்களாகவும் மற்றும் பல பொறுப்புள்ள அரசாங்க அலுவல்களிலும் இருந்து

சிறப்புப் பெற்றிருந்தவர்கள். எனவே அவர்கள் வழிவந்தவர்கள் இம்மாதிரியானதொரு தனி அரசமரபினர் ஆட்சியை நிச்சயம் வரவேற்றிருப்பர்.

கி. பி. 18ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர்களும், பிறநாட்டவரும தத்தமது நாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் வாழ விரும்பாமல் தமக்கென தனியே அமெரிக்க ஐக்கியக் குடியரசை ஏற்படுத்திக் கொண்ட நிலை அன்று கொங்கில் குடியேறியிருந்த மக்களிடமும் காணப்பட்டது. எனவே கண்டராதித்தனுக்குப் பிறகு வீரசோழக் கவிழூர்க்கள் நிறுவிய புதிய அரசின் மீது முழு நம்பிக்கை வைத்து அதற்கு பேராதரவு கொடுத்தனர். இதனாலதான் முன் எப்போதையும் விட இக்காலத்தில் நிறுவப்பட்ட கொங்கு மன்னர்களின் தனியரசு தமிழ்நாட்டின் பிறஅரசுகளைப் போல தனிஅரசாக 300 ஆண்டு காலம் நிலைத்தது. ஆகவே இவ்வரசர்கள் தஞ்சை சோழர்களுக்கு உட்பட்டவர்களாகவே விளங்கினார்கள் என்று பொதுவாகக் கூறமுடியாது தஞ்சைச் சோழர்கள் இக்காலத்தே கொங்கு நாட்டைக் கைப்பற்றியதெல்லாம் கரூர் உள்ளிட்ட கீழ் கொங்கு நாடும் கங்க நாடு உள்ளிட்ட வட கொங்கின் சில பகுதிகளுமே யாகும். அதேபோல் சேரர்களும் கொங்கின் மேற்கு எல்லையில் சிறிதளவு நிலப்பரப்பையே பிடித்துக் கொண்டனர்.

இந்த நிலையில் புகழுடன் கொங்கு நாட்டையாண்டு வந்த கொங்கு மன்னர்கள் காலத்தில் கவுண்டர் மக்களின் நிலையை இனி காண்போம். கவுண்டர் என்ற பெயர் கொங்கனி அரசர்களின் ஆட்சியில் கிராமத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட காமிண்டர் என்ற சொல்லிலிருந்து வந்தது என்று முன்னர் விளக்கப்பட்டது. நாளடைவில் இப்பெயர் ஊர்க் காமிண்டர்களாகவும், நாட்டுக் காமிண்டர்களாக விளங்கிய வேளாளத் தலைவர்கள் குடும்பத்துடன் ஏனைய வேளாளக் குடும்பத்தவர்களும், வேட்டுவக் காமிண்டர்கள் குடும்பத்துடன் ஏனைய வேட்டுவர் குடும்பத்தவர்களும் சம்பந்தம் செய்து கொண்டபோது அச்சம்பந்தத்தைக் குறிப்பதற்காகச்

சம்பந்தம் செய்து கொண்டவர்களும் காமிண்டர் பட்டத்தை கவுண்டர் என்று சாதிப்பெயரைப் போல வைத்துக் கொண்டனர் பின்னர் அவர்கள் வழியில் வந்தவர்களும், அவ்வழி வந்தவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டவர்களும் கவுண்டர் பட்டத்தை வைத்துக் கொண்டனர். இதேபோல ஏனைய வன்னியர் போன்ற காமிண்டர்களுடன் சம்பந்தம் செய்து கொண்ட வன்னியர் முதலானோரும் கவுண்டர் என்ற பெயரைப் பொதுப் பெயராக வைத்துக் கொண்டனர்.

பின்னர் விஜய நகர – நாயக்க அரசர்கள் காலத்தில் தொழில் வேற்றுமையில் அல்லாது இன வேற்றுமைகளால் உயர் சாதி, தாழ்சாதி என்ற வேறுபாடறியாத தமிழ்ச் சமுதாயத்தினரிடையே சாதிவேறுபாடுகள் பெரிய அளவிற்கு வளர்ந்துபோன காலத்தில் உயர்வுகருதி கொங்கில் வாழ்ந்த வேறு இனத்தவர்களும் கவுண்டர் பட்டத்தை வைத்துக் கொண்டனர். கொல்லி மலை போன்ற மலைகளில் வாழும் மலைசாதி மக்களிலும் இதுபோல ஊர்த்தலைவர்களாக இருப்பவர்களும் அவர்களுடன் தாயாதி பங்காளி உறவு கொண்டிருப்பவர்களும் பிற மக்களோடு தம்மை உயர்வாகக் காட்டிக் கொள்ள கவுண்டர் பட்டம் சூடிக் கொண்டனர் இன்றும் கொல்லி மலை, கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் வாழும் மக்களில் உயர் வகுப்பினரும், ஜாகிர் தலைவர்களாகவும் இருப்பவர்கள் கவுண்டர் பட்டம் வைத்திருப்பதைக் காணலாம். கொங்கு நாட்டில் கவுண்டர் என்ற இணைப்புப் பெயரை உடையவர்களாக கீழ்க்கண்ட பிரிவினர் உள்ளனர்,

1 வேளாளக் கவுண்டர் 2. வேட்டுவக் கவுண்டர்
3. நரம்பு கட்டிக் கவுண்டர் 4. நாட்டாக் கவுண்டர்
5. ஒக்கிலியக் கவுண்டர் 6. அகமுடியக் கவுண்டர்
7. திருமுடிக் கவுண்டர் 8 தொண்டைக் கவுண்டர்
9. தொழுவக் கவுண்டர் 10. பள்ளிக் கவுண்டர்
11. படையாச்சிக் கவுண்டர் 12. மொடவாண்டிக் கவுண்டர்
13. படைத் தலைக் கவுண்டர் 14. சிலியாக் கவுண்டர்

15. செந்தலைக் கவுண்டர் 16. பவள வேளாளக் கவுண்டர்
17. பால வேளாளக் கவுண்டர் 18 சங்கு வேளாளக் கவுண்டர் 19. மலையாளக் கவுண்டர்

இவ்வகைகளில் பல நாட்டு அரசியலில் பல்வகைப் பதவிகளைப் பெற்றிருந்ததின் அடிப்படையில் வந்தவை போலத் தோன்றுகிறது எடுத்துக்காட்டாகப் படையாச்சிக் கவுண்டர்களைக் கூறலாம். படையாச்சி என்பது படைவீரர்களாக இருந்துவந்தவர்களின் குடும்பத்தைக் குறிக்கும். இதேபோல நாட்டாக் கவுண்டர், அகமுடியக் கவுண்டர், படைத்தலைக் கவுண்டர் ஆகியோரைக் கூறலாம்; செந்தலைக் கவுண்டர் செந்தலை வேளாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் செந்தலை வேளாளர்களின் பெயர்க்காரணம் தெரியவில்லை. செந்தலை என்பது அப்படி ஒரு ஊரைக் குறிக்கலாம். மோடவாண்டிக் கவுண்டர் 24 நாட்டில் வாழும் வேளாளர் குடும்பங்களில் பிறக்கும் உறுப்புக் குறையுள்ள குழந்தைகளை வளர்ப்பதற்கென பழங்காலந்தொட்டே அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. இதற்காக இவர்களுக்கு காணிகளும், ஆண்டிற்கு இவ்வளவு நெல் என்று ஊதியமும் வழங்கப்பட்டதாம் நாம்புகட்டிக் கவுண்டர் என்பார் கட்டி நாட்டிலிருந்து வந்தவர்கள் போலும். அன்றி வேறு எக்காரணத்தால் அப்பெயர் வந்தது என்பது அறியக் கூடவில்லை.

மேற்சொன்னவாறு, ஊர்த்தலைவர்களுக்கும், நாட்டுத் தலைவர்களுக்கும் கொங்கணி அரசர்கள் காலத்தில் வழங்கப்பட்ட காமிண்டர் என்ற பெயர் கவண்டர் என்று பொதுப் படையாக எல்லோருக்கும் அமைந்தது நாளா வட்டத்தில் நிகழ்ந்திருக்கக் கூடியதே. கொங்கு மன்னர்களின் ஆட்சி காலத்தில் இப்பெயர் பொதுப் பெயராக வேளாள–வேட்டுவர்களுக்குக் கூட அமைந்திருக்கவில்லை. கொங்கு மன்னர்களது கல்வெட்டுகளில் வேளாள–வேட்டுவ மக்கள், அதிகாரிகள், இன்றும் தலைவர்கள் கூட அவரவர்கள் குடியேற்றத்தின்

அடிப்படையில் ஏற்பட்ட கூட்டப் பெயர்களிட்டே குறிக்கப் படுகின்றனர்

கொங்கு நாட்டு மக்கள் சமுதாயம் கொங்கு மன்னர்களது ஆட்சி காலத்தில் வரையறுக்கப் பட்டதொரு முழுமையை அடைந்தது. அதற்கு முன்னால் கொங்குநாடு தனக்கென ஒரு நிலையான அரசமரபினரின் ஆட்சியைப் பெருமல் அவ்வப்போது வேறுவேறு அரச மரபினர்களின் ஆட்சியின் கீழ் சிறுசிறு பகுதிகளாகவும், சில சமயங்களில் பெரும் பகுதியாகவும் மாறிமாறி இருந்து வந்ததால் இத் தகையதொரு முழுமையடைய முடியவில்லை. சிங்கவிஷ்ணன் மகேந்திரன் ஆகியோரது ஆட்சியின் கீழ்தானவு இந்நிலையை அடையக்கூடிய சூழ்நிலை நிலவியது. ஆனால் இவர்களது ஆட்சி பலகாரணங்களால் ஒரிருதலைமுறைகளோடு முடிவுக்கு வந்துவிட்டபடியாலும், மக்கள் குடியேற்றம் பரவலாக ஏற் படாமல் இருந்தபடியாலும் அச்சூழ்நிலைப் பயனற்றுப் போயிற்று. பிறகு குடியேற்றமும் பெருமளவில் நிகழ்ந்து நிலையான அரசமரபும் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் முழுமை இயல்பாக ஏற்பட்டு விட்டது. கொங்கில் குடியேறிய வேளாளர் வேட்டுவர் ஆகிய இருசாரும முன்னால் கொங்கு நாட்டில் சிதறின ரீதியில் வாழ்ந்து வந்த கெங்கர்களோடும், பிறமக்களுடனும் ஒன்று சேர்ந்து அனைவரும் தமது பூர்வீக நாட்டை பற்றிய சிந்தனையின்றி தம்மையும் பொதுவாகக் கொங்கர்களாகவே கருததலைப்பட்டனர். பிற சோழ, பாண்டியநாட்டு மக்களைப் போலவே தம்மைக் கொங்கர்கள் என்றே கூறிக்கொண்டனர். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு கொங்குநாட்டைத் தனியரசாக ஆளத்தொடங்கிய கொங்கு மன்னர்களும் கொங்கு மக்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டனர். இந்த நிலையில் அவர்களிடையே வேற்றுமை உணர்வு ஏற்படுவதற்கு வழியற்றுப் போயிற்று. வேற்றுமை உணர்வு மட்டும் ஏற்பட்டிருக்குமேயானால் அந்நாளிலே கொங்கு நாடு தன் தனித்தன்மையை இழந்து பிற நாட்டோடு இணைந்து போயிருக்கும். இந்நிலை ஏற்படுவ தற்கு அவர்கள் இடங் கொடுக்கவில்லை.

இதனடிப்படையில் அக்காலத்தே நாட்டுத் தலைமை போன்ற பெரும் பதவிகளுக்கும், பிற அரசாங்க உயர் பதவிகளுக்கும் கூட போட்டிப் பூசல்கள் ஏற்படாதவாறு தடுக்கப்பட்டது. இக்காலத்தில் உயர் பதவிகள் கொடுப்பதற்கு பணியாற்றிய கால அளவு (Seniority) முதன்மையாக எடுத்துக் கொள்ளப்படுவதுபோல அக்காலத்தே கொங்கு நாட்டிலும் நாட்டுத் தலைமை போன்ற பதவிகளுக்கு வேளாளர் - வேட்டுவர் ஆகிய இருசாரரிலுமே அவர்கள் கொங்கில் குடியேறி நிலையான குடிமக்களான காலவிரிவு கருத்தில் கொள்ளப்பட்டது. குடியேறியவர்களில் காலத்தால் பழைமையானவர்கள், அதாவது சங்க நாளிலும், அதற்குப்பிறகும் குடியேறி சிலபழங்கால நாட்டுப்பிரிவுகளுக்கும், ஊர்களுக்கும் தலைமை பூண்டு விளங்கிய காமிண்டர்களின் வழிவந்தோரும், அரசாங்க உயர் அலுவலர்களாகப் பணியாற்றிப் பட்டங்கள் பல பெற்று அரசியல் விசுவாசம் நாட்டுப்பற்று ஆகியவற்றால் சிறந்து விளங்கியவர்களின்வழி வந்தோரும் முன்னுரிமை பெற்று நாட்டுத்தலைமை போன்ற பெரும் அலுவல்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

அதே போலக் கண்டராதித்த சோழரின் காலத்தில் பெரும் அளவில் குடியேறியிருந்த வேளாளர் கூட்டத்தவருள்ளும், அவர்களின் பூர்வீக நாட்டில் தலைமை பூண்டு விளங்கி, பின்னர் குடியேறிய கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி வந்தவர்களுக்கும் இம்முன்னுரிமை மறுக்கப்படாமல் அளிக்கப்பட்டது. இவ்வாறு முன்னுரிமையுடன் தலைமைப் பொறுப்பு வழங்குவதில் வேட்டுவர்-வேளாளர் என்ற இனப் பாகுபாடு காட்டப்படவில்லை. கொங்குதேச ராசாக்கள் என்னும் பழைய வரலாற்றுக் கட்டுக்கதை நூல் ஆதித்த சோழன் ராச வேடர்களை (வேட்டுவச் சிற்றரசர்கள்) செயம் செய்து கொங்கு நாட்டைக் கைப்பற்றி, அவர்களது உரிமையைத்தான் குடியேற்றிய வேளாளர்களுக்கு அளித்தான் என்ற முறையில் கூறிச் செல்கிறது. இதனடிப்படையிலும், இக் காலத்தே வேளாள மக்களிலே சோழிய வேளாளர்கள் என்று ஒரு பெரும் பிரிவு இருப்பதைக் கொண்

டும் பண்டாரகர் மு. ஆரோக்கியசாமி சோழர்கள் வேளாளர்களே எனவும், அவர்கள் தாம் கைப்பற்றிய கொங்கு நாட்டிலும் ஏனைய மக்கள் தொகை குறைவான பகுதிகளிலும் தம்மின மக்களையே குடியேற்றி அவர்களுக்கே பல உரிமைகளையும் வழங்கினார்கள் என்றும் கூறியுள்ளார்.[1] இதனை உறுதிப்படுத்த அவர் முன்னும் சிலகாலம் கொங்கு நாட்டைத் தமது ஆதிக்கத்தில் கொண்டிருந்த கொங்கணி அரசர்கள் இப்பகுதிகளை நிலையாகத் தம் வசமே வைத்துக்கொள்ள இங்கு ஏராளமான வேட்டுவர்களைக் குடியேற்றியிருந்தனர் எனவும், மேலும் இக்காலத்தே வழங்கப்படும் சில பழங்கதைகளும், செவிவழிச் செய்திகளும் வேளாளர் வேட்டுவரிடையே பகைமை உணர்ச்சி நிலவியதாகக் கூறுவதையும் எடுத்துக்காட்டி இதற்குக் காரணம் ஆதித்த சோழன் தம்மின மக்களுக்கு அதிகசிறப்பு கொடுத்து ஆதரித்ததே என்று சான்று காட்டுகிறார். ஆனால் செவி வழிச் செய்திகளும், நாடோடிக் கதைகளும் பிற்காலத்தே எழுந்தவை ஆதலால் இவை கூறும் செய்திகளை இடைக்காலத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. இன்றும் கொங்கு மன்னர்களது பல கல்வெட்டுகளிலும் வேளாளர்களும் வேட்டுவர்களும் வளரசலிகளாகவும், நாட்டுக் காமிண்டர்களாகவும் விளங்கி வந்தனர் என்பதற்குச் சான்றுகள் காணப்படுவதாலும், நாட்டுச் சபைகளிலும் வேளாள உறுப்பினர்களோடு வேட்டுவ உறுப்பினர்களும் சம அளவில் பிரதிநித்துவம் வகித்து வந்திருப்பதை அறியமுடிவதாலும் அக்காலத்தே இவ்விரு இனத்தாரிடையே வேற்றுமை உணர்வு தலைதூக்கி நின்றிருக்கும் என்று கூறமுடியாது. இப்போக்கு பெரும்பாலும் விசயநகர, நாயக்க அரசர்களின் காலத்திலே ஏற்பட்டிருக்க முடியும். இதற்குப் பிற்கால விசய நகர, நாயக்க அரசர்களின் கல்வெட்டுகள் செப்பேடுகள் சிலவற்றையும் சான்று காட்ட முடியும்.

---

1. TASSI, 1956-57 P. 2—3.

இவ்வாறு வேறுபாடற்ற ஒரே கொங்கர் சமுதாயத்தவர்க ஒற்றுமையுடன் வாழத் தொடங்கிய இக்காலத்திலே தான் கொங்கு நாட்டின் எல்லைகளும் கொங்கு மண்டல சதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்டன. கண்டராதித்தன் காலத்தில் 24 நாடுகளாக கொங்கு பிரிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே இவ்வெல்லைகள் வகுக்கப்பட்டன போலும்.

**தமிழகத்தின் பிறபகுதிகளில்:**

இக்காலத்தே தமிழகத்தின் பிறபகுதிகளில் சமுதாய நிலையில் பெரும் மாற்றங்கள் நிகழத்தொடங்கின. கி. பி. 9 ஆம் நூற்றுண்டு வரையில் தமிழ்ச் சமுதாயத்தினர் அறிந்திராத சாதிப் பிரிவினைகள் சிறிது சிறிதாகத் தலையெடுக்கத் தொடங்கின. பிராமண சமுதாயத்தினர் நன்கு மதிக்கப்பட்டு அரசர்களாலும் பிறமக்களாலும் அவர்களின் வேதச் சார்புடைய தெய்வீகச் சடங்குகளினாலும், இறை உணர்வும் நேர்மையும் மிகக வாழ்க்கையினாலும் பெரிதும் போற்றப்பட்டதும், தொழில் அடிப்படையில் ஏற்பட்ட சமுதாயத்தின் பிறமக்கள் பிரிவினர் காலப்போக்கில் அத்தொழிலின் உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்றபடி தம்மையும் உயர்வாகவும் தாழ்வாகவும் மதிக்கத் தொடங்கியதும் ஏராளமான சாதிப் பிரிவுகள் ஏற்படக்காரணமாயின. இதனால் உயர்ந்த தொழில் செய்து வந்தவர்கள் உயர்ந்தோராகக் கருதப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான பிற சாதாரண தொழில்களைச் செய்து வந்தவர்கள் சமுதாயத்தின் பின்னணிக்குத் தள்ளப் பட்டனர். உயர்ந்த தொழில் செய்து வந்தவர்களே அரசாங்கத்திலும் முதன்மை பெற்று முதலிகள் என்று குறிக்கப் பெற்றனர். வணிகத்தொழில் செய்து வந்தவர்கள் நாட்டின் பொருளாதார உயர் நிலைக்கு இன்றியமையாதவர்களாக ஆனமையால் வடமொழியில் சிரேஷ்டிகள் எனப்பட்டனர்.

சிரேஷ்டம் என்றால் உயர்வானது என்று பொருள். இதுவே சிலேட்டியாக செட்டியாக மாறிற்று. திருக்கோயில் களில் இறைவழிபாடு, மற்றும் கோயில்களின் இறைவனைச்

சார்ந்த தொழில் செய்து வந்தவர்களும் செட்டிகள், செட்டி சிவப் பிராமணர்கள் எனப்பட்டனர் இவ்வகையான மாறுதல்களால் சமுதாயத்தில் அநுலோமர்கள், பிரதிலோமர்கள் எனப்படும் வலங்கை-இடங்கை சாதி முறைகள் நடைமுறைக்கு வந்தன. இன்னின்ன சாதியார் இன்னின்ன வேலைகளையே செய்யவேண்டும் இன்னின்ன பழக்க வழக்கங்களையே மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பல சமூகக் கட்டுப்பாடுகள் வழக்கிற்கு வந்தன. இதனால் தாழ்நிலையில் தள்ளப்பட்டவர்கள் தம்மையும் உயர்ந்தோராகக் காட்டிக் கொள்ள பலவகையிலும் முயன்றனர்.

கைக்கோளர்கள், செட்டிகள், ரதகாரர்கள் எனப்பட்ட கண்மாளர்கள் (கம்மாளர்) வேட்கோவர்கள் (மண் கலங்கள் செய்வோர்) போன்ற பெயர்களிலும் பல சாதியினரைப் பற்றி நாம் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். இடங்கைப் பிரிவும், வலங்கைப் பிரிவும் ஒவ்வொன்றும் 98 வகை உட்பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் இப்பிரிவினர்களிடையே எழுந்த பூசல்களை அரசர்கள் தலையிட்டுத் தீர்த்து வைத்ததையும் கூட அறிகிறோம். இவற்றையெல்லாம் இங்கு விளக்குவதற்கில்லையெனினும் இவ்வகைப்பட்ட சாதிப்பிரிவுகள் புதிதாகக் குடியேற்றம் பெற்ற கொங்கு நாட்டிலும் மெல்ல பரவத் துவங்கியது காரணம் குடியேறி வாழ்க்கை அமைத்துக்கொண்ட கொங்கு மக்கள் நாள்தோறும் வளர்ந்து வரும் தம் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் பலவகைத் தொழில் செய்வோரின் தேவைகளை உணர்ந்தனர். புதிதாக உருவாகியிருந்த கொங்கு நாட்டில் ஏற்பட்ட இந்நிலை அக்காலத்தே சாதிப்பிரிவினைகள் எவ்விதம் ஏற்பட்டு இருக்கும் என்று அனுமானிக்க இடமளிப்பதாக உள்ளது.

இவ்வாறு சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதிலும் கொங்கு மக்கள் ஓரளவிற்குத் தம்மை பிறநாட்டோடு சேர்ந்து கொள்ளாதவராகக் கருதிக் கொண்டு தமக்கு வேண்டிய சில தொழில்களைச் செய்து கொள்வதற்குக் குடியேறிய மக்களிடையிலே இன்னின்றோர் இன்னின்ன

தொழில்களைச் செய்யவேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவே கொங்கு செட்டிகள், (வியாபாரம் செய்பவர்கள்) கொங்கு நாவிதர்கள், கொங்கு வண்ணார்கள் முதலிய இனப்பிரிவுகள் இன்றும் இருப்பதாகும். அக்காலத்தே செய்தித்தாள்கள் போன்ற செய்தி அறிவுப்புச் சாதனங்கள் இல்லையாதலால் அரசர்கள் அறிவிக்கும் செய்திகளையும், நாட்டுச் சபைகள், ஊர்ச் சபைகள் ஆகியவை தீர்மானிக்கும் முடிவுகளையும், பிற சமுதாயச் செய்திகளையும், நாடு முழுவதும் அறிவிப்பதற்குப் பறை கொட்டிச் செய்தி அறிவிக்கும் பறையர்கள் என்று ஒரு சாரர் ஏற்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு ஏற்பட்ட ஒரு பிரிவினர் என்ன காரணத்தாலோ பிற்காலத்தில் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டு இழிந்த பிரிவினர்கள் ஆக்கப்பட்டனர். இவர்கள் ஆரம்ப காலத்தில் இவ்வாறு கருதப்படவில்லை என்பதற்கு ஒரு பெருஞ்சான்று கொங்கு மக்கள் தம் இனத்திலேயே கொங்குப் பறையர்கள் என்று ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொண்டதே. திருமுருகன் பூண்டி முருகநாதர் கோயிலில் காணப்படும் கொங்கு மன்னன் இரண்டாம் விக்கிரம சோழனின் கல்வெட்டொன்றில்[1] வாயறைக்கால் நாட்டுப் பல்லவிடத்தில் (தற்காலப் பல்லடம்) வெள்ளாளன் மாபுப் புள்விசவில் (புல்லகூட்டம்) சோழன் பறையனான தானபாலன் என்பான் முருகன் பூண்டி இறைவனுக்கு நாளொன்றுக்கு நாழியரிசி அமுது படைக்க நிவந்தம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. இதிலிருந்து பறையர் எனப்பட்டவர் சமுதாயத்தில் இழிந்தவர்களாக கருதப்படவில்லை அக்காலத்தில் என்பதும் அவர்கள் பிறப்பினாலேயே தாழ்ந்தவர்கள் அல்ல என்பதும் மக்கள் சமுதாயத்தில் அவர்கள் செய்தியறிவிக்கும் தொழிலைச் செய்துவந்த ஒரு பிரிவினரே என்பதும் வேளாளர்கள் போன்ற பெருமக்களிலும் அப்பிரிவினர் உண்டு என்பதும் உறுதிப்படுகிறது.

---

1. A. R. E. 677 of 1893.

இவ்வாறு ஏற்படுத்திக் கொண்ட தொழில் பிரிவினர்களே பஞ்சசாதியார் எனப்பட்டனர். ஆனால் காலப்போக்கில் வேளாளர்—வேட்டுவர் இனவேறுபாடு உணர்வு வளர்ந்ததும் இவ்ஐவகைச் சாதியினரையும் வேளாளர்கள் தம்மினத்திலே ஏற்படுத்திக் கொண்டனர். கொங்கு நாவிதன் ஏற்பட்ட வரலாற்றைப் பற்றியும் கொங்கு நாட்டில் ஒரு செவி வழிச் செய்தி நிலவுகிறது. அதன்படி கொங்கு வேளாளர்கள் தமக்கு நாவிதத் தொழில் செய்ய வேட்டுவ நாவிதர்கள் வேண்டாமென்று தம்மினத்திலேயே நாவிதத் தொழில் செய்வதற்கென ஒரு பிரிவினரை ஏற்படுத்திக் கொண்டனராம். இது பிற்காலத்தில் சாதி சமூகக் கட்டுப்பாடுகள் மலிந்து விட்ட பிறகு வழக்கில் வந்த கதையாக இருக்கும் தோன்றுகிறது.

இவை போலத் தமக்குத் தேவையான சாதாரண சிறு தொழில்களைச் செய்ய கொங்கு மக்கள் தம்மினத்திலேயே சில பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்ட போதிலும் நெசவு முதலிய பெருந்தொழில்களைச் செய்ய அத்தொழிலில் வல்லுநர்களை சோழ, பாண்டிய, தொண்டை நாட்டுப் பகுதிகளிலிருந்து அழைத்து வந்து குடியேற்ற வேண்டி வந்தது. இவ்வகையானதொரு குடியேற்றத்தைப்பற்றி சோழன் பூர்வ பட்டையம் விரிவான செய்திகளைத் தெரிவிக்கிறது. இந்நூல் ஒரு செப்புப் பட்டையத்தின்படி என்று கூறப்பட்டுள்ளது. இதன் அசல் பட்டையம் கிடைக்கவில்லை. இந்நூலில் கரிகால் சோழன் என்பவன்[1] தொண்டை நாட்டிலிருந்து இன்னும் சில வேளாளக் குடியினரையும், கைக்கோளர்களையும், செட்டிகளையும் முறையே வேளாளக் குடியினர்களை வெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலி என்பான் தலைமையிலும், கைக்கோளர்களைக் கச்சிவீரன் என்னும் காஞ்சீபுரத்தான் ஒருவன் தலைமையிலும், செட்டிகளை கஸ்தூரி ரங்கசெட்டி என்பான் தலைமையிலும் அழைத்து வந்து குடியேற்றினான் என்று கூறுகிறது. வாணிபம் செய்யும்

---

இக்கரிகாலன் இராசராசக் கரிகாலனேயாவன்.

செட்டிகளைத் தம்மினத்திலே ஏற்படுத்திக் கொண்டதாக முன்னர் கூறப்பட்ட போதிலும் கடல் கடந்து வாணிபத்திலும், உள்நாட்டு வாணிபத்திலும் தன்னேரிலாது விளங்கிய திசை செட்டிமார்கள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நாளிலே முதுகெலும்பாக விளங்கி வந்தமையால் புதிதாக குடியேற்றம் பெற்றுச் சிறப்புடன் விளங்கி வந்த கொங்கு நாடும் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைந்து விடாது இருக்க செட்டிமார்களின் இன்றியமையாமையை உணர்ந்து அக்கரிகால் சோழன் அவ்வினத்தாரையும் அழைத்து வந்து கொங்கில் குடியேற்றினன் போலும்.

இவ்வணிக மக்களும், உள்நாட்டு வியாபாரம் செய்யும் கொங்கு செட்டிகளும் அய்யபொழில் என்ற பெயரில் வர்த்தக சங்கம் ஒன்று ஏற்படுத்திக் கொண்டு தங்கள் தொழிலுக்கு வேண்டிய முறைகளை ஆராய்ந்து அதன்படி நடந்து கொண்டார்கள். இச்சங்கத்தில் 500 உறுப்பினர்கள் சேர்ந்திருந்தனர்.[1] வேட்டுவர்கள் இதுபோன்று வர்த்தகத் தொழிலில் தம்மினத்தார் சிலரை ஈடுபடுத்தியிருந்தனரா என்பது தெரியவில்லை. பொதுவாக வேட்டுவர்கள் வீரத்திலும், போர்த் தொழிலிலும் சிறந்து விளங்கியவர்கள் ஆதலால் அவர்களில் பெரும்பாலோர் அரசாங்கப் படைகளிலும், மற்றும் படைத் தளபதிகளாகவும், ஊர் காவல் படை வீரர்களாகவும், அரசனின் மெய்க்காப்பாளர் படையில் அதிக இடம் பெற்றும் விளங்கினர் என்றே கூறலாம்.

**கைக்கோளர்கள் :**

கைக்கோளர்கள் தமது தொழிலான நெசவுத் தொழிலில் சிறந்து விளங்கி கொங்கு மக்களுக்குத் தேவையான ஆடைவகைகளைக் குறைவின்றி நெய்து அளித்ததோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தக்க அளவிற்குத் தமது தொழிலில் சிறந்து விளங்கி கொங்கின் செல்வ வருவாயைப்

---

1 A. R. E. 121 of 1906.

பெருக்கினர். இக்கைக்கோளர்கள் கரூர், ஈரோடு உள்ளிட்ட கீழ் கொங்கு நாட்டிலேயே குடியேற்றப்பட்டனர் போலும். இன்றும் கொங்கு நாட்டின் இப்பகுதிகளிலே நெசவுத் தொழில் சிறப்புற்று விளங்குவது இங்கு ஒப்பிடத்தக்கது. அன்றியும் இதனைக் கல்வெட்டுச் செய்தியொன்றும் உறுதி செய்கிறது. கரூருக்கு அண்மையிலுள்ள நெரூரில் கிடைத்த திருபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான என்பவனது 13 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று [1] தைமாதத்தில் வரும் அரசனுடைய பிறந்த நாளில் இறைவனை வழிபாடு செய்யவும், சிறப்புப் பூசனை நடத்துவதற்கும் வாவி போக்கி என்ற ஊரின் வருமானத்தை நிவந்தமாகக் கொடுத்து பலகாலமாக அதில் யாரையும் குடியேற்றாமல் விட்டு வைத்திருந்தான் எனவும், மேற்குறிப்பிட்ட அரசனுடைய 13 ஆம் ஆட்சியாண்டில் இவ்வூரின் பெயரை கச்சியரைய நல்லூர் என்று மாற்றி இதில் கச்சியரையன் தலைமையில வந்த கைக்கோளர்களை குடியேற்றி பல வரிகளிலிருந்து அவ்வூருக்கு விதிவிலக்கு அளித்தான் என்றும் கூறுகிறது. இந்தக் கச்சியரையன் காஞ்சியிலிருந்து கைக்கோளர் குடும்பங்களின் தலைவனாக வந்த கச்சியரையனே போலும். இவ்வாறு இராசராசக் கரிகாலன் காலத்தில் குடியேறிய கைக்கோளர்கள் தமது மரபுத்தொழிலைச் செய்து கொண்டு வாழ்ந்ததோடு சோழ நாட்டைப்போல அரசனது மெய்க்காவல் படையினராகவும் இருந்து வந்தனர் என்று பல கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகிறது [2] இப்படையில் இருந்த கைக் கோளர்கள் சோழநாட்டைப் போலவே தெரிந்த கைக்கோளர்கள் என்று குறிக்கப்பட்டனர்.

இராசராசக் கரிகாலனது கல்வெட்டு ஒன்று கொழுமத்திலிருக்கும் கைக்கோளரில் வேளைக்கார நாயகம் செய்வார்கள் என்று இதனைக் குறிக்கிறது. **வீரராஜேந்திரனது** கல்

1. இதில் குறிக்கப்படும் கோனேரின்மை கொண்டான் இராசராசக் கரிகாலனேயாவன்.
2. A. R. E. 332 of 1928.

வெட்டொன்று பெருமாள் கைக்கோளர்களில் (பெருமாள் என்பது அரசனைக் குறிப்பதால் அரசனது மெய்க்காவலர் படையினர் என்று கூறலாம்) தேவன் பல தேவருள நவி கடிந்த சோழ மாராயன் என்னும் கைக்கோளர் தலைவன் ஒருவனைக் குறிப்பிடுகிறது. இவ்வீர ராஜேந்திரனது மற்றொரு கல்வெட்டு பெருமாள் கைக்கோளர்களில் திருமழ பாடி பல்லவரையன் எனபானைக் குறிக்கிறது.

அடுத்து வேளாளக் குடிகளின் தலைவராக வந்த வெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலி. இவருடைய தலைமையில் இன்னும் பல வேளாளர் குடும்பங்கள் நடு நாட்டிலிருந்து வந்து கொங்கில் குடியேறினர் இக்குடியேற்றத்துக்கு காரணம் எதுவாக இருக்கும் என்று கூறமுடிய வில்லை. ஆயினும் வெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலி என்ற பெயர் கம்பரை ஆதரித்த பெருமகனாரான வள்ளல் சடையப்ப முதலியாரை நினைவுபடுத்துகிறது. முதலி என்ற பெயர் சமுதாயத்தின் முதன்மைக் குடிமகன் என்பதை உணர்த்துவதாக முன்னர் கூறினேன். எனவே சடையப்ப முதலியார் வேளாளத் தலைவரேயாவர். வேளாளரிலும் ஆதியில் தொண்டை நாட்டு மக்கள் வழியில் வந்த கொங்கு வேளாளரே இப்பெருமான் என்று தெரிகிறது. வாலசுந்தரக் கவியின் கொங்கு மண்டலசதகம், அந்நூலைச் செய்வித்தவன் பற்றிக் கூறும்பொழுது "பொருட் சாத்தந்தைப் பண்ணைக் கோன் வெண்ணெய் நல்லூர் கொடுத்திடும்" எனவும், சாத்தந்தை கோத்திரன் பண்ணை குலேந்திரன் தமிழ்ச் சடையன்" என்று கூறுகிறது. இதே நூலின் 66ஆம் பாடல் "பண்ணை குலாதிபன் கம்பர் செய் ராமர் பனுவலதை பெண்ணை நல்லாறு உள்ளளவும் புகழும்" என்று கூறுகிறது. இவற்றால் கம்பரைக் கொண்டு இராம கதையைத் தமிழில் செய்வித்த சடையப்ப முதலி பண்ணை குலம், சாத்தந்தை கோத்திரத்தில் (கூட்டம்) வந்த கொங்கு வேளாளர் தலைவனே என்றும் இவன் தலைமையிலே மேலும் பல வேளாளர் குடும்பங்கள் கொங்கு நாட்டில் வந்து குடியேறின

என்றும் ஐயத்திற்கிடமின்றி தோன்றுகிறது அங்ஙனமெனில் கங்க அரசர்களின் ஆட்சியின் கீழ் நடு நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்தவர்களாகக் காட்டப்பட்ட சில வேளாளக் கூட்டத்தவர்கள் இராசராசக் கரிகாலன் காலத்திலும் சடையப்ப முதலியின் தலைமையில் வந்து கொங்கில் குடியேறினர் எனலாம்.

" சாத்தந்தை கோத்திரன் பண்ணைக் குலேந்திரன் " என்று சடையப்ப முதலியைக் கொங்கு மண்டலசதகம் வாழ்த்துவதிலிருந்து சாத்தந்தை கோத்திரத்தினர் அல்லது கூட்டத்தினர் பண்ணைக் குலத்தின் ஒரு பிரிவினர் என்று கூறப்படுகிறது. ஆனால் ஆதியூர் கோயிலில் காணப்படும் வீரபாண்டியனின் கல்வெட்டொன்று ஆதீஸ்வரர் கோயிலின் அகவாய், புறவாய் ஆகிய இருபகுதிகளையும் கட்டியவனாக குறுப்பு நாட்டு ஆதனூரில் வாழும் வெள்ளாளன் குண்டெலி களில் அந்தன் சாத்தாந்தன் என்பவனைக் குறிக்கிறது.[1] குண்டெலிகள் என்பது கொங்கு வேளாளர்களின் கூட்டப் பெயர்களுள் ஒன்றாகும். சாத்தாந்தன் என்ற பெயரே அப் பெயரிலுள்ள கூட்டத்தை நினைவுப்படுத்துகிறது. இதனால் குண்டெலிகள் கூட்டமும் சாத்தாந்தை கூட்டமும் ஒன்று என்பதா? அவ்வாறெனில் குண்டெலிகள் கூட்டத்தையும் பண்ணைக்குலத்தின் ஒரு பிரிவு என்று கூறமுடியுமா? குண்டெலிகள் கூட்டம் பற்றி வேறு கல்வெட்டுகளிலும் குறிப்பு காணப்படுகிறது.[2] இக்கூட்டம் பற்றி ஒதாளர் குறவஞ்சியிலும் குறிப்பு உள்ளது. இதில் பண்ண கூட்டமும் சாத்தாந்தை கூட்டமும் வேறு வேறாகக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் காளிங்கராயன் அணைகட்டிய காலிங்கராயக் கவுண்டர் சாத்தாந்தை கூட்டத்தவராகும். ஆனால் ஆதியூரில் காணப்படும் இன்னொரு கல்வெட்டு [3]குண்டெலிகள் கூட்டத்

1. A. R. E. 158 of 67-68.
2. A. R. E. *560, 610, 614, 615 of 1932.*
3. A. R. E. 152 of 67-68.

தவராக ஒரு காலிங்கராயனை குறிப்பிடுகின்றது. இதேபோல களவாளர் கூட்டத்தைச் சேர்த்த காலிங்கராயன் ஒருவனும் குறிக்கப்படுகிறான்[1] இவ்விருவரும் முறையே வீரபாண்டியன் காலத்திலும், ஹொய்சாள வீரவல்லாளன் காலத்திலும் வாழ்ந்தவர்கள்.

காலிங்கராயர் என்ற பெயர் ஒரு பட்டப்பெயரேயாகும். பாண்டிய அரசர்கள் தம் கீழ் அமைச்சர் முதலிய உயர்பதவிகளிலும், நாட்டுத்தலைவர்களாகவும் சிறப்புடன் விளங்குவோருக்கு மழவராயன், காலிங்கராயன் என்று பட்டம் கொடுத்துச் சிறப்பிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கி. பி. 1132ல் பட்டம் பெற்றவனும் கொங்கு மன்னன் குலோத்துங்கனின் உடன்பிறந்தாளை மணந்து கொண்டிருந்தவனுமான பாறவர்மன் ஸ்ரீ வல்லபனின் அமைச்சராகப் புகழுடன் விளங்கிய ஒருவனும் இக்காலிங்கராயன் பட்டம் ஏற்று இருந்தான்[2] சோழ அரசர்களும் இப்பட்டத்தை தமது படைத்தலைவர் முதலானோருக்கு வழங்கினர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எனவே கொங்கு நாட்டை யாண்ட சடாவர்மன் வீரபாண்டியன் தமது அரசமரபின்படி சாத்தாந்தை கூட்டத்தில் உதித்து தன் அமைச்சராகவும், பூந்துறை நாட்டின் தலைவராகவும் விளங்கிய ஒரு வேளாளர் தலைவருக்குக் காலிங்கராயன் என்று பட்டம் அளித்துச் சிறப்பித்திருந்தான். பாண்டியனின் அமைச்சராக உயர்ந்து விளங்கினமையால் இவர் வழி வந்தோரும் காலிங்கராயக் கவுண்டர் என்று தம்மைக் குறித்துக் கொண்டனர். இவ்வாறு காலிங்கராயன் என்று பட்டம் பெற்றவர்களுள் சாத்தாந்தை கூட்டத்தவர் மட்டுமின்றி களவாளர், குண்டெலிகள் முதலிய பிறகூட்டத்தவரும் இருந்தனர் என்றும் முடிவு செய்ய முடிகிறது.

---

1. A. R. E. 184 of 67-68.
2. S. I. I. Vol XIV

இதிலிருந்து குண்டெலிகள் கூட்டத்தைச் சாத்தாந்தைக் கூட்டத்துடன் இணைத்துக் குழப்பிக் கொள்ள அவசியமில்லாமல் போய்விடுகிறது. எனவே குண்டெலிகள் கூட்டத்தில் சாத்தாந்தன் என்றுபெயர் காணப்படுவதற்கு சாத்தாந்தைக் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணிற்கும் குண்டெலிகள் கூட்டத்தைச் சேர்ந்த ஆணுக்கும் பிறந்த பிள்ளை என்பதன் காரணமாகத் தாய்வழிப் பெயராக இருக்கலாம் என்று அமைதி கூறலாம். இனி சாத்தாந்தை கோத்திரம் பணிக்குலத்தின் ஒரு பிரிவே என்று கொங்கு மண்டலசதக விளக்கவுரையில் கூறப்பட்டிருப்பது[1] பண்ணைக்குலம் வேறு பண்ண கூட்டம் வேறு என்று நினைக்கவே இடந்தருகிறது. ஏனெனில் சாத்தாந்தைக் கூட்டத்தில் வந்த காலிங்கராயன் அணை கட்டிய காலிங்கராயக் கவுண்டர் பண்ண கூட்டத்துக் கவுண்டர் ஒருவரின் மகளைத் தன் மகனுக்கு மணம் முடிக்க விரும்பினார் என்று காலிங்கராயர் கைபீதிலிருந்து தெரியவருகிறது. ஒரே கூட்டத்தில் பெண்எடுத்துச் சம்பந்தம் செய்வது கவுண்டர்களிடையே வழக்கமில்லையாதலால் பண்ண கூட்டத்தின் ஒரு பிரிவே சாத்தாந்தை கூட்டமென்றால் ஒரே குலத்தில் பெண் எடுக்க காலிங்கராயக் கவுண்டர் முன்வந்திருப்பாரா? ஆகவே பண்ணைகுலம் வேறு. பண்ண கூட்டம் வேறு என்று தான் கூறவேண்டும். பண்ணைக்குலத்து வேளாளர்கள் நிலவளமிக்க தென் பெண்ணையாற்றின் கரைப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்ததால் பண்ணைக்குலத்தவர் எனப்பட்டிருக்கலாம். சங்ககாலப் பண்ணனுடன் தொடர்புடையதுபண்ண கூட்டம். ஒருக்கால் பண்ணக் கூட்டமும், சாத்தாந்தைக் கூட்டத்தைப் போல பண்ணைக்குலத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றாக இருக்கலாம். இச்சடையப்ப முதலியின் தலைமையில் எந்தெந்தக் கூட்டங்கள் வந்து கொங்கில் குடியேறியிருக்கும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் சாத்தாந்தைக் கூட்டத்தைச் சேர்ந்த மேலும் பல குடும்பங்கள் சடையப்ப முதலியுடன் திச்சயமாக வந்து குடியேறியிருக்கலாம்.

---

1. ராமசுந்தரக் கவியின் கொங்கு மண்டல சதகம் பக். 19

**கன்மாளர்கள் :**

அடுத்து ரதகாரர்கள் எனப்படும் கம்மாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறியது இக்கம்மாளர்களாகிய ரதகாரர்களில் பலர் அந்நாளிலே இரும்புத் தொழில் முதலிய உலோகத் தொழில் செய்பவராகவும், தேர் முதலானவை செய்யும் தச்சர்களாகவும், ஸ்தபதிகளாகவும் (சிற்பிகள்) விளங்கினர் என்பதை இம்மரபினர் பற்றி விரிவாகக் கூறும் திருவாரூர் கல்வெட்டு ஒன்றிலிருந்து தெரியவருகிறது [1] இராசராசக் கரிகாலனே கொங்கில் பல கோயில்களைக் கட்டியவன் என்று பேரூர் புராணமும், சோழன் பூர்வபட்டையமும் பல கல்வெட்டுச் செய்திகளும் உறுதிப்படுத்துவால் இதற்காக இத்துறையில் வல்ல ரதகாரர்களாகிய கன்மாளர்களை இந்த இராசராசக் கரிகாலனே சோழ நாட்டிலிருந்து அழைத்து வந்து கொங்கில் குடியேற்றினன் எனலாம்.

முதன் முதலாக இக்கன்மாளர்களைப் பற்றி நமக்கு அறிவிக்கும் கல்வெட்டு பாரியூர் கோயிலில் காணப்படும் கோனேரின்மை கொண்டான் என்பவனின் கல்வெட்டாகும். [2] இக்கல்வெட்டில் கம்மாளர்கள் தாங்கள் குடியேறிய பதினைந்தாவது ஆடிமாதம் முதல் தங்கள் நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுபேரிகை முதலியன கொட்டுவித்துக் கொள்ளவும். தங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாதரட்சைசேர்த்துக் கொள்ளவும் உரிமை கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதேபோன்ற கல்வெட்டுகள், பேரூர், கரூர், மொடக்கூர் போன்ற வேறு சில ஊர்களிலும் வேறுவேறு அரசர்களது காலத்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து கொங்கு நாட்டுச் சமுதாயத்திலும் வேறு வேறு நாடுகளில் இருந்து வேறு வேறு இனத்தவர்கள் குடியேற ஆரம்பித்து விட்டபடியால் இன்னின்ன குலத்தவர் இன்னின்ன பழக்கவழக்கங்களைத்தான் மேற்கொள்ளலாம் என்றெல்லாம் சமூகக்கட்டுப்பாடுகள் வந்துவிட்டன எனவும்

1. S. I. I. Vol XVII No. 603.
2. A. R. E. 186 of 1910.

கூறலாம். ஆனால் கம்மாள இனத்தவர் மட்டும் சோழநாட்டில் ஒரு சந்தர்ப்பத்தில் சில விசேஷ உரிமைகள் பெற்று அநுலோமர் அதாவது வலங்கை சாதிப்பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிவதால் [1] இராசராசக் கரிகாலன் மேற்கண்ட விசேஷ உரிமைகளை அவர்களுக்கு வழங்கினான் போலும். இக்கல்வெட்டில் திருபுவன வீரதேவன், பரகேசரி என்றெல்லாம் பெயர் காணப்படுவதால் இக்கோனரின்மை கொண்டான் மூன்றாம் குலோத்துங்க சோழனே என்று கொண்டு மூன்றாங்குலோத்துங்கனே நைககோளர் முதலானோரையும் கொங்கில் குடியேறச் செய்தான் என்று சிலர் கருத்துக் கொண்டனர்.

பரகேசரி என்ற பட்டம் இராசராசக் கரிகாலனும் சூடிக் கொண்டிருந்ததே. மேலும் இவன் காலத்தில் சோழ நாட்டை மூன்றாங்குலோத்துங்கன் ஆண்டு வந்தான். அவனைப் போலவே தானும் எல்லாவிதத்திலும் சிறப்பான பேரரசன் என்று கருதி கரிகாலனும் தன்னை திருபுவன வீரதேவன், கோனரின்மை கொண்டான் போன்ற குலோத்துங்கனது பட்டப்பெயர்கள் அனைத்தையும் தானும் சூடிக்கொண்டிருந்தான் எனவே கம்மாளர்களைப் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகளில் வீரபாண்டியனது ஒன்றைத்தவிர மற்றவை எல்லாம் இராசராசக் கரிகாலனுடையதே இக்கல்வெட்டுகளில் குறிக்கப்படும் "தங்களுக்கு பகினாஞ்சாவது ஆடி மாதம் முதல் என்ற வரி கம்மாளர்கள் கொங்கில் குடியேறிய 15 ஆம் ஆண்டு முதல் என்றே பொருள் கொள்ளத்தக்கது.

இவ்வாறு இந்த இராசராசக் கரிகாலன், பல தொழில் செய்வோரையும் கொங்கில் குடியேறச் செய்தமையால்தான் மேலே 196 ஆம் பக்கத்தில் கூறப்பட்ட அண்மையில் ராசிபுரத்தில் கண்டுபிடித்த இவனது 14 ஆம் ஆண்டுக்கல்வெட்டு இவனை "சகல குலம் வைத்த இராசராசத் தேவன்", அதாவது எல்லா குலமக்களையும் கொங்கில் குடியேற்றிய

1. உய்யக் கொண்டான் மலைக் கல்வெட்டு.

இராசராசன் என்று குறிக்கிறது. இக்கல்வெட்டிலும் வணிக மக்களில் சிலருக்கு வீரபட்டணம் என்ற பெயரில் இராசிபுரத்து வணிகர் சிலர் நகரமைத்துக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இராசிபுரமும் இதில் இராசபுரம் எனறே குறிக்கப்பட்டிருப்பதால் இவ்வூரும் இவன் பெயராலே இராசராசபுரம் என்று அமைக்கப்பட்டிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**வேட்கோவர்:**

வேட்கோவர்கள் என்பார் மண்பாண்டத் தொழில் செய்பவர் ஆவர். இவர்கள் சங்க நாள் முதலே தமிழகத்தின் பிறபகுதிகளில் குறிப்பாகச் சோழநாட்டில் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். பிற்காலக் கல்வெட்டுச் செய்திகளும் இதனை உறுதி செய்கின்றன. இராசராசனது பெரிய லெய்டன் பட்டயத்தில் ஊர்ச்சபை கரணத்தான (கர்ணம் எனப்படும் இக்கால கிராம அதிகாரி) பெயர் குறிப்பிடும் பகுதியில் சில வேட்கோவர்கள் பெயர் காணப்படுகின்றன. எனவே இவர்கள் அக்காலத்தே அதிகாரிகளாகவும சிறப்புற்று விளங்கினர் என்று கூறலாம். இந்தவேட்கோவர்களும் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்டனர்.

இக்குடியேற்றத்தைப் பற்றி நமக்கு அக்காலத்திய விரிவான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் கொங்கு மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் சிலவற்றில் வேட்கோவர்கள் பெயர் காணப்படுவதால் அந்நாளிலேயே இவர்கள் கொங்கில் குடியேற்றப்பட்டார்கள் என்று கூறலாம். அவ்வாறு ஏற்பட்ட குடியேற்றங்களின் விபரங்களைப் பிற்காலத்ததாக தற்போது கிடைத்துள்ள கையேட்டுப் பிரதி ஒன்று நமக்கு அறிவிக்கிறது. மதுக்கரைப் பட்டையம் என்ற பெயரில் உள்ள இக்கையேட்டுப் பிரதி சோழன் பூர்வபட்டயத்தைப் போல ஒரு செப்புப் பட்டயத்தின் பிரதி என்று கூறப்படுகிறது. செப்புப்பட்டையம் கிடைக்கவில்லை. இந்நூலின் துவக்கத்தில் கொங்கு 24 நாடுகளுக்குமான தலைமை கவுண்டர்கள் பெயர் கூறப்படுகிறது. அவர்கள்:

தென்கரைநாடு வேணுவுடையாக் கவுண்டர், காங்கேய நாடு காங்கேய மன்ருடியார், பல்லவராயக் கவுண்டர், சக்கரக் கவுண்டர், பூந்துறைநாடு வாரணவாசிக் கவுண்டர், அரையநாடு தீத்தாக் கவுண்டர், மணநாடு காளியப்பக் கவுண்டர், வேங்கலநாடு காளத்தியப்பக் கவுண்டர் (வேட்டுவர் போலும், காளத்தி மலைப்பகுதிகளிலிருந்து குடியேறினமை குறித்து இப்பெயர் கொடுக்கப்பட்டது) நீலியப்பக் கவுண்டர் தட்டையநாடு ராசியண்ணக் கவுண்டர், கிழங்கு நாடு செம்பாக் கவுண்டர், தலையநாடு பெரியக் கவுண்டர், வாலய கவுண்டர், அண்டநாடு பெரியதம்பிக் கவுண்டர், வையாபுரிநாடு மங்கலக் கவுண்டர், பழனிக் கவுண்டர், தல்லூாக்க நாடு மலையாண்டிக் கவுண்டர், ஆனைமலைநாடு காலிங்கராயக் கவுண்டர், கோப்பண்ண கவுண்டர் (வேட்டுவர்) பொன்குளிக்க நாடு தெய்வசிகாமணிக் கவுண்டர், தரையனூர் நாடு நஞ்சய்ய கவுண்டர், வாறக்க நாடு பொன்னப்பக் கவுண்டர், ஓடுவங்கநாடு வேலு மணிக் கவுண்டர், காஞ்சிக் கோவில் நாடு காசிக் கவுண்டர், பருத்திப்பள்ளி நாடு பழனிமலைக் கவுண்டர், குறுப்பநாடு ராசியண்ணக் கவுண்டர், பூவாணிய நாடு குமாரவேலுக் கவுண்டர் (பூவாணியர் நாடு என்பதன் மறுபெயர் ஆதலால் இவர் வேட்டுவர் போலும்) ராசிபுர நாடு நல்லதம்பிக் கவுண்டர், வடகரை நாடு சின்னத்தம்பிக் கவுண்டர், வாழவந்தி நாடு செம்பாக் கவுண்டர் என்றிவ்வாருகப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்விருபத்தி நாலு நாடுகளில் குடியேறிய கவுண்டர்களுக்கும் தேவையான பிறதொழில்கள் செய்வோரையும் அழைத்து வந்து கொங்கில் குடியேற்றி அவர்களுக்குப் பிழைப்பும் கொடுத்ததாகவும், சீவனத்துக்கு வேண்டிய அனைத்தும் செய்க்ரேமென்று உறுதியளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கும்போது 24 நாட்டுக் கவுண்டர்களும் நாக்கு நவ பாண்டம், அதாவது புதுமையான மண்கலங்கள் வேணுடுமென்று யோசித்து இக்கவுண்டர்கள் நாட்டுக்கு

ஒருவர் வீதம் பாண்டிய நாடு சென்று வேட்கோவர்களை அழைத்தார்களாம்[1] அதற்கு அவர்கள் நாங்கள் எங்கள் சுற்றத்தார்களையும், காணி பூமிகளையும் விட்டுவிட்டு அங்கு வந்து குடியேறி எவ்வாறு வாழ்வது என்று கேட்கக் கவுண்டர்கள் எங்களுக்கு உண்டானபடி உங்களுக்கும் தவறுமல் நாடும், காணிபூமியும் கொடுத்துக் காணியாட்சிப் பட்டையமும் எழுதிக் கொடுக்கிறோம் என்று சொல்லி மதுக்கரை[2] செல்லாண்டியம்மன் கோயிலில்முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொடுத்த பிறகே சம்மதித்துக் குடியேற்றினார்கள் என்றும் அவர்களுக்குக் கொங்கத் திருநீலகண்டர்கள் என்று பெயரும் கொடுக்கப்பட்டது[3] என்றும் பட்டையம் கூறுகிறது 63 நாயன்மார்களில் ஒருவாரகப் பேசப்படும் திருநீலகண்ட நாயனர் வேட்கோவரேயாவர் அதனால்தான் சுந்தரரும் தமது திருத்தொண்டத் தொகையில் "திருநீலகண்டத்துக் குயவனுருக்குமடியேன்" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு குடியேறிய வேட்கோவர்களுக்கு 24 நாட்டுக் கவுண்டர்களும் சொன்னபடி பூமி முதலியவை கொடுத்த தோடு தங்கள் கல்யாணச் சீர்களில் பாதிஅவர்களும் செய்து கொள்ளவும், வேளாளர்கள் தங்கள் சீர்களில் முக்கியமான அறுவகைச் சீர்களையும் செய்து கொள்ளவும் ஒப்புதல்

---

1. செவிவழிச் செய்தி சோழ நாட்டிலிருந்து அழைத்து வந்த தாக இருக்கிறது.

2. இவ்வூர் குளித்தலைக்கன்னமையில் உள்ள மதிற்கரையே ஆதலால் சோழநாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் என்பதே பொருத்துவதாகும்.

3. மதுக்கரைப்பட்டயம் பக். 4

அளித்தார்கள்.[1] வேட்டுவர் தமக்கு எல்லா விதத்திலும் சமம் என்ற உரிமையை வழங்கி இறந்து போனால் கொள்ளி கோடி இருதிறத்தாருக்கும் ஒன்றே எனவும் உணவில் சமத்துவ உரிமையையும் வழங்கினார்கள். இவைபோல வேறு பல உரிமைகள் வழங்கப்பட்டதையும், இன்னின்ன மரபினரின் கல்யாணங்களுக்கும் இன்னின்ன சீர்வகைப் பாண்டங்கள் என்று வரையறுக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கு ஏற்ப கூலிவகை விபரங்களும் இவ்வேட்டில் காணப்படுகிறது இவ்வாறு கூறும்பொழுது அநேகமாக கொங்கில் குடியேறிவிட்ட எல்லாவகைச் சாதிப்பிரிவுகள் பற்றியும் சொல்லப்படுகிறது.

அன்றியும் 24 நாட்டுக் கவுண்டர்களைப் பற்றியும் கூறும் பொழுது அவற்றில் வேட்டுவக் கவுண்டர்களும் காணப்படுவதால் இரு இனத்தாரும் கொங்கில் தமக்குப் பாண்டங்கள் செய்து கொடுக்க வேட்கோவர்களை அழைத்து வர விரும்பினர் என்று தெரிகிறது. இக்குடியேற்றத்தின் அடிப்படையில் இன்னொரு செய்தியும் நமது கவனத்தைக் கவருகிறது. இன்றைய கோவை மாநகரின் பழைய பெயர் கோவன் புதூர் என்பது. இதனைக் கொங்கு மன்னர்களின் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன.

கோவன் என்ற இருளர்தலைவன் ஒருவன் அவ்வூரை ஆண்டதால் கோவன் புதூர் என்று பெயர் பெற்றது. பிறகு இதுவே கோயம்புத்தூர் ஆயிற்று என்று பொதுவாக ஒரு கருத்து சொல்லப்படுகிறது வேட்கோவர் குடியேற்றம் பற்றி மதுக்கரைப்பட்டையம் கூறுவதைக் கொண்டு இக்

---

1. 1) குப்பாரி கொட்டி வருதல்,
   2) மொட்டி அணிதல்,
   3) நாட்டுக் கல்லூருக்குப் பெண் அழைத்துப் போய்வருதல்,
   4) மாப்பிள்ளை குதிரை ஏறுதல்,
   5) பெருந்தாலி கட்டுதல்,
   6) காவினங்குதல்'

குடியேற்ற நிகழ்ச்சி கொங்கு மன்னர்கள் காலத்தே நடை பெற்றதின் பிற்கால வடிவம் என்று வைத்துக் கொண்டால் இதன் அடிப்படையில் வேட்கோவர்களை குடியேற்றி அமைத்த ஒரு புது ஊருக்குக் கோவன் புதூர் அதாவது வேட்கோவர்கள் குடியேறி வாழ்ந்த புது ஊர் என்ற முறையில் பெயர் கொடுக்கப்பட்டது. இப்பெயரே பின்னர் கோயம்புத்தூர் ஆயிற்று என்றும் கூறமுடியும். எவ்வாறாயினும் வேட்கோவர் குடியேற்றம் பிறதொழில் செய்வோர் குடியேற்றப்பட்ட காலத்திலே அதாவது இராசராசக் கரிகாலன் காலத்தே நிகழ்ந்திருக்கக்கூடும் என்று முடிவு செய்யலாம். இதனை உறுதிப்படுத்துவதாக இராசராசக் கரிகாலனது காலத்திற்குட்பட்ட கொங்கு மன்னர்களின் கல்வெட்டுகளிலே வேட்கோவர் பற்றிய குறிப்புகள் காணப்படுவது உள்ளது.

இவ்விதம் தமக்குவேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொண்டு கொங்கு நாட்டில் நிலையாகக் குடியேறி தனி அரச மரபினரின் ஆட்சியின் கீழ் இனிதே வாழத்தலைப்பட்ட வேளாளர்-வேட்டுவர் சமுதாயத்தில் பொதுவாகச்சிறப்புப் பெற்று விளங்கிய பல கூட்டங்களைச் சேர்ந்த கவுண்டர் பெருமக்களையும் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்பு தமது பழைமைச் சிறப்பு, தலைமைச் சிறப்பு, வீரச்சிறப்பு ஆகியவற்றின் காரணமாகக் கொங்கின் பல பகுதிகளுக்கும் நாட்டுத் தலைமைப் பூண்டு வாழ்ந்த கவுண்டர் குடியினரைப் பற்றி இனி காண்போம்.

**வேளாளர் தலைவர்கள் :**

கொங்கு நாட்டில் தலைமை உரிமை பூண்டு சிறப்புடன் வாழ்ந்தவர்களாகத் தெரியவரும் வேளாளர் தலைவர்களுள் தமக்கென விரிவான வரலாற்றுச் செய்திகளைப் பெற்றுத் திகழ்பவர்கள் கீழ்க்கண்டவர்களாவர்.

1) பொங்கலூர் நாட்டுப்
   பெரிய பெருமாள் மரபினர்—ஆதாளர் கூட்டம்

2) நன்னவுடையார் — காடை கூட்டம்
3) வேணவுடையார் — பெரிய குலம்
4) உலகுடையார் — சாத்தாந்தை கூட்டம்
5) சக்கரை மன்றாடியார் — பயிரன் கூட்டம்
6) காடையூர்க் காங்கேய
மன்றாடியார்கள் — பொருளந்தை கூட்டம்
7) பல்லவராயக் கவுண்டர்கள் — செங்கண்ணர் கூட்டம்
8) மோரூர் காங்கேயர்கள் — கண்ண கூட்டம்
9) சமத்தூர் வானவரையர்கள் — பவழ கூட்டம்

**பெரிய பெருமான் மரபினர் :**

ஓதாளர் கூட்டத்து வேளாளர் தலைவர்களான இம் மரபினரின் வரலாறு கொங்கு நாட்டையாண்ட கொங்கு மன்னர்களின் வரலாற்ருேடு தொடர்பு படுத்திக் காட்டக் கூடியதாய் சில புதிய முடிவுகளைத் தோற்றுவிக்கத் துணை செய்வதாக உள்ளது இத்தலைவர்களின் முதல்வன் கொலு சேனை மன்றாடி என்று மன்றாடிப் பட்டம் பெற்றிருந்ததாகக் கூறப்பட்டாலும் வரலாற்றுச் செய்திகளோடு தொடர்பு படுத்திக் காணும்பொழுது மன்றாடியார்கள் எனப்படும் நாட்டுத் தலைமைப் பதவியைவிட மேலான நிலையில் கொங்கு மன்னர்களோடு சம்பந்தப்படுத்தகூடிய அளவிற்கு உயர்ந்து விளங்கியிருத்தல் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது இத்தலைவர்களைப் பற்றி நமக்கு விளக்கமாகத் தெரிவிப்பது ஓவாளர் குறவஞ்சியென்னும் அலகுமலைக் குறவஞ்சியாகும் இந்நூல் குறிப்புகள் முன் அத்தியாயங்களில் சமயம் நேர்ந்த போதெல்லாம் குறிக்கப்பட்டன.

**இந்நூலின் காலம் :**

இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி. பி. 1753-54 என்று, இதன் ஆசிரியர் நூலின் பாயிரப் பாடலில் நூல் அரங்கேறிய காலம் கலியுகம் 4854 குறிப்பிலிருந்து தெரிகிறது. எனவே

இப்பாட்டுடைத் தலைவனை பெரிய பெருமாள் வாழ்ந்த காலம் இந்த 1753-54 உள்ளிட்ட 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியே எனலாம். இப்பெரிய பெருமாளுக்கு 21 தலை முறை முந்தியவனும் இதே பெரிய பெருமாள் என்ற பெயரை உடையவனுமான முதாளர் குல முதல்வன் சகம் 954ல் அதாவது கி பி 1032ல் சோழன் குலோத்துங்கன் என்பவனின் மகனான குருத்தணி சோழன் என்பவனால் மற்றைய சேர, பாண்டிய அரசர்கள் முன்னிலையிலும், கொங்கு 24 நாட்டுத் தலைவர்களின் முன்னிலையிலும் கொங்கு நாட்டுப் பிரிவுகளுள் ஒன்றான பொங்கலூர் நாட்டின் தலைவனாக முடிசூட்டப்பட்டான் என்று இப்பிரபந்தம் கூறுகிறது. இந்தக்குறிப்பில் கொங்கு 24 நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் என்பதிலிருந்தே இப்பெரிய பெருமாள் 24 நாட்டுத் தலைவர்களிலும் வேறானவன் என்று தெரிகிறது. இவன் பொங்கலூர் நாட்டுத் தலைவனாகப் பொறுப்பேற்றதற்குக் காரணமான கதைக் குறிப்பில் நாம் முன்பு கண்ட சிஷபகிரிச் சோழனான கண்டராதித்தன் தன் மகளை பெருமாள் மரபுச் சேர அரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்து அவனுக்குச் சீதனமாக 48000 வேளாளர் குடும்பங்களைக் கொங்கில் குடியேற்றிய செய்தி குருத்தணி சோழனின்மேல் ஏற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சேர அரசன் கோனவளநாடு எனப்படும் கோவை மாவட்டத்தில் பல்லடம் தாராபுரம், கோவைவட்டம் சூழ்ந்த நிலப்பரப்பை ஆண்டவனாக் குறிக்கப்படுவது நம்மைச்சிந்திக்க வைக்கிறது.

இக்கோன வளநாட்டை ஆளும் உரிமையை முதலில் பெற்றதால் தான் கொங்கு மன்னர்கள் தம்மைக் கோனாட்டார்கள் என அழைத்துக் கொண்டதாக முன்னர் கூறப்பட்டது, இக்கோன வளநாட்டைச் சேர்ந்த நாடாகத்தான் பெரியபெருமாளுக்கு ஆட்சியுரிமை கொடுக்கப்பட்ட நாடான பொங்கலூர்நாடு குறிக்கப்படுகிறது. அன்றியும் கோனவள நாட்டின் தலைநகரமாகக் குறிக்கப்படும் தாராபுரம் கொங்கு வஞ்சி என்ற பெயரைப் பெற்றிருந்தது என்பதை பல கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். இப்பிரபந்தத்தி

லும் வஞ்சி, வஞ்சிபுரி என்ற இப்பெயர் தாராபுரத்திற்குப் பல இடங்களில் குறிக்கப்படுகிறது. இந்த வஞ்சி என்ற பெயர் சேரர்களின் தலைநகரமான கருரின் மற்றொரு பெயராதலால் அதனை தாராபுரத்திற்கு இட்டு வழங்கியிருப்பதும் சேர மரபினரோடு கொங்கு தாராபுரத்திற்கு இருந்த சம்பந்தத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. இதனடிப்படையிலும் நாம் தாராபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட கொங்கு மன்னர்களை சேரமரபினரின் ஒரு கிளையினராகக் கொள்ள இடமுள்ளது.

அடுத்து பெரிய பெருமாள் பொங்கலூர் நாட்டின் தலைவனுக முடிசூட்டப்பட்ட ஆண்டு கி. பி. 1032 என்பது கொங்கு மன்னனுன கலிமூர்க்க விக்கிரம சோழனின் காலமாக விளங்குவது நம் கவனத்தைக் கவருகிறது. ஆனால் இக்காலத்தே சோழ நாட்டை குருத்தனி சோழன் என்ற பெயரில் எந்தச் சோழ அரசனும் ஆளவில்லை இந்நாளிலே சோழநாட்டை ஆண்ட சோழமன்னன் முதலாம் இராசேந்திர சோழனுவன். இவன் விக்கிரமசோழனின் மகளை மணந்திருந்தான் எனவும் விக்கிரம சோழனின் அரசி ஒருத்தி இவனுடைய சகோதரி எனவும் வரலாற்றுப் பகுதியில் குறிக்கப்பட்டது. ஆனல் கேரள நாட்டில் ஆட்சி செய்து வந்த சோழனுடன் இராசேந்திரன் முதலானேர் எதாவது உறவு வைத்திருந்தனரா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. இப்பிரபந்தத்திலும் சேர அரசனை கேரள நாட்டை ஆண்டவனுகக் குறிப்பிடவில்லை. தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கோனவள நாட்டை ஆண்டவனுகவே குறித்துள்ளார். உண்மையில் இக்காலத்தே கோனவளநாட்டை ஆண்டு வந்தவர்கள் தோனுட்டார்களான கொங்கு மன்னர்களே. இவர்களோ சோழன் என்ற தம் பெயரோடு இணைப்புப் பெயர்கொண்டு இருந்தனர். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது இப்பிரபந்தத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளுக்கு வரலாற்று அடிப்படை ஓரளவிற்கு இருக்கும் போதிலும், குடியேற்ற நிகழ்ச்சிகள் நடந்து ஏறக்குறையஎண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்பு இயற்றப்பட்ட நூலாதலால், செவி

வழிச் செய்தியாக வழங்கப்படும் போது அந்தனையாண்டு இடைவெளியில் வேறு வேறு விதமாக மாறுபட்டு போய் இருக்கக்கூடிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஆசிரியர் காலத்தில் வழங்கப்பட்ட விதத்தில் அதனை அவர் தமது நூலில் கையாண்டிருத்தல்கூடும் எனக்கருதலாம். இதன் விளைவே குருத்தனி சோழன் முதலிய வரலாற்றில் காணப்படாத பெயர்கள், குடியேற்ற நிகழ்ச்சி ஒரு நூற்றாண்டு தள்ளிக் குறிக்கப்படுவது போன்றவைகள். ஆயினும் சோழன் மகளைச் சேரன் மணந்து கொண்ட காலத்திலே 48000 வேளாளர் குடும்பங்கள் கொங்கில் குடியேறினர் என்ற செய்தியளவில் இந்நூலில் சரியான குறிப்பையே கொடுக்கிறது.

அடுத்து கடவுள் வாழ்த்துப் பகுதி 5 ஆவது பாடலான மனோன்மணியம்மை துதியில் ஓதாளர் குலத்துப் பெரிய பெருமானைக் குறிப்பிடுகையில்

> கோன வளநாடன். வஞ்சிபுரிய தீபன்
> கொடுவாய் ஓதாள குலத் திலகனுன
> தான கர்ண நல்லபெருமான் தன் சேயன்
> சம்பனனும் பெரிய பெருமாள்......

என்று அக்குல முன்னோனை கோனவளநாட்டை ஆண்ட கோனுட்டான், வஞ்சிபுரியாகிய தாராபுரத்தை விளங்கச் செய்பவன் என்றேகூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இவற்றிலிருந்து பெரிய பெருமான் என்று ஆசிரியர் குறிப்பிடும் கொடுவாய் ஓதாள குலத்து வேளாளர் தலைவன் கோனுட்டானுகிய கொங்கு மன்னனுகவே இருத்தல் கூடுமோ என்று தோன்றுகிறது. அறிஞர்கள் இதனை எண்ணிப்பார்ப்பார்களாக. கொங்கு மன்னர்களுக்கு பெருமாள் என்ற இணைப்புப் பெயர் உண்டு. பெருமான் வீரசோழ தேவர், கலிமூர்க்க விக்கிரம சோழப் பெருமான் ராசாதிராச உத்தமசோழன், பெருமாள் கரிகால் சோழ தேவர், கலிகடிந்த பெருமானாகிய வீராஜேந்திர தேவர் போன்ற கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து உணரலாகும் பெயர்கள் இதனை உறுதி செய்கின்றன.

இதே பெருமாள் என்ற பெயரையே பொங்கலூர் நாட்டுத் தலைவனான ஓதாளன் பெரிய பெருமாள் முதற் கொண்டு அம்மரபில் வந்த பலரும் தரித்திருக்கின்றனர் இதனடிப் படையிலும் பொங்கலூர் நாட்டுத் தலைவர்களைக் கொங்கு மன்னர்களோடு ஒப்பிட்டுக்காட்ட வாய்ப்பு உள்ளது. இக் கொங்கு மன்னர்களது தனியாட்சி முடிந்து ஏறக்குறைய 400ஆண்டுகளுக்குப் பிறகு இந்நூல் இயற்றப்பட்டதாதலால் அரசச் சிறப்பு இழந்து மைசூர் அரசர்களின் ஆதிக்கத்தின் கீழ் ஊர்த்தலைவர் அளவில் வாழ்ந்து வந்த இப்பாட்டுடைத் தலைவனது முன்னோன் நாடாளும் அரசனாகவே விளங்கியவன் என்பதை மறந்து சேர அரசனும், சோழ அரசனும் நாட்டுத் தலைவன் ஆக்கப்பட்ட பொங்கலூர் நாட்டுக் குறு நில மன்னனாகக் காட்டியிருக்கலாம். எவ்வாறாயினும் ஐயத் திற்குரிய இம்முடிவு உறுதியாக ஏற்றுக் கொள்ளும் பட்சத் தில் கொங்கு மன்னர்கள் கொங்கில் குடியேறிய வேளாளர் கள் மரபினரே என்றாகும். தஞ்சை சோழர்களும் வேளாளர் களே என்று சில அறிஞர் தம் முடிவின்படியும் இவ்வாறு சொல்வது சாத்யமாகும்.

இதற்கு மாறாக இன்னொரு முடிவும் இங்கு கொள்ளத் தக்கதாக உள்ளது. கொங்கு மன்னர்கள் தமக்குக் கீழ் நாட்டுத் தலைமை பூண்டிருந்தவர்களுக்கும், படைத்தலைவர் முதலிய பெரும் பதவிகளில் இருந்தோருக்கும் தமது மரபுப் பெயராக விளங்கிய பெருமாள் என்ற பட்டத்தை வழங்கி யிருந்தவர்கள் (உ. ம்) பெருமாள் கைக்கோளன், பெரு மாள குலோத்துங்க சோழ அனுத்திரப் பல்லவராயர்-எனவே இவைபோல தமது ஆதிக்கத்தின்கீழ் பொங்கலூர் நாட்டுத் தலைவனாக ஆக்கப்பட்ட ஓதாளர் குலத்து முன்னோனுக்கும் பெருமாள் என்ற பட்டத்தைக் கொடுத்து கௌரவித்து இருக்கலாம் ஆக இவ்விரண்டு முடிவினுள் எது ஒன்றை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் கொங்கு மன்னர்கள் தம்மைச் சேரனுட்டார் என்று குறித்துக் கொள்ளக் காரணம் அவர்கள் தாராபுரத்தை தலைநகரமாகக் கொண்டு துவக்கத் தில் ஆளத் தொடங்கிய கொங்கின் ஒரு பகுதி நாட்டிற்குக்

சோழவளநாடு என்று பெயர் விளங்கியமையே என்பதும் பெருமாள் என்ற இணைப்புப் பெயர் பெற்று இருந்ததால் அப்பெயர் சேர மரபினருடைய பெயராதலாலும் சோழ வள நாட்டை சேர அரசன் ஆண்டு வந்ததாக இப்பிரபந்தம் குறிப்பதாலும், கொங்கு மன்னர்களை சேர மரபில் சோழ இளவரசிக்குத் தோன்றிய ஒரு சேர அரசனின் வழிவந்தவர் களே என்றுகூற வாய்ப்பிருக்கிறது. கலிமூர்க்கன் என்பது சேர அரசர்களும் தரித்திருந்த ஒரு பட்டப்பெயர் இதன் பொருள் கலியின் தீமையைப் போக்கிய என்பதே. இதனை கலிகடிந்த பெருமாள் என்று கொங்கு மன்னன் வீரராஜேந் திரன் பட்டம் வைத்துக் கொண்டிருந்ததாக அவனுடைய ஒரு கல்வெட்டு உணர்த்துவதும் முன்னர் கூறப்பட்டது.

இனி மேற்குறித்த ஒப்புமைச் செய்திகளோடு நாம் கொடுவாய் ஓதாளர் தலைவர்களைப் பற்றி காண்போம். பிறவேளாளர் தலைவர்களைக் குறிப்பிடுவதுபோல ஓதாளர் கூட்டத்துத் தலைவன் எவரையும் பற்றிய குறிப்புகள் கொங்கு மன்னர்களது கல்வெட்டுகளில் காணப்படாதது வியப்பாகவே உள்ளது. ஓதாளர் குறவஞ்சி குறிப்பிடும் அளவிற்குப் பொங்கலூர் நாட்டு ஓதாளர் தலைவன் சேர பாண்டியர்களாலும், 24 நாட்டுக் கவுண்டர்களாலும் போற்று தற்குரியவனாக விளங்கி வந்தான் எனில் ஏன் அத்தலைவர் களைப்பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமல் போயின? அவர்களே கொங்கு மன்னர்களாக விளங்கியிருந்தாலே மட்டுமின்றி இவ்வாறு குறிப்பிடாமல் போவதற்குரிய காரணம் வேறு எதுவும் இருக்க முடியாது.

**பெரிய பெருமாள் தலைவனின் வரலாறு :**

கொங்கு நாட்டில் 48000 வேளாளர் குடும்பங்களும் குடியேறிக்காணி பெற்றதைப் பொறுக்காமல் அங்குவாழ்ந்த பூர்வீக மக்களான வேட்டுவர் முதலியோர் எதிர்ப்புத் தெரி வித்து வேளாளர்களோடு போருக்குத் தயாரானார்களாம் இங்கு பூர்வீக மக்களுள் வேட்டுவர்களைச் சேர்த்திருப்பது

பொருந்தாது என்றே தோன்றுகிறது. ஏனெனில் வேட்டுவர்களில் பெரும்பாலாரும் கொங்கில் குடியேறியவர்களாக இருந்தலே. அன்றியும் வேளாளர் குடியேற்றமும் அப்பொழுதுதான் புதிதாக ஏற்பட்டதல்ல. சங்ககாலம் முதற்கொண்டு சோண்கான நாட்டிலிருந்து குடியேறி கொங்கர்கள் என்ற தம்பெயராலேயே அந்நாடு கொங்கு நாடு என்று பெயர்பெறுவதற்கும் காரணமாகஆனவர்கள் வேளாளர்கள், இன்னும் இடைக்காலத்திலும் அவ்வப்பொழுது பல வேளாளக் குடும்பங்கள் கூட்டங்கூட்டமாகக் குடியேறி கொங்கில் நிலைபெற்றிருந்ததையும் பார்த்தோம்

ஒருவேளை இக்காலத்தே பெரிய அளவில் குடியேற்றம் நிகழ்ந்ததால் தாங்கள் பெரும்பான்மைத் தன்மை போய் விடக்கூடும் என்பதால் வேட்டுவர்கள் பழங்குடி மக்கள் சிலருடன் சேர்ந்து எதிர்த்திருக்கலாம் என்றுகொண்டாலும், குடியேற்றம் நிகழ்ந்த செய்தியையே காலத்தால் பிற்பட்டுக் கூறுவதாலும், அந்நாளிலே கொங்கு மக்கள் அனைவரும் தனி நாட்டவராக தனியரசின் கீழ்வாழ விரும்பியதாலும் இப்போர் செய்தி பாட்டுடைத் தலைவனின் முன்னோர் பெருமையைச் சிறப்பிப்பதற்காகக் கூறப்பட்டது என்று சொல்லலாம். மேலும் இந்நூலாசிரியர் காலத்தில் பேரரசின் நாளவாயகள் தத்தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள சமுதாய மரபினடிப்படையில் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைபிடித்து வேளாளர்-வேட்டுவர் பகைமைஉணர்வு அதிகரித்து இருந்ததாலும் தமக்காகச் சூழ்நிலையின் அடிப்படையிலே அவர் வேளாளர்—வேட்டுவர் போர்நிகழ்ச்சியைக் கூறியிருக்கலாம். இது எவ்வாறுயினும் சோழ மன்னன் பெரிய பெருமாளுக்குப் பொங்கலூர் நாட்டு உரிமையைக் கொடுத்ததுமின்றி கோனவனநாடு 96 வளம்பதிகளுக்கும் அதாவது 96 ஊர்ப்பிரிவுகளைக் கொண்டது. கோனவனநாடு என்பது[1] தொண்ணூற்

---

1. தென்கரை நாட்டு ஊர்கள் 13, பொங்கலூர் நாடு 7427 தென் பொங்கலூர் நாடு 6, ஆறைநாடு 35, வாரக்கநாடு 16ஆக—96ஊர்களை உள்ளிட்டதே கோனவன நாடு என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

ளுறு கீர்த்தியுடன் தலைவனாக இருந்து ஆட்சிபுரிக என்று வாழ்த்தி அருளினதாக இப்பிரபந்தம் கூறுகிறது. இச்செய்தியும் ஓதாளர் கூட்டத்தவர்களை கொங்கு மன்னர்களது குடியினரோடு இணைத்துக்காட்டத் துணை செய்கிறது.

**துணைத்தலைவர்கள் :**

இவ்வாறு பெரிய பெருமான் தலைமை உரிமை பெற்ற போது பெரிய பெருமானின் மைத்துனர்களாகிய பொன்ன கூட்டத்தலைவர், குழையர் கூட்டத்தலைவர், சாத்தாந்தை கூட்டத்தலைவர் ஆகியோருக்கும் முறையே வாலை மன்றுடியார், தேவ மன்றுடியார், உலகுடை மன்றுடியார் என்ற உயரிய பட்டங்களைக் கொடுத்து கோனவள நாட்டின் வேறு பகுதிகளுக்கு அவர்கள் சிற்றரசர்களாக்கி வைக்கப்பட்டார்களாம். இப்படித் தம் துணைதலைவர்களோடு நாட்டு உரிமை பெற்ற பெரிய பெருமானுக்கு தாயாண்ட பூபன் என்னும் ஒரு மகன் இருந்ததாகவும் அவனே ஆட்சியை ஏற்று நடத்தினான் என்வும் அவர்களது குலத்தவர்கள் அப்படியே தொடர்ந்து கோனவள நாட்டை ஆட்சி செய்து வந்தார்கள் என்றும் இந்நூல் கூறுகிறது.

**பாட்டுடைத்தலைவன் :**

ஓதாளர் குறவஞ்சி பாட்டுடைத் தலைவனான 21 ஆவது தலைமுறை பெருமான் கொற்றவேல் சக்கரை மன்றுடியாரின் மகளை மணந்திருந்தானும். இவனது இரு தம்பியர்களுள் ஒருவன் காடையூர் மன்றுடியாரின் மகளையும், மற்றவன் உகாயனூர்த்தலைவனும் சாந்தாந்தை கூட்டத்தைச் சேர்ந்தவனுமான மல்லையபூபனது மகளையும் மணந்திருந்தான். இவ்விருவருக்கும் முறையே குண்டடப் பகுதித் தலைமையும், பெருந்தொழவு நாட்டுத் தலைமையும் கொடுத்து சிறப்புடன் ஆண்டு வரச்செய்தான். இப்பெரிய பெருமானுக்குப் புதல்வர் நால்வர். இந்நால்வருள் மூத்தவனுக்கு குழையர் குலத்து அவிநாசி வேளிர் மகளையும், இரண்டாமவனுக்கு காரையூர்

நல்லசேனுதிபதிச் சக்கரையாரின் புதல்வியையும், மூன்ருவது மகனுக்கு உகாயனூர்ச் சாத்தாந்தை கூட்டத்து மல்லையன் மகளையும், நான்காமவனுக்கு பொங்கதூர் பொன்னர் கூட்டத்து முத்துடையப்பன் மகளையும் மணம் செய்வித்து நால்வருக்கும் முறையே அவிநாசிப் பாளையம், கண்டியன் கோவில், நிழலி, காட்டூர் ஆகிய நான்கு ஊர்களின் ஆட்சியுரிமையும் கொடுத்து வாழச் செய்ததாக இக்குறவஞ்சி கூறுகிறது. இம்மரபினர்கள் இன்றும் கொடுவாயோதானர், குண்டடம் ஓதாளர் பெருந்தொழவு ஓதாளர், என்று புகழுடன் வாழ்ந்து வருகின்றனர். அவிநாசிப் பாளையம் முதலிய நான்கு ஊர்களிலும் வாழும் ஓதாள கூட்டத்தவரும் தம்மைக் கொடுவாய் ஓதாளர் என்றே அழைத்துக் கொள்கின்றனர்.

**நன்னுவுடையார் :**

நன்னுவுடையார் என்று அழைக்கப்படும் இக்கவுண்டர் தலைவர்கள் காடை குலத்தைச் சேர்ந்தவர்கள். இக்காடை குலத்தின் பழமைபற்றி 134 ஆம் பக்கத்தில் கூறப்பட்டது. இக்காடைகுலம் பூந்துறைக்காடை, கீரனூர்காடை, வல்லி மிறைச்சல் காடை, பில்லூர்க்காடை என்று நான்கு பிரிவினை யுடையது. பூந்துறை காடைகுலம் பூந்துறை நாட்டின் இரு பிரிவுகளின் அடிப்படையில் மேலைச் சாகாடை, கீழைச் சாகாடை, என்று இரண்டு பிரிவாக உள்ளது. இக்காடை குலத்து உதித்து காடவ கம்பவர்மன் கொங்கு நாட்டைத் தன் ஆதிக்கத்தில் வைத்து இருந்த காலத்தில் சிறப்புற்று விளங்கிய "கொங்கத்து எழமாத்தூர் இருந்து வாழும் சாகாவடச் சிற்றன்" பற்றி முன்னரே பார்த்தோம்.[1] இக்காடை குலத்தவர்கள் கொங்கர் தலைவனுன சங்ககால நன்னன் வழியில் வந்தவர்கள் எனவும் அதனுலேயே நன்னுவுடையார் என்று கொங்கு மன்னர்களால் பட்டம்

---

1. இந்நூல், பக். 141.

கொடுக்கப்பட்டு, நாட்டுத்தலைமை பொறுப்பும் இம்மரபினர்களுக்கு வழங்கப்பட்டதெனவும் கூறப்படுகிறது. பழமையான திராவிடக் குடியினரின் பண்பாட்டு முறையில் காடைக்குருவியைத் தமது குல அடையாளமாக கொண்டதால் காடைக்குலம் என அழைக்கப்படும் இவர்களது வரலாற்றுப் பழமையின் அடிப்படையில் கவனிக்கும்போது இம் முடிவு பெரிதும் பொருந்துவதேயாகும். இவர்கள் தலைமை உரிமை பெற்றுக் காணியாளர்களாக விளங்கிய நாடு பூந்துறை நாடேயாகும். கொங்கு 24 நாட்டுப் பிரிவுகளுள் தலைமைச்சிறப்பும், எல்லா வளங்களும் பெற்று பெயருக்கேற்ப பூந்துறை நாடாகவே விளங்குவது இந் நாடாகும். கரூர் பசுபதீஸ்வரர் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய விமான கோபுரத்தில் கலசம் வைத்தபோது கலசம் நில்லாமல் கீழே விழுந்துவிட இதேபோல 23 நாட்டவர்களும் கலசம் வைத்து நில்லாமல் கடைசியில் பூந்துறை நாட்டுக் காடை குலத்தில் வந்த நன்னன் என்பவன் வைத்தபிறகே கலசம் நின்றதாகவும் எனவே மூவேந்தரும் இந்த நன்னனுக்கு பூந்துறை நாட்டின் ஆட்சியுரிமை கொடுத்து நன்னுவுடையார் என்று பட்டமளித்து நாட்டுக் கவுண்டர் ஆக்கி வைத்தார்கள், என்று ஒரு கதை வழங்குகிறது.

கொங்கு நாட்டின் புகழ்மிக்க நாட்டுக் கவுண்டர்களில் இந்த நன்னுவுடையாக் கவுண்டர்களும் இடம் பெற்றுள்ளனர் என்பதை

வேணுவுடையார் வெள்ளோடு உலகுடையார்
ஆனூருக்குச் சக்கரை மன்றாடி–வேணாபுகழ்
நாவேற்றும் பூந்துறை நன்னுவுடையார் நால்வருக்கும்
மூவேந்தர் சூட்டும் முடி.

என்ற ஒரு பழம்பாடலும் விளக்குகிறது. பூந்துறை நாட்டில் கரிகாற்சோழன் கரிய காளியம்மனை பிரதிஷ்டை செய்து பூசித்தான் என்று சொல்லப்படுகிறது. கொங்கு நாட்டில் கரிகால் சோழன் என்று வழங்கப்படும் கதைகள் யாவும்

இராசராசக் கரிகாலனைப் பற்றியதே. அக்கரிகாலன் காலத்திலே கூட இக்காடை குல நன்னுவுடையாக் கவுண்டர் பூந்துறை நாட்டு ஆட்சியுரிமையைப் பெற்று இருக்கலாம். இந்நன்னுவுடையார் மரபில் வந்தவனே குப்பிச்சிக் கவுண்டன் என்பான். இவன் தனது வலிமையினுலும் அறிவினுலும் சிறந்து விளங்கினமையால் விசய நகரமன்னர்களால் பெரிதும் போற்றப்பட்டான். இவன் வழியில் வந்த வாரணவாசிக்கவுண்டர் என்பாரும் பூந்துறைநாட்டின் புகழ் பெற்ற காமிண்டர்களுள் ஒருவராகும். தாராமங்கலத்தில் சிறப்புடன்ஆட்சி நடத்திய கட்டி முதலியார்கள் அதிக வலிமை பெற்று கொங்கு நாட்டில் தமக்கு நிகரில்லை என்று விளங்கினர்கள். அக்கட்டி மரபில் வந்தஒரு அரசனை வென்று வாகைசூடி இவ்வாரணவாசிக் கவுண்டர் தம்காலப் பேரரசனிடம் பல பட்டங்கள் பெற்றதோடு மற்ற குலபட்டக்காரர்களுக்கும் வாரணவாசி வமிசத்தில் உதித்த காடைகுலப் பெரியவர் போய் பட்டம் சூட வேண்டும் என்னும் உரிமையும் பெற்றனும். இவன் காலத்து மன்னன் யாராக இருந்திருக்கும் என்று தெரியவில்லை.

## 2. வேணுவுடைக் கவுண்டர்கள்.

இத்தலைமை மரபினர் பெரிய குலத்தவர் என்று குறிக்கப்படுகின்றனர். இம்மரபினரையும், இவர்களது பூர்வீக நாடான வேணுடு பற்றியும் கங்க அரசர்களைப்பற்றிக் கூறும் பகுதியிலே ஒரளவு விளக்கப்பட்டது. கங்க-காடவ அரசர்கள் காலங்களில் எல்லாம் நடு நாட்டையும், தொண்டை நாட்டு மேலைப் பாதியையும் உள்ளிட்ட கீழ்வேணுடு, மேல் வேணுடு என்ற இரண்டு பிரிவுகளுக்கும் தலைமை பூண்டு காமிண்டர்களாகிய விளங்கிய இம்மரபினர் கண்டராதித்த சோழர் தொண்டை நாட்டிலிருந்தும். நடுநாட்டிலிருந்தும் தம் மகளுக்கு சீதனமாக அளித்துக் குடியேற்றிய 48000 வேளாளர் குடியினர்களுள் ஒரு கூட்டத்தவராக தமது வேணுட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்து கொங்கில் குடியேறினர். குடியேறிய கூட்டங்களுள் சிறப்பினுலும், அளவினு

னும் இம்மரபினரே சிறந்து விளங்கியமையால்தான் போலும் இம்மரபினர் பெரிய குலத்தவர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கண்டராதித்தன் காலத்திலே குடியேறியவர்கள் என்பதை பிற்காலத்தில் செவிவழிச் செய்தியாக வழங்கப் பட்ட வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய மெக்கென்சி தொகுப்புச் செய்தியும் உறுதிப்படுத்துகிறது.[1] இதில் ரிஷப நிரிச் சோழன் காலத்தில் தன்மகளுக்குச் சீதனமாக அளித்த வேளாளர் குடியினர் 8000 என்ற குழப்பமான செய்தியே காணப்படுகிறது. ஆயினும் இவ்வேளாளர் குடியினர்கள் அனைவருக்கும் தலைமை வகித்து வந்தவர் இம்மரபைச் சேர்ந்த பிடார பெரியண்ண வேணு உடையார் என்பவர் என்று கூறப்பட்டுள்ளது நமது முடிவிற்கு அரசனாக விளங்கு கிறது. இவ்வாறு அனைத்துக் குடும்பங்களுக்கும் தலைமை வகித்துவந்த இம்மரபினர் கொங்கு நாட்டில்பெருந்தலைமை வகித்திருப்பார் என்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

கொங்கு மன்னர்களில் முதல்வனும் அம்மரபைத் தோற்றுவித்தவனுமான வீர சோழக் கலிமூர்க்கனின் கல் வெட்டு ஒன்றிலே[2] பெரியன் சோழன் என்கிற வீரசோழக் காங்கேயேன் என்னும் சிற்றரசன் ஒருவன் குறிக்கப்பட் டுள்ளான். இவன் பெரியகுலத்தைச் சேர்ந்த வேணுவுடை யார் மரபினனே என்பதை பெரியன் சோழன் என்ற பெயரே உணர்த்துகிறது காங்கேயன் என்ற பெயர் கங்க நாட்டு அய்யன் அதாவது தலைமை பொறுப்பேற்ற பெருங் குடியினன் என்று பொருள் தருவதாகும். ஒருவேளை இவன் பெயராலேயே வழங்கப்பட்ட பெயர்தான் காங்கே யம் என்ற ஊரின் பெயராகவும் இருக்கமுடியும் குடியேறிய காலத்தில் இவன் காங்கேயம் பகுதியிலேயே காணி பெற்றுக் குடியேறியிருக்க வேண்டும். எவ்வாறாயினும் இம்மரபினர் வீரசோழக்கலிமூர்க்கன் காலத்திலேயே தலைமைச் சிறப்புடன் விளங்கினர்.

1. Meckenzices Manuscitis. Page 25.
2. ARE. 593 of 1905.

இனி மெக்கென்சியின் தொகுப்பு குறிப்பிடும் மற்றொரு செய்தி இம்மரபினர் கொங்கு மன்னர்கள் காலத்தில் தொடர்ந்து சிறப்புப் பெற்றவர்களாகத் திகழ்ந்து வந்தனர் என்பதை உறுதிப்படுத்துகிறது.[1]

காவேரிப்பட்டினத்தில் வாழ்ந்து வந்த வர்த்தகப் பிரிவினர் தங்கள்அரசனை குலோத்துங்க சோழனுக்கும் அடங்காமல் செருக்குடன் இருந்தனராம். தங்கள் சமுதாயத் திற்கு ஆகாத ஏதோ ஒரு தவறு செய்து விட்டார் என்பதற் காக சங்குநாராயண செட்டி என்பவனின் மகனுக்கு மரண தண்டனையும் அளித்தனராம்,

சங்கு நாராயண செட்டி இந்த தண்டனையை எதிர்த்து குலோத்துங்க சோழனிடம் நேரிடையாக அப்பீல் முறை யிட்டுக கொண்டான் குலோத்துங்கசோழனின் அமைச்சராக இருந்த அர்த்தநாரி வேணுவுடையார் என்பவரை அனுப்பி சோழன் அந்த வியாபாரிகளை அடக்கி வரச்செய்தானும். அவரும் அவ்வாறே செய்து 500 வியாபாரிகளின் குடும்பத்தை சிறைக் கைதியாகப் பிடித்து வந்தாராம். இதனால் மனம் மகிழ்ந்த குலோத்துங்கசோழன் அவருக்கு கொங்கு 24 நாடுகளின் தலைமை உரிமையையும் கொடுத் தானும் இவை தவிர அவர்களிடமிருந்து உழவு வரியாக குடும்பம் ஒன்றுக்கு ஒரு பணமும் தலைக்கட்டு வரியாக 6 பணமும் வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் வழங்கின னும், ரிஷபகிரிச் சோழன் சோனுக்கு தன் மகளை மணம் முடித்து கொடுத்தான் என்றும் அவள் சீதனமாக 8000 வேளாள குடும்பங்களை (காலிங்கராயர் கைபீது மூலச்சுவடி யில் 48000 என்று குறிக்கப்பட்டுள்ளது) கொங்கு நாட்டிற்கு அனுப்பி வைத்த செய்தி இதிலும் குறிக்கப்படுகிறது.

---

1. MMSS. Page 26. Para I.

**கம்பரும் பிடார பெரியண்ண வேணுவுடையாரும்:**

இக்காலத்தில் வந்த பிடாரப் பெரியண்ண வேணுடரை கம்பரும் புகழ்ந்து பாடினுர் என்றதொரு செய்தி நமதுசிந்தனைக் குரியதாகிறது. இச்செய்தியை வேணுடர் மெய்க்கீர்த்திப் பாடல்

"கம்பர் புகழ்ப் பிடார பெரியண்ண வேணுடனே" என்று குறிக்கிறது. பிடாரப் பெரியண்ண வேணுவுடையார் என்னும் இவன் இம்மரபில் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த அர்த்தநாரி வேணுவுடையாருக்கு பின் வந்தவனுக இருக்க வேண்டும். இராசராசக் கரிகாலன் காலத்தில் குடியேறிய வேளாளத் தலைவர்களில் ஒருவராக பண்ணைகுல சடையன் என்பவனைப் பற்றிக்கூறி இச்சடையனே கம்பரை ஆதரித்த சடையப்ப முதலியார் என்று கூறினேம். எனவே இக்காலத்தில் வாழ்ந்தவரே கம்பரால் புகழப்பட்ட பிடார பெரியண்ண வேணுவுடையராக இருத்தல் வேண்டும். ஆக கொங்கு மன்னர்கள் காலத்தில் இரண்டு புகழ் பெற்ற வேணுவுடையார் மரபுக் கவுண்டர்களைப் பற்றி அறியமுடிகிறது. வேணுடு உடையார் என்பதன் திரிபே வேணு உடையாராகும்.

இதிலிருந்து இவ்வேணுடர்கள் தனியரசு நடத்தி வந்தவர்கள்தாம் என்பது உறுதிப்படுகிறது. இதனுல்தான் குலோத்துங்கன் காலத்தில இவர்கள் கொங்கு 24 நாடுகளுக்கும் தலைமைப்பொறுப்பை ஏற்று இருக்கிருர்கள் சோழர்களுக்குப் பிறகு விஜயநகர அரசர்கள் காலத்திலும் இவர்கள் அதே பண்டையச் சிறப்புடன் விளங்கி வந்து இருக்கிருர்கள் கிருஷ்ணதேவராயர் இவ்வழியில் வந்த ஒரு கவுண்டருக்கு இம்மடி என்ற பட்டத்தை வழங்கிக் கெளரவித்தாராம்; இக்காலமுதல் இவ்வேணுட்டு கவுண்டர்கள் முத்துரத்தினம் குமாரரத்தினம் என்ற பட்டங்களை மாறி மாறிப் பூண்டு வந்திருக்கின்றனர். கி. பி. 1808லே தமது பரம்பரை பற்றிய வரலாறுகளை கைபீதாக மெக்கன்சிக்கு எழுதிக்

கொடுத்தவர் குலோத்துங்கன் காலம் முதல் வந்த பட்டக்காரர்களிலே 28வது பட்டக்காரர் குமார ரத்தின வேணுடையக் கவுண்டர் ஆவர். இக்குலோத்துங்க சோழன் கொங்கு மன்னன் குலோத்துங்கனேயாவன்.

3. உலகுடையார் :

கொங்கு மன்னர்களால் உலகுடையார் என்று சிறப்பாகப் பட்டம் கொடுக்கப்பட்டு உயர்நிலையில் விளங்கிய கவுண்டர் தலைவர்கள் சாத்தாந்தை கூட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற காலிங்கராயக் கவுண்டர் மரபினராவர். இச் சாத்தாந்தை கூட்டத்தினரின் சங்க காலந் தொடங்கிய பழைமைச் சிறப்பினைப் பற்றி முன்னரே விளக்கப்பட்டது. கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் பெருமானும் இச் சாத்தாந்தை கூட்டத்தவரே என்று கொங்கு மண்டல சதகம் உணர்த்துவதையும் முன்னர் கண்டோம். இத்தகு புகழ் மிக்க இவ்வுலகுடையார் மரபினர் முதன்முதலாக நடுநாட்டிலுள்ள வேணாட்டுப் பகுதிகளிலே வாழ்ந்திருந்தவராவர். ஆந்தைக் குலத்தோடு இக்கூட்டத்தவர் பெயர் சம்பந்தப் பட்டதாக இருப்பதால் ஒருக்கால் ஆந்தைப் பாடி நாடே இவர்களது பூர்வீக நாடாக இருக்கலாம். இவ்வாந்தைப் பாடி நாட்டு ஆந்தை குல வேளாளர்களோடு கொங்கு வேளாளர்களுள் பலர் பெண்ணெடுத்துச் சம்பந்தம் செய்து அவர்கள் வழியிலும் சில கூட்டங்கள் உருவாகியிருத்தல் வேண்டும்; உதாரணமாக கொற்றந்தை கூட்டம், பொருளந்தை கூட்டம், தேவாந்தை கூட்டம் முதலிய ஆந்தை என்ற பெயருடைய கூட்டங்களைக் காட்டலாம். ஆந்தைக் குலம் என்பது ஆந்தையைத் தமது அடையாளப் பறவையாகக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட பெயராக இருக்கலாம் என்று தோன்றுவதால், இவ்வாறு, பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை குல மரபு அடையாளமாகக் கொள்ளும் வழக்கமுடைய பழைமையான திராவிடக் குடிகளின் வழியில் வந்தோராக இக்குலத்தைக் கருதலாம்.

எனவே பழம் பெறும் திராவிடக் குடிகளான இக்குலத்தவர்களுடன் பிற்யேனாகக் கூட்டத்தவர்களும் சம்பந்தம் செய்து கொண்டு அதன் சார்பில் தனித்தனிக் கூட்டங்களை அமைத்துக் கொண்டு ஆந்தைக்குலத்தின் தொடர்புடையவர்களாக பல கூட்டத்தவர்கள் விளக்கமுற்றிருப்பது இயல்பானதே. இத்தகு புகழ்பெற்ற ஆந்தைக் குலத்துடன் தொடர்புடைய கூட்டமே பண்ணைக் குலத்து சாத்தாத்தை கூட்டமாகும். இக்கூட்டத்தவர்கள் நடுநாட்டில் வாழ்ந்து வந்தவராகக் காணப்பட்ட போதிலும், இவர்களில் பெரும் பான்மையோர் சேரமான் பெருமான் மரபினர் தென்கொங்கு நாட்டையும் சிலசமயங்களில் வடகொங்கு நாட்டின் பல பகுதிகளையுங் கூட ஆண்டு வந்த காலத்தில் கொங்கு 24 நாடுகளுள் ஒன்முன கவடிக்கா நாட்டில் குடியேறி அந்நாட்டின் தலைமை பூண்டு சேரமான் பெருமான் மரபினரின் கீழ் புகழ் பெற்று விளங்கியிருந்திருக்க வேண்டும். பின்னால் எ தோ ஒரு காலத்தில், பெரும்பாலும் வீரபாண்டியன் காலத்திலேயே என்று சொல்லலாம், இச்சாத்தாந்தை கூட்டத்தில் வ ந் த ஒருவர் பூந்துறை நாட்டில் வாழ்ந்து அந்நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு வீரபாண்டியனின் அமைச்சராகவும் ஆகி பெருமை பெற்றுர். வீரபாண்டியனுல் காலிங்கராயன் என்று பட்டம் கொடுக்கப் பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்

காலிங்கராயர் கைபீதில்[1] "கவுண்டர் அணைகட்டிய பெறகு மனம் வெறுத்து சரிசிறுப்பும், சரிமரியாதிகளும் குடுக்காதபடியினுல், பூர்வத்திலே சேரமான் பெருமான் சாத்தாந்தை கோத்திரக்காரனுக்கு கவிடிக்கரை நாட்டில் பிறவு பண்ணிக் குடுத்து மரியாதை கொடுத்திருந்ததால் வென்னோடு விட்டுச் சென்று குடியேறியது" என்று கூறுவதும் நமதுகருத்துக்குப் பொருத்தமானதாக உள்ளதைக்கவனிக்க வேண்டும். எனவே காலிங்கராயக் கவுண்டரின் முன்னேர்

1. D. 3044 காலிங்கராயர் கைபீது பக். 63. M. 56 of Oriental manuscribts Library, Madras.

களான சாத்தாந்தைக் கூட்டத்துத் தலைவர்கள் முன்னால் சேரமான் பெருமான் காலத்தில் காயடிக்கை நாட்டுத் தலைவர்களாகவே விளங்கி வந்தனர் என்று கூற வேண்டும். உலகுடை மன்றுடி என்று பட்டம் பெற்றுச் சிறக்க வாழ்ந்தவர் காலிங்கராயக் கவுண்டர்களின் முன்னோர்களா அல்லது சாத்தாந்தை கூட்டத்தில் வந்த வேறு தலைவர்களா என்று தெரியவில்லை. இப்பட்டம் வந்தவிதத்தை ஓதாளர் குறவஞ்சி கீழ்க்கண்டவாறு கூறுகிறது.[1]

பெரிய பெருமாள் ஆட்சியுரிமை பெற்ற புனித நாளில் உகாயனூர் பகுதியை சாத்தாந்தை கோத்திரத்தில் பிறந்த சரவணமகிபன் என்னும் உத்தம வீரனுக்கு உரிமை செய்து கொடுத்துத் தலைவனாக்கி அவனுக்கு மூவேந்தர்களும் உலகுடை மன்றுடி என்று பட்டம் சூட்டி வாழ்த்தினர்.

இதில் மூவேந்தர்கள் என்பது உயர்வு கருதிய உபசார வழக்கே போதும். வரலாற்று அடிப்படையில் கொங்கின் தனியுரிமை படைத்த முதல் மன்னனாக முடிசூடிக் கொண்ட வீரசோழக் கலிமூர்க்கப் பெருமானே இப்பட்டத்தைக் கொடுத்து இருக்க வேண்டும். இவ்வாறு நாட்டுரிமையும் பட்டமும் கொடுக்கப்பட்டது வீரசோழக் கலிமூர்க்கனின் காலமான கி. பி. 965–1004க்குள்ளே இருத்தல் வேண்டும். இந்த உகாயனூரும் பொங்கலூர் நாட்டு ஊர்களுள் ஒன்றே யாகும். இத்தகு சிறப்பு மிக்க சாத்தாந்தை கூட்டத்துத் தலைவர்களுள் ஒருவர்தான் வீரபாண்டியனின் அமைச்சரும் காலிங்கராயன் அணையையும், கால்வாயையும் உருவாக்கிய வருமான காலிங்கராயக் கவுண்டராவர். இவர் கி. பி. 13ம் நூற்றாண்டின் இடைபகுதியில் இவற்றை உருவாக்கினர் என்று அகத்தூர் அம்மன் கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.

---

1. ஓதாளர் குறவஞ்சி பக்கம், 117—118.

**சாத்தாந்தைக் கூட்டத்துக் காலிங்கராயக் கவுண்டர் :**

இக்காலிங்கராயக் கவுண்டர்கள் இன்று ஊத்துக்குளி பாளையக்காரர் என்று அழைக்கப்படுவர் ஆவர். இவர் தம் வரலாறு மிகவும் நீண்டதும், புகழ்மிக்க ஒன்றுமாகும். இவர்கள் முற்காலத்தே பூந்துறைநாட்டின் (ஈரோடுவட்டம்) காணியாட்சியை அனுபவித்துக் கொண்டு வெள்ளோட்டில் வாழ்ந்து வந்தவர்கள் ஆவார். இவர்கள் வழிவந்த காலிங்க ராயர் புகழ்ச்செயலை இன்றும் விளக்கி நிற்பது இவர் கட்டிய காலிங்கராயன் அணையும் காலிங்கராயன் வாய்க்கால் என்னும் ஐம்பத்தி ஆறரை மைல் நீளமுள்ள பெரிய வாய்க்காலும் ஆகும். இதனால்தான் பூந்துறைநாடு அப்பெயர் பெற்றதோ என்று கூறும் அளவிற்கு தமிழகத்திலே வளம் மிக்க ஒரு பெரும் பூமியாகத் திகழ்கிறது.

காலிங்கராயக் கவுண்டர் அணை கட்டிய செய்தியை விளக்கும் தனிப்பாடல் ஒன்று இவ்வாறு கூறுகிறது.

"எற்று திரைப் பொன்னி கூடுறுவானியிடை மடங்க
வெற்றி மிகுந்த அதி வீரபாண்டிய வேந்தமைச்சன்
கற்றவறிவினன் காலிங்கராயன் செய்கால் கழிநீர்
உற்றவனத்தை வளவயலாக உயர்த்தியதே"

(வானி-பவானி பொன்னி-காவிரி கூடுறு-சங்கமம் வனம்-காடாக இருந்த இடம்)

இதில் கூறப்படும் வீரபாண்டியன் அகத்தூர் கல்வெட்டு கூறும் 13ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆண்ட சடாவர்மன் வீரபாண்டியனேயாவன். இவன் கொங்கு நாட்டைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த போது பூந்துறை நாட்டின் தலைமைக் காமிண்டராக அந்நாளில் விளங்கிய சாத்தாந்தைக் கூட்டத்தில் வெண்ணை நல்லூர் சடையன் மரபில் வந்த வேளாளர் தலைவனான இவன் காலிங்கராயன் என்ற பட்டம் பெற்று வீரபாண்டியனின் அமைச்சனாகவும் ஆனான்;

**காலிங்கராயன் அணை:**

சென்னை பழஞ்சுவடி நூலகத்திலுள்ள காலிங்கராயர் கைபீதில் காலிங்கராயர் அணைகட்டியதற்கான காரணம் பின்வருமாறு கூறப்படுகிறது காலிங்கராயக் கவுண்டர் தன்னுடைய மகனுக்குத் திருமணம் செய்ய பண்ணாகுலத்துக் கவுண்டர் ஒருவரிடம் பெண்கேட்டுச் சென்ருர். சென்ற இடத்தில் அவருக்குச் சாப்பாடு தயார் செய்ய வேண்டி சமையல்காரர் என்ன அரிசிபோட்டு சமையல் செய்வது என்று கேட்க பண்ணாகுலாதிபன் கம்பு விளைகிற சீமையைச் சேர்ந்த அவர்களுக்கு ஏது அரிசி என்று கேட்டு சாதாரணாக அரிசியைப் போட்டே சமையல் செய்யும்படி கூறிஞராம். அதுகேட்ட காலிங்கராயர் வெகுண்டு அவர்கள் வீட்டில் சாப்பிட மறுத்து தன நாட்டை வளப்படுத்தி உயர்ந்தாக நெல் விளையும் நாடாக்கிய பிறகு உங்களிடம் பெண்கேட்க வருகிறேன் என்று சபதம் போட்டுகொண்டுவந்து அவ்வாறு போட்ட சபதத்தை நிறைவேற்ற காலிங்கராயன் அணை கட்டும் முயற்சியை மேற்கொண்டாராம் அதற்காக பவானி ஆற்றைத் தேர்ந்தெடுத்து அணைகட்டும் வேலையைத் துவக்க ஆயத்தங்கள் செய்யத் துவங்கியபோது அப்பகுதிக்குத் தலைவனை வெள்ளைவேட்டுவன் என்பான் தன் படை கொண்டு அவரைத் தாக்கிஞனும். காலிங்கராயரும் அவனுடன் பல நாட்கள் கடும்போர் செய்து வெள்ளை வேட்டுவனை வென்று அணையையும் கட்டிக்கால்வாயையும் வெட்டிஞராம். உண்மையிலேயே நாம்பார்த்த பாடலில் கண்டபடி இக்கால் வாயிஞல் பூந்துறை நாடே கடும் வறட்சி காலத்திலும் முப்போகம் விளையும் வளவயல்கள் சூழ்ந்த நாடாகவே இன்றும் விளங்குகிறது இதற்காக அந்நாட்டு மக்கள் காலிங்கராயக் கவுண்டருக்கு என்றென்றைக்கும் நன்றிக் கடன் பட்டுள்ளனர் ஆயினும் அதனை அவர்கள் தம் செயலால் விளக்கி விட்டனர். ஆம், அணையின் அருகே காலிங்கராயருக்கு ஒரு சிலையும் செய்து வைத்து அவர்கால்வாய் வெட்ட வழிகாட்டியதாகக் கூறப்படும் புராணக் கதையில் வரும் காளிங்கன் என்ற நாகப்பாம்பிற்கும் சிலை எடுத்து

வைத்து ஆண்டுதோறும் திருவிழா நடத்திவர ஏற்பாடும் செய்தனர். ஆனால் இன்று கவுண்டரின் சிலையை அங்கு காணோம். நாகப்பாம்பின் உருவம் மட்டுமே உள்ளது இதனை காலிங்கராயர் கைபீது பின்வருமாறு கூறுகிறது.

> காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணையிலே கவுண்டனை பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சு சிலாசாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்கொண்டு வருகிறது.

கவுண்டரோடு சிலையாக பிரதிஷ்டை செய்து வைக்கப் பட்ட நாகப்பாம்புதான் காலிங்கராயரின் கனவில் தோன்றி கால்வாய் வெட்டுவதற்கான தடத்தைதான் ஊர்ந்து காட்டியது என்று புராணக் கதையாகச் சொல்லப்படுகிறது. கைபீதில் காலிங்கன் என்ற பாம்பின் பெயர் கவுண்டன் குலப்பெயர் என்றுகுறிப்பு காணப்படுவதால்காலிங்கராயன் என்ற பட்டப்பெயர் மறைந்து கிருஷ்ணன் அடக்கியதாகச் சொல்லப்படும் காளிங்கன் என்ற 5 தலை நாகத்தை அடிப்படையாக வைத்து காளிங்கன் வழிகாட்டியது எனவும் அதனால் காளிங்கராயன் என்ற பெயர் வந்ததெனவும் புராணத்தோடு இணைத்துவிட்டார்கள் போலும்

**காலிங்கராயக் கவுண்டர் திருப்பணிகள் :**

சடாவர்மன் வீரபாண்டியனிடம் முதலமைச்சராக (உத்தர மந்திரி) இருந்துவந்த காலிங்கராயக் கவுண்டர் சிறந்த கொடையாளி; தமிழ் வளர்த்த பெரும் புலவர்களுக்கு வரையறையின்றி வழங்கி அவர் தம் வறுமை துடைத்த பெருஞ் செம்மல்; கொங்கு வேளாளருக்குரிய பசிப்பிணி போக்கும் தாராளத்தன்மை அனைத்தும் இவ்வள்ளலிடம் காணப்பட்டது. பலகோயில்களுக்கு இவர் செய்த திருப்பணி களையும் கட்டிய மண்டபங்களையும், குளம் வெட்டிய அறச் செயல்களையும் பல கல்வெட்டுக்களும் பட்டயங்களும், தனிப் பாடல்களும் கூறுகின்றன. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு இவர் செய்த திருப்பணிகள் பல.

ஆலிங்க தாகமலே வர்த்தநாரீஸ்வரருக்கு
காலிங்க ராயனெனும் காராளன் — மாலிங்க
மென்றேமா மாந்தை நிலமெழுமாவுங் கொடுத்தான்
நன்றே புகழெய்தினன்.

என்ற திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலைபாடல் காலிங்க ராயன் எழு மாநிலம் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது, இன்னொரு அழகிய தனிப்பாடல் ஒன்று காலிங்கராயன் அணை கட்டிய செய்தியை கவிதை நயம் சொட்டச் சொட்டக் கூறுகிறது. இந்திரனால் பெருமழை பெய்விக்கப்பட்ட போது கண்ணபிரான் குன்றை குடையாகப் பிடித்துத் தடுத்தான். பட்டினப்பாலை என்னும் பாடலை பெற்ற கரிகால் சோழன் காவிரிக்குக் கரை எடுத்து அதன் வெள்ளப் பெருக்கைத் தடுத்தான. ஆனால் வெள்ளோடை என்னும் ஊரில் வாழும் தலைவனான சாத்தாந்தை குலத்து காலிங்கராயனே வறண்ட ஊராக விளங்கிய பூந்துறை நாடுவளமுடன் விளங்க பவானி ஆற்றைத் தடுத்து அணைகட்டினன் என்னும் பொருள்பட

திரை கொண்ட வாரியை மாலடைத்தான் செழுங்
காவிரியை
உரை கொண்ட சோழன் முனளடைத் தானுல கேழறிய
வரை கொண்ட பூந்துறை
நன்னாடு வாழ்கவவ் வானிதனைக் கரை கொண்டடைத்
தவன்
வெள்ளோடைச் சாத்தாந்தை காலிங்கனே

என்று அழகாகக் கூறுகிறது. என்ன கவிநயம்! பாடலை மீண்டும் மீண்டும் படித்து அனுபவிக்கலாம் போல் உள்ளது. இத்தனை புகழோடு வாழ்ந்த காலிங்கரையக் கவுண்டரை கொங்கு 24 நாட்டவரும் அவர் கவடிக்கை நாட்டை ஆளும் உரிமை மட்டுமே படைத்தவர் சேரமான் பெருமாளால் ஆதரிக்கப்பட்டவர் என்று காரணம் காட்டி உரிய மரியாதை தராமல் வெறுத்து ஒதுக்கினார்களாம். எனவே அவர் வெள்

ளோட்டை விட்டு கவடிக்கை நாட்டை அடைந்து அங்கு இருந்த காடுகளையெல்லாம் வெட்டி நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி பெரும் புகழோடு வாழத் தொடங்கினாராம். இவர் வழியில் வந்த இன்னொரு காலிங்கராயன் பெனுகொண்டா சென்று அதனை ஆண்டுகொண்டு இருந்த திருமலை தேவராயரின் மகனுக்கு ஏற்பட்டிருந்த தீராத தொழுநோயை தனது மருத்துவ அறிவினாலும், மந்திர அறிவினாலும் போக்கி ராயருடைய அன்பிற்கு பாத்திரமானார். அதனால் ராயர் இவருக்கு கவடிக்கை நாட்டுப் பாளையக்காரர் பட்டம் கொடுத்து கௌரவித்தார். இவர் தான் பொள்ளாச்சி அருகே ஆனைமலைச்சாரலில் ஊத்துக்குளி என்ற ஊரை உருவாக்கி அதனை தலைநகரமாகக் கொண்டு ஊத்துக்குளி பாளையப்பட்டு என்னும் ஜமீனை ஏற்படுத்திய வராவார்.

**கைபீதின்படி காலிங்கராயர்கள் :**

ஒன்பதாவது பட்டக்காரரான நஞ்சய்ய காலிங்கராயக் கவுண்டர் மதுரை விசுவநாத நாயக்கர் பஞ்ச பாண்டியர்கள் என்று குறிக்கப்பட்ட பாண்டிய வம்சத்து மன்னர்கள் ஐவரை வென்று பாண்டிய நாடு முழுவதையும் கைப்பற்ற உதவி செய்து விசுவநாத நாயக்கரின் நன்மதிப்பை பெற்று மதுரை அரண்மனைப் பாதுகாவல் படையின் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 19வதுபட்டக்காரரான வீரமாண்ட காலிங்கராயக் கவுண்டரும், அவருடைய சந்ததியினரும் மைசூர் அரசர்களுக்கு வலதுகரமாக விளங்கி வந்தனர்.

கொங்கு நாட்டுப் பாளையக்காரர்கள் அனைவரது நாடுகளும் மைசூர் அரசரான இம்மடிராஜா உடையாரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபோது அப்போது 23வது பட்டக்காரராக விளங்கிய நஞ்சய்ய காலிங்கராயர் குடகு அரசர்களின் மீது மைசூர் அரசர் நடத்திய படையெடுப்பில் பேருதவி செய்து 750 பணம் நன்றித் தொகையாகப் பெற்றார். இவர்கள் எப்பொழுதும் படையெடுப்பிற்குத் தயாராக

நம்மிடம் 500 காலாட்படை வீரர்கள் 100 குதிரைப் படை வீரர்கள் பல யானைகள் ஆகியவற்றைத் தமது கோட்டையில் வைத்துக் கொண்டிருந்தனராம். ஆனைமலை நாடு மாறச்சி நாயக்கன் பாளையம் பகுதிகளிலிருந்து பாடிகாவல் வரியையும் மூலப்பொதி எனப்படும் அரிசி மூட்டைகளின் மீது விதிக்கப்படும் சுங்கமாக பொதி ஒன்றுக்கு ஒரு பணம் வீதமும், பல சரக்குப் பொதியாக ஒரு ரூபாயும் வரிப்பணமாகப் பெறும் உரிமை பெற்று இருந்தனர். தங்கள் பேரரசர்களுக்கு யானைப்படை கொடுத்து உதவப் பொருளும் பெற்றனர் கலியுகம் 4891 அதாவது கி பி. 1790–91ல் பாளையக்காரராகப் பட்டமேற்று இக்கைபீதியை மெக்கன் சிக்குக் கொடுத்த குமாரசாமி காலிங்கராயக் கவுண்டரின் பாட்டனார் காலத்தில் பாடிகாவல் பெறும் உரிமை நீக்கப்பட்டது இவரும் இவருடைய உடன் பிறந்தோரும் திப்புசுல்தானால் மிகவும் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டனர்.

வரலாற்றில் இத்துணை அளவிற்குச் சிறப்பாக இடம் பெற்றிருந்த இக்காலிங்கராயர் மரபினர் இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகின்றனர்.

**பழைய கோட்டை மன்றாடியார்கள் :**

கொங்கு நாட்டின் வரலாற்றிலே வீரம் கொடை உணர்வு தமிழ்ப்பற்று பசி போக்கும் பண்பு ஆகியவை ஒருங்கே சேர்ந்து விளங்க வரலாற்று ஏடுகளிலே தமக்கென சில நன்னிகரில்லா புகழேடுகளை சுமந்து நிற்பவர்கள் நல்ல சேனாபதி உத்தமக் காமிண்டன் முதலிய பட்டங்களைப் பெற்றுத் திகழும் சக்கரை மன்றாடியார் குலத்தவர்களே யாவர் இவர்கள் வரலாறு மிகப் பெரியது. பல தமிழ்ப் பாடல் சான்றுகளும் பட்டயச் சான்றுகளும் ஓலைச்சுவடிச் சான்றுகளும் கல்வெட்டு சான்றுகளும் இவர்களது பெருமையைப் பேசுகின்றன. காலிங்கராயர்களைப் போலவும் வேணாடுடையார்க் கவுண்டர்களைப் போலவும் மிகப் பழமையான காலந்தொட்டே இவர்களுடைய வரலாற்று மூலங்கள்

உள்ளன. இம்மன்றுடியார்கள் பயிரன் கூட்டத்தவர்களாவர் பயிரன் என்பதற்குப் பயிர்த் தொழிலைத் தம் தொழிலாகக் கொண்டவர் என்று பொருள் காட்டி அதனடியாகப் பிறந்த பெயர் பயிரன் என்பது என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றினும் அதனை நாம் முடிந்த முடிவாகக் கொள்வதற்கு இல்லை.

பயிரன் என்ற சொல்லுக்கான தெளிவான பொருளை அறிந்துக் கொள்ள நாம் சங்க இலக்கியங்களையே நாட வேண்டியுள்ளது. சங்கநூற் சொற்களின் பொருள் அகராதி ஒன்றில் பயநிரை என்ற சொல்லுக்குப் பயனைத் தருகின்ற பசுக்களின் கூட்டம் என்று பொருள் தரப்பட்டுள்ளது. (பாட்டும் தொகையும்-பக். 114) இச்சொல்லினடியாக ஒரு வேளை பயிரன் என்ற சொல் வழக்கத்திற்கு வந்திருக்கலாம். பயநிரையன் அதாவது பயன் தரக்கூடிய நல்ல பல பசுக் கூட்டங்களை செல்வமாக பெற்ற முல்லை நிலத்தலைவன் என்ற பொருள் கொண்டு இப்பய நிரையன் என்ற சொல்லே காலப்போக்கில் திரிந்து பயரையன் பயரன் ……… என்று மாற்றம் பெற்றிருக்கலாம் இதனை உறுதிப்படுத்துகிறது. கீழ்க்கண்ட கல்வெட்டுச்செய்திகள் மன்றுடிவாரியனுள்ளிட்ட கல்லையோம் என்று கல்வெட்டுகளில்அடிக்கடி பயன்படுத்தப் பட்ட சொல்தொடர் ஏரி வாரியம்தோட்ட வாரியம் போன்ற பலவகைப்பட்ட அரசியல் அலுவல்துறைகளின் மன்றுடிவாரியம் என்பதும் ஒரு பிரிவு என்பதையும் அவைகள் உள்ளிட்ட ஒரு குழுவிற்குக் கலனை என்று பெயர் வழங்கப்பட்டது என்பதையும் உணர்த்துகிறது.

இன்று மேலை நாடுகளில் (காணப்படுவதுபோல அக்காலத்தில் கால்நடைகள்பசுக்கள் காளைமாடுகள் போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகள்) ஒருவர் பெற்றுள்ள பலவகைப் பட்ட செல்வங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது அவைகளைப் பராமரித்துப் போற்றிக்காக்க ஒரு தனிவாரியமே இருந்து வந்திருக்கிறது. அந்த வாரியத்தின் தலைமை அதிகாரி மன்றுடி எனப்பட்டார். அன்றியும் மன்றுடியாக இருக்கத்

தகுதி பெற்றவர் தமக்கெனச் சொந்தமாக நிறைய கால் நடைகளை வைத்து பண்ணை நடத்தும் தகுதி பெற்ற வராக இருத்தல் வேண்டும் திருக்கோயில்களுக்கு விளக் கெரிக்க நெய் பெற வேண்டியும் கோயில்களுக்கு நிறைய பசுக்கள் சாவா மூவாப் பேராடு எனப்படும் ஆடுகள் பல நிவந்தமாக விடப்பட்டதால் அவைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் இம்மன்றாடிகள் வசமே ஒப்புவிக்கப்பட்டது ஆக மன்றாடிகள் என்பார் சமுதாயத்தில் சீரும் சிறப்பும் மிகப் பெற்ற ஒரு பெருங்குடியினராகக் கருதப்பட்டார்கள்[1] வட ஆற்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் காணப்படும் சுந்தரசோழனின் கல்வெட்டு ஒன்று அவ்வூர் கோயிலுக்கு நிவந்தமாக விடப்பட்ட சாவா மூவாப் பேராடு கள் (அந்த ஆடு அதன் குட்டி, அதன் குட்டி என்ற முறையில் கோயிலுக்காகவே விடப்படும் கோயில் ஆடுகள்) தொண்ணூ ரையும் ஏற்றுக்கொண்ட அதிகாரிகளாக கொங்கு வேளாளர் களில் கண்ணந்தை கூட்டத்தைச் சேர்ந்த எழுநூற்றுவன் மன்றாடி மூலன் கூட்டத்தைச் சேர்ந்த கவரை மன்றாடி ஆகியோரின் பெயர்களை குறிப்பிடுகிறது.[2] இது நமக்குக் கிடைத்த அருமையான சான்றாகும் இத்தகு பழமை சிறப்பு மிக்க மன்றாடியார் என்ற பெயரை கொங்குநாட்டுக் கவுண்டர் களில் சில பெரிய குடும்பத்தினர் அக்காலந்தொட்டு இன்னும் தரித்து வருவது கொங்கு நாட்டையன்றி வேறு எந்தப்பகுதியிலும் காணப்படாத அருமையாகும்.

இக்கூட்டத்தவர்க்கு தனிக்கொடி உண்டென்றும் அது அன்னப்பறவை கொடி என்றும் கூறப்படுகிறது. இவ் வன்னபட்சி கங்க அரசர்களின் இலச்சினையாக இருந்தது என்பதை நாம் கீழ் மூத்துகூர் நடுகல் கல்வெட்டின் மூலம் அறிந்து கொண்டோம். எனவே பயிரன் கூட்டத்தவர் கங்க மரபினரோடு ஏதோ ஒருவகையில் நெருங்கிய தொடர்பு

---

1. S. I. I. vor 13 எண் 340.
2. S. I. I. பாக 13 பக் 67.

கொண்டவராய் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முதலே அரசியல் அரங்கத்தில் முக்கிய பாத்திரங்களாக விளங்கி வந்திருக்கின்றனர் என்று உறுதியிட்டுக் கூறலாம்

இக்கூட்டத்தவரின் குலப்பெருமையும், வீரச்சிறப்பும், வள்ளன்மையும், அருள் திறமும் இறைவனைப் போற்றிய பெரும்பண்பும் அளவிட்டுச் சொல்லுவதற்கு எளிதல்ல. இவர்களுடைய ஆவினம் புரக்கும் பெருமை சிறப்பானது. இவர்கள் நாட்டுப்பசுமாடுகள், காளைமாடுகள் எளில் உலகம் போற்றும் பெருமை வாய்ந்தவை அல்லவா? அவை இவர்களுடைய இந்தப்பெருமையை உலகறியச் செய்துகொண்டு இவர்களுடைய ஊர் பெயரையே பெற்றுள்ளது அல்லவா? ஆனூர் என்றாலே பசுக்கள் மிகுதியாக வாழும் ஊர் என்று தானே பொருள், ஒரு நாட்டின் மங்கலமான நற்செல்வங்களுள் பசுக்களை விடச் சிறந்த செல்வம் வேறுளதோ? அப்பசுக்களைப் பாதுகாக்கும் மன்றாடியார் என்று வரலாற்றுக் காலத்தை நினைவுபடுத்தும் பெயரைத் தமது பட்டப் பெயராகப்பூண்டு திகழும் இம்மரபினரால் பயிர்குலத்திற்கே என் கொங்கு நாட்டிற்கே அதைவிட மேலாகத் தமிழ்நாட்டிற்கே பெருமை.

**வரலாற்றுச்சான்றுகள் :**

பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் எழுதிய ''பழைய கோட்டைப் பட்டக் காரர் நாட்டுப் பாடலும் பூர்வபட்டயமும்'' என்ற நூலில் மன்றாடியார் அவர்களின் அரண்மனை ஓலைச்சுவடி நகல் என்று ஒரு வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. இதன் நகல் ஒன்று சென்னைப் பழஞ் சுவடி நூலகத்தில் டி 2895 எண்ணிட்டதாக உள்ளது இந்த ஓலைச்சுவடி கலியுக சகாப்தம் 2004க்கு மேல் (?) செல்லா நின்ற விளம்பியாண்டு பங்குனி 16 ஆம் தேதி குருவாரம் பூர்வ பட்சத்து பஞ்சமியும் மிருகசீருஷ் நட்சத்திரமும் கூடிய தினத்தில் கரியான் சக்கரைக்குப் பட்டாபிஷேகம் சத்துரு சாதன பாண்டியன் முடிசூட்டினான் என்று கூறுகிறது.

இப்பாண்டியனைப் பற்றி வரலாற்றில் ஏதும் இல்லை என்றாலும் கொங்குச் சோழனான உத்தமக்காசோழன் என்பவன் பாண்டிய தேசாதிபதியாகிய சத்துருசாதன பாண்டியனை அழிக்க நாகப்பட்டினம் அருகே உள்ளபொன் பற்றி என்னும் ஊரில் வாழும் பௌத்தனான மித்திரன் எனப்பட்டவனைக் கொண்டு பூதயாகம் செய்வித்தான் என்ற செய்தி ஒரு நல்ல வரலாற்றுக் குறிப்பைக் காட்டுகிறது. இந்த பொன் பற்றி மித்திரன் என்பவன் வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலை இயற்றிய புத்தமித்திரன் ஆவன் இவன் தஞ்சைச் சோழர்களில் விஜயாலயன் வமிசத்தில் வந்த கடைசி சோழ மன்னனான வீரராஜேந்திர சோழனின் காலத்தில் இருந்தவன். வீரராஜேந்திரனின் காலம் கி. பி. 1062 முதல் 1069 வரையிலாகும். இவன் காலத்துப் பாண்டிய வேந்தனாகப் பாண்டிய நாட்டில் அப்போது யாரும் அரசாள வில்லை

அன்றியும் இக்காலத்தே கொங்கு மன்னனாக் விளங்கியவன் வீரபராக்கிரம சோழன் எனப்பட்ட விக்ரமசோழ அபிமானன் ஆவன். இவனுக்கு உத்தம சோழன் என்ற பெயர் இருந்ததா? என்பது தெரியவில்லை. எனவே இந்த குழப்பமான ஆராய்ச்சியில் ஈடுபடாமல் உத்தம சோழக் காமிண்டர் என்ற பட்டப்பெயர் இம்மரபினருக்கு வழங்கப்பட்டு வருவதைக் கொண்டு கொங்கு மன்னனான இராசாதிராச உத்தமசோழன் காலத்தில் கி பி. 1081–1100 ) இந்தகரியான் சக்கரை ஏதாவது வீரச்செயல் புரிந்து அதன் காரணமாக உத்தம சோழக் காமிண்டன் என்ற பட்டம்பெற்று இருக்கலாம். இதனைத்தான் கொங்கு மண்டல சதகமும் ''இத்தரை மீதினிற் சேனபதியாய் இருந்து வெற்றி ஒத்துவரப் பெற்றதற்கா தனக்கு இங்கு உறுபெயராம் உத்தம சோழன் என்ற அன்பாத் தரப்பெறும் ஒங்கு பட்ட வர்த்தனன் வாழ்வுறும் ஆனூர்த்தி கழ கொங்கு மண்டலமே'' என்று புகழ்ந்து பேசுகிறது.

கொங்கு நாட்டு நந்தக் காரையூர் கலங்கொண்ட நாதர் கோயில் கல்வெட்டு ஒன்று உத்தம சோழக் காமிண

டன் என்ற ஒரு நாட்டுத் தலைவரின் பெயரைக் குறிப்பிடுகிறது. இவ்வுத்தம சோழக் காமிண்டர் பயிரகுல மன்றுடியார் தலைவரையே குறிப்பிடுகிறது என்பது மேற்சொன்ன சான்றுகளால் உறுதிபட்டு விடுகிறது. இப்பெயரே பின்னர் உத்தமக காமிண்டன் என்று குறுகியது. இப்பட்டமே இன்றும் மன்றுடியார் குடும்பத்தவர் பெயரோடு காணப்படுவதாகும். இனி சக்கரை என்ற பெயரும் சர்க்கரை என்ருகாது சக்கரை என்றே ஆகும் சககரை என்ற சொல் சேனபதி என்றுபொருள்படும். இதனைக் கலிங்கத்துப் பரணியும் கலிங்க வேந்தனுக்கு படையுடன் கருணகான் வந்திருப்பதைத் தெரிவிக்கும் போது

"தண்டு கொண்டு அவன் சக்காம் வந்ததே"

என்று குறிப்பிடுகிறது எனவே நல்ல சேனபதி உத்தமச் சோழக் காமிண்டர் சக்கரை என்பதெல்லாம் கி. பி, 10 ஆம் நூற்ருண்டிலே ஏற்பட்டு விட்ட பழமைச் சிறப்பு வாய்ந்த பெயர்களாகும்.

பிற்காலத்தில் சடாவர்மன் சுந்தரபாண்டியன் கொங்கு மண்டலம் முழுவதையும் தன்வசப்படுத்திக் கொண்டு ஆண்ட போது இம்மரபினர் பாண்டிய வேந்தனின்தானைத் தலைவராயினர் சுந்தரபாண்டியன் சோழனை வென்று அவனது ராஜியத்தைக்கைப்பற்றிக் கொண்டபோது அப்படையெடுப்பில் தலைமை தாங்கிச் சென்று பாண்டியனுக்கு வெற்றி வாங்கித் தந்தனர். இதனைத் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படும் பாடல் ஒன்றும் புகழ்ந்து கூறுகிறது.

ஆயினும் இந்தச் சம்பவங்களையெல்லாம் குறிப்பிட்டு இன்னூர் காலத்தில் இன்ன சம்பவம் நடை பெற்றது என்று கூருமல் தற்போது கிடைத்துள்ள பழையகோட்டை பயிறகுல சக்கரையார் வமிசா வளிச் சுவடி கி. பி 1245 முதல் 1266 வரை புகழுடன் விளங்கிய சோழன் சர்க்கரை உத்தமக் காமிண்டன் குமாரன் அழகன் சாக்கரை உத்தமக் காமிண்ட மன்றுடியார் முதலே கூறுகிறது தற்போதைய பட்டக்காரரான நல்ல சேனபதி உத்தமக் காமிண்ட

சர்க்கரை மன்றாடியார் 27 ஆவது பட்டக்காரர் ஆவர். இந்த அழகன் சர்க்கரை மன்றாடியார் காலமான 1245–1266 மாறவர்மன், சுந்தரபாண்டியன் II காலமாகும். பாண்டியர் ஆட்சி மாறி விசயநகர ராய அரசர்கள் ஆட்சி வந்ததும் கலியுகம் 390–கி. பி 602க்குச் சமமாக இந்த ஆண்டு வருவதால் இது தவருன ஆண்டாகத் தோன்றுகிறது) ஆண்டில் வாழ்ந்த ஒரு மன்றாடியார் கிருஷ்ணதேவராயர் சமஸ்தானத்துக்குச் சென்று அங்கு வெகுநாள் தங்கியிருந்த போது அங்கே சொட்டை என்னும் போர்க்கலை (1) அறிந்த தேவகிரி சிவந்தாரையன் என்பவரிடம் சீடராக இருந்து அவ்வித்தையைக் கற்ற செய்தியைக் கூறுகிறது. இதனைக் கற்றுக்கொண்ட இவர் தில்லி சமஸ்தானத்திலிருந்து வந்து இருந்த சொட்டை வித்தைக்காரரான வச்சிரவாகு என்பவனை வென்று புறங்கண்டு ராயரின் நன்மதிப்பைப் பெற்று வீரவெண்டையம் போன்ற பல பெரிய பட்டங்களைப்பெற்று வந்தாராம். அத்துடன் முக்கோணச்சக்கரத் துடன் கூடிய சௌண்டிகாதேவி விக்கிரகத்தையும் அதற்கு மந்திர பூர்வ மாய்ப்பூசை செய்யும் யானைக்கை சௌந்த ராய்யர் என்பவரையும் கூட அனுப்பி வைத்தாராம்.

இச்செய்தியை விளக்கும் பழம் பாடல்கள் இரண்டும் கிடைத்துள்ளன. இப்பாடல்களுள் ஒன்றில் கிருஷ்ண தேவராயர் என்பதற்கு பதில் அச்சுதராயர் அரசரின் பெயர் காணப்படுகிறது

இக்காமிண்டரின் வழியில் பின்னுல் அதாவது உம்மாத்தூர் தலைவரான தஞ்சராய உடையார் காலத்தில் (கி. பி. 1482–1494) வாழ்ந்த சோமன் சக்கரை மன்றாடியாரின் மகனுன அழகன் சக்கரை உத்தமக் காமிண் டன் தென்விலையிலிருந்து ஆண்ட கொங்கராயன் என்னும் வேட்டுவத் தலைவனை வென்று உம்மாத்தூர் அரசருக்கு உதவியதால் கொங்கு 24 நாடுகளுக்கும் தலைமைப்பதவி பெற்ருன் என்று மெக்கன்சியின் கையெழுத்துப் பிரதித் தொகுப்பில் காணப்படும் ஒரு செப்புப் பட்டையத்தின்

நகல் குறிப்பிடுகிறது[1] இக்குறிப்பிலிருந்து நாம் முன்னால் குறிப்பிட்டிருந்தபடி விசய நகர அரசர்கள் காலத்திலே வேளாளர்—வேட்டுவர் பகைமை தலைதூக்கியது என்ற செய்தி உறுதிப்படுகிறது.

இம்மரபினர்களின் பட்ட வரிசையிலே மெக்கன்சிக்குக் கைபீது எழுதிக் கொடுத்தவர் 22 ஆவது பட்டக்காரர் ஆவர். இவரையும் இவர் குடும்பத்தவரையும் திப்புசுல்தான் வரிப்பணத்திற்காக தாராபுரத்தில் சிறை வைத்து இருந்தானும். பிறகு 1778ல் அனைவரையும் விடுதலை செய்து பட்டாபிஷேகம் செய்து வைத்து நல்ல சேனாபதி சக்கரை உத்தம காமிண்ட மன்றாடி என்ற பெயரை விளங்கப் பண்ணினான் என்று இவர் கூறுகிறார். இம்மரபினர்கள் கொங்கு நாட்டில் பல திருக்கோயில்களுக்கும் ஏராளமான திருப்பணிகள் செய்து வைத்துள்ளனர். இவர் தம் குல தெய்வமான ஆனூர் அம்மன் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்து வைத்துள்ளனர். அக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் அக்கோயிலுக்கு மண்டபம் கட்டவேலை செய்த சிற்பி சோமசுந்தரன் பாடியது என்று கூறும் அடிக்குறிப்பு அமைந்த பாடல் மன்றாடியாரின் வள்ளன்மையை புகழ்கிறது. பயற குலத்தவர்கள் மண்டபம் கட்ட பணவுதவி மட்டுமே செய்தனராம். அழகன் சர்க்கரை மன்றாடியாரோ வயிறு நிறைய சோறும் வாய்க்கு வெற்றிலை பாக்கும் அளித்தாராம்.

உயரு புகழ் ஆனூர் வாழ் உத்தமி மண்டபம் கட்ட
உவந்து வந்து
பயிற குலப் பெரியோர்கள் பணம் மட்டும்தான் கொடுத்
தார் பணியாளருக்கு
வயிறு நிறையச் சோறும் வாய்க்கு வெற்றிலை பாக்கும்
வாங்கித் தந்து
தமிரோடு வேலையிட்ட தர்ம மீது அழகன் சக்கரைய
தாமே...

என்கிறது அப்பாடல்

1. Mss. No. D. 3370 and S.I.I.I. No. 1223 Page 1231

திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரருக்கும் முருகப் பெருமானுக்கும் தினம் அபிஷேகம் செய்து வைக்கவும், திருவமுது படைக்க அரிசி, பயிறு காய்கறி, வெல்லம் முதலியனவும் கொடுத்தும பொன் நகைகள் பலகொடுத்தும், வேறு பல நிவந்தம் கொடுத்த செய்தியையும் திருச்செங் கோட்டுத் திருப்பணிமாலை அழகுபடக் கூறுகிறது காங்கேய நாட்டிலுள்ள சிவன்மலை முருகனுக்கு இவர்கள் செய்த திருப்பணிகள் கணக்கிலடங்காதவை இவர்களைப்பற்றி பல தனிப்பாடல்கள் ஏராளமான செய்திகளைக் கூறுகின்றன.

**தமிழைப் போற்றிய வள்ளல் :**

வரலாற்று அரங்கில் ஏறி பல வீரதீரச் சாகசச் செயல்களைப் புரிந்ததைப் போலவே இம்மரபினர் தமிழைப் போற்றிய புகழுடையவர்களாகவும் விளங்கினர். திருமலை நாயக்கரின் படைத்தலைவரான இராமப்பையன் பழைய கோட்டை வள்ளல் சம்பந்தச் சக்கரை மன்றாடியாரை வரிபாக்கிக்காக சங்ககிரி கோட்டையில் சிறை வைத்தான். அப்பொழுது இவரைப் பாடி வந்த புலவருக்கு மன்றாடியாரின் மனைவி ஏழ்மையையும் பாராது தனது தாலியைப் பரிசாக அளித்து பட்டக்காரரின் கொடைத் தன்மையை தன்னகரில்லாத் தன்மையாகச் செய்து வைத்தாள் இவ்வரலாறு பல தனிப்பாடல்களிலும் குறிக்கப்பட்டு உள்ளது.

**காடையூர் மன்றாடியார்கள் :**

பயிரன் கூட்டத்தவர்களைப் போல மன்றாடிப் பட்டம் தாங்கிச் சிறப்புடன் வாழ்ந்த மற்றொரு கொங்கு வேளாள மரபினர் பொருளந்தைக் கூட்டத்துக் காங்கேய மன்றாடியர்களாவர் இவர்கள் காடையூர் பட்டக்காரர் என அழைக்கப் படுபவர்கள். இவர்களுடைய பூர்வீகம் பற்றிய குறிப்புகளை மெக்கன்சியின் கையெழுத்துப் பிரதிகள் தொகுப்பிலிருந்து பின்வருமாறு அறிகிறோம்.

பூந்துறை நாட்டின் குமாரபுரம் என்ற கிராமத்தில் வாழ்ந்த காங்கேயன் என்பவர் மதுரை மீனாட்சி அம்மையிடம் பக்தி பூண்டு மதுரையிலே தங்கி விட்டான். இந்தக் காங்கேயனின் வழி வந்த ஒருவர் காட்டூர் என்னும் கிராமத்தில் ஏராளமான கால்நடைச் செல்வங்களைப் பாதுகாத்து கொண்டு வாழ்ந்து வந்தான். இவன் ஒரு முடமான வேளாளப் பெண்ணை மணந்து கொண்டானும். நான்கு குழந்தைகளை அவள் மூலம் பெற்றுக் கொடுத்த இவன் இறந்து விட்டான்.

இவனுடைய மூத்த மகனாக கலாவாரணகவுண்டர் என்பான் ஒதிய அரசன் (உச்சங்கி பாண்டியன் எனப்படும் தெலுங்கு நாட்டுப் பாண்டிய அரசர்கள் ஒதிய குலத்தரசர்கள் எனப்பட்டனர்)ஜகன்னாதன் என்பான் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வருவதைக் கேள்விப்பட்டு நட்டூர் அருகே தனது சிறு படையுடன் அவனை எதிர்த்துப் போர் செய்து ஓடஓட விரட்டினான். தென்னாட்டுப் பாண்டியமன்னன் கவுண்டரின் வீரச்செயலுக்கு மெச்சி காங்கேய நாட்டின் ஆட்சியுரிமையை அவருக்கே கொடுத்துமற்றைய 23கொங்கு நாட்டுப் பிரிவு நாடுகளின் வருவாயிலிருந்தும் பத்தில் ஒரு பங்கை இவன் பெறுவதற்கும் ஆணையிட்டான். இக்கவுண்டர் பல கலைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தமையால் இவருக்கு சகல கலை காங்கேய மன்றாடியார் என்ற பட்டப் பெயரையும் கொடுத்தனும். இவன் காடையூரைத் தலைநகரமாகக் கொண்டு சுமார் 25 வருடகாலம் அரசு செலுத்தினன்.

இவனுடைய வழிவந்தவர்கள் குமார காங்கேய மன்றாடியார் அமராபதிக் காங்கேய மன்றாடியார் என்ற பெயர்களை மாறி மாறிப் பூண்டு ஆண்டு வந்தனர். பாண்டிய அரசனுக்குப் பத்தில் ஒரு பங்கு வருவாய் கப்பமாகச் செலுத்தி வந்தனர். பாண்டிய நாடு இஸ்லாமியர்களின் ஆட்சியின் கீழ் வந்த போது இக்குலத்தவர்கள் இஸ்லாமியர்களின் பழக்க வழக்கங்களை அனுசரித்து வந்தமையால் அவர்களும் இக்குலத்தவர்களுக்குச் சிறப்புச் செய்து கவுரவித்தனர்.

பிறகு ராயர் ஆதிக்கமும் நாயக்கர் ஆட்சியும் வந்தது. இவர்கள் அனைவருமே இக்குலத்தவர்களுக்கு உரிய மரியாதை கொடுத்து வந்தனர். கலியுகம் 4300 ஆம் வருஷத்திலிருந்து அதாவது கி. பி. 1199—200 ஆண்டு முதல்[1] இவர்கள் காடையூரில் இருந்து ஆட்சி செலுத்தி வருகின்றனர். இக்குலத்துக் கவுண்டர்கள் அனைவருமே நன்கு கற்றவர்கள். உரிச்சொல் நிகண்டு என்னும் தமிழ் உரிச்சொற்களின் அகராதி ஒன்றை இக்குலத்து மன்றுடியார் ஒருவர் இயற்றினர் என்று சொல்லப்படுகிறது. அது இப்போது கிடைக்கவில்லை. இவர்களில் 33வது பட்டக்காரரைத்தான் வரி சரியாகக் கொடுக்கவில்லை என்பதற்காக திப்புசுல்தான் சிறையில் அடைத்து வைத்திருந்தானும். இவர் கலியுகம் 4881ல் அதாவது கி. பி 1780ல் இறந்து போனார். இவருடைய மகனே 24 ஆவது பட்டக்காரர் விதி வசத்தால் தமது சொத்து சுகங்களை இழந்து ஒரு ஏழை குடும்பத்தவராக பழனி மலைக்கு அருகேயுள்ள தும்பளாட்டி என்னும் கிராமத்தில் குடிபுகுந்தார் என்று கூறுகிறது அக்குறிப்பு. சேடன் கூட்டத்தவர்களின் காணிப்பாடல்களில் மெக்கன்சி குறிப்பிடும் முடமான வேளாளப் பெண்ணை காடையூர் பட்டக்காரரின் முன்னோரான ஒருவர் மணந்து கொண்ட செய்தி விரிவாகக் கூறப்படுகிறது.

காடையூர் காணியாளனுக்கு வெள்ளையம்மாள் என்னும் வெண்மை நிறமுடைய நொண்டிப் பெண் பிறந்தாளாம். இவளைக் கருமாபுரம் பொருளந்தைக் கூட்டத்தில் வந்த இளைஞனுக்கு மணம் செய்து வைத்தார்களாம். அப்பெண்ணுக்குச் சீதனமாக காடையூர் காணியை வழங்கினராம். அவள் தந்தை இறந்த பின்பு காடையூர் காணி தமக்கே சொந்தமென சேடன் கூட்டத்தார் வழக்குப் பேசி வம்பு செய்தார்கள். சேடன் கூட்டத்தாருக்கும், பொருளந்தை கூட்டத்தாருக்கும் இதனால் கலகம் நேர்ந்தது. இதில்

---

1. கொங்கு மன்னன் குலோத்துங்கன் IIன் காலம்,

வெள்ளையம்மாளின் கணவன் கொல்லப்பட்டான். நாட்டார் சபை முன் வழக்கு நடந்தது. வெள்ளையம்மாள் காடையூர் காணியைத் தனக்குத் தன் தந்தை சீதனமாகக் கொடுத்தது உண்மை என்று பட்ட மரத்தைத் தொட்டுச் சத்தியம் செய்தாள். அதனால் பட்டமரம் தளிர்க்கவும் சேட கூட்டத்தார் வெள்ளையம்பாள் கூறுவது உண்மை எனத் தெரிந்து காடையூர் காணியை வெள்ளையம்மாளுக்கே உரிமையாக்கி விட்டு வேறு ஊர்களில் குடியேறினர்களாம் வெள்ளையம்மாளின் தலைமகனே முழுக்காதன் என்ற பெயருடன் ஆட்சி ஏற்ற காடையூர் பட்டக்காரரின் முதல்வர் என்கிறது. அப்பாடல் தொகுப்பு

மெக்கன்சியின் குறிப்புகளிலிருந்து நான் எடுத்துக் காட்டிய கலாவராண கவுண்டருக்கு (சேடன் கூட்டத்தைச் சேர்ந்த நொண்டி வெளாளப் பெண்ணிற்கும் பொருள்ந்தை கூட்டத்து கருமாபுரா இளைஞனுக்கும் பிறந்தமகன்) முழுக்காதன் என்னும் பெயர் உண்டென்றும் எனவே அவர் வழி வந்த காடையூர் பட்டக்காரர் வமிசத்தவர்களை முழுக்காதன் கூட்டத்தினர் என்றும் அழைப்பதுண்டு என்று தெரிகிறது. ஆயினும் தந்தை வழி தழுவி பார்க்கும்போது இவர்களை பொருளந்தைக் கூட்டத்தவர் என்று கூறுவதும் பொருந்தும் எனத்தெரிகிறது. இக்கருத்தில் தவறு ஏதேனும் கருதினால் அம்மரபினர் நமக்குத் தெரிவித்தால் திருத்திக் கொள்ள இயலும். கொங்கு மன்னனான விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று (கி. பி. 1004-1045) காடையூர் பொருளந்தைக் கூட்டத்தார் என்று குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. காங்கேயன் என்ற பெயரும் மெக்கன்சி குறிப்பிடுவது போல கங்கையின் புத்திரனான முருகப்பெருமானின் பெயர்வழித் தோன்றியதல்ல. கங்க நாட்டு ஐயன் என்ற தலைமைச் சிறப்பு பற்றி வந்த பெயராக இருந்து அதுவே காங்கேயன் என்று மாறி இருக்கலாம். இவ்வமிசத்தவர்களைப் பற்றிய பழம் பாடல் ஒன்று.

*சிங்காசனுதிபதி அதி வீரபாண்டியன்*
*செங்கோல் செலுத்த மன்னுள்*
*சீரான காங்கேய நன் நாட்டினிற் கீர்த்தி பெறு*
*செய கொங்கு மன்ருடியார்.*

என்று இவர் வமிசத்தில் ஒருவரைக் குறிப்பிடுகிறது இதில் கூறப்படும் வீரபாண்டியன் ஜடாவர்மன் வீரபாண்டியனுக (கி. பி. 1253-1268) இருத்தல் வேண்டும்.

**பல்லவரையக் கவுண்டர்கள் :**

இப்பல்லவரையக்கவுண்டர்கள் புகழ்மிக்க செங்கண்ணர் கூட்டத்தவர்கள் ஆவர் இக்கூட்டத்தவரின் சங்க காலந் தொட்ட பழமை பற்றி முன்னர் பல இடங்களிலும் கூறப் பட்டது.

**கல்வெட்டுச் சான்றுகள் :**

இக்கூட்டத்தைச் சேர்ந்த பல்லவரையர்களைப் பற்றி கொங்கு நாட்டிலும் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் வரையப்பட்டுள்ள பல கல்வெட்டுகள் எடுத்துக்கூறுகின்றன அவிலாண்டபுரம் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்று வெள்ளாளன் செங்கண்ணன் என்பவரைப் பற்றிக் கூறு கிறது குண்டோடம் கல்வெட்டு[1] கோதை மங்கலம் வடுகப் பிள்ளையாருககு அளித்த நன் கொடையை குறிப்பிடுகிறது. இதனை அளித்தவர் சோழன் பல்லவரையன் என்பவரைக் கூறுகிறது. கொங்கூர் கல்வெட்டு விக்கிரமசோழப் பல்ல வரையன் பெருமாள் பெருதண்ட நாட்டரையன் என்று இம் மரபினரைக் குறிப்பிடுகிறது வெள்ளக் கோயில் பராக்கிரம சோழீஸ்வரருககும் கருணைகாட்டிய பிள்ளையாருக்கும் நன் கொடை அளித்தவராக அக்கோயில கல்வெட்டு ராஜராஜ புரம் சாமந்தன் சோழ நாராயணப் பல்லவரையர் என்ப

1. ARE 159/1920.

வரைக் குறிக்கிறது. இவரும் இக்கூட்டத்தவரே இன்னும் பல கல்வெட்டுகளிலிருந்து இச்செங்கண்ண கூட்டத்தாருக்கு வாழ்வித்தார் சிங்கன் சோழன் ராஜேந்திர சிங்கக் காமிண்டன் காஸரச்சேரி அழகிய சோழப் பல்லவரையன் வல்லி பாண்டன் ஆகிய விருதுகள் வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் உருவாலீஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒன்று[1] அண்டநாட்டு பனையூர் வளவன் பல்லவரையன், சிங்கன் சேந்தனுன மதுரோதயப் பல்லவரையன் ஆகியோரைக் குறிக்கிறது. இவற்றுள் அண்டநாடு என்பது கொங்கு 24 நாட்டு நாடுகளுள் ஒன்ருகும். சிங்கன் சேந்தன் என்பதிலுள்ள சேந்தன் என்ற பெயர் இக்கூட்டத்துள் ஒருவர் பாண்டிய மன்னனுல் ஆதரிக்கப் பெற்று அவர்களுடைய பட்டமான சேந்தன் என்ற பெயரையும் தமது பட்டமாகப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. இம்மதுரோதயப் பல்லவரையர் செங்கண்ணர் கூட்டத்து வேளாளர் தாம் என்பதையும் ஸ்ரீ வல்லபாண்டியன் காலத்தே சிற்றரசர் நிலையில் புகழ் பெற்று விளங்கினுர் என்பதையும் இம்மன்னனின் வேறு பல கல்வெட்டுகளும் உறுதிசெய்கின்றன. இக்கூட்டத்தவரின் காணியூர்கள் காங்கேயம் புதூர் கன்னபுரம், அகிலாண்டபுரம் முதலிய ஊர்களாகும்

## புதூர் பட்டக்காரர் வரலாறு :

செங்கண்ணர் கூட்டத்திலே வந்த சிற்றரசர்களுள் புதூர் பட்டக்காரராகிய பல்லவரையக் கவுண்டர் என்பாரின் வரலாறு குறிப்பிடத்தக்க ஒன்ருகும் இந்த பல்லவரைய கவுண்டர் என்று பட்டம் பெறறுத் திகழ்ந்த புதூர் பட்டக்காரர்களின் முன்னேர் ஒருவர் மூன்ரும ராஜராஜசோழன் காலத்தில் பெரும்படை கொண்ட சிற்றரசராக விளங்கி வந்தார் ஊழ்வினை வசத்தாலும் மாறவர்மன் சுந்தர

1. (ARE 331-1916)

பாண்டியரின் சூழ்ச்சியாலும் காடவ அரசனான கோப்பெருஞ் சிங்கன் என்பவனால் இராசராசன் சேந்தமங்கலம் என்னும் ஊரில் சிறை வைக்கப்பட்டான். அப்பொழுது கொங்கு நாடு முழுவதும் போசள மன்னர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. போசள மன்னன் வீரநரசிம்மனது மகளை ராஜ ராஜன் மணந்து இருந்ததால் வீரநரசிம்மன் தன் மருமகனை விடுவிக்கச் சேந்த மங்கலத்தின் மீது தன் படை வீரர்களை ஏவி அந்நகரைச் சூறையாடி ராஜராஜனை கோப்பெருஞ் சிங்கன் பயத்தினால் விடுவித்து விடும்படி செய்தான். இப் படையெடுப்பு கொங்குநாட்டிலிருந்து படைகள் புறப்பட்டே நிகழ்ந்தது இதில் சேனாதிபதி பட்டமேந்திச் சென்றுபோசள சேனாபதிகளோடு இணைந்து போர் புரிந்து சோழனை விடு வித்து சோழநாட்டிலே முடிசூட்டி வைத்தார் இக்கவுண்டர் இதனை தனிப்பாடல் ஒன்று "போரிட்ட பல்லவன் தேசத்தை வெட்டியே பொன் மகுடம் நீ படைத்தாய்" எனவும் கொங்கு மண்டல சதகம் "பல்லவ அடல் வீரன் என்றே வருபட்டம் பெற்றவன்" என்றும் கூறிப் புகழ்கிறது

இக்குலத்தில் பின்னால் வந்த பட்டக்காரர்களைப்பற்றி மெக்கன்சியின் கையெழுத்துப்பிரதி தொகுப்பும் பேசு கின்றன. இதிலும் தொண்டை நாட்டில் இருந்து வேளாள குடியினர் சிலர் கொங்கு நாட்டில் குடியேறினர் என்றும் (நல்லன் நாடு தொண்டை நாட்டின் ஒரு பகுதி என்பது இங்கு நினைக்கத்தக்கது) அவர்கள் கொங்குநாட்டு முற்குடி களான வேட்டுவர் குலத்து பயிலவன் பயிலவன் கவிலவன் ஆகியோரை வென்று அவர்களுடைய காணியாட்சியில் பாதியைப் பெறும் உரிமைபெற்றனர் என்றும் கூறப் பட்டுள்ளது சகவருஷம் 1351 முதல் 1712வரை 19 பட்டக் காரர்கள் ஆண்டனர் என்றும் அவர்களுள் மதுரைச் சொக்கநாத நாயக்கர் காலத்தில் இருந்த பட்டக்காரர் ஆறு நாடுகள் கொண்ட ஈரோடு கர்த்தா மனையை ஆட்சி புரிந்தார் என்றும் (கர்த்தா மனை என்பது காணியாட்சி என்பதின் மறுபெயராகும்) கூறுகிறது. இவருக்கு அடுத்த பட்டக்காரர் ஞானதர் ஆயி காலத்தில் ஐந்து காணியூர்களுக்கு

தலைவராக விளங்கினூராம். அடுத்தவர் திப்புசுல்தானுல் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது இறந்தார். இவருக்கும் அடுத்தவர் சுதந்திர போராட்ட வீரராகிய சென்னி மலை கவுண்டரால் கொல்லப்பட்டார். இச்சென்னிமலைக் கவுண்டரின் வீரவரலாறு பின்னுல் குறிக்கப் பெறும். இவருடைய மகனுன சிதம்பர பல்லவராயக் கவுண்டரே கைபீது எழுதிக்கொடுத்தவர் ஆவர். இம்மரபினர் இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகின்றனர். இச்செங்கண்ணர் கூட்டத்தை சேர்ந்தவரே கொங்கு நாட்டில் பல அறச் செயல்களைச்செய்துபுகழுடன்வாழும் நாச்சிமுத்துக்கவுண்டர் அவர்களின் திருமகனுர் திரு. ந. மகாலிங்கம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மோதூர் காங்கேயர்கள் :**

கண்ணகூட்டம் அல்லது கண்ணகுலம் என்பது கொங்கர் கூட்டங்களுள் சிறப்புப் பெற்றதொரு கூட்டமாகும். இக் கூட்டத்தவர்கள், மன்ருடியார்கள், காலிங்கரையர்கள்போல வரலாற்றில் மிகப்பெரிய அளவிற்குச் சிறப்புப்பெற்றவர்கள் ஆவர். இவர்களுக்கும், மகாபாரதக் கண்ணனுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இவர் கள் காடையூரைச் சில நூற்ருண்டுகள் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இக்கூட்டத்திற்கு கண்ணன் கூட்டம் என்று பெயர் வரக் காரணம் என்ன?

கண்ணவர் என்ற சங்கத் தமிழ்ச் சொல் அமைச்சர் என்னும் பொருளைத் தரும் [1] இதனடியாக வந்த பெயரே கண்ணா கூட்டம் என்பதாகும் கண்ணவர் கூட்டம் என்பதே காலப்போக்கில் கண்ண கூட்டம் என்று ஆயிற்று. இராசகேசரி குலோத்துங்களின் அமைச்சராக விளங்கியவர் களுள் ஒருவனுக இக்கண்ண குலத்துத் தலைவன் ஒருவன்

---

பாட்டும் தொகையும் பக் 51.

குறிக்கப்படுகிறன்.[1] இவன்பெயர் சூரியதேவன் செங்கதிர்ச் செல்வனுன ராஜேந்திர சோழ மூவேந்த வேளான் என்பது. சூரிய தேவன் செங்கதிர்ச் செல்வன் என்ற அழகிய பெயர் பூண்ட இவ்வமைச்சர்பிரான் மோரூர்க் கண்ண கூட்டத்தைச் சேர்ந்தவனுகவே இருத்தல் வேண்டும். ஏனெனில் மோரூர்க் கண்ணர்களுக்கு மூலபுருஷனுகப் பிற்காலத்தில் அதாவது 13-ம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த சூரிய காங்கேயன் என்பவனே குறிக்கப்படுவதால் இச்சூரிய காங்கேயனின் பாட்டனுராகவோ அல்லது முப்பாட்டனுராகவோ இதே பெயரையுடைய சூரியதேவனுன செங்கதிர்ச் செல்வன் இருந்திருத்தல் சாத்தியமே ஆகும்.

கண்ண கூட்டத்தவர்களின் தலைமைக் காணியூரான மோரூர் கொங்கு 24 நாடுகளில் ஒன்ருன கீழ்கரைப் பூந்துறை நாட்டின் தலைநகரமாகும். இது வடகொங்கு நாட்டைச் சேர்ந்த திருச்செங்கோட்டுக்கும் சங்ககிரிக்கும் நடுவில் அமைந்த ஒரு ஊர் ஆகும். இவ்வூரில் உள்ள நல்ல புள்ளியம்மனே இக்குலத்தவர்களின் குலதெய்வமாக விளங்குகிருள். இவ்வம்மனைப் பற்றி கதையொன்று சொல்லப்படுகிறது. இவ்வம்மனின் திருவுருவச் சிற்பத்தை கோயிலில் பிரதிஷ்டை செய்யும்போது அங்கிருந்த சிற்பி ஒருவன் அதனுள் தேரை ஒன்று இருப்பதாகக் கூறினுனும். பிரதிஷ்டை செய்விப்போரும், மற்றையோரும் எப்படி அது அவனுக்குத் தெரியும் என்று கேட்டபோது சிற்பி சந்தனக் குழம்பைப் பெற்று அதனை சிற்பம் முழுவதும் தடவினுனும். அது காய்ந்தபோது ஒரே ஒரு இடத்தில் மட்டும் உள்ளங்கை அகலம் காயாமல் இருந்ததாம். சிற்பி அந்த இடத்தை உளி கொண்டு தட்ட ஒரு சில் பெயர்ந்து விழுந்து அதனுள் இருந்த தேரை ஒன்று வெளியே குதித்து ஓடியதாம். இதனுல் அங்கிருந்த அனைவரும் சிற்பம் பின்னமடைந்து விட்டதே என்று கவலைப்பட சிற்பி பல சிற்ப

1. ARE. 304 of 1927-28.

சாத்திரங்களை மேற்கோள்காட்டி இந்த இடத்தில் இந்த அளவில் புள்ளி விழுந்ததால் குற்றமில்லை என்றும் அது நல்ல புள்ளியே ஆதலால் அம்மனுக்கு நல்ல புள்ளி அம்மன் என்று பெயர் வைக்கலாம் எனவும் கூற அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர். அதனால்தான் இந்த அம்மனுக்கு நல்ல புள்ளியம்மன் என்று பெயர் வந்தது எனவும் இச்சம்பவம் கி. பி. 1467—ல் நடைபெற்றது எனவும் சேலம் மாவட்டக் கெசட்டியர் குறிப்புத் தருகிறது. இம்மோரூரில் உள்ள பாம்பலங்கார ஈசுவரன் கோயிலும் பழைமையான கோயிலாகும். இக்கோயில் கண்ணர் குலக்காங்கேயர்களால் பல திருப்பணிகளைக் கண்ட பிரசித்தி பெற்ற கோயிலாகும்.

**சூரியக் காங்கேயன் :**

மோரூர் கண்ணர்கள் காங்கேயர் என்ற பட்டம் தாங்கி விளங்கினர். இவர்களில் 76 தலைமுறையினர் இவ்வாறு காங்கேயர் பட்டம் பெற்றுச் சிறப்புடன் விளங்கினர் என்று சொல்லப்படுகிறது. இவர்களுள் ஒருவனே சூரியக் காங்கேயன். இவனைப் பற்றிக் கூறப்படும் ஒரு வரலாற்றில் இருந்து இவன் சடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் (1251–1261) வாழ்ந்தவன் என்று தெரிகிறது. இச்சுந்தர பாண்டியன் காலத்தே அதாவது கி. பி. 1253 முதல் 1268 வரை கொங்குநாடு நடுநாடு, தொண்டை நாடு ஆகியவற்றுக்கு அரசப் பிரதிநிதியாக இருந்து ஆண்டவன் சடாவர்மன் வீரபாண்டியன் என்பதை நான் முன்னரே எழுதியிருக்கிறேன். கொங்கு நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்திருந்த மகத நாட்டை ஆறகளூரைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டவர்கள் பழைய வாணகோப்பாடி அரச மரபில் வந்த வாண அரசர்கள் ஆவர். இவர்களுள் இக்காலத்தே வாண அரசனாக விளங்கியவன் வீரமகதன் என்பவன் ஆவன். சடாவர்மன் சுந்திர பாண்டியன் முதலில் இவனை வென்று இவன் நாட்டைத் தனக்குக் கீழ்க்கொணர்ந்து பிறகு இவனிடமே இவன் நாட்டைக் கொடுத்ததோடு சோழநாட்டின் ஒரு

பகுதியையும் கொடுத்து தனது மெய்க்கீர்த்தியில் தன்னை பாணராஜ்ய பிரதிஷ்டாச்சார்யன் என்று சொல்லிக் கொள்வதோடு திருச்சி திருவானைக்கா கல்வெட்டு ஒன்றில், வாணனுக்கு சோழராஜ்யத்தை நன்கொடையாக கொடுத்தான் என்ற பொருளில் அமைந்த அழகிய கவிதை ஒன்றில் புகழ்ந்தும் கொள்கிருன். இவ்வீரமகதனைக் கைதியாக்கி கொண்டு வருவதில் கொங்கு நாட்டையாண்ட வீரபாண்டியன் உதவினன் போலும். இவ்வீரபாண்டியனின் கீழ் ஒரு படைத்தலைவனாக சூரிய காங்கேயன் விளங்கி வந்திருக்க வேண்டும்.

இந்த வீரமகதனான வாண அரசன் பாண்டியனுக்குக் கீழ்ப்படிய மறுத்ததோடு கொங்கு நாட்டை கைப்பற்றக் கொங்குச் சோழன் மூன்ரும் விக்கிரம சோழனுடன் சேர்ந்து முயன்ருன். இதனை திருவண்ணுமலைக் கல்வெட்டு ஒன்று

"கொங்கும் கலிங்கமும் கொண்ட
கண்டா கொடித்தேகுதியர் தங்கும்
படி கொண்ட வாணதியா......"

என்று வாண அரசனைப் புகழ்வதாகக் கூறிச் செல்கிறது. எனவே கோசம் கொண்ட வீரபாண்டியன் சூரியக்காங்கேயன தலைமையில் படையை அனுப்ப, அவனும் போர் செய்து வாணனை வென்று அவனை உயிருடன் பிடித்து வந்து சங்ககிரி (சங்கரி துர்க்கம்) கோட்டையில் இருந்த வீர பாண்டியன் முன் நிறுத்தினன். இச்செய்தியைக் கொங்கு மண்டல சதகமும்

"மிண்டாறை வாணனை முன்வெட்டாமற் பாண்டியனேற் கொண்டு வந்து நிற்கவிட்ட கொற்றவன்... வாழ்சூரிய காங்கேயனே" என்று புகழ்ந்து கூறுகிறது. இவனுக்குப் பிறகு மோரூர் கன்னர்களில் சிறப்புப் பெற்றிருந்தவர்கள் பலராவர். இவர்களுள் வடுகாண்ட நாயகக் காங்கேயன் என்பவன் ஒருவன். இந்த வடுகாண்ட நாயகக் காங்கேயன் பேரில் அநுராகமலை என்ற ஒரு பிரபந்தம் இருந்ததாகத் தெரிகிறது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை :

இவனுக்குப்பின் வந்தவர்களுள் இளையான் காங்கேயன் என்பவன் ஒருவன். இவன் காலத்தில் நல்ல புள்ளியம்மன் பள்ளு என்ற சிற்றிலக்கியம் இயற்றப்பட்டதாகத் தெரிவதால் இவன் 15-ம் நூற்றாண்டினன் போல் தோன்றுகிறது. உரிச்சொல்நிகண்டு என்ற தமிழ் இலக்கண நூலையும் இயற்றியவன் இக்கண்ணர்குல காங்கேயர்களுள் ஒருவன் என்று கூறுகிறார்கள். "பெருத்த நூல் பலவுஞ் சுருக்கி தமிழில் உரிச்சொல் நிகண்டென உரைத்த காங்கேயன்"

என்று பாம்பணக் கவுண்டர் குறவஞ்சி போன்ற நூல்கள் கூறுவதை இதற்குச் சான்றாகக் காட்டுகிறார்கள். ஆனால் இதனை இயற்றியவர் காடையூர் காங்கேய மன்றாடியார்களில் ஒருவர் என்பதை முன்னமே காட்டியிருப்பதை நினைவில் கொள்க. விஜயநகர அரசர்களின் காலத்தில் இவர்களுக்கும் இம்மடி பட்டம் கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

**திருமலைக் காங்கேயன் :**

மோரூர் கண்ணகுலத்தில் வந்தவர்களுள் இத்திருமலைக் காங்கேயனும் ஒருவன். இவனை சிந்தளத்தூரில் உள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சகவருஷம் 1455-ல் (கி. பி. 1533) ஸ்ரீ வீரப்ரதாப கிருஷ்ணராயர் மஹாராயர் ஆட்சி காலத்தில் (கிருஷ்ணதேவராயர்) வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதில் எழுகரைப் பூந்துறை நாட்டு மோரூரில் திருமலை காங்கேயன் சீமை என்று கூறப்பட்டிருப்பதால் இவன் ஒரு சிற்றரசராகவே இருந்துள்ளதாகத் தெரிகிறது. இவனுக்கு அடுத்தவன் நல்லதம்பிக்காங்கேயன் ஆவான். இந்த நல்லதம்பிக் காங்கேயனே மோரூர் பாம்பலங்காரர் ஆலயத்லதக் கட்டியவன் என்று தெரிகிறது. இக்காங்கேயக் கவுண்டர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியவர். எம்பெருமான் என்னும் புலவரைக் கொண்டு இவரே ராமாயணத்தைத் தக்கை என்னும் உடுக்கை போன்ற வாத்தியத்துடன் எளிய தமிழில் பாமர

மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இசையுடன் பாடத் தக்க இலக்கியத்தை இயற்றச் செய்தவர். கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் செய்த இலக்கியத் தொண்டுகளில் மிகவும் பெரிய தொண்டு இத்தக்கை ராமாயணம் இயற்றியது இதன் ஏட்டுப்பிரதிகள் கிடைக்காமல் போன இக்காலத்தில் இந்த அரிய இலக்கியத்தை மீண்டும் வெளிக்கொணர அரிதின் முயன்று பலவிடங்களிலும் தன் முதுமையையும் பாராது தேடி ஏடு ஏடாகச் சேகரித்துத் தொகுத்து வைத்திருக்கிறார் எழுமாத்தூர் மகாவித்வான். வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பெருமகனார் இவ்விலக்கியத் தொண்டு மாபெரும் தொண்டாகும் இத்தக்கை ராமாயணம் பாடுவித்ததை பழம்பாடல் ஒன்று.

"மெத்தவே கண்ணன் வெண்ணெய்தனில் விருத்தச்
சீராமாயணத்தைச்

சுத்தநாக் கம்பநாடன் சொன்னான் சொன்ன பொருள்
தக்கயிசையாலே

பத்தர்பாடி எம்பெருமானைப் பகரும்படி செய்தான்
மோரூரான்

அர்த்தநாரி சொல், நல்லதம்பியவனருள் பெற்று
வாழ்வாரே"

என்று புகழ்ந்து கூறுகிறது. இன்னும் இம்மடிக்குமாரக் காங்கேயன் என்பார் வருணை கோவை என்று ஒரு நூல் யாத்த படிக்காசுப் புலவரை ஆதரித்துப் பரிசுகள் பல வழங்கி கௌரவித்தாராம். இதைத் தவிர இன்னொரு பெரிய தமிழ்த் தொண்டையும் இப்பரம்பரையினர் செய்துள்ளனர். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் என்ற புலவர் விஜயமங்கலத்துக்கு அருகேயுள்ள நிரம்பை என்னும் ஊரினர். இவ்வடியார்க்கு நல்லார் காலத்தில் வாழ்ந்த மோரூர் மன்னர் பொப்பண்ண காங்கேயன் என்பார் இவரே அடியார்க்கு நல்லாரைக் கொண்டு சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதச் செய்து தமிழுக்குப் பெருமை தேடித்

தந்ததோடு, தமது குலப்பெருமையும் உயர்த்திக் கொண்டார். இவ்வாறு இவர்கள் எண்ணற்ற தமிழ்ப்பணி புரிந்து அறங்காவலர்களாக, இறைவழி நடத்து நல்லாட்சி செய்து வந்தமையால் நாட்டு கவுண்டர், நாட்டாக்கவுண்டர், மோரூர் நாட்டார் என்று மக்களால் அழைக்கப் பட்டனர் கன்ன கூட்டம் என்ற பெயரே மறைந்தது. இவர்களது புகழையும் பெருமையையும் எடுத்துச் சொல்லும் வேறு பல தனிப்பாடல்களும், பல கல்வெட்டுகளும் கொங்கு மண்டலம் முழுவதும் காணக்கிடக்கின்றன

சாத்தூர் வானவராயக் கவுண்டர்கள் :

வாணக்கவுண்டர் என்பவர் கொங்கு 24 நாடுகளை உடைய கொங்கு வேளாளர்களில் ஒருவர் இவர் தளறயனூர் நாட்டினை (பழனி மலை நாட்டிற்கு மேற்கே உள்ளது) காணியாட்சியாக நாட்டாண்மை செய்து வந்தார் இவருடைய வழியில் வநதவர் பிரவிய வாண கவுண்டர் எனபவர். இவரை வையாபுரி நாட்டை ஆண்ட பாலராஜன் என்பவன் நாட்டை விட்டுத் துரத்தி விட்டான். வாண கவுண்டர் நல்லிருக்கை நாட்டுக் காட்டைத் தஞ்சம் புகுந்தார் அப்பொழுது விஜயநகர அரசனாக இருந்த திருமலை தேவராயருக்கு முன்னால் தன்னுடைய வீரத்தைக் காட்டி இக்கவுண்டர் கிழக்கே சம்பாதி மலையையும், தெற்கே வராக மலையையும் வடக்கே நகரம் கரைப்பாடியையும் மேற்கே ஏட்டப்பலைப்பாடியையும் எல்லையாகக் கொண்ட பகுதிகளுக்கு பாளையக்காரனானன். அதோடு வணங்காமுடி வாணகோவரையன் என்ற பட்டத்தையும் பெற்ருன். இவருடைய வழியில் வந்த குஞ்சு வாணகவுண்டர் என்பார் முதல் கி. பி. 1786 வரை 24 பாளையக்காரர்கள் ஆண்டு வந்தனர். இவர்களுள் முதல் 9 பேர் ராய அரசர்களின் காலத்திலும் அடுத்த பத்து பாளையக்காரர்கள் மதுரை நாயக்க அரசர்கள் காலத்திலும் வாழ்ந்தனர் 20 ஆவது பாளையக்காரர் மைசூர் அரசருக்குக் கப்பம் கட்டியவர். 25 ஆவது பாளையக்காரரே மெக்கன்சிக்கு பத்திரம் எழுதிக்

கொடுத்து பத்தில் ஒரு பங்கு வரிப்பணத்தையும் கிழக்கித்தியக் கம்பனியாருக்கு செலுத்தும் ஒப்பந்தம் செய்து கொண்டார். இவை மெக்கன்சி தரும் குறிப்பு.

இந்த வாணராயக் கவுண்டர்கள் பவழ கூட்டத்தவராகும் இவற்றுள் நெல் அரிசிப்பவழம், கம்பு அரிசிப்பவழம் என்று இரு பிரிவுகள் குறிக்கப்படுவதால் பவழம் என்பது நஞ்சை தானியமாகிய அரிசி மணிகளையும், புஞ்சை தானியமாகிய கம்பரிசி மணிகளையும் உணர்த்தி இவைகளை மிகுதியாக உடைய கூட்டத்தினர் என்னும் பொருளில் வந்திருக்கலாம்.

பழந்தமிழ்ப் பாடல்கள் "பவழவங்கி சாத்தர் வானவராயர்", "பவள வானவராயர்" என்றெல்லாம் குறிப்பிடுவதும் இதன் அடிப்படையாகவே இருக்கலாம். இவர்களுடைய காணியூர்கள் பெரும்பாலும் சேரநாடாகிய மலையான நாட்டின் எல்லைப் பகுதிகளிலே இருப்பதால் இவர்களுக்கு அக்காலத்தில் வானவ்ரையர் அதாவது சேரமன்னர்களின் குறுநில மன்னர்கள் என்று பட்டம் வழங்கியது எவ்வளவு பொருத்தம் என்று தெரிகிறது. கொங்கு நாட்டின் தென் பகுதியையும், தென்மேற்குப் பகுதியையும் கி. பி. 4-ம் நூற்றுண்டு முதல் சேரமன்னர்களின் ஒரு தாயாதிப் பிரிவினர் அதாவது பதுமன் தேவியாரின் மகளை மணந்து கொண்ட செல்வக் கடுங்கோ வாழியாதன் முதல் ஆட்சி செய்து வந்தனர் கொங்கணி மன்னர்களின் ஆட்சி வலுவடைந்த பிறகு இச்சேர மரபினர் அவர்களின் கீழ்க் குறுநில மன்னர்களாகவும், கங்க அரசர்களின் ஆட்சி காலத்தில் ஒரு சமயம் அவர்களுக்கு அடங்கியும், ஒரோர் சமயம் சுயேச்சையான அரசர்களாகவும் இருந்து ஆட்சி செய்து வந்தனர்.

இவர்களில் ஒரு பிரிவினர் வானவராயர்கள் என்றும் மற்றொரு பிரிவினர் வாணவராயர்கள் என்றும் குறிக்கப் பட்டனர்போலும். வாணவராயர்கள் என்ற பெயர் வாணகப் பாடியை ஆண்ட வாண அரசர்களை வென்றதால் ஏற்பட்ட

பட்டப் பெயராகும் சோழன் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டு ஒன்று பொன் கொண்ட வாண வல்லபராயக் காமிண்டர் என்பவர் பெயரைக் குறிப்பிடுகிறது. இக்குலோத்துங்கன் காலத்தில் பொன்பரப்பினன் வாணகோவ ராயன் என்ற வாணன் சோழனோடு மாறண்டு தொல்லை கொடுத்து வந்தான். அவனை வென்று அடக்கியதால் இக்காமிண்டர் இவ்வாறு பட்டம் கொடுத்து சிறப்பிக்கப்பட்டார் போலும். வாளவராயர் என்று பட்டமேந்தியவர் சேரமன்னர்களின் சிற்றரசர்கள் என்ற குறிப்பு வாளவ ராயர் பட்டயம் என்னும் குறிப்பில் காணப்படுகிறது. இது சேரமான் பெருமாள் என்னும் சேர அரசர் சகம் 713-ல் அதாவது கி. பி. 791-ல் ஆண்டவர் என்றும் அவருக்கே சோழன் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து 8000 வேளாளர் குடும்பங்களைச் சீதனமாக அளித்தான் என்றும் குறிப்பிடுகின்றது. இந்த வழியில் வந்தவரே சமத்தூர் வாளவராயர் என்றும் குறிப்பு காணப்படுகிறது வானவன் என்பது சேரனைக் குறிக்கும். வாளவரையன் என்பது சேரனின் சிற்றரசன் என்னும் பொருள் தரும். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுமே இவ்வாணராயர்களுக்குப் பொருந்துவதால் நாம் எப்படி வேண்டுமாயினும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது இருபிரிவினருமே ஒருவர்தான் எனவும் சேரனின் சிற்றரசனான வாளவராயர்களே வாணர்களை அடக்கி வாணராயர் என்று பட்டம் பெற்றார் என்றும் கொள்ளலாம்.

இக்கூட்டத்தைப் போலவே சேரர்களுடன் தொடர்பு பூண்டிருந்த மற்றொரு கூட்டத்தினரையும் இங்கு நாம் கூறலாம். சேரன் கூட்டம் என்பதே அக்கூட்டமாகும். இக்கூட்டத்தவர்களும் சேர மன்னர்களிடம் படைத் தலைவர்களாகவும் அதிகாரிகளாகவும் விளங்கி வந்ததாகத் தெரிகிறது. இச்சேரலன் கூட்டத்தவரின் குலதெய்வமே வஞ்சியம்மன் என்று கொங்குச் சேரர்களின் தலைநகரமாக விளங்கிய கருவூரின் மறுபெயரான வஞ்சி என்ற பெயரில்

இருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மூலனூர் வஞ்சியம்மனைப் பற்றி முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. அவ்வளவு பழமையான அம்மனுவள் இம்மூலனூர் வஞ்சியம்மன்.

இப்பவழ கூட்டத்தவர் சேரமன்னர்களுக்கு முடி சூட்டும் சிறப்பையும் பெற்று இருந்தனராம். இத்துணை புகழ் பெற்ற பவளகுலத்தில் வந்த கவுண்டர்கள் இன்றும் கொங்கு நாட்டில் சிறப்புடன் விளங்கி வருகின்றனர். சமத்தூர் பட்டக்காரர் குடும்பம் புகழுடன் விளங்கி வருவதை முன்னரே பார்த்தோம். பாராளு மன்ற உறுப்பினராக இன்று புகழுடன் விளங்கி வரும் திரு சி. சுப்பிரமணியம் இப்பவள குலத்தில் வந்த பெருமகனாரேயாவர். நாடாண்ட பழைய பெருமை இன்றும் தம் கூட்டத்தவருக்கு உண்டுஎன்பதை திரு சுப்பிரமணியம் நிலைநாட்டிக் கொண்டு விளங்கியது. பெருமைக்குரியது. ஆட்சித்துறையில் மட்டுமின்றி ஆன்மீகத் துறையிலும் சிறந்து விளங்கியவர்கள் இக்கூட்டத்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்துத் துறவியான ஸ்வாமி சித்பவானந்தர் ஆவர். இம்மகான் பவளகுலத்தவரே.

**சமத்தூர் மன்னர்களும் தமிழ்ப்புலவர்களும்**

இச்சமத்தூர்வானவராய கவுண்டர்கள் பெருங்கொடை வள்ளல்கள், தமிழ்பாடும் புலவர் பெருமக்கள் பலரைப் போற்றிப் பாதுகாத்தவர்கள், நீதி தவறாத நேர்மையானவர்கள். இவரைப்பாடிய தமிழ்புலவர்கள் இவர்களை "பவழ அங்கி சாத்தர் வானவராயர் எனவும் புலவர்க்கு ஓய்விலாது உதவும் கீர்த்தி ஓங்க வாழ் பவழ வானவராயர்" எனவும் தமது பாடல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

**வாலைமன்ருடியார்.**

மேற்குறிப்பிட்டபடி கொங்கு நாட்டின் பல பகுதிகளுக்கும் தலைமை உரிமை பூண்டிருந்த கவுண்டர் தலைவர்களைத் தவிர வாலைமன்ருடியார், தேவமன்ருடியார் என்ற பட்டங்

கலைப் பெற்ற நாட்டுத் தலைவர்களைப்பற்றியும் ஓதாளர் குறவஞ்சியில் குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்களுள் வாலைமன்றுடியார் என்ற பட்டம் பெற்றவன் பெரிய பெருமாள் நாட்டுத்தலைமை பெறுவதற்கு உதவியாக இருந்த பொன்னகுலத்துப்பெரியண்ணமால் என்பவனாகும். இப்பொன்னர் கூட்டத்தைப்பற்றி முன்னரே சொல்லப் பட்டிருக்கிறது. பொன்குன்ற நாடாகிய கோலார்மாவட்டத்தின் தென்பகுதி நாடுகளில் சங்க காலத்திலே குடியேறி யிருந்த கொண்கான நாட்டுக் கொங்கர்களாகிய வேளாள குடும்பத்தவர்களே தம்மைப் பொன்ன கூட்டத்தினர் அதாவது பொன்குன்ற நாட்டு வேளாளர் கூட்டத்தினர் என்று குறித்துக் கொண்டனர். கங்க அரச மரபினரோடு இவர்கள மணவினை உறவு பூண்டிருப்பதையும் ஆண்டு விளக்கப்பட்டது. இத்தகைய பழமையான கூட்டத்தில் உதித்தவனே இப்பெரியண்ணமாலாவன். இவனுக்கு பொங்கலூர், மாதப்பூர் முதலிய பேரூர்களுக்கும் அவைகளைச் சேர்ந்த சிற்றூர்களுக்கும் தலைமைப்பதவி கொடுத்து வாலை மன்றுடி என்ற பட்டமும் அளிக்கப்பட்டது என ஓதாளர் குறவஞ்சி குறிப்பிடுகிறது. இவர்கள் அலகுமலை வேலவருக்கு பொன்னுலவட்டமும், பூச்சக்கரக் குடையும் செய்து வழங்கினார்கள். இத்தலைவன் மரபில் வந்தவர்கள் இப்பாட்டுடைத் தலைவனும் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவனுமான பெரிய பெருமாள் காலம் வரையிலும் மேற்குறித்த ஊர்களின் தலைவர்களாக விளங்கி வந்து பிரபந்தத் தலைவனது மகனுக்கும் தன் மகளை மணம்செய்துகொடுக்கும் பெருமையுடைய நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். இக்கூட்டத்து வந்த ஒருவரே சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு சில முயல்கள் வேட்டை நாய்களை எதிர்த்த இடம் ஒன்றில் அரண்மனையமைத்துத் தம்மின மக்களையும் அப்பகுதியில் குடியேறச் செய்தாராம். இந்த ஊரே இக்காலத்தும் சிறப்புடன் விளங்கும் பொன்னர்புரம் எனப்படும் பொன்னுபுரமாகும். இவ்வூரில் இன்றும் இக்குலத்துக் குடும்பத்தவர்கள் அரண்மனையார் என்ற பெயருடன் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

**தேவமன்றுடியார்.**

பொன்னர் குலப் பெரியண்ணமாலைப் போலவே ஓதாளன் பெரிய பெருமாளுக்குத் துணையாக நின்று வெற்றி வாங்கித் தந்த மற்றொரு வேளாளர் தலைவர் குழையர் கூட்டத்துக் குமாரரத்தினமால் என்பவராவர். இக்கூட்டத்தவர் கோவலூர்க் குழையர் என்று குறிக்கப் படுவதால் இக்கூட்டத்தவர் முன்னாளில் கங்க நாட்டைச் சேர்ந்திருந்த திருக்கோவலூரர்ப் பகுதிகளில் சிறப்புடன் வாழ்ந்திருந்த வேளாளர்களாக இருந்திருக்கலாம். ரிஷப கிரிச் சோழன் காலத்தில் இவர்கள் கொங்கில் குடியேறி னர் போலும். இக்குமார ரத்தினமால் என்பவன் புத்த ரசை என்ற ஊரிலுள்ள கோட்டையைப் பிடித்து வெற்றி வாங்கித்தந்தால் அப்புத்தரசைப் பகுதி ஊர்களுக்கே தலைமை உரிமை பெற்று, தேவ மன்றுடி என்ற பட்டமும் பெற்றதாக ஓதாளர் குறவஞ்சி கூறுகிறது. இவனும் பெரிய பெருமாளுக்கு மைத்துனன் முறையினனாக விளங்கியதோடு பிரபந்தத்தலைவனான பிற்காலப் பெரிய பெருமாளின் மகள் ஒருவனுக்கும் இக்குலத்தில் வந்த நல்லையன் என்ற தலைவன் தன் மகளை மணம் செய்து கொடுத்திருந்தாக நூலாசிரியர் கூறுகிறார்[1] இக்கூட்டத்தினர் இன்றும் கொங்கு நாட்டில் பல்லடம் தாலுக்காவில் உள்ள வேழ ராசி, புத்தரசை, இலவந்தி வடுகப்பாளையம் ஆகிய ஊர்களில் தம் பழம் பெருமை குன்றாது ஊர்த்தலைவர்களாகவும், கிராமத்தலைவர் களாகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

**பிறபொதுமக்கள்.**

கொங்கு மன்னர்களாகிய கோனாட்டார்களின் தனியரசு கொங்கு நாட்டில் நிலைபெற்ற காலத்தில் கொங்கு வேளாளர் களிடையிலும், வேட்டுவர்களிடையிலும் இக்காலத்தும் காணப்படும் பல கூட்டத்தவர்களும் குடியேறி நிலைபெற்று

1. ஓதாளர் குறவஞ்சி பக் 56-57.

விட்டனர். இக்கூட்டத்தவர்களுள் தலைமை உரிமைப் பூண்டு சிற்றரசர் நிலையில் காமிண்டர்களாக விளங்கிய ஒரு சில கூட்டத்தவர்களைப்பற்றி மேலே கண்டோம். இவர்களைத்தவிர சாதாரண அதிகாரிகளாகவும், பொது மக்களில் நன்கொடைகள் பல கொடுத்து கல்வெட்டுகளில் இடம் பெற்றவராகவும் விளங்கிய பல் கூட்டத்தவர்களைப் பற்றி கொங்கு மன்னர்களின் கல்வெட்டுகளிலும், கொங்குநாட்டின் வடபகுதியிலும், கங்க நாட்டிலும் காணப்படும் சில சோழ மன்னர்களின் கல்வெட்டுகளிலும், இன்னும் பாண்டிய, ஹொய்சாள விசயநகர, நாயக்க அரசர்களின் கல்வெட்டுகளிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்களைப்பற்றி இனி காண்போம்.

கி பி. 10, 11 நூற்றாண்டுகளில் சோழ மன்னர்களில் புகழ்பெற்றவர்களாக ஏறக்குறைய தமிழகம் முழுவதையும் பிறநாடுகளையும் ஒரு குடை நிழலில் ஆண்ட முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் விளங்கிய கவுண்டர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக இராசேந்திர சோழக் காமுண்டன், கவுண்டர் செம்பா வைவிராண்டை மாரப்பன், குச்சிக்காமிண்டன் தோரப்பன் ஆகியோரைக் கூறலாம். இவர்களுள் கவுண்டச் செம்பா வைவிராண்டை மாரப்பன் என்பான் செம்ப கூட்டத்தைச் சேர்ந்தவனாகத் தெரிகிறது. இச்செம்ப கூட்டத்தைப்பற்றி முன்னரே கூறப்பட்டது. இச்செம்ப கூட்டத்தைச்சேர்ந்த தம்பண்ணன் என்பான் ஒதாளன் பெரிய பெருமாளுக்குத் துணையாக நின்ற வேளாளக் கவுண்டர்களுள் ஒருவனாக ஒதாளர் குறவஞ்சியில் குறிக்கப்பட்டுள்ளான். பெரிய பெருமாளின் முடிசூட்டு விழாவின்போது இவன் வாளெடுத்துத் தரும் உரிமையைச் சோழமன்னன் இவனுக்குக் கொடுத்தான் எனவும் அதுமுதல் இக்குலத்தவர்கள் அந்தந்த நாட்டுத் தலைவர் பட்டாபிஷேகத்தின் போதெல்லாம் வாளெடுத்துத்தந்து அவரது தலைமையைப் பாதுகாத்து வரும் உரிமையாளர்களாக ஆயினர் எனவும் அக்குறவஞ்சி

கூறுகிறது.[1] அலகுமலை வேலவருக்கு பூசைக்குரிய மணி, தீபங்கள் சரவிளக்கு ஆகிய உபகரணங்களை இக்குலத் தலைவர் ஒருவர் நல்கினாராம். தாராபுரம் தாலுக்கா பிராமியம் கோயிலில் காணப்படும் அபிமான சோழராஜாதி ராஜனின் 10 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் நீலன் கூட்டத்தைச் சேர்ந்த நீலன் சிலம்பன் என்பான் பெயர் காணப்படுகிறது. நீலன் கூட்டம் புகழ்பெற்ற வேளாளக் கூட்டமாகும்.

இராசகேசரி குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் வெள்ளாளன் பூசர்களில் அரையன் சிறியனான வேதசூளாமணிப் பல்லவரையன் என்பான் ஒருவன் குறிக் கப்பட்டுள்ளான்[2] பூசர் கூட்டத்தவர்களுக்குள்ளும் ஒருவன் பல்லவராயன் என்று பட்டம் பெற்றிருப்பது நமது முடிவின் படி இவர்களும் தொண்டை நாட்டுப்பகுதி ஒன்றிலே பூர்வீகத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று எண்ணத்தோன்று கிறது.

## பூசன் கூட்டம்

பண்டைய போர் வகையைப் பலவாகப் பிரித்து ஒவ்வொரு முறைக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டி இலக்கணம் கண்டது பண்டைத் தமிழினமாகும். இவற்றுள் பூசன் மாற்றுத்துறை என்பதும் ஒரு வகையாகும். இத்துறையில் அமைந்த பலபாடல்களை இன்றும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

போர் தொடுப்பதற்கு ஆரம்பமாகப் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து செல்லும் வெட்சியார் அதனை மீட்க வந்த கரந்தை யாரைப் போர் செய்து வென்றதைக் குறிப்பது பூசன் மாற்றுத் துறையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு

1. I bid பக்-60.
2. S. I. I. vol IV. No. 274.

வந்த பெயரே பூசன் கூட்டம் என்பது போலும். அதற்கு ஏற்றாற்போல் இக்கூட்டத்தவர் கொங்கு நாட்டுவரலாற்றில் மன்னர்களுக்கு போரில் உதவி செய்யும்படைவீரர்களாகவே இருந்து வந்துள்ளனர். சோழ மன்னர்களால் தொண்டைமான் என்ற விருது அளிக்கப்பட்ட பெருமை வாய்ந்தவர்கள் இக்கூட்டத்தினர். இவர்கள் வரலாற்று காலத்தில் தென்கரை நாட்டு மூலனூரை ஆட்சி செய்துவந்த சிற்றரசர்களாக விளங்கி வந்துள்ளனர். இன்றும் அம்மூலனூரே இவர்களது காணியூராகக் குறிக்கப்படுகிறது இம்மூலனூர் வஞ்சியம்மனே இவர்களது குல தெய்வமாக விளங்கி வருகிறாள். இக்கூட்டத்தவர்கள் பிரசித்தி பெற்றபோர் வீரர்களாக விளங்கி வந்தமையால் தென்பகுதி எல்லையோரங்களிலிருந்து அடிக்கடி ஏற்படும் பாண்டிய வேந்தர்களின் தாக்குதலை சமாளிக்க வேண்டிய இவர்கள் கொங்குநாட்டின் தென் பகுதிகளிலேயே அதிகமாகக்குடியேற்றப்பட்டனர் போலும் பூசன் கூட்டத்தார் கொடைவள்ளல்கள் எண்ணற்ற பல அறச்செயல்களைச் செய்துள்ளனர். தமிழ் புலவர்களை ஆதரித்த புரவலர்கள்.

**தொண்டைமான் பட்டம்**

தொண்டைமான் என்ற பெயர் பொதுவாகத் தொண்டை நாட்டைச் சேர்ந்த போர் வீரர்களுக்கும் சிற்றரசர்களுக்குமே சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட விருதுப் பெயராகும். கொங்குமண்டலசதகம் இக்கூட்டத்தினர் பகைவர்களைப் பஞ்சுபோல் பறந்தோடச் செய்து வெற்றி வாங்கிக் கொடுத்ததால் சோழ மன்னன் தொண்டைமான் என்ற நற்பெயரைச் சூட்டிக் கௌரவித்தான் என்னும் பொருள் படப் பாடுகிறது. இந்தச் செம்பியன் யார்? பகைவர்கள் யார்? என்றெல்லாம் தெரியவில்லை. பகைவர்களை வென்றதால் சோழன் தொண்டைமான் என்று பட்டம் கொடுத்தான் என்று இதற்குப்பொருள் விளக்கம் தருவது பொருத்தமாயில்லை. ஒருவேளை தொண்டை நாட்டிலிருந்து

அழைத்துவந்து குடியேற்றப்பட்ட வேளாள வீரர்கள் என்பதால் சங்கப்பெயர் தாங்கியுள்ள கொங்கு வேளாளக் கூட்டங்களினின்று மாறுபடத் தோன்ற தொண்டைமான் என்று பட்டம் கொடுக்கப்பட்டனர் என்று கூறுவது பொருத்தமாக அமையலாம். மேலும் வடகிழக்கு கொங்கு மண்டலம், தென்மேற்கு தொண்டை நாட்டு பகுதிகள் ஆகியவை சேர்ந்த வேளூட்டிலிருந்து வந்த வேளாளர் வேளூடையாருக்கு (சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர்கள்) படைத்துணைத் தலைவர்களாக இவர்கள் இருந்து வந்தனர் என்றும் தெரிவதால் தொண்டை நாட்டு பகுதிகளிலிருந்து வந்து குடியேறிய தொண்டை நாட்டு வேளாளர்கள் தொண்டைமான் என்று குறிப்பிடப்பட்டனர் என்பதே பொருந்துவதாக அமைதல் காண்க. மறவபாளையம் கல்வெட்டு ஒன்று இவர்களை "மூலனூர்த் தொண்டைமான்" என்று குறிப்பிடுகிறது. இவர்கள் தமது விருதுபெயர் விளங்க தொண்டைமான் புத்தூர் (தொண்டாமுத்தூர் என்று இன்று வழங்குகிறது) என்னும் புதிய ஊரையும் ஏற்படுத்தினர்.

தொல்லாண்மை திகழ்
சொற்றிடும் பூசர் எனவும்
சொற்புகழ் மூலனூர்
பூசதலன் வசதுரு
தொண்டைமான் கொடுத்து
—துணிந்துபார்சிங்கா !

எனவும் ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக்குறவஞ்சி இவர்களைப்பற்றிக் கூறுகிறது. ஹைதர்அலி காலத்தில் காதருபகதூர் தொண்டைமான் என்று இவர்கள் பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனராம்.

இவன் காலத்து மற்றொரு கல்வெட்டில் அழகன்[1] சோமபிரானுன கங்கதரையன் என்ற அதிகாரி ஒருவன் குறிக்கப்பட்டுள்ளான். அழகன் என்ற பெயர் கொங்கு

1. A. R. E. 201 of 1920.

வேளாளர்களில் பயிரன் கூட்டத்துச் சக்கரை மன்றுடியார்கள் மரபிலே காணப்படுகிறது. இதனால் இச்சோயபிரான் ஒருவேளை சக்கரை மன்றுடியார் பரம்பரையில் வந்த ஒருவனோ என்று நினைக்க இடமுள்ளது கங்கதரையன் என்று இவனுக்குப் பட்டம் காணப்படுவதைக் கொண்டு இக்குல முன்னோர்கள் கங்கநாட்டுப் பகுதிகள் ஒன்றில் வாழ்ந்தவராக இருக்கலாம் கங்க மன்னன் மகேந்திரன் கல்வெட்டில் சக்கரவரு பற்றிக் குறிப்பிட்டது இங்கு கருதத்தக்கது, பேரூர்க் கோயிலில் காணப்படும் இராசராசக் கரிகாலனின் 4ஆவது ஆண்டுக் கல்வெட்டொன்றில் இராமன் பொன்னன் காடவராயன் என்றொருவன் கூறப்படுகிறான். இவன் பொன்னர் கூட்டத்து வேளாளன் என்று தெரிகிறது கொங்கு மன்னர்களது கல்வெட்டுகளில் பல வேளாள வேட்டுவத் தலைவர்களுக்குக் காடவராயன், பல்லவரையன், வாணதரையன், கங்கதரையன் அல்லது காங்கேயன் முதலிய பட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு கவனிக்கத்தக்கது. இப்பட்டங்கள் அவரவர்களது பூர்வீக நாட்டின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதாகவே சொல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக பொன்னர் குல வேளாளர்களின் பூர்வ நாடான பொன்குன்ற நாடு கங்க அரசர்களுக்குப் பிறகு காடவர்கள் கைக்கு மாறியது. எனவே கடைசியில் காடவர் நாட்டைச் சேர்ந்ததாக அந்நாடு ஆனமையால் பொன்குன்ற நாட்டு பொன்ன கூட்டத்தவர்களுக்கு காடவராயன் அதாவது காடவர் நாட்டுத் தலைவன் என்று பட்டமளித்தான் என்று கூறலாம்.

இதைப் போன்றதே பல்லவரையன், வாணதரையன் என்ற பட்டங்களும், பல்லவரையர் பட்டம்பெற்ற வேளாளத் தலைவர்கள் செங்கண்ண கூட்டத்தவர் என்று பார்த்தோம். செங்கண்ணர் கூட்டத்துப் பூர்வ நாடான பல்குன்ற கோட்டத்துச் செங்கம் பகுதிகள் பல்லவ மரபினரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பல்லவ நாடாதலாலே அப்பட்டம் கொடுக்கப்பட்டது எனலாம். கங்கதரையன், காங்கேயன் என்பது முறையே கங்கநாட்டு அரையன், கங்க நாட்டுத்

தலைவன் என்று பொருள்படத்தக்கவை. இதேபோல இக் கரிகாலன் காலத்தவனாகவே பெரிய குலத்தைச் சேர்ந்த சிங்கன் சோழனான அனுத்தரப்பல்லவரையன் ஒருவனும் குறிக்கப்படுகிறான்.

அடுத்து கொங்கு மன்னன் வீரராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டுகளில் பல வேளாளக் கூட்டத்தவர்கள் குறிப்பிடப் படுகின்றனர். தாராபுரத்துக் காடையூரில் கிடைக்கும் இவனது கல்வெட்டு ஒன்றில் இவ்வூர்க் கோயில் இறை வனுக்கு மாலைவிளக்கு எரிக்க பொருளந்தைக் கூட்டத்தைச் சேர்ந்த சிலம்பன் முதலி என்பான் நிவந்தம் விட்ட செய்தி கூறப்படுகிறது.[1] இதிலிருந்து கொங்கு வேளாளரிலும் சிலர் முதலிப்பட்டம் தரித்திருந்தனர் என்று தெரிகிறது. முதலி என்ற பெயர் அரசாங்கத்தில் முதன்மையான பதவி வகிப்பவனுக்கே வழங்கப்பட்ட பெயராகும். கொங்கு வேளாளர் மரபைச் சேர்ந்த கட்டி சிற்றரசர்களும் கட்டி முதலிகள் என்று குறிக்கப்பட்டமையும் இங்கு நினைக்கத் தக்கது. அடுத்து இவனது மற்றொரு கல்வெட்டு வெள்ளாளன் மேல் மணியன் காவலுடையான் என்பான் ஒருவனையும், வெள்ளாளன் கழஞ்சியன் தேவனான கொங்கிளக் கோன் என்பான் ஒருவனையும் குறிப்பிடுகிறது இவர்களுள் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளவன் மணிய கூட்டத்தைச் சேர்ந்தவன் மணிய கூட்டத்தில் மேன் மணியன் என்று குறிக்கப்பட்டி ருப்பதின் காரணம் தெரியவில்லை. அடுத்த கல்வெட்டில் குறிக்கப்படும் கழஞ்சியன் தேவன் இக்காலத்தே தனஞ் செயன் கூட்டம், தனிஞ்சக் கூட்டம் என்று வழங்கப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று தோன்று கிறது. கழஞ்சியன் கூட்டம் என்பதே காலப்போக்கில் தனஞ் செயன் கூட்டமாக மாறியிருக்கலாம். கழஞ்சியன் என்ற பெயர் வருவதற்கான காரணம் தெரியவில்லை. அதே சமயத்தில் பாண்டிய தனஞ்செயர்களில் குலோத்துங்க

1. S. I. I. vol IV. No. 279, 280

சோழ பட்டன் போன்ற சில திருக்கோவில் பூசனை செய்யும் வேளாள பட்டர்கள் பெயர் சில கல்வெட்டுகளில் காணப் படுகிறது. இத்தனஞ்செயன் என்றபெயரே அக்கூட்டத்தைக் குறிக்குமாயின் தனஞ்செயன கூட்டத்தவர்கள் கொங்கு மன்னர்கள் காலத்தில் கோயிலில் பூசை செய்யும் வேளாள பட்டர்களாக இருந்திருந்து அவர்கள் வழியினரே தனஞ் செயன் கூட்டத்தவர் என்று தம்மைக் கூறிக் கொண்டு இருக்கலாம்.

இவனுடைய மற்ருெரு கல்வெட்டு சாத்தாந்தை கூட்டத்தைச் சேர்ந்த பிள்ளான் தேவன் என்பவனைக் குறிப்பிடுகிறது இவனது 6 ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்ருெரு கல்வெட்டு[1] மூல கூட்டத்தைச் சேர்ந்த சோழ நாராயணக் காமிண்டன் என்பவரைக் குறிப்பிடு கிறது. காமிண்டன் என்ற நாட்டுரிமைப் பெயரே கவுண்ட ராயிற்று என்ற கொள்கைக்கு இப்பெயர்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இனி மூலகூட்டம் என்ற கூட்டப் பெயரின் பழமை பற்றி சங்ககாலக் குறிப்புகள் பகுதியிலே கூறியிருந்தேன்.[2] சங்ககாலப் பழமை வாய்ந்த இக்கொங்க வேளாளர் கூட்டத்தவர்கள் கொங்கு மன்னர்கள் காலத் திலும் உயரிய நிலையில் இருந்திருப்பர் என்று உறுதியாகக் கூறலாம். மற்ருெரு கல்வெட்டு வெள்ளாளன் தேவாந்தை களில் பெரும் பழனன் என்பான் ஒருவனைக் குறிக்கிறது[3] சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றிலும் தேவாந்தைகளில் சொக்கன் இளையப்பிள்ளை என்பவன் குறிக்கப்படுகிருன்.[4] தேவாந்தைக் கூட்டம் என்பதும் கொங்கு வேளாளர் கூட்டப் பெயர்களுள் ஒன்ருகும். ஆந்தை என்ற பெயர் இறுதியில் இருப்பதைக் கொண்டு ஆந்தைக் கூட்டத்தோடு

1. A. R. E. 211, 212, 213 of 65-66.
2. இந்நூல் பக்கம் 61
3. A. R. E. 212 of 65-66.
4. A. R. E. 191 of 70-71.

தொடர்பு கொண்டு உருவான பழைமையான கூட்டமாக இதனைக் குறிக்கலாம். இவ்வாறு ஒரு கூட்டத்துடன் மணவினைத் தொடர்பு கொள்வதன் மூலம் தாய்வழி, தந்தை வழிக் கூட்டப் பெயரை ஒன்றாக இணைத்துப் புதிய கூட்டம் உருவாயிருக்கக்கூடும் என்பது முன்னரே விளக்கப்பட்டது[1] இவ்வாறு உருவான கூட்டங்களுள் ஒன்றே கண்ணந்தை கூட்டம் போலும். இக்கண்ணந்தை கூட்டத்தவர் பற்றித் தொண்டை மண்டலத்தில் காணப்படும் சோழ மன்னர்களது கல்வெட்டுகளிலும் பல குறிப்புகள் காணப்படுகின்றன [2]

கொங்கு 24 நாடுகளிலும் இக்கூட்டத்தவர் நிறைந்து வாழ்கின்றனர். கொங்குச் சோழ மன்னர்கள் காலத்தில் இக்கூட்டத்தவர்கள் படைத்தலைவர்களாகவும் சிற்றரசர் களாகவும் விளங்கி வந்ததாகத் தெரிகிறது நசியனூரில் உள்ள மூவேந்த சோழீஸ்வரமுடையருக்கு இக்கூட்டத் தவர் செய்த திருப்பணிகளை அக்கோயிலில் வரையப் பட்டுள்ள ராய அரசரின் கல்வெட்டு ஒன்று எடுத்துரைக் கிறது கொங்குமண்டல சதகம்.

"கண்ணந்தை கோத்திர நயினுசலன் முத்துகார்த்தி கையில்
மண்ணந்தை கோத்திரற்கமுதூட்டி வாழ் கொங்கு மண்டலமே"

என்று கூறுவதிலிருந்து இக்கூட்டத்தவருள் ஒருவரான முத்துக்கவுண்டர் என்பார் கார்த்திகை நாளில் காங்கய நாட்டிலுள்ள பார்ப்பதி என்னும் ஊர்க்கோயில் மடவிளாகத்தில் பெருஞ்சோற்று விருந்து நடத்தினர் என்று தெரிகிறது. அடுத்து இரண்டாம் விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று[3] பில்லர் கூட்டத்தைச் சேர்ந்த வேளாளன்

1. இந்நூல் பக்கம் 135.
2. S. I. I. vol XII Nos 130 and 151.
3. 188 of 65-66.

ஒருவன் திருஞான சம்பந்தருக்கு விளக்கெரிக்க நிவந்தம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. இவனது எட்டாம் ஆண்டுக் கல்வெட்டாகிய மற்ருென்று[1] பொருளந்தைகள் குலத்தைச் சேர்ந்த சோழன் கடநூரான் என்பவன் திருமடைப்பள்ளி (கோயில் சமையலறை) கட்டுவித்தான் எனவும் இதே குலத்தைச் சேர்ந்த வாலகப்ரமண்யக் கவுண்டர் என்பாரின் மகனை மூத்த மல்லையன் என்பான் தொட்டி கட்டி வைத்தான் எனவும் கூறுகிறது. காமிண்டன் என்ற பெயர் கவுண்டர் என்ற உருவில் இக்கல்வெட்டில் குறிககப் பட்டுள்ளது.

இன்னெரு கல்வெட்டு பெரும் பழனத்துத் தேவாந்தைகள் குலத்தைச் சேர்ந்த சிறியான் ஜெயங் கொண்ட சோழக் காமிண்டன் என்பவனைக் குறிப்பிடுகிறது.[2] கி.பி. 1275 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஹொய்சள அரசன் வீரராமநாதனுக்கு அடங்கிய திருபுவனமல்ல பூரவாதிரையன் என்பானின் கல்வெட்டு ஒன்று மலையூர் மாறக் காமிண்டன் என்பான் ஒருவனின் பெயரைக் குறிப்பிடுகிறது. இக்காமிண்டர் எந்த கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவில்லை. இக்கல்வெட்டு தருமபுரி மாவட்டத்தில் காணப்படுகிறது. மாரான், மாரப்பன் என்ற பெயரை இன்றும் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் வைத்துக் கொள்வது சேலம் தருமபுரி மாவட்டப் பகுதிகளில் வழக்கில் உள்ளது.[3] ஆதியூர் ஆதிபுரீஸ்வரர் கோயில் வடக்குச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு தூரன் கூட்டத்தவர்களுள் கொல்கபாடித் தூரர்கள் என்று குறிப்பிட்டு அக்குலத்தில் வந்த அரையன் என்பவனைக் குறிக்கிறது[4]

1. 189 of 65-66.
2. A. R. E. 212, of 65-66.
3. A. R. E. 466 of 70-71.
   (1970-71 முதலான இந்தியத் தொல்பொருள் துறையின் ஆண்டறிக்கைகள் இன்றும் பிரசுரிக்கப்படவில்லை.)
4. 151 of 67-86

**பாண்டியர் காலத்தில்**

கொங்கை ஆண்ட பாண்டியர்களுள் வீரபாண்டியனின் காலத்திய கல்வெட்டுகளிலே பல வேளாளர் கூட்டங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன இவ்வீரபாண்டியனின் அமைச்சராகவே புகழ்பெற்ற காலிங்கராயக் கவுண்டர் விளங்கிவந்தார் என்பதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும் எனவே இக்காலத்தில் வேளாள மக்கள் சிறந்து விளங்கியதில் வியப்பொன்றும் இல்லை ஆதியூர் ஆதீஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றில் கொங்கபாடி தூரான் கூட்டத்து வேளாளர்கள் குறிக்கப்படுகின்றனர்[1] அடுத்த இரு கல்வெட்டுகளில் குண்டெலி கூட்டத்து வேளாளர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்[2] இவ்வேளாளர் தலைவனுக்கும் காலிங்கராயன் என்ற பட்டப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தவர்கள் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு ஒன்றிலும் குறிக்கப்படுகின்றனர். மற்றொரு கல்வெட்டில் குணடெலிகள் கூட்டத்தைச் சேர்ந்த அந்தன் சாத்தாந்தன் என்பான் இக்கோயிலின் மண்டபம் ஒன்றைக் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது[3] மற்றொரு கல்வெட்டில் புல்ல கூட்டத்து வேளாளர்கள் குறிக்கப்படுகின்றனர்[4] இன்னொரு கல்வெட்டு அதே மண்டபத்தின் இன்னொரு பகுதியைக் கட்டப் பொருள் உதவி செய்தவனாக ஆதனூர் வண்ணக்கர் கூட்டத்தைச் சேர்ந்த பிள்ளையான் வான் என்பானைக் குறிப்பிடுகிறது.[5] இக்கோயிலில் காணப்படும் இதே வீரபாண்டியனின் கல்வெட்டுகள் இரண்டில்[6] சிறுவாலூர் நாட்டு சாத்தாந்தை கூட்டத்து

1. 151 of 67-68
2. 152 of 67-68
3. 158 of 67-68
4. 160, 161 of 67-68
5. 164 of 67-68
6. 200, 201 of 67-68

வேளாளன் ஒருவனும் குன்றத்தூர் வேளாளன் கொல்ல கூட்டத்தவன் ஒருவனும் குறிக்கப்பட்டுள்ளனர். இக்கொல்லர் கூட்டம் என்பதும் அக்கால வேளாளர் கூட்டங்களுள் ஒன்று எனத்தெரிகிறது முருங்கைத் தொழுவு கோயிலிலுள்ள சுந்தர பாண்டியனின் கல்வெட்டு ஒன்றில்[1] பெரிய குலத்தைச் சேர்ந்த நம்பியாரூரன் என்பான் அக்கோயிலில் ரிஷபவாகன தேவரின் வெண்கல படிமம் ஒன்றை நிறுவி அதற்கு வேண்டிய பூசைகளுக்காக நிவந்தம் விட்ட செய்தியைக் கூறுகிறது. இந்த நம்பியாரூரன் வேளுவுடையார்க் கவுண்டர் மரபில் வந்தவனுவன்.

பாண்டியர்களைத் தொடர்ந்து கொங்கு நாடு முழுவதையும் ஆண்ட ஹொய்சாள வீரவல்லாள தேவனின் கல்வெட்டு களிலும் சில வேளாளர் கூட்டத்தவர்கள் குறிக்கப்பட்டு உள்ளனர். ஆதியூர்க் கோயிலில் காணப்படும் இவனுடைய கல்வெட்டு ஒன்று[2] குறுப்பு நாட்டுக் குன்னத்தூரைச் சேர்ந்த கனவாளர் கூட்டத்து வேளாளர் தலைவனுன உடையாண்டான் அழகப்பெருமான் நாதன் பிள்ளையாண்டான் என்பானைக் குறிக்கிறது. இவனும் காமிண்டராயப் பட்டம் பெற்றவனுவன்.

இதே கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு குறுப்பு நாட்டுக் குன்னத்தூரைச் சேர்ந்த வேளாள சேட்டு வாயர் கூட்டத்தான் ஒருவனைக் குறிக்கிறது[3] இச்சேட்டு வாயர் கூட்டம் பற்றி அலகு மலைக் குறவஞ்சியில் குறிப் பிடப்பட்டுள்ள வேளாளர் கூட்டப் பெயர்களைப் பற்றிக் குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருந்தேன்[4] அந்நூலுள்

---

1. 206 of 67-68.
2. 184 of 67-68
3. A. R: E. 180 of 67-68
4. இந்நூல் பக்கம். 54.

இக்கூட்டம் சாத்துவராயன் கூட்டம் என்று குறிக்கப்பட்டு உள்ளது. இக்காலத்திற்குப் பிறகும் விசயநகர அரசர்கள் நாயக்க அரசர்கள், உம்மாத்தூர் தலைவர்கள் மைசூர் அரசர்கள் ஆகியோரது கல்வெட்டுகளிலும் இவை போன்று வேறு வேறு வேளாளக் கூட்டத்தவர்கள் பற்றிக் கூறப் பட்டுள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது ஈரோட்டுத் தொண்டீஸ்வரர் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு. இக்கல்வெட்டு உம்மாத்தூர் தலைவர் வீரநஞ்சராஜ உடையாருடையதாகும். இதில் ஈரோடு உள்ளிட்ட பூந்துறை நாட்டின் 32 ஊர்களுக்கும் பிரதிநிதிகளாக விளங்குபவரின் பெயர்களும் அவர்களது கூட்டம் இன்னது என்றும் கூறப்படுகிறது இவ்வுறுப்பினர்களில் வேட்டுவர் களும் உள்ளனர். இதில் காணப்படும் சில கூட்டங்களைப் பற்றி அவைகள் நடைமுறையில் உள்ளனவா என்று தெரியவில்லை. உதாரணமாக பெருந்துறையில் வேளாளன் எருமைகளில் உலகுடையார் என்று ஒரு பெயர் காணப் படுகிறது. இவ்வெருமைக் கூட்டம் பற்றி எதும் தெரிய கொங்கணி அரசன் ஸ்ரீ புருஷனின் இருநடுகல் கல்வெட்டு களில் அதியமான் அரசர்கள் சேவகர்களுக எருமைய நக்கனுர் என்னும் காமிண்டன் ஒருவன் குறிக்கப்படுகிறன்[1] சங்க இலக்கியப் பாடல்களைப் பாடிய புலவர்களில் எருமை வெளியனுர் என்ற ஒரு புலவர் இருந்திருக்கிறர். மைசூர் நாட்டிற்கு எருமையூர் என்பது பழங்காலப் பெயர் என்று கூறியுள்ளேன். கொண்கான நாட்டு வேளாளர்களாகிய கொங்கர்களில் பூர்விகத்தில் இம்மைசூர் நாட்டுப் பகுதி களில் வாழ்ந்தவர்கள் பின்னும் கொங்கில் குடியேறியபோது தம்மை எருமைக் கூட்டத்தவர் என்று கூறிக் கொண்டு இருக்கலாம். இதுவே பிறகு மேதிக்கூட்டம் எனவும் வழங்கப் பட்டது போலும். இங்கு குறிக்கப்பட்டவைகள் தவிர இன்னும் சில கூட்டங்களும் வரலாற்று அடிப்படையில் ஓரளவு சிறப்புற்றவை. அவைபற்றிச் சிறிது காண்போம்.

---

1. A. R. E. 211 of 212 of 1910.

கூறை கூட்டம்

இக்கூட்டமும் கொங்கர் கூட்டங்களுள் பழைமையான தாகும். இவர்களின் முன்னோர் காமிண்டராக இருந்தநாடு கூறைநாடு என்பதாகும். இதனடியாக வந்தபெயரே கூறை கூட்டமாகும். இக்கூறை நாடு என்பது நடுநாட்டில் பெண்ணைக் கரையில் அமைந்திருந்த வேணாட்டினுள் அடங்கியிருந்த ஒரு துணை நாடாகும்.

செவ்வாயர் கூட்டம்

இவர்கள் ஆயர் எனப்பட்ட முல்லை நிலமக்களாக இருந்திருந்து மன்றுடிகளாகப் புகழ் பெற்றிருந்தவர்கள் எனத் தெரிகிறது.

இவ்வாறு முடிவு செய்வதற்கு ஆதாரவாகக் கொங்கு சோழர்களுள் மிகப்பெரும் புகழ் பெற்றவனான வீரராஜேந்திரனின் கல்வெட்டு ஒன்று குறிப்பிடும் செவ்வாயர் வெள்ளாளன் கருடமாணிக்க தேவன் என்ற ஒரு தலைவனின் பெயர் விளங்குகிறது. கருட மாணிக்கன் என்பது திருமாலின் பெயர். திருமால் முல்லை நிலக்கடவுளாவார். இப்பொருத்தம் இக்கூட்டத்தவர் முல்லை நிலத்தவர்களான ஆயர்களின் வழிவந்தவரே என்ற கொள்கையை ஊர்ஜிதப் படுத்துகிறது.

காரி கூட்டம்

காரி என்ற பெயர் சங்ககாலத்தில் சில தலைவர்கள் வைத்துக் கொண்டிருந்த பெயராகும். காரிக் கடவுள் என்பது சிவபெருமானைக் குறிக்கும் இவர்களது காணியூர் கள் நல்லிபாளையம், ஆனங்கூர் மோடக்குறிச்சி முதலியன வாகும்.

**செல்லன் கூட்டம்**

இக்கூட்டமும் பழமையானதொரு கூட்டமாகும். இக்கூட்டம் பற்றிய விரிவான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை. எழுமாத்தூர் வள்ளியிறைச்சல் முதலிய ஊர்கள் இவர்களின் காணியூர்களில் சிலவாகும். இவர்களின் காணியூர்களான பருத்திப்பள்ளி நாட்டை நீண்ட காலம் இக்கூட்டத்தவர் ஆட்சி புரிந்து வந்ததால் பருத்திப் பள்ளி நாட்டார் என்ற பெயரே நிலைத்து விட்டது. கிருஷ்ண தேவராயரிடம் முதலிக்காமிண்டன் என்ற விருது பெற்றவர்கள் இக்கூட்டத்தினர்.

**பாண்டியன் கூட்டம்**

சேர அரசர்கள் கொங்கு நாட்டை ஆண்டதற்கு அடையாளமாக சேரமன்னர்களின் குடிப்பெயர்கள் இன்றும் நின்று நிலவுவதுபோல பாண்டிய மன்னர்கள் கொங்கு நாட்டை ஆண்டதற்கு அடையாளமாக பாண்டிய நாட்டிலிருந்து அக்காலத்தே குடியேறிய வேளாளர்கள் தாமும் கொங்கு வேளாளர்களாகி தாங்கள் குடி முன்னால் வாழ்ந்த பாண்டிய நாட்டை மறவாமலிருக்க தம்மைப் பாண்டியன் கூட்டத்தவர் என்று கூறிக்கொண்டனர் போலும். இவர்களுடைய குடியேற்றம் பற்றி பாண்டியர் கல்வெட்டுக்களிலே பல சான்றுகள் உள்ளன.

**மாடைக் கூட்டம்**

மாடை என்பது சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் வழக்கிலிருந்த ஒருவகைப் பொன் காசாகும். பராந்தகன் மாடை, குலோத்துங்கன் மாடை என்ற பெயர் காண்க. கொங்கு மண்டலம் பொன்னிற்குப் பெயர் போனது. கொங்கு நாட்டுத் தங்கம் சிறப்புடையதாகும். இதனால் தான் தில்லைக் கோயிலுக்குப் பொன் வேய்ந்த ஆதித்த சோழனையும் நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடும்போது,

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பல முகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்

என்று குறிப்பிடுகிறார். கொங்கிற் கனகம் அதாவது கொங்கு நாட்டிலிருந்து பெற்ற தங்கத்தைக் கொண்டு சிதம்பரம் கோயில் விமானத்தைப் பொன்னால் செய்து வைத்தானும் இதிலிருந்து கொங்கு நாட்டின் தங்கத்தின் சிறப்பு நமக்கு நன்கு புலப்படும். இத் தங்கத்தில் எதாவது மாற்று சேர்த்து மாடைப் பொன் தயாரிப்பதில் வல்லவர்களாக இக்கூட்டத்து முன்னோர்கள் இருந்திருக்கக் கூடும் எனவே இக்கூட்டத்திற்கு மாடை கூட்டம் என்ற பெயர் வந்து இருக்கக்கூடும். காங்கேயம் நாட்டைச் சேர்ந்த மயிலிறங்கம் என்னும் ஊரிலுள்ள கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்று "வெள்ளான மாடைகளில் மாளவராயர்" என்னும் ஒருவரைக் குறிக்கிறது.

இன்னும் மயிலர் கூட்டம், பதறியர் கூட்டம், எண்ணை கூட்டம், வெள்ளம்பர் கூட்டம் வெண்டுவன் கூட்டம் முதலியனவும் கொங்கர்களின் பழமையான கூட்டங்களாகும். இவர்களுள் வெண்டுவன் கூட்டத்தவரைப் பற்றிய சில செய்திகளைக் கல்வெட்டுகளில் காண்கிறோம். தேவனும் பாளையத்தில் உள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று கருநிழலி வெண்டுவன் என்பான் ஒருவனின் பெயரைக் குறிப்பிடுகிறது. இன்னும் கணக்கர் கூட்டம் என்ற ஒரு கூட்டமும் உள்ளது. இக்கூட்டத்து முதல்வர் என்பதை விட இக்கூட்டத்தவரின் முன்னோர்கள் அனைவருமே அரசாங்க ஆவணங்களில் கணக்கு பார்க்கும் அதிகாரிகளாக பரம்பரையாக இருந்து வந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவர்களின் காணியூரான கீரனூரில் காணப்படும் கல்வெட்டு ஒன்று வெள்ளாளர் கணக்கர்கள் என்று குறிப்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது.

கொங்கு வேளாளக் கூட்டங்களில் ஒன்று பெருங்குடி. இக்கூட்டம் சோழன் மகளின் சீதனமாகக் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்ட கூட்டங்களுள் ஒன்றாக ஒதாளர் குறவஞ்சி யில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வந்த அரசியல் அதிகாரிகள் பற்றியோ அல்லது வேறுவகைச் செயல்களால் கல்வெட்டுகளில் இடம் பெற்றவர்களாகவோ நாம் எதும் அறிவதற்குச் சான்றுகள் இல்லை ஆயினும் கொங்கு வேளாளர்களின் தெய்வமாக மாறிய அண்ணன்மார்கள் எனப்படும் பொன்னர் சங்கர் என்ற இரு சகோதரர்களைப் பெற்று இக்கூட்டம் வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுவிட்டது. இப்பொன்னர் சங்கர் சகோதரர்கள் வாழ்ந்த காலம் இது வென்று உறுதியிட்டுக் கூறத்தக்கச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. ஆயினும் கி. பி 14, 15 நூற்றாண்டுகளில் வேளாளர்-வேட்டுவர் இனப்பகை தலைதூக்கியிருந்த காலத்தில் இவர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று இப்பொழுதைக் கூறலாம். இச்சகோதரர்களின் தந்தையாக விளங்கியவர் அப்பாவியான குன்றுடையாக் கவுண்டர் என்பவர் ஆவர். பங்காளிகளின் கொடுமைக்கு உள்ளான இவ்வொன்று மறியாத குன்றுடையான் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளானன். அத்தொல்லைகள் இவன் பெற்ற மாவீரர்களான பொன்னரையும், சங்கரையுங் கூடத் தொடர்ந்தது. இவர்களின் பங்காளிகளில் சிலரே துரோகிகளாக மாறி அந்நாளில் தலையூரை ஆண்டு வந்த வேட்டுவர் தலைவன் காளி என்பவனைத் தூண்டிவிட்டு பல சூழ்ச்சிகள் செய்தனர் இறுதியில் வீரமலைக் காட்டில் தலையூர்க் காளியும், பொன்னர் சங்கரும் தம் படையுடன் மோதினர். பொன்னர் சங்கர் படைகளே வெற்றி பெற்றாலும் அப்போரில் சங்கர் புறப்புண் பட்டதால் பழந்தமிழர் மரபுப்படி அதனைப்பொறுத சங்கர் வடக்கிருந்து உயிர்துறந்தான். அதனால்வேதனையுற்ற பொன்னரும் இறந்துபோக இருவரும் தெய்வமாயினர். இக் கதை நிகழ்ச்சிகள் கொங்கு நாட்டின் கிராமிய இலக்கியமாக

விளங்கி வந்து சமீபத்தில் கவிஞர் சக்திக் கனல் திரு. கே. பி. பழனிசாமியின் முயற்சியினுல் நூல்வடிவம் பெற்று வெளிவந்துள்ள இனிய நாட்டுப் பாடல்நூல் அழகுபடக் கூறுகிறது. உண்மையில் இக்கதை நிகழ்ச்சிகள் வேட்டுவர் வேளாளர் இனப்போராட்டத்தின் காரணமாக நிகழ்ந்த தில்லை என்பதை இக்கதையை ஊன்றிக் கவனித்தால் விளங்கும். ஆயினும் ஏனே அத்தகையதொரு எண்ணம் இருசாரரிடையேயும் வளர்ந்து விட்டதன் காரணமாக இக் கிராமிய இலக்கியத்தின் சிறப்பு வெளிப்படாமல் இருந்து வருகிறது

**வேறு பல கவுண்டர்கள்**

பழங்கால முதலே இவ்வாறு வரலாற்றில் இடம் பெற்று பெரும் புகழுடன் வாழ்ந்த இவ்வேளாள கவுண்டர் பெரு மக்கள் பிற்காலத்தில் அதாவது இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திலும் பங்கு கொண்டு புகழ் சுமந்தனர். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர் சென்னிமலைக் கவுண்டராகும். இவரைப்பற்றிய வரலாறு மிகவிரிவுடையது தான் முன்னரே குறிப்பிட்டது போல் இ-வைகள் அனைத்தையும் விரித்து எழுத வாய்ப்புத்தான் கிடைக்க வில்லை. ஆயினும் ஓரளவு சுருக்கமாகக் காண்போம். இந்த சென்னிமலைக் கவுண்டர் சர்க்கரை மன்ருடியாரின் குடியான பயிறன்கூட்டத்தைச் சேர்ந்தவர். காங்கேயம் தாலுக்காவில் உள்ள சிவன்மலைக்கும் சென்னிமலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பைக் கைப்பற்றி ஓடாத நிலை என்னும் ஊரிலே கோட்டை கட்டிக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பனியாருக்கு அடங்காதவராக தனியாட்சி செய்து வந்தார். கொங்கு வேளாளரின் பரம்பரைக் கொடியான ஏர்க்கொடியை[1] பறக்க விட்டான். அக்காலத்தில் நடைபெற்ற மூன்ருவது

1. ஏர்க்கொடி அக்கால வேளாளர் சங்கமமான "சித்திரமேழி" என்ற சங்கத்தின் கொடியாகும், இச்சங்கத்தவர் கல்வெட்டு களில் "சித்திரமேழிப் பெரிய நாட்டார்" என்று குறிக்கப் படுகின்றனர்.

மைசூர் போரிலே அதாவது 18-ம் நூற்றாண்டின் இறுதியிலே, கம்பனி அரசு திப்புசுல்தானிடமிருந்து சேலம் மாவட்டத்தை கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து நான்காவது மைசூர் போரிலே கோவை மாவட்டத்தையும் கைப்பற்றிக் கொண்டனர் கம்பனியார். குமுறி எழுந்தார் தீரன் சென்னிமலை ஆங்கிலப் படைகளைத் தாக்கி அழித்து கம்பனிக்காக அவர்கள் வசூலித்து இருந்த கப்பத் தொகைகளைப் பிடுங்கிக் கொண்டார். இதனை எதிர்த்தவர் புதூர் பட்டக்காரரான காங்கேய மன்றாடியார் வழியில் வந்த பல்லவராய கவுண்டர் ஆவர். இவருக்கும் சென்னிமலைக் கவுண்டருக்கும் இடையே காங்கேயத்தில் பெரும் போர் நடைபெற்றது. இப்பயங்கரபோரில் பல்லவராயக் கவுண்டர் கொல்லப்பட்டார். அவருடைய படைவீரர்கள் சென்னிமலைக் கவுண்டரின் வீரத்தைக்கண்டஞ்சி அவருடனே சேர்ந்து கொண்டனர். இதைக்கண்ட கும்பினிப்பட்டாளம் கொதித்து எழுந்தது. பீரங்கிப் படைகளைக் கொண்டு ஓடாநிலைக் கோட்டையைத் தகர்த்து எறிந்தது. அப்படியும் அஞ்சாத சென்னிமலைக் கவுண்டர் தமது படைகளுடன் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டார்.

கும்பினிப் படைகளை மறைவிடங்களிலிருந்து திடீர் திடீரென்று தாக்கி பெரும் அவதிக்குள்ளாக்கினர். சென்னிமலைக் கவுண்டர், கும்பினிப் படையினர் எப்படியாவது சென்னிமலைக்கவுண்டரைப் பிடித்துத் தூக்கிலிட விரும்பினர். காரணம் பாண்டிய நாட்டில், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் புலித் தேவர் போன்ற சுதந்திரப் போராட்ட விரர்களைவிடப் பலமடங்கு சென்னிமலைக்கவுண்டர் கும்பினிப் பட்டாளத்திற்கு பெருத்த தலைவேதனையாக விளங்கினர். அப்படியிருந்தும் கொங்கு நாட்டின் மற்றைய சரித்திர புருஷர்களைப் போல சென்னிமலைக் கவுண்டரின் சிறப்பும் தமிழக மக்களின் மனதில் பதியாமல் போனது ஒரு பெரும் துரதிருஷ்டமே.

கும்பினியர் சென்னிமலை கவுண்டரை பிடிக்கத் தந்திரமாக வலை வீசியபோது அவக்குகு இரகசிய இருப்பிடம் தந்து ஆதரவு கொடுத்தவர் திண்டுக்கல் தாலுகா விருபாட்சி பாளையக்காரரான கூளப்ப நாயக்கரேயாவர். ஆனல் துரதிருஷ்டவசமாக இச்செய்தி கம்பனியாருக்கு



சங்ககிரி கோட்டைக்குச் செல்லும் வழி

தெரிந்து விட்டது. அப்பொழுது திண்டுக்கல் கலெக்டராக இருந்த ஹார்டிஸ் என்பார் பாளையக்காரருக்கு எச்சரிக்கை விடுத்ததோடு வரிப்பணம் கொண்டு சென்ற அதிகாரிகளையும் அவர்கள் சென்னிமலைக் கவுண்டரைப் பற்றி தமக்கு

ஒன்றும் தெரியாது என்றதால் கடுமையாக தண்டித்தாராம். கடைசியில் பாளையக்காரரை நீண்டநாள் தேடி வலை வீசிப் பிடித்து தூக்கில் தொங்கவிட்டனர்.[1] அதன் பிறகும் தீரனான சென்னிமலைக் கவுண்டர் ஆறு ஆண்டுகள் தனியரசு செலுத்தினர். கடைசியில் கி. பி. 1805-ல் கம்பனியார் வஞ்சகமாக சதிசெய்து தந்திரமாகக் கண்ணி வைத்து சென்னிமலைக் கவுண்டரைப் பிடித்து சங்ககிரியிலுள்ள கோட்டையில் சிறை வைத்து இறுதியில் அவரைத் தூக்கில் தொங்கவிட்டு வெற்றிவிழா கொண்டாடினர்கள். சென்னிமலைக்கவுண்டரைப்பற்றி எனக்குக் கிடைத்த சான்றுகளை மட்டும் கொண்டு இதனை எழுதினேன். இப்படி தேசிய விடுதலை எழுச்சியிலும் கொங்கு வேளாளக் கவுண்டர் குலத்தவர்கள் தம் பங்கு சொத்தையல்ல என்று நிரூபித்துக் காட்டி தமது அசாதரணமான வீரத்தையும், நாட்டுப்பற்று உணர்ச்சியையும் காட்டி வரலாற்று ஏடுகளில் தமக்கென ஒரு நிரந்தரமான இடம் பெற்ற பெருமை தமிழ்நாட்டின் தனிப்பெரும் பெருமையாகும். இது மட்டுமா? இன்னும் எத்தனையெத்தனை நிகழ்ச்சிகள்? திப்பு சுல்தானின் கொடூரமான ஆட்சியின் கீழ் அல்லல்பட்ட கவுண்டர் குலப் பெருமகன்களிடம் எத்தனையெத்தனை பேச்? காடையூர் பட்டக்காரர் என்ன? காலிங்கராயக் கவுண்டர் என்ன? இப்படிப்பலர் அரசாண்ட பெருமகனர்களாக விளங்கியவர்கள் எல்லாம் தம் நாடு இழந்து, குடும்பம் இழந்து, காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்து வாழ்ந்து அல்லலுற்றனர். சங்ககிரிக் கோட்டையில் பலர் சிறையிருந்து செக்கிழுத்து கல்லுடைத்துத் துன்பமுற்றனர். எல்லாம் நாட்டுக்காக திப்பு சுல்தானின் கொடுமைகளிலிருந்துதம் நாட்டுமக்களை காப்பாற்றுவதற்காக ஈரோட்டுக் கவுண்டர்கள் பலர் எல்லையற்ற வீரம் காட்டினர். நாயக்கர் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்ட இராமப்பையன் அம்மானை என்னும் பிரபந்தம், "ஈரோடு தன்னில் எண்ணைவென்றுக்

---

1. மெக்கென்சி தொகுப்பு பக்: 24.

கொங்கு மன்னர், காங்கேய நாட்டில் கதித்தமுனைக் கவுண்டர் அப்பாச்சிக் கவுண்டன் ஆன பெருந்தளமும், கணக்கதிகாரி கவுண்டன் பெரும்படையும்'' என்று பாடிச் செல்கிறது.

**படைத்தலை வேளாளர்**

கொங்கு வேளாளர்களில் ஒரு பிரிவினர் படைத்தலை வேளாளர் என்பவர். படைத் தலைமையில் சிறந்து விளங்கினமையால் இவ்வாறு அழைக்கப்பட்டனர் போலும். கொங்குச் சோழன் வீரராஜேந்திரன் காலத்திய கல்வெட்டு ஒன்று படைத்தலை வெள்ளாளர் என்று இவர்களைக் குறிப்பிடுகிறது. இவர்கள் குறுப்புநாடு எனப்படும் விஜயமங்கலம் திருப்பூர் பகுதிகளில் நிறையக் குடியேறி இருந்தனர். எனவே இவர்களை குறுப்பு நாட்டுக் கவுண்டர்கள் எனவும் அழைத்தனர். இவர்கள் சிறந்த தமிழ்த் தொண்டர்களாக விளங்கினர்.

அகத்துறைக் கோவை சொன புலவன்
பல்லக் கொடுத்துக் கழஞ்சியும் பொன்னும் பரிசளித்த
வெல்லப் படைத்தலை வீரன் உலகுடை வீரன்......

என்று கொங்கு மண்டல சதகம் கூறுவதிலிருந்து இவர்களுள் ஒருவர் உலகுடைய மன்ருடி என்று பெயர் பெற்றிருந்தார் என்றும், இவர் தம் காலத்தில் அகத்துறைக் கோவை என்னும் அகப்பொருள் நூல் ஒன்று பாடச் செய்தார் என்றும் தெரிகிறது. அந்நூல் என்ன வாயிற்று என்று தெரியவில்லை. இவர்களைப் பற்றி பல மரபுக் கதைகள் வழங்குகின்றன. அவற்றை இங்கு விரித்து எழுதின் பெருகும் என்று அஞ்சி எழுதவில்லை. ஹொய்சள அரசர்கள் காலத்தில் இவர்கள் ஹொய்சள அரசர்களுக்கு ஆதரவாக விளங்கி வந்தனர் இவர்களின் காணித் தெய்வம் விஜயமங்கலத்தில் உள்ள விஜயபுரி அம்மன் ஆகும், இவர்களுக்கென மடம் ஒன்று இருந்ததுஎன்றும் அதற்குக் கூனப்பட்டி மடம் என்று பெயர் இருந்தது என்றும் தெரிகிறது.

### மலையாளக்கவுண்டர்கள்

கொல்லிமலைப் பகுதிகளில் வாழும் வேளாள மக்கள் தங்களை மலையாளக் கவுண்டர்கள் என்று கூறிக் கொள் கின்றனர்.

இவர்களுடைய பழக்க வழக்கங்கள், திருமணச்சீர் சடங்குகள் ஆகியவை ஏறக்குறைய கொங்கு வேளாளர் களுடையதை போலவே இருக்கிறது கொல்லி மலையில் 14 நாடுகள் உள்ளன. இப்பதினன்கு நாடுகளுக்கும் ஒவ்வொரு தலைவன் இருக்கிறன் இவர்களுக்கு நாட்டுக் கவுண்டர்கள் என்று பெயர். இதிலும் வேளாளர்களைப் போலக் கவுண்டர் பட்டம் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த 14 நாட்டுக்கும் தலைமையான இடம் வளப்பூர் நாடாகும். இந்த வளப்பூர் நாட்டுக்கவுண்டரே மற்றைய 13 நாடுகளுக்கும் தலைவராவார் இந்த வளப்பூர் நாட்டில் தான் கொல்லிமலையிலே சிறப்புடையதான அறப்பளீச்வரர் கோயில் உள்ளது இவர்கள் தங்கள் சாதி நியாயங்களுக் குச் சென்றால் கொம்பு, தப்பட்டை வாத்தியத்துடன் குதிரையேறி குடைப்பிடித்துச் செல்வார்கள். மலையாளி மக்களுக்கு இத்தலைவர் எந்த ஒரு விஷயத்திலும் கூறும் தீர்ப்பே முடிவான தீர்ப்பு என்று சொல்லப்படுகிறது.

### திருச்செங்கோடும் கவுண்டர்களும்

கொங்கு நாட்டுக் கவுண்டர்களுக்குப் பொதுவாக பலகுல தெய்வங்கள் அவர்களது காணியூர்களில் இருக்கும் போதிலும் கொங்கு நாட்டின் மிகப் பெருந்தலமாக விளங் கும் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரரும், செங்கோட்டு வேலப்பரும் எல்லோருக்கும் பொதுக் குல தெய்வமாக விளங்கி வருகிறார்கள். திருச்செங்கோட்டுக் கோயிலுக்குத் தான் எத்தனை யெத்தனைக் கவுண்டர் பெரியோர்கள் திருப்பணி செய்துள்ளனர். திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை என்றதோர் அரிய நூல் உள்ளது, அந்நூலில

இதன் விவரங்கள் முழுவதும் காணக்கிடக்கின்றன ஆனால் துரதிருஷ்டவசமாக அந்நூல் பதிப்பு இப்பொழுது கிடைக்காமல் போய்விட்டது. எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு நண்பரின் மூலம் அந்நூலைப் பெற்று படித்துப்பார்த்தேன்.



**பவானி சங்கமேஸ்வரர் கோயில் கவுண்டர்கள் இங்கு பல திருப்பணிகள் செய்துள்ளனர்.**

அதிலிருந்து சிலசெய்திகளை கீழேதருகிறேன். காலிங்கராயக் கவுண்டரும், மோரூர்காங்கேயர்களும் சக்கரை மன்றாடியார்களும் செய்த திருப்பணிகளை அவரவர்களைப் பற்றிய விளக்கங்களில் கண்டோம். நாகமலைக்கவுண்டர் என்பார்

கலியுகம் 4800 ல் வாழ்ந்தாராம். (அதாவது கி. பி. 1700) இவர் வைகாசி மாதத்திருவிழாவில் தேர் உற்சவம் நடத்த தேர் செய்து அளித்துள்ளார். மேலும் கொடிமரம் செய்வித்தும் வேறு பல திருப்பணிகளும் செய்துள்ளார். மூனுச்சாவடி சின்னவேலக்கவுண்டர் என்பார் திருமதில்கள் கட்டுவித்தும், மண்டபச் சிதைவு நீக்கிப் புதுப்பித்தும், கும்பாபிஷேகமும் செய்து வைத்தாராம். காங்கேய மன்றாடியார், பல்லவராயக்கவுண்டர் ஆகியோர் பல திருப்பணிகள் செய்து வைத்தார்கள். நல்லகட்டி செங்கோடக் கவுண்டர் என்பார் செங்கோட்டு வேலவனின் சந்நிதியில் இரண்டு துவார பாலகர் சிலையை அமைத்தார். இருகூர் அத்தப்பக் கவுண்டர் என்பார், ஒரு பெரிய மண்டபம் கட்டுவித்து பல பொருட்களை நிவந்தமாக கொடுத்தார். சூரியனுக்கு ஒரு கோவில் கட்டி வைத்தார் மண்டபம் கட்டி வைத்தார். செட்டியாக் கவுண்டர் என்பார் மகா மண்டபம் விநாயகர், நடராஜர் சன்னதிக்கு படிகள் ஆகியவை கட்டி வைத்தார். இவர் குமாரமங்கலத்தில் வாழ்ந்தவர். தூரான் கூட்டத்தவர் குமாரபூபதி என்ற பட்டமுடையவர் என்று கூறுகிறது திருப்பணிமாலை. அர்த்தநாரிக் கவுண்டர் என்பார் சில திருப்பணிகள் செய்தார். கொக்கராயன் பேட்டை மிட்டா ஜமீன்தார் பெரிய ரங்கய கவுண்டர் என்பார் முருகன் கோயிலின் ஸ்ரீவிமானத்தை புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து வைத்தார். மலையேறப் படிகள் கட்டுவித்தார். சுதவுகளுக்குப் பித்தளைத் தகடு போர்த்தினர். மேலும் பல திருப்பணிகளையும் செய்து வைத்தார். இவருடைய பணிகள் மட்டும் மொத்தம் ஏழு பாடல்களில் கூறப்படுகின்றன. இதே கொக்கராயன் பேட்டை ஜமீனின் அதிபதியான தணிகை வேலக் கவுண்டர் என்பாரும் தேர் திருவிழாவிற்கு நிவந்தம் அளித்தார். இவர்கள் மோரூர் வழியில் வந்த கண்ணர் குலத்தவர் என்று தெரிகிறது. சிவனடியார்கள் பலர் உணவு உண்ண பல நிவந்தங்கள் அளித்தார். சித்தளந்தூர் சுப்பராயக்கவுண்டர் என்பார். (இவர் தூரான் குலத்தவர் என்று

சொல்லப்படுகிறது.) கோயில் கருவூலத்திற்குக் கட்டிடம் கட்டி வைத்தார். குமாரமங்கலம் ஜமீன் கைலாசக் கவுண்டர் என்பார் கட்டி முதலியார்களால் கட்டப்பட்ட விமானத்திற்குக் கலசம் வைத்தார். இவ்வாறு பல கவுண்டர்களும் பல திருப்பணிகள் செய்துள்ளமை கவுண்டர்களின் வள்ளன்மைக்கும், இறையுணர்விற்கும் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும். மேற்குறிப்பிட்ட கவுண்டர்களுள் வேட்டுவக் கவுண்டர்களும் உள்ளனர் என்று தெரிகிறது.

## கெட்டி முதலியார்கள்

கட்டி முதலியார்கள் என்பதே பேச்சு வழக்கில் கெட்டி முதலிகள் என்று குறிக்கப்படுவதாகும். இக்கட்டியர்களைப் பற்றியும் இவர்களது சங்ககாலப் பழமை பற்றியும் இவர்களும் கவுண்டர்களே எனவும் இக்கட்டுரையின் முதல், இரண்டாம் அத்தியாயங்களிலே குறிப்பிட்டிருந்தேன். முதலி என்ற சொல் சமூகத்தின் எல்லாத் துறையிலும் முதன்மை பெற்று விளங்கிய பெருமக்களாகத் திகழ்ந்ததால் முதன்மை பெற்ற மக்கள் என்னும் பொருளில் ஏற்பட்டதாகும். இதன் அடிப்படையிலே வெள்ளாளக் கவுண்டர்களுக்கும் ''முதலி'' என்ற பெயர் உண்டு என்று பேராசிரியர் தர்ஸ்டன் தனது நூலில் கூறுகிறார். எனவே கவுண்டர்களின் ஒரு பிரிவினரே கட்டி முதலிகள் எனப்பட்டனர் என்று கூறலாம். இதன் விளக்கம் வண்ணக்கன் கூட்டம் பற்றிய எனது குறிப்பில் காணலாம். இவர்கள் பொன் நாணயங்களை மதிப்பிடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்து கிழக்கிந்திய கம்பனியாரின் ஆட்சி காலத்தில் தங்கக்காசுகளுக்கு மதிப்பிதழ் வழங்குவோராக இருந்து வந்துள்ளனர். கெட்டியராசன் என்று இன்றும் திருமணச் சடங்குகளில் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

இவர்களுள் சேலம் மாவட்டம் தாரமங்கலத்தைச் சேர்ந்த முதலிகள் சிறப்பு வாய்ந்தவர்கள். இவர்கள் வடகரைக் கவுண்டர்களைச் சேர்ந்தவர். கி. பி. 1289-ல் பொறிக்கப்பட்ட சடாவர்மன் சுந்தரபாண்டியனின்

கல்வெட்டுகள் தாராமங்கலத்து ஒன்பது முதலிகளைப்பற்றி குறிப்பிடுகிறது இவர்கள் தாராமங்கலத்தைத் தலைநகரமாகக் கொண்டு தனியாட்சி செலுத்தி வந்தனர் புலிக்கொடியை இவர்கள் தமது இலச்சினையாகவும் கொடியாகவும் கொண்டிருந்தனர். இவ்வாறு கொடி இலச்சினை முதலியவை கொண்டு தனியாட்சி செலுத்திய காலம் விஜயநகர அரசர்களின் காலமேயாகும் எனவே கொங்கு சோழர்களைப் பின்பற்றி அவர்களின் நினைவாகத் தமது அரசினை ஏற்படுத்திக் கொண்டனர் என்றும் கூறலாம். கிருஷ்ண தேவராயர் காலத்தில் விளங்கிய கட்டி முதலியார் இம்மடிக் கட்டி முதலியார் என்று இவர்கள் குறிக்கப்படுகிறர். தம் ஆட்சிக் காலத்தில் பலகோட்டைகளையும், கோயில்களையும் கட்டியுள்ளனர். அக்கோயில்களுக்கு ஏராளமான நிவந்தங்கள் விட்டுள்ளனர். சோழர்கலைப்பாணி பல்லவர் கலைப்பாணி என்பதுபோல கட்டி முதலியார்கள் கலைப்பாணி என்று தமக்கென ஒரு கலைப்பாணியையே பெற்றுள்ளனர் இவர்களது கலைப்பணி ஏறக்குறைய விஜயநகர கலைப்பாணியை ஒத்ததாகும் இக்கலைப்பாணியின் அழகை தாராமங்கலம் கோயிலில் கண்டு மகிழலாம். இக்கட்டி முதலியார்களின் ஆட்சி எல்லை, கிழக்கே தலைவாசல் முதல் மேற்கே தாராபுரம் வரையிலும், தெற்கே கரூர் வரையிலும் பரவியிருந்தது காவிரிபுரம் அருகே உள்ள கணவாய் ஒன்று கஜல் கட்டி கணவாய் என்று குறிக்கப் படுகின்றது இதுவும் இக்கட்டி முதலியார்களின் பெயரில் அமைந்ததேயாகும். இக்கட்டி முதலியார்கள் பல கோட்டைகளையும் எழுப்பியுள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கன சேலம், நாமக்கல், சேந்த மங்கலம், அனந்தகிரி, பரமத்தி ஓமலூர் ஆகியவை யாகும். இவையாவும் இன்று சிதைந்த நிலையிலே காணப் படுகின்றன. சங்ககிரிக்கோட்டையில் அமைந்துள்ள கோயி லிலும் இக்கட்டி முதலியார்களது திருப்பணிக் கலைவண்ணம் கண்டு மகிழ கிடைக்கின்றது. ஓமலூர் கோட் டையில், அக்கோட்டை அடியோடு அழிந்து போய் வெறும் அஸ்திவாரச் சுவட்டுடனே காணப்பட்ட போதிலும் அதில்

டுள்ள சிவன் கோயிலும், திருமால் கோயிலும் இன்றும் கட்டி முதலியார்களின் கோயில் அமைப்புச் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இவர்கள் கவுண்டர் களே என்று கருதப்படுவதால் இக்கோயில்களையும், சிற்ப கலைப்பாணியையும் ஏன் கவுண்டர்களின் கலைப்பாணி என்று கூறக்கூடாது? ஆத்தூர்க் கோட்டையில் உள்ள பெருமாள் கோயிலும் கட்டி முதலியார்களாலேயே கட்டப்பட்டதாகும். இக்கோயில் மண்டபத்தில் கட்டி முதலியாரின் சிலை காணப் படுகிறது. ஓமலூர் கோட்டை, அதன் கோயில்கள், ஆத் தூர் கோட்டைப்பெருமாள் கோயில் ஆகியவை வணங்கா முடிக் கட்டி முதலியாரால் கட்டப்பட்டவையாகும். இவர் காலம் கி. பி. 15-ம் நூற்றுண்டின் இடைப் பகுதியாகும். இவருக்குப்பிறகு கி. பி. 1667-ல் தொட்ட தேவராஜா என்ற மைசூர் மன்னர் ஈரோடு, தாராபுரம் பகுதிகளைக் கைப்பற்றியபோது அப்பகுதிகள் நாயக்கர் வசமிருந்தன என்று தெரியவருவதால் இதற்கு முன்னரே இக்கட்டி முதலியார்களின் ஆட்சி சரிந்து விட்டது எனத் தெரிகிறது. இவர்களின் ஆதிக்கத்தில் இருந்த தென்கொங்கு பகுதி நாயக்கர் வசமாகி விட்டது. கி. பி. 1688—89ம் ஆண் டில் சிக்கதேவராஜன் என்ற மைசூர் மன்னன் கொங்கு நாட்டின் பெரும் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு கட்டி முதலியாரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தான். அதன் பிறகு கட்டி முதலியார்கள் சிறு சிறு ஊர்ப் பகுதி களின் தலைவர்களாகவும், கம்பனி ஆட்சிகாலத்தில் பொறுப்பு மிக்க அதிகாரிகளாகவும் பணியாற்றி வந்தனர். இத்தகு வரலாற்று சிறப்புமிக் கட்டி முதலியார்களின் ஆட்சியால் கொங்கு கவுண்டர்களின் தனிப்பட்ட பெருமை மேலும் சிறப்புடன் கூடித் திகழ்கிறது என்று கூறலாம்.

**கவுண்டர்களைப்பற்றி மேனுட்டு அறிஞர்கள்**

கொங்கு நாட்டு வேளாளக் கவுண்டர்களைப்பற்றி மேனுட்டு அறிஞர்களின் மனதில்பட்ட கருத்துக்களை இங்கே சிறிது பார்ப்போம். காலின் மெக்கன்சியுடன் ஒத்துழைத்த ஆங்கிலேயர் ஒருவர்.

"கொங்கு வேளாளர் மற்றைய நாட்டு வேளாள மக்களைவிட தோற்றத்தில் முற்றிலும் வேறுபட்டவர்களாவர் கொங்கு வேளாளர் என்ற பெயர் அவர்கள் வாழ்ந்த நாட்டின் அடிப்படையாகப் பிறந்த பெயராக இருத்தல் வேண்டும். சிறு கிராமங்களில் கூட்டங்கூட்டமாக வாழும் இவர்கள் பழக்கவழக்கங்களிலும் மற்றைய நாட்டு வேளாளர்களைவிட மாறுபட்டவர்கள்" என்கிறார்.

நிக்கல்சன் என்னும் மற்றொரு பேரறிஞர் இந்நாட்டு வேளாளக் கவுண்டர்கள் கடுமையான உழைப்பாளிகள் சொன்ன சொல் காப்பாற்றும் நேர்மையாளர்கள்; நல்ல உடல் வலிமை படைத்தவர்கள்; தங்கள் இனத்தை யார் இழிவுபடுத்தினாலும் பொறுக்க மாட்டார்கள். அவர்கள் நாட்டுப் பெண்கள் குதிரை சவாரி செய்வார்கள். இது மற்றைய தென் இந்திய நாடுகளில் காணப்படாத சிறப்பாகும் என்று தமது நூலில் குறிப்பிடுகிறார்.

**வேட்டுவத் தலைவர்களும் மக்களும்**

வேளாளர்களைப் போலவே கொங்கு மன்னர்கள் காலத்திலும் அவர்களுக்கும் பின்னால் ஆண்ட பாண்டியர், ஹொய்சாளர், விசயநகர அரசர்கள் ஆகியோர் காலங்களிலும் கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் நிறைந்து வாழ்ந்த பகுதிகளுக்கும், பிற பகுதிகளுக்கும் தலைமை உரிமை பூண்டவர்களாகவும், மற்றும் அதிகாரிகளாகவும், கல்வெட்டுகளில் இடம் பெறத்தக்க அளவிற்கு அறச் செயல்கள் புரிந்த பிற வேட்டுவப் பெருமக்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்குமுன் வேட்டுவர்களைப் பற்றி இன்னும் சில பொதுப்படையான செய்திகளையறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

கொங்கு நாட்டின் வடக்கு, வட கிழக்குப்பகுதி நாடுகளில் வேட்டுவர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர். இம் மக்கள் போர்த்தொழில் வல்ல வீர மறவர்களாக விளங்கி வந்தமையால் கொங்கு நாட்டை அரசாண்ட

கூறுநில மன்னர்களும் பாண்டிய சோழ, கங்க அரசர்களும் காடவர்களும், சிற்சில காலங்களில் ஆண்ட சாளுக்கியர், இராஷ்டிரகூடர், வாண அரசர்கள் ஆகியோரும் இவ் வேட்டுவர்களது போர் மரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு வந்துள்ளனர். இவ்வரசர்களின் படை வீரர்களுள் பெரும்பான்மையினராக விளங்கியவர் இவ்வேட்டுவர்களே யாவர். இவர்கள் எல்லைப்புற நாடுகளின் குறுநில மன்னர் களாகவும் விளங்கி வந்துள்ளனர், எதிரி அரசர்களின் படை களை ஈவு இரக்கமின்றி வெட்டிச்சாய்ப்பதிலும் ஆநிரை கவர வருவோரை அலறியடித்துக் கொண்டு ஓடச்செய்வதிலும் இவ்வேட்டுவர்கள் தமக்கு நிகரற்றவர்களாக விளங்கி வந்தனர். எனவே குடியேறிய வேளாள மக்கள் இவர்களைப் பகைத்துக் கொள்ள அக்காலத்தே விரும்பவில்லை, வேளாள மக்கள் ஓரளவு சமர்த்தர்களாக விளங்கினர், வேட்டுவ மக்களுக்கு அவர்களைத் தமக்குச் சாதகமாக நடந்து கொள்ளச் செய்ய பலவிதமான சலுகைகள் அளித்தும் தமது நாகரிகத்தைப் பின்பற்றச் செய்யும்போது வேட்டுவர்களது பாம்பரைப் பழக்கவழக்கங்களுக்கு முன்னுரிமை அளித்தும் கிராம தேவதைகள் கோயில்களிலும் பிற ஆலயங்களிலும் அவர்களும் உரிமை பெற வழி வகுத்துக் கொடுத்தும் இது போன்ற பல நட்பைவளர்க்கும் செயல்களைச் செய்து வேட்டு வர்கள் தம்மை எதிர்த்து என்றும் பகைவர்களாக இராத வண்ணம் செய்து கொண்டனர்.

வடகொங்கு நாட்டில் காணப்படும் நடுகற்கள் அமைந் துள்ள இடமெல்லாம் இன்றும் வேட்டுவர்சாமி கோயில் வேடியப்பன் கோயில் என்ற பெயர் பரவலாக பல கிராம தேவதைகள் கோயிலுக்கும் வழங்கிவரும்பெயராக உள்ளது. வேட்டுவ அப்பன் என்பதே வேடியப்பன் என்று திரித்து வழங்கப்படுவதாகும். இவ்வேடியப்பன் கோயில்களில் காணப்படும் நடுகற்கள் பலவற்றில் ஆநிரை கவர வந்த பகையரசர்களின் வீரர்களை எதிர்த்துப் போர் செய்து ஆநிரைகளை மீட்டு உயிர் துறந்த வேட்டுவ வீரர்களது உருவமும், தமது ஊர் காக்க உயிர்விட்ட வேட்டுவ உத்தமர்

களது உருவமுமே காணப்படுகின்றன. கொங்கணி அரசர்களின் ஆதிக்கம் கொங்கு நாட்டில் வலுப்பெற்று இருந்த போது அவர்கள் வேளாள மக்களுள் தலைமை பூண்டு விளங்குபவனை வேளாளர் குடியிருப்புக்களுக்குத் தலைவனாக்கி அவனுக்குக் காமிண்டன் என்று பெயர் கொடுத்ததைப் போல் வேட்டுவ மக்களுள்ளும் தலைமை பூண்டு சிறந்து விளங்குபவனை வேட்டுவர்கள் மிகுதியாக வாழும் வேட்டுவக் குடியிருப்புக்களுக்குக் காமிண்டனாக்கித் தக்க மரியாதையுடன் நடத்தி வந்தனர். இவ்வேட்டுவக் காமிண்டர்களே பிற்காலத்தில் வேட்டுவக் கவுண்டர்களாயினர். இக்கவுண்டர் பட்டம் கொங்கு நாட்டைத் தவிர ஏனைய நாட்டு வேட்டுவர்களுக்கு வழங்கப் படாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வேட்டுவக் காமிண்டர்களே தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஊராளி வேட்டுவர்கள் என்று குறிப்பிடப்பட்டனர். கொடுமுடிக்கு அருகில் உள்ள வடிவுள்ளமங்கலம் என்னும் ஊரில் ஒரு நடுகல் கிடைத்துள்ளது. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தான அந்த நடுகல்லில் ஊராளி வேட்டுவன் அழகன்காளி என்பவன் பெயர் காணப்படுகிறது மற்றொரு சாசனம் பாடல் வடிவில் காணப்படுகிறது. இதிலும் ஒரு ஊராளி வேட்டுவர் குறிக்கப்படுகிறார். இவற்றிலிருந்தும் இப்பகுதிகளிலே வேட்டுவக் கவுண்டர்கள் மிகுதியாக வாழ்ந்தனர் என்ற செய்தி உறுதிப்படுகிறது.

இவ்வேட்டுவர்களில் பெரும்பாலோர் தொண்டை நாட்டின் வடபகுதிகளிலிருந்தும், ஆந்திர நாட்டின் தென் மேற்குப் புற மலைப்பகுதிகளிலிருந்தும், அழைத்து வரப்பட்டனரான மையால் இவர்கள் குடியேற்றம் பெரும்பாலும் கரூர், சேலம் நாமக்கல், தருமபுரி பகுதிகளிலே அதிகமாக அமைந்து விட்டது. ஆயினும் வேட்டுவக் கவுண்டர்கள் கொங்குநாடு முழுவதிலுமே பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

**மாவலியர், காவலியர், பூவலியர்**

கொங்கு நாட்டில் வாழ்ந்த வேட்டுவ இனத்தவர்களுள் மாவலியர், காவலியர், பூவலியர், என்ற மூன்றுபிரிவினர்கள் இருந்தனர் என்றசெய்தியை சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். இவ்வினத்தவர்களுள் காவலியர் என்பவர் காடுகளைக் காப்பதில் வல்லவர்கள் எனவும், பூவலியர் என்பவர் பூமியை ஆளும் வலிமையுடைவர்கள் எனவும் பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. மாவலியர் என்பதை மா=மிக்க அல்லது பெரிய, வலியர்=வலிமை படைத்தவர்கள் என்று விரித்துப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்தமாவலியர் என்பவர்கள் திருவாரூர் கல்வெட்டு ஒன்றிலே மனுநீதிசோழனின் அமைச்சர் வழியில் தோன்றியவர்கள் என்று குறிக்கப்படுகின்றனர்.[1] மகாபலிச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றல்கள் எனவும் குறிக்கப்படுகின்றனர்.[2]

வடுகவழி மேற்கு எனவும், வழங்கப்படும் கொங்கின் வடகிழக்கு பகுதி நாட்டை ஆண்டவர்கள் வாணர்கள் எனப்படும் மகாபலி வாணர்கள் இவர்கள் தங்களை மகாபலிச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றலர்கள் என்று கூறிக்கொள்கின்றனர்.

ஆதித்த சோழனின் கல்வெட்டு ஒன்று வேட்டுவதி வாண கோவரையர் என்பார் ஒருவரைக் குறிப்பிடுவதை முன்னர் பார்த்தோம். எனவே மாவலியர் என்ற வேட்டுவ இனத்தவ மாவலி வாணராசர்கள் வழியினர் என்பது உறுதிப்படுகிறது. இவர்கள் தம்மை மகாபலிச் சக்ரவர்த்தி என்ற புராண அரசனின் வழி வழிவந்தவர் என்று கூறிக்கொண்டது தம்மைப் பிரபலப் படுத்திக் கொள்வதற்கேயாகும்.

---

1. சேலம் கெஸட்டியர்
2. பிற்கால சோழர் சரித்திரம் டி. வி. எஸ். பண்டாரத்தார்

## சவ்வாதுமலைத் தொடரும் வேட்டுவரும்

வடஆற்காடு மாவட்டம் வேலூருக்குத் தென்மேற்கே 8 கல் தொலைவில் தொடங்கி திருப்பத்தூர் வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிங்காரப்பேட்டைவரை சுமார் 40 மைல் தொலைவிற்கு நீண்டு பரவியுள்ள மலைத் தொடர் சவ்வாது மலைத்தொடராகும். இம்மலைத்தொடர் கள் தொண்டை நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் இடையே நீண்டதொரு பெரிய மலையாக விளங்குகிறது. இம்மலைத் தொடர் பகுதியில் வாழும் மக்களுக்கும் தமக்கும் ஒருவகைத் தொடர்பு இருப்பதாகவும் அதுபற்றி அந்நாட் டிலே ஒரு நாடோடிக் கதை அமைந்த கிராமீய இலக்கியம் உள்ளதாகவும் அதனைப்பெற்று ஆராய்ந்தால் வேட்டுவ மக்களைப் பற்றிய மேலும் பல ருசிகரமான சான்றுகள் கிடைக்கலாமென்றும் கரூரில் வாழும் வேட்டுவக்கவுண்டர் நண்பர்கள்பலர் எமக்குத் தெரிவித்தனர்

இம்மலைப்பகுதியில் வானர்களும், வேட்டுவத் தலைவர் கள் பலரும் வாழ்ந்ததாகச் சங்க இலக்கியங்கள் கல் வெட்டுகள் ஆகியவை விரிவாகச் சொல்கின்றன. இப்பகுதி யில் மலை நிலமாகிய குறிஞ்சி நிலமே அதிகம். இம்மலைத் தொடரில் நவிரமலை, பெரியமலை, சின்னமலை, தென்மலை வடமலை, பெருமாள்மலை, மூலைக்காட்டுமலை. ஆட்டைமலை முதலிய மலைகள் உள்ளன. கொங்கு மலை என்ற பெயரிலும் ஒரு மலை உள்ளது. கருங்காலிப் பாடிப்பட்டி குறும்பப் பட்டி இளங்குன்னி, மணிக்கல் போன்ற ஊர்கள் உள்ளன. இம்மலைகளுள் ஒன்றான நவிரமலை செங்கண் மாத்து. வேள் நன்னனின் நன்விலம் நாட்டைச் சார்ந்த மலைகளுள் ஒன்று என மலைபடுகடாம் என்னும் பத்துப் பாட்டின் இறுதி இலக்கியம் கூறுகிறது.[1]

1. மலைபடு-வரி 86

இம் மலைமீதுள்ள தான காண்டேசுவரர் கோயில் மலைபடுகடாம் கூறும் கோயில் ஒன்றோடு வைத்து எண்ணத் தக்கச் சிறப்புடையது. இவை ஒருபுறமிருக்க இங்குள்ள காட்டுப்பகுதிகளில் முல்லைக்காடு, தாயல்காடு என்ற என்ற பெயருடைய இரு காடுகள் உள்ளன. இப்பகுதி தொண்டைநாடு கொங்குநாடு ஆகியவற்றிற்கு எல்லையாக அமைந்து இருப்பதால் இங்கு அதிகமான போர்கள் நடைபெற்றிருந்தல் கூடும் எனவேதான் இம்மலைபகுப்தியின் தென் பகுதியில் உள்ள செங்கம் வட்டத்தில் நடுகற்கள் நிறைய காணப்படுகின்றன, இச் சவ்வாது மலைப்பகுதிகளில் வேடர் பேயர், குறும்பர், இருளர் கவுண்டர் இவைமக்கள் இன்றும் நிறையப்பேர் வாழ்கின்றனர் இவர்கள் இன்றும் நடுகற்களையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். வேடியப்பன் கோயில் என்று இவர்கள் குறிப்பிடும் தேவதைகளின் கோயில்கள் அனைத்தும் நடுகற்கோயில்களே. நடுகல் வீரர்களையன்றி வேறு தெய்வங்களை இவர்கள் வணங்கி அறியார் என்பதைச் சங்க இலக்கியமான புறநானூறு குறிப்பிடுகிறது.

இத்தனைப் பழமைச் சிறப்பு மிக்க இம்மக்கள் காடுகளின் நடுவே உள்ள சிற்றூர்களின் மலையடி வாரங்களிலும் ஆற்றோரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர் இவ்வின மக்கள் வேடர் எனப்படுபவர் வேட்டுவர் வெள்ளாளர், என்ற பல பிரிவினர்களாக உள்ளனர். கன்னட நாட்டிலிருந்து இப்பகுதிக்கு வந்து குடியேறியுள்ள வேடர்கள் "பேயர் என அழைக்கப்படுகின்றனர். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேட்டுவர்களே வேட்டுவ வெள்ளாளர், வேட்டுவ வேளாளர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெரிய மலையடிவாரத்திலும் கருங்காலிப்பாடிபட்டி, புளியம்பட்டி மணிக்கல் ஆகிய பகுதிகளில் விவசாயத் தொழில் செய்தும் வளமுடன் வாழ்கின்றனர். இவர்களுக்கு மட்டுமே இப்பகுதியில் இன்றும் கவுண்டர் என்ற பட்டம் சிறப்பாக வழங்கப்படுவது இங்கு கவனிக்கத்தக்கது.

வேட்டுவ மக்கள் பெரும்பாலும் போர்த் தொழிலில் வல்லராக விளங்கினர். போர்க்காலங்களில் இம்மக்களின் உதவி சமவெளிப்பகுதிகளை ஆண்ட அரசர்களுக்குப் பல சமயங்களில் தேவைப்பட்டது. எனவே போர் மறவர்களாகிய இவ்வேட்டுவர்களை அக்கால அரசர்கள் ஆதரித்துப் போற்றினர். பத்துப் பாட்டினுள் ஒன்று மலை படுகடாம் என்னும் நூலில் வேளானாகிய நன்னனது நாடு காப்பவர் வேட்டுவர்களே என்ற குறிப்புக் காணப்படுகிறது எனவே வேளானத் தலைவர்களும் தமது நாட்டைக் காத்துக்கொள்ள வேட்டுவர்களின் உதவியைப் பெற்றிருந்தனர் என்ற செய்தி தெரிய வரும் இக்காலத்தில் கொங்கு நாட்டில் வாழ்ந்த பூர்விக வேட்டுவ மக்களும், பொத்தப்பி நாடு, வாணகப்பாடி நாடு தெற்கே பாண்டிய நாடு முதலான பகுதிகளிலிருந்து படைத்தொழில் ஏற்று கொங்கு நாட்டிலே குடியேறிய வேட்டுவ மக்களும் பெரும்பாலும் கொங்கு நாட்டின் மலைப் பகுதி பிரதேசங்களிலும், கானகப் பகுதிகளிலுமே தமது குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். இதனைச்சோழன் பூர்வபட்டையம் என்ற நூலும் கூறுகிறது "கரிகால் சோழன் வேட்டுவர் மரபினரைக் கொண்டு காட்டையழித்தான் பொத்தப்பி நாட்டுப் பகுதிகளிலிருந்தும் வேட்டுவர்களை கொங்கு நாட்டில் குடியேற்றி மன்றாடி பட்டம் கொடுத்து ஊரதிகாரம், நாட்டதிகாரம் ஆகியவற்றையும் வழங்கினான் என்று அந்நூல் குறிப்பிடுவதில் ஓரளவு உண்மை இருப்பதும் இதனால் உறுதியாகின்றதன்றோ? ஆனால் இந்நூல் குறிப்பிடும் கரிகால் சோழன் கொங்கு மன்னன் ராசராசக் கரிகாலனே என்பது முன்னர் விளக்கப் பட்டது. எனவே மேலும் பல வேட்டுவக் குடும்பத்தவர்களும் கங்கநாடு முதலிய வடபகுதிகளிலிருந்து இவன் காலத்தில் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்டார்கள் எனலாம். இவர்களுக்கும் மன்றாடி (மன்றுடி) பட்டம் கொடுக்கப் பட்டது என்பதிலிருந்து இப்பட்டப் பெயர் ஊராளிக் கவுண்டர்களில் பலவூர்ப்பகுதிகளுக்குத் தலைவராக விளங்கியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பொதுப்பெயர் என்றும் கூறலாகும்.

எனவே இக் காலத்தில் கொங்கின் மேற்குப் பகுதி களாகிய மலை கானகப் பகுதிகளில் வேட்டுவ மக்களும் ஆற்றுப் பாசனம் மிகுந்த சமவெளிப் பகுதிகளில் வேளாள மக்களும் அமைதியாக வாழ்ந்து வந்தனர் என்று கூறலாம்.

## குலப் பிரிவுகள்

வேளாளர்களைப் போலவே வேட்டுவரிலும் பல குலப் பிரிவுகள் உ ள் ள ன. வேட்டுவர்களின் கூட்டப்பெயர்கள் பின்வருவன. 1) முன்னை வேட்டுவர் 2) மாந்தைப் படை வேட்டுவர் 3) பூவாணிகரைய வேட்டுவர் 4) கிழங்க வேட்டுவர் 5) கரடி வேட்டுவர் 6) புல்லை வேட்டுவர் 7) பாண்டிய வேட்டுவர் 8) வேம்ப வேட்டுவர் 9) முனை வேட்டுவர் 10) கண்ணடி வேட்டுவர் 11) மணியவேட்டுவர் 12) கீரை வேட்டுவர் 13) மேசகாமி வேட்டுவர் 14) குருண்டி வேட்டுவர் 15) வெங்கச்சி வேட்டுவர் 16) கண்டை வேட்டுவர் 17) பனைய வேட்டுவர் 18) உரிமைப் படை வேட்டுவர் 19) மச்சாடி வேட்டுவர் 20) கொல்லி வேட்டுவர் 21) வெலைய வேட்டுவர் 22) சொர்ண வேட்டு வர் 23) பதரை வேட்டுவர் 25) வடுக வேட்டுவர் 26) தச்சுழி வேட்டுவர் 27) அந்து வேட்டுவர் 28) சிறுத்தலை வேட்டுவர் 29) வராக வேட்டுவர் 30) மலைய வேட்டுவர் 31) குறுங்காடை வேட்டுவர் ஆகியோர் இக்கூட்டப் பெயர் களின் ஒவ்வொன்றின் பூர்வ வரலாறும் ஆராய்தற்குரியது. இவற்றுள் முன்னை, மாந்தைப்படை, பாண்டியன், மணியன் கீரை அல்லது கீரன், பனையன், வடுகன் குறுங்காடை ஆகிய கூ ட் ட ங் க ள் சங்க காலம் முதல் இருந்துவரும் பழமை சிறப்பும் பெற்றவை என்று முன்னரே கூறப்பட்டது. கண்ணடி வேட்டுவர் என்ற பெயர் மன்னடி வேட்டுவர்[1]

---

1. அதாவது மன்றுடியவர்களாக விளங்கிய அரசவழியில் வந்தவர்கள்

என்று இருந்து பின்னால் இதுவே பேச்சு வழக்கில் கன்னடி வேட்டுவர் என்றாயிற்றோ என்று எண்ணத் தோன்றுகிறது. உரிமைப்படை வேட்டுவர்கள் அக்கால அரசர்களிடம் உரிமைப்படை எனப்பட்ட ஒருவகை படைவீரர்களாக இருந்தவர்களின் வழித்தோன்றல்களாவர்.

கொல்லி வேட்டுவர் என்பார் கொல்லிமலைப் பகுதிகளில் ஆதியில் வாழ்ந்து வந்து பின்னர் கொங்கு நாடு முழுவதும் பரவியவர் ஆவர். வேளாளர் போலவே வேட்டுவருக்கும் குலகுரு உண்டு. தென்னிலை வேட்டுவர்களுக்கு இடையாறு குருக்கள் என்பவர் குருவாகும். வேட்டுவரின் இக்கூட்டப் பெயர்களையும், அந்தந்த கூட்டங்களில் அதிகாரிகள், தலைவர்கள் ஆகியோர் பெயர்களையும் கொங்கு மண்டலத்தில் காணப்படும் பல கல்வெட்டுகளில் காணலாம்

**கல்வெட்டுக்களில் வேட்டுவக் கவுண்டர்கள்**

வேட்டுவ கவுண்டர்களைப்பற்றிய செய்திகள் வேளாளக் கவுண்டர்களைப்பற்றிய செய்திகளைப் போலவே கொங்கு நாட்டில் காணப்படும் பலவெட்டுகளில் காணப்படுகிறது.

பாரியூரில் காணப்படும் திருபுவன வீரதேவனான ராசராசக் கரிகாலனின் கல்வெட்டு ஒன்று பொன்னப் பனையன் என்ற பெயருடைய பனைய வேட்டுவர் குலத் தலைவன் கோயிற் கதவுகள் உபயம் செய்த செய்தியைக் கூறுகிறது[1] உலகடம் உலகேஸ்வரர் கோயிலில் காணப் படும் வீரராஜேந்திரனின் கல்வெட்டு ஒன்றில் அக்கோயிலில் உள்ள முருகப் பெருமான் திருக்கோயிலைக் கட்டி முருக விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தவனாக கல்லை வேட்டுவ மரபில்வந்த குறுஞ்சொக்கன் என்பான் குறிக்கப்படுகிறான்[2] கல்லை வேட்டுவர் என்ற இம்மரபு இக்காலத்தில் உள்ளதா என்று தெரியவில்லை.

1. 191 of 1910-11;
2. 167 of 65-66.

ஈரோடு தாலுகா வெங்கம்பூரில் உள்ள சோழீஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒன்று வீரபாண்டியன் இரண்டாம் ஆட்சி ஆண்டினது "புல்லை வேட்டுவரில் வாணவதரையன் வலங்கை வாழவந்தானான சுந்தர பாண்டிய வீரசிங்க தேவன் என்பவனைப்பற்றிக் கூறுகிறது.[1] புல்லை வேட்டுவர் என்பது வேட்டுவர்களிடையே உள்ள கூட்டங்களின் பெயர்களுள் ஒன்றாகும். வெள்ளோடு சர்வலிங்கேஸ்வரர் கோயிலில் காணப்படும் உம்மாத்தூர் தலைவர் நஞ்சராய உடையாரின் கல்வெட்டு ஒன்று வேட்டுவப் பட்டக்காரரான திருமலையாண்டான் கோபன்னா மன்றாடியார் ஒருவரைக் குறிக்கிறது.[2] அரசர் பாளையத்தில் காணப்படும் கொங்கு மன்னன் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில் அதியன் என்னும் கூத்தன் கூத்தன் என்ற வேட்டுவர் தலைவன் ஒருவன்குறிக்கப்படுகிறான். இவன் கவிலவரில் குறும்பிலலக் கூட்டத்தவன் என்று குறிக்கப்படுகிறான். அதியன் என்ற பெயர் இவனுக்கு வழங்கக்காரணம் அதியமான் அரசனுக்குரிய ஒரு பகுதியை இவன் ஆண்டமையால் ஏற்பட்டது போலும். மற்றபடி வேட்டுவர்களுக்கும் அதியமான்களுக்கும் சம்பந்தமில்லை.

ஈரோடு தாலுக்கா ஊஞ்சலூர் நாகேஸ்வரன் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு வேட்டுவக் கவுண்டர்களின் கூட்டப்பெயர் சிலவற்றைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு விசய நகரம் அச்சுதராயரின் கல்வெட்டாகும். "மேல்கரை அரையநாட்டு ஊஞ்சலூரில் மலைய வேட்டுவரில் நல்லணன், நச்சுழிவேட்டுவரில் மேவன் சிறியன், குறுங்காடை வேட்டுவரில் சின்னன் வேளானரில் தாயாண்டார் என்று கூறிச் செல்லும் இக்கல்வெட்டு இவ்வனைவரும் ஒன்றாகச் சேர்ந்து 7 மா நிலம் மானியமாகக் கோயிலுக்கு விட்டனராம். அடுத்து துக்காட்சி என்ற ஊரில் காணப்படும் இராஜேந்திர

1. 236 of 67-68.
2. 231 of 67-68.

சோழனின் கல்வெட்டு ஒன்று ஒரு ஊராளி வேட்டுவனைப் பற்றிக் கூறுகிறது. இது நடுகல் கல்வெட்டாகும். பழமங்கலம் என்ற ஊரில் காணப்படும் ஒரு கல்வெட்டு செய்யுள் வடிவில் உள்ளது.

"வாய்த்த புகழ்மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்த மகன் வென்ற சயம் பெருக — சீர்த்த புகழ்
நீக்கு வணம் கற்பொறிக்கப்பட்டான், காடிகுலச்
சொக்கனேந்தலேயுலகில் காண்"

என்றுள்ள இது எக்காலத்தது என்று விளங்கவில்லை. இப்பழமங்கலத்தில் எதிர்த்துப் போர் செய்த மாற்றலர் அதாவது பகைவர் யாரென்று தெரியவில்லை. ஆயினும் காடிகுலத்து வேட்டுவர் இப்பகுதியை ஆண்டனர், என்றும் அக்குலத்து சொக்கன் என்பான் இப்போரிலே உயிர் நீத்தான் என்றும் அவனுடைய நடுகல்லே இது என்றும் தெரிகிறது. இதேபோல சிவகிரியைச் சேர்ந்த தலையநல்லூர் என்னும் ஊரிலே ஒரு நடுகல் உள்ளது.

இதில் தலையநல்லூரைச் சேர்ந்த கிழங்க வேட்டுவரில் பெரிய கிழங்கன், சிறிய கிழங்கன் ஆகிய இரு பெயர்கள் காணப்படுகின்றன. இவன் காலமும் தெரியவில்லை. இன்னும் சேலம் மாவட்டம் மூக்குத்திப்பாளையம் அருகே மோழப் பாறையில் காணப்படும் ஒரு கல்வெட்டு இங்கு குறிப்பிடத் தக்கது. இதன் காலமும் சரியாக அறியக்கூட வில்லை. இக்கல்வெட்டில் "ஸ்வஸ்திஸ்ரீ எழுகரை நாட்டு அக்கை சாலை கங்கை என்று பேரிட்டு இக்குளம் அட்டினேன். பெரிய விளங்கிய ஊராகிய சுரண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியன் ஆன எழுகரை நாட்டு அக்கைசாலைகள் மாத்த ஆராத பிள்ளையேன்[1]" என்ற குறிப்பு காணப்படுகிறது. இன்றும் இதுபோல பல கல்வெட்டுகளில் வேட்டுவர் தம் பெருமை குறிக்கப்படுகிறது.

1. இதனைக் கொடுத்து உதவியவர் ஈரோடு புலவர் செ. இராசு

### புரவிப்பாளையம் இம்மடி கோபண்ண மன்றுடியார்

வேட்டுவக் கவுண்டர்களுளே மிகவும் புகழ்பெற்ற தலைவராகத் திகழ்பவர், இம்மடி கோபண்ண மன்றுடியார் ஆவர். பொள்ளாச்சி புரவிப் பாளையம் பாளையககாரர் என்று குறிப்பிடப்படும் இவர் மலையாளக் குறுநில மன்னர்களுக்கும் பாலக்காடு அரசருக்கும் முடிசூட்டி வைக்கும் உரிமையும், பெருமையும் கொண்டவர். புரவி என்பது குதிரையைக் குறிக்கும். புரவிப் பாளையம் என்பது குதிரைமலை நாடு என்றாகுமோ? அங்ஙனமெனில் சங்ககாலச் சிறப்புடைய பெருங்குடி இக்கோபண்ண மன்றுடியாரின் குடி. இவரைப்பற்றியும் இவரது வம்சத்தைப் பற்றியும் மெக்கன்சியின் குறிப்புகளில் இரண்டு இடங்களில் குறிக்கப்படுகின்றன அவற்றுள் முதலாவது மெக்கன்சி கையெழுத்துப் பிரதித் தொகுப்பின் 118-119 பக்கங்களில் காணப்படுவதாகும். இதன் துவக்கம் இவ்வாறு உள்ளது.

கொங்கு நாட்டின் பூந்துறைப் பட்டினத்தை சேரன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் காளத்தி நாட்டு உடுப்பூரைச் சேர்ந்த சிவபக்தர் கண்ணப்ப நாயனாரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் குடியில் வந்த 16000 வேட்டுவ குடும்பங்களை அழைத்து வந்து கொங்கு நாட்டில் குடியேற்றினான். இவர்களே காவிலவர். புலிலவர், வேட்டுவர் எனப்பட்டனர் என்கிறது. இச்சேரமன்னன் சிவபக்தனும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோழனுமான சேரமான் பெருமாளே. சுந்தர மூர்த்திகளின் திருத்தொண்டத் தொகைப் பதிகம் கேட்டு அடியவர்களின் பெருமைகளை உணர்ந்தமையினாலேயே சேரமான் பெருமாள் கண்ணப்ப நாயனாரின் மீது பெரும் ஈடுபாடு கொண்டு அவர் வழி வந்த வேட்டுவர்களை கொங்கு நாட்டிற்கு அழைத்து வந்து குடியேற்றியிருத்தல் கூடும். சுந்தர மூர்த்திகள் தமது திருத்தொண்டத் தொகையில் கண்ணப்பரையும் குறித்துள்ளார்.

இக்குடியேற்றத்தைப் பற்றி சென்ற அத்தியாயங்களிலே கூறப்பட்டது.[1] இந்தக் குடியேற்றத்தின்போது வேட்டுவக் குடும்பங்களுக்குத் தலைமை வகித்து வந்தவர் பூவாலியர் வழியினரான கோபண்ணன் என்பவரே என்று குறிக்கப் பட்டுள்ளதால் கி. பி. 9ம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்தே புரவிப் பாளையம் வேட்டுவ மன்றாடியாரின் முன்னோர்கள் புகழ்மிக்க வேட்டுவர் தலைவர்களாக விளங்கி வந்தனர் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வழியில் வந்த வேட்டுவப்பட்டக்காரரான கோபண்ண மன்றாடியார் ஒருவரை மாறவர்மன் குலசேகரன் தனது மாமனாராகக் கல்வெட்டுகளில் குறித்துள்ளான். எனவே குலசேகரன் வேட்டுவர் குலப்பெண் ஒருத்தியை மணந்து அவர்களுடன் தனது உறவை வலுப்படுத்திக் கொண்டான் போலும். இவன் ஈழநாட்டு மன்னனுடன் போர் செய்தபோது இக்கோபண்ண மன்றாடியின் படை சிங்களப் படைகளை எதிர்த்துப் போர் செய்து இவனுக்கு வெற்றி வாங்கித்தந்ததாகத் தெரிகிறது.

பாண்டியர்களுக்குப் பிறகு இசுலாமியர்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். பிறகு கம்பண்ணன் என்ற விசயநகர அரசன் இசுலாமியர்களை வென்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். பிற்காலத்தில் இக்கோபண்ண மன்றாடியாரின் வழியில் வந்த முத்துவேல் சந்திர மன்றாடியார் என்பவர் அக்காலத்து மதுரை நாயக்க அரசரான விசுவநாத நாயக்கரின் கொங்கு நாட்டுப் பிரதிநிதியாக விளங்கிய அழகாத்ரி நாயக்கர் என்பவரின் வேண்டுகோளின்படி காட்டுப் பேரூரில் உள்ள பட்டீஸ்வரர் கோயிலைப் புதுப்பித்தார். இவரைத் தொடர்ந்து 21 பாளையக்காரர்கள் இப்புரவிப் பாளையத்தை ஆண்டனர் எனவும், அவர்களுள் ஒருவர் பொன்மலையில் உள்ள வேலாயுத ஸ்வாமி கோயிலைக் கட்டினார் என்றும்

1. இந்நூல் பக் 155—56 and 174.

குறிப்பிடுகிறது இந்நூல். கொங்குநாடு மைசூரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபோது மைசூர் அரசை எதிர்த்த கேரள அரசர்களை வென்று அடிப்படுத்த இக்கோபண்ண மன்றாடியார் உதவினார் அதனால் மனம் மகிழ்ந்த மைசூர் அரசர் அப்பகுதி முழுமைக்குமே இவரைப் பாதுகாவலராக நியமித்தாராம். பாலக்காட்டுக் கணவாய் உள்ளிட்ட பல பகுதிகள் இவரது ஆட்சியின்கீழ் இருந்தது ஹைதர்அலி, திப்பு சுல்தான் காலத்தில் எழுந்த அரசியல் அமைதியின்மை காலத்தில் மன்றாடியார் கம்பனி சர்க்காருக்கு உதவினார் என்றும் மெக்கன்சி குறிப்பு கூறுகிறது.

இரண்டாவது குறிப்பு மேற்குறிப்பிட்ட நூலின் 75ஆம் பக்கத்தில் உள்ளது. கலியுகம் 1714 ல் வெள்ளியங்கிரி மலைப்பகுதிகளை மன்றாடியார் ஒருவர் ஆண்டு வந்தார் என்று இக்குறிப்பு தொடங்குகிறது. இந்த வெள்ளியங்கிரி குறிஞ்சி நகரத்தின் எல்லைகளாக கிழக்கே சென்னிமலையும், தெற்கே ஆனைமலையும், வடக்கே பழனி மலையும், மேற்கே கரம்பின் மலையும், குறிக்கப்பட்டுள்ளன. இதிலும் மணிவேல் சந்திர மன்றாடியார் பட்டீஸ்வரர் கோயிலைக் கட்டிய செய்தி காணப்படுகிறது. ஆனால் இதில் காலவேறுபாடு காணப்படுகிறது.[1]

இம்மடி முத்துவேல் மணிச்சந்திர கோபண்ண மன்றாடியாரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது முதலாவது கைபீது விஸ்வநாத நாயக்கர் காலம் என்று குறித்திருந்தது. பின்னது அழகாத்ரி நாயக்கர் என்பார் விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் அமைச்சர் என்று குறிக்கிறது. இவர் விருப்பப்படியே மன்றாடியார் பட்டீச்சரம் கோயிலைக் கட்டினாராம். இதில் எது உண்மை என்று தெரியவில்லை. இருப்பினும் தொடர்ந்து குறிப்பிடும் இன்னொரு சம்பவத்தில் கலியுகம் 4800 என்ற குறிப்புக் காணப்படுவதால் பின்னதையே சரியானதாக கொள்ளலாம். இந்த மன்றாடியார் கொங்கு நாட்டில் இருந்த நாயக்க அரசர்களின் பகைவர்களை அழிப்பதில் நாயக்க மன்னருக்குப் பேருதவி செய்ததால் தன்னுடைய பாளையப்பாட்டைச் சர்வமான்யமாக அனுபவிக்க

1. இக்குறிப்பில் உள்ள கலியுகம் என்பது சகவருடம் ஆகும்.

உரிமை பெற்றார். பின்னால் இவருக்கு எதிராக மைசூர் அரசரின் படைகள் அனுப்பப்பட்டன. இப்படைகளை எதிர்த்துப் போர் செய்து வெற்றி வாங்கித்தந்ததால் மேலும் 13 வருடகாலம் மன்றாடியார் தனது பாளையப்பட்டைச் சுதந்திரமாகவே ஆண்டு வந்தார். ஆயினும் இறுதியில் மைசூர் படைகளால் முறியடிக்கப்பட்டு கலியுகம் 4800-ல் (கி. பி 1699–700) கோள நாட்டைத் தஞ்சமடைந்தார். பிறகு பாலக்காட்டுக் கணவாய்ப் பகுதிகளில் கொள்ளைக் காரர்களின் உபத்ரவம் பெருகிவிட்டபோது மைசூர் அரசு மன்றாடியாரை மீண்டும் அழைத்து அவர் நாட்டை ஆளும் உரிமையை வழங்கிற்று. பிறகு மைசூரின் அரசராக ஹைதர்அலி பட்டம் சூடியதும் அமீர் சாகிபு என்பான் பாலக்காட்டுக் கணவாய்ப்பகுதிகளுக்குப் படைத்தலைவனாக வந்து சேர்ந்தான். அவன் மன்றாடியாருடன் முரண்டு கொண்டான். அதனால் ஸ்ரீனிவாசராவ், சந்திரராவ் என்பாரின் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டு அப்படை கோவை நகரில் முகாமிட்டது. அமீன் பாலக்காட்டுக் கணவாய்பாதையை முற்றுகையிட்டான். மன்றாடியார் வேறு ஒரு புதிய வழியை உண்டாக்கித்தர அதன் வழியாக மைசூர் படைகள்வந்து அமீனை தாக்கியது. அமீன் தப்பியோடினான். படைத் தலைவர்களின் சிபாரிசின்பேரில் மன்றாடியார் வாகை தொழுவுப் பக்கத்தில் 100 கிராமங்களைப் பரிசாகப் பெற்றார். இக்காலம் முதல்தான் மன்றாடியார் பாலக்காடு அரசருக்கும் அப்பகுதியில் உள்ள ஏனைய சிற்றரசர்களுக்கும் முடிசூட்டி வைக்கும் உரிமையைப் பெற்றார்.

இவ்வாறு விஜய நகர, நாயக்க அரசர்கள் காலத்தில் பல புகழ் பெற்ற வேட்டுவ பட்டக்காரர்கள் கொங்கு நாட்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றார்கள். இன்னும் மதுரைமாவட்டத்தில் இன்று பழனிக்கருகில் உள்ள வேடச் செந்தூர் தன் பெயருக்கேற்ப வேட்டுவர்களின் கோட்டை யாக விளங்கி வந்தது. அப்பகுதி பெருங்காடாக இருந்த தாகவும் நாயக்கர் காலத்தில் அம்மைய நாயக்கன் என்பான்

வடநாட்டிலிருந்து வந்து வேட்டுவர்களிடமிருந்து அப்பகுதியைக் கைப்பற்றிக் காடு கெடுத்து நாடாக்கி அதனைத் தன் பாளையமாக ஆக்கிக் கொண்டதாக ஒரு வரலாறு காணப்படுகிறது.

மேல் கரை தலையநாட்டை கி. பி. 1379 முதல் ஒரு பட்டக்காரர் பரம்பரை சுமார் 286 ஆண்டு காலம் ஆட்சி செய்ததாம். இவர்களுள் முதல்வர் நல்ல சிறுவ பேரியாளிக் கவுண்டர் என்பவராவர். இவனைப் பாண்டிய மன்னன் ஒருவன் பட்டக்காரராக ஆக்கினான். எனவே சுந்தரபாண்டிய வள்ளல் பட்டக்காரன் என்று இவன் அழைக்கப்பட்டதாக தெரிகிறது. ஒதிய அரசர்களை இப்பரம்பரையினரின் முன்னோன் ஒருவன் வென்றதாலேயே பாண்டிய வேந்தனால் சிறப்பிக்கப் பட்டு மேல்கரைத் தலையநாட்டின் பட்டக்காரர் உரிமையைப் பெற்றானாம். இப்பட்டக்காரர் வழிவந்தவர்தாம் இப்பொழுதுள்ள இறுங்கூர்ப்பட்டக்காரர் போலும். ஏனெனில் தலைநாட்டில் உள்ள ஊர்களில் ஒன்றுதான் இறுங்கூர். இவை பற்றிய முழு விவரங்களையும் இப்பொழுதுள்ள வேட்டுவப் பட்டக்காரர்களிடமே கேட்டு அறிதல் வேண்டும்.

இன்னும் கட்டி முதலியார்களைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர் கொங்கு மண்டலம் சேர, சோழ, பாண்டியர் காலத்திற்குப் பின்னால் வேட்டுவப் பாளையக்காரர்களால் சீரும் சிறப்புடனும் ஆளப் பட்டு வந்தது என்றும், அவர்களே, சங்ககிரி, சாமப்பள்ளி (தென்னிலை) காவேரிபுரம், ஆண்டியூர் ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டிகொண்டு இருந்தனர் என்று கூறுகிறார்[1]

1. Wrisonl P 425 No. XVIII.

இவ்வாறாக இன்னும் பல வரலாற்றுக் குறிப்புக்கள் கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் பெற்றிருந்த சிறப்பிடத்தைக் கூறுகின்றன. இக்காலத்திலேயே வேட்டுவர் தலைவர்கள் பலர் நாடாளும் உரிமை பெற்று சிறப்படைந்திருக்கக்கூடும் என்று இதிலிருந்து தெரிகிறது. வேட்டுவர் வேளாளர் போராட்டமும் இக்காலத்திலிருந்தே தலையெடுத்திருக்கக் கூடும் எனலாம்.

தமிழகத்தில் சோழராட்சியும், பாண்டியராட்சியும் முடிவுற்று இசுலாமியர் படையெடுப்பும் அதனையடுத்து விசயநகர, நாயக்கர் ஆட்சியும், கொங்கு நாட்டில் மீண்டும் மைசூர் அரசும் ஏற்பட்டகாலத்தில் அதாவது கி. பி. 15ம் நூற்றாண்டு முதல் சென்ற நூற்றாண்டு வரையிலான காலத்தில் கொங்கு நாட்டிலும், அதே சமயத்தில் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல பாளையப்பட்டுக்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு பாளையப்பட்டிற்கு உரியவனும் பாளையக்காரர் அல்லது பட்டக்காரர் எனப்பட்டான். கொங்கு நாட்டில் வேளாளர் பட்டக்காரர்கள் பலர் இவ்விடைக் காலத்தில் ஏற்பட்டதைப் போல வேட்டுவரிலும் பல பட்டக்காரர்கள் இக்காலக்கட்டத்தே சிறப்புற்றுத் திகழ்ந்தனர். திங்களூர் பட்டக்காரர்தான் இவர்களுள் முதன்மையானவர்என்றேன். இவர் தவிர, தென்னிலைப்பட்டக்காரர், சீத்தப்பட்டி பட்டக்காரர், இருக்கூர் பட்டக்காரர், தேகமத்துப்பட்டிப் பட்டக்காரர், பிச்சப்பட்டிப் பட்டக்காரர், இறுங்கூர் பட்டக்காரர் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் தவிர மெக்கன்சி தனது கையெழுத்துப் பிரதி தொகுப்பில் குறிப்பிட்டுள்ள பட்டக்காரர்கள் சிலரை இனி பார்ப்போம்.

**சுக்குவாடிப் பாளையக்காரர்**

இவரது பூர்வ வரலாற்றைச் சென்ற அத்தியாயத்திலே ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தேன் [1] இவ் வேட்டுவர் வழியில்

---

நாகர் குலத்து வந்த கன்னப்பர் வழி முத்துராஜாக்களைப் பாண்டியர்கள் அழைத்து வந்த வரலாறு.

வந்தவர் நல்லண்ணக் கவுண்டர் என்பார். இவர் பாண்டிய மன்னரால் 70 வகை விருதுகளை பெற்றிருந்ததாக மெக்கன்சி குறிப்பிடுகிருர்.[1] இவர் தமது குலத்தவரை எதிர்த்தப் பகைவர்களை வென்று பாண்டிய மன்னரால் கௌரவிக்கப் பட்டாராம். இப்பாண்டிய மன்னன் சடாவர்மன் சுந்தர பாண்டியனுகவோ அல்லது மாறவர்மன் குலசேகரனுகவோ இருந்திருக்கக் கூடும். இதனை உறுதிப்படுத்துவதாக வரு கிறது இக்குறிப்பின் அடுத்த இருவரிகள் தேசி கவுண்டர் அவரது உடன் பிறந்தவனுன காளாஹஸ்திக் கவுண்டர் என்ற இருவரும் கொங்கு 24 நாடுகளுள் ஒன்ருன வெங்கல நாட்டிலிருந்து அமராவதி நதியின் தென்கரைப் பகுதிகளில் சில கிராமங்களை பரிசாகப்பெற்று அவைகளை ஆளும்குறு நில மன்னர்களாயினராம். இவ்வழியில் கி. பி. 1461 முதல் 826 ஆண்டுகாலம்வரை 12 பாளையக்காரர்கள் ஆட்சிசெய் தனர் என்று அக்குறிப்பு கூறுகிறது.

இவர்களுள் முதல்வரான செட்டி நல்லண்ணக் கவுண் டர் என்பவர் தம் சகோதரரைப் பிரிந்து வந்து சுக்குவாடிப் பாளையப்பட்டைத் தனியாட்சி செய்யத்துவங்கினுர். 12வது பாளையக்காரரான பசுபதி நல்லண்ணக் கவுண்டர் என்பவர் ஹைதர் அலியுடன் சேர்ந்து கொண்டு நஞ்சராஜய்யா என்ற மைசூர் அரசரின் தளபதிக்கு உதவியாக விளங்கி ஞராம். இந்தப் போர் யாருடன் நடைபெற்றது என்று தெரியவில்லை. திருச்சிக்கு அடுத்த சமயபுரத்தில் பகை வர்களை வென்றதாக மட்டுமே குறிப்பு கூறுகிறது. இந்த நல்லண்ணக் கவுண்டர் கி. பி. 1788ல் இறந்ததாக மெக் கன்சி குறிப்புக்கூறுகிறது. இவருடைய மகனே மெக்கன் சிக்கு கைபீது கொடுத்தவர்.

---

MSS. P. 27

### தலைய நாட்டு வள்ளல் கவுண்டர்

இவர் கொங்கு நாட்டில் சிறப்புடன் விளங்கிய ஒரு வேட்டுவப் பட்டக்காரர். கொடைவள்ளல். அன்னதானக் காரர் என்ற சிறப்புப் பெயரிட்டு அக்கால மக்களால் வழங்கப்பட்டாராம். இவரை சுந்தரபாண்டிய தண்டெறி முத்துராஜா என்று குறிப்பு கூறுகிறது[1] தண்டெறி என்பதற்கு தண்டு எறி–அதாவது பகைவர் படைகளை வெருட்டி ஓடச் செய்பவர் என்று பொருள் கொள்ளலாம். எனவே சோழ, பாண்டியர் காலங்களில் வேட்டுவர்கள் பெரும் படைவீரர்களாக, தளபதிகளாக, ஊர், நாடு காப்பவர்களாக விளங்கினர் என்ற நமது கருத்து இதனால் உறுதிப்படுகிறது. இம்மரபினருள் 11வது பாளையக்காரர் காலத்தில் இவர்கள் ஆட்சியிலிருந்த பாளையப்பட்டுக்கள் மைசூர் அரசரால் கவர்ந்து கொள்ளப்பட்டதாம். இவருடைய மகமையாக அதாவது மகனுக்குக் கொடுக்கக்கூடிய சொத்தாக கொஞ்சம் நன்செய், புன்செய் நிலங்களே இவரிடம் விட்டு வைக்கப்பட்டதாம். பிறகு திப்புசுல்தான் இவர்கள் வழியினருள் ஒருவரைப் பட்டக்காரராக ஆக்கி வைத்தான் அதனையும் கிழக்கிந்தியக் கம்பனியார் தம் வசப்படுத்திக் கொண்டனராம்.

### திம்மையைக் கவுண்டர்

கோயம்புத்தூர் நாட்டுச் சர்வாதிகாரி என்று மெக்கென்சி ஒரு வேட்டுவக் கவுண்டரைக் குறிப்பிடுகிறார்.[2] இவர் பெயர் திம்மையைக் கவுண்டர் என்பது. இவரைப் பற்றிய குறிப்பு எதுல முத்துளநாயக்கன் என்ற தொட்டிய நாயக்கர் பாளையக்காரரைப் பற்றிக்கூறும் செய்தியில் காணப்படுகிறது பழனியை ஆண்ட வேலாயுத நாயக்கர் என்பவர் இந்த தொட்டிய முத்துளநாயக்கர் வழி வந்தவர். கோயம்புத்தூர் நாட்டிற்குச் சர்வாதிகாரியாக விளங்கிய திம்மையக்

MSS. P. 28
MSS. P. 39

கவுண்டர் ஒரு முறை எல்லாப் பாளையக்காரர்களையும் தமது சபைக்கு வந்து கூடும்படி அழைப்பு அனுப்பியிருந்தாராம். எல்லாப் பாளையக்காரர்களும் தவருமல் வந்துசேர வேலாயுத நாயக்கர் மட்டும் வரவில்லை என்றும், இதனுல் கோபங் கொண்ட திம்மையக்கவுண்டர் பழனி நாட்டைத் தக்காக வேலாயுத நாயக்கர் தப்பி ஓடி காட்டைச் சரணடைந்தானும். ஆயினும் எறப்பன் என்ற திம்மையக் கவுண்டரின் அதிகாரி ஒருவனுல் பிடித்துக் கொடுக்கப்பட்டான் என்றும் இக்குறிப்பு கூறுகிறது.

**நீலியப்பக் கவுண்டர்**[1]

பாண்டிய அரசன் கொங்கு நாட்டை ஆண்ட போது வேட்டுவ முத்துராஜாக்கள் காளத்தி நாட்டைப் பாண்டியர்களின் பிரதிநிதிகளாக ஆண்டு வந்தனராம். இம்முத்து ராஜாக்களுள் ஒருவர் நீலியப்பக் கவுண்டர். இவர் தமது தலைவரான குணபாண்டியனின் உத்தரவின் பேரில் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்த ஒதிய அரசரை வென்றதாகவும் இந்த வெற்றிக்கு பரிசாக பாண்டியன் வெங்கல நாட்டிலுள்ள திமந்தப்பட்டியை சாசனம் செய்து அளித்தான் என்று வில்சன் கூறுகிருர். இந்த குணபாண்டியன் மாறவர்மன் குலசேகரனேயாவன். இந்திமந்தம்பட்டியே நெகமத்துப்பட்டியாக இருத்தல்கூடும் என்று நான் கருதுகிறேன். அங்ஙனமெனில் நெகமத்துப்பட்டிப் பட்டக்காரரின் முன்னேரே இந்நீலியப்பக்கவுண்டராதல் வேண்டும். இவர்கள் வழியில் 401 ஆண்டுக்காலமாக 20 பாளையக்காரர்கள் ஆண்டனர் எனவும் இவர்கள் ஒவ்வொருவரும் நீலியப்பக் கவுண்டர் என்ற பட்டம் சூடிக் கொண்டதாகவும் இவர்கள் வழிவந்த 14 வது பட்டக்காரரே மைசூர் அரசருக்கு எதிராகப் போர்முரசு கொட்டிய சமய நாயக்கரை (சமயபுரம் இவர் பெயரால் ஏற்பட்ட ஊரேயாகும்) வென்று

1. MSS P. 41

அடக்கினர் என்றும் மெக்கன்சி குறிப்பு கூறுகிறது. சமயபுரம் போரைப்பற்றி கக்குவாடிப்பட்டக்காரர் வரலாற்றிலும் மெக்கன்சி குறிப்பிட்டிருப்பதால் வேட்டுவர்கள் மைசூர் அரசர்களுக்கும் ஹைதர் அலி திப்புசுல்தான் ஆகியோருக்கும் ஆதரவானர்களாக விளங்கினர்கள் என்பது தெரியவரும்.

**கோம்பை பாளையப்பட்டு**[1]

வேட்டுவர்கள் தமது வேட்டைப் தொழிலுக்கு நாய்களைப்பயன் படுத்துவர் இதனலேயே அவர்கள் சிவனை நாயுடன் பைரவராக வழிபட்டனர் என்றும் சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளன. அதற்கேற்ப சாதிநாய்களுக்குப் பெயர்போன கோம்பை என்ற ஊர் வேட்டுவர்களின் பாளையமாக விளங்கியது. இவ்வூரில்உள்ள திருமலைராயப் பெருமாள் கோயிலை வேட்டுவப் பாளையக்காரரான அப்பிச்சி சித்தலை நாயக்கர் என்பார் கட்டினர். இவர் இக்கோயிலின் பூசாரியாக பூவாலியத்தாதன் என்பவனை நியமித்தார் இக்கோயிலுக்கு கிழக்கே கோம்பை என்ற இவ்வூரைத் தோற்றுவித்தார். கோயிலுக்கு மானியமாகப் புலிக்கட்டிக் கிராமம் என்ற ஊரைக் கொடுத்தார் இவர் வழி வந்த எட்டாவது பாளையக்காரர் கோன் ஏரி என்ற பெயருடைய ஓர் ஏரியிலிருந்து ஒரு பெண் கடவுளின் செப்புச்சிலையைக் கண்டெடுத்தார், அதனைப் பெருமாள்கோயிலில் பிரதிஷ்டை செய்வித்தார். இவ்வாறு மெக்கன்சி குறிப்புக் கூறுகிறது.

இக்குறிப்பில் காணப்படும் புலிக்கட்டி என்ற பெயர் புலிக்குத்தி என்பதன் திரிபு ஆகும். புலிக்குத்தி என்ற பெயர் வேட்டுவர்களுக்கே உரிய பட்டப்பெயர். வெள்ளோட்டில் காணப்படும் கல்வெட்டு ஒன்று "பாண்டிய வேட்டுவரில் வீரன் புலிக்குத்தித் தேவன்" என்பவனைத்

1. MSS. P. 49

குறிப்பிடுகிறது. வேட்டுவர்கள் பெரும்பாலும் மலை, காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்தமையால் தமது நாட்டைத் தாக்க வரும் பகைவர்களைப்போல, வரும் புலிகளின் தாக்குதல்களை அடிக்கடி சமாளிக்க வேண்டியதாக இருந்தது. புலி ஒன்றை தனி ஒருவனாக நின்றுத் தாக்கி வெற்றி காண்பதை வேட்டுவர்கள் ஒரு பெருஞ்செயலாகவே கருதினர். புலியுடன் போரிட்டு அதனைக் கொன்று வீரமரணம் அடைந்தவனுக்கு நடுகல் எடுப்பித்து வணங்கி வந்தனர். அவன் வழி வருவோரும் தமது பெயருக்கு முன்னே அல்லது பின்னே புலிக்குத்தி என்ற பட்டப்பெயரைச் சூடிக் கொண்டனர். இன்றும் கொங்கு நாட்டில் புலியைக் குத்திக்கொல்லும் உருவங்களுடன் கூடிய பலநடுகற்களைக் காணலாம்.

## இறைபணியில் வேட்டுவர்கள்

சிவனாரின் முதல் அடியவர்களுள் ஒருவரான கண்ணப்ப நாயனாரின் வழிவந்தவர்கள் என்று வேட்டுவர்கள் தம்மைக் கூறிக்கொள்வதால் வேட்டுவர்கள் சிவபக்தியிலும் தமது குல முதல் தெய்வமான காளி, மாரியம்மன் போன்ற சக்தியின் மீது கொண்டுள்ள பக்தியிலும் சிறந்து விளங்கினர். ஒரு சில வேட்டுவ மக்கள் கொங்கு நாட்டுக் கிராம தேவதைகள் கோயில்களிலும் பூசனை செய்பவர்களாகத் திகழ்ந்து வந்தனர். வேளாளரும் வேட்டுவர்களோடு சமாதானம் செய்து கொண்டு வாழும் போக்கில் வேட்டுவர் பூசித்து வந்த கோயில்களில் அவர்களது உரிமையை மாற்றுமலும் அவர்கள் காலங்காலமாக பெற்றுவரும் வழிபாட்டு முன்னுரிமைகளை அவர்களுக்கு வழங்கியும் வந்தமையால் இறைவழிபாட்டில் சிறப்புற்றே விளங்கினர். இதனால்தான் கொங்கு நாட்டில் தெய்வத்திருத்தலங்களின் தல புராணங்களிலும் வேட்டுவர்களின் பக்தி நெறியைச் சார்ந்த கதைகள் காணப்படுகின்றன. உதாரணம் கரூர் கல்யாண பசுபதீஸ்வரர் ஆலயத்தின் வடபால் தெற்கு நோக்கிய சந்நிதியில் திருக்கோயில் கொண்டிருக்கும்

சௌந்திர நாயகி என்னும் வடிவுடை நாயகியைப் பற்றி வழங்கும் வரலாறாகும். இந்தவடிவுடை நாயகி ஆண்டாளைப் போல இறைவன் மீது காதல் கொண்டு இறுதியில் இறைவனுடைய மனைவியாகும் பேறுபெற்ற ஒரு வேட்டுவர் குல நங்கை நல்லாள் என்று ஒரு பழைய வரலாறு கூறுகிறது.

## ஆறு நாட்டார் மலை

இம்மலையைப்பற்றி முந்தைய அதிகாரங்களிலே ஒரு முறை குறிப்பிட்டிருந்தேன். இங்குதான் சங்ககால சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படும் பிராமிக்கல் வெட்டுகள் சில காணப்படுகின்றன. இம்மலையின் மீது அழகிய முருகன் கோயில் ஒன்று உள்ளது. இது பிற்காலத்தில் கட்டப்பட்டதாயினும் இதனுள் உறையும் முருகப் பெருமான் வரலாற்றுக் காலந்தொட்டு கொங்கு 24 நாடுகளில் வேட்டுவ மக்களே பெரும்பான்மையினராகக் வாழும் ஆறுநாடுகளைச் சேர்ந்த வேட்டுவர் குடித் தலைவர்களின் பூசையுரிமையும் குடிப்பாடும் பெற்று விளங்கிவருபவராகும். இவ்வாறு நாட்டார்களின் ஆதிக்கத்தின்கீழ் விளங்கி வந்து அவர்கள் தம் குலதெய்வமாக இப்பெருமான் விளங்கி வருகின்றமையால் ஆறுநாட்டார் மலை என்று இம்மலை பெயர் பெற்றது. இவ்வாறு நாடுகளாவன 1 வேட்ட மங்கலம் 2. புகளூர், 3. தோட்டக்குறிச்சி, 4. நன்றிநூர்–கடம்பன் குறிச்சி, 5. வாங்கல், 6. நெரூர் என்று சொல்லப்படுகிற போதிலும் இவ்வாறு ஊர்களும் கிழங்க நாடு எனப்படும் கொங்கு 24 நாடுகளுள் ஒரு நாட்டைச் சேர்ந்தவையாக விளங்கி வருவதால் ஆறுநாட்டார் மலை என்ற பெயருக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. எனவே கொங்கு 24 நாடுகளில் வேட்டுவர்கள் பெரும்பான்மையினராக வாழும் 1. மணநாடு, 2. தலையநாடு, 3. தட்டையநாடு 4. கிழங்கு நாடு 5. வெங்கலநாடு, 6. வாழவந்தி நாடு ஆகிய ஆறு நாட்டவர்களுக்கும் குலதெய்வமாக விளங்கி அவர்களது பூசனை உரிமை பெற்றமலை என்றே கொள்ளுவது பொருத்தமாகும். மேற்குறிப்பிட்ட நாடுகளுள் ஆறுவது நாடான

வாழவந்தி நாட்டிற்குப் பதிலாகக் குறுப்பு நாட்டையும் கூறலாம், ஏனெனில் பிற்கால வேட்டுவப் பட்டக்காரர்களின் தலைமைப் பீடமான திங்களூர் இக்குறுப்பு நாட்டில் அமைந்திருக்கிறது. ஆனாலும் மேற்குறிப்பிட்ட ஆறு நாடுகளே ஆறுநாட்டார் மலைக்குச் சுற்றுப்புறத்தில் அருகே அமைந்து இருப்பதால் அவைகளையே நாம் சொல்வது பொருத்தமாகும்.

**அப்பிச்சிமார் கோயில்**

வேட்டுவர்களுக்கே உரிய கோயிலாக விளங்குவது இந்த அப்பிச்சிமார் கோயிலாகும். இதனை அப்பிச்சிமார் திருமடம் என்றும் கூறுகின்றனர் இத்திருக்கோயிலைப்பற்றி நீண்டதொரு கதை கூறப்படுகிறது. ஆயினும் அதனை முழுவதும் வெளியிட இயலவில்லை நொண்டிச் சிந்து இலக்கியம் பெற்ற திங்களூரில் உள்ளது அப்பிச்சிமார் கோயில், அப்பிச்சிமார் என்பவர் திங்களூர் பட்டக்காரர்களின் முன்னோர்களேயாவர். மெக்கன்சியின் குறிப்பில் அப்பச்சி சித்தைய கவுண்டர் என்ற வேட்டுவக் கவுண்டர் ஒருவரைப் பற்றிய குறிப்புகளைக் கோம்பை பாளையப்பட்டுக் கூறிய பகுதியில் சொல்லப்பட்டது இந்த அப்பச்சி சித்தைய கவுண்டரே ஒருவேளை திங்களூர் பட்டக்காரரின் முன்னோர்களுள் முதல்வராக இருந்திருக்கக்கூடும். இங்கு 8 கல் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது இவ்வெட்டு கற்களும் 8 முன்னோர்களைக் குறிக்குமாம். வேறு சிற்பம எதுவும் கிடையாது. வீரவழிபாடே இது ராக்கியண்ணன, முசிரியம்மன் ஆகியவர்களே இங்குள்ள தெய்வங்கள் கொங்கு நாட்டில் 7 அப்பிச்சிமார் கோயில் உண்டாம். திங்களூர், சிங்கா நல்லூர், திடுமல் (சேலம் மாவட்டம்) ஆகிய ஊர்கள் நமக்குத் தெரிந்தவை. பட்டக்காரர்தாம் இதற்கு பூசை செய்யும் உரிமை பெற்றவர் என்று கூறினேன். இப்போது பட்டக்காரர் வாரிசான திரு எம். பி. ராஜ் அவர்கள் இன்னும் பட்டம் சூட்டிக் கொள்ளாததால் பூசை செய்வதில்லை. விளக்கு மட்டும் பொருத்தி வைக்கிறார்கள்.

★

# 10 சில பழக்க வழக்கங்கள்

**கொங்கு வேளாளக் கவுண்டர்களின் திருமணம்**

வேளாளக் கவுண்டர்கள் வீட்டுத் திருமணம் மிகவும் நீண்ட பல சடங்குகளையும் உடையது பரம்பரை, பரம்பரையாக நடந்து வரும் பழக்கத்தை அவர்கள் மாற்றிக் கொள்ளவே இல்லை போலும். முதலில் திருமண நிச்சயத் தாம்பூலம் செய்வார்கள். மாப்பிள்ளை வீட்டாரில் பெரியவரும், பெண் வீட்டாரில் பெரியவரும் எதிர் எதிராய் அமர்ந்த பிறகு மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டுப் பெரியவரிடம் உங்கள் பெண்ணை எங்கள் மகனுக்கு இந்தமாதம் இந்ததேதியில் இத்தனை மணிக்கு மணம் செய்து கொள்கிறோம் என்று சொல்லிப் போடுவர். பெண் வீட்டாரும் தம் சம்மதத்தைத் தெரிவித்து மாப்பிள்ளை வீட்டுப் பெரியவருக்கும், மற்றையோருக்கும் சந்தனம், தாம்பூலம் வழங்குவர். சீர்தட்டுக்களை அருமைப் பெரியோர் நீர்சுற்றிச் சுமங்கலிப் பெண்களிடம் எடுத்துக் கொடுப்பர். அவர்கள் மணப்பெண்ணிடம் அத்தட்டுக்களைக் கொண்டுபோய்ச் சேலை, ரவிக்கை நகைகளை அணிவித்து பூச்சூடிப் பெண்ணின் மடியில் வெற்றிலைபாக்கு, மஞ்சள் எலுமிச்சம்பழம் ஆகியவற்றை வைத்துக்கட்டிப் பெரியோர்களை வணங்கச்செய்வர். பிறகு ஒரு தட்டில் தேங்காய், வெற்றிலைபாக்கு, பழம் எலுமிச்சம் பழம் மாங்கலியத்திற்கு வேண்டியபவுன் இவைகளை வைத்து அருமைப் பெரியவர் நீர்சுற்றிப் பொன் நகைகள் செய்யும் ஆசாரியாரிடம் பொன்தாலி செய்யச் சொல்லிக் கொடுப்பர் இத்தாலிக்கு முப்பிரிவு தாலி என்று பெயர்.

கொங்கு வேளாளக் கவுண்டர்களின் திருமணத்தில் நிச்சயதாம்பூலம் செய்யும் சடங்கில் குறிப்பிட்டிருந்த அருமைப் பெரியவர் என்பார் சிறப்பிடம் பெறுகின்றனர். இவ்வருமைப் பெரியவர் திருமணம் முடியும் வரை பல சடங்குகளிலும் முன்னிடம் வகிப்பர்.

அருமை என்பது

இந்த அருமைப் பெரியவராக எல்லோரும் இருந்துவிட முடியாது. இதற்கென ஒரு தனி சடங்கே உள்ளது. ஒருவர் அருமை செய்து கொள்ள வேண்டுமென விரும்பினால் தங்கள் மகனுக்காவது அன்றி மகளுக்காவது திருமணம் செய்கையில் அதற்குரிய சடங்கை செய்து கொள்ள வேண்டும். அருமை செய்துகொள்பவர் தங்கள் உறவினரிடம் நான் அருமை செய்து கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் என்னை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வர். பிறகு மூன்று அருமைப் பெரியவர்களிடம் சென்று என் மகனுக்கு (அ) மகளுக்கு இன்ன தேதியில் முகூர்த்தம் வைத்திருக்கிறேன். அப்போது நான் அருமைச் சீர்கள் செய்து கொள்கிறேன் நீங்கள் வந்து நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வர். குறித்த நாளில் மேள தாளத்துடனும், விருந்தினருடனும் முகூர்த்தக்கால் போட்டு மூன்று அருமைப் பெரியவருடனும் புற்றுமண் இருக்குமிடத்திற்குச் சென்று அப்புற்றிற்கு அருமைப் பெரியோரைக் கொண்டு பூசை செய்வித்து மண்ணெடுத்து மூன்று கூடைகளில் போட்டு அவற்றை அருமைப் பெரியவர்கள் மூவரும் கொண்டு வந்து கல்யாண வீட்டில் வைப்பார்கள். பிறகு அதை நன்கு பிசைந்துபிறைமண் போட்டு பேய்க் கரும்பை அதில் நட்டு வைப்பார்கள். அருமை செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு நீர்வார்த்து பிறகு விரதம் இடுவார்கள். முகூர்த்தம் நடந்தபிறகு அருமைப் பெரியவர் திருமணத் தம்பதிகளுக்கு அருகுமணம் எடுத்தபிறகு அருமை செய்து கொள்பவர் அருகு மணம் எடுப்பர். இதன் பிறகுதான் அவர் அருமைப் பெரியவர் என்ற பதவிக்குத் தகுந்தவர் ஆவர்.

திருமண நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரேமாதிரியாக இருந்தபோதிலும் கொங்கு வேளாளர் திருமணத்தில் சில புதுமையான நிகழ்ச்சிகள் நிறைந்து இருக்கின்றன. இப்புதுமையான நிகழ்ச்சிகளை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

### நெல் போட்டு வைத்தல்

நிச்சயத்தாம்பூலம் ஆனதும் திருமண வீட்டில் அருமைக்காரப் பெண்மணி ஒரு மிடாவில் நெல் அளந்து போட்டு மணப்பெண்ணின் தந்தை வழியில் வந்த பெண்களால் அந்நெல்லை வேக வைத்து உலர்த்தி எடுத்து வைப்பார்கள்.

ஊருக்கு அருகில் உள்ள நிலத்தில் பால் உள்ள மரத்திற்கு அருமைப் பெரியோரைக் கொண்டு பால் விட்டு பூசை செய்வித்துப் பிறகு அதிலிருந்து ஒரு கிளையை வெட்டி மூன்று கட்டுக்கட்டி எடுத்து வந்து திருமண வீட்டு கூரையின்மேல் காயப்போட்டு வைப்பார்கள். இந்நிகழ்ச்சி தற்போது சிலகுடும்பங்களில் நிறுத்தப்பட்டு விட்டன.

### உப்பு வாங்கல்

இருவீட்டாரும் மளிகைக் கடைக்குச் சென்று சிகப்பு வாங்கி அணிந்து தாம்பூலம் அருந்துவார்கள். பிறகு இரு வீட்டாரும் இரண்டு கூடைகளில் உப்பு வாங்கி இருகூடை உப்பையும் மாற்றிக் கொள்வார்கள். பிறகுதான் ஜவுளி முதலிய சாமான்கள் வாங்குவர், இதன் பிறகு திருமண அழைப்பு நடைபெறும். திருமணத்திற்கு முதல்நாள் மணமக்களை சேர்ந்த உறவினர்கள் மணமக்கள் வீட்டிற்குப் பல்வித சமையல் பொருளும் எடுத்துச் சென்று சமையல் செய்து மணமக்களுக்கு விருந்து வைப்பர் அநேகமாய் முகூர்த்தம் பெண் வீட்டிலே நடைபெறுமாதலால் இவை யாவும் பெண்வீட்டிலேநிகழும். இதற்கு விரத விருந்துஎன்று பெயர், பிறகு இணைச்சீர் நடைபெறும். பிறகு மாப்பிள்ளைக் கோலத்துடன் வருவார்கள். பிறகு திருமண நாளன்று வேட்கோவர, மண்பாண்டங்களை கொண்டுவந்து திருமண வீட்டு வாசலில் வைத்து பூஜை செய்து வீட்டினுள் கொண்டு வைப்பார்கள், அருமைப் பெரியவர் வீட்டுக் கல்யாணம் என்றால் வேட்கோவர் மண்ணினால் பல உருவங்கள் செய்து வண்ணம் தீட்டி வாசல் பந்தலில் கட்டித் தொங்க விடுவர்.

ஆசாரி மணப்பலகை, அரிவாள் மணை, தேங்காய்த்துருவி, சட்டுவம், அகப்பை, உப்புப்பெட்டி, ஏழு அறைகள் உள்ள செலவுப்பெட்டி ஆகியவைகளைக் கொண்டு வந்து வைப்பர் இவர்களுக்கு இதற்காக அரிசியும், பணமும் வழங்கப்படும்

குடிமகன்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் நான் குறிப்பிட்ட குடிமகன் என்பவர் கொங்கு நாவிதன் ஆகும். இக்கொங்கு நாவிதன் ஏற்பட்ட விதம் பற்றி ஒரு பழங்கதை சொல்லப் படுகிறது இதனை இங்கு விளக்கினால் விரியும் என்றஞ்சி விட்டு விட்டேன். சுருக்கமாகச் சொல்லப்போனால் இக் கொங்கு நாவிதன் என்பார் வேளாளக் கவுண்டர்களுக்கு எல்லா நிகழ்ச்சிகளிலும் முன்னின்று செயல்பட்டும், சிகை யலங்காரம் செய்தும் வரும் தொழிலாளராகும். இவர்களது குலமும் வேளாளர் குலமே. எனவே தான் இவர் களிடமும் கொங்கு வேளாளர் கவுண்டர்களிடையே போல கூட்டமுறைகள் உள்ளன. இக்குடிமகனே கவுண்டர் உறவி னர்களுக்குத் திருமண அழைப்பு கொடுத்து அழைப்பவ னாவன். இக்குடிமகனே அருமைப் பெரியவர் வீட்டுத் திருமணங்களில் பிறைமண் போடுபவனும் மாப்பிள்ளையை மணவறையில் உட்காரவைத்து அருமைப்பெரியோர் பால் பூசித்துக் குடிமகனிடம் கொடுப்பர். அவன் மாப்பிள்ளைக்கு பிரமசாரிய விரதம் கழித்து முகசவரம் செய்து அழைத்து வருவான். பிறகு மாப்பிள்ளையை முக்காலியில் உட்கார வைத்து செஞ்சோற்றைச் சுற்றிப் போட்டுத் தண்ணீர் வார்த்து நீராட்டுவார்கள். பிறகு மாப்பிள்ளையை அலங் கரித்து தலையில் உருமாலை கட்டி மாலையணிவித்துக் குதிரை யின் மேல் ஏற்றி ஊர்வலமாக அழைத்து வருவார்கள். தற்காலத்தில் உருமாலை தலையில் கட்டுவதில்லையாம். பிறகு தான் பெண் கொள்ளப் போகும் செய்தியை மேள தாளம் முதலிய வாத்திய ஒலியோடு தெரிவிப்பான். இது

தான் குப்பாரி கொட்டுதல் என்று நாம் மதுக்கரைப்பட்டயத்தில் படித்த செய்தியாம். குலதேவதையை அழைத்து பூஜையிட்டு வணங்கி மாப்பிள்ளை பெண்ணுக்குக் கங்கணம் கட்டுவார்கள்.

**நாட்டார்சபை**

முற்காலத்தில் திருமணத்தின் பொழுது கொங்கு 24 நாட்டிலும் உள்ள பெரியோர்களையும் வரவழைத்துதான் திருமணம் செய்வார்களாம். ஆனால் இக்காலத்தில் அவ்வாறு செய்ய முடியாததால் மணவீட்டு வாசலில் ஒரு கல்லை நட்டு அக்கல்லில் 24 நாட்டாருக்குரிய மரியாதை செய்து மாப்பிள்ளையை அக்கல்லை சுற்றிவந்து வணங்கச் செய்வார்கள். பிறகு இணைச்சீர் நடைபெறும்.

**இணைச்சீர்**

மணமகளின் சகோதரிதான் மாப்பிள்ளையின் உடன் பிறந்தவளொன்று பந்துக்களின் முன்பு உரிமை பெறுவதாகும். மாப்பிள்ளையை மணப்பலகையில் அமரச்செய்து பிறகு அவர்சகோதரியை தோழிப்பெண்கள் அலங்கரித்து மாலையணிவித்து ஒரு பேழையில் வெற்றிலை பாக்கு முதலியவற்றுடன், மஞ்சள், பூ, கண்ணாடி, சீப்பு, கூறைப்புடவை, ரவிக்கை, முதலியவற்றை வைத்து சகோதரியின் தலையில் அப்பேழையை வைத்து வலதுகையில் சிறிய சொம்பில் தண்ணீர் கொடுத்து மணவறையைச்சுற்றி அழைத்துவந்து பேழையை மாப்பிள்ளையின் வலதுபக்கத்தில் இறக்கி அதனுள் சகோதரியை நிறுத்துவார்கள், சகோதரி தன் சகோதரனுக்கு இணைப்பவுன் என்று ஒரு பவுன் அல்லது சக்திக்கு தகுந்தவாறு பணத்தை கூறைச் சேலையில் முடித்து வைத்து பேழையினுள் வைத்திருப்பாள். ஒரு தட்டில் மூன்று வள்ள அரிசி அளந்து போட்டு அதன்மேல் வெற்றிலைபாக்கு, பெரியவெல்லம் வைக்கப்பட்டிருக்கும். அருமைப்பெரியவர் சகோதரிக்கு வெற்றிலைபாக்கு கொடுத்து மடியில் கட்டச் சொல்லி கூறைச்சேலையை கொசுவமாக பிடித்து ஒரு

தலைப்பை மாப்பிள்ளை கக்கத்திலும், மறு தலைப்பை சகோதரி கையிலும் கொடுத்து மாப்பிள்ளையின் கரங்களை அல்வரிசியில் பதித்து வைத்து பிள்ளையாருக்கு பூசை செய்து கொஞ்சம் அரிசியை அள்ளி வெற்றிலையில் வைத்து அருமைப்பெரியோர் குடிமகனிடம் கொடுப்பர். அவன் பிள்ளையாரையும், அருமைப் பெரியோரையும் வணங்கிப் பிறகு கம்பரால் பாடப்பட்ட மங்கல வாழ்த்துப்பாடலை பாடி (இப்பாடலில் திருமண சடங்குகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கும்) முடிப்பான். அருமைப்பெரியோர், பிள்ளையாருக்கும், மாப்பிள்ளைக்கும், இணைக்காரிக்கும் அருகுமணம் எடுதத பிறகு பேழையை தலையில் எடுத்து வைத்து தமக்கை பிறந்தவருடன் திருமண வீட்டிற்குள் செல்வாள். பிறகு மாப்பிள்ளையைக் குதிரையில் ஏற்றி விநாயகர் கோவிலுக்கு அழைத்துச் சென்று விக்னமின்றி மணவிழா முடியுற வேண்டுவர். பிறகு மணமகன் தன் தாயோடு உணவு உண்டு தாயை வணங்கி விடைபெற்று குதிரைமேல் ஏறி மேள தாளத்துடன், நாழியரிசிக் கூடையை குடிமகன் சுமந்துவர விநாயகர் கோவிலில் சென்றமர்வான். இது தான் மணந்து கொண்டு இல்லத்தலைவியை அழைத்துவர தாயிடம் அனுமதி பெறுவதாகும். நாழியரிசிகூடை என்பது மாப்பிள்ளை வீட்டார் சீர் கொண்டு போகும் கூடையாகும். பிறகு விடுதி வீட்டிற்கு அழைத்தல், பொன் பூட்டல், புதுக் கலத்துண்ணல், பால் பழம் அருந்துதல், முதலிய சடங்குகள் நடைபெறும். மணப்பெண்ணை அப்பெண்ணின் மாமன் தோளில் சுமந்து வரும் சடங்கு ஒன்று உண்டு. ஆனால் அது இக்காலத்தில் செய்யப்படுவது இல்லை ஆயினும் சில தாய்மார்கள் பிடிவாதத்துடன் இதைச் செய்ய வேண்டுமென்று சொல்ல செய்யப்படுவதும் உண்டு. பிறகு மணப்பெண்ணுக்கு அத்தான் முறையுள்ள அத்தை மக்களை அழைத்துவந்து மணவறையில் உட்காரவைத்து மணமகளின் தாய்தந்தையர், அருமைப்பெரியவர் மூலமாக பொன் தருவர். இச்சடங்கு முறைப்பையனான அத்தை மகனுக்கு பெண்ணை கொடுக்காததால் அவனுக்கு வருத்தம் ஏற்படாதிருக்கச் செய்யப்படுவதாகும்.

பிறகு மாப்பிள்ளையை குதிரை மேலேற்றி மணமகள் வீட்டிற்கு அழைத்து வந்து, பெண்ணை வலது புறமாக அமரச்செய்து அருமைப் பெரியவர் விநாயகர் பூசை செய்து மணமக்களை வணங்கச் செய்வர். பிறகு அங்குள்ள அனைவருக்கும் தீபாராதனை காட்டிய பின்பு மணப்பெண்ணை கிழக்குப் பார்த்தும், மணமகனை மேற்குப் பார்த்தும் நிற்கச் செய்து குறித்த நேரத்தில் அருமைப் பெரியவர் தாலியை மணமகனின் கையில் கொடுத்து மணப்பெண்ணுக்குக் கட்டச்செய்வர். பிறகு பெரியவர்கள் ஆசிகூற மாலை மாற்று நடத்தி மகிழ்வர். அந்தணர்களைக் கொண்டு ஓமத்தீ வளர்க்கச் செய்து தாலி கட்டுவதும் சில கவுண்டர் குடும்பங்களில் வழக்கமாக உள்ளது. ஆயினும் இது கொங்கு வேளாளக் கவுண்டர்களின் திருமணச் சடங்குகளை மேலும் அதிகப்படுத்துவதால் பெரும்பான்மையோரிடம் காணப்படுவதில்லை. இதன் பிறகு கைக்கோர்வை, தாரை வார்த்தல், அருகுமணம் எடுத்தல், பாதபூசை, நலங்கிடல் மொய்க்கனரி சோபன நீராட்டு பரியக்களரி, கூடைச்சீர், சிறுநூல்ணிதல், சட்டுவச்சாதம் போடல், பாத அணி அணிதல் போன்ற சடங்குகளும் நடைபெறும் அந்தணர் இன்றித் திருமணம் செய்யும் பழமையான கொங்கு வேளாளர்களின் திருமணம் காலத்தால் மிகவும் பழமைவாய்ந்ததாகும் என்று நான் சொல்லவே தேவையில்லை. கொங்கு வேளாளக் கவுண்டர்களின் திருமணச் சடங்குகள் ஏனைய தமிழ் நாட்டு மக்களின் திருமணச் சடங்குகளைவிட முற்றிலும் மாறுபட்டதும் பழமை வாய்ந்ததுமாக இருப்பது குறிப்பிடத்தக்க ஒரு பெருஞ் சிறப்பாகும். இவர்கள் திருமணத்தில் அந்தணரைவிட அருமைப் பெரியவர்களே அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக விளங்குகின்றனர். புதுமணத் தம்பதிகள் அவர்கள் மணம் செய்து கொண்ட ஆண்டில் வரும் மார்கழி மாதம் திருவாதிரை தினத்தன்று நோன்பு செய்தல் ஆதிரைநோன்பு என்று மணிவாசகர் தமது திருவெம்பாவையில் கூறும் பழமை வாய்ந்ததாகும். அருமையானதொரு

பழந்தமிழ் வழக்கத்தை வேளாளக் கவுண்டர்கள் இன்றும் செய்து வருவது அவர்களின் பழமைச் சிறப்பிற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கொங்கு கவுண்டர்களின் திருமணம் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளில் மண்பாண்டங்கள் இன்றும் சிறப்பிடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு குடியினரின் திருமணத்திற்கும் வேட்கோவர்கள் இன்னின்ன பாத்திரங்கள் இத்தனை இத்தனை தரவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றுற்கு மாற்றாகக் கவுண்டர்கள் தரவேண்டிய பொருட்களும் இப்பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

கவுண்டர்களின் குடும்பத்தில் திருமணம் நிச்சயமானதும் வேட்கோவரை அழைத்து வெற்றிலை பாக்கு வைத்து திருமணச் செய்தியைச் சொல்ல வேண்டும். திருமணத் தன்று பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி ஏனங்களைச் சுண்ணாம்பு பூசி செம்மண் கரை கட்டி எடுத்துச் சென்று திருமண வீட்டு வாசலில் வேட்கோவர் கொண்டு போய் வைப்பர். அதற்கு மாறாக அங்கு அளிக்கப்படும் அரிசி, பருப்பு கருப்பட்டி, நெய், பணம் முதலியவற்றையும் முன்னால் வைத்து நீர் அளாவிய பின் திருமண வீட்டார் ஏனங்களை எடுத்துச் செய்லுதல் வேண்டும். இவ்வாறு சீர் வைப்பதில் கவுண்டர்களுக்கு மட்டுமின்றி சோழிய வேளாளர் கம்மாரவடு நாயக்கன் முதலிய சாதியினருக்கும் இன்னின்ன வகையில் ஏனங்கள் வைத்து இன்னின்ன மாதிரி மாற்றுச் சீர் பெற வேண்டும் என்ற விவரமும் பட்டயத்தில் தரப்பட்டுள்ளது. ஆயினும் கவுண்டர்கள் வீட்டுத் திருமணங்களுக்கு மட்டுமே வேட்கோவர் ஏனங்களை எடுத்துப்போய் திருமணப் பந்தலில் வைத்துவிட்டுச் சீர்வரிசைகளை வேட்கோவரின் வீட்டில் கொண்டுவந்து கொடுத்து தாமே ஏனங்களை எடுத்துச்செல்ல வேண்டும், கலியாணப் பானைகளை அடுக்கி வைத்து அவற்றின் முன்னால் மாற்றுச் சீர்வரிசைகளை வைத்துக் கற்பூரம் காட்டி பூஜை செய்துவிட்டு பின்னரே எடுத்துச் செல்ல வேண்டும். பாதகம், பானை அதன்மேல் ஒரு சின்னக்கரகம்.

அதன்மேல் பூ கொண்டது மடைக்கலப்பானையாகும். அவை வெள்ளையடிக்கப்பட்டு அதில் சிகப்பு, மஞ்சள், பச்சை வண்ணங்களில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இவற்றிற்கு எழுத்துப் பானை என்று பெயர். கவுண்டர் தவிர்த்த மற்றைய இனத்தவர்க்கு ஆனை அரசாணிப்பானை என்று சொல்லப்படுகிறது. வழக்கமான பானைகளுடன் யானை உருவம் ஒன்று செய்து வைத்து வண்ணம்பூசி அலிக்கப் படும். மணவறையில் அந்த யானையின் தலையில் விளக்கு எற்றி வைக்கப்படும்.

கவுண்டர்கள் வீட்டு திருமணத்திற்கு கீழ்கண்ட சீர்கள் வைக்கப்படும் 1 மிடா 4 பருப்புத்தாளி 2, தண்ணீர்சால் 1, பெரியசால் 1, தண்ணீர்குடம் 4 தாளி 4, கரிச்சட்டி 6. உரிச்சட்டி 6, நெய்க்கலயம் 2, பெரிய நட்டச் சட்டி 1 தண்ணீர் கலயம் 4 ஆக 33 சீர்கள். இவற்றிற்கு கவுண்டர்கள் கொடுக்கும் எதிர் சீர் ஒரு பணத்துச் சிறப்புக்கு இரண்டு வள்ளம் அரிசி ஒரு வள்ளம் பருப்பு, எட்டு வட்டு கருப்பட்டி நெய் அரைப்படி ஒரு பணம் மடைக்கலப்பானை வைத்து கல்யாணம் பண்ணினால் மாப்பிள்ளைக்கு மடைக் கலப்பானை ஐந்து ஆயிரம் பெருந்தளி 1 கரகம் 1 இதற்கு 5 படி அரிசி, 3படி பருப்பு. 3 கருப்பட்ற வட்டு ஆகியவை எதிர்ச்சீர்.

பெண் வீட்டிற்கு மடைக்கலப்பானை வைக்க மடைக் கலப்பானை 3 ஆயிறப் பெருந்தாளி 1, கரகம் 1, இதற்கு எதிர் சீர் அரிசி படி 3, பருப்பு 1 படி. கரும்பட்டி வட்டு 3. இந்த எதிர் சீர் வகைகளை கையிலே கொடுத்துவிட வேண்டும். கடன் சொல்லக் கூடாது என்பதை பட்டயம் இந்தப பிரகாரம் கயிமேலே கொடுக்கிறது என்ற கொங்கு நாட்டு தமிழிலே தெளிவாகக் கூறுகிறது.

### குதிரை உருவாரம்

கொங்கு நாட்டில் பல கிராம தேவதைகள் கோயில் தோறும் வீரத்தை கொங்குமக்கள் போற்றியதை விளக்கும் வீரஉருவங்கள் பல இருப்பதை முன்னரே நான் குறிப்பிட்

டிருந்தேன். அதுபோல குதிரைகள் பல பெரிய அளவிலே மண்ணினால் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கும் இது பற்றிய குறிப்புகளை மதுக்கரைப்பட்டயத்தில் தான் காணகிறோம். கால்நடைகளுக்கோ மனிதர்களுக்கோ நோய்நொடி ஏற்பட்டால் கிராமதேவதைகளாகிய தங்களது காவல் தெய்வங்களுக்கு அந்நோய் குணமானவுடன் குதிரை உருவாரம் ஆளின் மண் உருவம் ஆகியவை செய்துவைப்பதாக வேண்டிக்கொள்வர்: இதனை மண்பாண்டம் செய்யும் வேட்கோவரே செய்துகொடுப்பர். பெரிய பண்ணைகளில் குதிரை செய்தளிக்க வேண்டிக் கொண்டால் அதைச் செய்யச் சொல்லும் போது பாக்கு வெற்றிலையில் பணத்துடனும் ஒரு பிடி மண்ணுடனும் செல் வார்கள். குதிரைகள் 10 முதல் 12 அடிவரை உயரமாக இருக்கும்.

### குதிரை செய்யும் முறை

கம்புநீக்கப்பட்ட கம்பங்கதிரில் மண்ணைப் பிசைந்து சேர்த்துக் குதிரைகள் செய்வர், உடல் தனியாகவும், தலை தனியாகவும் செய்யப்படும். செய்து காய்ந்தபின் சூளையிட்டுச் சுடுவர். அவ்வாறு சுடுவதற்கு முன்னால் ஆட்டுகிடாய் ஒன்று வெட்டி பொங்கல் வைத்து பூஜை செய்யவேண்டும், அந்த பூஜைக்காக 5 வள்ள நெல்லும் ஒரு ஆட்டுக்கிடாவும் தேங்காய் பழமும் கொடுக்க வேண்டும். பிறகு உடலையும், தலையையும் இணைத்துக் கயிற்றால் கட்டி அதன் மீது சுண்ணாம்புக் காரை பூசுவர். குதிரை முழுவதும் வெள்ளை யடித்து வண்ணங்கள் பூசுவர். கண்ணுக்கு கருவிழி மட்டும் தீட்டாமல் நிறுத்தி வைப்பர். வண்ணச்செலவுக்காக ஒரு பணம் ஒரு வள்ளம் பசும்பால், ஒரு வள்ளம் சுண்ணாம்புக்கல் (பாலில் சுண்ணாம்பைக் குழைத்து அடிப்பார்கள் போலும்) ஆகியவை கொடுக்க வேண்டும். கண் திறப்பு இறுதிப் பூஜையாகும். அப்போது குதிரையின் முன்னால் ஒரு வள்ள நெல்லும், ஒரு அச்சு கருப்பட்டி பாக்கு வெற்றிலை அதில் 2 பணம் ஆகியவை கொடுக்கவேண்டும்,

தூவக்காலில் போட சாம்பிராணியும் தரவேண்டும். இப்பொழுதும் ஒரு ஆட்டுக்கிடா வெட்டி பூஜைசெய்து கண்ணுக்கு கருவிழி தீட்டுவர். பிறகு பூஜை முடிந்ததும் இரண்டு பக்கமும் தண்டு கட்டி குதிரையைத் தூக்கிக் கொண்டுபோய் கோயிலில் வைத்துவிடுவார்கள். பட்டயத்தில் களியாட்டக் குதிரை என்று ஒன்று கூறப்படுகிறது; அது என்னவென்று தெரியவில்லை.

வேட்கோவர் செட்டி வீடு கட்டிக்கொள்ளலாம். அவ்வாறு கட்டுவதாக இருந்தால் ஒவ்வொரு பண்ணையத்தாரும் ஒரு பனையில்விழ இந்த ஓலைகளையும்,சிறைகளையும் தரவேண்டும். அதோடு கன்றோடு ஒரு பசு, அஞ்சுபணம், 10 வள்ளம் அரிசி, 5 வள்ளம் பருப்பு.ஒரு தூக்கு கருப்பட்டி. இரண்டரை படி நெய் முதலியன தர வேண்டுமாம்.

கவுண்டர்கள் ஒட்டு வில்லை வீடுகள் கட்டிக் கொள்ளவேட்கோவர் குழாய்கள் செய்து கொடுப்பர். ஒரு குழாயை இரண்டாக அறுத்தால் ஓடுகள் ஆகும். அதன் விலை ஆயிரம் ஓடுகள் ஆறுபணம்; கோயிலுக்காக இருந்தால் 5 பணம் கிடைக்கும். கிராம தேவதைகளின் சன்னதி வாசலில் கிராமசாந்தி செய்வது கவுண்டர்களின் பழக்கமாகும். அதாவது கோயில் விழாக்கள் தொடங்கு முன் இரவில் இரத்தம் கலந்த சோற்றினை எட்டுத்திசையிலும் உள்ள தேவதைகளுக்கு அர்ப்பணித்துப்பூஜை செய்வது சாந்தியாகும். இதனை வேட்கோவரே செய்தல் வேண்டுமென்று பட்டயம் கூறுகிறது. இதற்குக் காணிக்கையாக ஒரு பணமும், ஒருவேட்டி. துண்டும். 5 வள்ள நெல்லும், ஒரு ஆட்டுக்கிடாய் ஒருவராகன் பொன், பாக்கு, வெற்றிலை பழம், தேங்காய், சாம்பிராணி இவையெல்லாம் ஊர்மக்கள் தரவேண்டுமாம். சங்க இலக்கியமான நற்றிணையின் பாடல் ஒன்று.

மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிய
பல்கு ளார்கைப் பார் முது குயவன்
இருபலிருவஓ மகன்றலை மன்றத்து
விழாவுத்தலைகொண்ட பழவிறல் மூதூர்.

என்று குறிப்பிட்டு குயவர் நொச்சிமாலைசூடி கோயில் முற்றத்தில் பலியிட்டு விழாவைத் தொடங்கி வைப்பர் என்கிறது இந்த வழக்கமே பிற்காலத்திலும் கிராமசாந்தியாக மாறிற்றுபோலும்.[1]

### இறுதிச்சடங்கு

கொங்கு கவுண்டர்களின் இறுதிச் சடங்குமுறை பெரும்பாலும் பிற தமிழின மக்கள் செய்வதைத் போன்றதே ஆயினும் ஒரிரு சிறு மாறுதல்கள் கொங்கு மக்களுக்கே உரித்தான தனிப்பட்ட புதுமையாக உள்ளன. சிதையில் இடும் சுமத்தீயைப் பிற தமிழின மக்களைப்போல இறந்தவரின் மூத்த மகன் எடுத்துச் செல்வதில்லை. கொங்கு பறையரே எடுத்துச் செல்வராம். இறந்தவரைத் தீயிலிட்ட மூன்றும் நாளைக்குப் பிறகு எந்த ஒரு சடங்கும் செய்யப்படுவதில்லை. மூன்றும் நாள் இறந்தவரின் எலும்புத்துண்டுகளையும் சாம்பலையும் சேகரித்து ஆற்று நீரில் கரைத்து விடுவார்கள். கொங்கு நாவிதர் அன்றையதினம் பால், நெய் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து பச்சை மரத்தில் ஊற்றி பொலி பொலி என்று உரக்கக் கூறுவர். இத்தோடு இறுதிச் சடங்கு முடிவுற்று விடும்.

### வேட்டுவர் பழக்க வழக்கங்கள்

பழங்காலத்து வேட்டுவ மக்களின் பழக்க வழக்கங்கள் சிலவற்றைப்பற்றி நமக்குச் சங்க இலக்கியங்களிலிருந்தும் பிற பிற்கால இலக்கியங்களிலிருந்தும் சில குறிப்புகள் கிடைக்கின்றன.

---

1. இச்செய்திகள் அனைத்தும் பிற்காலச் செப்புப் பட்டயத்தின் நகலான மதுக்கரைப் பட்டயத்தில் கூறப்பட்டுள்ளன.

வேட்டுவர்களின் பழக்கவழக்கங்களைப் பற்றி சேக்கிழார் பெருமான் சற்று விரிவாகவே கூறுகிறார். வேட்டுவச் சிறுமியர் எயிற்றியர் எனப்படுவாராம். வேட்டையாடுதல் அவர்களின் குலத்தொழிலாக இருந்தாலும் சிறுமியர்க விலங்கினங்களைக் கருணையோடு உணவூட்டி வளர்ப்பரா

வீடுகளில் நிறைய மான்களை வளர்ப்பர் இதனை சேக்கிழார் "அன்புறு காதல் கூர அணையும் மான் பிணை களோடும் இன்புற மருவியாடு எயிற்றியர்" என்கிறு வேட்டுவர் குடி சிறப்புடைய பெருங்குடி என்பதை சிலப்பதிகார ஆசிரியர் கூறுவதை பார்த்தோம். சேக்கிழாரும் "அரும்பெறல் மறவர் தாயத்து ஆன்ற தொல் குடி" என்கிறார். இத்தகைய பழமையான சிறப்புடைய குடிப் பெண்களையே வேட்டுவர் மணப்பர். பெண்கள் புலிப்பற்களைக் கோர்த்து மாலையாக அணிவர் புலிப்பல்லால் ஆன தாலியையே அணிவர். வேட்டுவ ஆண்கள் மயில் தோகையைத் தலையில் அணிவர். சந்தன மரத்தின் இலைகளுடன் பலவகைப் பூக்களை மாலையாகத் தொடுத்துக்கட்டி அணிவராம். வேட்டுவ மக்கள் அணிந்த நகை வகைகளும் அவர்கள் குலப் பண்புகளுக்கும், வீரத்திற்கும் எடுத்துக்காட்டுக்களாகவே விளங்கின பல்வகை மணிகளோடு வேப்பங்கொட்டையையும் இடையிடையே கோத்து குழந்தைகட்கு அணிவிப்பாராம். குழந்தைகளுக்கு சதங்கை காப்பு தண்டை, குதம்பை ஆகியவற்றை அணிவிப்பர். குழந்தைகளுக்கு நாய்க்காசு, செப்புக்காசுகள், தாயத்து ஆகியவைகளைக் கோத்து அரைஞாணாக அணிவிக்கும் பழக்கம் வேட்டுவர்களுடையதே. இதனை வேட்டுவர் அல்லாத மக்களும் இக்காலத்தே செய்கின்றனர். வேட்டுவர் சிறுவர் அணியும் தண்டை என்னும் காலணி யானைத் தந்தத்தால் செய்யப்படுமாம்.

பராய் கடன் என்பது ஏதேனும் கருதிய ஒன்று நிறைவேறவேண்டி அது நிறைவேறும் வரை நடத்துவது. இது பரவுக்கடன் என்றும் கூறப்படும். மலைவாழ் மக்கள் குறிஞ்சிக்

கடவுள் ஆகிய முருகனையும் பாலைநிலத்தில் வாழும் வேட்டுவர் கொற்றவையையும் வழிபடுவர். பரசம் கடன் நாள் தோறும் நடைபெறுவது. இது இன்றும் வாரந்தோறும் ...லவது திங்கள் தோறும் குறிப்பிட்ட நாளில் இறைவனைக் ...யில் சென்று பூசித்துப் பாடிப் பரவுவது போன்றது.

காப்பிடுதல் என்பது மற்றொருவிழா. இது பெரும்பாலும் ...ழந்தை பிறந்த ஏழாம் நாள் நிகழ்வுறும் இதுதவிர ஒவ்வொரு விழாவிலும் காப்பு இடுதலும் நடைபெறும். ஏழாம் நாள் வேட்டுவர் பிறந்தகுழந்தையை வரையுறை தெய்வங்கள் காக்கவேண்டித் தத்தம் மரபிற்கேற்பச் செய்வர். இது கடவுட் காப்பு எனவும் கூறப்படும்.

வனத்துறையும் தெய்வங்களுக்கு செய்யும் பெரும் பூசனை தெய்வப் பெருமடை எனப்படும். மடை என்பது பெரும் பொங்கற்சோறு முதலிய நிவேதனங்களைச் செய்து சிறு தெய்வங்களுக்குப் படைத்துப் பெரும் பூசையிடுதல், முருகனைக் குறித்த வெறியாட்டம் என்னும் ஒருவனை ஆட்டமும் நடத்தப் பெற்றமை குறிக்கப்படுகிறது. இக் குரவைக் கூத்தும், வெறியாட்டம் எனப்படும் வேலனாட்டமும் வேட்டுவர்களுக்கே உரித்தான ஒரு கிராமியக் கலைச் செல்வமாகும். வேட்டுவரிடையே இன்னமும் இக்குரவைக் கூத்தும், வேலனாட்டமும் நடத்தும் வழக்கம் இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. இக்கலை வல்லுநர்களை ஆதரித்து இக்கலையை மீண்டும் பலரறியப் பிரபலமடையச் செய்ய தமிழ்மக்கள் முன் வரவேண்டும்.

இக்குரவைக் கூத்துப்பகுதியில் வேட்டுவர் இதற்கென கையாண்ட இசைக்கருவிகள் எல்லாம் கூறப்படுகின்றன. தொண்டகம், சிறுபறை, கொடுவாய், கொடுமணி முதலான வாத்தியங்கள் கூறப்படுகின்றன குறிஞ்சிப் பண்பாடுதல், பூப்பலி செய்தல் காப்புக் கட்டுதல் முதலிய வேட்டுவர்க்கே உரிய பல சடங்குகள் கூறப்படுகின்றன.

இங்கே ஆசிரியர் திருச்செங்கோடு முதலிய வேட்டுவர் தம் பழம்பகுதிகளைக் குறிப்பிடுகிறார். வேட்டுவர் குலத்துதித்த வள்ளி அம்மையை முருகன் மணந்தமை குறிக்கப்படுகிறது. இவ்வாறு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் இரண்டு முக்கியமான இடங்களில் வேட்டுவரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளமை அவர்காலத்தே கொங்கு நாட்டில் வேட்டுவ மக்கள் பெற்றிருந்த சிறப்பையும், நாகரீக வாழ்க்கையையும், இறையுணர்வையும் அவர் கொங்கு நாட்டில் வேட்டுவ மக்கள் மிகுதியாக வாழ்ந்த குணவாயில் கோட்டத்துத்துறவியாக விளங்கி வேட்டுவ மக்களோடு மிகுதியாகப் பழகி அறிந்திருந்தமையாலேயாகும்.

வேட்டுவர்களுள் பாலைநிலப்பகுதியில் வாழ்ந்தவர் எயினர் என்று அழைக்கப்பட்டனர். இவ்வெயினர்கள் மலைநாட்டு வேட்டுவர்களை விட அதிக வலிமை பெற்றவர்களாக நாட்டு மக்கள் கண்டு அஞ்சும் மறத்தொழில் செய்து வாழ்வோராக விளங்கினர். இவ்வேட்டுவர்களின் குலதெய்வமாக விளங்கிய கடவுளர் முருகனும், துர்க்கையுமே. கொங்கு நாட்டிலே இன்று பழனிமலை, சென்னிமலை, கபிலர்மலை, போன்ற முருகனது ஸ்தலங்கள் வேட்டுவர்களால் வழிப்படப்பட்ட முருகனது கோயில்களேயாகும். இதேபோலக் கிராமத் தேவதைகளாக விளங்கி வரும் பல காளியம்மன் கோயில்களும், மாரியம்மன் கோயில்களும், காளி என்ற பெயரே காடுஆளி அதாவது காட்டையாளும் தலைவி என்ற முறையிலே ஏற்பட்டதாகும். வேட்டுவர்கள் வாழ்ந்து வந்த நிலப்பகுதிகளில் ஒரு சிறிய மழையை எதிர்பார்த்து இருக்கும் வரண்ட நிலப்பகுதியாதலால் அப்பகுதியில் வாழ்ந்தவர் மாரி எனப்படும் மழையைக் கொடுக்கும் தெய்வமாகவும் ஒரு பெண் தெய்வத்தையே வழிபட்டனர். அத்தெய்வமே மழையைத்தரும் மாரியம்மனாகும். இன்னும் வேட்டுவர்கள் சப்தமாதர்கள் என்று சொல்லப்படும் ஏழு கன்னிக்கடவுளர்களையும் சிறப்பாக வழிபட்டனர். இந்த சப்தமாதர்களே தேவிமகாத்

மியத்தின் பிரதமசரிதம், மத்யம சரிதம், உத்தம சரிதம் என்னும் மூன்று பிரிவுகளுள் உத்தம சரிதம் குறிப்பிடும் பிராம்மி, மகேஸ்வரி கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி ஆகிய ஏழு சக்தி தேவிகளாவர். ஆக தமிழகத்தில் தேவி வழிபாடு ஆகம உருவத்தைப் பெற்றது பிற்காலமே என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறும் போதிலும் அவ்வாகம உருவத்தைப் பெருதிலேயே கொங்கு நாட்டு வேட்டுவ மக்களால் தேவியானவள் வழிபடப்பட்டு வந்தாள் என்று கூறலாம். காலப்போக்கில் இப்பூர்வீக மக்களின் வழிபாட்டு முறைகளின் தொகுப்பே ஆகமமாக மாறுவதற்கு அடிப்படையாக விளங்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு இவர்கள் தமிழகத்தில் சக்தி வழிபாட்டிற்கு முன்னோடிகளாக இருந்தமையை தமிழகத்தின் இருண்ட காலம் என்று வரலாறு குறிப்பிடும் கி பி 2-ம் நூற்றாண்டிற்கும், 5-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த சிலப்பதிகாரமும் தெளிவாகக் குறிக்கிறது.

## திருமண முறை

கொங்கு வேட்டுவக் கவுண்டர்களின் திருமணமுறை ஏறக்குறைய வேளாளர்களின் திருமண முறைகளை ஒட்டியே அமைந்துள்ளது. ஆயினும் வேளாளக் கவுண்டர்களின் திருமணங்களில் நடைபெறும் ஒரு சில சடங்குகள் வேட்டுவக்கவுண்டர்களின் திருமணங்களில் நடைபெறுவதில்லை.

வேட்டுவக் கவுண்டர் திருமணங்களில் மங்கல வாழ்த்து, அருமைக்காரர் சீர் ஆகியவை கிடையாது. கோபி, நம்பியூர் போன்ற சில இடங்களில் அருமைக்காரர் உண்டு என்று சொல்லப்படுகிறது வேட்டுவக் கவுண்டர்களின் திருமணத்தில் நாவிதனுக்குப் பல இடங்களில் முதன்மை கொடுக்கப்படுவதில்லை. ஆயினும் நாவிதன் முகூர்த்தக் கால் கொண்டு வருவான் என்று வேட்டுவர் திருமணம்

பற்றிய முழு விவரங்களையும் எனக்குத் தந்து உதவிய கரூர் திரு. கிருஷ்ணாசாமி கவுண்டர் தமது குறிப்பில் கூறி யுள்ளார். மற்றபடி எல்லா சடங்குகளும் வேளாளக் கவுண்டர்கள் திருமணத்தில் காணப்படுவதைப் போலவே இவர்களின் திருமணத்திலும் காணப்படுவதால் திருமணச் சடங்கு முறைகள் கொங்கு நாட்டிற்கே உரித்தான ஒரே சிறப்பு முறையில் உள்ளது என நாம் கூறலாம்.

# முடிவுரை

இதுகாறும் நாம் கண்ட செய்திகளிலிருந்து கொங்கு நாட்டு வேளாள-வேட்டுவக் கவுண்டர் பெருமக்கள் வரலாற்றுக் காலந்தொட்டுச் தனிச்சிறப்புடன் வாழ்ந்து வருவது இனிது புலப்படும். புகழ்மிக்க இக்கவுண்டர் பெருமக்களையன்றி சங்கநாள் முதற்கொண்டு குடியேறி வாழ்ந்து வரும் பார்ப்பனர்களும், கொங்கு மன்னர்கள் காலத்தில் குடியேற்றப்பட்ட வேறுவேறு தொழில் செய்யும் பிற பிரிவினர்களும் கூட தமிழ் நாட்டின் ஏனைய பகுதி களில் வாழும் இதே பிரிவு மக்களைவிட சில பழக்க வழக்கங் களிலும் சொல்லப் போனால் மனநிலை, பண்புகள் ஆகியவற் றிலும் கூட வேறுபட்டவர்களாக இவர்கள் கொங்கு நாட்டவர்கள் என்று கூறத்தக்க அளவிற்குத் தனித்தன்மை பெற்றே விளங்குகிறார்கள். பொதுவாக நகர்ப்புறங்களில் வாழ்பவர்களை விட கிராமப் புறங்களில் வாழும் கொங்கு மக்கள் தம் தோற்றத்தில் கூட ஒரு தனித்தன்மை பெற்றே காணப்படுகிறார்கள். ஒவ்வொரு சொல்லுக்கும் "ங்க" என்ற மரியாதை விகுதி கொடுத்து அவர்கள் பேசும் முறையே தமிழகத்தின் பிறபகுதி மக்களிடம் காணப்படாத ஒரு உயரிய பண்பாகும். காலின் மெக்கன்சியும் தமது தொகுப்பில் ஓரிடத்தில் கொங்கு நாட்டில் வாழும் மக்களே சுத்தமான தமிழ் பேசுபவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்[1]. அது உண்மையே. வேளாள-வேட்டுவ மக்களின் கூட்டப் பெயர்களிலும் சில பூர்வீக திராவிடர்களின் குல மரபுச் சின்னத்தை (Totem) அடிப்படையாகக் கொண்டிருப்பதும் இம்மக்கள் பழந்தமிழினத்தவர்களின் வழியினராக கலப் பற்ற திராவிட இனமக்களாக விளங்குவதை வலியுறுத்து கிறது. கொங்கு நாடு தமிழகத்தின் மையப்பகுதியேயாயி னும் மலைகளுக்கு இடையே அமைந்த தனிப்பட்ட நாடாகி

---

1. It is in the kongu country where the non-brahmins speak pure Tamil, MMSS. Page. 114—Section 5.

விட்டமையால் அங்கு குடியேறிய மக்களிடையேயும் இத்தனித்தன்மை பராமரிக்கப்பட்டு வந்ததுபோலும். தமிழ் கல்வெட்டு எழுத்துக்களின் ஆய்விலும் 10 ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்ட பாண்டிய வேந்தர்களின் வட்டெழுத்துச் சாசன எழுத்துக்களோடு அக்காலத்தே கொங்கின் வடமூலையிலிருந்து ஆட்சி செய்த கங்க காடவ அரசர்கள் காலத்திய வட்டெழுத்து நடுகல் கல்வெட்டுகளிலும், கொங்கு மன்னர்கள் சிலரின் வட்டெழுத்து கல்வெட்டுகளிலும் காணப்படும் எழுத்துக்கள் பெரும்பான்மையாக ஒத்து வருவதால் கொங்குநாடு உள்ளிட்ட தமிழகத்தின் மேலைப் பாதிப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தாம்கையாண்ட எழுத்து வடிவம் முதற்கொண்டு பலவகையினும் தனிப்பட்டவர்களாக பண்டைய தமிழர்களின் நேர்வழியினராக விளங்கினர் என்று கூற முடிகிறது. எவ்வாருயினும் இம்மக்களுடைய வரலாற்றுச் சிறப்பின் ஒரு சிறு பகுதியே இதுகாறும் கூறப்பட்டது. ஆய்வு விரிவானது. இந்நாட்டில் உள்ள சாசனங்கள் அனைத்தும் வெளியிடப்பட்டு மேலும் பல வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைத்தால் இன்னும்கூட அதிகமான விளக்கங்கள் கிடைக்கக்கூடும்.

பிரஸ் டீலக்ஸ், 40-பாபுரோடு, திருச்சி-2, போன் 24543.

# மேற்கோள் நூல்கள்


அகநானூறு
அண்ணன்மார் சுவாமி கதை
ஐங்குறுநூறு
ஒதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி
காணிப்பாடல்கள்
குறுந்தொகை
கொங்கு மண்டல சதகம்
சோழ மண்டல சதகம்
திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை
தேவாரம்—சுந்தரர்
தொண்டை மண்டல சதகம்
தந்திக் கலம்பகம்
நற்றிணை
பதிற்றுப்பத்து
பத்துப்பாட்டு
புறநானூறு
பெரியபுராணம்
பெருங்கதை
யாப்பருங்கலம்
வாலசுந்தரக் கவியின் கொங்குமண்டல சதகம்
ஆய்வுத்தேன்
ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் by கனகசபைப்பிள்ளை
கவிராஜமார்க்கம்
காலிங்கராயர் கைபீதுகள்
குலோத்துங்கன் கோவை
கொங்குநாட்டு வரலாறு by மயிலை—சீனிவெங்கட சாமி
கொங்கு—மாத வெளியீடுகள்
கொங்கு வேளாளர் வரலாறு by சின்னுசாமிக் கவுண்டர்
கொங்கு வேளாளர் by சக்திதேவி, டி. கே.
கொங்கு நாட்டு வரலாறு by கோவை கிழார்
கொங்கு தேச ராசாக்கள் by Oriental — manuscripts Library.
கோயம்புத்தூர் கெஸட்டியர்
சங்கர சோழனுலா
செங்கம் நடுகற்கள்
சேலம் கெஸட்டியர்
சோழன் பூர்வ பட்டையம்

திருப்பதி தேவஸ்தான சாசனங்கள்
தென்னிந்திய வரலாறு
தென்னிந்திய கோயிற் சாசனங்கள் I, II, III, பகுதிகள்
தேனுகோ—மாதவெளியீடுகள்
நடுகல் கருத்தரங்கு Ed. by R. Nagaswamy
பல்லவர் செப்பேடுகள் 30.
பாண்டியர் செப்பேடுகள் 10
பாண்டியர் வரலாறு by சதாசிவ பண்டாரத்தார் டி. வி.
பிற்கால சோழர் சரித்திரம் —do—
மதுக்கரைப் பட்டயம்
மைசூர் கெஸட்டியர்
வேட்டுவர் பூர்வ பட்டையம்
Ancient History of Decann by col. Dubreil.
ARE. Volumes (Annual reports of South Indian Epigraphy)
-do-unpublished from. 1970-1976.
Bulletin of the school of Oriental and African studies
Castes and tribes of South India by E. Thurston.
Damilika
Epigraphica Indica Volumes
Epigraphica Carnatica Volumes
Foriegn notices of South India by K A.N. Sastri
Gangas of Talakad by M. V. Krishna Rao
Historical sketches of Ancient Dekhen by K. V. Subramania Ayyar.
Indian Antiquary volumes.
Inscription of Combodge by Coeds
Inscription of Camboga Country by R. C. Majumdar
Journal of Indian History Volumes
Journal of Oriental research Volumes
Kongu Country by Dr. M. Arokia Swamy
Mahavamso - English translation —W. Geiger.
Mannual of Mysore
Mysore Archeaological report
Meckenzis manuscripts by T. V. Mahalingam (M. SS)
Some unpublished Inscrtptions by our own estempages.

——

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 21 | தர்மபுரி | இல்லை |
| 11 | 10 | ஒருவனை | ஒருத்தியை |
| 11 | 14 | தொண்மை | தொன்மை |
| 21 | 5 | பூமிநாடாகும் | பூழிநாடாகும் |
| 21 | 20 | நற்றினை | நற்றிணை |
| 21 | 25 | குறிக்கப்படுகின்றன | குறிக்கப்படுகிறான் |
| 24 | அடிக்குறிப்பு | Cormelius PL. D | Cornelius Ph. D. |
| 34 | 18 | தடையாக் | தடையாக |
| 36 | 23 | அந்துவஞ்சோலையும் | அந்துவஞ் சோலையும் |
| 38 | 24 | இடும்பொறை | இரும்பொறை |
| 40 | 22 | பணம் | பனம் |
| 43 | 16 | பிள்ளைவர்களும் | பிள்ளையவர்களும் |
| 46 | 24 | புன்னாட்சி | புன்னாட்டு |
| 46 | 24 | கட்டுரை | கட்டூரை |
| 48 | 13 | ஈனசைப்பாடி | ஈசைப்பாடி |
| 52 | 11 | கேனாட்டிலும் | கோனாட்டிலும் |
| 61 | 7 | மணியமாக் | மணியமாக |
| 61 | 14 | கெங்கு | கொங்கு |
| 66 | 15 | ஹல்லகரோ | ஹல்லகரே |
| 70 | 23 | களப்பிரான் | களப்பிரன் |
| 70 | 27 | ஒருவகைர | ஒருவரைக் |
| 72 | 9 | என்று | என்ற |
| 75 | அடிக்குறிப்பு 2 | Arch. rebort | Arch. report |
| 75 | 27 | குமாரவிஷ்னுவால் | குமாரவிஷ்ணுவால் |
| 82 | 6 | நகடூர் | தகடூர் |
| 83 | 16 | கங்கர்களது | கொங்கணிஅரசர்களது |
| 88 | 18 | கங்கர்களின் | கொங்கணிஅரசர்களின் |
| 84 | 29 | செயல்களே | செயல்களோ |
| 84 | 32 | வாங்கத்த | வரங்காத |

| | | | |
|---|---|---|---|
| 103 | 28 | விஸ்கரித்து | விஸ்தரித்து |
| 104 | 18 | வருத்த | விருத்த |
| 110 | அடிக்குறிப்பு 4 | கிடைத்துள்ளன | கிடைத்துள்ள |
| 113 | 15 | புடைச்சிற்பங்கள் | புடைப்புச்சிற்பங்கள் |
| 119 | 8 | இன்னொரு | இன்னொரு |
| 119 | அடிக்குறிப்பு 1 | TRSSI | TASSI |
| 122 | 8 | பொன்மாந்தனும் | பொன்மாந்தனர் |
| 136 | 21 | கொண்டின்ய | கௌண்டின்ய |
| 150 | 13 | குறுவாலும் | குறுவாளும் |
| 150 | 21 | சுபகொங்கதேவர் | சுபதொங்கதேவர் |
| 172 | 21 | கேலார் | கோலார் |
| 172 | 22 | தெகண்டை | தொண்டை |
| 176 | 23 | பாவி | பரவி |
| 183 | 14 | நந்திவர்மப் | தந்திவர்மப் |
| 186 | 23 | இத்திமூத்தியார் | இத்திமுத்தியார் |
| 189 | 17 | Unefermity | Uniformity |
| 202 | 10 | பெருமைக்குரியவனுன் | பெருமைக்குரியவனுவன் |
| 220 | 2 | சேர்த்த | சேர்ந்த |
| 222 | 28 | பழந்கவழுக்கங்களை | பழக்கவழக்கங்களை |
| 236 | 12 | துணைதலைவர்கள் | துணைத்தலைவர்கள் |
| 240 | அடிக்குறிப்பு | Manuscitis | Manuscripts |
| 246 | 2 | பாளையக்காரர் | பட்டக்காரர் |
| 251 | 1 | நம்மிடம் | தம்மிடம் |
| 255 | 20 | ஆனூர்த்திகழ | ஆனூர்த்திகழ் |
| 289 | 19 | சேவர்களுக | சேவகர்களாக |
| 296 | 2 | அவக்குரு | அவருக்கு |
| 320 | அடிக்குறிப்பு | Wrisoni | Wilson |
| 323 | 20 | கோயும்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 324 | 5 | தக்ாக | தாக்க |
| 324 | 17 | நாடிட்லுள்ள | நாட்டிலுள்ள |

| | | | |
|---|---|---|---|
| 325 | 14 | அப்பிச்சிசித்தைய நாயக்கர் | அப்பிச்சிசித்தைய கவுண்டர் |
| 328 | 15 | முன்னோர்களேயாவர் | முன்னோர்களே யாவர். |
| 330 | 20 | நன்ரு | நன்ருகப் |
| 332 | 8 | விரியிம் | விரியும் |
| 336 | 15 | செம்மன் | செம்மண் |
| 340 | அடிக்குறிப்பு | நகான | நகலான |

# பொருளகராதி

## எண்—பக்க எண்கள்


அருவா நாடு 9.
அருவா வடதலை 9
அகநானூறு 14, 17, 19, 22, 23, 26, 27
அகப்பா 13, 36, 37
அதியமான் நெடுமிடல் அஞ்சி 18, 22
அதியமான் நெடுமானஞ்சி 18, 40
அந்துவஞ்சேரல் 30, 35, 38
அந்துவன் கூட்டம் 55.
அரிச்சந்திரன் 65, 67
அவிநிதன் 68, 81, 89
அரிவர்மன் 68, 76
அரக்கான்—பர்மா 73.
அச்சுத விக்கிரசந்தன் 78
அபிதம்மாவதாரம் 79
அதியமான்கள் 80, 90, 102, 105
அரிபுரம் செப்பேடு 88
அடியார்க்கு நல்லார் 92.
அரிகேசரி பராங்குசமாறவர்மன் 103, 104
அதியேந்திர விஷ்ணுக் கிருகம் 112, 113
அபராஜித விக்கிரமன் 128
அக்கந்தைக்காடன் 134
அப்பரியான் 142
அயங்கயக்கரை 146
அலகுமலைக் குறவஞ்சி 146, 183 229
அபராஜிதக் காடவன் 148, 149 157, 165
அமோக வர்ஷன் 149
அன்னிகள் 152, 153
அரிஞ்சய சோழன் 169—172
அக்கனநிம்மடி 155
அதிராஜ ராஜ மண்டலம் 186
அதிசயசோழவீரநாராயணன் 193
அமெரிக்கா 206
அமெரிக்க ஐக்யக் குடியரசு 206
அய்யபொழில் 216
அந்தன் சாந்தாந்தன் 219
அறுவகைச்சீர் 227. அ-கு.
அவிநாசி வேளிர் 236
அர்த்தநாரி வேறுவுடையார் 241
அசுத்தூர் அம்மன் கோயில் 245
அருணாசலக் கவுண்டர் .கு 254
அழகன் சக்கரை மன்றாடியார் 257
அச்சுதராயர் 257
அமராவதிக் காங்கேய மன்றாடியார் 260
அநுராசகமாலை 267.
அடியார்க்கு நல்லார் 271
அழகன் சோமபிரானுன கங்கதரையன் 281
அண்ணன்மார் சுவாமி கதை 293
அப்பிச்சிக் கவுண்டர் 298
அறப்பளீஸ்வரர் கோயில் 299
அத்தப்பக் கவுண்டர் 301
அழகன் காளி 307
அமீர் சாகிபு 319
அப்பிச்சிசித்தையக்கவுண்டர் 325
அப்பிச்சிமார் 328
அப்பிச்சிமார் கோயில் 328
அருமைப்பெரியவர் 329, 330, 331,
அருமணம் 329

அந்தணர் சபை 176
அமண்குடிச்சபை 178
அபிமான சோழராசேந்திரன் 187

ஆ

ஆனைமுடி 2.
ஆய் எயினன் 15.
ஆதன் சேரல் 35.
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 40
ஆதனவினி 43
ஆற்றைப்பாடி நாடு 48, 49
ஆதன் கூட்டம் 55
ஆற்றைக்கூட்டம் 48, 57, 135, 295
ஆவிநாடு 56
ஆரூர் மூலங்கிழார் 61
ஆதித்தசோழன் 149, 159, 161
ஆற்றைக்குலம் 147
ஆற்றைப்பாடி 147, 243
ஆனைமங்கலம் 150
ஆதொண்டச் சக்கரவர்த்தி 163-166
ஆம்பூர் 169.
ஆனூர் 155, 188
ஆரோக்யசாமி, மு. 196, 197
ஆங்கிலேயர்கள் 206
ஆதீஸ்வரர் கோவில் 219
ஆற்றைக்குலம் 244
ஆறூர் அம்மன் கோவில் 258
ஆகனூர் வண்ணக்கர் 287
ஆநிரை கவர்தல் 306
ஆராதபிள்ளை 315
ஆமூராட்டார் மலை 327
ஆறு நாடுகள் 327

இ

இரும்பொறை மரபு 30
இளஞ்சேரலிரும்பொறை 43
இருங்கோவேள் 49, 51
இடையன் நெடுங்கீரனார் 60
இரட்டர் 77
இரட்டபாடி 83
இளங்கோவடிகள் 91
இரணியவர்மன் 109, 115
இரணியன்-அரக்கன் 115
இராசமல்லன் 124, 125
இராட்டிர கூடர்கள் 149
இந்திரவர்மன் 153
இராசு, செ. 168, 171, 198
இராசேந்திர சோழன் 186, 187
இராசகேசரிப் பெருவழி 171
இராசாதித்தன் 168
இராசசிம்மன்-பாண்டியன் 170
இராசகேசரி வர்மன் 158
இரவுபகிரிச் சோழன் 182
இரவிகோதை 182
இராசாதிராச வீரசோழன் 190
இராசாதிராசஉத்தமசோழன் 190, 193
இராசராசன் I 185, 196
இராசராசக் கரிகாலன் 196, 197, 198, 222, 223,
இராசராசக் கரிகாற் சோழன் 195
இராசவேடர்கள் 210
இரதகாரர்கள் 213
இராசராசேச்சரபுரம் 224
இம்மடிராச உடையார் 250
இராசாதிராச உத்தம சோழன் 253
இராசராசன் III 264
இம்மடிக் குமாரக் காங்கேயன் 271
இராசேந்திரச் சோழக் காமிண்டர் 278
இராமப்பையன் அம்மானை 297
இராமப்பையன் 259
இம்மடிக்கட்டி முதலியார் 303
இருளக்கவுண்டர் 310
இம்மடிக் கோபண்ண மன்றாடியார் 316, 317, 318
இறுங்கூர்பட்டக்காரர் 320, 321
இருக்கூர் பட்டக்காரர் 321
இறுதிச்சடங்கு 340
இனாக்சீர் 333
இரட்டிரகூடர் 93, 97
இராசகேசரி-பட்டம் 100

இருளப்பட்டி 103, 105.
இருளப்பட்டி நடுகல் 106
இராசசிம்மன்-பல்லவன் 107
இராயக்கோட்டை செப்பேடுகள் 108

ஈ

ஈசைப்பாடி நாடு
ஈஸ்வரவர்மன்
ஈரோடு 182, 197

உ

உம்மாத்தூர் தலைவர்கள் 239
உடையாண்டான் அழகப் பெருமாள் 288
உரிச்சொல் நிகண்டு 261, 270
உத்தமக்கா சோழன் 255
உலகுடையார் 243
உம்மாத்தூர் அரசர்கள் 103
உத்தம சோழ வீரநாராயணன் 193, 197, 198
உத்தமசோழன் மதுராந்தகன் 176
உய்யக்கொண்டான் திருமலை 197
உழுதுகள் 128
உதயணன் 91, 92
உதயணன்-வேட்டுவ அரசன் 111
உதயேந்திரம் செப்பேடுகள் 111
உதயச்சந்திரன் 109
உதியஞ்சேரல் 16, 35

ஊ

ஊராளி வேட்டுவன் 307
ஊத்துக்குளி காளிங்கராயர் 166
ஊத்துக்குளி பட்டக்காரர் 244
ஊராளிகள் 176, 211
ஊர்ச்சபைகள் 177

எ

எதுல முத்து நாயக்கன் 323
எண்ணெக்கூட்டம் 292
எருமைக்கூட்டம் 289
எருமையூர் 289
எழுமாத்தூர் 157, 177, 100, 123
எழுநூற்றுவன் மன்றாடி 253
எயில் நாட்டவர் 145
எயினர் நாடு 15
எயினர் 8, 14

ஏ

ஏழிற்குன்றம் 22
ஏறுதிபட்டம் 110

ஐ

ஐயடிகள் காடவர் கோன் 101
ஐயூர் மூலங்கிழார் 61
ஐயவி 13

ஒ

ஒல்லையாயன் செங்கண்ணன் புலவர் 59
ஒதிய அரசர்கள் 260

ஓ

ஓதாளர் குறவஞ்சி 281, 135
ஓய்மான் நல்லியக் கோடன் 14

ஔ

ஔவையார் 16, 18

க

கவிராஜ மார்க்கம் 3
கங்கநாடு 3
கடிய நெடு வேட்டுவன் 12
கதம்பர் 16, 83
கருவூர் 36, 37
கழாஅத்தலையார்-புலவர் 39
களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் 40, 42, 44
கஜபாகு—இலங்கை மன்னன் 52
கணைக்கால் இரும்பொறை 44
கங்கன் 46
கட்டி 46, 147
கழுவுள் 46
கட்டூர் 46
கபிலர் 49, 50
கங்கை குலத்தவர் 51
கதம்பகுலம் 69
களப்பிரர்கள் 69, 71, 76, 79, 95
கவியரசன் 69, 70

கனபருநாடு 70, 80
கனப்பு நாடு 70, 80
கனவர் பெருமகன் 70, 76
கவிதேவன்—சமணகடவுள் 70
கனகசபைப்பிள்ளை 72
கவுசியர் 73, 74, 136
கருநடர்வேந்தன் 79
கடுங்கோன் 78, 79, 81, 100
கங்கபாடி 83, 99
கவுடர் 85
கம்பர் 92, 137, 145, 164, 242
கம்பராமாயணம் 92
கபாடபுரம் 92
கம்பவர்மன்—காடவன் 98, 123
140, 145
கங்கர் 98, 99
கங்கு 99
கப்பேபாடியார 113
கந்தவிண்ணன் 117, 118
கங்கதியாமரசர் 118
கம்சபல்லவர் 123
கத்தி 147
கண்டராதித்தர் 168, 169, 170
171, 172, 173, 174, 179 182, 183
கண்டராதித்தன் வாசல் 167, 173
கண்டன் ரவி 170, 182
கரூர் 179
கம்பவர்மன் 157
கன்னணப்பதயனூர் 156, 316
கலியூர்க்கன் 182
கலியூர்க்கவிக்ரமசோழன் 183, 184
186, 187, 231
கலியூர்க்க இளவரையன் 181
கரிகால சோழன் 195, 249, 311
கரிகால சோழன்துறை 195
கச்சியரையன் 196
கலிகடிந்த பெருமான் 199
கரியமாணிக்கப் பெருமாள்
கோயில் 201
கல்ராயன்மலை 207
கவுண்டர் பிரிவினர்கள் 207, 209
கம்மாளர்கள் 213
கச்சிவீரன் 215
கஸ்தூரிரங்க செட்டி 215
கச்சியரைய நல்லூர் 217
கச்சியரையன் 217
கனவாளர் கூட்டம் 220
கன்மாளர்கள் 222
கம்மாளர்கள்-கன்மாளர்கள் 223
கரணத்தான் 224
கரியகாளியம்மன் 238
கட்டிமுதலியார்கள் 239
கவடிக்கைநாடு 250
கவறை மன்றாடி 253
கரியான் சக்கரை 254
கருணாகரத் தொண்டைமான்—
குலோத்துங்கன் தளபதி 256,
குமாரபுரம் 259, 261, 262
கலாவாசாணத் கவுண்டர் 260
கன்னாகுலம் 266
கங்கதரையன் 282
களஞ்சியன் தேவன் 283
கன்னந்தைக் கூட்டம் 285
கடலூரான் 286
கருட மாணிக்க தேவன் 290
கருநிழலி வென்றுவன்
அதிகாரி 292
கணக்கர் கூட்டம் 292
கதித்தகுலோக் கவுண்டர் 298
கருங்காலிப்பாடிபட்டி 310
கக்குவாடிப் பாளையக்காரர் 321,
காளமெஸ்திக் கவுண்டர் 322
காஞ்சிபுரம் 320
காவல்காடு 310
காவலியர் 308
காரி 290
காரிக்கூட்டம் 290
காடையூர் மன்றாடியார்கள் 259.
காலிங்கராயன் அணை 247 138

காலிங்கராயன் கால்வாய்
2, 202, 247.
காலிங்கராயர் கைபீது
163, 174, 244
காவடிக்கா நாடு 244
காலிங்கராயக் கவுண்டர் 138
202, 221, 243, 245, 246, 251,
காவேரிப்பட்டினம் 241
கார்த்திகேயம் — பெயர்க்
காரணம் 240
கார்த்திகேயன் 240
காடை குலநன்னன் 238
காடை குலத்துப் பிரிவுகள் 237
காலிங்கராயன் 219 220
காடவ—கங்க அரசர்கள் 205
காகதீயர்கள் 202
காவடிப்பாடல்கள் 177
காங்கேயநாடு 162 164,
காங்கேய மன்றாடியார் 162
கார்னல் மெக்கன்சி 161
காவேட்டுவ அய்யன் 160
காமிண்டர்கள் 145, 132, 110
காடர் கூட்டம் 134
காடை கூட்டம் 134, 135
காங்கேயம் 118
காம்போஜம் 113, 114
காடுவெட்டிகள் 110
காமுண்டர் 91
காரவேலன் 27
காடவர்கள் 90, 97, 101
காளச்சூரி அரசர்கள் 83
காரூர் 46
காமிண்டர் 80, 84, 85, 97

கி

கிழக்கிந்தியக் கம்பனியார் 139
கிட்டல்-வரலாற்று அறிஞர் 19, 20
கிருஷ்ணவர்மன் 68, 69
கிருஷ்ணன் II
இராஷ்டிரகூடன் 149, 150
கிருஷ்ணதேவராயர் 257
கிழங்கவேட்டுவர் 315

கீ

கீழ்மூத்துகூர் நடுகல்
கல்வெட்டு 253. 122, 126
கீரன் கூட்டம் 60
கீரவேட்டுவர் 60
கீழைச்சாகாடை—குலம் 142
கீர்த்திக்கவுண்டர் 151, 152

கு

குடகுமலை நாடு 2
குலச்சின்னம் 9
(Totem)
குடகு 19
குடகுமலை 21
குளமுற்றத்துத்துஞ்சிய
கிள்ளிவளவன் 23, 137
குடநாடு 35
குட்டநாடு 35, 36, 39
குட்டுவன் 36, 37, 38
குட்டுவன் இரும்பொறை 43
குறும்பத்தினர் 72, 160
குருகுலராயர் 73
குவளாலபுரம் 75
குமாரவிஷ்ணு 76
குப்தர்கள் 83
குறட்டியார் 91
குறுப்புநாடு 103, 136, 175
குறுநாட்டவர் 104
குருகுலம் 113
குணசீலச்சதுர்வேதிமங்கலம் 116
குவிடிக்கு நடுகல் 119
குமரந்தை 135
குறும்பாராதித்தன் 135
குறும்பசம் 135
குறும்பர்கள் பழங்குடிமக்கள் 310
குமாரமங்கலம் 143, 144
குமாரமங்கலக் கவுண்டர் 143, 144
குளித்தலை 145
குணவிஜயாதித்தன்—
சாளுக்கியன் 149
குலோத்துங்கசோழன் 164

குலோத்துங்கன் I
கொங்குமன்னன் 191, 192, 196 195, 194
குடியேற்றங்கள் 204, 205
குருந்தவிசோழன் 230
குப்பிச்சிக்கவுண்டர் 239
குமாரத்தின வேறுவுடையார் 243
குமாரக் காங்கேய மன்றாடி 260
குருகுலாணக் கவுண்டர் 277
குச்சிக்காமிண்டர் 278
குண்டெலிகன் கூட்டம் 287
குன்றத்தூர் வேளாளர் 288
குன்றுடையான் 293
குமாரபூபதி 301
குறுஞ்சொக்கன் 313
குணபாண்டியன் 324

கூ

கூறைநாடு 48, 147
கூற்றுவநாயனார் 77, 78
கூறைக்கூட்டம் 290
கூத்தன் கூத்தன் 314

கெ

கெட்டிமுதலியார்கள் 137 139 302
கெட்டிவரசன் 302

கே

கேரள அரசர்கள் 193
கைக்கோளர்கள் 195 213 216 217
கைலாசக்கவுண்டர் 302
கொன்கண நாடு 3, 7,
கொங்கணி அரசமரபு 3,
கொங்கர் 4, 5, 9, 18, 21, 38, 52, 133
கொங்கணப்பிழான் 6, 21, 22, 15
கொங்கணமலை 7, 21
கொடுமுடி 13, 14,
கொங்கன்யாதிராஜர் 19
கொங்கணிவர்மன் 19, 65, 67 75 81
கொடகர் 19
கொங்கண 21
கொங்கணநன்னன் 12, 32
கொங்கு வேளாளர்கள் 29-31
கொங்கு மாதப்பத்திரிக்கை 29
கொங்கர் நாடு 32
கொடுமபளுர் வேளிர்கள் 29-31
தொழில்வேட்டுவர் 57, 318
கொங்கணி அரசு 651
கொங்குதேச ராசாக்கள் பழங்கதை நூல் 68, 77, 81, 210
கொங்கு 2000 83
கொங்கவேளாளர் 88
கொங்குவேளிர் 91 95
கொங்குமண்டல சதகம் 92 95 139
கொங்கர்குலவரதி 93
கொங்கவர்மன்-காம்போஜ அரசன் 113, 114
கொற்றைதக்காடன் 134, 135
கொற்றந்தை குலம் 135
கொங்கு மன்னர்கள் 179
கொங்கு பாண்டியர்கள் 201
கொல்லிமலை 207
கொங்கு செட்டிகள் 214
கொங்கு நாவிதர் 214
கொங்கு பறையர் 214
கொங்கு வண்ணார்கள் 214
கொங்குமண்டல சதகம் —
வாலசுந்தரக்கவி 210
கொடுவாய் ஒதாளர் 246
கொற்றவேல் சக்கரைமன்றாடி 253
கொங்கராயன் 257

கோ

கோசர் 9, 24, 29, 46, 63
கோட்டைமலை 12
கோழுடு 49
கோடிக்கரை 74
கோளுட்டு அரசர்கள் 90
கோலூர் 146
கோலூர்நாடு
கோக்கண்டன் ரவி சேரஅரசன் 189

கோபண்ண மன்றாடியார் 155
கோநாட்டரசர்கள் 193
கோனவாநாடு 183, 230, 286
கோனேரின்மைகொண்டான் 217
கோப்பெருஞ்சிங்கன் 265
கோவலூர் குழையர் 277
கோம்பை பாளையப்பட்டு 325
கோல் வரி 325
கௌரவர்கள் 73

ச

சவ்வாதுமலை 12, 302
சத்யபுத்திரர்கள் 23
சத்யவாக்யர் 25, 67
சந்திரகுப்தர் 27
சமண சமயம் 63
சரவணபெலகொலா 62
சங்கதத்தர் 91
சந்திரகுலம் 103
சந்திரகுலப்பிரகாசன் 113
சக்கரை மன்றாடியார் 121, 282
சடையப்பவள்ளல் 137, 145, 147
சக்கரவரு 142, 282
சக்கரை மன்றாடியார்கள் 142
சடையப்பர் 145
சக்திதேவி டி. கே. 164
சதாசிவ பண்டாரத்தார் டி. வி. 168
சங்கரசோழன் உலா 191, 193
சங்கமசோழன் 193, 194
சங்கிராம நல்லூர் 193
சடாவர்மன் குலசேகரன் 195
சடாவர்மன் சுந்தர பாண்டியன் 199
சடாவர்மன் வீரபாண்டியன் 199, 201
சடையப்பமுதலி 213 217 221
சகலகுலம் வைத்த ராசராசன் தேவன் 223
சங்குநாராயணசெட்டி 241
சடையப்பமுதலியார் 242, 243
சரவணமகிபன் 245
சத்ருநாசனப்பாண்டியன் 254
சம்பந்தர் சக்கரை மன்றாடியார் 259
சகன்னாதன் 260
சங்ககிரிக்கோட்டை 297
சந்திரராஸ் 319
சங்ககிரி 320
சமயபுரம் 322, 345
சமயநாயக்கர் 324

சா

சாத்தந்தை கூட்டம் 48 57 58 243 244
சாத்துவராயன் 53
சாலிபேர், பி.ஏ. 65
சாளுக்யர்கள் 81
சாளுக்யர்கள்—கீழை 83
சாமராசபுரம் 89
சாத்தனூர் புலவர் 93
சாத்தனூர் வீரன் 140
சாகாடைச் சித்தன் 140 141 157
சாகாடைக் கூட்டம் 141
சாகாடை—மேலை 142
சாகாடை—கீழைகுலம் 142
சாத்தந்தை பண்ணைக்கோன் 173
சாவசாமூலப் பெருந்தோடு 253

சி

சிறுபாணாற்றுப்படை 15
சிலப்பதிகாரம் 12 92 93
சிற்றரையம் பேரரையம் 58
சிறுகுடிக்கிழான் பண்ணன் 50
சிம்மநந்தி 60
சிம்மவர்மன் பல்லவன் 68, 105
சிவமாரன் I கொங்கணி அரசன் 65 90 93 96 97 104 105
சிம்மவிஷ்ணு பல்லவன் 78 79 100
சிங்கவிண்ணன் காடவன் 98 104 111 115 116 127 133 134 136 202
சிம்மவிஷ்ணு காடவன் 101, 102
சிற்றம்பாக்கம் கோவில் 102
சிங்கவர்மன் 106 107

சிங்கவரம் 108
சிவமாறன் II—கொங்கணி அரசன் 124, 126
சின்னய்யன் பேட்டை 140
சிற்றுப்பாடி பலையனூர் 143
சிற்றிடையாறு 146
சிந்தகப்பாடி காமிண்டன் 150, 151
சிங்கன்சோழன் இராசேந்திர சோழக் காமிண்டன் 264
சிங்கன்சேந்தனான மதுரோதயப் பல்லவராயர் 264
சிதம்பரப் பல்லவராயக் கவுண்டர் 266
சிங்கன் சோழனான அநுத்தரப் பல்லவரையன் 283
சிவப்பன் முதலி 283
சித்திரமேழிப் பெரியநாட்டார் 294
சின்னவேலக்கவுண்டர் 301
சிக்கதேவராசன் 304
சிறுமைப் பெரியாயிக்கவுண்டர் 320
சிறிய விழாக்கள் 315
சித்பவானந்தர் 275

சீ

சீத்தப்பட்டிப் பட்டக்காரர் 331
சீனிவெங்கிடசாமி—மயிலை 43

சு

சுந்தரர் 96
சுப்பராயன்—டாக்டர் 148
சுந்தரமூர்த்திகள் 155 156 316
சுபதொங்கவர்மன் 150
சுந்தரசோழன் 172, 181, 253
சுப்பிரமணிய அய்யர் கே. வி. 183
சுந்தரபாண்டியன் 302
சுப்ரமணியம் சி, 275
சுப்ராயக்கவுண்டர் 301
சுந்தரபாண்டியதண்டெதி முத்துராஜா 333

சூ

சூரியதேவன் செங்கதிர்ச் செல்வன் 267
சூரியக்காங்கேயன் 267, 269
சூட்டுநாகர் 10

செ

செங்கண்மா அத்துவேள் நன்னன் 21, 47 309
செங்கண்மா 21, 47
செல்வக்கடுங்கோ வாழியாதன் 38-40, 43, 56
செங்குட்டுவன் 41, 42
செங்கம்நடுகற்கள் 122, 97, 117
சென்னிவாய்க்கால் கல்வெட்டு 135
செப்பன்காரிப் பெருமாள் 141 145
செம்பக்கூட்டம் 145
செம்பியன் மாவலிவாணராயர் 160
செம்பியன்மாதேவி 172, 179
சென்னிமலை 175
செட்டிகள் 195
செங்கண்ணார் கூட்டம் 205 263
செட்டி 212
செட்டி சிவபிரமணர்கள் 213
சென்னிமலைக் கவுண்டர் 266 264
செம்பாவயிராண்டை—மாரப்பன் 278
செயங்கொண்ட சோழக் காமிண்டன் 286
செவ்வாயர் கூட்டம் 290
செல்லன்கூட்டம் 291
செண்டிகாதேவி 257
செட்டியாக்கவுண்டர் 301
செட்டி நல்லண்ணக் கவுண்டர் 323
செல்லப்ப வாத்தியார் புதுப்பை 164

சே

சேனுவரையர் 137
சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறை 6
சேக்கிழார் 10, 96
சேரர்கள் 33

சேலம் செப்பேடுகள் 62
சேரமான் பெருமாள் 162 166
176 184 244 249
சேரமான் கோக்கண்டன் 170
சேடன்கூட்டத்தவர் 261
சேரன்கூட்டம் 274
சேட்டுவாயர்கூட்டம் 288

சொ

சொக்கநாத நாயக்கர் 265
சொக்கன் இளையபிள்ளை 284

சோ

சோழன் செங்கணான் 63
சோமாசி திருமாறன் 102
சோமன் 113
சோம குலம் 113
சோழ மண்டல சதகம் 184
சோழிய வேளாளர் 166, 210
சோழ கேரள மண்டலம்
186, 197
சோழன் பூர்வபட்டையம்
195, 196, 215
சோமன் சக்கர மன்றாடியார்
257
சோழன் பல்லவரையன் 263
சோழநாராயணப்
பல்லவராயர் 263
சோழ நாராயணக்
காமிண்டர் 284

சௌ

சௌந்திர நாயகி
வேட்டுவ நங்கை 327

த.

தலைக்காடு 7, 68, 88
தகடூர் 62, 103, 127
தகடூர் நாடு 106
தனஞ்சயன் 65
தடியர்கள் 124
தந்திவிக்கிரமன் -
காடவன் 131, 148
தக்கோலப்போர் 168
தனபாலன் 214
தக்கைராமாயணம் 220
தனஞ்செயன் கூட்டம் 284
தலையூர்க் காளி 293
தலைகை வேலக்கவுண்டர் 301
தண்டன்தோட்டம்
செப்பேடுகள் 130
தந்திவர்மன் பல்லவன் 183
தலையநாட்டு வன்னல்
கவுண்டர் 323

தா.

தாராபுரம் 69, 163, 184,
230, 231
தாவழி 23
தாந்தோனி 116
தாரமங்கலம் 138
தாயாரண்டார் 314
தளவாய்புரம்
செப்பேடுகள் 131

தி.

திருவஞ்சைக்களம் 36
திண்டிகராயன் 68
திரையர்கள் 72-75, 100-105
திருவேங்கடமலை 79, 74
திருவிக்ரமதேவசக்கரவர்த்தி77 78
திருச்செங்கோடு 96, 148
திரையர்குலம் 114
திருவெண்ணெய் நல்லூர்
137, 145, 174
திருநாவலூர் 147
திருப்பரங்குன்றம் 155
திருமுருகன்பூண்டி 155
திருபுவன வீரபாண்டியன் 203
திருபுவன வீரதேவன் 223
திருச்செங்கோட்டுத்
திருப்பணிமாலை 249, 299
திப்புசுல்தான் 258, 266, 319
திருமலைநாயக்கர் 259
திருமலைக் காங்கேயன் 270
திருபுவனமல்ல
பூரவாதிரையன் 280
திங்களூர் பட்டக்காரர் 321, 329

திம்மையக்கவுண்டர் 323, 324
திங்களூர் 328
திருமணமுறை 329

தீ

தீர்த்தமலை 127, 152, 196, 197

து

துளுநாடு 24, 34
துவாரசமுத்திரம் 34, 51
துரைசாமிப்பிள்ளை - அவ்வை 43
துவாரைப்பதி 49, 51
துவரன் கூட்டம் 52
துவரங்குறிச்சி 52
துர்விநிதன் 68, 69, 77, 79-82
துர்க்கை 62

தூ

தூரன் கூட்டம் 52, 58, 143
தூரன்பாடி 52, 144

தெ

தெரிந்தகைக்கோளர்கள் 217
தெள்ளாறெறிந்த நந்திவர்மன் 113, 185, 191
தென்னிலை 176
தென்னிலைப்பட்டக்காரர் 321
தெய்வசிகாமணிக் கவுண்டர் வே. ரா. 164, 271

தே

தேவனூர் 88
தேவாந்தை கூட்டம் 243
தேவமன்றாடியார் 275
தேசிக்கவுண்டர் 322

தொ

தொண்டைமான் இளந்திரையன் 11, 72, 74, 75
தொண்டி 38
தொண்டைமண்டல வேளாளர்கள் 166
தொண்டைமான் - விருது 280
தொட்டியநாயக்கர் 323

தோ

தோரநாடு 58

ந

நன்னன் 8, 21, 45
நன்னனூர் 28
நச்சினார்க்கினியர் 50
நரசிம்ம வர்மன் பல்லவன் 92, 100
நரசிம்மவர்மன்-கங்கன் 95, 122, 128, 124
நந்திஸ்வரவர்மன்-காடவன் 98, 119, 148, 127, 133
நந்திவர்மன்-பல்லவமல்லன் 108, 109, 115, 117, 120
நந்திவர்மன்-காடவன் 116, 117
நந்திக்காடவன் 110, 127
நரசிங்கமுனையதரையர் 125
நந்திபுரம் 167
நற்குடிவேளாளர் 48000, 174
நசையனூர் 177
நரசிம்மன்-ஹொய்சாள அரசன் 194
நன்றுவுடையார் 237
நஞ்சய்யகாலிங்கராயர் 250
நத்தக்காரையூர் 255
நஞ்சராயஉடையார் உம்மாத்தூர் தலைவர் 257
நல்லபுள்ளியம்மன் 267
நல்லதம்பிக் காங்கேயர் 270
நல்லையன் 277
நயினுசலன் 285
நம்பியாரூரான் I— பெரியகுலம் 288
நவிரமலை 309
நல்லண்ணன் 315
நஞ்சராஜய்யா 322
நல்லண்ணக்கவுண்டர் 322
நல்லசேனுபதிசக்கரை 237

நா.

நாகர் 9
நான் கவுண்டர் 89
நாட்டுக்கவுண்டர் 89
நாமக்கல்நரசிம்மர்கோயில் 118
நாற்பத்தெண்ணாயிரம்
கோத்திரம் 164
நாச்சிமுத்துக்கவுண்டர் 166
நாகமலைக்கவுண்டர் 300
நானுதிசைசெட்டிகள் 216

நி.

நிருபதுங்கவர்மன்
பல்லவன் 73
நிருபதுங்கன் 123, 158
நிரபைப 271
நிக்கல்சன் 305

நீ.

நீலன் 148
நீதிமார்க்கன் 149
நீலன்சிலம்பன் 279
நீலியப்பக்கவுண்டர் 324

நு.

நுளம்பமாறன்
கன்னியன் 150, 151

நெ.

நெகமம் 77
நெடுஞ்சேரலாதன்
16-18, 35, 37, 39, 56
நெடுஞ்சடையன்பராந்தகன் 70
நெகமத்துப்பட்டி
பட்டக்காரர் 321

நொ.

நொளம்பபாடி 148
நொளம்பபல்லவர்கள் 148
நொய்யல் 175
நொளம்பர் 205

ப.

பதுமன்தேவிர் 273
பல்குன்றக்கோட்டம் 21, 47, 48
பசும்பூண் பாண்டியன் 22
பல்யானைச்செல்கெழு
குட்டுவன் 34
பன்னாகூட்டம் 52
பனையவேட்டுவன் 55
பதுமனூர் 66
பசலூர் 89
பரமேஸ்வரவர்மன்
பல்லவன் 98, 102
பரகேசரி 100
பன்னாகோவில்
செப்பேடுகள் 108
பராங்குசமாறவர்மன்
அரிகேசரி 103, 104
பவானை 107, 142
பழையகோட்டை 107
பரமேஸ்வரன் II 107
பலவர்மன் 113
பராந்தகன்
நெடுஞ்சடையன் 118
பயிரன்கூட்டம் 118, 142, 253
பங்களநாடு நடுகற்கள் 123
பராந்தகவீரநாராயணன்
131, 149 159, 160
பசிரபவிளனன் 136
பன்னாகூட்டம் 136, 137
பன்னையதாத்தன் 138
பழையக்கோட்டை
பட்டக்காரர் 142
பனையவேட்டுவர் 143
பகைமூர் 143
பராந்தகவீரநாராயணன்
பாண்டியன் 149, 159, 160
பள்ளிப்பட்டிநடுகல் 150
பவானிஸைநூர் 153
பராந்தகன் I சோழன்
159, 161. 170, 179
பசுங்குடி வேளாளர் 12000, 174
பறையர் 214
பஞ்சசாதியர் 225
பழையன் 26

பலதேவனுன கலிகடிந்த
சோழமாராயன் 271
பண்ணைகுலேத்திரன் 218, 174
பண்ணைக்குலம் 221
பன்னான்-வன்னல் 223
பழையகோட்டை
மன்ருடியார் 251
பல்லவராயக்கவுண்டர் 263 295
பவழங்கிசாத்தர் 273
பழனிச்சாமி கோபி 294
படைத்தலை வேளாளர் 298
பசுபதிநல்லண்ணக்
கவுண்டர் 322

பா.

பாழிநாடு 21, 32
பாகனுட் 70, 41
பாணர்கள் 71, 72, 105
பானவாசி 83
பாலைக்கோடு 140
பாசாற்றூர் 146
பார்த்திவேந்திரவர்மன் 180

பி.

பிருகத்கதா 92
பிருதிவீபதி I 127, 148, 149, 160
பிருதிவீபதி II 160
பிட்டிகவிஷ்ணுவர்த்தனன்
192, 193,
பிடாரப்பெரியண்ணா
வேளுவுடையார் 242
பின்னன்தேவன் 284
பிச்சம்பட்டிபட்டக்காரர் 321

பு.

புலிக்கட்டிக்கிராமம் 325
புல்லைவேட்டுவர்ல்
வாணதரையன் 314
புரவிப்பாளையம் 316
புதூர்பட்டக்காரர் 264
புத்தமித்திரன் 255
புல்லிநாடு 152
புதமலைநாடு 124
புன்றுரை 66
புன்னுடு 46
புலிகடிமால் 49
புல்லி 70, 73, 75
புலிகேசி 82
புலிக்குத்திதேவன் 326

பூ.

பூலவியர் 11, 12, 78, 308
பூழியர்கோ 37
பூழிநாடு 36, 38,
பூதுகன் 41, 168
பூவிக்கிரமன் 90, 164
பூந்துறை-நாடு
142, 175, 177, 246, 247
பூசன் கூட்டம் 279
பூவலியத்தாதன் 325

பெ.

பெரும்பாணாற்றுப்படை 72, 74
பெருங்கடுங்கோ 43
பெருந்தலைச்சாத்தனுர் 13, 47
பெருங்கதை 91, 95
பெருமுகைபூர்
104, 105, 108, 120, 121
பெருமுகையூர்நாடு 119
பெருமாணடிகள் 119
பெரியபெருமாள் 229
பெருமான்கைக்கோளர் 238
பெருமான்குலோத்துங்க
சோழ-அனுத்திர
பல்லவராயர் 233
பெரியன்சோழன் 240
பெருதண்டநாட்டரையன் 263
பெரியண்ணமால 276, 277
பெரும்பழனம் 286
பெரியரங்கையகவுண்டர் 301

பே.

பேரூர் 195
பேரூர்புராணம் 195

போ.

போலசோரன் 124
போந்தை-யூர் 139, 140, 124
போகநந்தீஸ்வரர்கோவில் 167
போயர் 310

பௌ.

பௌத்தசமயம் 622

பொ.

பொன்குன்றநாடு 15, 49, 122, 123
பொறைநாடு 37
பொன்னர்க்கன் 111
பொன்மாந்தனூர் 122, 125, 133
பொன்னகூட்டத்தவர் 133 205
பொன்னந்தியார் 133
பொன்பாரனூர் 133
பொற்சேந்தியார் 138
பொன்தொக்கையார் 134
பொத்தப்பிநாடு 97 176, 311
பொங்கலூர்நாடு 183, 184, 230, 231
பொன்னர், சங்கர் 293
பொத்தப்பிசோழர்கள் 311

ம.

மகாபலி 11, 12
மழவர் 8, 18
மலபார் 19
மழந்தீவு 17, 35
மழகொங்கம் 18, 117
மணியவன்னாக்கன் 61
மல்லன் 71
மல்லதேவன் 71
மகேந்திரவர்மன் பல்லவன் 79, 112
மணியக்காரர் 89
மசங்கி 89
மகாபலிவாண அரசர்கள் 90
மங்கை 92
மணிமேகலை 93
மகேந்திரன்-கங்கன் 98, 215
மகேந்திரன் III பல்லவயுவராஜன் 104
மகேந்திரவிக்ரமன்—நுளம்பன் 149, 153
மணியன்கூட்டம் 153
மணியவ மணியமனூர் 154
மகிமாலய இருக்குவேள் 180, 181, 184, 185
மகிமாலீஸ்வரம் 180, 181
மதுக்கரைப்பட்டையம் 224
மகாலிங்கம், தா. 226
மல்லைய பூபல 236
மன்றுடியார்கள் 251
மயிலார்கூட்டம் 292
மலையானக் கவுண்டர்கள் 296
மன்றுடி வேட்டுவர் 312

மா.

மாவலியர்11, 12, 78, 132, 3081
மாறமனூர் 17, 26
மாந்தைப்படைவேட்டுவர் 56
மாதவை 65, 67, 69, 76, 89
மாந்தவர்மவ 195
மாறவர்மவ சுந்தர பாண்டியவ 199, 201
மாறக்காமிண்டவ 286
மாடைக்கூட்டம் 301
மாறவர்மன் குலசேகரவ 317

மீ

மீ கொன்றை நாடு 145

மு

முரஞ்சியர் முடிநாகராயர் 10
முசிறி 36
முதிரமலை 45
முனையதரையர் 99, 127
முடிவழங்குசோழபுரம் 197
முத்துரத்தினம்—பட்டம் 242
முத்துக்கவுண்டர் 285
முருங்கைத்தொழுவு 288
முத்துராசாக்கள் 321 அ. கு.
முத்துனநாயக்கர் 323

மூ

மூலகூட்டம் 61, 428

மூன்றாம் குலோத்துங்க
சோழன் 197
மூலக்கூட்டம் 253
மூவலூர் நொண்டைமான் 281
மூவேந்த சோழிய
வாருடையார் 285
மெ
மெக்கன்சி குறிப்புகள் 161
மெக்கன்சி—கால்னல் 161
மே
மேலைச்சாகாடை 142
மேற்கெழுந்தருளியதேவர் 168, 172
மேல்மணியன் 283
மேதிக்கூட்டம் 284
மோ
மோசிகீரனர் 6, 21
மோசுகூர் 26
மோரூர் காங்கேயர்கள் 266
யா
யானைகட்சேய்மாந்தரஞ்சேரல்43
யானைக்கை செவந்தரையர்257
ரி
ரிஷபகிரிச்சோழன் 162, 166, 167, 178, 193
வ
வடுகர் 9, 46
வடுகவீரர்கள் 28
வஞ்சி 36, 37
வண்ணக்கன்கூட்டம் 61, 138
வண்ணக்கர் 138
வன்னியக் கவுண்டர் 151
வஞ்சிபுரி-தாராபுரம் 183, 213
வானவன்மாதேவி
இந்திமுத்தியார் 186
வன்னியர் 207
வலங்கை-இடங்கை-சாதிகள் 213
வணங்காமுடிக்கட்டி
முதலியார் 304
வா
வாணியம்பாடி 21
வாணகப்பாடி 72, 173
வாணபுரும் அரசன் 145
வாலையூர் அடிகள் 104
வாலகந்தரக்கவி 176
வாங்கல் 176
வாயறைக்கா நாடு 214
வாரணவாசிக்கவுண்டர் 239
வாவியாறு 246
வாணவல்லபக்காமிண்டர் 274
வாலைமன்றாடியார் 275
வாணுதரையன் 283
வி
விஜயஸ்கந்தபுரம் 8, 69, 88
விஷ்ணுகோபன் 68
விசயமங்கலம் 92, 94, 95, 103, 105, 106
வீரன்மிண்டர் 98
விண்ணப்பெருமானடி 103, 105, 106, 112, 11 3471,
விருத்தபல்லவாதிராசன் 104
விசையவின்னவர்மன் 106
விஷ்ணுராஜன் 109
விசையமகேந்திரன் 111, 113
விக்ரமாதித்தன்II சாளுக்யன் 116
விசையநரசிம்மன் 127, 133, 135, 140, 143, 148
விசயாலயசோழன் 160, 169
விக்ரமசோழ அபிமானன் 198 258
விக்கிரமசோழன்II
கொங்குமன்னன்
விக்கிரமசோழன்III 199
விசயநகர அரசர்கள் 211
விசுவநாத நாயக்கர் 250, 317
விருபாட்சிபாளையம் 299
வீ
வீரகூர்ச்சவர்மன் 11, 13
வீரநாராயணன் 159
வீரபாண்டியன் 170, 223, 244
வீரசோழன் 182, 191, 193

வீரசோழக்கலிஞர்க்கள் 183,184
185, 188, 191, 206, 240, 245
வீரசோழமண்டலம் 185
வீரபராக்கிரம சோழன் 188
வீரராஜேந்திரன்—கொங்கு
மன்னன் 191, 196, 198, 199
வீரநாராயண அதிசயசோழன் 193
வீரவல்லாளன் III 203, 248
வீரசோழக் காங்கேயன் 240
வீரமாண்ட காலிங்கராயன் 250
வீரகெண்டயம் 257
வீரநரசிம்மன் 265
வீரப்பிரதாப கிருஷ்ணராயர் 270
வீரமலைப்போர் 293

வெ

வெஞ்சமன் 78, 79
வெஞ்சமாக்கூடலூர் 78, 155
வெள்ளன் குமரன் 169
வெள்ளலூர் 158
வெங்கலநாடு 197
வெள்ளாளன் குண்டெடலிகள் 219
வெள்ளோடு 246
வெள்ளை வேட்டுவன் 247
வெள்ளம்பர் கூட்டம் 292
வெள்ளாளன் குட
மாணிக்கதேவன் 290
வெள்ளியங்கிரி 319

வே

வேட்டுவர்கள் 8. 9, 11, 12, 14,
53, 85
வேண்மான் 22
வேணுடு 48, 111, 146, 169
வேளாவிக்கோமன் பதுமன் 56
வேள்விக்குடி செப்பேடுகள் 80 104
வேசாலிப் பேரரையன் 72, 73
வேசாலிப்பாடி 73, 127
வேட்டுவக் காமிண்டர் 143
வேணுவுடையாக்
கவுண்டர் 147, 162
வேட்டுவதி வாண
கோவலரையர் 160
வேட்டுவ திரையர் 160
வேட்டுவன் எருநாற்றவன் 160
வேணாட்டுப் பெரிய
கூட்டத்தவர் 205
வேட்கோவர்கள் 213, 224, 225 227
வேளைக்கார நாயகம் 217
வேளாளத் தலைவர்கள் 228, 229
வேணுவுடையாக்
கவுண்டர்கள் 239
வேதநாராயணப்
பல்லவராயன் 279
வேணுடையார் 281
வேட்டுவத்தலைவர்கள் 305
வேடியப்பன் கோயில் 306, 310
வேட்டுவவேளாளர் 310
வேலாயுதநாயக்கர் 323, 324

ஸ்ரீ

ஸ்ரீ புருஷன் 15, 90, 108, 127, 144
ஸ்ரீ விக்ரமன் 90
ஸ்ரீ வரமங்கலச் செப்பேடுகள் 117
ஸ்ரீகண்டன்—பொத்தப்பிச்
சோழன் 131, 154, 155, 173, 176
ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்—
பாண்டியன் 155,156,176,193—195
ஸ்ரீ வல்லப பாண்டியன் 284
ஸ்ரீனிவாசராவ் 319

ஜெ

ஜெயபல்லவாதிராஜன் 104,

ஸ

ஸ்கந்தவர்மன்—காடவன் 102
103, 108, 116
ஸ்கந்தசிஷ்யன்—காடவன் 108
109, 115—117, 121
ஸ்கந்தவர்ம யுஜுதி 110
ஸோம கௌண்டின்ய வம்சம் 113
ஸோமா...அரசி 114
ஸ்தாணு ரவி—சேரமான் 150 156
ஸ்வாமி சித்பவானந்தர் 275

ஹ

ஹரிபுரம் செப்பபடுகள் 88
ஹல்லகரே செப்பேடுகள் 66, 68
ஹால்ஷ்—டாக்டர் 123
ஹெமமலிகே—ஊர் 104, 110
ஹைதர் அலி 265, 301, 318
ஹொய்சாளர் 49
ஹொஸக்கோட்டை
செப்பேடுகள் 66, 68

★

## பின் சேர்க்கை

பக்கம் 120 ல் கொடுக்கப்பட்டுள்ள காடவ - கங்க அரசர்களின் மரபு வழிப்பட்டியல் பின்னால் ஏற்பட்ட சில உறுதியான முடிவுகளின் அடிப்படையில் மாறுதலுக்குட்படுகிறது. 1) அதில் குறிக்கப்பட்டிருக்கும் அதியமான் அரசன் இருளப்பட்டி நடுகல் குறிப்பிடும் விசைய விண்ண வர்மனேயாவான். இவ்விண்ணவர்மன் சிங்க விண்ணன் அல்லன். 2) உழ முதுகன், விண்ணப்பெருமானடி ஆகிய இருவரும் அதியமான்கள் வழியினர் அல்ல. விண்ணப் பெருமானடி என்பதை விண்ணப் பேரேறுதி என்று படிப்பதே இருளப்பட்டி நடுகல் வாசகத்தின் சரியானப் படிப்பு ஆதலால் இவன் விண்ணவர்மனால் ஏறுதிப்பட்டம் அளிக்கப்பட்ட ஒரு படைத்தலைவனே எனலாம். 3) விசைய விண்ணவர்மன் மகளுக்கும் காடவ அரசனான சோமாசி மாறனுக்கும் பிறந்தவனே சிங்க விண்ணவர்மன். ஸ்கந்தவர்மன் சோமாசி மாறனின் வேறொரு தேவிக்குப் பிறந்த மூத்த மகன் 4) விசைய விண்ணவர்மனின் மற்றொரு மகளே அவன் காலத்தே பெரு முனை யூரை ஆண்ட கங்க அரசன் மணந்து கொண்டிருந்தான். 5) ஸ்கந்தவர்மனுக்குப் பிறகு பட்டமேற்ற சிங்க விண்ணவர்மன் காலத்தில் அதியமான்களது நாடும் இவன் கீழ் வந்து விட்டதால் விண்ணவர்மனின் வழியினர் சிற்றரச நிலைக்கு வந்து விட்டனர். 6) சிங்க விண்ணனது மகளே பெருமுனையூர் ஆண்ட கங்க அரசனுக்கும் அதியமான் மகளுக்கும் பிறந்த மகனை மணந்திருந்தாள். இவர்களுக்குப் பிறந்தவனே விசைய மகேந்திரன். இவன் தன் தாய்வழியில் சந்திரகுல காடவர் வழியினனாகவும், பாட்டியார் வழியில் அதியர் குலத்திற்கும் உரிமை பூண்டவனாகவும் இரு நாட்டுப் பகுதிகளுக்கும் சிங்க விண்ணனுக்குப்பிறகு அரசனானான் ஆனால் இவனது பிற்காலத்தே அதியன் விண்ணவர்மனின் வழிவந்தவன் சேர - பல்லவர் உதவியுடன் தனது அரச உரிமையைப் பெற்றான். இவ்வதியன் கந்த விண்ணனே பராந்தக நெடுஞ்சடைய பாண்டியனால் வெல்லப்பட்டவன் இதன் அடிப்படையில் மாற்றப்பட்ட வமிசாவழிப் பட்டியல் பின்னால் தரப்பட்டுள்ளது.

## காடவ அரச மரபு

சிங்க விஷ்ணு
(பல்லவ சிம்ம விஷ்ணுவால்
வெல்லப்பட்டவன்)

|

ஒரு காடவ அரசன்

|

சிங்கவர்மன்
(அய்யடிகள் காடவர்கோன்)

|

சோமசி மாறன்

ஸ்கந்தவர்மன்

|

மகள் + பல்லவ யுவராஜன்
மகேந்திரன்

சிங்கவிண்ணன்
(அதியர் மகளுக்கு
பிறந்தவன்)

விருத்த பல்லவாதி ராஜன்

ஜெயபல்லவாதி ராஜன்
(ஸ்கந்தசிஷ்யன்)

நந்திக்காடவன்

|

நந்திவிக்கிரமன்

ஈஸ்வரவர்மன்

|

தெள்ளாறு எறிந்த
நந்திவர்மன்

|

கம்பவர்மன்

|

அபராஜிதன்

அதியமான்மரபு

கங்க அரச மரபு
(பெருமுகையூர் ஆண்டவர்)

விசய விண்ணவர்மன்

மகள்

மகள்+
காடவசோமாசி
மாறன்

மகள்+கங்க அரசன்
(இருளப்பட்டி
நடுகல் குறிப்
பிடுபவன்)

மகன்

சிங்கவிண்ணவர்மன்

கந்தவிண்ணன்

மகள்


மகன்

விசய மகேந்திரன்

விசய நரசிம்மன்

★

பிரஸ் டீலக்ஸ்
40, பாபு ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
போன்: 24543



…ரி மாவட்டம் சித்தலப்பட்டிக்கருகில் உள்ள தாழ்ண்டர் மலைக்குறிப்பு…
…க்கின் விளக்கம் உள்ளே 150 ம் பக்கம் பார்க்கவும்